
லெனின்

சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

வி. இ. லெனின்

சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ. 1974

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

பதிப்பாளர் குறிப்பு

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மார்க்சிய-லெனினியக் கழகம் வெளியிட்ட வி. இ. லெனின், நூல் திரட்டின் ஐந்தாவது பதிப்பிலிருந்து இந்த மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

© உரிமைப் பதிவு
தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1974

Л $\frac{10102-145}{14(01)-74}$ 714—73

பொருளடக்கம்

மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் 5

நமது வேலைத்திட்டம் 15

செய்ய வேண்டியது என்ன? என்பதிலிருந்து . . . 23

கட்சி நிறுவனமும் கட்சி இலக்கியமும் 32

சோஷலிஸ்டுக் கட்சியும் கட்சி சார்பில்லாத புரட்சிவாதமும் 42

சோஷலிசமும் மதமும் 56

மார்க்சியமும் திருத்தல்வாதமும் 65

வேஹ்ரி சம்பந்தமாய் 80

லெ. நி. தல்ஸ்தோய் 95

மார்க்சியத்தினுடைய வரலாற்று வளர்ச்சியின் சில இயல்புகள் 104

லெவ் தல்ஸ்தோயும் அவரது சகாப்தமும் . . . 113

மாருஷ்யர்களது தேசியப் பெருமித உணர்ச்சி குறித்து 121

ஏகாதிபத்தியமும் சோஷலிசத்தில் பிளவும் . . . 129

பாட்டாளி வர்க்கக் கலாசார, கல்வித் துறை நிறுவனங்களின் மாநாட்டுத் தலைமைக் குழுவுக்கு எழுதிய கடிதம் 156

சர்வதேசிய ஆசிரியர்களது இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு 1919 ஜனவரி 18 158

மாபெரும் தொடக்கம் (போர்முனையல்லாத உட் பகுதிகளில் தொழிலாளர்களின் தீரம். ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'') 164

இளைஞர் கழகங்களின் பணிகள். ருஷ்யாவின் இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் மூன்றுவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு, 1920, அக்டோபர் 2 204

பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்து . . . 232

குபேர்னியா, உயெஸ்து கல்வி இலாகாக்களின் அரசியல் கல்விப் பணித்துறையாளர்களது அனைத்து-ருஷ்ய மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு, 1920 நவம்பர் 3 235

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து 252

நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள் 269

கூட்டுறவு குறித்து 277

நமது புரட்சி (நி. ஸுகானவின் குறிப்புகள் சம்பந்தமாய்) 289

குறிப்புகள் 296

பெயர்க் குறிப்பு அகராதி 315

மார்க்சியத்தின்
மூன்று தோற்றுவாய்களும்
மூன்று உள்ளடக்கக் கூறுகளும்

மார்க்சின் போதனை, நாகரிக உலகெங்கிலும் அதிகாரத் தரப்பினதும், மிதவாதிகளதும் ஆகிய இரு வகையான பூர்ஷ்வா விஞ்ஞானம் அனைத்திடமிருந்தும் அளவற்ற பகைமையையும் வெறுப்பையும் கிளப்பிவிடுகிறது. மார்க்சியம் ஒரு வகையான ''நச்சுத்தன்மை கொண்ட குறுங்குழுவாதம்'' ஆகுமென அவை கருதுகின்றன. அவற்றிடமிருந்து வேறு எந்த விதமான போக்கையும் எதிர்பார்க்க முடியாதுதான். ஏனெனில், வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில் ''பாரபட்சமற்ற'' சமுதாய விஞ்ஞானம் எதுவும் இருக்க முடியாது. அதிகாரத் தரப்பைச் சேர்ந்த விஞ்ஞானம் அனைத்தும், மிதவாதிகளது விஞ்ஞானம் அனைத்தும் ஏதாவதொரு விதத்தில் கூலி அடிமை முறையை ஆதரிக்கின்றது. மார்க்சியமோ கூலி அடிமை முறையை ஈவிரக்கமின்றி எதிர்த்துப் போர்ப்பிரகடனம் செய்துள்ளது. மூலதனத்துக்குக் கிடைக்கும் லாபத்தைக் குறைப்பதன் மூலம் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தலாமா என்ற பிரச்சினையில் முதலாளிகள் பாரபட்சமற்றவர்களாய் இருப்பார்களென எதிர்பார்ப்பது எப்படி அசட்டுத்தனமாகுமோ, ஏமாளித்தனமாகுமோ, அப்படித்தான் கூலி அடிமை முறைச் சமுதாயத்தில் விஞ்ஞானம் பாரபட்சமற்றதாய் இருக்குமென எதிர்பார்ப்பதும் அசட்டுத்தனமாகும், ஏமாளித்தனமாகும்.

இது மட்டுமல்ல. தத்துவவியலின் வரலாறும் சரி, சமுதாய விஞ்ஞானத்தின் வரலாறும் சரி, மார்க்சியத்தில் ''குறுங்குழுவாதம்'' போன்றதெதுவும் கிடையாது என் பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன. அதாவது, அது ஒரு இறுகிப்போன வரட்டுத் தத்துவமல்ல; உலக நாகரிக வளர்ச்சியினது ராஜபாட்டையின் வழியே வராமல் அதனின்று விலகி வேறொரு வழியே முளைத்த போதனை அல்ல. மாறுக, மனிதகுலத்தின் முன்னணிச் சிந்தனையாளர்கள் ஏற்கனவே எழுப்பியிருந்த கேள்விகளுக்கு மார்க்ஸ் விடைகள் தந்தார் என்பதில்தான் குறிப்பாக அவருடைய மேதாவிலாசம் அடங்கியுள்ளது. தத்துவவியல், அரசியல் பொருளாதாரம், சோஷலிசம் ஆகியவற்றின் தலைசிறந்த பிரதிநிதிகளுடைய போதனைகளின் நேரடியான, உடனடியான தொடர்ச்சியாகத்தான் மார்க்சின் போதனை எழுந்தது.

மார்க்சின் போதனை மெய்யானது, பிழையற்றது; அதனால்தான் அது சர்வவல்லமை பெற்றிருக்கிறது. அது பரிபூர்ணமான, உள்ளிணக்கம் கொண்ட போதனை. ஒரு சர்வாங்கமான உலகப் பார்வையை அது மக்களுக்கு அளிக்கின்றது. எந்த வடிவத்திலுமமைந்த மூடநம்பிக்கைகளோ, பிற்போக்கோ, முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு ஆதரவோ இந்த உலகப்பார்வையுடன் ஒத்துவர முடியாது. ஜெர்மானியத் தத்துவவியல், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோஷலிசம் என்ற வடிவத்தில் 19ம் நூற்றாண்டில் மனிதகுலம் சிருஷ்டித்த தலைசிறந்த சிருஷ்டிகளின் உரிமை பெற்ற வாரிசுதான் மார்க்சியம்.

இவை மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களாகும், மூன்று உள்ளடக்கக் கூறுகளாகும். இவற்றைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

1

பொருள்முதல்வாதம்தான் [materialism] மார்க்சியத்தின் தத்துவவியலாகும். பொருள்முதல்வாதம் ஒன்றுதான் முரணற்ற தத்துவவியலாகும், இயற்கை விஞ்ஞானங்களுடைய எல்லாப் போதனைகளுக்கும் ஏற்புடையதாகும், மூட நம்பிக்கைகளுக்கும் பகட்டுக்கும் பசப்புக்கும் இன்ன பிறவற்றுக்

கும் தீராப் பகையாகும் என்பது ஐரோப்பாவின் நவீனகால வரலாறு பூராவிலும், இன்னும் முக்கியமாய் மத்தியக்காலக் குப்பைக்கூளங்களையும் நிறுவனங்களிலும் கருத்துக்களிலும் ஆட்சி புரிந்த பிரபுத்துவத்தையும் எதிர்த்து நடைபெற்ற முடிவான கடும் போரின் களஞ்யிருந்த பிரெஞ்சு நாட்டில் 18ம் நூற்றாண்டின் இறுதியிலும் தெளிவாக நிரூபணமாகியது. ஆகவே பொருள்முதல்வாதத்தை ''மறுப்பதற்கும்'', பலவீனப்படுத்துவதற்கும், பழிப்பதற்கும், ஜனநாயகத்தின் வைரிகள் முழுமூச்சாக முயன்று பார்த்தார்கள். தத்துவ வியல் கருத்துமுதல்வாதத்தின் [idealism] பல வகைப்பட்ட வடிவங்களை இவர்கள் ஆதரித்தனர். இவ்வகைப்பட்ட கருத்துமுதல்வாதம் ஏதாவது ஒரு வழியில் எப்பொழுதும் மதத்தைப் பாதுகாக்கவோ ஆதரிக்கவோதான் செய்கிறது.

மார்க்சும் எங்கெல்சும் தத்துவவியல் பொருள்முதல் வாதத்தை மிகுந்த மனத்திண்மையோடு ஆதரித்துப் பாது காத்தனர். இந்த அடிப்படையிலிருந்து விலகிச் செல்லும் ஒவ்வொரு திரிபும் மிகவும் தவறுயிருப்பதை அவர்கள் அடிக்கடி விளக்கி வந்தார்கள். எங்கெல்ஸ் எழுதிய **லுத்விக் பாயர்பாக், டூரிங்குக்கு மறுப்பு**[1] என்ற நூல்களில் அவர்களுடைய கருத்துக்கள், மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. **கம்யூனிஸ்டு அறிக்கை** என்ற நூலைப் போலவே இவ்விரண்டு நூல்களும் வர்க்க உணர்வு பெற்ற ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவசியமான கைப் புத்தகங்களாகும்.

18ம் நூற்றாண்டின் பொருள்முதல்வாதத்துடன் மார்க்ஸ் நின்றுவிடவில்லை. அவர் தத்துவவியலை முன்னேறச் செய்தார். முதுபெரும் ஜெர்மன் தத்துவவியல் திரட்டிய செல் வங்களைக் கொண்டு, குறிப்பாக ஹெகலின் தத்துவமுறை— இதிலிருந்தே பாயர்பாகின் பொருள்முதல்வாதம் தோன்றி யது—திரட்டிய செல்வங்களைக் கொண்டு, அவர் பொருள் முதல்வாதத்தை வளப்படுத்தினர். இந்தச் செல்வங்களில் பிரதானமாக விளங்குவது **இயக்கவியல்தான்** [dialectics]. இயக்கவியல் என்பது மிகமிக முழுமையான, ஆழமான, ஒருதலைப்பட்சமில்லாத வடிவத்தில் வளர்ச்சியைப் பற்றி விளக்கி விவரிக்கும் போதனையாகும்; நிரந்தரமாக வளர்ச்சி

யுற்ற வண்ணமுள்ள பருப்பொருளே நமக்குப் பிரதிபலித்துக் காட்டும் மனித அறிவின் சார்புநிலையை வலியுறுத்தும் போதனையாகும். ரேடியம், மின்னணுக்கள், தனிமங்களில் ஒன்று மற்றொன்றுக மாறுவது—இவை போன்ற இயற்கை விஞ்ஞானத்தின் மிக நவீன கண்டுபிடிப்புகளெல்லாம் மார்க்சின் இயக்கவியல் பொருள்முதல்வாதமே சரியானது என்பதை வியக்கத்தக்க முறையில் ஊர்ஜிதம் செய்துள்ளன. அழுகிப் போன பழைய கருத்துமுதல்வாதத்தைப் பற்றிய ''புதிய'' மறுவியாக்கியானங்களைக் கொண்டு முதலாளித்துவ தத்துவ வியலாளர்கள் தந்த போதனைகளால் இதைத் தடுக்க முடியவில்லை.

தத்துவவியல் பொருள்முதல்வாதத்தை மார்க்ஸ் ஆழமாக்கி வளர்த்துப் பூர்ணமாக்கினர். இயற்கைப் பற்றிய அதன் ஞானத்தை **மனித** சமுதாயம் பற்றிய ஞானமாகவும் விரிவாக்கினர். மார்க்சின் **வரலாற்றுத் துறை பொருள்முதல் வாதம்** விஞ்ஞானச் சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது. முன்பெல்லாம் வரலாற்றைப் பற்றிய கருத்துக்களிலும் அரசியலைப் பற்றிய கருத்துக்களிலும் குழப்பமும் தான்தோன்றித்தனமும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இப்போது அவை போய், ஒருமித்த முழுமையும், உள்ளிணக்கமும் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் வந்து விட்டது. வரலாற்றுத் துறை பொருள்முதல்வாதம் என்ற இந்தத் தத்துவம் காட்டுவதென்ன? உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து அதைவிட உயர்தரமான இன்னொரு சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை—உதாரணமாக, நிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறையிலிருந்து முதலாளித்துவ சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை —அது காட்டுகிறது.

இயற்கை என்பது — அதாவது வளர்ச்சி பெற்றுக் கொண்டேயிருக்கும் பருப்பொருள் என்பது—மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து வருகிறது. இந்த இயற்கையை மனித அறிவு பிரதிபலிக்கிறது. அதே போலத்தான் மனிதனின் **சமுதாய அறிவு** எனப்படுவதும் (அதாவது தத்துவ **வியல், மதம், அரசியல்** முதலானவை சம்பந்தமாக மனிதன்

கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களும் போதனைகளும்) சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதி பலிக்கிறது. அரசியல் ஏற்பாடுகள் என்பவையெல்லாம் பொருளாதார அஸ்திவாரத்தின் மீது நிறுவப்பட்ட மேல்கட்டு மானமேயாகும். உதாரணமாக, நவீன ஐரோப்பிய அரசு களின் பல்வேறு அரசியல் வடிவங்கள் எல்லாம் பாட்டாளி வர்க்கத்தின்மேல் முதலாளித்துவ வர்க்கம் செலுத்தி வரும் ஆதிக்கத்தைப் பலப்படுத்தப் பயன்படுகின்றன என்பதை நாம் பார்க்கிறோம்.

மார்க்சின் தத்துவவியல் பூர்ணத்துவம் பெற்ற தத்துவ வியல் பொருள்முதல்வாதமாகும். இந்தப் பொருள்முதல் வாதம் மனிதகுலத்திற்கு, குறிப்பாகத் தொழிலாளி வர்க் கத்துக்கு, மகத்தான அறிவுச் சாதனங்களை வழங்கியிருக் கின்றது.

2

பொருளாதார அமைப்பு முறை என்ற அஸ்திவாரத் தின் மீதுதான் அரசியல் மேல்கட்டுமானம் கட்டப்படுகிறது என்று தெளிந்து ஏற்றுக்கொண்டவுடன், மார்க்ஸ் தமது பெரும்பாலான கவனத்தை இந்தப் பொருளாதார அமைப்பு முறையின்மீது செலுத்தினர். மார்க்சின் பிரதான நூலாகிய மூலதனம் நவீன காலத்திய—அதாவது, முதலாளித்துவ— சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையை ஆராயும் நூலாகும்.

மார்க்சுக்கு முற்பட்டதான முதுபெரும் அரசியல் பொரு ளாதாரம் முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றிலும் அதிக வளர்ச்சி பெற்றிருந்த இங்கிலாந்திலே உருவாயிற்று. ஆடம் ஸ்மித்தும் டேவிட் ரிகார்டோவும் பொருளாதார அமைப்பு முறையை ஆராய்ந்து உழைப்பின் அளவைக் கொண்டு பண் டத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் தத்துவத்துக்கு [labour theory of value] அஸ்திவாரமிட்டார்கள். அவர்களுடைய பணியை மார்க்ஸ் தொடர்ந்து நடத்தினர். இந்தத் தத்துவத்தை அவர் திட்டமாக நிரூபித்து முரணற்ற வகையில் விவரித் தார். ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பும் அதை உற்பத்தி செய்வதில் செலவழிக்கப்பட்ட சமுதாய ரீதியில் அவசியமான

உழைப்பு நேரத்தின் அளவைக் கொண்டுதான் நிர்ணயிக்கப் படுகிறது என்று அவர் விளக்கிக் காட்டினார்.

முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள், பண்டங்கள் இடையிலான (ஒரு பண்டம் மற்றொன்றுகப் பரிவர்த்தனை செய்துக் கொள்ளப்படும்) உறவு என்பதாக விவரித்ததில் **மனிதர்கள் இடையிலான உறவு** நிலவுவதை மார்க்ஸ் புலப் படுத்தினார். பண்டப் பரிவர்த்தனை தனித்தனியான உற்பத்தி யாளர்களிடையே சந்தை மூலமாக ஏற்படும் பிணைப்பைக் காட்டுகிறது. **பணம்**, இந்தப் பிணைப்பு தனிப்பட்ட உற்பத்தி யாளர்களின் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் பிரிக்க முடியாதபடி முழுமொத்தமாக இணைத்து மேலும் மேலும் நெருக்கமாவதைக் குறிக்கிறது. **மூலதனம்**, இந்தப் பிணைப்பு மேலும் வளர்ச்சியுறுவதைக் குறிக்கிறது; அதாவது மனித னின் உழைப்புச் சக்தியே ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகிவிடு வதைக் குறிக்கிறது. கூலி பெறும் உழைப்பாளி நிலம், ஆலை கள், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றின் சொந்தக்காரர் களிடம் தனது உழைப்புச் சக்தியை விற்கிறான். தொழிலாளி நாளின் ஒரு பகுதியைத் தன்னையும் தனது குடும்பத்தையும் பராமரித்துக் கொள்வதற்கு வேண்டிய செலவுக்காக (அதாவது, கூலிக்காக) உழைப்பதில் செலவிடுகிறான். மறு பகுதியில் ஊதியமின்றியே உழைத்து முதலாளிக்கு **உபரி மதிப்பைச்** சிருஷ்டித்துத் தருகிறான். இந்த உபரி மதிப்புத் தான் லாபத்துக்குத் தோற்றுவாய், அதுதான் முதலாளி வர்க்கத்தின் செல்வத்துக்குத் தோற்றுவாய்.

உபரி மதிப்பைப் பற்றிய போதனைதான் மார்க்சின் பொருளாதாரத் தத்துவத்துக்கு மூலைக்கல் ஆகும்.

தொழிலாளியின் உழைப்பால் சிருஷ்டிக்கப்பட்ட மூல தனம் சிறு உற்பத்தியாளர்களை நாசம் செய்து வேலையில் லாதோர் பட்டாளத்தைச் சிருஷ்டிப்பதின் மூலமாகத் தொழி லாளியை நெருக்குகிறது. தொழில் துறையில், பெருவீத உற்பத்தி பெறுகிற வெற்றி பளிச்சென்று தெரிகிறது. ஆனால், இதே நிகழ்ச்சியை விவசாயத் துறையிலும் நாம் பார்க்க முடியும். பெருவீத முதலாளித்துவ விவசாயத்தின் சிறப்பு அதிகமாகிக்கொண்டே போகிறது; விவசாயத்தில் இயந்திரங்களை உபயோகிப்பதும் அதிகரிக்கிறது; ரொக்க

மூலதனத்தின் சுருக்குக் கயிற்றில் விவசாயப் பொருளாதாரம் சிக்கிக் கொள்கிறது; அது தனது பிற்பட்ட தொழில்நுட்பத்தின் சுமையால் அழுத்தப்பட்டு நாசமடைகிறது. விவசாயத் துறையில் சிறுவீத உற்பத்தியின் சீர்குலைவுக்குரிய வடிவங்கள் வேறுயிருப்பினும், இச்சீர்குலைவு ஏற்படுவது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மூலதனமானது, சிறுவீத உற்பத்தியை ஒழிப்பதன் மூலம், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கும் பெரிய முதலாளிகளின் கூட்டுகளுக்கு ஏகபோக நிலை படைப்பிக்கப் படுவதற்கும் வகை செய்கிறது. உற்பத்தியே மேலும் மேலும் சமுதாயத் தன்மையைப் பெறுகிறது: ஒரு முறையான பொருளாதார ஒழுங்கமைப்பிலே லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான தொழிலாளர் பிணைக்கப்பட்டு விடுகின்றனர். ஆனால் அந்தக் கூட்டு உழைப்பின் உற்பத்திப் பொருளை விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில முதலாளிகள் உடைமையாக்கிக் கொள்கிறார்கள். உற்பத்தியில் அராஜகம் வளர்கிறது; அதேபோல் நெருக்கடிகளும் வளர்கின்றன; சந்தைகளைப் பிடித்துக்கொள்வதற்கான ஆவேச வேட்டையும் அதிகமாகிறது; வெகுஜனங்களது வாழ்வின் நிலையின்மையும் அபாயமும் அதிகரிக்கின்றன.

முதலாளித்துவ முறை, தொழிலாளர்கள் மூலதனத்தை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலையைத் தீவிரப்படுத்தும் அதே சமயத்தில் ஒன்றுதிரண்ட தொழிலாளிகளின் மாபெரும் பலத்தையும் சிருஷ்டித்துவிடுகிறது.

பரிவர்த்தனைப் பண்டப் பொருளாதாரத்தின் ஆரம்பவித்துக்களிலிருந்து, சாதாரணப் பரிவர்த்தனையிலிருந்து தொடங்கி, பரிவர்த்தனையின் மிக உயர்ந்த வடிவங்கள் வரையில், பெருவீத உற்பத்தி வரையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை மார்க்ஸ் ஆராய்ந்து காட்டினார்.

பழையவையும் புதியவையும் அடங்கலான எல்லா முதலாளித்துவ நாடுகளின் அனுபவமும் இந்த மார்க்சியத் தத்துவம் பிழையற்றதாகும் என்பதை ஆண்டுதோறும் மேலும் மேலும் கூடுதலான தொழிலாளர்களுக்குத் தெளிவாக நிரூபித்துக் காட்டிவருகிறது.

உலகெங்கும் முதலாளித்துவம் வெற்றி பெற்றுவிட்டது. ஆனால் இந்த வெற்றி மூலதனத்தின்மீது உழைப்பு காணப் போகும் வெற்றியின் முன்னறிவிப்பே ஆகும்.

3

பிரபுத்துவ அமைப்பு வீழ்த்தப்பட்டு ''சுதந்திரமான'' முதலாளித்துவ சமுதாயம் இப்பூவுலகில் தோன்றிய பொழுது இந்தச் சுதந்திரம் உழைப்பாளிகளை ஒடுக்கவும் சுரண்டவும் அமைந்த புதியதோர் அமைப்பையே குறித்தது என்பது உடனே தெளிவாக விளங்கலாயிற்று. இந்த ஒடுக்கு முறையின் பிரதிபலிப்பாகவும் இதற்கான கண்டனமாகவும் பல்வேறு சோஷலிசப் போதனைகள் உடனே தலைதூக்கத் தொடங்கின. ஆனால் ஆரம்பகாலத்திய சோஷலிசம் கற்பனை சோஷலிசமாகத்தான் இருந்தது. அது முதலாளித்துவ சமுதாயத்தை விமர்சித்தது, கண்டித்தது, சபித்தது; அந்தச் சமுதாயத்தை ஒழிக்க வேண்டும் என்று கனவு கண்டது; அதைவிட மேலான ஓர் அமைப்பு முறையைப் பற்றி ஆகாயக் கோட்டைக் கட்டி வந்தது; சுரண்டுவது ஒழுக்கக் கேடான செயலாகுமெனப் பணக்காரர்களுக்கு உணர்த்த அது முயற்சித்தது.

ஆனால் கற்பனை சோஷலிசத்தினால் விடுதலைக்கான மெய்யான வழியைக் காட்ட முடியவில்லை. முதலாளித்துவத்தில் நிலவும் கூலி அடிமை முறையின் சாராம்சத்தை அதனால் விளக்க முடியவில்லை. முதலாளித்துவ முறையின் வளர்ச்சி பற்றிய விதிகளை அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு புதிய சமுதாயத்தின் சிருஷ்டிகர்த்தாவாக அமைய வல்ல சமுதாய சக்தியை அதனால் சுட்டிக்காட்டவும் முடியவில்லை.

இதற்கிடையில், பிரபுத்துவத்தின் வீழ்ச்சியையும் பண்ணை அடிமை முறையின் வீழ்ச்சியையும் தொடர்ந்து ஐரோப்பா முழுவதிலும், குறிப்பாக பிரான்சிலும், ஏற்பட்ட புயல் போன்ற புரட்சிகள், வர்க்கங்களின் போராட்டம்தான் எல்லா வளர்ச்சிக்கும் ஆதாரமாயும் உந்து விசையாகவும் உள்ளது என்பதை மேலும் மேலும் தெளிவாக வெளிப்படுத்தின.

பிரபுத்துவ வர்க்கத்துக்கெதிராய் அரசியல் சுதந்திர இலட்சியத்துக்குக் கிடைத்த எந்த ஒரு வெற்றியும் அவ்வர்க்கத்தின் மூர்க்கமான எதிர்ப்பில்லாமல் கிடைத்து விடவில்லை. முதலாளித்துவ சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களிடையே ஜீவமரணப் போராட்டம் இல்லாமல் எந்த முதலாளித்துவ நாடும் ஓரளவு சுதந்திரமான, ஜனநாயக அடிப்படையில் வளர்ச்சியுற்றுவிடவில்லை.

வேறு எவருக்கும் முன்பு மார்க்ஸ் உலக வரலாறு போதிக்கும் முடிபை இதிலிருந்து கண்டறியவும், அந்த முடிபை முரணின்றிச் செயல்படுத்தவும் முடிந்தது என்பதில்தான் அவருடைய மேதாவிலாசம் அடங்கியிருக்கிறது. **வர்க்கப் போராட்டத்தைப்** பற்றிய போதனைதான் அந்த முடிபாகும்.

நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லா விதச் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே எதாவதொரு வர்க்கத்தின் **நலன்கள்** ஒளிந்து நிற்பதைக் கண்டுகொள்ள மக்கள் தெரிந்துகொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமான ஏமாளிகளாகவும் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்வோராகவும் இருந்தனர், எப்போதும் இருப்பார்கள். பழைய ஏற்பாடு ஒவ்வொன்றும் எவ்வளவுதான் காட்டு மிராண்டித் தனமாகவும் அழுகிப்போனதாகவும் தோன்றிய போதிலும் ஏதாவது ஓர் ஆளும் வார்க்கத்தின் சக்திகளைக் கொண்டு அது நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. சீர்திருத்தங்கள், அபிவிருத்திகள் ஆகியவற்றின் ஆதரவாளர்கள் இதை உணராத வரையில் பழைய அமைப்பு முறையின் பாதுகாவலர்கள் அவர்களை என்றென்றும் முட்டாள்களாக்கிக் கொண்டேயிருப்பார்கள். இந்த வர்க்கங்களின் எதிர்ப்பைத் தகர்த்து ஒழிப்பதற்கு **ஒரே ஒரு** வழிதான் உண்டு. அது என்ன? பழைமையைத் துடைத்தெறியவும் புதுமையைச் சிருஷ்டிக்கவும் திறன் பெற்றவையும் சமுதாயத்தில் தாங்கள் வகிக்கும் ஸ்தானத்தின் காரணமாக அப்படிச் சிருஷ்டித்துத் **தீரவேண்டிய** நிர்ப்பந்தத்திலிருக்கிறவையுமான சக்திகளை நம்மைச் சூழ்ந்துள்ள இதே சமுதாயத்திற்குள்ளேயே நாம் கண்டுபிடித்து, அந்தச் சக்திகளுக்கு ஞானமூட்டிப் போராட்டத்திற்கு ஸ்தாபன ரீதியாகத் திரட்ட வேண்டும். இது ஒன்றேதான் வழி.

மார்க்சின் தத்துவவியல் பொருள்முதல்வாதம் ஒன்று தான் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களெல்லாம் அதுவரை உழன்று கொண்டிருந்த ஆன்மீக அடிமைத்தனத்திலிருந்து வெளியேறும் வழியைப் பாட்டாளி வர்க்கத்திற்குக் காட்டியிருக்கிறது. மார்க்சின் பொருளாதாரத் தத்துவம் ஒன்றுதான் பொதுவான முதலாளித்துவ அமைப்பு முறையில் பாட்டாளி வர்க்கத்தின் உண்மை நிலையை விளக்கியுள்ளது.

அமெரிக்காவிலிருந்து ஜப்பான் வரை, ஸ்வீடனிலிருந்து தென்னப்பிரிக்கர வரை, உலகமெங்கும் பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்சையான ஸ்தாபனங்கள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. தனது வர்க்கப் போராட்டத்தை நடத்திச் செல்வதன் வாயிலாய்ப் பாட்டாளி வர்க்கம் ஞானமும் கல்வியும் பெற்று வருகிறது; முதலாளித்துவ சமுதாயத்தின் தப்பெண்ணங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வருகிறது; தன் அணிகளை நெருக்கமாகத் திரட்டிச் சேர்த்து வருகிறது; தனது வெற்றிகளின் வீச்சை அளந்தறியக் கற்றுக்கொண்டு வருகிறது; தன் சக்திகளை எஃகு போல் திடப்படுத்தி வருகிறது; தடை செய்ய முடியாதபடி வளர்ந்து வருகிறது.

ப்ரோஸ்வெஷ்சேனியே,
இதழ் 3, 1913, மார்ச்சு
ஒப்பம்: வி. இ.

நூல் திரட்டு,
தொகுதி 23,
பக்கங்கள் 40-48

நமது வேலைத்திட்டம்

தற்போது சர்வதேச சமூக-ஜனநாயகம் சித்தாந்த ஊசலாட்டத்தால் பீடிக்கப்பட்ட ஒரு நிலையில் இருக்கின்றது. இதுகாறும் மார்க்ஸ், எங்கெல்சின் போதனைகள் புரட்சித் தத்துவத்துக்குரிய உறுதி வாய்ந்த அடித்தளமாய்க் கருதப் பட்டுவந்தன; ஆனால் இப்பொழுது இந்தப் போதனைகள் குறைபாடானவை என்றும் பழமைப்பட்டுவிட்டவை என் றும் பறைசாற்றும் குரல்கள் நாற்புறமிருந்தும் எழுப்பப் படுகின்றன. சமூக-ஜனநாயகவாதியாய்த் தம்மை அறி வித்துக் கொண்டு, சமூக-ஜனநாயகக் கொள்கை முழக்க ஏடு ஒன்றை வெளியிட முன்வரும் எவரும், ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் கவனத்தையும் அவர்கள் மட்டுமின்றி ஏனைய பலரின் கவனத்தையும் ஆட்கொண்டு வரும் ஒரு பிரச்சினை குறித்துத் தமது போக்கு என்ன என்பதைத் துல்லியமாய் வரையறுத்துக் கூறியாக வேண்டும்.

நாம் முற்றிலும் மார்க்சியத் தத்துவார்த்த நிலையையே எமது அடிநிலையாய்க் கொண்டு நிற்கிறோம்: மார்க்சியம்தான் முதன்முதல் சோஷலிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ் ஞானமாய் மாற்றியமைத்துத் தந்தது; இந்த விஞ்ஞானத் துக்கு உறுதியான அடித்தளத்தை நிறுவிக் கொடுத்தது; இதை இதன் எல்லாக் கூறுகளிலும் மேலும் வளர்த்தும் விவரமாய் விரித்தமைத்தும் செல்வதற்குப் பின்பற்ற வேண் டிய பாதையைச் சுட்டிக் காட்டிற்று. தொழிலாளியை வேலைக்கு அமர்த்திக் கொள்வதானது, அதாவது உழைப்பு ஆற்றலை விலைக்கு வாங்குவதானது, சொத்துடைமையற்ற லட்சோபலட்சக் கணக்கானோரை நிலம், ஆலைகள், சுரங்

கங்கள் முதலானவற்றின் உடைமையாளர்களாகிய விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில முதலாளிகள் அடிமை செய்து விடுவதை எப்படி மூடிமறைக்கிறது என்பதை விளக்கியதன் மூலம், நவீன கால முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தன்மையை அது வெளிப்படுத்திக் காட்டிற்று. நவீன கால முதலாளித்துவ வளர்ச்சி அனைத்துமே, பெருவீதப் பொருளுற்பத்தியானது சிறுதிறப் பொருளுற்பத்தியைக் கழித்துக் கட்டிவிடும் போக்கினை வெளிப்படுத்திச் செல்வதையும், சோஷலிசச் சமுதாய அமைப்பை சாத்தியமும் அத்தியாவசியமும் ஆக்கும் நிலைமைகளைத் தோற்றுவிப்பதையும் அது தெளிவுபடுத்திக் காட்டிற்று. வேர்விட்டு வளர்ந்துள்ள பழக்க வழக்கங்கள், மற்றும் அரசியல் சூழ்ச்சிகள், புரியாப் புதிர்களான சட்டங்கள், கடுஞ்சிக்கலான கொள்கை கோட்பாடுகள் ஆகியவற்றுலாகிய புகை மூட்டத்தினுள் மறைந்திருக்கும் **வர்க்கப் போராட்டத்தை,** பல்வேறு வகைப்பட்ட சொத்துடைத்த வர்க்கங்களுக்கும் சொத்துடைமையற்றோர் அனைவரின் தலைமையில் நிற்கும் சொத்தில்லாப் பெருந் திரளாகிய பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே நடைபெறும் இந்தப் போராட்டத்தை எப்படிக் கண்டறிந்து கொள்வதென்று அது நமக்குக் கற்றுக் கொடுத்தது. புரட்சிகர சோஷலிஸ்டுக் கட்சியின் முன்னுள்ள மெய்யான பணியை அது தெளிவுபடுத்திற்று: சமுதாயத்தைத் திருத்தியமைப்பதற்குத் திட்டங்கள் வரைவதல்ல, தொழிலாளர்களுடைய நிலைமையை மேம்படச் செய்வது குறித்து முதலாளிகளுக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் அறிவுரை அளிப்பதல்ல, சதிகள் புரிந்திடுவதல்ல இப்பணி, **பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்துக்கு நிறுவன ஒழுங்கமைப்பு செய்வதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரம் வெல்வதையும் சோஷலிசச் சமுதாயம் ஒழுங்கமைக்கப்படுவதையும் இறுதிக் குறிக்கோளாய்க் கொண்ட இந்த வர்க்கப் போராட்டத்துக்குத் தலைமை தாங்குவதுமே இப்பணி என்று அது தெளிவுபடுத்திற்று.**

இப்பொழுது நாம் கேட்கின்றோம்: இந்தத் தத்துவத்தைப் ''புதுப்பிப்பதாய்ப்'' பலக்கக் கூறிக் கொள்கிறார்களே, இக்காலத்தில் பெருங் கூச்சல் எழுப்பி வருவோரும் ஜெர்மன் சோஷலிஸ்டு பெர்ன்ஷ்டைனை மையமாய்க் கொண்டு திரண்

டிருப்போருமாகிய இவர்கள் புதிதாய் எதையேனும் இத்தத் துவத்தில் புகுத்தியிருக்கிறார்களா? **எதுவுமே இல்லை.** வளர்த் திடுமாறு மார்க்சும் எங்கெல்சும் நம்மைப் பணித்துச் சென்ற இந்த விஞ்ஞானத்தை ஓரடியுங்கூட இவர்கள் முன் னேறச் செய்துவிடவில்லை; புதிய போராட்ட முறைகள் எவற்றையும் இவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்குக் கற்றுக் கொடுத்துவிடவில்லை. மாறுக, இவர்கள் பிற்பட்ட தத்துவங் களிலிருந்து சிறு கவளங்களைக் கடன்வாங்கி, பாட்டாளி வர்க்கத்துக்குப் போராட்டத் தத்துவத்தையல்ல, விட்டுக் கொடுத்துச் செல்லும் தத்துவத்தை—பாட்டாளி வர்க்கத் தின் மிகக்கொடும் பகைவர்களுக்கு, சோஷலிஸ்டுகளை வருத்து வதற்காக அயராது புது வழிமுறைகளைத் தேடியலையும் அரசாங்கங்களுக்கும் முதலாளித்துவக் கட்சிகளுக்கும் விட் டுக்கொடுத்துச் செல்லும் தத்துவத்தை—பிரசாரம் செய்துப் பின்வாங்கியே சென்றிருக்கிறார்கள். ருஷ்ய சமூக-ஜனநாயகத் தின் மூலவர்களிலும் தலைவர்களிலும் ஒருவரான பிளெஹா னவ், பெர்ன்ஷ்டைனுடைய மிகவும் அண்மையதான ''விமர் சனத்தை'' ஈவிரக்கமின்றி கண்டன விமர்சனம் செய்தது முற் றிலும் சரியானதே. பெர்ன்ஷ்டைனுடைய கருத்துக்கள் ஜெர் மன் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளாலும் இப்பொழுது நிராகரிக்கப்பட்டிருக்கின்றன (ஹனேவர் காங்கிரசில்).[2]

நாம் இதைச் சொல்வதற்காக மடை திறந்துவிட்டாற் போல குற்றச்சாட்டுகள் பாய்ந்து வருமென எதிர்பார்க்கின் றோம். சோஷலிஸ்டுக் கட்சியை ''மெய்யான பக்திமான் களது'' திருச்சபையாய், ''சமயக் கோட்பாடுகளிலிருந்து'' விலகிச் செல்லும் திரிபுகளுக்காகவும் சுயேச்சையான ஒவ் வொரு கருத்துக்காகவும் ''மறுப்பாளர்களைத்'' தண்டிக்கும் அமைப்பாய் மாற்ற விரும்புகிறோம் என்றும் மற்றும் பல வாறுகவும் கூச்சல்கள் எழுப்பப்படும். புதிய மோஸ்தராகிவிட்ட இந்தச் சுடுசொற் கணைகள் யாவும் நாம் அறிந்தவையே. ஆனால் சிறு துளியவும் உண்மையோ பொருளோ இவற்றில் இல்லை. எல்லா சோஷலிஸ்டுகளையும் ஒருசேர இணைத்திடும் புரட்சிகரத் தத்துவம் இல்லையேல், அவர்கள் தமது பற்றுறு திக்குரிய திட முடிவுகளுக்கு ஆதாரமாய் அமைவதும் அவர் கள் தமது போராட்ட முறைகளிலும் செயல் வழிகளிலும்

கையாளக் கூடியதுமான புரட்சிகரத் தத்துவம் இல்லையேல், வலிமை வாய்ந்த சோஷலிசக் கட்சியும் இருக்க முடியாது. நீங்கள் அறிந்த வரை மெய்யானதென நீங்கள் கருதும் இத் தகைய ஒரு தத்துவத்தை ஆதாரமற்ற தாக்குதல்களிலிருந் தும், அதைச் சீர்கேடுறச் செய்வதற்கான முயற்சிகளிலிருந் தும் பாதுகாக்கிறீர்கள் என்றால், **எல்லா** விமர்சனத்துக்கும் நீங்கள் பகையாகிவிட்டதாய் அர்த்தமல்ல. மார்க்சின் தத்து வத்தை நாங்கள் முற்றும் முடிவான ஒன்றாய், மீறுணுத ஒன்றாய்க் கருதவில்லை. மாறாக, அது சோஷலிஸ்டுகளுக்குரிய விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மட்டுமே அமைத்துக் கொடுத் திருக்கிறது, சோஷலிஸ்டுகள் வாழ்க்கையுடன் சேர்ந்து நடைபோட விரும்பினால் இந்த விஞ்ஞானத்தை எல்லாத் திசைகளிலும் வளர்த்துச் செல்வது **அவசியம்** என்பதை நாம் ஐயமற அறிவோம். மார்க்சின் தத்துவத்தை **சுயேச்சை யான** முறையில் விரிவுபட வளர்த்திடுவது முக்கியமாய் ருஷ்ய சோஷலிஸ்டுகளுக்கு அத்தியாவசியமாகுமெனக் கருதுகிறோம். ஏனெனில் இந்தத் தத்துவம் பொதுவான **வழிகாட்டும்** கோட் பாடுகளையே அளித்திடுகிறது; **தனிப்பட்ட** முறையில் அவை பிரான்சிலிருந்து வேறுவிதமாய் இங்கிலாந்திலும், ஜெர்மனி யிலிருந்து வேறு விதமாய் பிரான்சிலும், ருஷ்யாவிலிருந்து வேறு விதமாய் ஜெர்மனியிலும் கையாளப்படுகிறவை. ஆகவே தத்துவார்த்தப் பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகளுக்கு எமது பத்திரிகையில் மகிழ்ச்சியுடன் நாம் இடம் அளிப்போம், சர்ச்சைக்குரிய விவரங்களைப் பகிரங்கமாய் விவாதிக்குமாறு எல்லாத் தோழர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

எல்லா சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் பொதுவான வேலைத்திட்டத்தை ருஷ்யாவில் கையாளுகையில் எழும் பிர தான பிரச்சினைகள் யாவை? பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்துக்கு நிறுவன ஒழுங்கமைப்பு செய் வதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரம் வெல்வதை யும் சோஷலிச சமுதாயம் ஒழுங்கமைக்கப்படுவதையும் இறுதிக் குறிக்கோளாய்க் கொண்ட இந்த வர்க்கப் போராட் டத்துக்குத் தலைமை தாங்குவதுமே இந்த வேலைத்திட்டத்தின் சாரப்பொருள் என்று நாம் கூறியிருக்கிறோம். பாட் டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டமானது, பொரு

ளாதாரப் போராட்டமும் (தொழிலாளர்களுடைய நிலைமை மேம்பாடு அடைவதற்காகத் தனிப்பட்ட முதலாளிகளோ, முதலாளிகளது தனிப்பட்ட கோஷ்டிகளோ எதிர்த்து நடைபெறும் போராட்டம்), அரசியல் போராட்டமும் (மக்களுடைய உரிமைகள் விரிவடைவதற்காகவும், அதாவது ஜனநாயகத்துக்காகவும், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரம் விரிவடைவதற்காகவும் அரசாங்கத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டம்) உள்ளடங்கியதாகும். ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் சிலர் (**ரபோச்சயா மீசில்**[3] ஏட்டை நடத்துவோரும் இவர்களிடையே இருப்பது வெளிப்படை) பொருளாதாரப் போராட்டமானது ஒப்பிட முடியாத அளவுக்கு மிகவும் முக்கியமானதென்று கருதுகின்றனர், அரசியல் போராட்டத்தை இவர்கள் அதிகமாகவோ குறைவாகவோ நெடுந்தொலைவிலுள்ள எதிர்காலத்துக்கே உரியதாய் ஒதுக்கிவிடும் அளவுக்கு ஏறத்தாழ போய்விடுகின்றனர். இந்தக் கண்ணோட்டம் முற்றிலும் தவறானது. தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்துக்கு நிறுவன ஒழுங்கமைப்பு செய்வது அவசியமென்பதை எல்லா சமூக-ஜனநாயகவாதிகளும் ஏற்றுக் கொள்கிறார்கள்; இந்த அடிப்படையில் தொழிலாளர்களிடையே கிளர்ச்சி நடத்துவது, அதாவது முதலாளிகளுக்கு எதிரான தொழிலாளர்களது அன்றாட போராட்டத்தில் அவர்களுக்கு உதவுவதும், ஒடுக்கு முறையின் ஒவ்வொரு வடிவத்தையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருவதும், ஒன்றுபட வேண்டியதன் தேவையை இவ்வழியில் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதும் இன்றியமையாதது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் பொருளாதாரப் போராட்டத்துக்காக அரசியல் போராட்டத்தை மறப்பதானது சர்வதேச சமூக-ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாட்டை விட்டு விலகுவதாகிவிடும், தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு அனைத்தும் நமக்குப் போதிப்பதை மறப்பதாகிவிடும். முதலாளித்துவ வர்க்கத்தையும் அதற்குச் சேவை புரியும் அரசாங்கத்தையும் ஐயந்திரிபறப் பின்பற்றுவோர் தொழிலாளர்களது முழுக்க முழுக்க பொருளாதாரச் சங்கங்களை அமைக்கவும், இவ்விதம் அவர்களை ''அரசிய

லிலிருந்து,''சோஷலிசத்திலிருந்து திசை திருப்பிவிடவும் மீண்டும் மீண்டும் முயற்சிகள் செய்தும் இருக்கிறார்கள். ருஷ்ய அரசாங்கமும் கூட இது போன்ற ஒரு முயற்சியை மேற்கொள்வது முற்றிலும் சாத்தியமே; மக்களுக்குச் சில அற்ப கவளங்களை, இன்னும் சரியாய்ச் சொல்வதெனில் போலியான கவளங்களை விட்டெறிய எப்பொழுதுமே அது முயன்றிருக்கிறது, ஒடுக்கப்படுகிறோம், உரிமைகளில்லாதோராய் இருக்கிறோம் என்ற உண்மையிலிருந்து மக்களுடைய சிந்தனைகளைத் திருப்பலாம் என்பதற்காவது இவ்வாறு அது முயன்றிருக்கிறது. தொழிலாளர்கள் தடையின்றி சுதந்திரமாய்க் கூட்டங்கள் நடத்தவும் சங்கங்கள் அமைக்கவும் தமது சொந்த செய்தியேடுகளைப் பெற்றிருக்கவும் தேசியச் சட்ட மன்றங்களுக்குத் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பவும் உரிமையுடையோராய் இருந்தாலன்றி, ஜெர்மனியிலும் ஏனைய எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் (துருக்கியையும் ருஷ்யாவையும் தவிர்த்து) தொழிலாளர்களுக்கு இருந்து வரும் இந்த உரிமைகளை உடையோராய் இருந்தாலன்றி, எந்தப் பொருளாதாரப் போராட்டமும் தொழிலாளர்களுக்கு நீடித்த மேம்பாட்டைக் கிடைக்கச் செய்யவும் முடியாது, பெரிய அளவில் நடத்தப்படவுங்கூட முடியாது. ஆனால் இந்த உரிமைகளை வென்று கொள்ள வேண்டுமாயின் **அரசியல் போராட்டம்** நடத்துவது இன்றியமையாததாகும். ருஷ்யாவில் தொழிலாளர்கள் மட்டுமின்றி குடிமக்கள் எல்லோருமே அரசியல் உரிமைகள் இல்லாதோராகவே இருக்கின்றனர். ருஷ்யா ஒரு வரம்பில்லாத, எதேச்சாதிகார முடியரசாய் இருந்து வருகிறது. ஜார் மன்னர்தான் சட்டங்கள் பிறப்பிக்கின்றார், அதிகாரிகளை நியமிக்கின்றார், அவர்களைக் கட்டுபாடு செய்கின்றார். இக்காரணத்தினால் ருஷ்யாவில் ஜாரும் ஜாரிஸ்டு அரசாங்கமும் எல்லா வர்க்கங்களிடமிருந்தும் சுயேச்சையாய் இருந்து எல்லோரையும் சரிசமமாய் நடத்துவது போலத் **தோன்றுகிறது.** ஆனால் **எதார்த்த உண்மை** என்னவெனில் எல்லா அதிகாரிகளும் சொத்துடைத்த வர்க்கங்களிடம் மட்டுமிருந்தே முழுக்க முழுக்க பொறுக்கியெடுக்கப்படுகின்றனர்; எல்லோரும் பெரு முதலாளிகளுடைய செல்வாக்குக்கு உட்பட்டோராய் இருக்கிறார்கள்; இந்தப்

பெரு முதலாளிகள் அமைச்சர்களைத் தமக்குத் தண்டமிட்டுப் பணி புரியச் செய்கிறார்கள்; தாம் விரும்புவதை எல்லாம் நிறைவேற்றிக் கொண்டுவிடுகிறார்கள். ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் இரட்டை ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டு வதைபடுகின்றது. முதலாளிகளாலும் நிலப்பிரபுக்களாலும் அது கொள்ளையிடப்பட்டுச் சூறையாடப்படுகின்றது, இவர்களை எதிர்த்துப் போராடாமல் அதைத் தடுப்பதற்காக போலீஸ் அதன் கைகால்களைக் கட்டிப் போட்டு வாய்க்கும் பூட்டு போடுகிறது, மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சி ஒவ்வொன்றும் அடக்கி ஒடுக்கப்படுகின்றது. முதலாளிக்கு எதிரான ஒவ்வொரு வேலைநிறுத்தமும் இராணுவமும் போலீசும் தொழிலாளர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படுவதில் முடிவுறுகிறது. ஒவ்வொரு பொருளாதாரப் போராட்டமும் தவிர்க்க முடியாதபடி ஓர் அரசியல் போராட்டமாகி விடுகின்றது. சமூக-ஜனநாயகமானது ஒன்றை மற்றொன்றிலிருந்து பிரிக்க முடியாதபடி இரண்டையும் **பாட்டாளி வர்க்கத்தின் ஒரே வர்க்கப் போராட்டமாய்** இணைத்தாக வேண்டும். இத்தகைய ஒரு போராட்டத்தின் முதலாவதும் தலைமையானதுமான நோக்கம் அரசியல் உரிமைகளை வென்று கொள்வதாய், **அரசியல் சுதந்திரம் வென்று கொள்வதாய்** இருத்தல் வேண்டும். பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்கள் தனித்திருந்து, சோஷலிஸ்டுகளிடமிருந்து கிடைத்த சிறிதளவு உதவியைக் கொண்டு, அரசாங்கத்துடன் போராடி அதனிடமிருந்து ஒரு சலுகையைப் பிடுங்கிக் கொள்வதில்—வேலை நேரத்தைக் குறைக்கும் சட்டம்[4] ஏற்கப்படும்படிச் செய்வதில்—விரைவில் வெற்றி பெற்றுள்ளனர் என்றால், ஒட்டு மொத்தமாய் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் ருஷ்யாவின் ஒருமித்த சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியால் தலைமை தாங்கப்பெற்று, விடாப்பிடியாய்ப் போராடி ஒப்பீடில்லாத அளவுக்கு மிக முக்கிய சலுகைகளை வென்று கொள்ள முடியும்.

வேறு எந்த வர்க்கமும் அதற்கு உதவ வராவிட்டாலுங் கூட ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் தனித்து நின்று தனது பொருளாதார, அரசியல் போராட்டத்தை நடத்திச் செல்ல முடியும். ஆனால் அரசியல் போராட்டத்தில் தொழி

லாளர்கள் தனித்து நிற்கவில்லை. மக்கள் அறவே உரிமைகள் இல்லாதோராய் இருத்தப்பட்டிருப்பதும், பஷி-பஸூக் அதிகாரிகளுடைய சட்ட நெறியற்ற காட்டுத்தனமும், சுதந்திரச் சிந்தனை உரிமையும் சுதந்திரப் பேச்சு உரிமையும் அடக்கி ஒடுக்கப்படுவதற்கு மனம் ஒப்ப முடியாதோரான நேர்மை உள்ளமுடைத்த, கல்வியறிவு பெற்ற மக்கள் அனைவரையும் ஆத்திரங்கொள்ளச் செய்கின்றன; அடக்குமுறையால் நசுக்கப்படும் போலிஷ் இனத்தோர், ஃபின் இனத்தோர், யூதர்கள், ருஷ்யாவின் சமயச் சிறுபான்மைப் பிரிவினர் ஆகியோரையும் இவை ஆத்திரங் கொள்ளச் செய்கின்றன; அதிகாரிகளின், போலீசாரின் அடக்குமுறையிலிருந்து எங்குமே காப்பு பெற முடியாதோராய் இருக்கும் சிறு வணிகர்கள், பட்டறையதிபர்கள், விவசாயிகள் ஆகியோரையும் இவை ஆத்திரங் கொள்ளச் செய்கின்றன. மக்களின் இத்தொகுதியோர் எவரும் தனித்து நின்று விடாப்பிடியான அரசியல் போராட்டம் நடத்தும் ஆற்றலுடையோர் அல்லர். ஆனால் தொழிலாளி வர்க்கம் இந்தப் போராட்டத்தின் கொடியை உயர்த்தும் போது எல்லாப் பக்கங்களிலிருந்தும் அதற்கு ஆதரவு கிடைக்கும். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகம் மக்களது உரிமைகளுக்காகப் போராடுவோர் அனைவரின், ஜனநாயகத்துக்காகப் போராடுவோர் அனைவரின் தலைமையிலே நின்று செயல்படும், அது வெல்லற்கரிய பலமுடைத்ததாகிவிடும்!

இவையே எமது அடிப்படைக் கருத்தோட்டங்கள். இவற்றை நாம் எமது பத்திரிகையில் முறையாகவும் எல்லாத் தரப்புக்களிலிருந்தும் வளர்த்துச் செல்வோம். இவ்விதம் நாம், ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி தான் வெளியிட்டுள்ள **அறிக்கையில்** சுட்டிக் காட்டியிருக்கும் பாதையிலே நடைபோடுவோம் என்பதில் எமக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

*1899*ஆம் ஆண்டின் பிற்பாதியில்
எழுதப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி *4*
பக்கங்கள் *182-186*

முதன் முதல் *1925*ல்
லெனின் மஞ்சரி, மூன்றில்
வெளிவந்தது

செய்ய வேண்டியது என்ன?
என்பதிலிருந்து

''கலப்பற்ற தூய தொழிலாளர் இயக்கத்தின்'' ஆதரவாளர்கள், பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் மிக நெருங்கிய ''உயிரமைப்புத்'' தொடர்புகளை (ரபோச்சியே தேலோவின்[5] பதம் இது) பூஜிக்கும் இவர்கள், தொழிலாளி அல்லாத அறிவுத்துறையினர் எவரையும் (சோஷலிஸ்டு அறிவுத்துறையினரையுங்கூட) எதிர்க்கும் இவர்கள் தமது நிலைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேறு வழியின்றி, முதலாளித்துவத்தின் ''கலப்பற்ற தொழிற் சங்கவாதிகளுடைய'' வாதங்களைக் கைக்கொள்ள வேண்டியதாகிவிடுகிறது. மிக மிக விசித்திரமான இந்த நிகழ்வை—இன்றைய சமூக-ஜனநாயகவாதிகளிடையே இருந்து வரும் கருத்து வேறுபாடுகள் யாவற்றையும் புரிந்து கொள்வதற்கு மிகவும் குறிப்பிடத்தக்கதான இந்த இயல்பை—''பொருளாதாரவாதத்''தின்[6] எழுத்து வடிவிலாகிய முதலாவது வெளிப்பாட்டிலேயே காண்கிறோம். ஆதியிலிருந்தே **ரபோச்சயா மீசில்** — தன்னை அறியாமலே — **Credo**வின்[7] வேலைத்திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தது என்பதைத்தான் இது காட்டுகிறது. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தன்முனைப்பான போக்கைப் பூஜிப்பது எல்லாம், ''உணர்வு பூர்வமான அம்சத்தின்'' பாத்திரத்தை, சமூக-ஜனநாயகத்தின் பாத்திரத்தைச் சிறுமைப்படுத்துவது எல்லாம், **அந்தப் பாத்திரத்தைச் சிறுமைப்படுத்துவோர் விரும்புகிறார, இல்லையா** என்பதைச் சாராமலே, தொழிலாளர்கள் மீது முதலாளித்துவச்

சித்தாந்தத்தின் செல்வாக்கு பலப்படுத்தப்படுவதையே குறிக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது (ராபோச்சியே தேலோவால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றுகும் இது). ''சித்தாந்தத்தின் முக்கியத்துவம் மட்டுமீறியதாக்கப்படுவதாகவும்'',* உணர்வு பூர்வமான அம்சத்தின் பாத்திரம் மிகைப்படுத்தப்படுவதாகவும்,**இன்ன பலவாறுகவும் பேசுவோர், தொழிலாளர்கள் மட்டும் ''தமது எதிர்காலத்தைத் தலைவர்களின் கையிலிருந்து பறித்துக் கொண்டுவிடுவார்கள்'' ஆயின், கலப்பற்ற தூய தொழிலாளர் இயக்கத்தால் தனக்கென சுயேச்சையான ஒரு சித்தாந்தத்தை வகுத்தமைத்துக் கொள்ள முடியும், அவ்வாறே அது வகுத்தமைத்துக் கொள்ளவும் செய்யும் என்பதாய்க் கற்பனை செய்து கொள்கிறார்கள். ஆனால் இது மிகப் பெரும் தவறே ஆகும். ஏற்கனவே கூறப்பட்டுள்ளதை நிறைவு செய்யும் முறையில், ஆஸ்திரிய சமூக-ஜனநாயகக் கட்சியினது புதிய வேலைத்திட்டத்தின் நகல் குறித்து கார்ல் காவுத்ஸ்கி எழுதிய ஆழ்ந்த உண்மையடங்கிய பின்வரும் முக்கிய சொற்களை*** மேற்கோளாய்த் தருகின்றோம்:

> ''பொருளாதார வளர்ச்சியும் வர்க்கப் போராட்டமும் சோஷலிசப் பொருளுற்பத்திக்கு வேண்டிய நிலைமைகளை மட்டுமல்லாது, இதன் அத்தியாவசியத் தன்மை குறித்த **உணர்வையும்** [அழுத்தம் காவுத்ஸ்கியினுடையது], நேரடியாகவே, உண்டாக்கிவிடுவதாய் மார்க்ஸ் வலியுறித்தினர் என்று நமது திருத்தல்வாத விமர்சகர்கள் பலரும் நம்புகிறார்கள். முதலாளித்துவ வழியில் மிக அதிக வளர்ச்சி பெற்றிருக்கும் நாடாகிய இங்கிலாந்தில் இந்த உணர்வு வேறு எந்த நாட்டையும் விட அதிக தொலைவிலேதான் இருக்கிறதென இந்த விமர்சகர்கள் வலியுறுத்துகிறார்கள். இவ்வாறு பொய்ப்பிக்கப்பட்டு

---

* இஸ்க்ரா, இதழ் 12ல், ''பொருளாதாரவாதிகளுடைய'' கடிதம்.

** ரபோச்சியே தேலோ, இதழ் 10.

*** Neue Zeit, 1901-02, XX, I, இதழ் 3, பக்கம் 79. காவுத்ஸ்கி குறிப்பிடும் இந்தக் கமிட்டி வகுத்திட்ட நகல், சிறிதளவு திருத்தப்பட்ட வடிவில் (கடந்த ஆண்டின் இறுதியில்) வியன்னா காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விடும் இக்கருத்தே வைதிக-மார்க்சியக் கருத்து என் பதாய் இவர்கள் கூறுகின்றனர். ஆஸ்திரிய வேலைத்திட் டத்தை வகுத்திருக்கும் கமிட்டி, இந்நகலைக் கொண்டு பார்க்கையில், இக்கருத்தினை ஏற்றுக் கொள்வதாகவே எவருக்கும் தோன்றும். இந்த நகல் வேலைத்திட்டத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது: 'முதலாளித்துவ வளர்ச்சி யானது எவ்வளவுக்கு எவ்வளவு எண்ணிக்கையில் தொழிலாளி வர்க்கத்தை அதிகரிக்கச் செய்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் முதலாளித்து வத்தை எதிர்த்துப் போராடும்படி தொழிலாளி வர்க்கம் பலவந்தம் செய்யப்படுவதோடு, அதற்குரிய தகுதியை யும் பெற்றுக் கொள்கிறது. பாட்டாளி வர்க்கம் உணர் வுடையதாகிறது, சோஷலிசம் சாத்தியம் என்பதோடு தவிர்க்க முடியாத அவசியமும் ஆகுமென்ற உணர்வுடை யதாகிறது.' சோஷலிச உணர்வு பாட்டாளி வர்க்கத்தி னுடைய வர்க்கப் போராட்டத்தின் அத்தியாவசியமான, நேரடியான விளைவாய் உண்டாவதாய் இச்சந்தர்ப்பத் தில் தோன்றுகிறது. ஆனால் இது உண்மைக்கு முற்றிலும் முரணானது. ஒரு போதனை என்ற அளவில் சோஷலிச மானது பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட் டத்தைப் போலவே, நவீன காலப் பொருளாதார உறவு களில்தான் வேர் கொண்டிருக்கின்றது; பின்னதைப் போலவே, முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட வெகுஜன வறுமையிலிருந்தும் கொடுந் துன்பத்திலிருந் தும்தான் உதிக்கின்றது. ஆனால் சோஷலிசமும் வர்க்கப் போராட்டமும் அடுத்தடுத்து எழுகின்றவையே அன்றி, ஒன்றிலிருந்து ஒன்று எழுகின்றவை அல்ல; ஒவ்வொன் றும் வெவ்வேறு நிலைமைகளில் எழுகின்றது. நவீன சோஷ லிச உணர்வு ஆழ்ந்த விஞ்ஞான அறிவின் அடிப்படை யில் மட்டுமே எழக் கூடியது. சோஷலிசப் பொரு ளுற்பத்திக்கு, உதாரணமாய் நவீனத் தொழில்நுட்பம் எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்கு நவீனப் பொரு ளாதார விஞ்ஞானமும் அவசியமாகும். இவை இரண் டில் எதையும் பாட்டாளி வர்க்கத்தால், எவ்வளவுதான் அது விரும்பினாலுங்கூட, தோற்றுவித்துவிட முடியாது. இவை இரண்டும் நவீனச் சமுதாய வளர்ச்சிப் போக்கி லிருந்து எழுகின்றவை. விஞ்ஞானத்துக்குரிய வாகன மாய் அமைவோர் பாட்டாளி வர்க்கத்தார் அல்ல, **முதலாளித்துவ அறிவுத்துறையினரே** [அழுத்தம் காவுத்ஸ்கி யினுடையது]: இந்த அறிவுத்துறையினர் பிரிவைச் சேர்ந்த தனிப்பட்ட உறுப்பினர்களது மனத்திலேதான் நவீன சோஷலிசம் தோன்றிற்று. அவர்கள் இதை

பாட்டாளி வர்க்கத்தாரிடையே அதிக அறிவுத்துறை வளர்ச்சி பெற்றோராய் இருந்தவர்களுக்குத் தெரிவிக்க, இவர்கள் எங்கே நிலைமைகள் அனுமதித்தனவோ அங்கே இதைப் பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்தினுள் புகுத்துகின்றனர். ஆக, சோஷலிச உணர்வானது புறத்தே இருந்து பாட்டாளி வர்க்கத் தினுடைய வர்க்கப் போராட்டத்தினுள் புகுத்தப் பட்ட ஒன்றுகும் [von aussen Hineingetragenes], அதனுள் தன்முனைப்பாகவே [urwüchsig] உதித்தெழுந்த ஒன்றல்ல. எனவே, பாட்டாளி வர்க்கத்தின் நிலை பற்றிய **உணர்வினையும்** அதற்குள்ள பணி பற்றிய உணர் வினையும் பாட்டாளி வர்க்கத்தினுள் ஊடுருவிச் செறிவு பெறச் செய்தலே [சொல்லின் நேர்ப்பொருளில்: பாட் டாளி வர்க்கத்தினுள் நிரப்பித் ததும்ப வைத்தலே] சமூக-ஜனநாயகத்துக்குள்ள கடமையென பழைய ஹயின் பெல்டு வேலைத்திட்டம் முற்றிலும் சரியானபடி கூறியது. வர்க்கப் போராட்டத்திலிருந்து உணர்வு தானுகவே எழுந்துவிட்டால், இதைச் செய்ய வேண்டிய தேவை இருக்காது. புதிய நகலானது பழைய வேலைத்திட்டத் திலிருந்து இந்த நிர்ணயிப்பை அப்படியே எடுத் தாண்டு, அதனுடன் கூட மேலே குறிப்பிட்ட நிர்ணயிப் பையும் ஒட்டிச் சேர்த்துக் கொள்கிறது. ஆனால் இச் செயல் சிந்தனை இழையோட்டத்தை அறவே முறித்து விடுகிறது....''

தொழிலாளி வெகுஜனங்கள் தமது இயக்கத்தின் வளர்ச்சியினூடே தாமாகவே சுயேச்சையான ஒரு சித்தாந் தத்தை உருவாக்கிக் கொள்ளும் பேச்சுக்கே இடம் இல்லை யாதலால்*, முதலாளித்துவச் சித்தாந்தம் அல்லது சோஷ

---

* இத்தகைய ஒரு சித்தாந்தத்தை உருவாக்குவதில் தொழிலாளர்களுக்குப் பங்கு ஏதும் இல்லை என்பதல்ல இதன் அர்த்தம். ஆனால் அவர்கள் இதில் தொழிலாளர்களாய் அல்ல, சோஷலிசத் தத்துவவாதிகளாய், புருதோன்களாக வும் வைத்லிங்குகளாகவும் பங்கெடுத்துக் கொள்கின்றனர். வேறு விதமாய்ச் சொல்வதெனில், தாம் வாழும் காலத் தின் அறிவை ஓரளவுக்குக் கிரகித்துக் கெள்ளவும் அந்த அறிவை வளர்த்துச் செல்லவும் கூடியோராய் இருக்கையில் மட்டுமே, எந்த அளவுக்கு இதைச் செய்யக் கூடியோராய் இருக்கிறார்களோ அந்த அளவுக்கு மட்டுமே, அவர் கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் தொழிலாளி

லிசச் சித்தாந்தம் இரண்டில் ஒன்றை ஏற்பதைத் தவிர வேறு வழி இல்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட வழி எதுவும் இல்லை (ஏனெனில் மனிதகுலம் ''மூன்றுவது'' சித்தாந்தம் ஒன்றை உருவாக்கவில்லை, தவிரவும் வர்க்கப் பகைமை களால் அலைக்கழிக்கப்படும் ஒரு சமுதாயத்தில் வர்க்கச் சார் பில்லாத அல்லது வர்க்கங்களுக்கு மேம்பட்ட ஒரு சித்தாந் தம் ஒருபோதும் இருக்க முடியாது). எனவே, சோஷலிசச் சித்தாந்தத்தை எவ்வகையிலும் சிறுமைப்படுத்துவதானது, அதனிடமிருந்து இம்மியளவும் விலகி ஒதுங்குவதானது முத லாளித்துவச் சித்தாந்தத்தை பலப்படுத்துவதே ஆகும். தன் முனைப்பான போக்கு குறித்து மிகுதியாய்ப் பேசப்படுகிறது. ஆனால் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தன்முனைப்பான வளர்ச்சி இவ்வியக்கம் முதலாளித்துவச் சித்தாந்தத்துக்குக் கீழ்ப்படுத்தப்படுவதற்கே, Credo வேலைத்திட்டத்தின் வழி யிலே அது வளர்வதற்கே இட்டுச் செல்கிறது; ஏனெனில் தன்முனைப்பான தொழிலாளி வர்க்க இயக்கம் தொழிற்சங்க வாதமே ஆகும், Nur-Gewerkschaftlereiவே ஆகும், தொழிற் சங்கவாதமானது தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத் தால் சித்தாந்த வழியில் அடிமை செய்யப்படுவதைத்தான்

மக்கள் இதில் மேலும் அடிக்கடி வெற்றி பெறும் பொருட்டு, பொதுவாய்த் தொழிலாளர்களுடைய உணர்வு நிலையை உயர்த்த எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண் டாக வேண்டும். ''தொழிலாளர்களுக்கான இலக்கியம்'' என்ற செயற்கையான முறையில் குறுகலாக்கப்பட்ட வரம் புக்குள் தொழிலாளர்கள் தம்மை இருத்திக் கொண்டு விடாமல், பொது இலக்கியத்தில் மேலும் மேலும் கூடுதலான அளவுக்கு அவர்கள் பாண்டித்தியம் பெறுவது அவசியமாகும். அவர்கள் ''தம்மை இருத்திக் கொண்டுவிடாமல்'' என் பதற்குப் பதில் ''இருத்தப்படாமல்'' என்று சொன்னால் இன் னும் பொருத்தமாய் இருக்கும். ஏனெனில் அறிவுத்துறை யினருக்காக எழுதப்படுகிறவை யாவற்றையும் தொழிலாளர் கள் தாமும் படிக்க விரும்புகிறார்கள், படிக்கவும் செய்கிறார் கள். ஆல நிலைமைகள் குறித்து ஒருசிலவற்றைச் சொல்லி, நீண்ட காலமாய் அறியப்பட்டவற்றை மீண்டும் மீண்டும் திருப்பிக் கூறி வந்தால் ''தொழிலாளர்களுக்குப்'' போதும் என்று ஒருசில (மோசமான) அறிவுத்துறையினர் மட்டும் தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறிக்கிறது. எனவே, **தன்முனைப்புப் போக்கை எதிர்த்துப் போராடுவதுதான்,** முதலாளித்துவ வர்க்கத்தின் குடைக் கடியில் செல்ல முனையும் இந்தத் தன்முனைப்பான, தொழிற் சங்கவாதப் பிரயத்தனத்திலிருந்து தொழிலாளி வர்க்க இயக்கத்தைத் திசை மாறச் செய்து, புரட்சிகர சமுக-ஜன நாயகத்தின் குடைக்கடியில் அதைக் கொண்டு வருவதுதான் நம் முன்னுள்ள பணியாகும், சமூக-ஜனநாயகத்தின் முன்னுள்ள பணியாகும். ஆகவே **இஸ்க்ரா**[8] இதழ் 12ல் வெளியான ''பொருளாதாரவாதக்'' கடிதத்தின் ஆசிரியர்கள் கையாண்ட வாக்கியம், அதாவது பொருளாயத அம்சங்களுக்கும் பொரு ளாயதச் சூழலுக்கும் இடையிலான பரஸ்பரச் செயலால் நிர்ணயிக்கப்பட்ட பாதையிலிருந்து தொழிலாளி வர்க்க இயக்கத்தைத் திசை மாற்றுவதற்காக மிகமிக உள்ளூக்கம் கொண்ட சித்தாந்தவாதிகள் மேற்கொள்ளும் முயற்சிகளும் தோல்வியுறவே செய்யும் என்பதாய்க் கூறும் இவ்வாக்கியம் **சோஷலிசத்தை நிராகரிப்பதற்கே ஒப்பானதாகும்.** இந்த ஆசிரி யர்கள் தாம் கூறுவதை அச்சமின்றியும் முரணில்லாமலும் தீர்க்கமாகவும் பரிசீலிக்கும் ஆற்றலுடையோராய் இருப்பின் —எழுத்துத் துறைக்கும் பொதுப் பணிக்குமான அரங்கினுள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் இவ்வாற்றல் உடையோராக வே இருக்க வேண்டும்—''தமது வெற்று நெஞ்சங்களின் மீது பயனற்ற தமது கைகளைக் கட்டிக் கொண்டு நிற்பதை''த் தவிர இவர்களுக்கு வேறு எவ்வழியும் இருக்காது — இவ் விதம் இவர்கள் செயற் களத்தை ''குறைந்த பட்ச எதிர்ப்புக் குரிய பாதையில்'', அதாவது முதலாளித்துவத் தொழிற்சங்க வாதப் பாதையில் தொழிலாளி வர்க்க இயக்கத்தை இழுத்துச் செல்லும் ஸ்துரூவேக்களுக்கும் பிரக்கப்போவிச்சுகளுக் குமோ, அல்லது பாதிரிமார்களுக்கும் போலீஸ் படையாட் களுக்குமான ''சித்தாந்தத்தின்'' பாதையில் அதை இழுத்துச் செல்லும் ஸுபாத்தவ்களுக்கோ துறந்துவிட்டுச் சரணடை வதைத் தவிர வேறு வழி எதுவும் இருக்காது.

ஜெர்மனியின் உதாரணத்தை நினைவுபடுத்திக் கொள் வோமாக. ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு லஸ்ஸால் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புடைத்த சேவை என்ன? அந்த இயக்கத்தை அவர், அது தன்முனைப்பாய் நெருங்கிச்

சென்று கொண்டிருந்த (ஸ்கூல்ஸே-தெலிட்ஸ்ச்சும் அவரை ஒத்தோரும் அருள் கூர்ந்து அளித்த உதவியுடன் நெருங்கிச் சென்று கொண்டிருந்த) படிமுறையிலான முன்னேற்றம் என்பதாய்க் கூறிக் கொண்ட அந்தத் தொழிற்சங்கவாத, கூட்டுறவுவாதப் பாதையிலிருந்து திசை மாறி வரச் செய்தார். இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு, தன்முனைப்பான அம்சத்தைக் குறைத்து மதிப்பிட வேண்டும் என்றும், போர்த்தந்திரத்தை ஒரு வளர்ச்சிப்போக்காய்க் கொள்ள வேண்டும் என்றும், அம்சங்களுக்கும் சூழலுக்கும் இடையிலான பரஸ்பரச் செயல் என்றும் மற்றும் பலவாறுகவும் கூறப்படும் பேச்சுக்களிலிருந்து முற்றிலும் மாறுன ஒன்றைச் செய்வது அவசியமாயிருந்தது. தன்முனைப்புப் போக்குக்கு எதிரான கடும் போராட்டம் அவசியமாயிருந்தது. பல ஆண்டுகளுக்கு நீடித்து நடைபெற்ற இப்படிப்பட்ட ஒரு போராட்டத்துக்குப் பிற்பாடுதான், உதாரணமாய், பெர்லின் நகரின் தொழிலாளி மக்களைப் படிமுறை முன்னேற்றவாதக் கட்சியின் அரணுய் இருக்கும் நிலையிலிருந்து மாற்றி, சமூக-ஜனநாயகத்தின் வலுமிக்க சிறந்த கோட்டைகளில் ஒன்றாகும்படிச் செய்ய முடிந்தது. இந்தப் போராட்டம் எவ்வகையிலும் இன்றுங்கூட, (ஜெர்மன் இயக்கத்தின் வரலாற்றைப் பிரக்கப் போவிச்சிடமிருந்தும், அதன் தத்துவவியலை ஸ்துரூவேவிடமிருந்தும் கற்றுக் கொள்வோர் நினைக்கக் கூடியது மாதிரி) முடிவுற்றுவிடவில்லை. இப்பொழுதுங்கூட ஜெர்மன் தொழிலாளி வர்க்கம் பல்வேறு சித்தாந்தங்களால் பிளவுபட்டிருப்பதாகவே சொல்ல வேண்டியிருக்கிறது. தொழிலாளர்களில் ஒரு பகுதியோர் கத்தோலிக்க, முடியரசுவாதத் தொழிற்சங்கங்களில் திரண்டிருக்கின்றனர்; மற்றொரு பகுதியோர் ஆங்கிலேயத் தொழிற்சங்கவாதத்தின் முதலாளித்துவப் பக்திமான்களால் நிறுவப்பட்ட ஹிர்ஷ்ச்-டன்க்கர் சங்கங்களில்[9] திரண்டிருக்கின்றனர்; மூன்றுவது பகுதியோர் சமூக-ஜனநாயகத் தொழிற்சங்கங்களில் திரண்டிருக்கின்றனர். கடைசியாய்க் குறிக்கப்பட்ட பகுதியோர் அளவிட முடியாதவாறு ஏனையோரைக் காட்டிலும் மிகுதியாய் இருக்கின்றனர்; ஆனல் சமூக-ஜனநாயகச் சித்தாந்தம் ஏனைய எல்லாச் சித்தாந்தங்களுக்கும் எதிரான நெறிபிறழாப் போராட்டத்தின்

வாயிலாகவே இந்த மேல்நிலையைப் பெற முடிந்தது, தொடர்ந்து இந்த மேல்நிலையைப் பாதுகாத்துக் கொள்ள முடியப் போகிறது.

ஆனால் தன்முனைப்பான இயக்கம், குறைந்தபட்ச எதிர்ப்புக்குரிய பாதையிலான இயக்கம், ஏன் முதலாளித்துவச் சித்தாந்தத்தின் ஆதிக்கத்துக்கு இட்டுச் செல்ல வேண்டுமென்று வாசகர் நம்மைக் கேட்கலாம். ஏனென்றால் முதலாளித்துவச் சித்தாந்தம் பூர்வோத்திரத்தில் சோஷலிசச் சித்தாந்தத்தைக் காட்டிலும் மிகவும் பழமையானது, மேலும் பூரணமான வளர்ச்சி பெற்றது, தன்னைப் பரவச் செய்து கொள்வதற்கு **அளவிட முடியாதபடி** கூடுதலான சாதனங்களைத் தன்னிடத்தே கொண்டது.* குறிப்பிட்ட ஒரு நாட்டில் சோஷலிச இயக்கம் எந்த அளவுக்கு இளமையானதாய் இருக்கிறதோ, அந்த அளவுக்கு மேலும் கடுமையாய் அது, சோஷலிசமல்லாத சித்தாந்தத்தை

---

* தொழிலாளி வர்க்கம் **தன்முனைப்பான** முறையில் சோஷலிசத்தை நோக்கி ஈர்க்கப்படுவதாய் அடிக்கடி கூறப்படுகிறது. தொழிலாளி வர்க்கத்தின் இன்னல்களுக்கும் கொடுந் துன்பத்துக்குமான காரணங்களை வேறு எந்தத் தத்துவத்தைக் காட்டிலும் சோஷலிசத் தத்துவம் மிக ஆழமாகவும் பிழையற்றவாறும் வெளிப்படுத்திக் காட்டுகிறது என்கிற அர்த்தத்தில் இது முற்றிலும் மெய்தான். தொழிலாளர்கள் இதை இவ்வளவு சுலபமாய்க் கிரகித்துத் தமதாக்கிக் கொள்ள முடிவதற்கு இதுவேதான் காரணம். ஆனால் இந்தத் தத்துவம் தன்முனைப்புப் போக்குக்குத் தானே அடிபணிந்து விடாமல் இருக்கும் **பட்சத்தில்தான்**, தன்முனைப்புப் போக்கினைத் தனக்குக் கீழ்ப்படியச் செய்து கொள்ளும் **பட்சத்தில்தான்** மேற்கூறியது நடந்தேற முடியும். சாதாரணமாய் இது கூருமலே புரிந்து கொள்ளப்படும் ஒன்று. ஆனால் இதைத்தான் **ரபோச்சியே தேலோ** மறந்துவிடுகிறது, அல்லது திரித்துப் புரட்டுகிறது. தொழிலாளி வர்க்கம் தன்முனைப்பான முறையில் சோஷலிசத்தை நோக்கி ஈர்க்கப்படுகிறது; ஆயினும் மிகவும் பரவலாய் நிலவுவதும் (இடையறாதும் பல்வேறு வடிவங்களிலும் புத்துயிர் ஊட்டப்படுவதுமான) முதலாளித்துவச் சித்தாந்தம் தன்முனைப்பான முறையில் மேலும் அதிக அளவுக்குத் தன்னைத் தொழிலாளி வர்க்கத்தின் மீது திணித்துக் கொள்கிறது.

ஆதிக்கம் பெறச் செய்யும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்துப் போராட வேண்டும்; ''உணர்வு பூர்வமான அம்சம் மிகைப்படுத்தப்படுவதை'' எதிர்த்தும் இன்ன பிறவற்றை எதிர்த்தும் கூச்சலிடும் மோசமான ஆலோசகர்களுக்கு எதிராய் மேலும் வைராக்கியமான முறையில் தொழிலாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட வேண்டும். ''பொருளாதாரவாத''க் கடிதத்தின் ஆசிரியர்கள், கருத்து வேறுபாட்டைச் சகியாத பிடிவாதம் இயக்கத்தின் பிள்ளைப் பிராயத்துக் குரிய குணதிசயமாகும் என்பதாய்ச் சாடி, **ரபோச்சியே தேலோவுடன்** சேர்ந்து ஒத்து ஊதுகிறார்கள். இதற்கு நாம் அளிக்கும் பதில் இதுவே: ஆம், நமது இயக்கம் அதன் பிள்ளைப் பிராயத்திலே தான் இருக்கின்றது, அது மேலும் விரைவாய் வளரும் பொருட்டு, தன்முனைப்புப் போக்குக்கு அடிபணிவதன் மூலம் அதன் வளர்ச்சிக்குத் தடை போடுவோர் குறித்து அது சகியாத பிடிவாத மனப்பான்மை கொண்டதாகவே இருக்க வேண்டும். போராட்டத்தின் தீர்மானகரமான கட்டங்களை எல்லாம் நெடுங்காலத்துக்கு முன்பே அனுபவித்துள்ள ''முதுபெரும்'' ஆட்களாய் நம்மைப் பாவித்துக் கொள்வதைக் காட்டிலும் நகைக்கத்தக்கதும், தீமை பயப்பதுமான ஒன்று எதுவும் இல்லை.

1901 இலையுதிர் காலத்திற்கும்
1902 பிப்ரவரிக்கும் இடையில்
எழுதப்பட்டது

1902ல் ஸ்டுட்கார்ட்டில்
தனிப் புத்தகமாய்
வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி 6,
பக்கங்கள் 37-42

கட்சி நிறுவனமும்
கட்சி இலக்கியமும்

அக்டோபர் புரட்சியைத்[10] தொடர்ந்து ருஷ்யாவில் சமூக-ஜனநாயகப் பணிக்குத் தோன்றியிருக்கும் புதிய நிலைமைகள் கட்சி இலக்கியம் குறித்த பிரச்சினையை முன்னிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றன. சட்டவிரோதமான பத்திரிகைகள், சட்டபூர்வமான பத்திரிகைகள் என்னும் பாகுபாடு—பிரபுத்துவ, எதேச்சாதிகார ருஷ்யாவின் சகாப்தத்தினது அந்தச் சோகமிக்க பாரம்பரியம்—மறையத் தொடங்கியிருக்கிறது. இன்னமும் அது மடிந்துவிடவில்லை, இல்லவே இல்லை. நமது தலைமை அமைச்சரின் கபட நாடக அரசாங்கம் இன்னமும் தாண்டவமாடிக் கொண்டுதான் இருக்கிறது—ஆகவே **இஸ்வேஸ்தியா சவேத்தா ரபோச்சிஹ் தெபுத்தாத்தவ்**[11] ''சட்டவிரோதமான'' முறையிலேதான் அச்சிடப்படுகின்றது. ஆனால் அரசாங்கத்தால் தடுத்து நிறுத்த முடியாத ஒன்றுக்குத் ''தடை விதிக்கும்'' இந்த அசட்டு முயற்சிகள், அரசாங்கத்தை மானமிழக்கச் செய்கின்றனவே ஒழிய, தார்மிக வழியில் அதற்கு மேலும் பல உதைகள் விழச் செய்கின்றனவே ஒழிய, வேறு பலன் தரவில்லை.

சட்டவிரோதமான பத்திரிகைகள், சட்டபூர்வமான பத்திரிகைகள் என்னும் பாகுபாடு இருந்து வந்த வரையில், கட்சிப் பத்திரிகைகளா, கட்சி சார்பில்லாப் பத்திரிகைகளா என்கிற பிரச்சினை மிகவும் சுலபமாகவும், மிகவும் பொய்யான, அசாதாரணமான முறையிலும் தீர்மானிக்கப்பட்டு வந்தது. சட்டவிரோதமான பத்திரிகைகள் எல்லாம் கட்சிப் பத்திரிகைகளாய் இருந்தன—இவற்றை வெளியிட்ட நிறு

வனங்களும் இவற்றை நடத்திய குழுக்களும் நடைமுறைக் கட்சி ஊழியர்களது கோஷ்டிகளுடன் ஏதேனும் ஒருவழியில் இணைந்திருந்தன. சட்டபூர்வமான பத்திரிகைகள் யாவும் கட்சி சார்பில்லாதனவாய் இருந்தன—ஏனெனில் கட்சிகள் தடை விதிக்கப்பட்டிருந்தன—ஆயினும் இந்தப் பத்திரிகைகளும் ஏதேனும் ஒரு கட்சியைக் ''தழுவுகிறவையாகவே'' இருந்தன. இயற்கைக்கு முரணான கூட்டுகளும், விசித்திர ''சகவாசங்களும்'', தலைமறைவுக்காக வேண்டியிருந்த பொய்யான ஏற்பாடுகளும் தவிர்க்க முடியாதனவாய் இருந்தன. கட்சிக் கருத்தோட்டங்களைப் பிரதிபலிக்க விரும்பியோர் வலிந்து அனுசரிக்க வேண்டியிருந்த தன்னடக்கமும் தயக்கமும், இந்தக் கருத்தோட்டங்களின் நிலைக்கு உயராதோரும் உண்மையில் கட்சி ஆட்களல்லாதோரும் ஆகியவர்களது முதிர்ச்சியில்லாச் சிந்தனை அல்லது நெஞ்சுறுதியின்மையுடன் இணைந்து கலக்கலாயின.

மறைபொருளான மொழிக்கும் எழுத்துத் துறை அடிவருடிக்கும் அடிமையின் பேச்சுக்கும் சித்தாந்தத் துறைக் கொத்தடிமைத்தனத்துக்குமான கேடுகெட்ட ஒரு காலம் அது! ருஷ்யாவில் உயிருள்ளவையும் புது மலர்ச்சி கொண்டவையுமான யாவற்றையும் நெரித்துத் திணரடித்த இந்தக் கொடுஞ் சூழ்நிலைக்குப் பாட்டாளி வர்க்கம் முடிவு கட்டியிருக்கிறது. ஆனால் இதுகாறும் பாட்டாளி வர்க்கம் ருஷ்யாவுக்குப் பாதியளவு சுதந்திரமே வென்றிருக்கிறது.

புரட்சி இன்னும் நிறைவுற்றுகவில்லை. புரட்சியைத் தோற்கடிக்க **இனிமேல்** ஜாரிசம் போதிய பலமுடையதாய் இல்லை; அதேபோதில் ஜாரிசத்தைத் தோற்கடிக்க **இன்னமும்** புரட்சி போதிய பலம் பெற்றுகவில்லை. பகிரங்கமான, ஒளிவு மறைவில்லாத, நேரடியான, முரணற்ற கட்சி மனப்பான்மையானது தலைமறைவான, இரகசிய, ''ராஜதந்திர'', சூழ்ச்சிகரச் ''சட்ட முறைமையுடன்'' சேர்ந்திருக்கும் இயற்கைக்கு ஒவ்வாத இந்த இணைவு, எங்கும் யாவற்றிலும் செயல்படும் ஒரு காலத்தில், இப்பொழுது நாம் வாழ்ந்து வருகிறோம். இயற்கைக்கு ஒவ்வாத இந்த இணைவு நம்முடைய செய்தியேட்டிலும் தனது கைவரிசையைக் காட்டுகிறது: இடைநிலையான மிதவாத-முதலாளித்துவச் செய்தியேடுகள்

வெளிவராமல் தடை செய்யும்படியான சமூக-ஜனநாயகக் கொடுங்கோன்மை என்பதாய்த் திருவாளர் குச்கோவ் எவ் வளவுதான் நையாண்டி செய்தபோதிலும், உண்மை என்ன வெனில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகக் கட்சியினுடைய மத்திய ஏடாகிய **புரொலெத்தாரி** போலீஸ் தாண்டவமாடும் **எதேச்சாதிகார** ருஷ்யாவின் இழுத்து மூடிப் பூட்டப்பட்ட கதவுகளுக்கு வெளியேதான் இன்னமும் இருந்து வருகிறது.

நிற்க, பாதி அளவுக்கு நடைபெற்றிருக்கும் இந்தப் புரட்சி நம் எல்லோரையும் புதிய வழிகளில் யாவற்றையும் ஒழுங்கமைக்க உடனே வேலை தொடங்குமாறு வற்புறுத்து கின்றது. இன்று இலக்கியமானது, ''சட்டபூர்வமாய்'' வெளி வருவதுங்கூட, பத்தில் ஒன்பது பங்குக்குக் கட்சி இலக்கிய மாகிவிட முடியும். அது கட்சி இலக்கியமாகிவிடவும் வேண் டும். முதலாளித்துவப் பழக்கவழக்கங்களிலிருந்து, லாப மடிக்கும் வாணிப நெறியிலான முதலாளித்துவப் பத்திரிகை களிலிருந்து, முதலாளித்துவ எழுத்துத் துறையோரின் தன்னல முன்னேற்ற நாட்டம், தனிநபர் மனப்பான்மை, ''உயர்குலப் பாங்குடைத்த அராஜகவாதம்'', லாப வேட்டை ஆகியவற்றிலிருந்து வேறுபட்டு, இவற்றுக்கு நேர் மாறாய், சோஷலிசப் பாட்டாளி வர்க்கம் **கட்சி இலக்கியம்** என்னும் கோட்பாட்டை முன்வைத்து, இந்தக் கோட்பாட்டை வளர்த்துச் சென்று, சாத்தியமான அளவுக்குப் பூரணமாகவும் நிறைவாகவும் இதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண் டும்.

கட்சி இலக்கியம் என்னும் கோட்பாடு என்பதென்ன? சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்துக்கு, இலக்கியமானது தனி ஆட்கள் அல்லது கோஷ்டிகள் செல்வம் திரட்டிக் கொள்வதற்குரிய ஒரு சாதனமாய் இருக்க முடியாது என்பது மட்டுமல்ல இக்கோட்பாடு; உண்மையில் இலக்கியமானது பாட்டாளி வர்க்கத்தின் பொது இலட்சியத்தைச் சாராத ஒன்றாய், தனி ஆள் முயற்சியாய் இருக்க முடியாது என்பதும் ஆகும். கட்சி சார்பில்லா மனப்பாங்குடைய எழுத்தாளர் கள் ஒழிக! இலக்கியத் துறை மீமனிதர்கள் (supermen) ஒழிக! இலக்கியமானது பாட்டாளி வர்க்கத்தினது பொது இலட்சி யத்தின் ஒரு **பகுதியாக** வேண்டும், தொழிலாளி வர்க்கம்

அனைத்தின் அரசியல் உணர்வு கொண்ட முன்னணிப் படை அனைத்தாலும் இயக்கப்படும் தனியொரு மாபெரும் சமூக-ஜனநாயகப் பொறியமைவைச் சேர்ந்த ''பல் சக்கரமும் திருகும்'' ஆகிவிட வேண்டும். ஒழுங்கமைந்த, திட்டமிடப் பட்ட, ஒருமித்த சமூக-ஜனநாயகக் கட்சிப் பணியில் இலக்கியம் ஒரு கூறு ஆகிவிட வேண்டும்.

''உவமைகள் எல்லாம் நொண்டிகள்தான்'' என்பது ஜெர்மன் பழமொழி. இலக்கியத்தைப் பல் சக்கரத்துடனும், உயிருள்ள ஓர் இயக்கத்தை ஒரு பொறியமைவுடனும் ஒப்பிடும் என்னுடைய உவமையும் இத்தகையதுதான். இப்படிப்பட்ட உவமை குறித்து ஆத்திரக் கூச்சல் எழுப்புவதற்கு, சிடுசிடுப்பான அறிவுத்துறையினர் எப்பொழுதுமே காத்துக் கொண்டிருப்பார்கள் என்பதை நான் அறிவேன்—கருத்துக்கள் தங்குதடையின்றி களம் புகுந்துப் போராடுவதையும், விமர்சனம் செய்வதற்குரிய சுதந்திரத்தையும், இலக்கிய சிருஷ்டி சுதந்திரத்தையும் இன்ன பிறவற்றையும் இது மதியாது கேவலப்படுத்துகிறது என்றும், உயிரற்றதாக்குகிறது என்றும், ''அதிகாரவர்க்க நெறிமுறையாக்குகிறது'' என்றும் இன்ன பலவாறுகவும் இவர்கள் கூச்சலிடுவார்கள். இப்படிப்பட்ட கூச்சல்கள் எல்லாம் உண்மையில் முதலாளித்துவ அறிவுத்துறையோரது தனிநபர் மனப்பான்மையின் ஒரு வெளியீடே அன்றி, அதற்குமேல் ஒன்றுமல்ல. இலக்கியமானது வேறு எதனிலும் அரிதாகவே இயந்திரவியல் பாங்கிலான சீராக்கத்துக்கோ, சரிமட்டமாக்குதலுக்கோ உட்படக் கூடியது, பெரும்பான்மைக்குச் சிறுபான்மை கீழ்ப்படியும் விதிக்கு இணங்கக் கூடியது என்பதில் ஐயமில்லை. அதே போல இந்தத் துறையில், அவரவரது தனிப்பட்ட முன்முயற்சிக்கும், தனிப்பட்ட விருப்பப் போக்குக்கும், மற்றும் சிந்தனைக்கும் கற்பனைக்கும், வடிவத்துக்கும் உள்ளடக்கத்துக்கும் நிச்சயமாய் அதிக வாய்ப்பும் வசதியும் அளிக்க வேண்டும் என்பதிலும் ஐயமில்லை. இவை யாவும் மறுக்க முடியாதவையே; ஆனால் இவை யாவும் தெளிவுபடுத்துவது என்னவெனில், பாட்டாளி வர்க்கக் கட்சியினுடைய இலட்சியத்தின் எழுத்துத் துறையை இயந்திரவியல் பாங்கிலே அதன் பிற துறைகளுக்கு முழுதொத்ததாய்க் கொள்ளலாகாது என்பதே.

இந்த உண்மை, எழுத்துத் துறை பிரிக்கவொண்ணுதபடி பிற துறைகளுடன் இணைந்து, தவறாமலும் அவசியமாகவும் சமூக-ஜனநாயகக் கட்சிப் பணியின் ஓர் அம்சமாகிவிட வேண்டுமென்ற கோட்பாட்டை—முதலாளித்துவ வர்க்கத்துக்கும் முதலாளித்துவ ஜனநாயகத்துக்கும் அன்னியமாகவும் விசித்திரமாகவும் இருக்கும் இந்தக் கோட்பாட்டை—கிஞ்சித்தும் மறுக்கவில்லை. பத்திரிகைகள் பல்வேறு கட்சி நிறுவனங்களுடைய முரசங்களாகிவிட வேண்டும்; இந்தப் பத்திரிகைகளின் எழுத்தாளர்கள் நிச்சயமாய் இந்நிறுவனங்களின் உறுப்பினர்களாகிவிட வேண்டும். பதிப்பகங்களும் புத்தகக் கிடங்குகளும், புத்தகக் கடைகளும் படிப்பறைகளும், நூலகங்களும் இவற்றையொத்த நிலையங்களும்—யாவும் கட்சியினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தாக வேண்டும். நிறுவன வழியில் ஒழுங்கமைந்த சோஷலிசப் பாட்டாளி வர்க்கம் இந்த வேலை அனைத்தையும் கண்காணிக்க வேண்டும்; அதன் முழுப் பரிமாணத்திலும் அதை மேற்பார்வையிட வேண்டும்; ஜீவ சக்தி வாய்ந்த பாட்டாளி வர்க்க இலட்சியத்தின் உயிர் அருவியை, அதனுள், ஆரம்பத்திலிருந்து முடிவு வரை, விதிவிலக்கு ஏதுமின்றி, பாய்ந்து பரவச் செய்ய வேண்டும்; இவ்விதம் அது, எழுதுவது எழுத்தாளரின் வேலை, படிப்பது வாசகரின் வேலை என்கிற அரை-ஒப்லோமவ்,[12] அரை-கடைக்காரர் மனப்பான்மையிலான அந்தப் பழைய ருஷ்யக் கோட்பாட்டின் வேர்களை அடியோடு கெல்லியெறிய வேண்டும்.

ஆசியப் பாணியிலான தணிக்கை முறையாலும் ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கத்தாலும் குலைத்துக் கெடுக்கப்பட்டிருக்கும் எழுத்துப் பணியை இவ்வாறு மாற்றியமைப்பது ஒரே அடியில் உடனடியாகவே செய்து முடிக்கப்பட வேண்டுமென நாம் ஆலோசனை கூறவில்லை. ஒரே மாதிரியாய் வரையறுக்கப்பட்ட எவ்வகையான ஏற்பட்டையோ, ஒரு சில ஆணைகளின் மூலம் தீர்வு காண்பதையோ ஆதரித்து வாதாடும் எண்ணம் ஒருபோதும் எமக்கு இல்லை. தயாராய் முன்கூட்டியே வகுத்தமைக்கப்பட்ட திட்டங்கள் இங்கு சிறிதும் பொருந்தக் கூடியவையல்ல. செய்ய வேண்டியது என்னவெனில், நமது கட்சி பூராவும், அனைத்து ருஷ்யாவின் அர

சியல் உணர்வு படைத்த சமூக-ஜனநாயகப் பாட்டாளி வர்க்கம் பூராவும் இந்தப் புதிய பிரச்சினை குறித்துத் தெரிந்து கொண்டு, தனிப்பட இதைத் தெளிவாய் வரையறை செய்து கொண்டு, எங்கும் தீர்வு காண முற்பட வேண்டும். பிரபுத்துவத் தணிக்கை முறையின் சிறைக்கூடத்திலிருந்து வெளிப்பட்டு வரும் நாம், முதலாளித்துவ-கடைக்காரருக்கு உரித்தான எழுத்துத் துறை உறவுகளின் கைதிகளாவதற்கு விரும்பவில்லை, கைதிகளாகவும் மாட்டோம். சுதந்திரமான பத்திரிகைகளை—போலீசிடமிருந்து மட்டுமல்ல, மூலதனத்திலிருந்தும், தன்னல முன்னேற்ற நாட்டத்திலிருந்தும், இன்னும் முக்கியமாய் முதலாளித்துவ-அராஜகவாதத் தனிநபர் போக்கிலிருந்தும் விடுபட்ட சுதந்திரமான பத்திரிகைகளை—நிறுவ விரும்புகிறோம், இவ்வாறே நிறுவவும் செய்வோம்.

கடைசியில் கூறப்பட்டது முரணுரையாக, அல்லது வாசகரை அவமதிப்பதாய்த் தோன்றலாம். என்ன இது!—என்று அறிவுத்துறையாளர், சுதந்திரத்தின் ஆர்வமிக்க இந்த ஆதரவாளர் கூச்சலிடக் கூடும். என்ன, எழுத்துப் பணியைப் போன்ற மென்மையான, தனிமனிதத் தன்மையதான ஒரு விவகாரத்தைக் கூட்டுக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்த விரும்புகிறீர்களே! விஞ்ஞானம், தத்துவவியல், அல்லது அழகியல் பிரச்சினைகளைப் பெரும்பான்மை வாக்குகள் மூலம் தொழிலாளர்கள் தீர்மானிக்க வேண்டும் என்கிறீர்களே! முழுக்க முழுக்க தனிமனிதத் தன்மையதான சித்தாந்தப் பணி முழுக்க முழுக்க சுதந்திரமானதாய் இருக்க வேண்டும் என்பதை மறுக்கிறீர்களே!

கனவான்களே, பதறுதீர்கள்! முதலாவதாக, இங்கு நாம் விவாதிப்பது கட்சி இலக்கியம் குறித்தும், கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அது கீழ்ப்படிய வேண்டியது குறித்தும். தாம் விரும்புகிறபடி, தடை ஏதுமின்றி, எழுதவும் பேசவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அதேபோதில், பலரது இஷ்டபூர்வமான இணைவாகிய ஒவ்வொரு நிறுவனத்துக்கும் (கட்சியும் அடங்கலாய்), கட்சியின் பெயரை உபயோகித்துக் கொண்டு கட்சி-விரோதக் கருத்தோட்டங்களை ஆதரித்து நிற்கும் உறுப்பினர்களை வெளியே தள்ளுவதற்கும் உரிமை உண்டு. பேச்சு சுதந்திரமும் பத்திரிகை சுதந்திரமும் முழு

நிறைவாகவே இருக்க வேண்டும். அதேபோதில் நிறுவன சுதந்திரமும் முழுநிறைவாகவே இருக்க வேண்டும். ஆசை தீர நீங்கள் கூச்சல் போடுவதற்கும், பொய் கூறுவதற்கும், எழுதுவதற்கும், பேச்சு சுதந்திரத்தின்படி உங்களுக்கு முழு உரிமை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல, இந்த அல்லது அந்தக் கருத்தோட்டத்தை ஆதரித்து நிற்போருடன் நிறுவன வழியில் இணைவதற்கோ, விலகிக் கொள்வதற்கோ, நிறுவன சுதந்திரத்தின்படி எனக்கு நீங்கள் முழு உரிமை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். கட்சி என்பது இஷ்டபூர்வமான இணைவாகிய நிறுவனமாகும்; கட்சி-விரோதக் கருத்தோட்டங்களை ஆதரித்துச் செயல்படுவோரை விலக்கித் தன்னைச் சுத்தம் செய்து கொள்ளாவிடில், தவிர்க்க முடியாதபடி இந்த நிறுவனம் முதலில் சித்தாந்த வடிவிலும், பிறகு அமைப்பு வடிவிலும் சிதைவுறவே செய்யும். கட்சிக்கும் கட்சி-எதிர்ப்புக்கும் இடையிலுள்ள எல்லைக் கோட்டை நிர்ணயம் செய்வதற்குக் கட்சியின் வேலைத்திட்டமும், போர்த்தந்திரம் பற்றிய கட்சித் தீர்மானங்களும், கட்சியின் விதிகளும், கடைசியாக, பட்டாளி வர்க்கத்தின் இஷ்டபூர்வமான சர்வதேசக் கூட்டமைப்புகளின் வடிவிலான சர்வதேச சமூக-ஜனநாயகத்தின் அனுபவம் அனைத்தும் உள்ளன. இந்த சர்வதேச சமூக-ஜனநாயகமானது, முழு அளவுக்கு முரணில்லாதவை அல்லாத, முற்றிலும் மார்க்சியத் தன்மை உடைத்திராத, முழுமையாய்ச் சரியானவை என்று சொல்ல முடியாத தனிப்பட்ட கூறுகளையும் போக்குகளையும் தனது கட்சிகளுக்குள் இடையறாது கொண்டு வந்து சேர்த்துக் கொள்கிறது; அதேபோது இடையறாது அவ்வப்பொழுது தனது அணிகளைச் ''சுத்திகரிப்பு'' செய்து கொள்கிறது. முதலாளித்துவ ''விமர்ச சுதந்திரத்தின்'' ஆதரவாளர்களே, கட்சியின் **உள்ளே**, நாங்களும் இப்படித்தான் செய்து கொள்வோம். இப்பொழுது நாங்கள் திடுதிப்பென வெகுஜனக் கட்சியாகி வருகின்றோம், திடுமென பகிரங்க நிறுவனமாய் மாறிச் செல்கின்றோம்; முரண் நிலையான (மார்க்சியக் கண்ணோட்டத்திலிருந்து) பலரும் எங்களுடன் வந்து சேர்ந்து கொள்வது தவிர்க்க முடியாததாகும்; கிறிஸ்தவர்கள் சிலருங்கூட, மாயவாதிகள் சிலருங்கூட எங்களுடன் வந்து சேர்ந்து கொள்ளலாம்.

எங்கள் வயிறுகள் ஆரோக்கியமானவை, நாங்கள் மலிகளை ஒத்த உறுதி வாய்ந்த மார்க்சியவாதிகள். முரண்பாடுடைய இக்கூறுகளை எங்கள் வயிறுகள் செரித்துக் கொள்ளக் கூடியவையே. கட்சியின் உள்ளேயான இந்தச் சிந்தனை சுதந்திரமும் விமர்சன சுதந்திரமும், கட்சிகள் எனப்படும் அந்த இஷ்டபூர்வமான நிறுவனங்களில் மக்களை ஒழுங்கமைவு பெறச் செய்வதற்குரிய சுதந்திரம் குறித்து ஒருபோதும் எங்களை மறந்துவிடச் செய்ய மாட்டா.

இரண்டாவதாக, முதலாளித்துவத் தனிநபர் மனப்பான்மையோராகிய உங்களுக்கு இதை நாங்கள் சொல்லியாக வேண்டும்: முழுமுதலான சுதந்திரம் என்பதாய் நீங்கள் பேசுவது முழுக்க முழுக்க கபடமான புரட்டே ஆகும். பணத்தின் வல்லமையை அடிப்படையாய்க் கொண்ட ஒரு சமுதாயத்தில், உழைப்பாளி வெகுஜனங்கள் வறுமையில் வதைய ஒரு சில செல்வந்தர்கள் புல்லுருவிகளாய் வாழும் ஒரு சமுதாயத்தில் மெய்யான, பயனுள்ள ''சுதந்திரம்'' இருக்கவே முடியாது. திருவாளர் எழுத்தாளரே, உங்களுடைய முதலாளித்துவப் பதிப்பகத்தார் சம்பந்தமாய் நீங்கள் சுதந்திரமானவராகவா இருக்கிறீர்கள்? உங்களுடைய முதலாளித்துவ ரசிகர் பெருமக்கள் சம்பந்தமாய்—சட்டங்களிலும்* ஓவியங்களிலும் ஆபாசத்தையும், ''புனித'' நாடகக் கலைக்கு ''அனுபந்தமாய்'' விபசாரத்தையும் அளிக்குமாறு உங்களைக் கோரும் இவர்கள் சம்பந்தமாய்—சுதந்திரமானவராகவா இருக்கிறீர்கள்? முழுமுதலான இந்த சுதந்திரம் முதலாளித்துவ அல்லது அராஜகவாதத் தொடராகும் (உலகக் கண்ணோட்டம் என்ற முறையில் அராஜகவாதமானது உட்புறம் வெளிப்புறமாய் மாற்றப்பட்ட முதலாளித்துவத் தத்துவவியலே ஆகும்). யாராலும் சமுதாயத்தில் இருந்து கொண்டு, அதேபோதில் சமுதாயத்திலிருந்து சுதந்திரமாய் இருப்பது முடியாத காரியம். முதலாளித்துவ எழுத்

---

* மூலத்தில் ஏற்பட்ட அச்சுப்பிழையாகவே இருக்க வேண்டும் இது. **ரம்காஹ்** (சட்டங்கள்) என்பதாய் இருப்பது, சந்தர்ப்பத்தைக் கொண்டு பார்க்கையில் **ரமானஹ்** (நாவல்கள்) என்பதாகவே இருக்க வேண்டும்.—(ப-ர்.)

தாளர் அல்லது கலைஞர் அல்லது நடிகையின் சுதந்திரம் எல்லாம், பண மூட்டைக்கு, லஞ்ச ஊழலுக்கு, விபசாரத்துக்குக் கீழ்ப்பட்டியும் முகமூடி பூண்ட (அல்லது கபடமாய் முகமூடி இடப்பட்ட) சார்புநிலையே அன்றி வேறல்ல.

சோஷலிஸ்டுகளாகிய நாங்கள் இந்தக் கபடத்தை அம்பலம் செய்கிறோம், பொய்யான பெயர்ச் சீட்டைக் கிழித்தெறிகிறோம்—நாங்கள் இதைச் செய்வது வர்க்கச் சார்பில்லாத கலை, இலக்கியத்தை வந்தடைவதற்காக அல்ல (வர்க்கங்கள் இல்லாத சோஷலிச சமுதாயத்தில் மட்டுமே இது சாத்தியம்); உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்துடன் பிணைப்பு கொண்டு, சுதந்திரமானதாய்க் கபட வேடம் போடும் இந்த இலக்கியத்தை, **பகிரங்கமாய்ப்** பாட்டாளி வர்க்கத்துடன் பிணைப்பு கொண்டு மெய்யாகவே சுதந்திரமானதாய் இருக்கும் இலக்கியத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இதைச் செய்கிறோம்.

பின்னது சுதந்திரமான இலக்கியமாய் இருக்கும், ஏனெனில் சோஷலிசம் என்னும் கருத்தும் தொழிலாளி மக்களுடனை ஒத்துணர்வும்—பேராசையோ, தன்னல முன்னேற்ற நாட்டமோ அல்ல—இதன் அணி வரிசைகளுடன் மேலும் மேலும் புதிய சக்திகளைக் கொண்டு வந்து சேர்க்கும். இது சுதந்திரமான இலக்கியமாய் இருக்கும், ஏனெனில் இது நாட்டின் அரும்பும் மலரும் நாட்டின் பலமும் எதிர்காலமும் ஆகிய லட்சோப லட்சமாகிய, கோடானு கோடியாகிய தொழிலாளி மக்களுக்குப் பணி புரியும்—சலிப்புற்றுவிட்ட நாயகிகளுக்கு அல்ல, ஊதிப் பருத்துச் சீரழிந்து வதையும் சோர்வுற்றுவிட்ட ''மேல் மட்டத்துப் பத்தாயிரத்துக்கு'' அல்ல. இது சுதந்திரமான இலக்கியமாய்த் திகழ்ந்து, சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் அனுபவத்தையும் அதன் உயிர் ஆற்றல் வாய்ந்த பணியையும் கொண்டு, மனிதகுலத்தின் புரட்சி சிந்தனையின் உச்சி முடியாய்த் விளங்குவதை மேலும் செழுமைப் படுத்தும்; கடந்த காலத்தின் அனுபவத்துக்கும் (சோஷலிசத்தின் வளர்ச்சியை, அதன் புராதன, கற்பனாவாத வடிவங்களிலிருந்தான இந்த வளர்ச்சியை நிறைவு பெறச் செய்யும் விஞ்ஞான சோஷலிசத்துக்கும்), நிகழ் கால அனுபவத்துக்கும் (தொழிலாளித் தோழர்களது தற்போதைய போராட்

டத்துக்கும்) இடையில் நிரந்தரமான செயற்பாடு ஏற்படச் செய்யும்.

ஆகவே, தோழர்களே, வேலையைத் தொடங்குவோம்! ஒரு புதிய, கடினமான பணி நம்மை எதிர்நோக்குகிறது. ஆனால் இப்பணி மாண்பு மிக்கது, நன்றிக்குரியது — சமூக-ஜனநாயகத் தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இரண்டறக் கலந்த விரிவான, மிகப் பல வடிவங்களிலுமான, விதம் விதமான, பல்வேறுபட்டதான இலக்கியத்தினை ஒழுங்கமைத்திடும் பணி இது. சமூக-ஜனநாயக இலக்கியம் அனைத்தும், கட்சி இலக்கியமாகிவிட வேண்டும். ஒவ்வொரு செய்தியேடும் சஞ்சிகையும் பதிப்பகமும் இன்ன பிறவும் உடனடியாகத் தனது பணியினைத் திருத்திப் புத்தமைத்துக் கொள்ள முற்பட்டாக வேண்டும், ஏதேனும் ஒரு வடிவில் இந்த அல்லது அந்தக் கட்சி நிறுவனத்துடன் அது ஒருசேர இணைந்துவிடும் படியான ஒரு நிலைக்கு இந்தப் புத்தமைப்பு இட்டுச் சென்றுக வேண்டும். அப்பொழுதுதான் ''சமூக-ஜனநாயக'' இலக்கியம் மெய்யாகவே இப்பெயரைச் சூட்டிக் கொள்வதற்குரிய தகுதியைப் பெற முடியும்; அப்பொழுதுதான் அது தனது கடமையை நிறைவேற்றக் கூடியதாகி, முதலாளித்துவச் சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்குள் இருக்கும் போதுங்கூட முதலாளித்துவ அடிமை நிலையிலிருந்து உடைத்துக் கொண்டு வெளியே வந்து, மெய்யாகவே முன்னேறிய, முழுக்க முழுக்க புரட்சிகரமான வர்க்கத்தோடு இரண்டறக் கலக்க முடியும்.

நோவயா ழீஸின், இதழ் 12,
1905 நவம்பர் 13
ஒப்பம்: நி. லெனின்

நூல் திரட்டு,
தொகுதி 12,
பக்கங்கள் 99-105

சோஷலிஸ்டுக் கட்சியும்
கட்சி சார்பில்லாத புரட்சிவாதமும்

1

ருஷ்யாவில் புரட்சி இயக்கம் மக்களிடையே புதுப் புது பகுதிகளுக்கு விரைவாய்ப் பரவி வருகின்றது. இந்த இயக்கம் கட்சி சார்பில்லாத நிறுவனங்கள் பலவற்றையும் தோன்றச் செய்கின்றது. இணைந்து சேர வேண்டுமென்ற உணர்ச்சி எவ்வளவுக்கு எவ்வளவு அதிக காலமாய் நசுக்கப்பட்டும் அடக்கி ஒடுக்கப்பட்டும் வந்ததோ, அவ்வளவுக்கு அவ்வளவு முனைப்பாய் அது செயல்பட்டு தன்னை வெளிக்காட்டிக் கொள்கிறது. எல்லா வகையான நிறுவனங்களும், பல சந்தர்ப்பங்களிலும் வடிவில் கட்டுறுதியின்றி தளர்வாகவும், தன்மையில் மிகவும் நூதனமாகவும் அமைந்தவை, இடையறாது உதித்தெழுகின்றன. ஐரோப்பாவிலுள்ள நிறுவனங்களைப் போல் இவை திட்டவட்டமான பாகுபாட்டு வரம்புகள் பெற்றிருக்கவில்லை. தொழிற் சங்கங்கள் அரசியல் தன்மை கொண்டவை ஆகிவிடுகின்றன. அரசியல் போராட்டம் பொருளாதாரப் போராட்டத்துடன் ஒன்று கலக்கிறது—உதாரணமாய், வேலைநிறுத்தங்களின் வடிவில்—இதன் விளைவாய்த் தற்காலிகமான, அல்லது அதிக அளவுக்கோ குறைந்த அளவுக்கோ நிரந்தரமான நிறுவனங்கள், ஒன்றுகலந்த வகையிலானவை, உதித்தெழுகின்றன.

இந்த நிகழ்வின் முக்கியத்துவம் என்ன? இது குறித்து சமூக-ஜனநாயகவாதிகள் அனுசரிக்க வேண்டிய போக்கு என்ன?

கட்சிக் கோட்பாட்டைக் கண்டிப்பாய்க் கடைப்பிடிப்பது, உயர் வளர்ச்சி பெற்ற வர்க்கப் போராட்டத்தின் உடன் விளைவும் பலனும் ஆகும். இதற்கு எதிர்மாறாய், பகிரங்கமான, வியாபகமான வர்க்கப் போராட்டத்தின் நலன்கள், கண்டிப்பான கட்சிக் கோட்பாடு வளர்க்கப்படுவதை அவசியமாக்குகின்றன. எனவேதான் வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி வர்க்கக் கட்சியான சமூக-ஜனநாயகக் கட்சி மிகவும் நியாயமாகவே கட்சி சார்பில்லாமை என்னும் கருத்தினை எப்பொழுதுமே எதிர்த்துப் போராடி வந்துள்ளது; கோட்பாடுகளில் முரணில்லாத, நெருங்கப் பிணைந்த சோஷலிசத் தொழிலாளர் கட்சி ஒன்றை நிறுவ இடைவிடாமல் பாடுபட்டு வந்துள்ளது. முதலாளித்துவத்தின் வளர்ச்சி எவ்வளவுக்கு எவ்வளவு பூரணமாய் மக்கள் அனைவரையும் வர்க்கங்களாய்ப் பிளவுறச் செய்து அவற்றினிடையே முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு வெகுஜனங்கள் மத்தியிலான இந்த வேலைக்கு அதிகமான வெற்றி கிட்டுகிறது.

ருஷ்யாவில் தற்போது நடைபெறும் புரட்சி கட்சி சார்பில்லா நிறுவனங்களை இவ்வளவு அதிகமாய்த் தோற்றுவித்திருப்பதும், தொடர்ந்து தோற்றுவித்து வருவதும் முற்றிலும் இயற்கையானதுதான். இது ஒரு ஜனநாயகப் புரட்சியாகும், அதாவது அதன் சமூக, பொருளாதார உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை முதலாளித்துவத் தன்மையதாகும். இந்தப் புரட்சி எதேச்சாதிகார, பண்ணையடிமை முறையை வீழ்த்தி, அதிலிருந்து முதலாளித்துவ அமைப்பினைத் தோண்டியெடுத்து வெளிவரச் செய்கிறது, இதன் மூலம் முதலாளித்துவச் சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களுடைய கோரிக்கைகளையும் செயல்படச் செய்கிறது—இந்த அர்த்தத்தில் இப்புரட்சி அனைத்து மக்களின் புரட்சியாய் விளங்குகிறது. நமது புரட்சி வர்க்கப் புரட்சியல்ல என்பதாய் இதற்கு அர்த்தமல்ல, இல்லவே இல்லை. இப்புரட்சி முதலாளித்துவச் சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் காலத்துக்கு ஒவ்வாதவையாகிவிட்ட, அல்லது ஒவ்வாதவையாகி வருகிற வர்க்கங்களுக்கும் வகுப்புகளுக்கும் எதிராய், இந்தச் சமுதாயத்துக்கு அன்னியமாய் இருந்து இதன் வளர்ச்சிக்குத் தடை போட்டுவரும் இவ்வர்க்கங்

களுக்கும் வகுப்புகளுக்கும் எதிராய் நடைபெறும் புரட்சி யாகும். நாட்டின் பொருளாதார வாழ்க்கை அனைத்தும் அதன் பிரதான அம்சங்கள் யாவற்றிலும் ஏற்கனவே முதலாளித்துவத் தன்மையதாகிவிட்டதால், தேச மக்களில் மிகப் பெரும் பகுதியோர் உண்மையில் ஏற்கனவே முதலாளித்துவ வாழ்நிலைமைகளில் வாழ்ந்து வருவதால், புரட்சி-எதிர்ப்புக் கூறுகள் எண்ணிக்கையில் இயற்கையாகவே மிகச் சொற்பமாகவே இருக்கின்றன; ''மக்களுடன்'' ஒப்பிடுகையில் மெய்யாகவே ''விரல் விட்டு எண்ணிவிடக் கூடியனவாய்'' இருக்கின்றன. எனவே முதலாளித்துவப் புரட்சியின் வர்க்கத் தன்மையானது, முதலாளித்துவச் சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களும் எதேச்சாதிகாரத்தையும் பண்ணையடிமை முறையையும் எதிர்த்து நடத்தும் போராட்டத்தின் ''பொது மக்கள் சார்ந்த'' தன்மையிலே, முதற் பார்வைக்கு வர்க்கச் சார்பில்லாததாய்த் தோன்றும் இத்தன்மையிலே, தவிர்க்க முடியாதவாறு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

ஏனைய நாடுகளில் இருந்ததைப் போலவே ருஷ்யாவிலும் முதலாளித்துவப் புரட்சி சகாப்தம், முதலாளித்துவச் சமுதாயத்துக்கே உரிய விசேஷமான வர்க்க முரண்பாடுகளின் ஒப்பளவில் வளர்ச்சியற்ற நிலையால் குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது. முதலாளித்துவம் தற்போது ருஷ்யாவில், 1848ல் ஜெர்மனியில் இருந்ததைக் காட்டிலும் (1789ல் பிரான்சில் இருந்ததைப் பற்றி கூறவே வேண்டியதில்லை) அதிக அளவுக்கு வளர்ச்சி பெற்றிருப்பது மெய்தான். ஆனால் ருஷ்யாவில் கலப்பற்ற வடிவிலான முதலாளித்துப் பகைமைகள், ''கலாசாரத்துக்கும்'' ஆசிய நிலையிலான அனுகரிகத்துக்கும், ஐரோப்பியத்துக்கும் தாத்தாரியத்தும், முதலாளித்துவத்துக்கும் பண்ணையடிமை முறைக்கும் இடையிலான பகைமைகளால் மிகுந்த அளவுக்குப் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. வேறு விதமாய்க் கூறுவதெனில், இன்று முதன்மையானவையாய் முன்வைக்கப்படும் கோரிக்கைகள், நிறைவேற்றப்பட்டதும் முதலாளித்துவத்தை வளரச் செய்யக் கூடியவையும், பண்ணையடிமை முறை என்னும் கசடை அகற்றி முதலாளித்துவத்தைச் சுத்தப்படுத்தக் கூடியவையும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ

வர்க்கத்துக்கும் வாழ்க்கை நிலைமைகளையும் போராடுவதற்கான நிலைமைகளையும் மேம்படச் செய்யக் கூடியவையுமான கோரிக்கைகளாகும்.

ருஷ்யா எங்கணும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அலுவலகத்திலும் படைப் பிரிவிலும் போலீஸ் தொகுதியிலும் வட்டாரத்திலும் கல்வி நிலையத்திலும் இன்ன பிறவற்றிலும் தற்போது வகுக்கப் பெற்று வரும் எண்ணிலடங்காக் கோரிக்கைகளையும் விவரக் கட்டளைகளையும் doléanceகளையும் பரிசீலித்தால், இவற்றில் மிகப் பெரும் பகுதியானவை முற்றிலும் ''கலாசாரக்'' கோரிக்கைகளாய்—அப்படிச் சொல்லலாமெனில்—இருப்பதை எளிதில் காணலாம். நான் கூற விரும்புவது என்னவெனில், உண்மையில் இவை பிரத்தியேக வர்க்கக் கோரிக்கைகளாய் இல்லை, ஆதார உரிமைகளுக்கான கோரிக்கைகளாகவே இருக்கின்றன. இந்தக் கோரிக்கைகள் முதலாளித்துவத்தை அழிப்பவையல்ல, மாறுக அதை ஐரோப்பியத்தின் கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்து, அனுகரிகம், காட்டுத்தனம், லஞ்ச ஊழல், மற்றும் பண்ணையடிமை முறையின் ஏனைய ''ருஷ்ய'' மீதமிச்சங்களை ஒழித்து அதைச் சுத்தப்படுத்துகிறவை ஆகும். சாராம்சத்தில், பாட்டாளி வர்க்கக் கோரிக்கைகளுங்கூட மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், முதலாளித்துவத்தின் கட்டுக்கோப்பினுள்ளேயே முழு அளவுக்கு நிறைவேற்றப்படக் கூடியவற்றின் வகைப்பட்ட சீர்திருத்தங்களின் வரம்புகளுக்குள் அடங்குகிறவையாய் இருக்கின்றன. ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் தற்போதும் உடனடியாய் அடுத்தும் கோருவதெல்லாம், முதலாளித்துவத்தைச் சுத்தப்படுத்தக் கூடியதும், அதன் வளர்ச்சியைத் துரிதமாக்கித் தீவிரப்படுத்தக் கூடியதுமே அன்றி, முதலாளித்துவத்துக்குக் குழிபறித்துவிடக் கூடியது அல்ல.

இயல்பாகவே, முதலாளித்துவச் சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கம் வகிக்கும் விசேஷ நிலையின் விளைவாய், தொழிலாளர்களுடைய சோஷலிச முனைப்பும் சோஷலிஸ்டுக் கட்சியுடனான அவர்களது கூட்டணியும் இயக்கத்தின் ஆரம்பக் கட்டங்களிலேயே அபார ஆற்றலுடன் தம்மை வெளிக் காட்டிக் கொள்கின்றன. ஆனால் கலப்பற்ற தூய சோஷலிசக் கோரிக்கைகள் இன்னும் வருங்காலத்துக்கு உரியனவாகவே

இருக்கின்றன. இன்றைக்கு உரிய உடனடிக் கோரிக்கைகள் யாவும் அரசியல் துறையில் தொழிலாளர்களது ஜனநாயகக் கோரிக்கைகளும், பொருளாதாரத் துறையில் முதலாளித்துவத்தின் கட்டுக்கோப்புக்கு உட்பட்ட பொருளாதாரக்கோரிக்கைகளுமே ஆகும். பாட்டாளி வர்க்கமும்கூட குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் வரம்புகளுக்கு உள்ளடங்கிய முறையிலே தான் புரட்சி புரிகின்றதே ஒழிய, அதிகபட்ச வேலைத்திட்டத்துக்கு ஏற்ப அல்ல. எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையோரான பெருங்குடி மக்களாகிய விவசாயிகளைப் பொறுத்தவரை, கூறவே வேண்டியதில்லை. இவர்களுடைய ''அதிகபட்ச வேலைத்திட்டம்'', இவர்களுடைய இறுதிக் குறிக்கோள்கள், முதலாளித்துவத்தின் வரம்புகளுக்கு அப்பால் அடியெடுத்து வைக்கவில்லை; எல்லா நிலங்களும் விவசாயிகள் அனைவருக்கும், மக்கள் அனைவருக்கும் மாற்றப்படுமாயின் முதலாளித்துவம் மேலும் விரிவாகவும், மேலும் தழைத்துச் செழித்தும் வளர்ந்தோங்கும். இன்று விவசாயிகளுடைய புரட்சி முதலாளித்துவப் புரட்சியே ஆகும்—நமது குட்டி பூர்ஷுவா சோஷலிசத்தின் உணர்ச்சி வயப்பட்ட வீரர்களுடைய உணர்ச்சி வயப்பட்ட காதுகளுக்கு இச்சொற்கள் ''கசப்பாய் இருப்பினும்'' இதுதான் உண்மை.

தற்போது நடைபெற்று வரும் புரட்சியின் தன்மையானது, மேலே சுருக்கமாய்க் குறிப்பிடப்பட்டது போல, கட்சி சார்பில்லா நிறுவனங்களை முற்றிலும் இயல்பாகவே உதித்தெழச் செய்கிறது. ஆகவே இயக்கம் அனைத்துமே மேற்பரப்பிலே கட்சி சார்பின்மையின் முத்திரையை, கட்சி சார்பின்மையின் தோற்றத்தைத் தவிர்க்க முடியாதபடி பெறுகிறது—ஆனால் இது மேற் பரப்பில் மட்டுமேதான். ''மனிதத் தன்மையதான'', நாகரிக வாழ்வு வேண்டுமென்ற உணர்வு, மனித மாண்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நிறுவன ஒழுங்கமைப்பு பெற வேண்டும், மனிதன் என்ற முறையிலும் குடிமகன் என்ற முறையிலும் அவரவருக்குமுள்ள உரிமைகளைப் பெற வேண்டுமென்ற உணர்வு எல்லோரையும் ஆட்கொண்டு விடுகிறது; எல்லா வர்க்கங்களையும் ஒன்றுபடச் செய்கிறது; எல்லாக் கட்சி வரம்புகளையும் கடந்து வெகு வாய்ப் பெருக்கெடுத்து ஓடி, இன்னும் கட்சிப் பற்றுறுதி

கொண்டோராய் உயரும் நிலையிலிருந்து நெடுந் தொலைவிலே இருந்து வரும் மக்களை ஆட்டிக் குலுக்குகிறது. உடனடியான, ஆதாரமான, அத்தியாவசிய உரிமைகளுக்கும் சீர்திருத்தங்களுக்குமான ஜீவாதாரத் தேவையானது, இதற்கு மேற்பட்டது பற்றிய எல்லாச் சிந்தனையையும் கருத்தையும் ஒதுக்கி வைத்துவிடுகிறது எனலாம். நடைபெற்று வரும் போராட்டத்திலே முழு நாட்டங் கொண்டு முனைந்துவிடும் இந்த நிலை —இது முற்றிலும் அவசியமே, நியாயமே, ஏனெனில் இப்படி முனையாவிடில் போராட்டத்தில் வெற்றி பெற முடியாது— உடனடியான, ஆதாரமான இந்தக் குறிக்கோள்களை மக்கள் மகத்தான உயர்வுக்குரியனவாய் உயர்த்திப் போற்றும்படியும், இவற்றை எழில் மிக்க வண்ணங்களில் காணும்படியும், நம்ப முடியாத விந்தையான கோலங்களில் சில நேரங்களில் இவற்றைக் கற்பனை செய்து கொள்ளும்படியும்கூட செய்து விடுகிறது. எளிய ஜனநாயகம், சர்வசாதாரண முதலாளித்துவ ஜனநாயகம் சோஷலிசமாய்க் கொள்ளப்பட்டு, அவ்வாறே ''பதிவும்'' செய்து கொள்ளப்பட்டுவிடுகிறது. யாவும் ''கட்சி சார்பில்லாதனவாய்த்'' தோன்றுகின்றன; யாவும் ''விடுதலைக்கான'' ஏகோபித்த ஒரே இயக்கமாய் (மெய்யாகவே முதலாளித்துவச் சமுதாயம் அனைத்தையும் விடுவிப்பதற்கான இயக்கமாய்) ஒருசேர இணைந்துவிடுவதாய்த் தோன்றுகிறது; சோஷலிசப் பாட்டாளி வர்க்கம் ஜனநாயகப் போராட்டத்தில் தலைமையான பங்கெடுத்துக் கொள்ளும் இந்த முதன்மையான காரணத்தால் யாவும் இலேசாய், மிகவும் இலேசாய் ''சோஷலிசச்'' சாயல் பெறுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் கட்சி சார்பில்லா மனப்பாங்கு என்னும் கருத்து தற்காலிகமான சில வெற்றிகள் பெறுமல் இருக்க முடியாது. கட்சி சார்பில்லா மனப்பாங்கு என்னும் கோஷம் மோஸ்தருக்குரிய ஒரு கோஷமாகாமல் இருப்பதற்கில்லை, ஏனெனில் மோஸ்தரானது ஏலாததாய் வாழ்க்கையின் வாலைப் பற்றிக் கொண்டு பின்செல்கிறது. கட்சி சார்பில்லா ஜனநாயகவாதம், கட்சி சார்பில்லா வேலைநிறுத்தவாதம், கட்சி சார்பில்லாப் புரட்சிவாதம்—இப்படிக் கட்சி சார்பில்லா நிறுவனம் அரசியல் வாழ்வின் மேற் பரப்பிலே

மிகவும் ''சகஜமாய்'' காணக் கூடிய ஒன்றாய்த் தோன்றுகின்றது.

இப்பொழுது இக்கேள்வி எழுகிறது: கட்சி சார்பில்லா நிறுவனம் என்னும் இந்த உண்மை குறித்து, கட்சி சார்பில்லா மனப்பாங்கு என்னும் இந்தக் கருத்து குறித்து, வெவ் வேறு வர்க்கங்களைச் சேர்ந்தோரும் அவற்றின் பிரதிநிதிகளாய் இருப்போரும் அனுசரிக்க **வேண்டிய** போக்கு என்ன? ''வேண்டிய'' என்கிறோம்—அதாவது அகநிலையான அர்த்தத்தில் அல்லாமல் புறநிலையாய், அதாவது இது குறித்து கொள்ளத்தக்கதான கருத்து என்னும் அர்த்தத்தில் அல்லாமல், வெவ்வேறு வர்க்கங்களுக்குமுரிய நலன்கள், கருத்தோட்டங்கள் ஆகியவற்றின் செல்வாக்கில் தவிர்க்க முடியாதபடி உருவாகி வரும் போக்கு என்ன என்கிற அர்த்தத்தில் சொல்கிறோம்.

2

ஏற்கனவே நாம் தெளிவுபடுத்தியது போல, கட்சி சார்பில்லாமைக் கோட்பாடானது நமது புரட்சியின் முதலாளித்துவத் தன்மையினது விளைவாகும்—அல்லது வெளியீடாகும் எனலாம். முதலாளித்துவ வர்க்கம் கட்சி சார்பில்லாமைக் கோட்பாட்டின் பக்கம்தான் சாயும், ஏனெனில் முதலாளித்துவச் சமுதாயத்தின் விடுதலைக்காகப் போராடுவோரிடையே கட்சிகள் இல்லாமற் போவது இந்த முதலாளித்துவச் சமுதாயத்துக்கே எதிராய் ஒரு புதிய போராட்டம் எழாது என்பதைக் குறிக்கிறது. சுதந்திரத்துக்காகக் ''கட்சி சார்பில்லாப்'' போராட்டம் நடத்துவோர் சுதந்திரத்தின் முதலாளித்துவத் தன்மையை உணராதோராய் இருக்கின்றனர்; அல்லது முதலாளித்துவ அமைப்பை அவர்கள் புனிதமானதாய்க் கருதுகின்றனர்; இல்லையேல், முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தை, முதலாளித்துவத்தைச் ''செம்மை செய்தலே'' முடிவின்றி ஒத்துப் போடுகின்றனர். இதையே மறுதலையாய்ச் சொன்னால், மனம் அறிந்தோ மனம் அறியாமலோ முதலாளித்துவ அமைப்பை ஆதரித்து நிற்போர் கட்சி சார்பில்லா மனப்பாங்கு என்னும் கருத்தால் கவரப்படுவோராகவே இருப்பர்.

வர்க்கப் பாகுபாடுகளின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தில் பகை வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டம், அதன் வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் அரசியல் போராட்டமாகியே தீரும். வர்க்கங்களுடைய அரசியல் போராட்டத்தின் மிகவும் முழுமையான, மிகவும் நிறைவான, உருத்திரண்ட வெளிப்பாடுதான் கட்சிகளுடைய போராட்டம். கட்சி சார்பில்லாமைக் கோட்பாடு கட்சிகளுடைய போராட்டத்தில் கருத்தில்லாமையைக் குறிக்கிறது. ஆனால் இந்தக் கருத்தில்லாமை நடுநிலைமைக்குச் சமமானதல்ல; போராட்டத்தில் பங்கு கொள்ளாமல் ஒதுங்கியிருப்பதற்குச் சமமானதல்ல; ஏனெனில் வர்க்கப் போராட்டத்தில் நடுநிலைமையாளர்கள் யாரும் இருக்க முடியாது; முதலாளித்துவச் சமுதாயத்தில் பண்டங்களின் அல்லது உழைப்பு ஆற்றலின் பரிவர்த்தனையில் பங்கு கொள்ளாமல் ''ஒதுங்கியிருப்பது'' சாத்தியமன்று. பரிவர்த்தனையானது தவிர்க்க முடியாதபடி பொருளாதாரப் போராட்டத்தையும் பிறகு அரசியல் போராட்டத்தையும் எழச் செய்கிறது. ஆகவே போராட்டத்தில் கருத்தில்லாதிருப்பது நடைமுறையில் போராட்டத்திலிருந்து விலகி ஒதுங்கி நிற்பதையோ, அதில் பங்கெடுத்துக் கொள்ளாதிருப்பதையோ, நடுநிலை வகிப்பதையோ ஒருபோதும் குறிக்கவில்லை. கருத்தில்லாமை என்பது வலியோரை, ஆட்சி புரிவோரை உள்ளுக்குள் ஆதரிப்பதே ஆகும். ருஷ்யாவில் எதேச்சாதிகாரம் அக்டோபர் புரட்சியின் போது வீழ்ச்சியுறும் முன்பு, அது குறித்து கருத்தில்லாதோராய் இருந்தவர்கள் எதேச்சாதிகாரத்தை உள்ளுக்குள் ஆதரித்து வந்தனர். இன்றைய ஐரோப்பாவில் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சி குறித்து கருத்தில்லாதோராய் இருப்போர் உள்ளுக்குள் முதலாளித்துவ வர்க்கத்தை ஆதரிக்கின்றனர். சுதந்திரத்துக்கான போராட்டம் முதலாளித்துவ தன்மையதாகும் என்ற உண்மை குறித்து கருத்தில்லாதோராய் இருப்போர் இந்தப் போராட்டத்தில், தற்போது உருவாகி வரும் சுதந்திர ருஷ்யாவில், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்துக்கு உள்ளுக்குள் ஆதரவளிக்கின்றனர். அரசியல் கருத்தின்மை அரசியல் சலிப்புணர்ச்சியே ஆகும். வயிறு புடைக்க உண்டவர் ரொட்டித் துண்டில் ''கருத்து

இல்லாதவராய்'', ''அக்கறையில்லாதவராய்'' இருக்கிறார்; ஆனால் பசியால் வாடுகிறவர் ரொட்டித் துண்டு குறித்த பிரச்சினையில் எப்பொழுதும் ''கட்சி மனப்பாங்கு''டைய வராகவே இருப்பார். ரொட்டித் துண்டு குறித்து ''கருத் தின்மைக்கும் அக்கறையின்மைக்கும்'' அர்த்தம், அவருக்கு ரொட்டி தேவைப்படவில்லை என்பதல்ல; மாறாக, எப்பொழு தும் தமக்கு ரொட்டி கிடைக்குமென்று நன்கு அறிந்திருக் கிறார், ஒருபோதும் அவர் ரொட்டி இல்லாமல் துன்புற வில்லை, வயிறு புடைக்க உண்போரின் ''கட்சியுடன்'' அவர் தம்மை உறுதியாய் இணைத்துக் கொண்டுவிட்டார் என்பது தான் இதற்கு அர்த்தம். முதலாளித்துவச் சமுதாயத்தில் கட்சி சார்பில்லாமைக் கோட்பாடு, வயிறு புடைக்க உண் போரின், ஆட்சியாளர்களின், சுரண்டலாளர்களின் கட்சியுடன் இணைந்து கொள்வதன் கபடமான, மாறுவேடம் பூண்ட, செயல்முனைப்பில்லாத வெளிப்பாடாகுமே அன்றி வேறல்ல.

கட்சி சார்பில்லாமை என்னும் கருத்து முதலாளித்து வக் கருத்தாகும். கட்சிக் கருத்து சோஷலிசக் கருத்தாகும். இந்த ஆய்வுரை பொதுவாகவும் மொத்தத்திலும் முதலா ளித்துவச் சமுதாயம் அனைத்துக்கும் பொருந்துவதாகும். இந்தப் பொது உண்மையைக் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கும் தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல் நமக்கு இருக்க வேண்டும் என்பது மெய்தான். ஆனால் பண்ணையடிமை முறையையும் எதேச்சாதிகாரத்தை யும் எதிர்த்து முதலாளித்துவச் சமுதாயம் அனைத்தும் உலகம் புரிந்து எழும் ஒரு நேரத்தில் இந்த உண்மையை மறந்துவிடு வது, முதலாளித்துவச் சமுதாயத்தைப் பற்றிய சோஷலிச விமர்சனத்தை நடைமுறையில் அடியோடு விட்டொழித்து விடுவதே ஆகும்.

ருஷ்யப் புரட்சி அதன் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங் களிலேதான் இருக்கிறது என்றாலுங்கூட, இப்புரட்சி இங்கே நாம் சுருக்கமாய் எடுத்துரைத்த இந்தப் பொதுக் கருத்துக் களை உறுதியாய் நிலைநாட்டுவதற்கு ஏற்கனவே வழங்கியிருக் கும் விவரப் பொருள் கொஞ்ச நஞ்சமல்ல. வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி வர்க்கத்தின் கட்சியாகிய சமூக-ஜனநா யகக் கட்சி மட்டும்தான், கட்சிக் கோட்பாட்டினைக் கண்டிப்

பாய்ப் பற்றியொழுக வேண்டுமென்று எப்பொழுதுமே வற்புறுத்தி வந்திருக்கிறது, இப்பொழுதும் வற்புறுத்துகிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் கருத்தோட்டங்களை வெளியிடும் நமது மிதவாதிகள் சோஷலிசக் கட்சிக் கோட்பாட்டைச் சகிக்க மாட்டாதோராய் இருக்கின்றனர், வர்க்கப் போராட்டத்தை இவர்கள் காதால் கேட்கக்கூட மாட்டோம் என்கின்றனர். திரு ரோதிச்செவ் அண்மையில் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகளை இங்கு நினைவு கூர்ந்தாலே போதும், இது தெளிவாகிவிடும் — வெளிநாட்டிலிருந்து அஸ்வபொழ்தேனியேவும்,[13] மற்றும் ருஷ்ய மிதவாதத்தின் எண்ணற்ற எடுபிடி ஏடுகளும் மீண்டும்மீண்டும் கூறி வந்திருப்பதை நூறுவது முறையாய் அவர் திருப்பிச் சொல்லியுள்ளார். முடிவில், குட்டிபூர்ஷுவாக்களாகிய இடைநிலை வர்க்கத்தின் சித்தாந்தமானது, நாஷா ழீஸின்,[14] ''தீவிர-ஜனநாயகவாதிகள்''[15] முதலாய் ''சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியினர்''[16] வரையிலான பல்வேறு சாயல்களிலுமாகிய ருஷ்யத் ''தீவிரவாதிகளுடைய'' கருத்தோட்டங்களில் தெளிவாய் வெளியாகியிருக்கிறது. ''சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியினர்'' சோஷலிசத்தை ஜனநாயகத்துடன் போட்டுக் குழப்பிக் கொள்கிறவர்கள் என்பதை நிலப் பிரச்சினை சம்பந்தமாகவும், குறிப்பாய் (மூலதனத்தைச் சமூகவுடைமை ஆக்காமல் நிலத்தை மட்டும்) ''சமூகவுடைமையாக்குதல்'' என்னும் அவர்களது கோஷத்தின் வாயிலாகவும் மிகவும் தெளிவாய் வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டுவிட்டனர். இதேபோல, முதலாளித்துவத் தீவிரவாதத்துடன் ஒத்திசைவு கொண்டவர்களாகிய இவர்கள், சமூக-ஜனநாயகக் கட்சிக் கோட்பாட்டின் பால் இணக்கமற்றோராய் இருப்பதும் நன்கு தெரிந்ததுதான்.

பற்பல வர்க்கங்களுடைய நலன்களும் எல்லாச் சாயல்களிலுமான ருஷ்ய மிதவாதிகள், தீவிரவாதிகள் ஆகியோரது வேலைத்திட்டத்திலும் போர்த்தந்திரத்திலும் எப்படி வெளியீடாகின்றன என்பது பற்றிய பகுத்தாராய்வு இங்கு நமது பரிசீலனையிலுள்ள விவகாரத்துக்கு அப்பாற்பட்டதாகும். சுவையான இந்தப் பிரச்சினை குறித்து போகிற போக்கிலேதான் இங்கு குறிப்பிட்டோம். இனி நாம் கட்சி

சார்பில்லா நிறுவனங்கள் குறித்து நமது கட்சி அனுசரிக்க வேண்டிய போக்கு சம்பந்தமான நடைமுறை அரசியல் முடிவுகளை வந்தடைய முற்பட்டாக வேண்டும்.

கட்சி சார்பில்லா நிறுவனங்களில் சோஷலிஸ்டுகள் பங்கெடுத்துக் கொள்வது அனுமதிக்கக் கூடியதா? அப்படியானால், எந்த நிலைமைகளில்? இந்த நிறுவனங்களில் கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரம் என்ன?

முதலாவது கேள்விக்குரிய பதில் நிபந்தனையின்றி, திட்டவட்டமாய் ''இல்லை'' என்பதாய் இருக்க முடியாது. எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்த நிலைமையிலும் சோஷலிஸ்டுகள் கட்சி சார்பில்லாத (அதாவது, பெருமளவுக்கு மனம் அறிந்தோ, மனம் அறியாமலோ முதலாளித்துவத் தன்மையனவாய் இருக்கும்) நிறுவனங்களில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாதெனக் கூறுவது தவறாகும். ஜனநாயகப் புரட்சிக்குரிய காலத்தில், கட்சி சார்பில்லா நிறுவனங்களில் பங்கெடுத்துக் கொள்ள மறுப்பது குறிப்பிட்ட சில நிலைமைகளில், ஜனநாயகப் புரட்சியில் பங்கெடுத்துக் கொள்ள மறுப்பதாகி விடலாம். ஆனால் சோஷலிஸ்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி இந்தக் ''குறிப்பிட்ட சில நிலைமைகளைக்'' குறுகிய வரம்புகளுக்கு உட்பட்டிருக்கும்படிச் செய்து கொள்ள வேண்டும்; இவ்விதம் பங்கெடுத்துக் கொள்வதற்கு கண்டிப்பான முறையில் வரையறை செய்யப்பட்டு, தடை வரம்புகளிடும் நிபந்தனைகளின் பேரில்தான் அனுமதிக்க வேண்டும். ஏனெனில் ஏற்கனவே நாம் கூறியது போல, கட்சி சார்பில்லா நிறுவனங்கள் வர்க்கப் போராட்டமானது ஒப்பளவில் வளர்ச்சி பெறுத நிலையில் இருக்கையில் உதித்தெழுகின்றன என்ற போதிலும், கட்சிக் கோட்பாட்டைக் கண்டிப்பான முறையில் பற்றியொழுகுவது, வர்க்கப் போராட்டத்தை உணர்வுபூர்வமானதும் தெளிவானதும் திட்டவட்டமானதும் கோட்பாடு வழிப்பட்டதாகவும் ஆக்கவல்ல காரணக் கூறுகளில் ஒன்றாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் கட்சியினுடைய சித்தாந்த, அரசியல் சுயேச்சை நிலையைப் பாதுகாத்துக் கொள்வது சோஷலிஸ்டுகளுக்குரிய நிலையான, மாறுத, முழுமுதற் கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றத் தவறுகிறவர் எவரும், அவருடைய ''சோஷலிச'' (சொல்லளவில்) திடநம்

பிக்கைகள் எவ்வளவுதான் உள்ளப்பூர்வமானவையாய் இருப்பினும், உண்மையில் சோஷலிஸ்டல்லாதவரே ஆகிவிடுகின்றார். கட்சி சார்பில்லா நிறுவனங்களில் சோஷலிஸ்டுகள் விதிவிலக்காக மட்டுமே பங்கெடுத்துக் கொள்ளலாம். இவ்விதம் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வதன் நோக்கமும் தன்மையும் நிலைமைகளும் பிறவும் சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தை சோஷலிசப் புரட்சிக்கு உணர்வு பூர்வமாய்த் தலைமை தாங்கச் செய்வதற்காகத் தயார் செய்து ஒழுங்கமைக்கும் அடிப்படைப் பணிக்கு முழுமையாய்க் கீழ்ப்படுத்தப்பட வேண்டும்.

முக்கியமாய் ஜனநாயகப் புரட்சிக்குரிய ஒரு காலத்தில், குறிப்பாய் இப்புரட்சி பாட்டாளி வர்க்கம் தலை சிறந்த பங்காற்றும் ஒரு ஜனநாயகப் புரட்சியாய் இருக்கையில், கட்சி சார்பில்லா நிறுவனங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் படி சூழ்நிலைமை நம்மை நிர்ப்பந்தம் செய்யலாம். உதாரணமாய், தெளிவு பெறுத ஜனநாயகத் திரளினருக்கு சோஷலிசத்தைப் பிரசாரம் செய்வதற்காக வேண்டி, அல்லது எதிர்ப்புரட்சியை எதிர்த்து சோஷலிஸ்டுகளும் புரட்சிகர ஜனநாயகவாதிகளும் நடத்தும் கூட்டுப் போராட்டத்தின் நலன்களை முன்னிட்டு இப்படிப் பங்கெடுத்துக் கொள்வது அத்தியாவசியமாகலாம். முதலாவது சந்தர்ப்பத்தில், இப்படி நாம் பங்கெடுத்துக் கொள்வது, நமது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான ஒரு வழியாய் இருக்கும். இரண்டாவது சந்தர்ப்பத்தில், இது, குறிப்பிட்ட புரட்சி நோக்கங்களைச் சித்திபெறச் செய்வதற்கான போராட்ட ஒப்பந்தத்தைக் குறிப்பதாய் இருக்கும். இப்படிப் பங்கெடுத்துக் கொள்வது இரண்டு சந்தர்ப்பங்களிலும் தற்காலிகமானதாகவே இருக்க முடியும். இரண்டு சந்தர்ப்பங்களிலும், தொழிலாளர்களுடைய கட்சியின் சுயேச்சை நிலை முழு அளவுக்குப் பாதுகாக்கப்படும்போதும், மொத்தத்தில் கட்சியானது கட்சி சார்பில்லா சங்கங்கள் அல்லது கழகங்களுக்குப் ''பிரதிநிதிகளாய் அனுப்பி வைக்கப்பட்ட'' தனது உறுப்பினர்களையும் கோஷ்டியினரையும் கட்டுப்பாடு செய்து வழிகாட்டும் போதும் மட்டும்தான் இப்படிப் பங்கெடுத்துக் கொள்வது அனுமதிக்கக் கூடியதாய் இருக்கும்.

நமது கட்சியின் செயற்பாடுகள் இரகசியமாய் நடை பெற்று வந்தபோது இப்படிக் கட்டுப்பாடு செய்வதற்கும் வழிகாட்டுவதற்கும் மிகப் பெரும் இடையூறுகள், சில நேரங் களில் அனேகமாய்ச் சமாளிக்க முடியாத இடையூறுகள் ஏற்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது நமது கட்சியின் செயற்பாடுகள் மேலும் மேலும் பகிரங்கமாய் நடைபெறு வதால், இப்படிக் கட்டுப்பாடு செய்வதும் வழிகாட்டுதலும் மிகப் பெரிய அளவில் கட்சியின் ''உயர் உறுப்புக்களால்'' மட்டுமின்றி, கட்சியின் ''அணிகளாலும்,'' நமது கட்சியைச் சேர்ந்த ஒழுங்கமைந்த தொழிலாளர்கள் எல்லோராலும் நடத்தப்பட முடியும், நடத்தப்படவும் வேண்டும். கட்சி சார்பில்லாச் சங்கங்களிலும் கழகங்களிலும் சமூக-ஜனநாயக வாதிகள் செய்யும் வேலைகள் பற்றி விளக்க உரைகள் நிகழ்த்துவதும், இத்தகைய வேலைகளுக்கான நிலைமைகளையும் இவற்றின் நோக்கங்களையும் பற்றி விரிவுரைகள் ஆற்றுவதும், இந்தச் செயல்களைப் பற்றிய எல்லா வகையான கட்சி நிறு வனங்களும் தீர்மானங்கள் ஏற்பதும் தொழிலாளர்களது கட்சியின் வழக்கமான நடைமுறையாக வேண்டும். கட்சி அனைத்துமாய் இப்படி **மெய்யாகவே** பங்கெடுத்துக் கொள் வதன் மூலம்தான், இத்தகைய வேலைகளை **நெறியாண்மை புரி வதில்** பங்கெடுத்துக் கொள்வதன் மூலம்தான் பொதுவான ஜனநாயகப் பணியிலிருந்து மெய்யான சோஷலிசப் பணியை நாம் நடைமுறையில் வேறுபடுத்திக் கொள்ள முடியும்.

கட்சி சார்பில்லாச் சங்கங்களில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரம் என்ன? முதலாவதாக, சுயேச்சை யான தொடர்புகள் நிறுவிக் கொள்ளவும், நமது சோஷலிச வேலைத்திட்டத்தை முழு அளவிலும் பிரசாரம் செய்து பரப்ப வும் நாம் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, ஜனநாயகப் புரட்சியை முழு அளவிலும் மிகவும் உறுதியாகவும் நடத்தி முடிப்பதற்குரிய உடனடியான இன்றைய அரசியல் பணிகளை நாம் வரை யறுத்துக் கூறியாக வேண்டும்; ஜனநாயகப் புரட்சியின் அர சியல் இலக்குக் கோஷங்களை நாம் முன்வைத்தாக வேண்டும்; பேரம் பேசும் மிதவாத ஜனநாயகவாதிகளிடமிருந்து வேறு படும் போர்க்குணம் படைத்த **புரட்சிகர** ஜனநாயகவாதிகள்

நிறைவேற்றிட வேண்டிய சீர்திருத்தங்களுக்குரிய ''வேலைத் திட்டத்தை'' நாம் முன்கொண்டுவர வேண்டும்.

இவ்விதமாய் ஏற்பாடு செய்து கொண்டால்தான், ஒரு நாள் தொழிலாளர்களாலும் மறு நாள் விவசாயிகளாலும் அடுத்த நாள் படையாட்களாலுமாய்த் தொடர்ச்சியாய் இவ்வாறு நிறுவப்படும் கட்சி சார்பில்லாத புரட்சிகர நிறுவனங்களில் நம் கட்சியின் உறுப்பினர்கள் பங்கெடுத்துக் கொள்வது அனுமதிக்கக் கூடியதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். அப்பொழுதுதான் முதலாளித்துவப் புரட்சியில் தொழிலாளர்களுடைய கட்சிக்குள்ள இரு-படிவப் பணியை, அதாவது ஜனநாயகப் புரட்சியை நடத்திச் சென்று நிறைவுறச் செய்தல், மூலதனத்தின் ஆட்சியை வீழ்த்துவதற்கான உறுதியான கடும் போராட்டத்தை நடத்துவதற்குச் சுதந்திரம் தேவைப்படும் சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் சக்திகளை விரிவும் வலிவும் மிக்கதாக்குதல் ஆகிய இரண்டையும், நாம் நிறைவேற்றக் கூடியோர் ஆவோம்.

நோவயா ழீஸின், இதழ்கள் 22,27,
1905 நவம்பர் 26, டிசம்பர் 2
ஒப்பம்: நி. லெனின்

நூல் திரட்டு,
தொகுதி 12,
பக்கங்கள் 133-141

சோஷலிசமும் மதமும்

தொழிலாளி வர்க்கப் பெருந் திரளினரை மிகச் சொற்ப சிறுபான்மையோராகிய நிலப் பிரபுக்களது வர்க்கமும் முதலாளிகளது வர்க்கமும் சுரண்டுவதையே முற்றிலும் அடிப்படையாய்க் கொண்டுள்ளது, இன்றையச் சமுதாயம். இது ஓர் அடிமைச் சமுதாயம். ஏனெனில் ''சுதந்திரத்'' தொழிலாளர்கள், வாழ்வெல்லாம் முதலாளிகளுக்காக வேலை செய்யும் இவர்கள், லாபத்தின் உற்பத்தியாளர்களான அடிமைகளுடைய பராமரிப்புக்கும், முதலாளித்துவ அடிமை முறை பாதுகாக்கப்பட்டுத் தொடர்ந்து நீடிப்பதற்கும் அத்தியாவசியமாயுள்ள பிழைப்புச் சாதனங்களை (means of subsistence) பெறுவதற்கு மட்டுமே ''உரிமையுடையோராய்'' இருக்கின்றனர்.

தொழிலாளர்கள்மீதான இந்தப் பொருளாதார ஒடுக்குமுறை எல்லா விதமான அரசியல் ஒடுக்குமுறையையும், சமூக இழிநிலையையும், வெகுஜனங்களது ஆன்மீக, அறநெறி வாழ்வின் நயமற்ற இருண்ட நிலையையும் உருவாக்கியவண்ணமுள்ளது. தொழிலாளர்கள் தமது பொருளாதார விடுதலைக்காகப் போராடுவதற்காக அதிக அளவிலோ குறைந்த அளவிலோ அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொண்டுவிடலாம்; ஆனால் மூலதனத்தின் அதிகாரம் வீழ்த்தப்படாத வரை, எந்த அளவிலான சுதந்திரத்தாலும் அவர்களுடைய வறுமைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் முடிவு கட்டிவிட முடியாது. மிகப் பெருந் திரள்

களான மக்களே, ஏனையோருக்காகத் தாம் செய்யும் ஓயாத வேலையாலும் மற்றும் இல்லாமையாலும் தனிமைப்பாட்டாலும் நசுக்கப்படும் இம்மக்களே, எங்கும் அழுத்தி இருத்தி வைக்கும் ஆன்மீக ஒடுக்குமுறையின் பல வடிவங்களில் மதமும் ஒன்றாகும். காட்டு மிராண்டியாய் வாழும் மனிதன் இயற்கைக்கு எதிரான தனது போராட்டத்தில் ஏலாதவனாய் இருக்கும் அவல நிலை எப்படித் தேவதைகளிலும் சைத்தான்களிலும் அற்புதங்களிலும் பிறவற்றிலும் தவிர்க்க முடியாத வாறு நம்பிக்கையை உண்டாக்குகிறதோ அதே போல, சுரண்டப்படும் வர்க்கங்கள் சுரண்டுவோருக்கு எதிரான தமது போராட்டத்தில் ஏலாதவையாய் இருக்கும் அவல நிலையானது மறுமையில் சிறப்பான வாழ்வு உண்டென்பதில் தவிர்க்க முடியாதவாறு நம்பிக்கையை உண்டாக்குகிறது. வாழ்நாள் முழுதும் உழைத்து, இல்லாமையால் துன்புறுவோர் மண்ணுலகில் அடிபணிந்து பொறுமையாய் இருக்கவும், விண்ணுலகில் நற்பேறுகிட்டுமென்ற நம்பிக்கையால் மன ஆறுதல் பெறவும் மதம் அவர்களுக்குப் போதிக்கிறது. ஆனால் ஏனையோரது உழைப்பை உண்டு வாழ்வோர் மண்ணுலகில் தர்மவான்களாய் வாழ்வதற்கு மதம் அவர்களுக்குப் போதிக்கிறது; சுரண்டலாளர்களாய் அவர்கள் நடத்தும் வாழ்க்கை அனைத்துக்கும் நியாயம் கற்பித்துக் கொள்ள இவ்விதம் அது மிக மலிவான ஒரு வழியை அளிப்பதோடு, விண்ணுலக இன்ப வாழ்வுக்கும் மிதமான விலையில் அவர்களுக்கு டிக்கெட்டுகள் விற்கிறது. மக்களது அபினியே மதம். ஒரு வகை ஆன்மீகக் குடிபோதையே மதம்—மூலதனத்தின் அடிமைகள் தமது மானுட உருவை, ஓரளவேனும் மனிதனுக்கு உகந்த வாழ்வு பெற வேண்டுமென்ற தமது கோரிக்கையை இதில் மூழ்க்கடித்து மாய்த்துக் கொள்கின்றனர்.

ஆனால் அடிமை தனது அடிமை நிலையை உணர்ந்து கொண்டு தனது விடுதலைக்காகப் போராட முற்படுகையில் ஏற்கனவே பாதி அளவுக்கு அடிமை நீக்கம் பெற்றவனாகிவிடுகிறான். வர்க்க உணர்வு படைத்த நவீன காலத் தொழிலாளி, பெருவீத ஆலைத் தொழிலால் வளர்த்து ஆளாக்கப்பட்டு நகர வாழ்வினுள் ஒளியூட்டப் பெற்ற இந்தத் தொழிலாளி, மதத்தின் தப்பெண்ணங்களை வெறுத்து ஒதுக்கிவிட்டு,

விண்ணுலக வாழ்வைக் குருமார்களிடத்தும் முதலாளித்துவப் பித்தர்களிடத்தும் விட்டுவிட்டு, தனக்கு இங்கே மண்ணுலகில் நல்வாழ்வைப் போராடிப் பேற முயலுகின்றான். இன்றையப் பாட்டாளி வர்க்கம் சோஷலிசத்தின் பக்கம் அணிதிரளுகின்றது. சோஷலிசமானது மதத்தின் இருளுக்கு எதிரான போரில் விஞ்ஞானத்தைப் படைசேர்த்துக் கொள்கிறது; இப்பொழுதே இம்மையில், மண்ணுலகில் நல்வாழ்வுக்கான போராட்டத்தில் தொழிலாளர்களை ஒன்றுபடச் செய்வதன் மூலம், அது அவர்களை மரணத்துக்குப் பிற்பாடான மறுமையில் நம்பிக்கை வைப்பதிலிருந்து விடுவிக்கிறது.

மதம் தனிநபரின் சொந்த விவகாரமாய்ப் பிரகடனம் செய்யப்பட வேண்டும்—இச்சொற்களின் வாயிலாய், சோஷலிஸ்டுகள் மதத்தின்பால் தமக்குள்ள போக்கை வழக்கமாய்ப் பிரகடனம் செய்கின்றனர். ஆனால் எவ்விதமான தப்பு அபிப்பிராயமும் ஏற்படாமல் தடுப்பதற்காக, இச்சொற்களின் பொருளைத் துல்லியமாய் வரையறுத்துக் கூறியாக வேண்டும். அரசைப் பொறுத்த மட்டில் மதம் தனிநபரின் சொந்த விவகாரமாக்கப்பட வேண்டுமென நாம் கோருகிறோம். ஆனால் நமது கட்சியைப் பொறுத்த மட்டில் எவ்விதத்திலும் நாம் மதத்தைத் தனிநபரின் சொந்த விவகாரமாய்க் கருத முடியாது. மதம் அரசின் கருத்துக்குரியதாய் இருக்கக் கூடாது, மத நிறுவனங்கள் அரசாங்க அதிகாரத்துடன் எந்த சம்பந்தமும் கொண்டிருக்கக் கூடாது. ஒவ்வொருவரும் தம் விருப்பம் போல் எந்த மதத்தையும் கடைப்பிடித்து ஒழுகவும், எம்மதத்தையும் சேராதவராய் இருக்கவும்—அதாவது பொதுவாய் ஒவ்வொரு சோஷலிஸ்டும் இருந்து வருவது போல, நாத்திகராய் இருக்கவும்—பூரண உரிமை பெற்றிருக்க வேண்டும். குடிமக்களின் மத நம்பிக்கைகள் காரணமாய் அவர்களிடையே எவ்விதமான பாகுபாட்டுக்கும் இடமளிப்பது ஒருபோதும் அனுமதிக்கப்படலாகாது. அரசாங்கப் பத்திரங்களில் குடிமகனுடைய மதத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதுங்கூட நிச்சயமாய் விட்டொழிக்கப்பட வேண்டும். அரசாங்க மதச்சபைக்கு மான்யங்கள் வழங்கப்படலாகாது; மதச்சபை, சமயக் கழகங்களுக்கு அரசாங்க உதவித் தொகை எதுவும் அளிக்கப்படலாகாது. இவை யாவும் அரசைச்

சாராத நிறுவனங்களாகிவிட வேண்டும், ஒத்த மனத்தோராகிய குடி மக்களது முற்றிலும் சுதந்திரமான நிறுவனங்களாகிவிட வேண்டும். இந்த கோரிக்கைகள் பூரணமாய் நிறைவேற்றப்படும் போதுதான், அவமானகரமான, கேடு கெட்ட அந்தக் கடந்த காலத்துக்கு முடிவு கட்ட முடியும்—மதச்சபையானது அரசுக்குப் பிரபுத்துவ முறையில் அடிபணிந்தும், ருஷ்யக் குடிமக்கள் மதச்சபைக்குப் பிரபுத்துவ முறையில் அடிபணிந்தும் கட்டுண்டு வாழ்ந்த அந்தக் காலத்துக்கு, மத்திய காலத்திய, இன்க்விசிஷன் சட்டங்கள் (சமயத் துறை ஒடுக்குமுறைக்குரிய கொடுஞ் சட்டங்கள்—மோ-ர்) நடப்பில் இருந்தும், செயல்படுத்தப்பட்டும் வந்த அந்தக் காலத்துக்கு (இது நாள் வரை நமது குற்றவியல் சட்டத் தொகுப்புகளிலும் மற்றும் நமது பொதுச் சட்டங்களிலும் இவை தொடர்ந்து நீடித்து வருகின்றன), இச்சட்டங்களின் படி குடிமக்கள் அவர்களுடைய மத நம்பிக்கைகளுக்காகவும் மற்றும் மத நம்பிக்கையின்மைக்காகவும் தண்டித்துக் கொடுமை செய்யப்பட்டும், மனித மனசாட்சிக்குப் பங்கம் உண்டாக்கப்பட்டும், சொகுசான அரசாங்கப் பதவிகளும், அரசாங்கத்தின் வாயிலாய்க் கிடைக்கும் வருமானங்களும், அரசாங்க மதச்சபையின் ஏதேனும் ஒரு வகைப்பட்ட அபினியின் வினியோகத்துடன் இணைக்கப்பட்டும் வந்த அந்த அவமானகரமான, கேடுகெட்ட காலத்துக்கு முடிவு கட்ட முடியும். மதச்சபையும் அரசும் அறவே தனித்துப் பிரிக்கப்பட வேண்டும் என்று நவீன கால அரசிடமிருந்தும் நவீன கால மதச் சபையிடமிருந்தும் சோஷலிசப் பாட்டாளி வர்க்கம் கோருகின்றது.

அரசியல் சுதந்திரத்தின் அத்தியாவசிய உள்ளடக்கக் கூறுகளில் ஒன்றாய் ருஷ்யப் புரட்சி இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். இது சம்பந்தமாய், ருஷ்யப் புரட்சியானது குறிப்பிடத்தக்க அளவுக்குச் சாதகமான நிலையில் இருக்கிறது. ஏனென்றால் போலீஸ் ஆதிக்கப் பிரபுத்துவ எதேச்சாதிகாரத்தின் வெறுப்பூட்டும் அதிகார ஆணவம் மதக் குருமார்களிடத்துங்கூட அதிருப்தியையும் சலசலப்பையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியிருக்கிறது. ருஷ்யச் சத்திய சமயப் பாதிரியினர் (Russian Orthodox clergymen)

எவ்வளவுதான் இழிவுற்று அறியாமை இருளில் மூழ்கியிருப் பினும், ருஷ்யாவில் பழைய, மத்திய காலத்திய அமைப்பு தகர்ந்து விழும் இடியோசையால் இவர்களுங்கூட இப் பொழுது தட்டியெழுப்பப்பட்டுள்ளனர். சுதந்திரம் வேண்டு மெனக் கோருவோருடன் இவர்களும் சேர்ந்து வருகின்றனர்; அதிகாரவர்க்க நடைமுறைகளையும் அதிகார ஆணவத்தை யும் எதிர்த்து, போலீஸ் உளவாளிகளாய் வேலை செய்யும் பணி ''ஆண்டவனது ஊழியர்கள்'' மீது திணிக்கப்படுவதை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்புகின்றனர். சோஷலிஸ்டு களாகிய நாம் இந்த இயக்கத்துக்கு நமது ஆதரவை அளிக்க வேண்டும்; பாதிரிமார் தொகுதியைச் சேர்ந்த நேர்மை யான உறுப்பினர்களின் கோரிக்கைகளை அவற்றின் இறுதி முடிவுகளுக்கு எடுத்துச் சென்று, சுதந்திரத்தைப் பற்றி அவர்களது சொற்களுக்கு ஏற்ப அவர்களைச் செயல்படுமாறு வைக்க வேண்டும்; மதத்துக்கும் போலீசுக்குமுள்ள எல்லாப் பந்தங்களையும் உறுதியாய் நின்று துண்டித்துக் கொள்ளு மாறு அவர்களிடம் கோர வேண்டும். ஒன்று, நீங்கள் நேர்மை யாளேராய் இருக்க வேண்டும்—அப்படியானால், மதச் சபையும் அரசும், மற்றும் பள்ளிக்கூடமும் மதச்சபையும் அறவே தனித்துப் பிரிக்கப்படுவதை ஆதரிக்க வேண்டும்; மதம் முற்றுகவும் முழுமுதலாகவும் தனிநபரின் சொந்த விவ காரமென பிரகடனம் செய்யப்படுதலை ஆதரிக்க வேண்டும். இல்லையேல், சுதந்திரத்துக்குரிய இந்த முரணற்ற கோரிக் கைகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஆவீர்கள்— அப்படியானால், மத்திய காலச் சமயத் துறை ஒடுக்குமுறை யின் பாரம்பரியங்களால் இன்னமும் கட்டுண்டுதான் இருக் கிறீர்கள், சொகுசான அரசாங்கப் பதவிகளுடனும் அரசாங் கத்தின் வாயிலாய்க் கிடைக்கும் வருமானங்களுடனும் இன்ன மும் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறீர்கள், உங்களுடைய ஆயுதத்தின் ஆன்மீக சக்தியில் நம்பிக்கை இல்லாமல் தொடர்ந்து அரசிடமிருந்து லஞ்சம் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறீர்கள் என்பது தெளிவாகிவிடுகிறது. அப்படி யானால், அனைத்து ருஷ்யாவையும் சேர்ந்த வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்கள் உங்கள் மீது ஈவிரக்கமில்லாப் போர் தொடுப்பதாய்ப் பிரகடனம் செய்கின்றனர்.

சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சியைப் பொறுத்த மட்டில், மதம் தனிநபரது சொந்த விவகாரமல்ல. நமது கட்சி தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காகப் போராடும் வர்க்க உணர்வு கொண்ட, முன்னேறிய வீரர்களை ஒருசேர இணைக்கும் கழகமாகும். இப்படிப்பட்ட ஒரு கழகம் மத நம்பிக்கைகளின் வடிவிலாகிய வர்க்க உணர்வின்மை, அறியாமை, அல்லது மூடத்தனம் குறித்து பராமுகமாய் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. மதத்தின் இருளை முற்றிலும் சித்தாந்த ஆயுதங்களைக் கொண்டு, சித்தாந்த ஆயுதங்களை மட்டுமே கொண்டு, நம்முடைய எழுத்தும் பேச்சுமாகிய பிரசாரத்தைக் கொண்டு போராடும் பொருட்டு, மதச்சபையானது அரசால் நிறுவப்பட்டதாய் இருக்கும் நிலை அறவே நீக்கப்பட வேண்டுமெனக் கோருகிறோம். மதத்தின் மூலமான எல்லா வித மாய்மாலங்களாலும் தொழிலாளர்கள் ஏய்க்கப்படுவதை எதிர்த்து இப்படி ஒரு போராட்டம் நடத்தும் பொருட்டே ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியாகிய நமது கழகத்தை நாம் நிறுவிக் கொண்டோம். ஆகவே நமக்குச் சித்தாந்தப் போராட்டம் தனிநபரது சொந்த விவகாரமல்ல; கட்சி அனைத்துக்கும், பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரிய விவகாரமாகும்.

அப்படியானால், நாம் நாத்திகர்கள் என்று நமது வேலைத் திட்டத்தில் நாம் ஏன் அறிவிக்கவில்லை? கிறிஸ்தவர்களும் தெய்வ நம்பிக்கையுடைய ஏனையோரும் நமது கட்சியில் சேரக்கூடாதென்று நாம் ஏன் தடை போடவில்லை?

இந்தக் கேள்விக்குரிய பதில், மதத்தைப் பற்றிய பிரச்சினையை அணுகும் முறையில் முதலாளித்துவ-ஜனநாயகவாதிகளுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்குமுள்ள மிகவும் முக்கியமான வேறுபாட்டை விளக்க உதவியாய் இருக்கும்.

நமது வேலைத்திட்டம், முற்றிலும் விஞ்ஞான வழிப்பட்டதோடல்லாமல் முற்றிலும் பொருள்முதல்வாதமுமாகிய உலகக் கண்ணோட்டத்தை அடிப்படையாய்க் கொண்டதாகும். ஆகவே நமது வேலைத்திட்டத்தின் விளக்கத்தில் மதத்தாலான இருளின் மெய்யான வரலாற்று, பொருளாதார வேர்களைப்பற்றிய விளக்கமும் இன்றியமையாதவாறு உள்

அடங்கியிருக்கிறது. நமது பிரசாரத்தில் நாத்திகப் பிரசாரமும் இன்றியமையாதவாறு உள்ளடங்கியிருக்கிறது. எதேச்சாதிகாரப் பிரபுத்துவ அரசாங்கத்தால் இதுகாறும் தடை விதிக்கப்பட்டு அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்திருக்கும் பொருத்தமான விஞ்ஞான இலக்கியத்தை வெளியிடுவது இப்பொழுது நமது கட்சிப் பணியின் அரங்குகளில் ஒன்றுய் அமைய வேண்டும். பதினெட்டாம் நூற்றுண்டின் பிரெஞ்சு அறிவொளி இயக்கப் பெருமக்களும் நாத்திகர்களும் எழுதியவற்றை மொழிபெயர்த்து விரிவாய்ப் பரப்ப வேண்டுமென்று முன்பு ஜெர்மன் சோஷலிஸ்டுகளுக்கு எங்கெல்ஸ் கூறிய ஆலோசனையை[17] இப்பொழுது நாம் பின்பற்ற வேண்டி வரலாம்.

ஆனல் எந்த நிலைமையிலும் நாம், முதலாளித்துவ வர்க்கத்தாரைச் சேர்ந்த தீவிர-ஜனநாயகவாதிகள் அடிக்கடி செய்வது போல, மதத்தைப் பற்றிய பிரச்சினையைக் கருத்தியலான, கருத்துமுதல்வாதப் பாணியில், வர்க்கப் போராட்டத்துடன் சம்பந்தமில்லாத ''அறிவுத்துறைப்'' பிரச்சினையாய் முன்வைக்கும் தவருன பாதையில் சென்றுவிடக் கூடாது. தொழிலாளி வெகுஜனங்கள் முடிவின்றி தொடர்ந்து ஒடுக்கப்படுவதையும் நயம் கெடுக்கப்படுவதையும் அடிப்படையாய்க் கொண்ட ஒரு சமுதாயத்தில், மத மூடநம்பிக்கைகளை வெறும் பிரசார முறைகளைக் கொண்டு அகற்றிவிட முடியுமென நினைப்பது அசட்டுத்தனமாகும். மனிதகுலம் மதமெனும் நுகத்தடியின்கீழ் வதைபடுவது, சமுதாயத்திலுள்ள பொருளாதார நுகத்தடியின் விளைவும் பிரதிபலிப்புமே ஆகுமென்பதை மறப்பது முதலாளித்துவக் குறுகிய பார்வையையே குறிக்கும். முதலாளித்துவத்தின் இருண்ட சக்திகளை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் தானே போராடுவதன் மூலம் அது அறிவொளி பெறுத வரை, எத்தனைப் பிரசுரங்களை வெளியிட்டாலும், எவ்வளவுதான் உபதேசம் செய்தாலும் அதை அறிவொளி பெறச் செய்துவிட முடியாது. மண்ணுலகில் ஒரு சுவர்க்கத்தைப் படைக்கும் பொருட்டு நடைபெறும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினுடைய மெய்யான இந்தப் புரட்சிப் போராட்டத்தில் ஒற்றுமை ஓங்குவது, விண்ணுலகச் சுவர்க்கம் குறித்து பாட்டாளி வர்க்கத்தோரிடையிலான

கருத்து ஒற்றுமையைக் காட்டிலும் நமக்கு மிகவும் முக்கிய மானது.

எனவேதான் நமது நாத்திகத்தை நமது வேலைத்திட்டத்தில் நாம் அறிவிக்கவில்லை, அறிவிக்கவும் கூடாது; எனவேதான் தமது பழைய தப்பெண்ணங்களில் இன்னமும் மீதமிச்சங்கள் சிலவற்றை விட்டொழிக்காது வைத்திருக்கும் பாட்டாளிகள் நமது கட்சியுடன் வந்து இணைவதற்கு நாம் தடை போடவில்லை, போடவும் கூடாது. எப்பொழுதும் நாம் விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தையே பிரசாரம் செய்வோம். பல்வேறு ''கிறிஸ்தவப் பிரிவினரது'' முரணான கருத்துக்களை நாம் எதிர்த்துப் போராடுவது அவசியமே. ஆனால் மதப் பிரச்சினையை அதற்குச் சிறிதும் உரித்தாய் இராத முதல் நிலைக்கு முன்கொண்டுவர வேண்டுமென்று ஒருபோதும் இதற்கு அர்த்தமல்ல. மூன்றும் தர அபிப்பிராயங்கள் அல்லது மூடக் கருத்துக்களை முன்னிட்டு, வேகமாய் அரசியல் முக்கியத்துவத்தை அறவே இழந்து, பொருளாதார வளர்ச்சியின் போக்கினூலேயே வேகமாய்க் குப்பை குழியிலே ஒதுக்கித் தள்ளப்பட்டு வரும் இவற்றை முன்னிட்டு, மெய்யாகவே புரட்சிகரமான பொருளாதார, அரசியல் போராட்டத்தின் சக்திகள் பிளவுபடுவதற்கு நாம் அனுமதிக்க வேண்டுமென்றும் இதற்கு அதர்த்தமல்ல.

பிற்போக்குவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் மதப் பூசலைத் தூண்டிவிடுவதில் எங்குமே கருத்து செலுத்தி வந்துள்ளனர், இப்பொழுது ருஷ்யாவில் கருத்து செலுத்த முற்பட்டு வருகின்றனர்—இதன் மூலம் இவர்கள் வெகுஜனங்களுடைய கவனத்தை, அனைத்து ருஷ்யாவையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கமானது புரட்சிப் போராட்டத்தில் ஒன்று பட்டு நடைமுறையில் தற்போது தீர்வு கண்டு வரும் மெய்யாகவே முக்கியமான, அடிப்படையான பொருளாதார, அரசியல் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்பிவிட முயலுகின்றனர். பாட்டாளி வர்க்க சக்திகளைப் பிளவுபடுத்தும் இந்தப் பிற்போக்குக் கொள்கை இன்று பிரதானமாய்க் கறுப்பு நூற்றுவரின் கொலைத் தாண்டவங்களின் வடிவில் வெளிப்படுகிறது; நாளைக்கு இக்கொள்கை இன்னும் நுட்பநயமான வேறு வடிவங்களை வகுத்துக் கொள்ளக் கூடும். எப்படியும்

நாம் அமைதியாகவும் முரணின்றியும் பொறுமையுடனும் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டையும் விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தையும் போதித்து இந்தப் பிற்போக்குக் கொள்கையை எதிர்ப்போம்—நாம் போதிப்பது இரண்டாந் தரமான வேறுபாடுகளுக்கு எவ்வகையிலும் தூபமிடுதலுக்கு அன்னியமான ஒன்றாகும்.

அரசு சம்பந்தப்பட்ட மட்டில் மதத்தை மெய்யாகவே தனிநபரது சொந்த விவகாரமாக்குவதில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் வெற்றி வாகை சூடும். மத்திய காலத்தியப் பூசணம் துடைத்து அகற்றப்பட்டு சுத்தமாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்பில், பாட்டாளி வர்க்கமானது மதத்தின் மாய்மாலத்தால் மனிதகுலம் ஏய்க்கப்படுவதற்கு மெய்யான மூல காரணமாகிய பொருளாதார அடிமை நிலையை ஒழிப்பதற்காக விரிவான, பகிரங்கமான போராட்டம் நடத்தும்.

நோவயா ழீஸின், இதழ் 28,
1905 டிசம்பர் 3
ஒப்பம்: நி. லெனின்

நூல் திரட்டு
தொகுதி 12
பக்கங்கள் 142-147

மார்க்சியமும் திருத்தல்வாதமும்

வடிவகணித வெளிப்படை உண்மைகள் மனித நலன்களைப் பாதிக்குமாயின் அவற்றை மறுக்க நிச்சயம் முயற்சி செய்வார்களெனக் கூறும் பிரபல முதுமொழி ஒன்று உண்டு: இறையியலின் பழங் காலத் தப்பெண்ணங்களுக்கு முரணான இயற்கை-வரலாற்றுத் தத்துவங்களுக்கு வெறித்தனமான எதிர்ப்பு காட்டப்பட்டது, இனியும் காட்டப்பட்டு வருகிறது. ஆகவே மார்க்சியத் தத்துவம்—தற்காலச் சமுதாயத்தின் மிகவும் முன்னேறிய வர்க்கத்துக்கு அறிவொளி ஊட்டி அதை ஒழுங்கமைக்க நேரடியாய் உதவுவதும், இந்த வர்க்கத்தின் முன்னுள்ள கடமைகளைச் சுட்டிக்காட்டுவதும், தற்போதுள்ள அமைப்பு (பொருளாதார வளர்ச்சி காரணமாய்) தவிர்க்க முடியாதபடி வீழ்த்தப்பட்டு அதனிடத்தில் ஒரு புதிய அமைப்பு தோன்றுமென்பதை நிரூபிப்பதுமான இந்த மார்க்சியத் தத்துவம் — அதன் வாழ்வு முழுதும் போராடியே ஒவ்வொரு அடியாய் முன்னேற வேண்டியிருந்துள்ளது என்பதில் வியப்பு ஏதுமில்லை.

மார்க்சியமானது முதலாளித்துவ விஞ்ஞானத்துக்கும் தத்துவவியலுக்கும் எதிரானது என்பதைக் கூறத் தேவையில்லை. சொத்துடைத்த வர்க்கங்களின் வளரும் தலைமுறையை மழுங்கடிக்கவும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களுக்கு எதிராய் அதைப் ''பயிற்றுவிக்கவும்'' அதிகார பூர்வமான பேராசிரியர்களால் அதிகாரபூர்வமாய் இவை போதிக்கப்

படுகிறவை. இந்த விஞ்ஞானம் மார்க்சியம் என்பதாய் ஒன்று இருப்பதைக் கேட்பதற்குக்கூட மறுக்கிறது; மார்க்சியம் ஏற்கனவே பொய்யென நிரூபிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு விட்டதெனக் கூறுகிறது. சோஷலிசத்தை மறுத்துப் பிழைப்பு தேடிக் கொள்ளும் இளம் அறிவியலாளர்களும், காலாவதியாகிவிட்ட எல்லா வித ''அமைப்புகளின்'' மரபுகளையும் பாதுகாத்து நிற்கும் தள்ளாத கிழவர்களும் ஒருங்கே துடித்தெழுந்து மார்க்சைத் தாக்குகின்றனர். மார்க்சியத்தின் முன்னேற்றமானது, தொழிலாளி வர்க்கத்தினரிடையே அதன் கருத்துக்கள் பரவி வேரூன்றி உறுதி பெறுவதானது, மார்க்சியத்தின் மீதான இந்த முதலாளித்துவத் தாக்குதல்களின் வேகத்தையும் கடுமையையும் தவிர்க்க முடியாதபடி அதிகரிக்கச் செய்கிறது. அதிகாரபூர்வமான விஞ்ஞானத்தால் ''அழித்தொழிக்கப்படும்'' ஒவ்வொரு தரமும் மார்க்சியம் மேலும் மேலும் வலுவும் உறுதியும் சக்தியும் பெற்று ஓங்குகிறது.

தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் தொடர்பு கொண்டு பிரதானமாய்ப் பாட்டாளி வர்க்கத்திடம் நிலவும் தத்துவங்களிடையேகூட மார்க்சியம் தனது நிலையை எடுத்தயெடுப்பிலே உறுதியாய் நாட்டிக் கொண்டுவிடவில்லை. அதன் வாழ்வின் முதல் அரைநூற்றாண்டில் (1840ஆம் ஆண்டுகளிலிருந்து தொடங்கி) மார்க்சியம் அடிப்படையிலேயே தனக்கு விரோதமான தத்துவங்களுக்கு எதிராய்ப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. நாற்பதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் மார்க்சும் எங்கெல்சும் தத்துவவியல் கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்தினராய் இருந்த தீவிர இளம் ஹெகலியர்களுடன் கணக்குத் தீர்த்துக் கொண்டனர். நாற்பதாம் ஆண்டுகளின் முடிவில் பொருளாதாரத் தத்துவத் துறையில் புருதோனியத்தை[18] எதிர்த்துப் போராட்டம் ஆரம்பமாயிற்று. கொந்தளிப்பு மிக்க 1848ல் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட கட்சிகளையும் தத்துவங்களையும் பற்றிய விமர்சனத்தின் வாயிலாய் ஐம்பதாம் ஆண்டுகளில் இந்தப் போராட்டம் முடிவடையலாயிற்று. அறுபதாம் ஆண்டுகளில் போராட்டம் பொதுத் தத்துவத் துறையிலிருந்து நேரடியான தொழிலாளர் இயக்கத்துக்கு மேலும் நெருங்கிய ஒரு துறைக்கு

இடம் பெயர்ந்து சென்றது. அகிலத்திலிருந்து பக்கூனினியம்[19] வெளியேற்றப்பட்டதில் இது முடிவுற்றது. எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சிறிது காலத்துக்குப் புருதோனியர் முல்பெர்கரும், எழுபதாம் ஆண்டுகளின் கடைப் பகுதியில் நேர்காட்சிவாதி டூரிங்கும் ஜெர்மனியில் அரங்கிலே ஆடினர். ஆனால் பாட்டாளி வர்க்கத்திடம் இருவருக்கும் ஏற்கனவே மிகச் சொற்ப செல்வாக்கே இருந்தது. தொழிலாளர் இயக்கத்தில் ஏனைய எல்லா சித்தாந்தங்களின் மீதும் இதற்குள்ளாகவே மார்க்சியம் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி வெற்றி கண்டு வந்தது.

தொண்ணூறும் ஆண்டுகளுக்குள் இந்த வெற்றி பிரதானமாய் நிறைவு எய்திவிட்டது. புருதோனிய மரபுகள் வேறு எங்கையும்விட மிக அதிகக் காலத்துக்கு நிலைத்திருந்த லத்தீனிய நாடுகளிலுங்கூட, தொழிலாளர் கட்சிகள் தமது வேலைத்திட்டங்களையும் போர்த்தந்திரங்களையும் நடைமுறையில் மார்க்சிய அடித்தளங்கள் மீதுதான் வகுத்துக் கொண்டன. தொழிலாளர் இயக்கத்தின் புத்துயிர் பெற்ற சர்வதேச நிறுவனம்—காலத்துக்குக் காலம் கூடிய சர்வதேசக் காங்கிரஸ்களின் வடிவில் அமைந்த இது—தொடக்கத்திலிருந்து அனேகமாய்ப் போராட்டமின்றியே மார்க்சியக் கருத்தோட்டத்தையே முக்கியமான எல்லாக் கூறுகளிலும் ஏற்று வந்தது. இவ்விதம் மார்க்சியம் தனக்கு விரோதமான அதிக அளவுக்கோ குறைந்த அளவுக்கோ ஒருமித்ததாய் அமைந்த தத்துவங்கள் யாவற்றையும் வெளியேற்றியபின், அந்தத் தத்துவங்களில் அடங்கிய போக்குகள் பிற வழிகளில் தலைகாட்ட முற்பட்டன. போராட்டத்தின் வடிவங்களும் முகாந்திரங்களும் மாறினவேயன்றி போராட்டம் தொடர்ந்து நடைபெற்றே வந்தது. மார்க்சியத்தின் வாழ்வில் இரண்டாவது அரைநூற்றாண்டானது (தொண்ணூறும் ஆண்டுகளிலிருந்து) மார்க்சியத்துக்கு விரோதமாய் மார்க்சியத்தினுள்ளிருந்தே செயல்பட்ட ஒரு போக்கிற்கு எதிரான போராட்டத்துடன் தொடங்கிற்று.

ஒரு காலத்தில் வைதீக மார்க்சியவாதியாய் இருந்த பெர்ன்ஷ்டைன் மிகுந்த சப்தம் எழுப்பி, மார்க்சுக்குத் திருத்தங்கள் செய்வதன், மார்க்சைத் திருத்துவதன், திருத்தல்

வாதத்தின் மிக முனைப்பான வெளிப்பாடாய் முன்வந்ததால், இந்தப் போக்கு பெர்ன்ஷ்டைனின் பெயரில் அழைக்கப்பட லாயிற்று. ருஷ்யாவிலுங்கூட, நாட்டின் பொருளாதாரப் பிற்பட்ட நிலை காரணமாகவும், பண்ணையடிமை முறையின் மீதமிச்சங்களின் சுமையால் இருத்தப்பட்ட விவசாயிகள் மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையோராய் இருப் பதன் காரணமாகவும் மார்க்சியமல்லாத சோஷலிசம் இயல் பாகவே வேறெங்கையும்விட மிக நெடுங் காலத்துக்கு நிலைத் திருந்துள்ள ருஷ்யாவிலுங்கூட, தெட்டத் தெளிவாய் நம் கண்முன்னே இது திருத்தல்வாதமாய் மாறிக் கொண்டிருக் கிறது. நிலப் பிரச்சினையிலும் (நிலம் அனைத்தையும் ஸ்தல அரசுடைமையாக்கும் திட்டத்திலும்) மற்றும் வேலைத்திட் டம், போர்த்தந்திரம் பற்றிய பொதுப் பிரச்சினைகளிலும் நமது சமூக-நரோத்னிக்குகள்[20] தமது பழைய கருத்தமைப்பின் அழுகிப்போன, காலாவதியாகிவிட்ட மீதமிச்சங்களுக்குப் பதிலாய் மார்க்சுக்குத் ''திருத்தங்கள்'' செய்வதை மேலும் மேலும் கைக்கொண்டு வருகின்றனர். அவர்களுடைய பழைய கருத்தமைப்பு அதற்குரிய வழியில் ஒருமித்ததாய் அமைந்து அடிப்படையிலேயே மார்க்சியத்துக்குப் பகைமை யானதாய் இருந்தது.

மார்க்சியத்துக்கு முற்பட்ட சோஷலிசம் தோற்கடிக்கப் பட்டுவிட்டது. அது போராட்டத்தைத் தொடர்ந்து நடத் தியே வருகிறது. ஆனால் முன்பு போல தனது சொந்த அடிப் படையிலிருந்து போராடுவதற்குப் பதிலாய், இப்பொழுது அது மார்க்சியத்தின் பொது அடிப்படையிலே நின்று, திருத் தல்வாதமாய்ப் போராட்டத்தை நடத்தி வருகிறது. ஆகவே திருத்தல்வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தைப் பரிசீலனை செய்வோமாக.

தத்துவவியல் அரங்கில் திருத்தல்வாதமானது முத லாளித்துவப் பேராசிரிய''விஞ்ஞானத்தைப்'' பின்தொடர்ந்து சென்றது. பேராசிரியர்கள் ''காண்டுக்குத் திரும்பிச் சென்ற னர்''—திருத்தல்வாதம் உடனே நவீன-காண்டியர்களின்[21] வாலைப் பற்றிக் கொண்டு பின்சென்றது. தத்துவவியல் பொருள்முதல்வாதத்தை எதிர்த்துப் பாதிரிமார்கள் ஆயி ரம் தரம் கூறி வந்திருக்கும் வழக்கமான வெற்றுரைகளைப்

பேராசிரியர்கள் திருப்பிக் கூறினர்—உடனே திருத்தல்வாதிகளும் இளக்காரமாய் நகைத்துக் கொண்டு பொருள்முதல்வாதம் நெடுங் காலத்துக்கு முன்பே ''தவறென நிரூபிக்கப்பட்டுவிட்டதே'' என்று (கடைசியாய் வெளிவந்த Handbuch கிலிருந்து சொல்லுக்குச் சொல் அப்படியே திருப்பிக் கூறி) ஜப மந்திரத்தை முணுமுணுப்பது போல முணுமுணுத்தனர். பேராசிரியர்கள் ஹெகலைச் ''செத்த நாய்'' என ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதேபோதில் ஹெகலினுடையதைவிட ஆயிரம் மடங்கு அற்பமான, படுமட்டமான கருத்துமுதல்வாதத்தை உபதேசம் செய்து, மிக அலட்சியமாய் இயக்கவியலிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டனர்—உடனே திருத்தல்வாதிகள் அவர்கள் பின்னால் ஓடி, ''சாதுர்யமான'' (மற்றும் புரட்சிகரமான) இயக்கவியலைக் கைவிட்டு அதற்குப் பதில் ''எளிய'' (மற்றும் அமைதியான) ''பரிணமத்தைக்'' கைக் கொண்டு, விஞ்ஞானத்தைக் கொச்சையாக்கி இழிவுபடுத்தும் தத்துவவியல் சகதிக் குழியிலே மூழ்கினர். பேராசிரியர்கள் தமது கருத்துமுதல்வாத, ''விமர்சன'' அமைப்புகளை ஆதிக்கத்திலிருந்த மத்திய காலத் ''தத்துவவியலுக்கு'' (அதாவது இறையியலுக்கு) உகந்தவாறு சரிசெய்து அதிகார பூர்வமான தமது சம்பளங்களைச் சம்பாதித்துக் கொண்டனர்—திருத்தல்வாதிகளும் உடனே அவர்களை நெருங்கிச் சென்று மதத்தை, தற்கால அரசு சம்பந்தமாய் மட்டுமின்றி முன்னேறிய வர்க்கத்தின் கட்சி சம்பந்தமாகவுங்கூட, அவரவரது ''சொந்த விவகாரமாக்க'' முயன்றனர்.

மார்க்சுக்குச் செய்யப்பட்ட இத்தகைய ''திருத்தங்களுக்கு'' வர்க்க முறையில் மெய்யான பொருள் என்னவென்பது கூரமலே விளங்குகிறது. சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தில் பிளெஹானவ் ஒருவர்தான் திருத்தல்வாதிகளுடைய படுமோசமான இந்த வெற்றுரைகளை முரணற்ற இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திலிருந்து விமர்சித்துக் கண்டித்த மார்க்சியவாதி என்பதை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம். பிளெஹானவின் போர்த்தந்திரச் சந்தர்ப்பவாதத்தைப் பற்றிய விமர்சனமாய் மூடிமறைத்துப் பழைய பிற்போக்குத் தத்துவவியல் குப்பைக்கூளத்தைக் கள்ளத்தனமாய் உள்ளே கொண்டுவர மிகவும் தவறுன

முயற்சிகள் செய்யப்படும் இத்தருணத்தில் இதை மேலும் அழுத்தம் திருத்தமாய் வலியுறுத்துவது அவசியமாகும்.*

அரசியல் பொருளாதாரத்துக்கு வருவோமாயின் இத் துறையில் திருத்தல்வாதிகளுடைய ''திருத்தங்கள்'' மேலும் அதிக விரிவாகவும் நுட்ப விவரங்கள் வழிப்பட்டனவாயும் இருந்ததை முதற்கண் குறிப்பிடுதல் வேண்டும். ''பொருளா தார வளர்ச்சி பற்றிய புதிய விவரங்களைக்'' கொண்டு பொது மக்களை வயப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. பெரு வீத உற்பத்தி குவிவதும் சிறுவீத உற்பத்தியை அது அகற்றிடு வதும் விவசாயத்தில் நடைபெறவே இல்லையென்றும், வர்த்த கத்திலும் தொழில் துறையிலும் மிகவும் மெதுவாகவே நடைபெறுகின்றன என்றும் கூறப்பட்டது. நெருக்கடிகள் இப்பொழுது அரிதாகியதோடு பலம் குறைந்துவிட்டதாகவும், இவற்றை அறவே நீக்கிவிடும் ஆற்றலைக் கார்ட்டல்களும் டிரஸ்டுகளும் மூலதனத்துக்கு அளித்திடுமென எதிர்பார்க் கலாம் என்பதாகவும் கூறப்பட்டது. முதலாளித்துவம் முன் னேறிச் சென்று கொண்டிருக்கும் ''தகர்வு பற்றிய தத்துவம்'', வர்க்கப் பகைமைகள் மேலும் மேலும் கடுமை குறைந்து தணிந்துவிடும் போக்கின் காரணத்தால் ஆதரமற்றதாகு மெனக் கூறப்பட்டது. முடிவில் மார்க்சின் மதிப்புத் தத்து வத்தையும் பேம்-பாவர்க்கின் வழியில் திருத்துவதில் தவறு ஒன்றுமில்லை என்று கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளில் திருத்தல்வாதிகளை எதிர்த்து நடத்திய போராட்டமானது, இதற்கு இருபது ஆண்டுக ளுக்கு முன்பு டூரிங்குடன் எங்கெல்ஸ் நடத்திய சர்ச்சையைப் போல் அதே அளவுக்குப் பயனுள்ள முறையில் சர்வதேச

---

* பக்தானவ், பஸாரவ் மற்றும் சிலர் எழுதும் **மார்க்சியத் தின் தத்துவவியலில் ஆராய்ச்சிகள்** என்னும் புத்தகத்தைப் பார்க்கவும். இப்புத்தகத்தைப் பரிசீலிக்க இதுவல்ல இடம். நவீன-கான்டியத் திருத்தல்வாதிகளைப் பற்றி மேலே நான் கூறியுள்ளவை யாவும் இந்தப் ''புதிய'' நவீன-ஹியூமிய, நவீன-பேர்கிலியத் திருத்தல்வாதிகளுக்கும் சாராம்சத்தில் பொருந்தும் என்பதை வருங்காலத்தில் கூடிய சீக்கிரம் ஒரு கட்டுரைத் தொடரிலோ, தனிப் பிரசுரத்திலோ நிரூபிப் பேன் என்று மட்டும் தற்போது குறிப்பிடுகிறேன்.[22]

சோஷலிசத்தில் தத்துவார்த்தச் சிந்தனையை மறுமலர்ச்சி பெறச் செய்தது. உண்மைகள், புள்ளிவிவரங்கள் இவற்றின் துணை கொண்டு திருத்தல்வாதிகளுடைய வாதங்கள் பகுத்தாராயப்பட்டன. தற்காலச் சிறுவீத உற்பத்தி குறித்து திருத்தல்வாதிகள் முனைந்து நின்று பகட்டான சித்திரம் தீட்டினர் என்று நிரூபிக்கப்பட்டது. தொழில் துறையில் மட்டுமின்றி, விவசாயத்திலுங்கூட சிறுவீத உற்பத்தியைவிடப் பெருவீத உற்பத்தியே தொழில்நுட்ப வழியிலும் வர்த்தக வழியிலும் மேலானது என்பது மறுக்க முடியாத உண்மைகளால் மெய்ப்பிக்கப்படுகிறது. ஆனால் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி விவசாயத்தில் குறைந்த அளவு வளர்ச்சியே பெற்றிருக்கிறது; தற்காலப் புள்ளிவிவர இயலாளர்களும் பொருளியலாளர்களும், பொதுவாகப் பேசுமிடத்து, உலகப் பொருளாதாரத்தின் பரிவர்த்தனை நிகழ்ச்சிப்போக்கினுள் விவசாயம் மேலும் மேலும் இழுத்துக் கொள்ளப் படுவதைச் சுட்டிக்காட்டும் தனிக் கிளையையும் (சில நேரங்களில் செயற்பாடுகளையுங் கூட) தேர்வாய்வு செய்வதில் அதிகத் தேர்ச்சியுடையோராய் இல்லை. சிறுவீத உற்பத்தியானது இயற்கைப் பொருளாதாரத்தின் இடிபாடுகள்மீது தன்னை நிலைநிறுத்திக் கொள்வது எப்படியெனில், இடையறாது உணவுத் தரத்தை மோசமாக்கியும் நிரந்தரப் பட்டினியாலும் வேலை நேரத்தை அதிகமாக்கிச் சென்றும் கால்நடைகளின் தரத்தையும் பராமரிப்பையும் சீர்கேடுறச் செய்தும்தான்—சுருக்கமாய்க் கூறினால், முதலாளித்துவப் பட்டறை உற்பத்தியை எதிர்த்துக் கைத்தொழில் உற்பத்தி தன்னை நிலைநிறுத்தி வந்த அதே வழிகளில்தான். விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும் முதலாளித்துவச் சமுதாயத்தில் சிறுவீத உற்பத்தியின் அடித்தளங்களுக்குத் தவிர்க்க முடியாதவாறும் விடாப்பிடியாகவும் குழிபறிக்கிறது. பல சந்தர்ப்பங்களில் குழப்படியாகவும் சிக்கலாகவுமுள்ள இந்த நிகழ்ச்சிப்போக்கை அதன் எல்லா வடிவங்களிலும் ஆராய்வதும், சிறு உற்பத்தியாளரால் முதலாளித்துவத்தில் அழியாது நிலைப்பது முடியாதென்பதையும் முதலாளித்துவத்தில் விவசாயியின் சிறு சாகுபடிக்கு விடிமோட்சமில்லை என்பதையும் பாட்டாளியின் கண்ணோட்டத்தை

விவசாயி ஏற்பது அவசியம் என்பதையும் தெளிவுபடுத்திக் காட்டுவதும் சோஷலிசப் பொருளியலுக்குரிய கடமையாகும். இந்தப் பிரச்சினையில் திருத்தல்வாதிகள் ஒருச்சார்பாகவும் முதலாளித்துவத்தின் முழு அமைப்புடன் தொடர்பின்றியும் தேர்வு செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில் மேம் போக்கான பொது முடிவுகளுக்கு வந்து விஞ்ஞானத்தின் கண் ணோட்டத்தில் கேடு புரிந்தனர். புரட்சிகரப் பாட்டாளியின் பார்வை நிலையை ஏற்குமாறு வற்புறுத்துவதற்குப் பதிலாய் சிறு உடைமையாளனின் போக்கை (அதாவது முதலா ளித்துவ வர்க்கத்தாரின் போக்கை) ஏற்குமாறு தெரிந்தோ தெரியாமலோ தவிர்க்க முடியாதபடி விவசாயியை அழைத்ததன் மூலம், அல்லது வற்புறுத்தியதன் மூலம் அவர்கள் அரசியலின் கண்ணோட்டத்தில் கேடு புரிந்தனர்.

நெருக்கடிகளின் தத்துவம் குறித்தும் தகர்வின் தத் துவம் குறித்தும் திருத்தல்வாதத்தின் நிலை மேலும் படுமோச மானதாகவே இருந்தது. மிகச் சொற்ப காலத்துக்கு மட்டுமே தான், அதுவும் மிக மோசமான கிட்டப்பார்வை கொண்ட வரால்தான் ஒரு சில ஆண்டுக் காலத் தொழில் துறை ஏற்ற நிலையாலும் சுபிட்சத்தாலும் வயப்படுத்தப்பட்டு, மார்க்சின் தத்துவத்தினுடைய அடிப்படைகளைத் திருத்தியமைக்க வேண்டுமென நினைக்க முடியும். நெருக்கடிகள் கடந்த காலத் துக்குரியனவாகிவிட வில்லை, சுபிட்சத்தைப் பின்தொடர்ந்து நெருக்கடி வருகிறது என்பதை எதார்த்த நிலைமைகள் மிக விரைவாகவே திருத்தல்வாதிகளுக்குத் தெளிவுபடுத்தின. குறிப்பிட்ட நெருக்கடிகளின் வடிவங்களும் வரிசைமுறையும் சித்திரமும் மாறினவேயன்றி, நெருக்கடிகள் முதலாளித்துவ அமைப்பின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாய்த்தான் நிலைத்திருந்தன. கார்ட்டல்களும் டிரஸ்டுகளும் உற்பத்தியை ஒன்றுபடுத்திய அதே நேரத்தில், எல்லோருக்கும் கண்கூடாய்த் தெரியும்படியான முறையில் உற்பத்தியின் அராஜகத்தை யும் பாட்டாளி வர்க்கத்தினுடைய வாழ்வின் காவந்தின்மை யையும் மூலதனத்தின் ஒடுக்குமுறையையும் தீவிரப்படுத்தி, இதன் மூலம் வர்க்கப் பகைமைகளை முன்பின் கண்டிராத அளவுக்குக் கடுமையாக்குகின்றன. முதலாளித்துவமானது அழிவை நோக்கி—தனிப்பட்ட அரசியல், பொருளாதார

நெருக்கடிகளைக் குறிக்கும் பொருளிலும் முதலாளித்துவ அமைப்பு அனைத்தின் முழுநிறைத் தகர்வைக் குறிக்கும் பொருளிலும் — விரைந்தோடிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பாய் இதே புதிய பகாசுர டிரஸ்டுகளின் மூலம் மிகமிகத் தெளிவாகவும் மிகமிகப் பெரிய அளவிலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அண்மையில் அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியும் ஐரோப்பாவிலும் பயங்கரமாய் அதிகரித்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டமும்—எக்கணமும் மூண்டுவிடும் நிலையிலுள்ள தொழில் துறை நெருக்கடியைப் பற்றிக் கூறவே வேண்டாம், பல அறிகுறிகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றன —திருத்தல்வாதிகளுடைய அண்மைக் காலத்தியத் ''தத்துவங்கள்'' எல்லோராலும், திருத்தல்வாதிகளிடையேகூட பலரும் அடங்கலாய் எல்லோராலும், மறக்கப்பட்டுவிடும் நிலையை உண்டாக்கியுள்ளன. ஆனால் அறிவுத்துறையினரது இந்த நிலையின்மை தொழிலாளி வர்க்கத்துக்கு அளித்திடும் படிப்பினைகள் ஒரு போதும் மறக்கப்படலாகாது.

மதிப்புத் தத்துவத்தைப் பொறுத்தமட்டில் பேம்-பாவர்க்கின் பாணியில் சிறிதும் தெளிவற்ற சூசகங்களையும் பெருமூச்சுகளையும் தவிர்த்து, திருத்தல்வாதிகள் வேறு எதுவுமே அளித்திடவில்லை, ஆகவே விஞ்ஞான சிந்தனையின் வளர்ச்சியில் எவ்விதத் தடமும் விட்டுச் செல்லவில்லை என்பதற்கு மேல் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

அரசியல் துறையில், திருத்தல்வாதமானது மார்க்சியத்தின் அடித்தளத்தை, அதாவது வர்க்கப் போராட்டத் தத்துவத்தைத் திருத்த மெய்யாகவே பெருமுயற்சி செய்தது. அரசியல் சுதந்திரமும் ஜனநாயகமும் அனைத்து மக்கள் வாக்குரிமையும் வர்க்கப் போராட்டத்துக்கான அடிநிலையை அகற்றிவிடுவதாகவும், தொழிலாளி வர்க்கத்துக்குத் தாய்நாடில்லை என்கிற **கம்யூனிஸ்டு அறிக்கை**யின் பழம்பெரும் நிர்ணயிப்பைப் பொய்யாக்கிவிடுவதாகவும் கூறினர்கள். ஏனெனில் ஜனநாயகத்தில் ''பெரும்பான்மையோரின் சித்தம்'' ஆதிக்கம் செலுத்துவதால், அரசை வர்க்க ஆதிக்கத்திற்கான உறுப்பாய் யாரும் கருதலாகாதென்றும், பிற்போக்காளர்களுக்கு எதிராய் முற்போக்கான, சமுதாய-சீர்திருத்த

முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டுகள் நிறுவிக் கொள்வதை நிராகரிக்கலாகாதென்றும் கூறினர்.

திருத்தல்வாதிகளுடைய இந்த வாதங்கள் ஓரளவு பாங்குற வகுக்கப் பெற்ற கருத்தமைப்பாகும் என்பதை, அதாவது பிரசித்தமான பழைய மிதவாத-முதலாளித்துவக் கருத்தமைப்பாகும் என்பதை மறுப்பதற்கில்லை. முதலாளித்துவப் பாராளுமன்ற முறையில் வாக்குரிமையையும் அரசாங்க விவகாரங்களில் பங்கு கொள்ளும் உரிமையையும் குடிமக்கள் அனைவரும் பாகுபாடின்றிப் பகிர்ந்து கொள்வதால் இது வர்க்கங்களையும் வர்க்கப் பிரிவினைகளையும் ஒழித்திடுகிறது என்று மிதவாதிகள் எப்பொழுதுமே கூறி வந்துள்ளனர். இத்தகைய கருத்துக்கள் எவ்வளவு அபத்தமானவை என்பதைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பாவின் வரலாறு அனைத்தும், இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில் ருஷ்யப் புரட்சியின் வரலாறு அனைத்தும் கண்கூடாய்க் காட்டுகின்றன. ''ஜனநாயக'' முதலாளித்துவத்தின் சுதந்திரத்தில் பொருளாதாரப் பாகுபாடுகள் மேலும் தீவிரமாகிக் கடுமையாகின்றனவே ஒழிய குறைந்துவிடவில்லை. மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளிலுங்கூட பாராளுமன்ற முறை இக்குடியரசுகளும் வர்க்க ஒடுக்குமுறை அமைப்புகளே என்ற அவற்றின் உள்ளியல்பான தன்மையை அப்பட்டமாய்த் தெரியப்படுத்துகிறதேயன்றி, அவற்றில் வர்க்க ஒடுக்குமுறையை அகற்றிவிடவில்லை. அரசியல் நிகழ்ச்சிகளில் முன்பு நேரடிப் பங்கு பெற்ற பகுதிகளைக் காட்டிலும் அளவிட முடியாத விரிவான மக்கள் பகுதியோருக்கு அறிவொளியூட்டி அவற்றை ஒழுங்கமைத்திடத் துணை புரிவதன் மூலம் பாராளுமன்ற முறை நெருக்கடிகளையும் அரசியல் புரட்சிகளையும் அகற்றிவிடவில்லை, இப்புரட்சிகளின்போது உள்நாட்டு யுத்தம் அதிகபட்ச அளவுக்கு கடுமையாகும்படியே செய்கிறது. தவிர்க்க முடியாதபடி எப்படி இது கடுமையாகிவிடுகிறது என்பதை 1871ஆம் ஆண்டு வசந்தத்தில் பாரிஸ் நிகழ்ச்சிகளும் 1905 குளிர் காலத்தில் ருஷ்ய நிகழ்ச்சிகளும்[23] மிக மிகத் தெளிவாய்க் காட்டின. பாட்டாளி வர்க்க இயக்கத்தை நசுக்கும் பொருட்டு பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் ஒரு கணங்கூடத் தயங்காது தேசம்

அனைத்துக்கும் எதிரான பகைவனுடன், பிரெஞ்சு நாட்டைச் சீரழியச் செய்த அந்நியச் சேனையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. பாராளுமன்ற முறை, முதலாளித்துவ ஜனநாயகம் இவற்றின் தவிர்க்க இயலாத உள்ளார்ந்த இயக்கவியலை —சர்ச்சைக்கு வெகுஜனப் பலாத்காரத்தின் மூலம் முன்னிலும் கூர்மையான முடிவு காண வழி வகுக்கும் இதனை— —புரிந்து கொள்ளாதவர் எவராலும் இந்தப் பாராளுமன்ற முறையின் அடிப்படையில் கோட்பாட்டு வழியில் முரணின்றியும் தொழிலாளி வர்க்க வெகுஜனங்கள் இந்த ''சர்ச்சைகளில்'' வெற்றிகரப் பங்கு கொள்ள மெய்யாகவே அவர்களைத் தயார் செய்யும் விதத்திலும் பிரசாரமும் கிளர்ச்சியும் நடத்த ஒருபோதும் முடியாது. மேற்கு நாடுகளில் சமூக-சீர்திருத்த மிதவாதிகளுடனும், ருஷ்யப் புரட்சியில் மிதவாதச் சீர்திருத்தவாதிகளுடனும் (காடேட்டுகள்[24]) செய்து கொள்ளப்பட்ட கூட்டணிகள், ஒப்பந்தங்கள், இணைப்புகள் இவற்றின் அனுபவமானது, வெகுஜனங்களுடைய உணர்வை மழுங்கடிக்கவே இந்த ஒப்பந்தங்கள் உதவுகின்றன, போராடும் வீரர்களை அவை சிறிதும் போராடும் ஆற்றலற்ற, மிகுந்த ஊசலாட்டமும் துரோகத் தன்மையும் கொண்டவர்களுடன் இணையச் செய்து, வெகுஜனங்களுடைய போராட்டத்தின் மெய்யான முக்கியத்துவத்தைப் பலவீனப்படுத்துகின்றனவே அன்றி அதனை உயர்த்தவில்லை என்பதை ஐயந்திரிபற நிரூபித்துக் காட்டியுள்ளது. பிரான்சில் மில்லிரண்டிசம்[25]—விரிவான, மெய்யாகவே தேச அளவில் திருத்தல்வாத அரசியல் போர்த்தந்திரத்தைக் கையாளுவதில் மிகப் பெரிய முயற்சியான இது—உலகெங்கணும் பாட்டாளி வர்க்கம் எந்நாளும் மறக்க முடியாத வகையில் திருத்தல்வாதம் குறித்து நடைமுறை வாயிலான ஒரு மதிப்பீட்டை அளித்திருக்கிறது.

சோஷலிச இயக்கத்தின் இறுதி நோக்கம் குறித்து திருத்தல்வாதம் அனுசரிக்கும் போக்கு அதன் பொருளாதார, அரசியல் போக்குகளுடன் சேர்ந்து அதன் முழு உருவையும் பூர்த்தி செய்து காட்டும் இயற்கையான நிரப்புக் கூறுகும். ''இயக்கமே யாவும், இறுதி நோக்கம் ஒரு பொருட்டல்ல''— பெர்ன்ஷ்டைனுடைய இந்தத் தாரகமந்திரம் நீண்டபல வியாக்

கியானங்களைக் காட்டிலும் சிறப்பாய்த் திருத்தல்வாதத்தின் உட்பொருளைத் தெரிவிக்கிறது. தனது நடத்தையைச் சந்தர்ப்பத்துக்குச் சந்தர்ப்பம் மாற்றி நிர்ணயித்துக் கொள்ளுதல், அன்றன்றைக்குமான நிகழ்ச்சிகளுக்கும் அற்ப விவகார அரசியலின் திருப்பங்களுக்கும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதல், பாட்டாளி வர்க்கத்தின் தலையாய நலன்களையும் முதலாளித்துவ அமைப்பு அனைத்தின், முதலாளித்துவப் பரிணமம் அனைத்தின் அடிப்படைக் கூறுகளையும் மறந்துவிடுதல், இந்தத் தலையாய நலன்களை அந்தந்த தருணத்திற்குரிய மெய்யான அல்லது கற்பிதமான நலன்களுக்காகப் பலியிடுதல்—இவையேதான் திருத்தல்வாதத்தின் கொள்கை. இந்தக் கொள்கையின் தன்மையிலிருந்தே வெளிப்படையாய்ப் பெறப்படுவது என்னவெனில், இது எண்ணிலடங்காப் பல்வேறு வடிவங்களை ஏற்கும் என்பதும், ஓரளவுக்கோ பெருமளவுக்கோ ''புதுமையான'' ஒவ்வொரு பிரச்சினையும் நிகழ்ச்சிகளில் ஓரளவுக்கோ பெருமளவுக்கோ எதிர்பாராத, முன்னறியாத ஒவ்வொரு திருப்பமும்—அடிப்படை வளர்ச்சித் திசையை அது மிகச் சொற்ப அளவுக்கு மட்டுமேதான், மிகமிகச் சொற்ப காலத்துக்கேதான் மாற்றுகிறது என்றாலுங்கூட—தவிர்க்க முடியாத வகையில் ஏதேனும் ஒரு வகைத் திருத்தல்வாதத்தை எப்பொழுதும் தோற்றுவிக்கவே செய்யும் என்பதும்தான்.

திருத்தல்வாதம் தவிர்க்க முடியாததாய் இருப்பதற்குத் தற்கால சமுதாயத்தில் அதற்குள்ள வர்க்க வேர்கள்தான் காரணம். திருத்தல்வாதம் ஒரு சர்வதேச நிகழ்ச்சிப்போக்கு. ஜெர்மனியில் வைதிகவாதிகளுக்கும்[26] பெர்ன்ஷ்டைனியர்களுக்கும், பிரான்சில் கெட்டிஸ்டுகளுக்கும்[27] மொரேசிஸ்டுகளுக்கும்[28] (தற்போது இன்னும் முக்கியமாய் புருசிஸ்டுகளுக்கும்), கிரேட் பிரிட்டனில் சமூக-ஜனநாயகச் சம்மேளனத்துக்கும் சுயேச்சைத் தொழிற் கட்சிக்கும்,[29] பெல்ஜியத்தில் புருக்கேருக்கும் வன்டெர்வேல்டேக்கும், இத்தாலியில் முழுமையாளர்களுக்கும்[30] சீர்திருத்தவாதிகளுக்கும், ருஷ்யாவில் போல்ஷிவிக்குகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் இடையிலான உறவுநிலை இந்நாடுகள் யாவற்றின் தற்போதைய நிலையில் இருந்துவரும் மிகப் பல்வேறுபட்ட தேசிய நிலைமைகளை

யும் வரலாற்றுக் கூறுகளையும் மீறி, சாராம்சத்தில் எங்கும் ஒன்றேபோல் இருக்கிறது; சிறிதளவேனும் தகவல் தெரிந்த சிந்தனை ஆற்றல் கொண்ட எந்த சோஷலிஸ்டுக்கும் இது குறித்துக் கடுகளவும் சந்தேகம் இருக்க முடியாது. உண்மையில் இன்றைய சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தினுள் நிலவும் ''பிரிவினை'' தற்போது உலகின் பல்வேறு நாடுகள் யாவற்றிலும் **ஒரேவிதமான** வழியில்தான் போய்க் கொண்டிருக்கிறது. முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு நாடுகளிலும் பல்வேறுபட்ட போக்குகள் சர்வதேச சோஷலிஸ்டு இயக்கம் ஒன்றினுள் போராடிக் கொண்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் இன்றைய நிலைமை பிரம்மாண்டமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்குச் சான்று பகர்கிறது. லத்தீனிய நாடுகளில் ''புரட்சிகர சிண்டிக்கலிசமாய்''[31] உருவாகியுள்ள அந்த ''இடதுசாரியிலிருந்தான திருத்தல்வாதமுங்'' கூடத் தன்னை மார்க்சியத்துக்குத் தகவமைத்து, மார்க்சியத்தைத் ''திருத்தி வருகிறது'': இத்தாலியில் லப்ரியோலாவும் பிரான்சில் லாகார்டேலும் தவறுகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்சின் நிலையிலிருந்து சரியாய்ப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்சின் நிலைக்கு அடிக்கடி வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சந்தர்ப்பவாதத் திருத்தல்வாதத்தைப் போல அதே அளவுக்கு வளர்ச்சியடையாது இருந்து வரும் **இந்தத்** திருத்தல்வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தை இங்கு நாம் பகுத்தாராய்வதற்கில்லை. இந்தத் திருத்தல்வாதம் இன்னமும் சர்வதேச நிகழ்ச்சிப்போக்கு ஆகவில்லை, எந்தவொரு நாட்டிலும் சோஷலிஸ்டுக் கட்சியுடன் இன்னமும் அது எந்தவொரு பெரிய நடைமுறைப் போராட்டத்தின் சோதனையையும் கண்டதில்லை. ஆகவே மேலே சித்தரிக்கப்பட்ட ''வலதுசாரியிலிருந்தான திருத்தல்வாதத்தைப்'' பரிசீலிப்பதுடன் நாம் நிறுத்திக் கொள்கிறோம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாததாய் இருப்பதன் மூலகாரணம் என்ன? தேசியத் தனி இயல்புகளிலும் முதலாளித்துவ வளர்ச்சியின் அளவுகளிலும் இருக்கும் வேறுபாடுகளைக் காட்டிலும் இது ஆழமுடையதாய் இருப்பது ஏன்? ஏனெனில் ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டி

லும் பாட்டாளி வர்க்கத்துடன் கூடவே விரிவான குட்டிபூர் ஷுவாப் பகுதியோர், சிறு உடைமையாளர் பகுதியோர் எப் பொழுதுமே இருந்து வருகிறார்கள். முதலாளித்துவம் சிறுவீத உற்பத்தியிலிருந்துதான் தோன்றியது, இடையறாது தோன்றிக் கொண்டும் இருக்கிறது. முதலாளித்துவம் தவிர்க்க முடியாதபடி மீண்டும் மீண்டும் பல புதிய ''மத்தியதரப் பகுதிகளை'' (ஆலைகளை அண்டிப் பிழைக்கும் தொழிலகங்கள், வீட்டுப் பணித்துறை, சைக்கிள், மோட்டார் தொழில்களைப் போன்ற பெருந் தொழிற்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய நாடெங்கிலும் சிதறிக் கிடக்கும் சிறு தொழி லகங்கள், இன்ன பிற) தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் புதிய சிறு உற்பத்தியாளர்கள் இதே போலத் தவிர்க்க முடியாதபடித் திரும்பவும் பாட்டாளி வர்க்க அணிகளுக்குத் தள்ளப்பட்டுவிடுகிறார்கள். விரிவான தொழிலாளர் கட்சி களின் அணிகளில் குட்டிபூர்ஷுவா உலகக் கண்ணோட்டம் திரும்பத் திரும்பத் தலைதூக்குவது இயற்கையே. பாட்டாளி வர்க்கப் புரட்சியால் கதி மாற்றங்கள் ஏற்படுகின்ற வரையில் இது இயற்கையே. அதுவரை எப்பொழுதும் இப்படியே தான் நடைபெறும். ஏனெனில் இத்தகைய ஒரு புரட்சியை உண்டாக்க மக்கள் தொகையில் பெருவாரியானோர் ''அறவே'' பாட்டாளி வர்க்கத்தவராக்கப்படுவது அவசியமென நினைப்பது மிகப் பெரும் தவறாகும். இப்பொழுது அடிக்கடி நாம் சித்தாந்தத் துறையில் மட்டும் அனுபவித்து வருகின்ற வை, அதாவது மார்க்சுக்குத் தத்துவார்த்தத் திருத்தங்கள் செய்வது குறித்த சர்ச்சைகள்— நடைமுறையில் தற்போது தொழிலாளர் இயக்கத்தின் தனிப்பட்ட துணைப் பிரச்சினை கள் குறித்து மட்டும் திருத்தல்வாதிகளுடனான போர்த்தந் திரக் கருத்து வேறுபாடுகளாகவும் அவற்றின் அடிப்படை யிலான பிளவுகளாகவும் தலைதூக்குகின்றவை—பாட்டாளி வர்க்கப் புரட்சியானது சர்ச்சைக்குரிய எல்லாப் பிரச்சினை களையும் கூர்மையாக்கிவிடும்போதும், வெகுஜனங்களின் நடத் தையை நிர்ணயிப்பதில் மிகுந்த உடனடி முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் பற்றிய எல்லாக் கருத்து வேறுபாடுகளை யும் ஒன்றுகுவியச் செய்யும்போதும், மும்முரமான போராட் டத்துக்கிடையில் நண்பர்களிடமிருந்து பகைவர்களை இனங்

கண்டு கொள்வதையும் முடிவு கட்டும்படியான விதத்தில் பகை வனுக்கு அடி கொடுக்கும் பொருட்டு மோசமான கூட்டாளி களை விலக்கித் தள்ளுவதையும் அவசியமாக்கிவிடும்போதும் ஒப்பிட முடியாத மிகப் பெரிய அளவிலே வருங் காலத்தில் தொழிலாளி வர்க்கம் நிச்சயம் அனுபவிக்க வேண்டியிருக் கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் திருத்தல் வாதத்தை எதிர்த்துப் புரட்சிகர மார்க்சியம் நடத்தும் சித்தாந்தப் போராட்டமானது, குட்டிபூர்ஷுவா அற்ப வாதிகளின் எல்லா ஊசலாட்டங்களையும் பலவீனங்களையும் மீறித் தனது இலட்சியத்தின் முழுநிறை வெற்றியை நோக்கி முன்னேறி வீறு நடைபோடும் பாட்டாளி வர்க்கத்தினுடைய மாபெரும் புரட்சிப் போர்களின் பீடிகையே ஆகும்.

1908 மார்ச் பிற்பாதியில்—
ஏப்ரல் 3 (16)க்குப்
பிற்படாமல்—எழுதப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 17,
பக்கங்கள் 15-26

1908 செப்டம்பர் 25க்கும்
அக்டோபர் 2க்கும் (அக்டோபர்
8க்கும் 15க்கும்) இடையில்
கார்ல் மார்க்ஸ் (1818—1883),
எஸ். பீட்டர்ஸ்பர்க் என்னும்
திரட்டில் வெளிவந்தது

ஒப்பம்: **விளா. இலியின்**

வேஹி[32] சம்பந்தமாய்

அரசியல்சட்ட-ஜனநாயகக் கட்சியின் செல்வாக்கு மிகுந்த பொது விவகார எழுத்தாளர்களது கட்டுரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட பிரபல கருத்துக்கோவையாகிய **வேஹி** காலத்தின் மெய்யான ஓர் அறிகுறியாய்த் திகழ்கிறது: இந்தக் கருத்துக்கோவை சொற்ப காலத்துக்குள் பல பதிப்புகளில் வெளியாகி, பிற்போக்குப் பத்திரிகைகள் யாவற்றாலும் பேருவகையொடு வரவேற்கப்பட்டிருக்கிறது. **வேஹி**யில் அளவுமீறி அருவருக்கத்தக்கவையாய் இருக்கும் குறிப்பிட்ட வாசகங்களைக் காடேட்டுச் செய்தியேடுகள் ''திருத்திச் சரி செய்ய'' எவ்வளவுதான் பாடுபட்ட போதிலும், இந்தக் கருத்துக்கோவையைச் சில காடேட்டுகள்—இவர்கள் அரசியல்சட்ட-ஜனநாயகக் கட்சியின் ஒட்டுமொத்தமான கொள்கையை மாற்றவோ திருத்தவோ சிறிதும் வக்கற்றவர்கள், அல்லது இந்தக் கொள்கையின் மெய்யான உட்பொருள் முக்கியத்துவம் குறித்து மக்கள் திரளினரை ஏமாற்றும் நோக்கமுடையவர்கள்—எவ்வளவுதான் நிராகரித்த போதிலும், தற்காலக் காடேட்டியத்தின் ஐயப்பாட்டுக்கு இடமில்லாத சாரப்பொருளை ''**வேஹி**'' **வெளியிட்டுள்ளது** என்பது மறுக்க முடியாத உண்மையாகும். காடேட்டுகளின் கட்சி **வேஹி**யின் கட்சியே ஆகும்.

வெகுஜனங்களுடைய அரசியல் உணர்வையும் வர்க்க உணர்வையும் யாவற்றுக்கும் மேலாய் மதித்துப் போற்றும் தொழிலாளி வர்க்க ஜனநாயகவாதிகள் **வேஹி**யை வரவேற்க வேண்டும்—காடேட்டுகளுடைய அரசியல் போக்கின் சாரப்

பொருள், காடேட்டுகளுடைய சித்தாந்தத் தலைவர்களின் வாயிலாய் அம்பலமாக்கப்படும் ஒன்றாய் வரவேற்க வேண்டும். **வேஹி**யை எழுதியிருக்கும் கனவான்கள் வருமாறு: பெர்தியாயெவ், புல்காக்கவ், கெர்ஷன்சன், கிஸ்தியக்கோவ்ஸ்கி, ஸ்துரூவே, ஃபிரான்க், இஸ்கோயெவ். பிரபல சட்டமன்ற உறுப்பினர்களும், கொள்கை துறந்தோடிய பிரபல ஓடுகாலிகளும், பிரபல காடேட்டுகளுமாகிய இவர்களது பெயர்களைக் குறிப்பிட்டாலே போதும், மேற்கொண்டு விளக்கம் வேண்டியதில்லை. **வேஹி**யின் கட்டுரை ஆசிரியர்கள் ஒரு முழு சமூகப் போக்கின் மெய்யான சித்தாந்தத் தலைவர்களாய் நிலை ஏற்றுப் பேசுகிறார்கள். தத்துவவியல், மதம், அரசியல், பொது விவகார எழுத்துத் துறை ஆகியவை சம்பந்தமான பிரச்சினைகளும், விடுதலை இயக்கம் அனைத்தையும் மற்றும் ருஷ்ய ஜனநாயகத்தின் முழு வரலாற்றையும் பற்றிய மதிப்பீடுகளும் அடங்கிய சுருக்கமான உருவறை கொண்ட ஒரு முழுமையான கருத்துக் களஞ்சியத்தை இவர்கள் நமக்கு அளிக்கின்றனர். **வேஹி**க்கு ''ருஷ்ய அறிவுத்துறையினர் பற்றிய கட்டுரைத் திரட்டு'' என்னும் துணைத் தலைப்பை அளிப்பதன் மூலம், இவ்வாசிரியர்கள் தமது வெளியீட்டின் மெய்யான விவரப் பொருளைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். ஏனெனில், இவர்களுடைய எழுத்துக்களில் ''அறிவுத்துறையினர்'' உண்மையில் ருஷ்ய ஜனநாயகம் அனைத்தின், ருஷ்ய விடுதலை இயக்கம் அனைத்தின் ஆன்மீகத் தலைவர்களாகவும் ஆதர்ச புருஷர்களாகவும் பறையறைவோராகவும் தோன்றக் காண்கிறோம். ருஷ்ய விடுதலை இயக்கத்திடமிருந்து, அதன் பிரதான குறிக்கோள்கள், அடிப்படை மரபுகள் யாவற்றிலுமிருந்து ருஷ்யக் காடேட்டியமும் பொதுவாய் ருஷ்ய மிதவாதமும் **அறவே முறித்துக் கொண்டு** ஓடும் பாதையில் **வேஹி** மிகவும் முக்கியமான ஒரு மைல்கல்லாய் விளங்குகிறது.

1

மிதவாத ஓடுகாலித்தனத்தின் இந்த கருத்துக் களஞ்சியம் பின்வரும் மூன்று பிரதான விவரப் பொருள்கள் உள்ளடங்கியது: *1)* ருஷ்ய (மற்றும் சர்வதேச) ஜனநாயகத்தின்

உலகக் கண்ணோட்டம் அனைத்துக்குமுரிய சித்தாந்தக் கோட்பாடுகளுக்கு எதிரான போராட்டம்; 2) அண்மை ஆண்டுகளின் விடுதலை இயக்கத்தை நிராகரித்தலும் நிந்தித்தலும்; 3) அக்டோபரிஸ்டு[33] முதலாளித்துவ வர்க்கமும், பழைய ஆட்சியும், பொதுவில் பழைய ருஷ்யா அனைத்தும் குறித்து தனது ''அடிவருடி'' மனோபாவத்தையும் (மற்றும் இதற்குகந்த ''அடிவருடிக்'' கொள்கையையும்) பகிரங்கமாய்ப் பிரகடனம் செய்தல்.

வேஹியின் கட்டுரை ஆசிரியர்கள் ''அறிவுத்துறையினரது'' உலகக் கண்ணோட்டத்தின் தத்துவவியல் அடிப்படைகளிலிருந்து தொடங்குகிறார்கள். பொருள்முதல்வாதத்தின் மீதான கடும் எதிர்ப்பில் இப்புத்தகம் முழுக்க முழுக்க ஊறித் திளைக்கிறது. பொருள்முதல்வாதம் என்பது வேறு எதுவுமல்ல, வறட்டுச் சூத்திரவாதம்தான், அப்பாலியல்தான் (metaphysics), ''மிகமிக ஆரம்ப நிலையாகிய, கீழ்த்தரவடிவமாகிய மெய் விளக்கம்தான்'' (பக்கம் 4—மேற்கோள் ஆதாரங்கள் **வேஹி**யின் முதற் பதிப்பைக் குறிப்பவை) என்று கூறப்படுகிறது. நேர்காட்சிவாதம் (positivism) கண்டனம் செய்யப்படுகிறது, ஏனென்றால் ''நமக்கு'' (அதாவது, **வேஹி** தகர்த்து நிர்மூலமாக்கும் ருஷ்ய ''அறிவுத்துறையினருக்கு'') அது ''பொருள்முதல்வாத அப்பாலியியலுக்கு முழுதொத்தாய்ச்'' செய்யப்பட்டிருந்தது, அல்லது ''முழுக்க முழுக்க பொருள்முதல்வாத மனோபாவத்துடன்'' விளக்கப்பட்டிருந்தது (15); ஆனால் ''எந்த இறைஞானியும் (mystic) தெய்வ நம்பிக்கையாளரும் விஞ்ஞான நேர்காட்சிவாதத்தையும் விஞ்ஞானத்தையும் மறுக்கவே மாட்டார்'' (11). சிரிக்க வேண்டாம்!''கருத்துமுதல்வாத, சமய இறைஞானப் போக்குகள் மீது பகைமை பாராட்டப்பட்டது'' (6) — இவ்வாறு குற்றம் சாட்டி ''அறிவுத்துறையினரை'' **வேஹி** தாக்குகிறது. ''செர்னிஷேவ்ஸ்கியுடன் ஒப்பிடுகையில், எப்படியும் யுர்க்கேவிச் மெய்யான தத்துவவியலாளரே ஆவார்'' (4).

இப்படிப்பட்ட கருத்தோட்டம் கொண்ட **வேஹி** இயல்பாகவே,''அறிவுத்துறையினரது'' நாத்திகம் குறித்து ஆத்திரமுற்று ஓயாது சீறுகின்றது; மதத்துக்கு உரியதான உலகக் கண்ணோட்டத்தை மீட்டமைத்து நிலைநாட்ட பகீரதப் பிரயத்

தனம் செய்கிறது. தத்துவவியலாளர் அல்ல என்பதாய்க் கூறி செர்னிஷேவ்ஸ்கியை தகர்த்தபின், **வேஹி**யானது, பொது விவகார எழுத்தாளர் அல்ல என்பதாய்ச் சொல்லி பெலீன்ஸ்கியைத் தகர்திட முற்படுவது முற்றிலும் இயற்கையே. பெலீன்ஸ்கியும் தாப்ரலியூபவும் செர்னிஷேவ்ஸ்கியும் ''அறிவுத்துறையினரின்'' தலைவர்களாய் இருந்தவர்கள் (134, 56, 32, 17, மற்றும் பல இடங்கள்). சாதாயெவும் விளதீமிர் சலவியோவும் தாஸ்தயேவ்ஸ்கியும் ''அறிவுத்துறையினர் அல்லவே அல்ல''. முன்னவர்கள், **வேஹி** எதிர்த்து ஜீவ மரணப் போராட்டம் நடத்தும் ஒரு போக்கின் தலைவர்களாய் இருந்தவர்கள். பின்னவர்கள் இன்று **வேஹி** எவற்றை ஆதரித்து நிற்கிறதோ அதே விஷயங்களை ''அயராது வலியுறுத்தி வந்தனர்'', ஆனால் ''அவர்களுக்குச் செவி செய்க்காமல், அறிவுத்துறையினர் அவர்களிடமிருந்து ஒதுங்கிச் சென்றுவிட்டனர்'' என்று **வேஹி**யின் முன்னுரை கூறுகிறது.

வேஹி தாக்குவது ''அறிவுத்துறையினரை'' அல்ல என்பதை மேற்கூறியவற்றிலிருந்து வாசகர் கண்டு கொண்டிருப்பார். ''அறிவுத்துறையினர்'' என்பதாய்ப் பேசப்படுவது செயற்கையானதும், தவறான எண்ணம் உண்டாக்குவதுமான பதப் பிரயோகமாகும். ஜனநாயகத்தையும், ஜனநாயக உலகக் கண்ணோட்டத்தையும் எதிர்த்துதான் முழு முனையிலும் தாக்குதல் நடத்தப்படுகிறது. ''அரசியல் சட்டம்'' என்பதாகவும் ''ஜனநாயகம்'' என்பதாகவும் பெயர் சூட்டிக் கொண்டு தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளும் ஒரு கட்சியின் சித்தாந்தத் தலைவர்களுக்கு அவையவற்றையும் அவற்றின் உண்மையான பெயர்களைக் கொண்டு அழைக்கச் சங்கடமாய் இருப்பதால், பதங்களை **மாஸ்கோவ்ஸ்கியெ வேதமொஸ்தி**[34] யிடமிருந்து கடன் வாங்கிப் பிரயோகிக்கின்றனர். அவர்கள் ஒன்றும் ஜனநாயகத்தைத் துறந்துவிடவில்லை (அபாண்டமான அவதூறு அல்லவா இது!), ''அறிவுத்துறைவாதத்தைதான்'' துறக்கின்றனர்.

கோகலுக்கு எழுதப்பட்ட பெலீன்ஸ்கி கடிதம் ''அறிவுத்துறைவாத உணர்ச்சி வயப்பாட்டின் ஆவேசமான ஒப்பற்றதொரு வெளிப்பாடாகும்'' (56). ''பெலீன்ஸ்கிக்குப் பிற்பாடு, வாழ்க்கையைப் புரிந்து கொள்வதென்னும்

அர்த்தத்தில், நமது பொது விவகார எழுத்துத் துறை வரலாறு கிலியூட்டும் கனவேபாகும்'' (82).

ரொம்ப சரிதான். பண்ணையடிமை முறையின் மீது பண்ணையடிமை விவசாயிகளுக்குள்ள பகைமை ''அறிவுத் துறைவாத'' உணர்ச்சி வயப்பாடுதான் போலும். தேசமக்களின் மிக விரிவான பகுதியோர் ருஷ்ய வாழ்வின் கட்டமைப்பு முழுதும் நிலவியுள்ள பிரபுத்துவ மீதமிச்சங்களை எதிர்த்து 1861 முதல் 1905 வரையில் கண்டனம் செய்தும் போராடியும் வந்திருப்பதன் வரலாறு ''கிலியூட்டும் கனவுதான்'' போலும். அல்லது, கோகலுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் பெலீன்ஸ்கி வெளியிடும் உணர்ச்சிகள் நமது விவேகமிக்க, கல்வி ஞானம் படைத்த கட்டுரை ஆசிரியர்களின் கருத்துப்படி, பண்ணையடிமை விவசாயிகளுடைய உணர்ச்சிகளைச் சார்ந்தனவாய் இருக்கவில்லையா? நமது பொது விவகார எழுத்துத் துறையின் வரலாறு பிரபுத்துவ ஒடுக்குமுறையின் மீதமிச்சங்களுக்கு எதிரான வெகுஜன ஆத்திரத்தைச் சார்ந்து இருக்கவில்லையா?

மாஸ்கோவ்ஸ்கியெ வேதமொஸ்தி ஏடு, ருஷ்ய ஜனநாயகம், எப்படியும் பெலீன்ஸ்கியின் காலம் முதலாய், மக்களது ஆதார உரிமைகளுக்கான, பிரபுத்துவத்தின் நிறுவன அமைப்புகளால் ஒடுக்கப்பட்ட இவ்வுரிமைகளுக்கான போராட்டத்தில் தேசமக்களின் மிக விரிவான பகுதிகளது நலன்களை எவ்வகையிலும் பிரதிபலிக்கவில்லை என்பதாகவும், ''அறிவுத் துறைவாத உணர்ச்சி வயப்பாட்டையே'' பிரதிபலிக்கிறது என்பதாகவும் நிரூபிக்க எப்பொழுதுமே முயன்று வந்திருக்கிறது.

தத்துவவியலிலும் சரி, பொது விவகார எழுத்துத் துறையிலும் சரி, **மாஸ்கோவ்ஸ்கியெ வேதமொஸ்தி** ஏட்டின் அதே வேலைத்திட்டத்தைத்தான் வேஹியும் கொண்டிருக்கிறது. மிதவாத, கொள்கைத் துறப்பு ஒடுகாலிகள் தத்துவவியலில் மட்டும் முழு உண்மையையும் கூறிவிடுவதென்று, தமது வேலைத்திட்டம் **பூராவையும்** (பொருள்முதல்வாதத்தின் மீதும் நேர்காட்சிவாதத்துக்குப் பொருள்முதல்வாத விளக்கமளிப்பதன் மீதும் போர் தொடுத்தல், மாயாவாதத்தையும் மாயாவாத உலகக் கண்ணோட்டத்தையும் மீட்டமைத்தல்)

வெளிப்படுத்திக் கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டு விட்டனர்; ஆனால் பொது விவகார விவரப் பொருள்களில் சொற்புரட்டுச் செய்கின்றனர், மூடிமறைக்கின்றனர், வேஷம் போடுகின்றனர். ஜனநாயகத்தின் மிகவும் அடிப்படையான கருத்துக்களிலிருந்து, மிகவும் ஆதாரமான ஜனநாயகப் போக்குகளிலிருந்து அவர்கள் முறித்துக் கொண்டுவிட்டனர், ஆனால் ''அறிவுத்துறைவாத''த்திடமிருந்து மட்டுமே முறித்துக் கொள்வதாய்ப் பாசாங்கு செய்கிறார்கள். மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதிலிருந்து தீர்மானமாய்த் திசை திரும்பி, மக்களுக்குப் பகைமையான நிறுவன அமைப்பு களைப் பாதுகாக்கும் பாதையிலே இறங்கிவிட்டனர். ஆயினும் மிதவாத அரசியலாளர்கள் ''ஜனநாயகவாதிகள்'' என்னும் பெயரை விடாது இருத்திக் கொள்ள விரும்புகின்றனர்.

கோகலுக்கு எழுதப்பட்ட பெலீன்ஸ்கியின் கடிதம் குறித்தும் ருஷ்ய பொது விவகார எழுத்துத் துறையின் வரலாறு குறித்தும் கையாளப்படும் அதே தந்திரம், அண்மைக் கால இயக்கத்தின் வரலாறு குறித்தும் கையாளப்படுகிறது.

2

உண்மை என்னவெனில், ஜனநாயக இயக்கத்தின் குரலாய்த் திகழ்ந்த அறிவுத்துறையினரை மட்டுமே **வேஹி** தாக்குகிறது; இந்த இயக்கத்தில் அவர்கள் மெய்யான பங்கு கொண்டவர்கள் என்பதை எது காட்டிற்றோ அதற்காக மட்டுமே அவர்களைத் தாக்குகிறது. இந்தத் ''தலைமறைவான குறுங்குழுவினர் பட்டப் பகலில் பகிரங்கமாய் வெளிப்பட்டு, ஏராளமான சீடர்களையும் பெற்றுக் குறிப்பிட்ட ஒரு காலத்தில் சித்தாந்தத் துறையில் செல்வாக்குடையோரும், ஏன் மெய்யாகவே சக்தி வாய்ந்தோரும் ஆகிவிட்டனர்'' *(176)* என்பதனால் தான் **வேஹி** இந்த அறிவுத்துறையினரை ஆத்திரமாய்த் தாக்குகிறது. ''அறிவுத்துறையினர்'' தலைமறைவான குறுங்குழுவாய் மட்டும் இருந்து வந்த வரை, ஏராளமான சீடர்களைப் பெற்று மெய்யாகவே சக்தி வாய்ந்தோராகிவிடாமல் இருந்த வரை, மிதவாதிகள் அவர்களுக்கு

அனுதாபம் தெரிவித்தனர், சில சமயம் இரகசியமாய் அவர்களுக்கு ஆதரவளித்தனர். அதாவது, ஜனநாயகம் மெய்யான வெகுஜனங்களை இயங்கச் செய்யாதிருந்த வரை மிதவாதிகள் ஜனநாயகத்தின்பால் அனுதாபம் கொண்டோராய் இருந்தார்கள். ஏனெனில் வெகுஜனங்கள் ஈர்க்கப்படாத வரை ஜனநாயகமானது மிதவாதத்தின் தன்னல நோக்கங்களுக்கு அனுசரணையாகவே இருந்தது; மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தின் மேல் பகுதியோர் அதிகாரத்தை நோக்கி கொஞ்சம் அருகாமையில் ஏறிச் செல்வதற்கு அது உதவியாகவே இருந்தது. ஜனநாயகமானது வெகுஜனங்களை ஈர்த்துக் கொண்டதும், வெகுஜனங்கள் தமது சொந்த நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளவும், தமது சொந்த நலன்களை நிலை நாட்டிக் கொள்ளவும் முற்பட்டதும், மிதவாதி ஜனநாயகத்திடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டுவிட்டார். ஜனநாயக ''அறிவுத்துறையினர்'' மீதான கண்டனக் கூச்சல்களின் மறைவில், காடேட்டுகள் நடைமுறையில் **வெகுஜனங்களது ஜனநாயக இயக்கத்தை எதிர்த்து யுத்தம் புரிகின்றனர்.** இவ்வுண்மையை வெளிப்படுத்தும் எண்ணிலடங்காத, தெட்டத் தெளிவான சான்றுகள் **வேஹி**யில் காணக் கிடக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில் பிரெஞ்சு நாடு கண்ட மாபெரும் சமூக இயக்கமானது, ''தனது ஆன்மீக ஆற்றல்கள் யாவும் வெளிப்படும்படி போதிய அளவு நீடித்து நடைபெற்ற அறிவுத்துறைவாத புரட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு'' (57) என்பதாய் **வேஹி** பறைசாற்றுவது இந்தச் சான்றுகளில் ஒன்றாகும்.

பிரமாதம், இல்லையா? பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு இயக்கம்—கவனியுங்கள் இதை—மிகவும் தீர்க்கமான, மிகவும் விரிவான வடிவிலாகிய வெகுஜன ஜனநாயக இயக்கத்திற்கு ஓர் உதாரணமல்லவாம்; மாறாக, ''அறிவுத்துறைவாதப்'' புரட்சிக்குரிய உதாரணமாம்! ஜனநாயகக் குறிக்கோள்கள் உலகில் எங்குமே ஒருபடித்தான ரகத்தில் அமைந்த இயக்கம் இல்லாமல் சாதிக்கப்பட்டதில்லை ஆதலால், மிதவாதத்தின் சித்தாந்தத் தலைவர்கள் ஜனநாயகத்திலிருந்து முறித்துக் கொள்கிறார்கள் என்பது தெட்டத்தெளிவாய்த் தெரிகிறது.

ருஷ்ய அறிவுத்துறையினரின் எந்த இயல்பை வேஹி பழித்துத் தூற்றுகிறதோ அந்த இயல்பு, எந்த ஜனநாயக இயக்கத்துக்குமுரிய அத்தியாவசிய உடனிணைவும் வெளிப்பாடுமே ஆகும். ''அறிவுத்துறைவாதக் கருத்துக்களின் அரசியல் தீவிரப் போக்கை வெகுஜன உணர்ச்சிகளின்* சமூகத் தீவிரப் போக்குடன் ஒன்றுகலக்கச் செய்தல் வியக்கத்தக்க வேகத்தில் சாதிக்கப்பட்டது''(141)—இது''வெறும் அரசியல் தவறு மட்டுமல்ல, போர்த்தந்திரப் பிழை மட்டுமல்ல. இங்கு நிகழ்ந்தது ஒழுக்கநெறியிலான தவறுகும்.'' தியாகவதைக்கு உள்ளாகும் வெகுஜனத் திரள்கள் இல்லாமல் ஜனநாயக இயக்கம் இருக்க முடியாது. ஜனநாயக இயக்கத்தை வெறும் ''கலவரத்திலிருந்து'' வித்தியாசப்படுத்துவது என்னவெனில், ஜனநாயக இயக்கம் குறிப்பிட்ட சில தீவிர அரசியல் கருத்துக்களை முன்வைத்து அவற்றைப் போர்க் கோஷமாய்க் கொண்டு நடைபெறுகிறது என்பதுதான். ஜனநாயக இயக்கங்களும் ஜனநாயகக் கருத்துக்களும் அரசியல் வழியில் தவறுனவை என்பது மட்டுமல்லவாம், போர்த்தந்திர வழியில் தகாதவை மட்டுமல்லவாம், ஒழுக்கநெறியில் பாவமானவையாம்—இதுதான் சாராம்சத்தில் வேஹியின் மெய்யான அபிப்பிராயம். இது பபெதனேஸ்த்செவின் மெய்யான அபிப்பிராயங்களிலிருந்து கடுகளவும் வித்தியாசப்படவில்லை. ஸ்துரூவேயும் இஸ்கோயெவும் ஃபிரான்குமை இவர்களைச் சேர்ந்த ஏனையோரும் என்ன கூறுகிறார்களோ, அதையேதான் பபெதனேஸ்த்செவ்மேலும் நேர்மையாகவும் ஒளிவுமறைவின்றியும் கூறினர்.

வேஹியானது வெறுக்கத்தக்கவையான இந்த ''அறிவுத்துறைவாத''க் கருத்துக்களின் உட்பொருளை மேலும் துல்லியமாய் வரையறுத்துக் கூற முற்படுகையில், இயல்பாகவே அது பொதுவாய் ''இடதுசாரிக்'' கருத்துக்கள் குறித்தும், குறிப்பாய் நரோத்னிக் கருத்துக்களையும் மார்க்சியக் கருத்துக்களையும் பற்றிப் பேசுகின்றது. நரோத்னிக்குகள்

---

* ''தியாகவதைக்கு உள்ளாகும் வெகுஜனத் திரள்களில்'' என்பதான தொடர் அதே பக்கத்தில் இரண்டு வரிகள் தள்ளி கையாளப்படுகிறது.

''விவசாயிகள்பால் போலியான மோகம்''கொண்டிருப்பதாகவும், மார்க்சியவாதிகள் ''பாட்டாளி வர்க்கத்தின்பால்'' (9) இதே போலப் போலியான மோகம் கொண்டிருப்பதாகவும் குற்றம் சாட்டுகிறது. இரு சாராரும் ''மக்களைத் தெய்வமாய்ப் பூஜிப்பவர்கள்'' என்பதாய்க் கூறப்பட்டு, தகர்த்துத்தவிடுபொடியாக்கப்படுகின்றனர் (59, 59-60). அருவருக்கத்தக்க ''அறிவுத்துறையாளருக்கு'' ''மக்கள்தான் தெய்வம், பெரும்பான்மையோரின் இன்ப வாழ்வு ஒன்றேதான் குறிக்கோள்'' (159). ''நாத்திக இடதுசாரிக் கூட்டின் சூரூவளிச் சொற்பெருக்கு'' (29)—இதுதான் இரண்டாவது டூமாவில்[35] காடேட்டு புல்காக்கவின் நினைவில் ஆழப்பதிந்து, யாவற்றையும்விட அதிகமாய் ஆத்திரம் உண்டாக்குவதாய் இருந்தது. பொதுவான காடேட்டு மனப்பாங்கினை ஏனையோரைக் காட்டிலும் ஓரளவு எடுப்பாய் புல்காக்கவ் இங்கு வெளியிட்டிருக்கிறார், காடேட்டுக் கட்சி அனைத்தாலும் போற்றிப் பாராட்டப்படும் சிந்தனைகளை எடுத்துரைத்திருக்கிறார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மிதவாதியான ஒருவருக்கு நரோத்னியத்துக்கும் மார்க்சியத்துக்குமுள்ள வேறுபாடு அடியோடு மறைந்துவிடுவது தவிர்க்க முடியாததே அன்றி, தற்செயலானதல்ல. எழுதுகிறவர் புரிந்திடும் ''தந்திரம்'' அல்ல இது (இவர் இந்த வேறுபாட்டை நன்கு அறிந்தவரே); மிதவாதத்தின் இன்றையத் தன்மையிலிருந்து தர்க்கவாத முரணின்றி பெறப்படும் வெளிப்பாடே இது. தற்சமயம் ருஷ்யாவின் மிதவாத முதலாளித்துவ வர்க்கம் அதிகமாய் அஞ்சுவதும் நஞ்சென வெறுப்பதும் தொழிலாளர்களும் விவசாயிகளுமான இரு சாராரின் ஜனநாயக இயக்கமே அன்றி, அவ்வளவாய் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிச இயக்கம் அல்ல. அதாவது, நரோத்னியத்துக்கும் மார்க்சியத்துக்கும் பொதுவானது எதுவோ அதைத்தான், இவை இரண்டும் வெகுஜனங்களை அறைகூவி அழைத்து ஜனநாயகத்துக்கு ஆதரவாய்ச் செயல்படுவதைத்தான் மிதவாத முதலாளித்துவ வர்க்கம் அதிகமாய் அஞ்சுகிறது, நஞ்சென வெறுக்கிறது. ருஷ்யாவில் மிதவாதம் தீர்மானமாய் ஜனநாயகத்துக்கு விரோதமாகிவிட்டதுதான் இன்றைய காலகட்டத்துக்குரிய குணாதிசய

மாகும். ஆகவே இயல்பாகவே மிதவாதமானது, ஜனநாயகத்தினுள் இருக்கும் பாகுபாடுகள் குறித்தோ, ஜனநாயகம் சாதிக்கப் பெறும்போது மேற்கொண்டு மலர்ந்து முன்னிலைக்கு வரப்போகும் நோக்கங்களையும் திசைவழிகளையும் வாய்ப்புகளையும் குறித்தோ கவலைப்படவில்லை.

''மக்களைத் தெய்வமாய்ப் பூஜிப்பவர்கள்'' என்பது போன்ற பல்லவிகள் **வேஹி**யில் மலிந்திருக்கின்றன. இதில் வியப்பில்லை, ஏனெனில் மக்கள்பால் அச்சங் கொண்டுவிட்ட மிதவாத முதலாளித்துவ வர்க்கத்துக்கு, ஜனநாயகவாதிகள் ''மக்களைத் தெய்வமாய்ப் பூஜிப்பவர்கள்'' என்பதாய்க் கூப்பாடு போடுவதைத் தவிர வேறு வழி இல்லை. பின்வாங்கு தலை பலத்த கொட்டு முழக்கமிட்டு மறைத்துக் கொள்வதையன்றி வேறு வழி இல்லை. உண்மை என்னவெனில், தொழிலாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் வாயிலாய்த்தான் முதல் இரு டூமாக்களிலும் தொழிலாளர், விவசாயி வெகுஜனங்களது மெய்யான நலன்களும் கோரிக்கைகளும் அபிப்பிராயங்களும் வெளியிடப்பட்டன என்பதை நேரடியாய் மறுப்பது சாத்தியமல்ல. ஆயினும் இந்த ''அறிவுத்துறையினரான'' பிரதிநிதிகள்* தான் காடேட்டுகளுக்கு ''**இடது சாரி**''**கள் மீது** அப்படி தீராத **வெறுப்பு** ஏற்படச் செய்து விட்டனர். காரணம் என்னவெனில் காடேட்டுகள் ஜனநாயகத்திலிருந்து முடிவின்றி பின்வாங்கி ஓடுவதை அவர்கள் அம்பலப்படுத்தினர். உண்மை என்னவெனில் ''நான்கு-அம்சத் தேர்தல் முறை''[36] வேண்டுமென்ற கோரிக்கையின் நியாயத்தை நேரடியாய் மறுப்பது சாத்தியமல்ல. ஆயினும் இன்றைய ருஷ்யாவில் மெய்யாகவே ஜனநாயகத் தேர்தல்களாய் இருக்கக்

---

* ''அறிவுத்துறையினர்'' என்னும் சொல்லின் சாதாரண பொருளை **வேஹி** திருத்திப் புரட்டுவது மெய்யாகவே நகைக்கத்தக்கதாய் உள்ளது. முதல் இரு டூமாக்களின் உறுப்பினர்களுடைய பட்டியலைப் பார்வையிட்டால் போதும், துருதொவீக்குகளிடையே[37] விவசாயிகள் மிகப் பெரும்பான்மையோர் இருப்பதையும், சமூக-ஜனநாயகவாதிகளிடையே தொழிலாளர்கள் மிகுதியாய் இருத்தலையும், மிகப் பெரும் பகுதியான முதலாளித்துவ அறிவுத்துறையினர் காடேட்டுகளில் ஒன்று குவிந்திருப்பதையும் உடனே காணலாம்.

கூடிய ''நான்கு-அம்ச'' முறையிலான தேர்தல்கள் மிகப் பெரும்பான்மை நிலையை துருதோவிக் உறுப்பினர்களுக்கும் அவர்களுடன்கூட தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த உறுப் பினர்களுக்கும் அளிக்கும் என்பது குறித்து, சிறிதளவேனும் நேர்மையுடைய அரசியல் தலைவர் எவருக்கும் கிஞ்சித்தும் சந்தேகம் இருக்கவில்லை.

பின் நோக்கிச் சரியும் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு, தாம் ஜனநாயகத்திலிருந்து முறித்துக் கொண்டுவிட்டதை **மாஸ்கோவ்ஸ்கியெ வேதமொஸ்தி, நோவயெ விரேம்யா**[38] ஆகியவற்றின் பதங்களாலான பல்லவிகளைக் கொண்டு மூடிமறைப்பதைத் தவிர்த்து வேறு வழி கிடை யாது. **வேஹி** கருத்துக் கோவையில் இப்படிப்பட்ட பல்லவி கள் கணக்கின்றி குவிந்திருக்கின்றன.

ஜனநாயகத்தின் தலையில் கொட்டித் தீர்க்கப்படும் பிற் போக்குவாத சகதிப் பெருக்கே **வேஹி**. ஆதலால்தான் **நோ வயெ விரேம்யா**வின் எழுத்தாளர்கள்—ரோஸனவும், மேன் ஷிக்கவும், அ. ஸ்தலீப்பினும்—ஓடோடி வந்து **வேஹி**யின் உச்சியை முகர்ந்து மெச்சிப் புகழ்கின்றனர். ஆதலால்தான் வலீனியா பிஷப் அன்தோனிய், மிதவாதத் தலைவர்களது இந்த வெளியீட்டைக் கண்டு புளகாங்கிதமடைகிறார்.

''அறிவுத்துறையாளர் மக்கள்பால் தமக்குள்ள கடமை குறித்து சிந்திக்கையில், கடமை என்னும் கோட்பாட்டின் வாயிலாய் வெளியிடப்படும் தனிப் பொறுப்புடைமை பற்றிய கருத்து அறிவுத்துறையாளராகிய தமக்கு மட்டுமின்றி மக் களுக்கும்கூட அனுசரிக்கப்பட வேண்டுமென்னும் முடிவை ஒருபோதும் வந்தடைவதில்லை'' என்கிறது **வேஹி** *(139)*. மக்களுடைய உரிமைகளும் சுதந்திரமும் விரிவடைய வேண்டி யது குறித்து சிந்திக்கும் ஜனநாயகவாதி, மக்கள்பால் மேல் வர்க்கங்களுக்குள்ள ''கடமை'' பற்றிய சொற்களைக் கொண்டு தமது சிந்தனையை வெளியிடுகின்றார். சீர்திருத்தத்துக்கு முற்பட்டதான ஒரு நாட்டில், அல்லது ஜூன் 3 ஆம் தேதி ''அரசியலமைப்''பைக்[39] கொண்ட ஒரு நாட்டில் ஆளும் வர்க்கங்களிடத்து மக்களுடைய ''பொறுப்புடைமை'' என் னும் பிரச்சினைக்கு இடமுண்டென்ற முடிவுக்கு ஜனநாய கவாதியால் ஒருபோதும் வர முடியாது, வரவும் மாட்டார்.

இப்படிப்பட்ட ''ஒரு முடிவுக்கு'' வர வேண்டுமாயின், ஜனநாயகவாதி அல்லது ஜனநாயகவாதியாய்க் கூறிக் கொள் கிறவர் புரட்சியை எதிர்க்கும் மிதவாதியாய் அறவே மாறி யாக வேண்டும்.

''தன்னல நாட்டம், தன்னுரிமையை நிலைநாட்டல்— இது வலிமைமிக்க ஒரு சக்தி; இந்த சக்திதான் மேலைய நாடு களின் முதலாளித்துவ வர்க்கத்தை தன்னுணர்வின்றியே உலகில் கடவுளின் சித்தத்தை ஈடேற்றும் மாபெரும் வலிமை வாய்ந்த கருவியாக்குகின்றது'' என்பதாய் **வேஹி**யில் படிக் கின்றோம் *(95)*. "Enrichissez vous!—செல்வந்தர் ஆகுங் கள்'' என்னும் கீர்த்தி வாய்ந்த கோஷத்தின், அல்லது ''வல்லவர் தரப்பில் பணயம் வைக்கிறோம்''[40] என்கிற நமது ருஷ்யக் கோட்பாட்டின் வாசனை வீசும் பதவுரையே அன்றி இது வேறு எதுவுமல்ல. முதலாளித்துவ வர்க்கத்தார் ஏழை களுடைய சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு உதவிய போது, இந்தப் போராட்டம் தெய்விக இலட்சியமாகுமெனப் பறைசாற்றினர். மக்களிடத்தே அச்சம் மேலிட்டு, மக் களுக்கு எதிரான எல்லா விதமான மத்திய காலத்திய முறை களையும் அவர்கள் ஆதரிக்க முற்பட்டதும், ''தன்னல நாட் டத்தையும்,'' தத்தமது செல்வ விருத்தியையும், தேசிய வெறி கொண்ட அயல் துறைக் கொள்கையையும், இன்ன பிறவற்றையும் அவர்கள் தெய்விக இலட்சியமாய்ப் பறை சாற்ற முற்பட்டனர். ஐரோப்பா எங்குமே இப்படித்தான் நடைபெற்றது. ருஷ்யாவிலும் அப்படியே திரும்பவும் நடை பெறுகின்றது.

''அக்டோபர் 17 அரசாணையுடன் புரட்சியானது முறைப் படி பெருமளவுக்கு முடிவுற்றிருக்க வேண்டும்'' *(136)*. இதுதான் அக்டோபரிசத்தின், அதாவது எதிர்ப்புரட்சி முத லாளித்துவ வர்க்கத்தினுடைய வேலைத்திட்டத்தின் தொடக் கமும் முடிவுமாகும். அக்டோபரிஸ்டுகள் எப்பொழுதுமே இதைக் கூறி வந்துள்ளனர், பகிரங்கமாகவே இதற்கேற்ப செயல்பட்டு வந்துள்ளனர். காடேட்டுகள் கள்ளத்தனமாய் இதே முறையில் (அக்டோபர் 17 முதலாய்) நடந்து வருகின் றனர்; ஆனால் அதேபோதில் இவர்கள் தாம் ஜனநாயகவாதி கள் என்ற பாசாங்கையும் விடாமல் பாதுகாத்துக் கொள்ள

விரும்புகின்றனர். ஜனநாயக இலட்சியம் வெற்றி பெற வேண்டுமாயின், ஜனநாயகவாதிகளுக்கும் ஓடுகாலிகளுக்கும் இடையே முழுமையான, தெளிவான, பகிரங்கப் பாகுபாடு செய்யப்படுவது மிகவும் பயனுடையதாகும், அத்தியாவசிய மாகும். இந்த அத்தியாவசிய காரியத்துக்கு **வேஹி**யைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ''நமது அரசாங்க டூமாக்களில் மூன்று அல்லது நான்கு டஜன் காடேட்டுகளையும் அக்டோபரிஸ்டுகளையும் தவிர்த்து, மிகப் பெருவாரியான பிரதிநிதிகள் ருஷ்யாவின் நிர்வாகத்துக்கும் சீர்திருத்தத்துக்கும் தேவையான அறிவை வெளிப்படுத்தவில்லை என்பதை ஒத்துக் கொள்ளும் நெஞ்சுத் துணிவு நமக்கு இருந்தாக வேண்டும்'' *(208)* என்று எழுதுகிறார் ஓடுகாலி இஸ்கோயெவ். ஆம், பண்பாடில்லா நாட்டுப்புறத்து துருதோவிக் பிரதிநிதிகளாலோ, தொழிலாளி மக்கள் வகையினராலோ இப்படிப்பட்ட ஒரு பணியை மேற்கொள்ள முடியுமா? இதற்கு காடேட்டுகள், அக்டோபரிஸ்டுகளின் பெரும்பான்மை அவசியமாகும், இதன் பொருட்டு மூன்றாவது டூமா தேவையாகும்....

ஆகவே மக்களும் அவர்களைப் பூஜிப்போரும் மூன்றாவது டூமாவிலும் மூன்றாவது டூமாவின் ருஷ்யாவிலும் எஜமானர்களாய் இருப்போரிடத்து தமக்குள்ள ''பொறுப்பை'' உணரும் பொருட்டு, மக்களுக்குக் கற்றுத் தந்தாக வேண்டும்—வலீனியா பிஷப் அன்தோனியின் உதவியுடன்—''தவறுக்காக வருந்தும் மனப் பாங்கையும்'' (**வேஹி**, *26*), ''தாழ்வு மனப் பாங்கையும்'' *(49)*, ''அறிவுத்துறையினரது பெருமை உணர்ச்சிக்கு'' எதிர்ப்பு காட்டுவதையும் *(52)*, ''பணிவையும்'' *(55)*, ''முதுபெரும் மோசேயின் பத்துக் கட்டளைகளின் படியான சாதாரண எளிய உணவை உண்டு வாழ்வதையும்'' *(51)*, ''ருஷ்யாவின் பேருடலில் புகுந்து கொண்டுவிட்ட எண்ணற்ற பைசாசங்களை'' எதிர்த்துப் போராடவும் *(68)* கற்றுத் தந்தாக வேண்டும். விவசாயிகள் துருதோவிக்குகளையும், தொழிலாளர்கள் சமூக-ஜனநாயகவாதிகளையும் தேர்ந்தெடுக்கின்றனர் என்றால், இது மேற்கூறிய பைசாசங்கள் செய்யும் வேலையே ஆகும். ஏனெனில், காத்கோவும் பபெதஞ்ஸ்த்சேவும் நெடுங் காலத்துக்கு முன்பே கண்டுபிடித்துவிட்டது போல, மக்கள் அவர்களது மெய்யான இயற்கை சுபாவத்

தில் ''அறிவுத்துறையினரிடத்து வெறுப்பு கொண்டவர்களே ஆவர்'' (87; ஜனநாயகத்தினிடத்து என்பதாய்ப் படிக்கவும்).

ஆகவே **வேஹி** ருஷ்யக் குடிமக்களாகிய நமக்கு போதிக்கிறது: ''இந்த அரசாங்கத்தைப் போற்றுவோம், இது ஒன்று மட்டும்தான் தனது துப்பாக்கிச் சனியன்களையும் சிறைக்கூடங்களையும் கொண்டு வெகுஜனங்களது ஆத்திர வெறியிலிருந்து இன்னும் நம்மை [''அறிவுத்துறையினரை''] பாதுகாத்து வருகிறது'' (88) என்று போதிக்கிறது.

இந்த வசைமாரி நல்லதுதான், ஏனெனில் இது ஒளிவு மறைவற்றதாய் இருக்கிறது; இது பயனுடையது, ஏனெனில் இது 1905-09ஆம் ஆண்டுகளின் காலம் பூராவிலும் அரசியல்சட்ட-ஜனநாயகக் கட்சி அனைத்தும் கடைப்பிடிக்கும் கொள்கையின் மெய்யான சாரப்பொருளின் அந்தரங்கத்தைப் புலப்படுத்துகின்றது. இந்த வசைமாரி நல்லதுதான், ஏனெனில் இது **வேஹி**யின் முழு மனப்பான்மையையும் சுருக்கமாகவும் தத்ரூபமாகவும் புலப்படுத்துகின்றது. **வேஹி** ஏன் சிறப்பாய் இருக்கிறதெனில், அது ருஷ்ய மிதவாதிகளும், அவர்களுடன் சேர்ந்து கொண்ட ருஷ்யக் காடேட்டுகளும் கடைப்பிடிக்கும் **மெய்யான** கொள்கையின் மனப்பான்மை அனைத்தையும் வெளிப்படுத்துகின்றது. எனவேதான் **வேஹி**யுடன் நடத்தப்படும் காடேட்டு வாதப்பிரதிவாதங்களும், **வேஹி**க்கு எதிரான காடேட்டு நிராகரிப்புகளும் கபட வேடமும் வெற்றுப் பேச்சுமே அன்றி வேறு ஒன்றுமல்ல. ஏனெனில் உண்மையில் காடேட்டுகள் கூட்டாய், ஒரு கட்சியாய், ஒரு சமூக சக்தியாய், கடைப்பிடித்து வந்துள்ளதும், தொடர்ந்து கடைப்பிடித்து வருவதும் **வேஹி**யின் கொள்கையே அன்றி, **வேறு எதுவுமல்ல.** 1905 ஆகஸ்டிலும் செப்டம்பரிலும் புலீகின் டூமாவில்[41] பங்கு கொள்ளுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள், அதே ஆண்டின் இறுதியில் ஜனநாயக இலட்சியத்துக்கு இழைக்கப்பட்ட துரோகம், மக்களிடத்தும் வெகுஜன இயக்கத்திடத்தும் அவர்களுக்குள்ள இடையறுத அச்சமும் முதல் இரு டூமாக்களிலும் தொழிலாளர், விவசாயிகளது பிரதிநிதிகளுக்கு முறை தவறுது அவர்கள் காட்டிய எதிர்ப்பும், பட்ஜெட்டுக்கு ஆதரவாய் அவர்கள் அளித்த வாக்கு

கள், மூன்றுவது டூமாவில் மதம் குறித்து கரவூலவும் நிலப் பிரச்சினை குறித்து பெரெஸோவ்ஸ்கியும் நிகழ்த்திய சொற் பொழிவுகள், லண்டன் விஜயம்—இவை எல்லாம் வேஹியில் சித்தாந்த வழியில் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் அதே கொள்கையின் பாதையில் அமைந்த எண்ணற்ற மைல்கற் களில் ஒரு சிலவே ஆகும்.

ருஷ்யாவின் ஜனநாயகம், இந்தக் கொள்கையின் சாரத் தையும் இதன் வர்க்க வேர்களையும் புரிந்து கொள்ளாத வரை, ஓர் அடிகூட முன்னேறிச் செல்ல முடியாது.

நோவி தியென், இதழ் 15,
1909 டிசம்பர் 13
ஒப்பம்: வி. இலியின்

நூல் திரட்டு,
தொகுதி 19,
பக்கங்கள் 167-175

லெ. நி. தல்ஸ்தோய்

லெவ் தால்ஸ்தோய் இறந்து விட்டார். இலக்கிய மேதையாய் அவருக்குள்ள உலகளாவிய முக்கியத்துவமும், சிந்தனையாளராகவும் போதகராகவும் அவருக்குள்ள உலகளாவிய புகழும் அதனதன் வழியில் ருஷ்யப் புரட்சியின் உலகளாவிய முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்றன.

பண்ணையடிமை முறை இன்னமும் நாட்டில் அரசோச்சி வந்த காலத்தில் லெ. நி. தல்ஸ்தோய் மாபெரும் இலக்கிய மேதையாய் உருவாயினர். அரை நூற்றாண்டுக்கும் அதிகமான தமது இலக்கியப் பணியின் போது வரிசையாய் அவர் படைத்தளித்த மாபெரும் நூல்களில் பிரதானமாய்ப் புரட்சிக்கு முற்பட்டதான பழைய ருஷ்யாவை, 1861க்குப்[42] பிற்பாடும் அரைவாசிப் பண்ணையடிமை நிலையிலே இருந்த பழைய ருஷ்யாவை—நிலப்பிரபுவுக்கும் விவசாயிக்குமான கிராமாந்தர ருஷ்யாவை—சித்திரித்துக் காட்டினர். ருஷ்ய வரலாற்றின் இந்தக் காலப் பகுதியைச் சித்திரித்துக் காட்டுகையில் தால்ஸ்தோய் பெரும்பெரும் பிரச்சினைகள் மிகப் பலவற்றை எழுப்புவதிலும் கலைத் திறனின் மகோன்னத உச்சிகளுக்கு உயர்ந்து செல்வதிலும் வெற்றியடைந்ததால், அவருடைய படைப்புகள் உலக இலக்கியத்தின் தலை சிறந்தவற்றுள் இடம் பெற்றிருக்கின்றன. பண்ணையடிமை உடைமையாளர்களது ஆதிக்கத்தில் உழன்று வந்த ஒரு நாட்டில் புரட்சிக்கான தயாரிப்புகள் நடந்தேறிய சகாப்தமானது, தல்ஸ்தோய் அதன்மீது சுடரொளி வீசிக் காட்டிய காரணத்தால், அனைத்துலக

மனிதகுலத்தின் கலை வளர்ச்சியில் ஒரு முன்னேற்றப் படியைக் குறிக்கலாயிற்று.

இலக்கிய மேதை தல்ஸ்தோயை ருஷ்யாவிலுங்கூட மிகச் சொற்ப சிறுபான்மையினருக்கு மட்டுமே தெரியும். அவருடைய மாபெரும் இலக்கிய சிருஷ்டிகள் மெய்யாகவே எல்லோருக்கும் உரித்தான உடைமையாக வேண்டுமாயின், லட்சோப லட்சமானோரை, கோடிக் கணக்கானோரை அறியாமையிலும் கொடிய இருளிலும் கொத்தடிமையிலும் வறுமையிலும் வதையச் செய்யும் இந்தச் சமுதாய அமைப்பை எதிர்த்துப் போராடியாக வேண்டும்—சோஷலிசப் புரட்சி ஒன்று நடந்தேறியாக வேண்டும்.

கலைச் சிறப்புடைத்த இலக்கியப் படைப்புகளைச் சிருஷ்டித்தவர் மட்டுமல்ல தல்ஸ்தோய்—பெருந் திரளினரான மக்கள் நிலப்பிரபுக்களும் முதலாளிகளுமானோரது ஒடுக்குமுறையை வீழ்த்தியபின் மனிதனுக்கு உகந்த வாழ்க்கை நிலைமைகளைத் தமக்கு உருவாக்கிக் கொண்டதும் இந்த இலக்கியப் படைப்புகளை என்றென்றும் பாராட்டுவர், படித்து மகிழ்வர். இது மட்டுமின்றி, தால்ஸ்தோய் தற்போதைய அமைப்பால் ஒடுக்கப்படும் மிகப் பெருந் திரள்களான மக்களுடைய மனப் பாங்குகளைக் குறிப்பிடத்தக்க வலிமையொடு புலப்படுத்திக் காட்டுவதில், அவர்களுடைய நிலையைச் சித்திரிப்பதில், தன்முனைப்பாய் அவர்களிடையே மூண்டெழும் கண்டன உணர்ச்சிகளையும் ஆத்திரக் கனலையும் வெளியிட்டுக் காட்டுவதில் வெற்றியடைந்தார். பிரதானமாய் 1861-1904 ஆம் ஆண்டுகளது சகாப்தத்தைச் சேர்ந்தவராகிய தால்ஸ்தோய் தமது நூல்களில்—இலக்கிய மேதை என்ற முறையிலும், மற்றும் சிந்தனையாளர், போதகர் என்ற முறையிலும்—முதலாவது ருஷ்யப் புரட்சி அனைத்துக்குமுரிய பிரத்தியேக வரலாற்று இயல்புகளை, இப்புரட்சியின் பலத்தையும் இதன் பலவீனத்தையும் வியக்கத்தக்கவாறு தெளிவான உருவரைகளில் தெரியச் செய்தார்.

நமது புரட்சியின் தலைமையான தனிச் சிறப்பான இயல்புகளில் ஒன்று என்னவெனில், இது உலகெங்கும் முதலாளித்துவம் வளர்ச்சியுற்று மிகவும் முன்னிலைக்கு வந்துவிட்ட, ருஷ்யாவிலும் ஒப்பளவில் வளர்ச்சியுற்று முன்னிலைக்கு வந்

திருந்த ஒரு சகாப்தத்தில் நடைபெற்ற **விவசாயிகளது** முதலாளித்துவப் புரட்சியாகும். அது ஏன் முதலாளித்துவப் புரட்சியாய் இருந்ததென்றால், அதன் உடனடி நோக்கம் ஜாரிஸ்டு எதேச்சாதிகாரத்தை, ஜாரிஸ்டு முடியரசை வீழ்த்தி நிலப்பிரபுத்துவத்தை ஒழித்திடுவதே அன்றி, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தை வீழ்த்துவது அல்ல. குறிப்பாய் விவசாயிகள் முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தும் நோக்கத்தைப் பற்றிய உணர்வுடையோராய் இருக்கவில்லை, இந்த நோக்கத்துக்கும் போராட்டத்தின் மிகவும் நெருங்கியதான, உடனடியான நோக்கங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. அது ஏன் விவசாயிகளது முதலாளித்துவப் புரட்சியாய் இருந்ததென்றால், விவசாயிகளுடைய வாழ்க்கையின் அடிப்படை நிலைமைகளை மாற்றுதல், பழைய, மத்திய காலத்திய நிலவுடைமை முறையைத் தகர்த்தல், முதலாளித்துவத்துக்கு ''பாதையைச் செப்பனிடுதல்'' என்னும் பிரச்சினையையே எதார்த்தப் புறநிலைமைகள் முன்னணியில் கொண்டுவந்து நிறுத்தின; ஓரளவுக்குச் சுயேச்சையான வரலாற்றுச் செயலுக்குரிய அரங்குக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் வந்து செயல்பட்டதற்கு இந்த எதார்த்தப் புறநிலைமைகளே காரணமாகும்.

தல்ஸ்தோயின் நூல்கள் குறிப்பாய் இந்த விவசாயிகளது வெகுஜன இயக்கத்தின் பலத்தையும் பலவீனத்தையும், அதன் வல்லமையையும் குறைபாடுகளையும் வெளியிடுகின்றன. அரசை எதிர்த்தும் போலீசுடன் கூட்டு கொண்ட அதிகார பூர்வமான மதச்சபையை எதிர்த்தும் ஆவேசமாய், உணர்ச்சித் துடிப்போடு, அடிக்கடி ஈவிரக்கமின்றி கடுமையாய் அவர் தொடுக்கும் கண்டனம், நவீன வளர்ச்சி அறியாத பழங் காலத்திய விவசாயிகளான ஜனநாயக வெகுஜனங்களது உணர்ச்சிகளை, பல நூற்றாண்டுகளாய்ப் பண்ணையடிமை முறையும் அரசாங்கக் கொடுங்கோன்மையும் கொள்ளையும் மதச்சபையின் சூதும் ஏய்ப்பும் பித்தலாட்டமும் மலைபோல் குவியச் செய்திருந்த கடுங் கோபத்தையும் வெறுப்பையும் தம்மகத்தே கொண்ட இந்த வெகுஜனங்களது உணர்ச்சிகளை வெளியிடுகின்றது. நிலத்தில் தனியார் சொத்துரிமைக்கு அவர் காட்டிய வைராக்கியமான எதிர்ப்பானது,

பழைய, மத்திய காலத்திய நிலவுடைமை அமைப்பு—நிலப் பிரபுத்துவப் பண்ணைகளின் வடிவிலும் அரசாங்க ''ஒதுக்கீடு களின்''[43] வடிவிலுமான இது—நாடு மேற்கொண்டு வளர்ச்சி யடையாதபடி தடுத்த சகிக்கமுடியாத முட்டுக்கட்டையாய்த் திட்டவட்டமாய் மாறிவிட்ட அந்த வரலாற்றுக் கட்டத் தில், இந்தப் பழைய நிலவுடைமை முறை தவிர்க்க முடி யாதவாறு சிறிதும் இரக்கமின்றி உடனடியாய் ஒரேயடியில் ஒழிக்கப் படுவது நிச்சயமாகிவிட்ட அந்தக் காலகட்டத்தில் விவசாயி வெகுஜனங்களுடைய மனப்பாங்கினைப் பிரதிபலித் தது. முதலாளித்துவத்துக்கு எதிரான அவருடைய ஓயாத குற்றச்சாட்டுகள்—நெஞ்சு குமுறும் ஆழ்ந்த உணர்ச்சியும் ஆத்திரமும் கொண்ட இந்தக் குற்றச்சாட்டுகள்—எங்கோ நகரங்களிலிருந்து, அல்லது எங்கோ வெளிநாடுகளிலிருந்து வந்து இங்கே உதித்து கிராம வாழ்க்கையின் எல்லாத் ''தூண் களையும்'' தகர்த்திடும், கண்ணுக்குத் தெரியாத, புரிந்து கொள்ள முடியாத இந்தப் புதிய பகைவன்மீது, என்றும் கண்டறியா அளவுக்கு நாசத்தையும் வறுமையையும் பட் டினியையும் காட்டு மிராண்டித்தனத்தையும் விபசாரத்தை யும் கிரந்திப் புண்ணையும்—''ஆரம்ப மூலதனச் சேமிப்புக் காலத்தின்'' இந்தப் பயங்கரக் கொடுமைகள் யாவற்றையும், எல்லாம் வல்ல திருவாளர் பணவுறுதிச் சீட்டினுல் விரிவுபடுத் தப்பட்ட மிக நவீனக் கொள்ளைக்கார முறைகள் பெயர்த்துக் கொண்டுவரப்பட்டு ருஷ்ய மண்ணில் நடப்பட்டதால் மேலும் நூறு மடங்கு கோரமாகிவிட்ட இக்கொடுமைகள் யாவற்றை யும்—விளைவித்த இந்தப் பகைவன்மீது தந்தைவழிச் சமு தாய விவசாயிக்கு உண்டான குமுறலையும் வெறுப்பையும் வெளியிட்டன.

ஆனல் இவ்விதம் கடுமையான கண்டனக் கணைகளைத் தொடுத்தவர், ஆவேசமாய்க் குற்றம் சாட்டியவர், மாபெரும் இந்த விமர்சகர், ருஷ்யாவை அச்சுறுத்திய நெருக்கடியின் காரணங்களையும் இந்த நெருக்கடியிலிருந்து தப்பும் வழி யையும் தாம் புரிந்து கொள்ளத் தவறிவிடுவதையும் தமது நூல்களில் வெளிப்படுத்திக் கொள்கின்றார். இவற்றைப் புரிந்து கொள்ளத் தவறுவது தந்தைவழிச் சமுதாயத்தைச் சேர்ந்த சூதறியாப் பேதையான விவசாயிக்குரிய குணுதிசய

மாகுமே அன்றி, ஐரோப்பியக் கல்விஞானமுள்ள ஓர் எழுத்தாளருக்கு ஏற்றதல்ல. பிரபுத்துவப் போலீஸ் அரசுக்கு எதிரான, முடியரசுக்கு எதிரான அவருடைய போராட்டம், அரசியலையே நிராகரிப்பதாய் மாறியது; ''தீமையை எதிர்த்துப் போராடாதிருத்தல்'' என்னும் கோட்பாட்டுக்கும், 1905-07ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வெகுஜனங்களது புரட்சிப் போராட்டத்திலிருந்து அறவே ஒதுங்கிவிடும் நிலைக்கும் அவரை இட்டுச் சென்றது. அதிகாரபூர்வமான மதச்சபைக்கு எதிரான போராட்டம் தூய்மையாக்கப்பட்ட ஒரு புதிய மதத்தை, அதாவது ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களுக்கு மேலும் நேர்த்தியான, நுண்ணயமான ஒரு புதிய நஞ்சைப் போதித்துப் பரப்பும் பிரசாரத்துடன் இணைந்து கொண்டது. நிலத்தில் தனியார் சொத்துரிமைக்குக் காட்டப்பட்ட எதிர்ப்பு மெய்யான பகைவனுகிய நிலப்பிரபுத்துவத்துக்கும் அதன் அரசியல் அதிகாரச் சாதனத்துக்கும், அதாவது முடியரசுக்கும் எதிரான போராட்டமாய் ஒரு சேரக் குவிந்து கூர்மையடைவதற்கு இட்டுச் செல்லவில்லை; அதற்குப் பதில் கனவு போன்றதாகிய, தெளிவற்ற, வக்கற்ற புலம்பல்களுக்கே இட்டுச் சென்றது. முதலாளித்துவத்தையும் வெகுஜனங்களுக்கு அதனால் உண்டாகும் பயங்கர இன்னல்களையும் அம்பலப்படுத்திக் காட்டிய விளக்கமானது, சர்வதேச சோஷலிசப் பாட்டாளி வர்க்கம் நடத்திய உலகு தழுவிய விடுதலைப் போராட்டத்திடம் சிறிதும் கருத்தில்லாத பராமுகப் போக்குடன் ஒன்றுசேர்ந்து கொண்டது.

தல்ஸ்தோயின் கருத்தோட்டங்களில் இருக்கும் இந்த முரண்பாடுகள் தனிப்பட்ட அவருடைய சொந்தக் கருத்தோட்டங்களுக்கு மட்டுமே உரித்தான முரண்பாடுகள் அல்ல; மாறுக, சீர்திருத்தத்துக்குப் பிற்பட்ட, ஆனால் புரட்சிக்கு முற்பட்ட சகாப்தத்தில் ருஷ்யச் சமுதாயத்தின் பற்பல வர்க்கங்களின், பற்பல பிரிவுகளின் மனப்பாங்கை நிர்ணயித்த மிகமிகச் சிக்கலான, முரண்பாடான நிலைமைகள், சமூக சக்திகளது செல்வாக்குகள், வரலாற்று மரபுகள் ஆகியவற்றின் பிரதிபலிப்புகளாகும்.

எனவேதான் தல்ஸ்தோய் குறித்து பிழையற்றவாறு மதிப்பீடு செய்வது எப்பொழுது சாத்தியமெனில்,

மக்களுடைய சுதந்திரத்துக்கும் சுரண்டலிலிருந்து வெகு ஜனங்களது விடுதலைக்குமான போராட்டத்தில் தலைவனுய்ச் செயலாற்றப் போவது தானேதான் என்பதை இந்த முரண் பாடுகளின் தீர்வுக்குரிய முதலாவது கொந்தளிப்பின்போது, புரட்சிக்குரிய காலத்தின்போது தனது அரசியல் பாத்திரத் தின் வாயிலாகவும் தனது போராட்டத்தின் வாயிலாகவும் எந்த வர்க்கம் நிரூபித்துக் காட்டிற்றோ, அந்த வர்க்கத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மட்டுமே சாத்தியம். எந்த வர்க்கம் தன்னலங் கருதாது தன்னை ஜனநாயக இலட்சி யத்துக்காகப் பணித்துக் கொள்ளும் பற்றுறுதியையும், முதலாளித்துவ வர்க்கத்தினுடைய ஜனநாயகத்தின்(விவசாயி களது ஜனநாயகமும் இதில் அடங்கும்) குறைபாடுகளையும் முரணான நிலைகளையும் எதிர்த்துப் போராடுவதற்குள்ள தனது ஆற்றலையும் நிரூபித்துக் காட்டியுள்ளதோ அந்த வர்க் கத்தின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமேதான் இப்படிப் பட்ட மதிப்பீட்டைச் செய்ய முடியும்; சமூக-ஜனநாயகப் பாட்டாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே தான் இப்படிப்பட்ட மதிப்பீட்டைச் செய்ய முடியும்.

அரசாங்கச் செய்தியேடுகளில் தல்ஸ்தோயைப் பற்றி வெளிவந்திருக்கும் மதிப்புரைகளைப் பாருங்கள். அவை முதலைக் கண்ணீர் வடிக்கின்றன; ''இம்மாபெரும் எழுத்தாள ரைத்'' தாம் உயர்வாய் மதிப்பதாய்ப் பசப்புகின்றன; அதே போதில் மதச்சபையின் தலைமைக் குழுவாகிய ''சினோதை யும்''[44] பேணிப் பாதுகாக்கின்றன. புனிதச் சமயத் தந்தை யரைப் பொறுத்தவரை, மிகவும் அபாண்டமான இழி செயலை அவர்கள் புரிந்துள்ளனர்: மரணப் படுக்கையில் இருந்தவரிடம் அவர்கள் பாதிரியார்களை அனுப்பி வைத்த னர், மக்களை ஏமாற்றுவதற்காகவும், தால்ஸ்தோய் ''பாப மன்னிப்பு கேட்டுக் கொண்டார்'' என்று சொல்வதற்காக வும் இப்படிச் செய்தனர். தல்ஸ்தோயை ''சினோத்'' மதப் பிரஷ்டம் செய்து வைத்திருந்தது. அது நல்லதுதான். பாதிரி மார் அங்கி அணிந்த அரசாங்க அதிகாரிகளும், கிறிஸ்துவின் பெயரில் செயல்பட்ட போலீஸ் படையினரும், யூதர்-எதிர்ப் புக் கொலைத் தாண்டவங்களையும் கறுப்பு நூற்றுவர் ஜாரி ஸ்ட் கும்பலின் ஏனைய தீரச் செயல்களையும் ஆதரித்து நின்ற

சமயத் துறை அடக்குமுறையாளர்களுமான இவர்களுடன் மக்கள் கணக்குத் தீர்த்துக் கொள்ளும் நேரம் வரும்போது, இந்த தீரச் செயல் குறித்து சிலேதுக்கு நினைவூட்டப்படும்.

மிதவாதச் செய்தியேட்டில் தல்ஸ்தோயைப் பற்றி வெளிவரும் மதிப்புரைகளைப் பாருங்கள். ''நாகரிக மனித குலத்தின் குரல்'', ''உலகோரின் ஒருமித்த எதிரொலி'', ''வாய்மை, நல்லது என்னும் கருத்துக்கள்'' என்றெல்லாம் காது புளிக்கும்படி ஓயாமல் கூறப்படும் அதிகாரபூர்வமான-மிதவாத, போலியான, பேராசிரியத் தொடர்களை—எவற்றுக்காகத் தல்ஸ்தோய் அவ்வளவு கடுமையாய் முதலாளித்துவ விஞ்ஞானத்தைச் சாடினாரோ, நியாயமாகவே சாடினாரோ, அவற்றையே—சொல்வதுடன் அவை நிறுத்திக் கொள்கின்றன. அரசைப் பற்றியும் மதச்சபையைப் பற்றியும் நிலத்தில் தனியார் சொத்துரிமையைப் பற்றியும் முதலாளித்துவத்தைப்பற்றியும் தல்ஸ்தோயின் கருத்தோட்டங்கள் குறித்து இந்த ஏடுகளால் ஒளிவுமறைவின்றியும் தெளிவாகவும் தமது அபிப்பிராயத்தைக் கூற முடியவில்லை. இதற்குக் காரணம் அரசாங்கத் தணிக்கை தடை போடுகிறது என்பதல்ல; இக்கட்டான நிலையிலிருந்து தப்புவதற்கு அரசாங்கத் தணிக்கை அவற்றுக்கு உதவியே புரிகிறது! தல்ஸ்தோயின் விமர்சனத்தில் அடங்கியுள்ள ஒவ்வொரு கருத்தும் முதலாளித்துவ மிதவாதத்தின் கன்னத்திலே விழும் அறையாகும் என்பதே காரணம்; எதற்கும் அஞ்சாமல் ஒளிவுமறைவின்றி தயவு தாட்சண்யம் இல்லாமல் இக்காலத்தின் மிகவும் வேதனை வாய்ந்த, அலைக்கழிப்பான பிரச்சினைகளை தல்ஸ்தோய் எடுத்துரைக்கும் முறையே நமது மிதவாத (மற்றும் மிதவாத-நரோத்னிக்) கருத்துரை எழுத்தாளர்களது வழக்கமான சலிப்பூட்டும் தொடர்களுக்கும், கேட்டுக் கேட்டு அலுத்துப் போன பகட்டுச் சொற்களுக்கும், தட்டிக்கழிக்கும் ''நாகரிக நன்னயப்'' பொய்யுரைகளுக்கும் தரப்படும் எதிரடியாய் அமைகின்றது. மிதவாதிகள் எல்லோரும் தால்ஸ்தோயைப் போற்றுகின்றனர்; இவர்கள் எல்லோரும் ''சிலேதை'' எதிர்க்கின்றனர்—அதேபோது இவர்கள் போற்றுவது... வேஹியிஸ்டுகளை, இந்த வேஹியிஸ்டுகளுடன் ''கருத்து வேறுபாடு தெரிவிக்கப்படுவது சாத்தியமே'', ஆனால் ஒரே கட்சியில்

இசைவுடன் இவர்களுடன் வாழ்வது ''அவசியமாகும்''; இவர்களுடன் இலக்கியத்திலும் அரசியலிலும் ஒன்றுபட்டு வேலை செய்வதும் ''அவசியமாகும்''; வலீனியா பிஷப் அன்தோனிய் இந்த வேஹியிஸ்டுகளை உச்சி முகர்ந்து மெச்சிப் புகழ்கிறார்.

''மகத்தான மனசாட்சி'' தல்ஸ்தோய் என்பதை மிதவாதிகள் முதன்மையானதாய்க் குறிப்பிடுகின்றனர். நோவயெ விரேம்யாவும் இதையொத்த எல்லாச் செய்தியேடுகளும் விதம்விதமாய் ஆயிரம் வழிகளில் திருப்பித் திருப்பிக் கூறிவரும் பொருளற்ற வெற்றுத் தொடர்தானே இது? தல்ஸ்தோய் எடுத்துரைத்த ஜனநாயகம், சோஷலிசம் ஆகிய ஸ்தூலமான பிரச்சினைகளைத் தட்டிக் கழிப்பதன்றி வேறு என்ன இது? தல்ஸ்தோயின் அறிவாற்றலுக்குப் பதிலாய் அவருடைய தப்பெண்ணங்களையும், அவரிடத்தே வருங்காலத்துக்குரியதாய் இருந்ததற்குப் பதில் கடந்த காலத்துக்குரியதாய் இருந்த பகுதியையும், ஆர்த்தெழுந்து எல்லா விதமான வர்க்க ஆதிக்கத்தையும் எதிர்த்து அவர் எழுப்பிய கண்டனக் குரலுக்குப் பதிலாய் அரசியலை அவர் நிராகரித்ததையும் அவரவரும் தம்மை நன்னெறியாளராய்ச் செம்மை செய்து கொள்ள வேண்டுமென்ற அவரது உபதேச மொழியையும் முதன்மையாய் முன்னணியிலே வைப்பதன்றி வேறு என்ன இது?

தல்ஸ்தோய் இறந்துவிட்டார்; புரட்சிக்கு முற்பட்ட ருஷ்யா—இந்த ருஷ்யாவின் பலவீனமும் ஏலாமையும் இவருடைய தத்துவவியலில் வெளியாயின, இந்த இலக்கிய மேதையின் நூல்களில் சித்திரித்துக் காட்டப் பெற்றுள்ளன—கடந்த காலத்துக்குரியதாகிவிட்டது. ஆனால் அவர் விட்டுச் சென்றிருக்கும் பாரம்பரியமானது கடந்த காலத்துக்குரியதாகிவிடாமல் எதிர்காலத்துக்குரியதாய் இருக்கும் பலவும் உள்ளடங்கியதாகும். இந்தப் பாரம்பரியத்தை ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம் ஏற்றுக் கொண்டு, அதைப் பேணி வளர்த்துச் செல்கிறது. ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம் அரசையும் மதச் சபையையும் நிலத்தில் தனியார் சொத்துரிமையையும் பற்றிய தல்ஸ்தோயின் விமர்சனத்தின் பொருளை உழைப்போரும் சுரண்டப்படுவோருமாகிய பெருந் திரளினருக்கு விளக்கிச் சொல்லும்—இப்பெருந் திரளினர் நன்னெறியாளராய்த் தம்மைச் செம்மை செய்து கொள்வதோடும் தெய்விக வாழ்வுக்காக

ஏங்குவதோடும் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் பொருட்டல்ல, மாறுக ஜாரிஸ்டு முடியரசுக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும், 1905ல் சிறிதளவே சேதப்படுத்தப்பட்டவையும் அழித்தொழிக்கப்பட வேண்டியவையுமான இவற்றுக்கு, புதிய அடி கொடுப்பதற்காக இவர்களைக் கிளர்ந்தெழச் செய்யும் பொருட்டு இதைச் செய்யும். ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தைப் பற்றிய தல்ஸ்தோயின் விமர்சனத்தை மக்கள் பெருந் திரளினருக்கு விளக்கிச் சொல்லும் —இப்பெருந் திரளினர் மூலதனத்தின்மீதும் பண ஆதிக்கத்தின்மீதும் சாபங்கள் பொழிவதோடு தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் பொருட்டல்ல, மாறுக தமது வாழ்விலும் தமது போராட்டத்திலும் இவர்கள் முதலாளித்துவத்தினுடைய தொழில்நுட்ப, சமூகச் சாதனைகளை ஒவ்வோர் அடியிலும் பயன்படுத்திக் கொள்ளக் கற்றறிந்து கொள்ளும் பொருட்டும், முதலாளித்துவத்தை வீழ்த்திவிட்டு, மக்கள் வறுமையிலே வதைபட வேண்டியில்லாத, மனிதனே மனிதன் சுரண்டும் கொடுமை இல்லாத ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்க வல்ல கோடானு கோடியான சோஷலிச வீரர்களது ஒன்றுபட்ட சேனையாய்த் தம்மை இணைத்துக் கொள்ள அவர்கள் கற்றறிந்து கொள்ளும் பொருட்டும் இதைச் செய்யும்.

சொத்சியால்-டெமக்ராத்,
இதழ் 18, 1910 நவம்பர் 16 (29)

நூல் திரட்டு,
தொகுதி 20,
பக்கங்கள் 19-24

மார்க்சியத்தினுடைய வரலாற்று வளர்ச்சியின் சில இயல்புகள்

எங்களுடைய போதனை, செயலுக்கு ஒரு வழி காட்டியே தவிர வறட்டுச் சூத்திரம் அல்ல என்கிறார் எங்கெல்ஸ்—தம்மையும் புகழ் மிக்க தமது நண்பரையும் குறிக்கும் வண்ணம் 'எங்களுடைய' என்கிறார். மார்க்சியத்தில் அடிக்கடி பலரும் மறந்துவிடும் ஓர் அம்சத்தைக் குறிப்பிடத்தகுந்த வலிவுடனும் பொருள்நிறைவுடனும் இந்த ஒப்புயர்வற்ற வாசகம் வலியுறுத்துகிறது. இதை மறந்து விடுவதின் மூலமாக நாம் மார்க்சியத்தை ஒருதலைப்பட்சமான, உருக்குலைக்கப்பட்டதான, உயிரற்ற ஒன்றாய்த் திரித்துவிடுகிறோம்; உயிர்த்தியங்கி வரும் ஆன்மாவை அதிலிருந்து பறித்துவிடுகிறோம்; மார்க்சியத்தின் மூலாதாரத் தத்துவ அடித்தளங்களை—அதாவது முரண்பாடுகள் நிறைந்தும் சர்வவியாபகமாயுமுள்ள சரித்திர வளர்ச்சியைப் பற்றிய போதனையாகிய இயக்கவியலை—தளர்த்திப் பலவீனப்படுத்துகிறோம்; நமது சகாப்தத்தில் நம்முன்னுள்ள திட்டவட்டமான நடைமுறைக் கடமைகளுடன், வரலாற்றின் ஒவ்வொரு புதிய திருப்பத்தையும் தொடர்ந்து மாறும்படியான இந்தக் கடமைகளுடன் மார்க்சியத்துக்கு இருக்கும் தொடர்பை நாம் அறுத்தெறிகிறோம்.

நமது காலத்தில், ருஷ்யாவில் மார்க்சியத்தின் கதியைப் பற்றி அக்கறை கொண்டிருப்பவர்களின் மத்தியிலே, மார்க்சியத்தின் இந்தக் குறிப்பிட்ட அம்சத்தை மறந்து விடுகிறவர்களை அடிக்கடி கண்டு வருகிறோம். ஆயினும் சமீப காலத்தில் ருஷ்யா திடீர் மாறுதல்களுக்கு உட்பட்டிருப்பது எல்லோருக்கும் தெளிவாய்த் தெரிந்தே இருக்க வேண்டும். செய

லின் சூழ்நிலைமைகளையும், அவற்றின் காரணமாகச் செயலின் குறிக்கோள்களையும் மிகவும் நேரடியாகவும் உடனடியாகவும் நிர்ணயிக்கும் படியான சமுதாய-அரசியல் நிலைமையை வழக்கத்திலில்லாத வேகத்துடனும் வலிவுடனும் மாற்றி விடும் அளவுக்கு இந்த மாறுதல்கள் திடுதிப்பென நிகழ்ந்துள்ளன. பொதுப்படையான, அடிப்படையான குறிக்கோள்களை இங்கே நான் குறிப்பிடவில்லை. வர்க்கங்களிடையே நிலவும் அடிப்படை உறவு மாறுமலிருக்கும் வரையில் சரித்திரத்தின் திருப்பங்களினால் இந்தக் குறிக்கோள்கள் மாறுவதில்லை. ருஷ்யச் சமுதாயத்திலுள்ள பல்வேறு வர்க்கங்களிடையே நிலவி வரும் அடிப்படை உறவு, உதாரணமாய், சென்ற ஆறு ஆண்டுகளாக மாறுமலிருந்து வருவது போலவே, ருஷ்யாவில் பொருளாதாரத்தில் (பொருளாதாரத்தில் மட்டுமல்ல) காணப்படுகிற பொதுவான பரிணும வளர்ச்சிப் போக்கும் மாறுமலே இருந்து வந்திருக்கிறது என்பது தெட்டத் தெளிவு.

ஆனால், இந்தக் காலக் கட்டத்தில் ஸ்தூலமான சமுதாய-அரசியல் நிலைமையும், அது போல நேரடியான, உடனடியான செயலின் குறிக்கோள்களும் மிகத் தீவிரமாக மாறி வந்திருக்கின்றன. **இதன் விளைவாக,** மார்க்சியத்திலும் அதன் **பல்வேறு** அம்சங்கள் முன்னணிக்கு வந்து **தீரவேண்டும்.** ஏனெனில் மார்க்சியம் உயிர்ப் பண்பு கொண்ட போதனையாகும்.

இந்தக் கருத்தைத் தெளிவாக்கும் பொருட்டு, ஸ்தூலமான சமுதாய-அரசியல் நிலைமையில் சென்ற ஆறு ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிற மாறுதலைக் கொஞ்சம் கவனிப்போம். இந்த ஆருண்டுக் காலப்பகுதி மூன்று மூன்று ஆண்டுகளைக் கொண்ட இரு காலப்பகுதிகளாகப் பிரிவதை எடுத்த எடுப்பிலேயே காண்கிறோம். ஒரு காலப்பகுதி 1907ம் ஆண்டின் கோடையுடன் ஏறத்தாழ முடிவடைகிறது; மற்றக் காலப்பகுதி 1910ம் ஆண்டின் கோடையுடன் முடிவடைகிறது. முற்றிலும் தத்துவார்த்தக் கண்ணோட்டத்தில், முதல் மூன்றாண்டுக் காலப்பகுதியானது அப்போது ருஷ்யாவில் அரசு அமைப்பு முறையின் அடிப்படையான குணாதிசயங்களில் வேகமாக ஏற்பட்ட மாறுதல்களால் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது. இந்த மாறுதல்களின் போக்கு ஒரே சீராக இல்லாமல் அனேக

ஏற்ற இறக்கங்களுடன் கூடியதாயிருந்தது; இரு திசைகளிலும் ஊசலாட்டத்தின் வீச்சும் மிகப் பெரிதாயிருந்தது. ''மேல் கட்டுமானத்தில்'' ஏற்பட்ட இந்த மாறுதல்களின் சமுதாய-பொருளாதார அடிப்படை என்னவெனில் ருஷ்ய சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களும் மிகப் பல்வேறுபட்ட துறைகளிலும் எடுத்துக் கொண்ட செயல்களே (டூமா சட்டசபைக்குள்ளேயும் வெளியேயும், பத்திரிகைகள், சங்கங்கள், பொதுக் கூட்டங்கள் முதலானவற்றில் நடைபெற்ற செயற்பாடே) ஆகும். சரித்திரத்தில் அடிக்கடி காணக்கிடைக்காத அளவிலே இந்தச் செயல் அவ்வளவு பகிரங்கமானதாயும், எடுப்பாகவும், வெகுஜன வீச்சுடையதாயும் இருந்தது.

இதற்கு மாறுக இரண்டாம் மூன்றாண்டுக் காலப்பகுதியின் தனி இயல்பு—இங்கே முற்றிலும் தத்துவார்த்த ''சமூக வியல்'' கண்ணோட்டத்தில் மட்டுமே விஷயத்தைக் கவனித்து வருகிறோம் என்று மீண்டும் சொல்கிறேன்—என்னவென்றால், அநேகமாகத் தேக்கநிலை என்று மதிக்கக் கூடிய அளவுக்குப் பரிணாம வளர்ச்சி மந்தமாயிருந்ததே யாகும். அரசு அமைப்பு முறையில் ஓரளவாவது முக்கியமான மாறுதல்கள் எவையும் ஏற்படவில்லை. முந்திய காலப் பகுதியில் எந்த ''அரங்கு''களில் நடவடிக்கைகள் வளர்க்கப்பட்டனவோ அவற்றில் பெரும்பாலானவற்றில் **வர்க்கங்களுடைய** பகிரங்கமான, பல்வகைப்பட்ட நடவடிக்கைகள் எவையும் அநேகமாக நடைபெறவில்லை.

இந்த இரண்டு காலப்பகுதிகளுக்குமிடையே இருந்த ஒற்றுமையம்சம் என்னவெனில், இரண்டு காலப்பகுதிகளிலும் ருஷ்யாவில் முதலாளித்துவப் பரிணாமம் நடைபெற்று வந்தது. இந்தப் பொருளாதாரப் பரிணாமத்துக்கும் பல பிரபுத்துவ, மத்திய காலத்திய அமைப்புகள் நீடித்து இருந்து வந்ததற்கும் இடையேயிருந்த முரண்பாடு நீக்கப்படாமல் தொடர்ந்து இருந்து வந்தது; சில அமைப்புகள் அரைகுறையான பூர்ஷ்வா தன்மை பெற்றதனால் இந்த முரண்பாடு தீவிரமடைந்ததே ஒழிய தணிக்கப்படவில்லை.

இந்த இரண்டு காலப்பகுதிகளுக்கிடையே இருந்த வேற்றுமை என்னவென்றால், மேற்குறிப்பிட்ட சீர்திருத்தம், ஏற்ற இறக்கமான அதிவேக மாறுதல்கள் எந்த வடிவத்தை ஏற்கு

மென்பது முதலாவது காலப்பகுதியில் வரலாறு படைக்கும் தலைமையான முதற்பெரும் கேள்வியாய் இருந்தது. ருஷ்யாவின் பரிணும வளர்ச்சி முதலாளித்துவத் தன்மையதாய் இருந்ததால் இந்த மாறுதல்களின் உள்ளடக்கமும் முதலாளித்துவ தன்மை கொண்டதாய் இருந்து தீர வேண்டியதாயிற்று. ஆனால் முதலாளித்துவ வர்க்கத்தாரில் வெவ்வேறு வகையினர் இருந்தனர். ஏறத்தாழ நிதான மிதவாதப் போக்கை அனுசரிப்பதாய்க் கூறும் நடுத்தர முதலாளிகளும் பெரு முதலாளிகளும் தங்கள் வர்க்க நிலை காரணமாக திடுதிப்பு மாறுதல்களை அஞ்சி நிலவுடைமை அமைப்பிலும் சரி, அரசியல் ''மேல் கட்டுமானத்திலும்'' சரி, பழைய ஏற்பாடுகளின் பெருமளவு மிச்சசொச்சங்களை இருந்தவாறே வைத்திருக்க முயற்சித்தார்கள். கிராமப் புறத்திலுள்ள குட்டி பூர்ஷ்வாக்கள் ''தங்கள் கையால் உழைத்து'' ஜீவிக்கிற விவசாயி மக்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும் காரணத்தால் **வேறு வகைப்பட்ட** முதலாளித்துவச் சீர்திருத்தங்களுக்காக, அதாவது மத்திய காலத்திய மிச்சசொச்சங்கள் நீடித்திருக்க மிகக் குறைந்த இடமே அளிக்கக் கூடிய முதலாளித்துவச் சீர்திருத்தங்களுக்காக, முயற்சித்துத் தீரவேண்டியிருந்தது. கூலித் தொழிலாளர்கள் தம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை உணர்வு பூர்வமாக அறிந்து கொண்டிருந்த அளவுக்கு இவ்விரண்டு வேறுபட்ட போக்குகளிடையே நடைபெற்ற போரைப் பற்றித் தமக்கேற்ற கண்ணோட்டத்தை வகுத்துக் கொண்டு தீரவேண்டியிருந்தது. இவ்விரண்டு போக்குகளும் முதலாளித்துவ அமைப்பு முறையின் கட்டுக்கோப்பை விட்டு வெளியே செல்லாமல் அதனுள்ளேயே இருந்து, அவ்வமைப்பின் முற்றிலும் வெவ்வேறான வடிவங்களையும், அதன் வளர்ச்சியில் முற்றிலும் வெவ்வேறான வேகங்களையும், அதன் முற்போக்குச் செல்வாக்கில் வெவ்வேறு தரங்களையும் வற்புறுத்தின.

இவ்விதம் முதலாவது காலப்பகுதி போர்த்தந்திரம் பற்றிய பிரச்சினைகளென்று வழக்கமாகக் குறிக்கப்படுகிற வற்றை மார்க்சியத்தின் முன்வரிசையில்கொண்டு வந்து நிறுத்தியது. இது ஏதோ தற்செயலாக நடக்கவில்லை; தேவையின் கட்டாயத்தால் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைகள் குறித்துக்

கிளம்பிய சர்ச்சைகளும் கருத்து வேற்றுமைகளும் ''அறிவுத் துறையினரிடையே'' நடக்கிற சர்ச்சைகள்தான் என்றும், ''பக்குவமடையாத பாட்டாளி வர்க்கத்தின்மேல் செல்வாக்கு பெறுவதற்காக நடக்கும் ஒரு போராட்டமே'' என்றும், ''அறிவுத் துறையினர் தங்களைப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தகவமைத்துக் கொள்வதைக்'' குறிப்பவையே என்றும் பல்வேறு சாயல்களிலுமான **வேஹி** ஆதரவாளர்கள் நினைக்கிறார்கள்; இதை விட தவறான கருத்து வேறென்றுமில்லை. இதற்கு நேர்மாறாக இந்தப் பாட்டாளி வர்க்கம், பக்குவம் பெற்று விட்டதனால்தான், அது ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சி பூராவிலும் காணப்படும் இவ்விரண்டு வேறுபட்ட போக்குகளிடையே நடக்கிற போர் குறித்து ஏனைதானே என்றிருக்க முடியவில்லை; ஆகவே இந்த வர்க்கத்தின் தத்துவாசிரியர்கள் வெவ்வேறான இவ்விரு போக்குகளுக்கும் (நேர்முகமாகவோ மறைமுகமாகவோ, நேரான பிரதிபலிப்பாகவோ எதிரான பிரதிபலிப்பாகவோ) ஏற்ற வகையில் தத்துவரீதியான வரையறுப்புக்களை வகுத்துத் தருவதைத் தவிர்க்க முடியவில்லை.

இரண்டாவது காலப்பகுதியிலே ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சியின் வெவ்வேறான போக்குகளிடையிலான போர் நிகழ்ச்சி அரங்கில் காணப்படவில்லை, ஏனெனில் இந்த **இரண்டு** போக்குகளுமே ''பழுத்த பிற்போக்கர்களால்'' நசுக்கப்பட்டுவிட்டன, பின்னுக்குத் தள்ளப்பட்டு உள்வாங்கிக் கொள்ளும்படிச் செய்யப்பட்டன, தாற்காலிகமாக மூச் சொடுக்கப்பட்டன. மத்தியகாலத்தியப் பழுத்த பிற்போக்கர்கள் முன்னணிக்கு வந்து நின்றுகொண்ட தோடல்லாமல் முதலாளித்துவச் சமுதாயத்தின் மிக விரிந்த ஜனப்பகுதிகளிடையே **வேஹி**யின் உணர்ச்சிகளை, மனச்சோர்வையும், மறுதலித்துக் கைவிடும் மனோநிலையையும் மேலோங்கச் செய்தனர். இப்போது தலைதூக்கியது பழைய அமைப்பு முறையைச் சீர்திருத்த நிற்கும் இரண்டு வழிமுறைகள் இடையிலான போர் அல்ல; எந்த விதமான சீர்திருத்தங்களிலும் நம்பிக்கையின்மை, ''அடிபணிந்து விடும்'', ''பாவ மன்னிப்பு நாடும்'' மனப்பாங்கு, சமூக-விரோத போதனைகளின் மீது மோகம், இறைஞானப் பித்து இத்தியாதியானவையே இப்போது தலைதூக்கின.

ஆச்சரியப்படத்தக்க முறையில் திடுதிப்பென நிகழ்ந்த இந்த மாறுதல் தற்செயலானதல்ல, ''வெளிப்புற'' நிர்ப் பந்தத்தினால் மட்டும் ஏற்பட்ட விளைவல்ல. இதற்கு முந்திய காலப்பகுதி, தலைமுறை தலைமுறையாய், பல நூற்றாண்டு களாய், அரசியல் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி நின்று வந்த, அரசியல் பிரச்சினைகளே இன்னதென்று அறியாமலே இருந்து வந்த ஜனப்பகுதிகளை ஆழ்ந்த முறையிலே உலுக்கி உசுப்பி விட்டது. ஆகவே ''எல்லா மதிப்புக்களையும் திரும்ப மதிப் பிடலும்'', அடிப்படைப் பிரச்சினைகளைப் புதிதாய்ப் பயில் வதும், தத்துவத்தில் அடிப்படைக் கூறுகளில் அரசியல் அரிச்சு வடியில் புதிய அக்கறை காட்டுவதும் இயற்கையாகவும் தவிர்க்கமுடியாத வகையிலும் மேலோங்கின. நெடுந் தூக் கத்திலிருந்து திடீரென்று எழுப்பிவிடப்பட்டு மிகவும் முக் கியமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியதாகிவிட்ட கோடிக் கணக்கான மக்கள் அதிக காலத்துக்கு இம்மட்டத் தில் இருந்து கொண்டிருக்க முடியாது. இடைவேளை ஓய்வு பெருமலும், ஆரம்ப அடிநிலைப் பிரச்சினைகளுக்குத் திரும் பாமலும், இணையற்ற பொருள் வளம் செறிந்த படிப்பினை களை ''ஜீரணிக்க'' உதவுவதும், ஒப்பிட முடியாத அளவு அதிக விரிவான ஜனத்திரள் முன்னிலும் மிகுந்த உறுதியோடும், உணர்வோடும், நிச்சயத்தோடும், விடாமுயற்சியோடும் முன் னேறுவதைச் சாத்தியமாக்குவதுமான புதிய பயிற்சி பெரு மலும் அவர்களால் மேற்செல்ல முடியவில்லை.

நாட்டின் வாழ்க்கையில் சகல துறைகளிலும் உடனடிச் சீர்திருத்தங்கள் செய்து முடிப்பதுதான் முதலாவது காலப் பகுதியின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தது. பெற்ற அனு பவத்தை விமர்சித்து ஆராய்வது, இன்னும் அதிக விரிவான ஜனப்பகுதிகள் அந்த அனுபவத்தை ஜீரணிப்பது, சொல்லப் போனால் அந்த அனுபவம் அடிமண்ணுக்குள் எனலாம், அதா வது பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த பிற்பட்ட அணிகளுக் குள், ஊடுருவிச் செல்வது—இவைதான் இரண்டாவது காலப் பகுதியின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தன. கார ணம், சரித்திர வளர்ச்சியின் இயக்கவியல் அப்படி அமைந் திருந்தது.

மார்க்சியம் உயிரற்ற வறட்டுச் சூத்திரம் அல்ல; இறுதி

முடிவாக்கப்பட்டுவிட்ட, முன்கூட்டியே தயார் செய்து வைக்கப்பட்டுவிட்ட, மாற்றத்துக்கு இடமில்லாது இறுகிவிட்ட போதனை அல்ல அது. செயலுக்கான உயிருள்ள வழிகாட்டி அது; சமுதாய வாழ்க்கை நிலைமைகளில் ஆச்சரியப்படத்தக்க அளவில் திடுதிப்பென நிகழ்ந்த மாறுதலை இக்காரணத்தால் நிச்சயமாய் மார்க்சியம் பிரதிபலித்துக் காட்டவே செய்யும். ஆழ்ந்த சிதைவிலும், ஒற்றுமையின்மையிலும், பல வகைப் பட்ட ஊசலாட்டங்களிலும், சுருங்கச் சொன்னால் மார்க் சியத்துக்கு உள்ளேயே ஒரு மிகத் தீவிரமான நெருக்கடியிலும் இந்த மாறுதல் பிரதிபலித்துக் காட்டப்பட்டது. இந்தச் சிதைவை எதிர்த்து மூர்த்தண்ணியமாகப் போராட வேண் டிய தேவை, மார்க்சியத்தின் அடிப்படைகளுக்காக மூர்த் தண்ணியமான, விடாப்பிடியான போராட்டத்தை நடத்த வேண்டிய தேவை, மறுபடியும் நிகழ்ச்சி நிரலுக்கு வந்தது. இதற்கு முந்திய காலப்பகுதியில் வர்க்கங்களின் மிகவும் விரி வான பகுதியோர் தமது குறிக்கோள்களை வகுத்துக் கொள் வதில் மார்க்சியத்தைத் தவிர்த்து விலக்க முடியாமற் போகவே, இந்தப் போதனையை அவர்கள் அளவு மீறி ஒருதலைப் பட்சமாகவும் திரித்துக் குலைக்கப்பட்ட பாணியிலும் கிர கித்துக் கொண்டனர். குருட்டுப் பாடமாய்ச் சிற்சில ''கோஷங்களையும்'' போர்த்தந்திரப் பிரச்சினைகளுக்கான சிற்சில விடைகளையும்—இந்த விடைகளுக்கான மார்க் சிய அடிநிலைக் கூறுகளைப் புரிந்து கொள்ளாமலே—நெட்டுரு போட்டு வைத்திருந்தனர். சமுதாய வாழ்வின் பல்வேறு துறைகளிலும் ''பண்பு மதிப்புகளை மறுபடியும் மதிப் பீடு செய்ய'' நேர்ந்ததைத் தொடர்ந்து, மார்க்சியத் தின் மிகவும் கருத்தியலான, பொதுப்படையான தத்துவ வியல் அடிப்படைகள் ''திருத்தப்பட்டுவிடும்'' ஒரு நிலைமை ஏற்பட்டது. பல்வேறுபட்ட கருத்துமுதல்வாதச் சாயல்களி லுமாகிய முதலாளித்துவத் தத்துவவியலின் செல்வாக்கு மார்க்சியவாதிகளிடையே கொள்ளை நோய் போலப் பரவிய மாகியக்[45] கருத்துக்களின் வாயிலாய் வெளியாயிற்று. புரிந்து கொள்ளப்படாமலும் சிந்தித்து கிரகிக்கப்படாமலும் பொட்ட நெட்டுரு செய்யப்பட்ட ''கோஷங்கள்'' திருப்பித் திருப்பிக் கூறப்பட்டதானது வெற்றுச் சொல்லடுக்குகளை

வெகுவாய்ப் புழக்கத்துக்கு வரச் செய்தது. இதன் நடைமுறை விளைவு என்னவெனில், பகிரங்கமான அல்லது மறைமுகமான ''ஒத்சொவீசம்''[46] அல்லது மார்க்சியத்தின் ''சட்டபூர்வ உருவே'' ஒத்சோவிசம் என்பதாய்க் கொள்வது போன்ற முற்றிலும் மார்க்சிய-விரோத, குட்டி பூர்ஷுவாப் போக்குகள் மலிந்துவிட்டன.

இன்னொரு புறத்தில், வேஹி சஞ்சிகையின் மனப்பான்மை, கொள்கை துறந்து ஓடும் மனப்பான்மை முதலாளித்துவ வர்க்கத்தாரின் விரிவான பகுதிகளை ஆட்கொண்டு விட்டதுடன் நில்லாமல், மார்க்சியத் தத்துவத்தையும் நடைமுறையையும் ''நிதானமான, செம்மையான'' வழி வரம்புகளுக்குள் அடக்கி வைக்க முயற்சிக்கிற போக்குக்குள்ளும் புகுந்துவிட்டது. கடைசியாக மார்க்சியத்தில் மிஞ்சினதெல்லாம் ''படி வரிசை முறை'' (hierarchy), ''தலைமைப் பாத்திரம்'' (hegemony) முதலானவற்றைப் பற்றிய, மிதவாதத்தில் முற்றிலும் ஊறிப்போன வாதங்களில் உபயோகிப்பதற்கேற்ற வெறும் சொற்களே.

இந்த வாதங்களையெல்லாம் பரிசீலிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மார்க்சியம் அனுபவித்து வரும் நெருக்கடியின் ஆழத்தைப் பற்றியும், இந்தக் காலப்பகுதியில் நிலவும் ஒட்டுமொத்தமான சமுதாய-பொருளாதார நிலைமைக்கும் அந்த நெருக்கடிக்கும் இடையேயுள்ள சம்பந்தத்தைப் பற்றியும் நாம் மேலே குறிப்பிட்டவற்றைத் தெளிவுபடுத்த இந்த வாதங்களைக் குறிப்பிட்டாலே போதும். இந்த நெருக்கடி எழுப்பும் பிரச்சினைகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. வாய்ச்சவடால் அடித்து அவற்றை அகற்றிவிட நடக்கிற முயற்சிகள் போல் தீங்கிழைக்கும்படியான, கோட்பாடற்ற செய்கை வேறு எதுவும் இருக்க முடியாது. நெருக்கடியின் ஆழத்தையும் அதை எதிர்த்துப் போராட வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருக்கும் எல்லா மார்க்சியவாதிகளையும் மார்க்சியத்தின் தத்துவ அடிப்படைகளையும் ஆதார வரையறுப்புகளையும் பாதுகாப்பதற்காக அணி திரட்டுவதைக் காட்டிலும் முக்கியமானது எதுவும் இருக்க முடியாது; ஏனெனில் மார்க்சியத்தின் பலவகைப்பட்ட ''சக பிரயாணி''களிடையே முதலாளித்துவச் செல்வாக்கு பரவியுள்ளதால்

எதிரெதிரான திசைகளிலிருந்து இவை திரித்திப் புரட்டப் படுகின்றன.

விரிவான ஜனப்பகுதிகளைச் சமுதாய வாழ்க்கையில் உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்துக்கொள்ளும்படி முதலாவது மூன்றுண்டுக் காலப்பகுதி விழிப்புறச் செய்தது. அவர்களில் பலர் இப்பொழுதுதான் முதல் தடவையாக உண்மையான முறையிலே மார்க்சியத்தைத் தெரிந்து கொள்ள ஆரம்பித் திருக்கிறார்கள். இது சம்பந்தமாக முதலாளித்துவப் பத்திரிகை கள் என்றையும்விட அதிகமாகப் பொய்யான கருத்துக்களைச் சிருஷ்டித்தும், மிக விரிவாகப் பரப்பியும் வருகின்றன. இந்த நிலைமைகளிலே மார்க்சியவாதிகளின் அணிகளிலே ஏற்படும் சிதைவு மிகவும் ஆபத்தானது. தற்சமயம் இந்தச் சிதைவு தவிர்க்க முடியாதது என்பதற்குரிய காரணங்களைப் புரிந்து கொள்வதும், இந்தச் சிதைவை எதிர்த்து முரணின்றிப் போராடுவதற்காக அணிகளைத் திரட்டி ஒன்றுசேர்ப்பதும், மார்க்சியவாதிகளுடைய இந்நாளைய கடமையாகும்—இத் தொடரின் மிகவும் நேரடியான, துல்லியமான பொருளில் இந்நாளைய கடமையாகும்.

ஸ்வேஸ்டா, இதழ் 2,
1910 டிசம்பர் 23
ஒப்பம்: வி. இலியின்

நூல் திரட்டு,
தொகுதி 20
பக்கங்கள் 84-89

லெவ் தல்ஸ்தோயும்
அவரது சகாப்தமும்

லெவ் தல்ஸ்தோய்க்கு உரியதாகி, அவருடைய உன்னத இலக்கியப் படைப்புகளிலும் அவருடைய போதனைகளிலும் அவ்வளவு தெளிவான உருவரைகளில் பிரதிபலிக்கப் படும் அந்தச் சகாப்தம் 1861க்குப் பிற்பாடு ஆரம்பமாகி 1905 வரை நீடித்தது. தமது இலக்கியப் பணியைத் தல்ஸ்தோய் இக்காலத்துக்கு முன்பே தொடங்கினர் என்பதும், அது இக்காலத்துக்குப் பிற்பாடே முடிவடைந்தது என்பதும் மெய்தான். ஆயினும் இந்தக் காலகட்டத்தில்தான் அவர் இலக்கிய மேதையாகவும் சிந்தனையாளராகவும் முழு அளவுக்கு முதிர்ச்சியுற்ற நிலையில் இருந்தார்; மாற்றத்தின் ஊடமைந்த இந்தக் காலகட்டத்தின் இடைநிலைத் தன்மைதான் தல்ஸ்தோயின் நூல்களுக்கும் ''தல்ஸ்தோயத்''துக்கும் உரித்தான குணதிசயங்களாகிய எல்லாப் பண்புகளுக்கும் மூல காரணமாய் இருந்தது.

ஆன்னா கரேனினாவில் வரும் ஒரு பாத்திரமாகிய லேவின் மூலம், இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் ருஷ்யாவின் வரலாற்றில் ஏற்பட்ட திருப்பத்தின் தன்மையை மிகவும் தெளிவாய்த் தல்ஸ்தோய் விவரித்துக் கூறினார்.

> ''...அறுவடை, கூலிக்கு வேலையாட்களை அமர்த்திக் கொள்வது முதலானவை பற்றியெல்லாம் பேசுவது கீழ்நிலையைக் குறிக்கும் ஒன்றாய் வழக்கமாய்க் கருதப்பட்டு வந்ததென்பது லேவினுக்குத் தெரியும்... இப்பொழுது லேவினுக்கு இந்தப் பேச்சு மட்டுமே முக்கிய

மானதாய்த் தோன்றியது. 'பண்ணையடிமை முறை நிலவியபோது இது முக்கியமற்றதாய் இருந்திருக்கலாம், அல்லது இங்கிலாந்தில் இது முக்கியமற்றதாய் இருக்கலாம். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் நிலைமைகள் தெளிவாய், திட்டவட்டமாய் உள்ளன; ஆனால் இங்கே இன்று யாவும் தலைகீழாய் மாற்றப்பட்டுவிட்டன, இப்பொழுதான் மீண்டும் உருப்பெற்று வருகின்றன. இந்த நிலைமைகள் இனி எப்படிப்பட்ட வடிவம் பெறும் என்பது ஒன்றுதான் இங்கே இன்று ருஷ்யாவில் முக்கியமான பிரச்சினை' என்று லேவின் தன்னுள் நினைத்துக் கொண்டார்.'' (நூல் திரட்டு, தொகுதி 10, பக்கம் 137.)

''இங்கே ருஷ்யாவில் இன்று யாவும் தலைகீழாய் மாற்றப்பட்டுவிட்டன, இப்பொழுதுதான் மீண்டும் உருப்பெற்று வருகின்றன''—1861க்கும் 1905க்கு இடைப்பட்ட காலம் குறித்து இதைக் காட்டிலும் பொருத்தமான குண நிர்ணயிப்பு ஒன்றைக் கற்பனை செய்வது கடினம். ''தலைகீழாய் மாற்றப்பட்டது'' என்னவென்பது தெரிந்ததுதான், எப்படியும் ருஷ்யர் ஒவ்வொருவரும் நன்கு அறிந்ததுதான். பண்ணையடிமை முறையும் அதனுடன் இருந்து வந்த ''பழைய அமைப்பும்தான்'' அது. ''இப்பொழுதுதான் உருப்பெற்று வருவது'' என்னவென்பது விரிவான மக்கள் பெருந் திரளினருக்கு சிறிதும் தெரியாத, அன்னியமான, புரியாத ஒன்றுய் இருந்தது. ''இப்பொழுதுதான் உருப்பெற்று'' வந்த இந்த முதலாளித்துவ அமைப்பைத் தல்ஸ்தோய் தம் மனத்துள் தெளிவற்றதாய், அச்சந் தரும் பேயின் வடிவினதாய்—இங்கிலாந்தாய்—உருவாக்கிக் கொண்டார். மெய்யாகவே அச்சந் தரும், விளங்காத பேயின் வடிவம் கொண்டதுதான், ஏனெனில் தால்ஸ்தோய் இந்த ''இங்கிலாந்தின்'' சமூக அமைப்பினுடைய இயல்புகளை, இந்த அமைப்புக்கும் மூலதனத்தின் ஆதிக்கத்துக்குமுள்ள இணைப்பை, பணம் ஆற்றிவரும் பாத்திரத்தை, பங்கு மார்க்கெட் உதித்தெழுந்து வளர்ச்சியுற்றதை ஆய்ந்தறிவதற்கான எந்த முயற்சியையும் நிராகரிக்கின்றார், கோட்பாட்டு அளவிலேயே நிராகரிக்கின்றார் எனலாம். நரோத்னிக்குகளைப் போல அவரும்,

ருஷ்யாவில் ''உருப்பெற்று வருவது'' முதலாளித்துவ அமைப்பே என்பதைப் பார்க்க மறுக்கின்றார், கண்களைக் கெட்டியாய் மூடிக் கொள்கின்றார், அதைப் பற்றிய சிந்தனையையே தூர விலக்கி வைக்கின்றார்.

இந்த அமைப்பு—''இங்கிலாந்து'', ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்சு முதலான நாடுகளில் மிகப் பல்வேறுபட்ட வடிவங்களை ஏற்றிருந்த இந்த அமைப்பு—இங்கு ''எப்படிப் பட்ட உருவை'' ஏற்கப் போகிறது என்ற பிரச்சினை 1861-1905ஆம் ஆண்டுகளின் காலத்தில் (நமது காலத்திலும் கூடத்தான்) ருஷ்யாவில் எல்லாச் சமுதாய, அரசியல் செயற்பாடுகளின் கண்ணோட்டத்தில் ''முக்கியமான ஒரே'' பிரச்சினை என்றில்லாவிட்டாலும் எப்படியும் நிச்சயமாய் மிகவும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாய் இருந்ததென்பது உண்மையே. ஆனால் இவ்விதம் திட்டவட்டமாகவும் ஸ்தூலமான வரலாற்று வழியிலும் பிரச்சினையை எடுத்துரைப்பது தல்ஸ்தோய்க்கு முற்றிலும் அன்னியமான ஒன்று. அவர் கருத்தியலான முறையில் மட்டுமே ஆராய்கிறார்; தர்மமெனும் ''நிரந்தரக்'' கோட்பாடுகளின், மதத்தின் நிரந்தர உண்மைகளின் கண்ணோட்டத்தை மட்டுமே அங்கீகரிக்கிறார்; இந்தக் கண்ணோட்டம் (''தலைகீழாய் மாற்றப்பட்டுவிட்ட'') பழைய அமைப்பின், பிரபுத்துவ அமைப்பின், கிழக்குலக மக்களது வாழ்வியலின் சித்தாந்தப் பிரதிபலிப்பே என்பதை உணரத் தவறிவிடுகிறார்.

லுசேர்னில் (1857ல் எழுதப்பெற்றது) தல்ஸ்தோய் ''நாகரிகத்தை'' நற்பேறாய்க் கருதுவது ''கற்பனையான கருத்தாகும்'' என்று பறைசாற்றுகிறார்; நாகரிகமானது ''நல்லதே வேண்டுமென்ற அந்த உள்ளுணர்ச்சி வயப்பட்ட, பேரின்பம் பயப்பதான, நாகரிக முதிர்ச்சிக்கு முற்பட்ட பழங் காலத்துக் குரியதாகிய தேவையை மனித இயல்பிலிருந்து அழித்துவிடுகிறது'' என்கிறார். ''நம்மிடத்துள்ள பிழைபாடற்ற ஒரே வழிகாட்டி நம்முள் நிறைந்திருக்கும் சர்வவியாபகமான பரமாத்மாதான்'' என்று பரவசப்பட்டுக் கொள்கிறார் தல்ஸ்தோய். (நூல் திரட்டு, தொகுதி 2, பக்கம் 125.)

நம் காலத்து அடிமைமுறையில் (1900ல் எழுதப்பெற்றது) தல்ஸ்தோய் மேலும் பரவசமுற்று இந்தச் சர்வவியாபகப்

பரமாத்மாவை மீண்டும் மீண்டும் கூவியழைக்கின்றார்; அரசியல் பொருளாதாரம் ஒரு ''போலி விஞ்ஞானம்'' என்று பறைசாற்றுகிறார், ஏனெனில் இது ''அனைத்து உலகிலும் அனைத்து வரலாற்றிலும் இருக்கும் மனிதர்களது நிலை மைகளை'' எடுத்துக் கொள்வதற்குப் பதில் ''மிகவும் விதி விலக்கான நிலைமைகளைக் கொண்ட சின்னஞ்சிறு இங்கிலாந் தை'' முன்மாதிரியாய் எடுத்துக் கொள்கிறது என்கிறார். இந்த ''அனைத்து உலகு'' எப்படிப்பட்டது என்பதை ''முன் னேற்றமும் கல்வியின் இலக்கணமும்'' என்னும் கட்டுரையில் (1862) நமக்குப் புலப்படுத்துகின்றார். முன்னேற்றம் ''மனித குலத்துக்குரிய பொது விதி'' என்று ''வரலாற்றியலாளர்கள்'' கூறும் அபிப்பிராயத்தை எதிர்த்து, தல்ஸ்தோய் ''கிழக் குலகு என்பதாய் அழைக்கப்படும் பகுதி முழுவதையும்'' சுட்டிக்காட்டி வாதாடுகிறார் (தொகுதி 4, பக்கம் 162). ''மனித முன்னேற்றம் என்பதான பொது விதி எதுவும் இல்லை, கிழக்குலக மக்களின் செயலடங்கிச் சும்மாயிருக்கும் நிலையானது இதை நிரூபிக்கிறது'' என்கிறார் தல்ஸ்தோய்.

தல்ஸ்தோயம், அதன் மெய்யான வரலாற்று உள்ளடக் கத்தில், கிழக்குலக, ஆசிய வகையிலான அமைப்புக்குரிய ஒரு சித்தாந்தமாகும். எனவேதான் இந்தத் துறவு மனப்பான்மை; தீமையை எதிர்த்துப் போராடாப் போக்கு; நன்னம்பிக்கை ஆர்வமில்லாத் துயரார்ந்த தொனி; ''எல்லாம் மாயை, பொருளாயத அளவில் எல்லாம் சூன்யமே'' (''வாழ்வின் அர்த்தம்'', பக்கம் 52) என்றும், ''பரமாத்மா''வில், ''யாவற் றுக்குமான ஆதிநிலை''யில் நம்பிக்கை வைத்து, இந்த ஆதி நிலையுடனுள்ள உறவைப் பொறுத்தவரை மனிதன் வெறும் ''பணியாளன்தான்...தனது ஆன்மாவுக்கு விமோசனம் தேடிக் கொள்ளும்படி பணிக்கப்பட்டவன்தான்'' என்றும், இன்ன பலவாறுகவும் கூறும் இந்த மனோதர்மம். தல்ஸ்தோய் தமது கிறுய்ட்ஸர் சொனட்டாவிலும் இந்தச் சித்தாந்தத்துக்கு முற்றி லும் ஏற்றவாறே கூறுகின்றார்: ''பெண்ணின் விடுதலைக்கு வழி கல்லூரிகள் அல்ல, பாராளுமன்றங்கள் அல்ல, படுக் கையறையே''; 1862ல் எழுதப்பெற்ற கட்டுரையில், பல்கலைக் கழகங்கள் ''சிடுசிடுப்பான, வலுவிழந்த மிதவாதிகளையே'' பயிற்றுவித்துத் தருகின்றன, இவர்களால் ''மக்களுக்கு

எந்தப் பயனும் இல்லை'', இவர்கள் ''தமது பழையச் சுற்றுச் சார்பிலிருந்து பிய்க்கப்பட்டுப் பயனற்றோராகியவர்கள்'', ''வாழ்க்கையில் இடம் காண முடியாதவர்கள்'' என்றெல் லாம் கூறுகிறார் (தொகுதி 4, பக்கங்கள் 136-37).

நன்னம்பிக்கையின்மை, தீமையை எதிர்க்காதிருத்தல், ''பரமாத்மாவுக்கு'' வேண்டுகோள்கள் ஆகிய இவையாவும், பழைய அமைப்பு பூராவும் ''தலைகீழாய் மாற்றப்பட்டு'', இந்தப் பழைய அமைப்பிலே வளர்ந்து ஆளாகியோரும் இந்த அமைப்புக்குரிய கோட்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் நம்பிக்கைகளையும் தாய்ப் பாலுடன் கூட உட் கொண்டு வளர்ந்தோருமாகிய வெகுஜனங்கள் **எப்படிப்பட்ட** புதிய அமைப்பு ''உருப்பெற்று வருகிறது'', இதை **எந்தச்** சமூக சக்திகள், எப்படி ''உருப்பெறச்'' செய்கின்றன, ''கொந்தளிப்பான'' சகாப்தங்களுக்குரிய குணதிசயமான என்றுமிலாக் கடுமை வாய்ந்த, சொல்லொணாக் கொடுந் துன்பத்திலிருந்து விமோசனத்துக்கு எந்தச் சமூக சக்திகள் வகை செய்ய **வல்லவை** என்பதை அறியாதவர்களாகவும் அறிய முடியாதவர்களாகவும் இருக்கும் ஒரு சகாப்தத்தில் தவிர்க்க முடியாததான சித்தாந்தமாகும்.

1862—1904ஆம் ஆண்டுகளின் காலம் ருஷ்யாவில் இப்படிப்பட்ட கொந்தளிப்பான ஒரு காலகட்டமாகவே இருந்தது; பழைய அமைப்பு எந்நாளும் மீட்டமைக்க முடியாதவாறு எல்லோர் கண்ணுக்கும் முன்னால் சரிந்து விழுந்து, புதிய அமைப்புஅப்பொழுதுதான் உருப்பெற்று வந்த ஒரு காலகட்டமாகவே இருந்தது. இந்தப் புதிய அமைப்பை உருபெறச் செய்து வந்த சமூக சக்திகள் 1905ஆம் ஆண்டில் தான் மிகப் பல்வேறுபட்ட துறைகளிலுமாகிய விரிவான, நாடு தழுவிய அளவிலான வெகுஜனப் பொதுச் செயலில் முதன்முதல் தம்மை வெளிப்படுத்திக் கொண்டன. ருஷ்யா வில் 1905ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பின் தொடர்ந்து இவற்றையொத்த நிகழ்ச்சிகள், 1862ல் தல்ஸ் தோய் எதைப் பார்த்துச் ''செயலடங்கிச் சும்மாயிருக்கிறது'' என்று குறிப்பிட்டாரோ அதே ''கிழக்குலகில்'' பல நாடுகளி லும் மூண்டெழுந்தன. ''கிழக்குலகின்'' செயலடங்கிச் சும் மாயிருக்கும் நிலை முடிவுறுவதன் துவக்கத்தைக் குறிப்பிட்டது

1905 ஆம் ஆண்டு. இதே காரணத்தினால் அந்த ஆண்டு தல்ஸ்தோயத்தின் வரலாற்றுக் காலம் முடிவுற்றதையும் குறிப்பிட்டது. தல்ஸ்தோயின் போதனைகளைத் தோன்றியெழச் செய்யக் கூடியதும் செய்ய வேண்டியதுமான ஒரு சகாப்தம், இந்தப் போதனைகள் தனிப்பட்ட ஒருவருடையது என்ற முறையில் அல்ல, மனம் போன போக்கிலான அல்லது பித்துக்குளியின் மோகம் போன்றதான ஒன்று என்ற முறையில் அல்ல, குறிப்பிட்ட ஒரு காலத்தில் கோடானுகோடியானோர் மெய்யாகவே வாழ வேண்டியிருந்த வாழ்க்கையின் நிலைமைக்கு உரித்தான சித்தாந்தம் என்ற முறையில் தவிர்க்க முடியாதனவாய் இருந்த ஒரு சகாப்தம் முடிவுற்றதையும் அந்த ஆண்டு குறிப்பிட்டது.

தல்ஸ்தோயின் போதனை நிச்சயமாய்க் கற்பனாவாத போதனைதான்; உள்ளடக்கத்தில் பிற்போக்கானதுதான்—இந்தச் சொல்லின் மிகவும் துல்லியமான, மிகவும் ஆழ்ந்த பொருளில். ஆனால் இந்தப் போதனை சோஷலிசத் தன்மையதல்ல என்றோ, முன்னேறிய வர்க்கங்கள் அறிவொளி பெறுவதற்கு மதிப்புமிக்க விவரப் பொருளை அளிக்கக் கூடிய விமர்சன வழிப்பட்ட கூறுகள் இதில் அடங்கியிருக்கவில்லை என்றோ ஒருபோதும் இதற்கு அர்த்தமல்ல.

சோஷலிசத்தில் பல்வேறு வகைகள் உண்டு. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் ஆதிக்கத்திலுள்ள எல்லா நாடுகளிலும், முதலாளித்துவ வர்க்கத்தின் இடத்தை ஏற்கப் போகும் வர்க்கத்தினுடைய சித்தாந்தத்தை வெளியிடும் சோஷலிசமும் இருக்கிறது; முதலாளித்துவ வர்க்கத்தால் அப்புறப்படுத்தப்படப் போகும் வர்க்கங்களுடைய சித்தாந்தத்தை வெளியிடும் சோஷலிசமும் இருக்கிறது. உதாரணமாய், பிரபுத்துவ சோஷலிசம் இந்த இரண்டாவது ரகத்தைச் சேர்ந்த சோஷலிசமே ஆகும். இந்த சோஷலிசத்தின் தன்மையை நெடுங் காலத்துக்கு முன்பு, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, மார்க்ஸ் ஏனைய ரகங்களைச் சேர்ந்த சோஷலிசத்தைப் பற்றிய தமது மதிப்பீட்டின் கூடவே, மதிப்பிட்டுக் கூறினார்.

தவிரவும், விமர்சன வழிப்பட்ட கூறுகள் கற்பனாவாத அமைப்புகள் பலவற்றிலும் இருப்பது போலவே தல்ஸ்தோ

யின் கற்பனாவாத போதனையிலும் உள்ளமைந்திருக்கின்றன. ஆனால் கற்பனாவாத சோஷலிசத்திலுள்ள விமர்சன வழிப்பட்ட கூறுகளின் மதிப்பு ''வரலாற்றின் வளர்ச்சிக்குத் தலைகீழ் விகிதத்தில் அமைகிறது'' என்பதாய் மார்க்ஸ் ஆழ்ந்த பொருட் செறிவுடன் கூறியதை நாம் மறக்கலாகாது. புதிய ருஷ்யாவை ''உருப்பெறச்'' செய்து இன்றையச் சமூகக் கேடுகளிலிருந்து விமோசனம் கிடைக்கச் செய்யும் சமூக சக்திகளுடைய செயற்பாடுகள் எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ந்து திட்டவட்டமான தன்மையுடைத்தவை ஆகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு விரைவாய் விமர்சன-கற்பனாவாத சோஷலிசம் ''நடைமுறை மதிப்பு அனைத்தும், தத்துவார்த்த நியாயம் அனைத்தும் இழந்துவிடுகிறது''.

தல்ஸ்தோயின் போதனையிலுள்ள விமர்சன வழிப்பட்ட கூறுகள், இந்த போதனையின் பிற்போக்குவாத, கற்பனாவாத இயல்புகளையும் மீறி, கால் நூற்றாண்டுக்கு முன்பு பொது மக்களில் சில பகுதியோருக்கு நடைமுறை மதிப்புடையதாய் இருந்தன. ஆனால், உதாரணமாய்க் கடந்த பத்தாண்டுகளில், இப்படிச் சொல்ல முடியாது, ஏனெனில் 1880ஆம் ஆண்டுகளுக்கும் கடந்த நூற்றாண்டின் இறுதிக்கும் இடையில் வரலாற்று வளர்ச்சி கணிசமான அளவு முன்னேறிவிட்டது. நமது நாட்களில், மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகளின் கோவை ''கிழக்குலகின்'' செயலடங்கிச் சும்மாயிருக்கும் நிலைக்கு முடிவு கட்டிவிட்டதால், நமது நாட்களில் ''வேஹி''யின் உணர்வுபூர்வமான பிற்போக்குக் கருத்துக்கள் (குறுகிய-வர்க்க, தன்னலவயப்பட்ட-வர்க்கக் கருத்துக்கள் என்னும் அர்த்தத்தில் பிற்போக்கானவை) மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே இவ்வளவு அமோகமாய்ப் பல்கிப் பரவிவிட்டதால், ஏறத்தாழ மார்க்சியவாதிகளானோரில் ஒரு பிரிவினரிடையிலுங்கூட இந்தக் கருத்துக்கள் தொத்திக்கொண்டு கட்சிக் ''கலைப்புவாத''ப்போக்கு[47] ஒன்றைத் தோற்றுவித்துவிட்டதால்—நமது நாட்களில், தல்ஸ்தோயின் போதனையைப் புனித இலட்சியமாய் உயர்த்தி வைப்பதற்கான எந்த முயற்சியும், ''தீமையை எதிர்த்துப் போராடாத'' அவர் நிலை, ''பரமாத்மா'' என்பதான அவருடைய வேண்டுகோள்கள், ''நன்னெறியாளராய் அவரவரும் தம்மைச் செம்மை செய்து கொள்ளுதல்''

என்ற அவருடைய அறிவுறுத்தல்கள், ''மனசாட்சி'', சர்வவியாபக ''அன்பு'' ஆகிய அவரது போதனை, துறவு மனப்பான்மையையும் சாத்வீகவாதத்தையும்[48] வற்புறுத்தும் அவருடைய உபதேசம் முதலான பலவற்றையும் உயர் சிறப்புக்குரியனவாய்ப் போற்றுவதற்கோ, அவற்றுக்கு நியாயம் கற்பிப்பதற்கோ, அவற்றை மட்டுப்படுத்திக் கூறுவதற்கோ செய்யப்படும் எந்த முயற்சியும் மிகவும் நேரடியான, மிகவும் கடுமையான தீங்கே இழைக்கின்றது.

ஸ்வெஸ்தா, இதழ் 6,
1911 ஜனவரி 22
ஒப்பம்: வி. இலியின்

நூல் திரட்டு,
தொகுதி 20,
பக்கங்கள் 100-104

மாருஷ்யர்களது
தேசியப் பெருமித உணர்ச்சி குறித்து

தேசிய இனமென்றும் தந்தையர் நாடென்றும் இன்று அடிபடும் பேச்சுக்கும், நடைபெறும் வாக்குவாதத்துக்கும், போடப்படும் கூப்பாட்டுக்கும் அளவே இல்லை! இங்கிலாந்தில் அரசாங்க அமைச்சர்களான மிதவாதிகளும் தீவிரவாதிகளும், பிரெஞ்சு நாட்டில் ''முன்னேக்காளர்களாகிய'' ஏராளமான பத்திரிகையாளர்களும் (தமது பிற்போக்குச் சகாக்களுடன் முழு அளவுக்குக் கருத்து உடன்பாடு கொண்டவர்கள்தான்), ருஷ்யாவில் பெருங் கும்பலாய் மொய்க்கும் அதிகாரத் துறையோரும் காடேட்டுகளும் முன்னேற்றத்தினருமாகிய எழுதுகோலர்களும் (சில நரோத்னிக்குகளும் ''மார்க்சியவாதிகளும்'' இவர்களிடையே இடம் பெறுகின்றனர்)—எல்லோரும் அடங்காத ஆர்வங் கொண்டு, தத்தமது ''தாயகத்தின்'' சுதந்திரத்தையும் சுயேச்சை வாழ்வையும், தேசிய சுயேச்சை என்னும் கோட்பாட்டின் மகத்துவத்தையும் போற்றிப் புகழ்கிறார்கள். இதில் கொலேகார நிக்கலாய் ரமானவையோ, நீக்ரோக்களையும் இந்தியர்களையும் அடக்கியொடுக்கும் கொடியரையோ மெச்சிப் புகழ்பாடும் கூலி எழுத்தாளர் எங்கே முடிவுறுகிறார், முற்றிலும் மடமையின் காரணமாகவோ மனவுறுதியின்மையின் காரணமாகவோ வெள்ளத்தோடு போய்க் கொண்டிருக்கும் சாதாரணக் குட்டி பூர்ஷ்வா அற்பவாதி எங்கே ஆரம்பமாகிறார் என்று இனங் கண்டு கூறுவதற்கில்லை. இப்படி இனங் கண்டு வேறுபாடு செய்வது முக்கியமானதுமல்ல. விரிவான, மிகவும் ஆழமான

சித்தாந்தப் போக்கை நம்முன்னே காண்கிறோம். இந்தப் போக்கின் மூலாதாரங்கள், ஆதிக்க நிலையிலுள்ள தேசிய இனங்களைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள், முதலாளிகளது நலன்களோடு நெருங்கப் பிணைந்தவை. இந்த வர்க்கங்களுக்கு அனுகூலமாயிருக்கும் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதற்காக ஆண்டுதோறும் கோடி கோடியாய்ப் பணம் செலவிடப் பட்டு வருகிறது. மனப்பூர்வமான தேசியவெறியராகிய மேன்ஷிக்கவிலிருந்து தொடங்கி, சந்தர்ப்பவாதம் அல்லது துணிவின்மை காரணமாய் தேசியவெறியர்களாய் இருக்கும் பிளெஹானவும் மாஸ்லவும், ருபனேவிச்சும் ஸ்மிர்னேவும், கிராப்போத்கினும் பூர்த்ஸெவும் போன்றோர் வரையிலான எல்லாத் தோற்றுவாய்களிலிருந்தும் வரும் நீரெல்லாம் சேர்ந்து புரண்டோடும் பெரும் பெருக்கு இது.

மாருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளாகிய நாமும் இந்தச் சித்தாந்தப் போக்கு குறித்து நமது நிலை என்னவென்பதை வரையறுக்க முயலுவோம். ஐரோப்பாவின் தொலைக் கிழக்கிலும் ஆசியாவில் ஒரு பெரும் பகுதியிலும் ஆதிக்க நிலையிலுள்ள ஒரு தேசிய இனத்தின் பிரதிநிதிகளாகிய நாம், தேசிய இனப் பிரச்சினையின் பிரம்மாண்ட முக்கியத்துவத்தை மறப்பது அழகாகாது. அதுவும் முக்கியமாய், ''பல தேசிய இன மக்களது சிறைக்கூடம்'' என்று பொருத்தமாகவே அழைக்கப்படும் ஒரு நாட்டில், இன்னும் குறிப்பாய் முதலாளித்துவமானது ஐரோப்பாவின் தொலைக் கிழக்கிலும் ஆசியாவிலும் சிறிதும் பெரிதுமான மிகப் பல ''புதிய'' தேசிய இனங்களை விழிப்புற்று எழச் செய்து உயிர்ப்பும் தன்னுணர்வும் பெறவைக்கும் ஒரு காலத்தில், ஜாரிஸ்டு முடியரசானது ஐக்கியப் பிரபுக்குலச் சபையின்[49] நலன்களுக்கு ஏற்பவும் குச்கோவ்கள், கிரெஸ்தோவ்னிக்கவ்கள், தல்கருக்கவ்கள், குத்லெர்கள், ரோதிச்செவ்கள் ஆகியோரின் நலன்களுக்கு ஏற்பவும் தேசிய இனப் பிரச்சினைகள் பலவற்றுக்கும் ''தீர்வு காணும்'' விதத்தில் லட்சக் கணக்கில் மாருஷ்யர்களையும் ''ருஷ்யரல்லாதோரையும்'' படைக்கு அழைத்துள்ள ஒரு தருணத்தில் இதை நாம் மறக்கலாகாது.

வர்க்க உணர்வு கொண்ட மாருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தவர்களாகிய நமக்கு தேசியப் பெருமித உணர்ச்சி அன்

னியமானதா, என்ன? இல்லவே இல்லை! நமது மொழியையும் நமது நாட்டையும் நேசிப்பவர்கள் நாம்; இந்நாட்டின் உழைப்பாளிப் பெருந்திரளினரை (அதாவது இந்நாட்டு மக்களில் பத்தில் ஒன்பது பங்காளரை) ஜனநாயக, சோஷலிச உணர்வு பெறும் நிலைக்கு உயர்த்துவதற்காக இயன்றது அனைத்தும் செய்துவருகிறவர்கள் நாம். ஜாரின் கொலை வெறியர்களாலும் பிரபுக்களாலும் முதலாளிகளாலும் நமது இன்னரும் தாயகத்துக்கு இழைக்கப்படும் அட்டூழியங்களையும் ஒடுக்குமுறையையும் இழிவையும் கண்டும் உணர்ந்தும் நெஞ்சு பொறுக்காது நாம் வேதனைப்படுகிறோம். இந்த அட்டூழியங்களுக்கு நம் மத்தியிலிருந்து, மாருஷ்யர்கள் மத்தியிலிருந்து காட்டப்படும் எதிர்ப்பைக் கண்டு பெருமிதம் கொள்கிறோம். இதே மக்கள் மத்தியிலிருந்து ரதீஷ்செவும், டிசம்பரிஸ்டுகளும்[50], 1870ஆம் ஆண்டுகளது ரஸ்னச்சீன்த்சி புரட்சி வீரர்களும்[51] உருவாகி உதித்தெழுந்தது குறித்தும், மாருஷ்யத் தொழிலாளி வர்க்கம் வலிமை வாய்ந்த வெகுஜனப் புரட்சிக் கட்சி ஒன்றை 1905ல் உருவாக்கியது குறித்தும், மாருஷ்ய விவசாயிகள் ஜனநாயகத்தின் பக்கம் அணிதிரண்டு மதகுருமார்களையும் நிலப்பிரபுக்களையும் வீழ்த்த முற்பட்டிருப்பது குறித்தும் நாம் பெருமிதப்பட்டுக் கொள்கிறோம்.

புரட்சி இலட்சியத்துக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட மாருஷ்ய ஜனநாயகவாதி செர்னிஷேவ்ஸ்கி ''இழிவுறும் தேசம், அடிமைகளது தேசம், உச்சியிலிருந்து அடிவரை—எங்கும் அடிமைகள்''[52] என்று அரை நூற்றாண்டுக்கு முன்பு கூறியதை நாங்கள் நினைவில் வைத்திருக்கிறோம். மாருஷ்ய அடிமைகள், வெளிப்படையாகவும் மறைவாகவும் அடிமைகளாய் (ஜாரிஸ்டு முடியாட்சி குறித்து அடிமைகளாய்) இருக்கும் இவர்களுக்கு இச்சொற்களை நினைவு கூர்வது பிடிக்கவில்லை. ஆனால் நம்முடைய அபிப்பிராயத்தில் இச்சொற்கள் நம் நாட்டின் மீதான மெய்யான பற்றுதலை, மாருஷ்ய மக்களின் பெருந் திரளினரிடையே புரட்சி மனோபாவம் இருக்கவில்லையே என்னும் வேதனை மிகுந்த பற்றுதலைக் குறிப்பவை. அக்காலத்தில் இந்தப் புரட்சி மனோபாவம் இருக்கவில்லை. தற்போதும் சொற்பமாகவே இருக்கிறது

என்றாலும், ஏற்கனவே இது உதித்தெழுந்துவிட்டது. மாருஷ்ய தேசிய இனமும் கூட புரட்சிகரமான ஒரு வர்க்கத்தைத் தோற்றுவித்திருக்கிறது என்பதால், இதுவும் கூட கொடுங் கொலைவெறித் தாண்டவங்களையும் வரிசையாய்த் தூக்கு மேடைகளையும் கொடுஞ்சிறைகளையும் பெரும் பஞ்சங்களை யும் மதகுருமார்கள், ஜார்கள், நிலப்பிரபுக்கள், முதலாளி களுக்கு அடிபணியும் அடிமைப்புத்தியையும் மட்டுமின்றி, சுதந்திரத்துக்கும் சோஷலிசத்துக்குமான போராட்டத்தின் மாபெரும் முன்மாதிரிகளையும் மனிதகுலத்துக்கு வழங்கும் திறனுடையதாய் இருக்கிறது என்பதால் நம் நெஞ்சினுள் தேசியப் பெருமித உணர்வு ஊற்றெடுக்கின்றது.

நம் நெஞ்சினுள் தேசியப் பெருமித உணர்வு நிறம்பி யிருக்கிறது. எனவேதான் மிகவும் குறிப்பாய் நாம் அடிமைத் தனம் மலிந்த நமது கடந்த காலத்தை (நிலப்பிரபுக்கள் விவ சாயிகளைப் படைதிரட்டி ஹங்கேரி, போலந்து, பாரசீகம், சீனு ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை நசுக்குவதற்காக இட்டுச் சென்ற அக்காலத்தை) வெறுக்கின்றோம்; அதே போல இதே நிலப்பிரபுக்கள் முதலாளிகளுடைய துணையுடன் இன்று போலந்தையும் உக்ரேனியாவையும் அடக்குவதற்காகவும், பாரசீகத்திலும் சீனுவிலும் ஜனநாயக இயக்கத்தை நசுக்கு வதற்காகவும் நமது மாருஷ்யத் தேசியக் கவுரவத்துக்கு இழிவு உண்டாக்கும் ரமானவ்கள், பப்ரீன்ஸ்கிகள், புரிஷ்கேவிச்சு கள் ஆகிய கும்பலைப் பலப்படுத்துவதற்காகவும் நம்மை ஒரு யுத்தத்தினுள் இழுத்துச் செல்லும் இந்த நிகழ்காலத்தையும் வெறுக்கின்றோம். அடிமையாய்ப் பிறந்ததற்காக யாரையும் குறை சொல்ல முடியாதுதான், ஆனால் சுதந்திரத்துக்காகப் பாடுபடுவதை விட்டொழிப்பதோடு கூட தனது அடிமைத் தனத்துக்கு நியாயம் கூறி அதைப் புகழ்ந்து கொள்கிறவன் (உதாரணமாய், போலந்தும் உக்ரேனியாவும் பிறவும் அடக்கி யொடுக்கப் படுவதைத் மாருஷ்யர்களது ''தாயகப் பாது காப்பு'' என்கிறவன்), வெட்கங்கெட்ட இழி பிறவியே ஆவான்; நியாயமாகவே இவன் மீது ஆத்திரமும் அருவருப்பும் வெறுப்புமே உண்டாகிறது.

''பிற தேசங்களை ஒடுக்கும் எந்தத் தேசமும் சுதந்திர மாய் இருக்க முடியாது''[53] என்றனர், முரணற்ற பத்தொன்ப

தடாம் நூற்றுண்டு ஜனநாயகத்தின் மகோன்னதப் பிரதிநிதிகளும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் போதனாசிரியர்கள் ஆகியோருமான மார்க்சும் ஏங்கெல்சும். தேசியப் பெருமிதம் மிகுந்த மாருஷ்யத் தொழிலாளர்களாகிய நாம் என்ன நேரிடினும் சுதந்திரமான, சுயேச்சையான, ஜனநாயகமான, குடியரசாய் அமைந்த, பெருமிதம் கொண்ட மாருஷ்யா வேண்டுமென விரும்புகிறோம், தனது அண்டைத் தேசத்தவர்களுடன் தன் உறவுகளை சமத்துவமெனும் மனித மாண்புக்குரிய கோட்பாட்டின் அடிப்படையில்—மாபெரும் ஒரு தேசத்துக்கு இழிவையே உண்டாக்கும் தனிச் சலுகையெனும் பிரபுத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் அல்ல — வகுத்துக் கொள்ளும் மாருஷ்யா வேண்டும் என்கிறோம். இதை நாம் விரும்புவதால்தான், நாம் கூறுகிறோம்: இருபதாம் நூற்றுண்டில், ஐரோப்பாவில் (ஐரோப்பாவின் தொலைக் கிழக்கே என்றாலுங்கூட) சொந்த தாயகத்தின் முடியாட்சியையும் நிலப் பிரபுக்களையும் முதலாளிகளையும், அதாவது நம் நாட்டின் படுமோசமான பகைவர்களை, புரட்சிகரமான எல்லா வழிகளிலும் எதிர்த்துப் போராடுவதை அன்றி வேறு எவ்விதமாகவும் ''தாய்நாட்டைப் பாதுகாப்பது'' சாத்தியமல்ல என்று கூறுகிறோம். எந்த யுத்தத்திலும் ஜாரிசத்தின் தோல்வியை—மாருஷ்யாவில் வாழ்வோரில் பத்தில் ஒன்பது பகுதியோருக்கு இதுவே குறைவான கேடாய் இருக்குமாதலால்—விரும்புவதை அன்றி, வேறு எவ்விதத்திலும் மாருஷ்யர்கள் ''தமது தாயகத்தைப் பாதுகாத்துக் கொள்ள'' முடியாது என்கிறோம். ஏனெனில் ஜாரிசமானது இந்தப் பத்தில் ஒன்பது பகுதியோரைப் பொருளாதார, அரசியல் வழிகளில் ஒடுக்குகிறது என்பதோடு, பிற தேசங்களை அடக்கியொடுக்கவும் இந்த அவக்கேட்டைக் கபடமான, போலியான தேசபக்தத் தொடர்களால் மூடிமறைக்கவும் போதித்து இவர்களை மனச் சோர்வுற்றுச் சீர்கேடுறச் செய்கிறது; மானமிழந்து கேவலப்படச் செய்கிறது; கேடுகெட்ட இழியோராக்குகிறது.

ஜாரிசத்தை அன்னியில் அதன் கொடையின் கீழ் மற்றொரு வரலாற்றுச் சக்தி—அதாவது மாருஷ்ய முதலாளித்துவம்—எழுந்து வலிமையுற்றுள்ளது, இது பெரும்பெரும் பிராந்

தியங்களை எல்லாம் பொருளாதார வழியில் மத்தியத்துவப் படுத்தி ஒருசேர இணைத்திடுகிறது என்பதாய் ஆட்சேபம் கூறப்படலாம். ஆனால் இந்த ஆட்சேபனை நமது சோஷலிஸ்டு-தேசியவெறியர்களை மேலும் நிந்தனை செய்கிறதே அன்றி, இவர்களை மன்னித்து விடவில்லை. முன்பு லஸ்ஸாலியர்களை[54] மார்க்ஸ் முடியரசுவாத-பிரஷ்ய சோஷலிஸ்டுகள் என்று அழைத்தது போல, நமது சோஷலிஸ்டு-தேசியவெறியர்களை நாம் ஜாரிஸ்டு-புரிஷ்கேவிச் சோஷலிஸ்டுகள் என்று அழைக்க வேண்டும். மாருஷ்ய ஆதிக்க-இன முதலாளித்துவத்துக்குச் சாதகமாகவும் நூற்றுக் கணக்கான சிறு தேசிய இனங்களுக்கு எதிராகவும் வரலாறு தீர்மானிக்கப் போகிறது என்பதாகவே வைத்துக் கொள்வோம். இது நடைபெற முடியாத ஒன்றல்ல, ஏனெனில் மூலதனத்தின் வரலாறு அனைத்துமே வன்முறைக்கும் கொள்ளைக்கும், இரத்தக் களரிக்கும் புன்மைக்கும் உரித்தான வரலாறுதான். எந்த விலை கொடுக்க நேர்ந்தாலும் சிறிய தேசிய இனங்கள் அப்படியே என்றென்றும் இருந்தாக வேண்டுமென்பதை நாங்கள் ஆதரிப்பவர்கள் அல்ல. **பிற நிலைமைகள் பொருத்தமாய் இருக்கையில்,** சந்தேகத்துக்கு இடமின்றி நாம் மத்தியத்துவத்தையே ஆதரிக்கிறோம்; குட்டிபூர்ஷுவா இலட்சியமாகிய கூட்டாட்சி உறவுகளை எதிர்க்கிறோம். ஆயினும் மேலே நாம் கொண்ட கற்பிதம் மெய்யாகிவிடும் போதும்கூட, முதலாவதாக, ரமானவ்-பப்ரீன்ஸ்கி-புரிஷ்கேவிச் கும்பல் உக்ரேனியாவையும் பிற வற்றை அடக்கியொடுக்க உதவுவது நம்முடைய வேலையல்ல, ஜனநாயகவாதிகளது வேலையல்ல (சோஷலிஸ்டுகளது வேலையல்ல என்பதைக் கூறவே வேண்டியதில்லை). பிஸ்மார்க் அவருக்குரிய ஜங்கர் பாணியில், முற்போக்கான வரலாற்றுப் பணியைச் செய்தார் என்றாலும், இந்தக் காரணத்தின் அடிப்படையில் பிஸ்மார்க்கை சோஷலிஸ்டுகள் ஆதரிப்பது நியாயமே என்று வாதாட முற்படும் ஒருவர் அதியற்புத ''மார்க்சியவாதியாகவே'' இருப்பார்! தவிரவும், பிஸ்மார்க் பிற தேசங்களால் ஒடுக்கப்பட்டுவந்த ஜெர்மானியர்களை, பிளவுண்டிருந்த ஜெர்மானியர்களை ஒருசேர இணைத்ததன் மூலம், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டிவிட்டார். ஆனால் மாருஷ்யா

வின் பொருளாதார சுபிட்சத்துக்கும் துரித வளர்ச்சிக்கும் தேவையாய் இருப்பது, பிற தேசிய இனங்கள் மீதான மாருஷ்ய ஒடுக்குமுறையிலிருந்து நாடு விடுவிக்கப்பட வேண்டுமென்பதே—இதுதான் பிஸ்மார்க்குகளாவதற்கு விரும்பும் உண்மை-ருஷ்யர்களைப் போற்றும் நம்மவர்கள் கவனியாது ஒதுக்கும் வேறுபாடு.

இரண்டாவதாக, மாருஷ்ய ஆதிக்க-இன முதலாளித்துவத்துக்குச் சாதகமாய் வரலாறு தீர்மானிக்கப் போகிறதெனில், முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்படும் கம்யூனிசப் புரட்சியின் தலைமையான உந்து விசையான மாருஷ்யப் பாட்டாளி வர்க்கத்துக்குள்ள சோஷலிசப் பாத்திரம் மேலும் கூடுதலாய் இருக்க வேண்டுமென்பதே அதிலிருந்து பெறப்படும் முடிவு. தேசிய இனங்களிடையே முழுநிறைவான சமத்துவமும் சோதரத்துவமும் நிலவுதற்கான மனப்பான்மையில் தொழிலாளர்கள் நீடித்த போதம் பெறுதல் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு அத்யாவசியமாகும். ஆகவே, மாருஷ்யர்களால் ஒடுக்கப்படும் எல்லாத் தேசிய இனங்களது முழுநிறைச் சமத்துவத்தையும் சுயநிர்ணய உரிமையையும் உறுதியாகவும் முரணின்றியும் துணிவோடும் புரட்சிகர முறையில் ஆதரித்துச் செயல்பட வெகுஜனங்கள் முறையான போதமளிக்கப்படுதல் மாருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு அவசியமாகும். மாருஷ்யத் தேசியப்பெருமித உணர்ச்சியின் நலன்களும் (அடிமைத்தனமான அர்த்தத்தில் அல்ல), மாருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தினருக்கும் ஏனைய எல்லாப் பாட்டாளி வர்க்கத்தினருக்கும் உரிய சோஷலிச நலன்களுடன் ஒன்றிவிடுகின்றன. எப்பொழுதும் நமக்கு முன்னுதாரணமாய்த் திகழ்பவர் மார்க்ஸ்தான். பல பத்தாண்டுகளாய் இங்கிலாந்தில் வாழ்ந்து பாதி-ஆங்கிலேயரான பின், பிரிட்டிஷ் தொழிலாளர்களுடைய சோஷலிச இயக்கத்தின் நலன்களுக்காக ஐயர்லாந்துக்குச் சுதந்திரமும் தேச சுயேச்சையும் வேண்டுமென்று மார்க்ஸ் கோரினார்.

மேலே நாம் பரிசீலனை செய்த இரண்டாவது சந்தர்ப்பத்தில், நமது உள்நாட்டுச் சோஷலிஸ்டு-தேசியவெறியர்களான பிளெஹானவும் ஏனையோரும் அவர்களுடைய

தாயகத்துக்கு மட்டுமின்றி—அதாவது சுதந்திர, ஜனநாயக மாருஷ்யாவுக்கு மட்டுமின்றி—ருஷ்யாவில் வாழும் எல்லாத் தேசிய இனங்களது பாட்டாளி வர்க்கச் சோதரத்துவத்துக்கும் — அதாவது சோஷலிசத்துக்கும் — துரோகமிழைப்போராகி விடுவர்.

சோத்ஸியல்-தெமாக்கிராத்,
இதழ் 35, 1914 டிசம்பர் 12

நூல் திரட்டு,
தொகுதி 26
பக்கங்கள் 106-110

ஏகாதிபத்தியமும்
சோஷலிசத்தில் பிளவும்

ஏகாதிபத்தியத்துக்கும் ஐரோப்பாவில் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் (சமூக-தேசியவெறியின் வடிவில்) கண்டிருக்கும் ஈனத்தனமான, அருவருக்கத்தக்க வெற்றிக்கும் ஒட்டுறவு உண்டா?

இது நவீனகால சோஷலிசத்துக்குரிய அடிப்படைப் பிரச்சினையாகும். முதலாவதாக, நாம் வாழும் இச்சகாப்தமும் தற்போது நடைபெறும் யுத்தமும் ஏகாதிபத்தியத்தன்மை வாய்ந்தவை என்பதையும், இரண்டாவதாக, சமூக-தேசியவெறியும் சந்தர்ப்பவாதமும் பிரிக்க முடியாதவாறு வரலாற்று வழியில் இணைந்திருக்கின்றன என்பதையும், மற்றும் அரசியல் சித்தாந்தத்தில் உள்ளார்ந்த முறையில் இவை ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன என்பதையும் நமது கட்சி வெளியீடுகளில் முழு அளவுக்கு நிலைநாட்டிவிட்ட நாம், இந்த அடிப்படைப் பிரச்சினையைப் பகுத்தாராய முற்பட லாம், அவசியம் முற்பட்டாகவும் வேண்டும்.

ஏகாதிபத்தியம் குறித்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு துல்லியமான, முழுமையான இலக்கணத்தை அளித்து நாம் இந்தப் பகுத்தாய்வைத் தொடங்க வேண்டும். ஏகாதிபத்தியமானது முதலாளித்துவத்தின் தனியொரு வரலாற்றுக் கட்டமாகும். அதன் தனித்தன்மை மூன்று வகைப் பட்டது: ஏகாதிபத்தியமானது (1) ஏகபோக முதலாளித்துவமாகும்; (2) புல்லுருவித் தனமான, அல்லது அழுகத்

தொடங்கிவிட்ட முதலாளித்துவமாகும்; (3) அந்திமக்கால முதலாளித்துவமாகும். தடையற்ற போட்டி நீக்கப்பெற்று அதற்குப் பதிலாய் ஏகபோகம் வளர்ச்சியுறுவதானது ஏகாதிபத்தியத்தின் அடிப்படைப் பொருளாதார இயல்பு, அதன் சாரப்பொருள். ஏகபோகத் தன்மை பிரதானமான ஐந்து வடிவங்களில் வெளிப்படுகிறது: (1) கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள்—முதலாளிகளது இந்த ஏகபோகக் கூட்டுகள் தோற்றுவிக்கப்படும் அளவுக்குப் பொருளுற்பத்தியின் ஒன்றுகுவிப்பு வளர்ந்துவிடுகிறது; (2) பெரிய பாங்கிகளின் ஏகபோக நிலை—அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் மூன்று, நான்கு அல்லது ஐந்து பகாசுர பாங்கிகள் நாட்டின் பொருளாதார வாழ்வு அனைத்தையுமே தம் பிடியில் இருத்திக் கொண்டு ஆட்டிப் படைக்கின்றன; (3) மூலப் பொருள்களுக்கான ஆதாரங்களை முதலாளித்துவ டிரஸ்டுகளும் நிதி ஆதிக்கக் கும்பலும் (financial oligarchy) கைப்பற்றிக் கொண்டுவிடுகின்றன (நிதி மூலதனம் என்பது பாங்கி மூலதனத்துடன் இணைந்த ஏகபோகத் தொழில் துறை மூலதனமாகும்); (4) சர்வதேசக் கார்ட்டல்கள் உலகைத் தம்மிடையே (பொருளாதாரக்) கூறுபோட்டுப் பாகப் பிரிவினை செய்து கொள்வது ஆரம்பமாகிவிட்டது. இவ்வகைச் சர்வதேசக் கார்ட்டல்கள் ஏற்கனவே ஒரு நூறுக்கு மேற்பட்டவை உள்ளன; இவை உலகச் சந்தை அனைத்தையுமே தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திக் கொண்டு, அதனை ''இணக்க முடன்'' தம்மிடையே பாகப் பிரிவினை செய்து கொள்கின்றன —யுத்தத்தின் மூலம் அது மறுபிரிவினை செய்யப்படும் வரை இந்த ஏற்பாடு நீடிக்கிறது. ஏகபோகமல்லாத முதலாளித்துவத்தில் நடைபெற்று வந்த பண்ட ஏற்றுமதியைப் போலல்லாது இப்பொழுது மூலதனமே ஏற்றுமதி செய்யப்படுவதானது இக்கட்டத்துக்குரிய தனி விசேஷமாகும்; இது பொருளாதார வழியிலும் பிரதேச-அரசியல் வழியிலும் உலகின் பாகப் பிரிவினையுடன் நெருங்கிய முறையில் இணைந்த நிகழ்ச்சியாகும். (5) உலகின் பிரதேசம் (காலனிகள்) பங்கிட்டுக் கொள்ளப்படுதல் நிறைவுற்றுவிட்டது.

முதலாளித்துவத்தின் உச்ச கட்டமான ஏகாதிபத்தியம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும், பிற்பாடு ஆசியாவிலும்

1898க்கும் 1914க்கும் இடையில் இறுதி உருப் பெற்றது. ஸ்பானிய-அமெரிக்கப் போர் (1898), ஆங்கிலோ-போயர் போர் (1899-1902), ருஷ்ய-ஜப்பானியப் போர் (1904-05), 1900ல் ஐரோப்பாவில் வெடித்த பொருளாதார நெருக்கடி ஆகிய இவை, உலக வரலாற்றின் இந்தப் புதிய சகாப்தத்துக்குரிய முக்கிய மைல்கற்களாகும்.

புல்லுருவித்தனமுடையதாகிவிட்ட அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமே ஏகாதிபத்தியம் என்பது உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை நிலவும் அமைப்பில் ஒவ்வொரு ஏகபோகத்துக்குமுரிய குண விசேஷமாய் அமைந்துவிடும் அழுகல் போக்கில் யாவற்றுக்கும் முதலாய் வெளியாகிறது. ஜனநாயக-குடியரசுவாத ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும், பிற்போக்கு-முடியரசுவாத ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் இடையிலான வேறுபாடு மறைந்துவிடுகிறது; இரு வகையினருமே உயிருள்ள நிலையிலேயே அழுகத் தொடங்கிவிட்டதே இதற்குக் காரணம் (ஆலை தொழில் துறையின் தனிப்பட்ட கிளைகளிலும், தனிப்பட்ட சில நாடுகளிலும், தனிப்பட்ட சில காலங்களிலும் முதலாளித்துவம் அசாதாரண வேகத்தில் வளர முடியாது என்பதல்லஇதன் அர்த்தம்). இரண்டாவதாக, தமது மூலதனத்தைக் கொண்டு சுகஜீவிகளாய்ச் ''சீட்டுக் கத்தரித்து'' ஜீவிக்கும் முதலாளிகளின் ஒரு பெரும் பிரிவு தோற்றுவிக்கப்படுவதில் முதலாளித்துவத்தின் அழுகல் தன்மை வெளியாகிறது. இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்சு, ஜெர்மனி—தலைமையான இந்நான்கு ஏகாதிபத்திய நாடுகளில் ஒவ்வொன்றிலும் பணவுறுதிச் சீட்டுகளில் [securities] 10,000 அல்லது 15,000 கோடி பிராங்குவரை மூலதனம் போடப்பட்டிருக்கிறது; இதிலிருந்து இந்நாடு ஒவ்வொன்றும் ஆண்டுக்கு ஐந்நூறு கோடியிலிருந்து எண்ணூறு கோடிக்குக் குறையாமல் வருமானம் பெறுகிறது. மூன்றுவதாக, மூலதன ஏற்றுமதியானது புல்லுருவித்தனம் உச்ச நிலைக்கு உயர்ந்துவிடுவதைக் குறிக்கிறது. நான்காவதாக, ''நிதிமூலதனம், ஆதிக்கத்துக்காகப் பாடுபடுகிறதேயன்றி சுதந்திரத்துக்காக அல்ல''. அரசியல் பிற்போக்கு சர்வவியாபகம் ஆகிவிடுவது ஏகாதிபத்தியத்துக்குரிய குண விசேஷமாகும்.

பிரம்மாண்ட அளவிலான லஞ்சமும் ஊழலும் எல்லா வகை யான பணமா விவகாரங்களும்[55] மலிந்துவிடுகின்றன. ஐந்தாவ தாக, ஒடுக்கப்படுகிற தேசங்கள்மீதான சுரண்டல்—இது நாடுபிடித்து இணைக்கும் முயற்சிகளுடன் இரண்டறக் கலந்த தாகும்—இன்னும் முக்கியமாய் ஒருசில ''பேரரசுகள்'' காலனி களில் புரியும் சுரண்டல், ''நாகரிக'' உலகினைக் கோடானு கோடியான பின்தங்கிய தேசத்தோரின் குறுதியை உறிஞ்சும் புல்லுருவியாக மேலும்மேலும் மாற்றிவருகிறது. ரோமானியப் பாட்டாளி சமுதாயத்தின் செலவில் வாழ்ந்தான்; ஆனால் நவீன காலச் சமுதாயம் நவீன காலப் பாட்டாளியின் செல வில் வாழ்கிறது. சிஸ்மோண்டியின் பொருட் செறிவுள்ள இந்த வாக்கியத்தை மார்க்ஸ் வலியுறுத்திக் குறிப்பிட்டார். ஏகாதிபத்தியமானது இந்நிலைமையை ஓரளவு மாற்றியுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தில் சலுகை படைத்த மேல்தட்டுப் பகுதி ஓரளவுக்கு, கோடானு கோடியான பின்தங்கிய தேசத்தவர்களின் செலவில் வாழ்கிறது.

ஏகாதிபத்தியமானது **அந்திமக்கால** முதலாளித்துவமாய், சோஷலிசத்துக்கு **மாறிச் செல்வதற்குரிய** முதலாளித்துவமாய் இருப்பது ஏனென்பது நன்கு விளங்குகிறது: முதலாளித் துவத்திலிருந்து முனைக்கும் ஏகபோகமானது **ஏற்கனவே** மரிக்கத் தொடங்கிவிட்ட முதலாளித்துவத்தை, சோஷலிசத் துக்கு அது மாறிச் செல்வதற்கான கட்டத்தின் துவக்கத் தைக் குறிப்பதாகும். ஏகாதிபத்தியத்தால் உழைப்பு மகத் தான அளவுக்கு **சமூகமயமாக்கப்படுவதாலும்** (ஏகாதிபத் தியத்தின் ஆதரவாளர்களான முதலாளித்துவப் பொருளிய லாளர்கள் இதனைப் ''பின்னிப்பிணைதல்'' என்பதாகக் குறிப் பிடுகிறார்கள்) இதே விளைவு உண்டாகிறது.

ஏகாதிபத்தியத்துக்கு நாம் அளித்திடும் இந்த இலக் கணம் நம்மைக் கார்ல் காவுத்ஸ்கியிற்கு நேர்முரணான நிலைக்குக் கொண்டுவருகிறது. ஏகாதிபத்தியத்தை ''முதலாளித் துவத்தின் ஒரு கட்டமாகக்'' கருதக் காவுத்ஸ்கி மறுக்கிறார்; நிதி மூலதனத்தால் ''உகந்ததென விரும்பி ஏற்கப்படும்'' ஒரு கொள்கை என்று, ''தொழில் துறை'' நாடுகள் ''விவசாய'' நாடுகளைப் பிடித்துத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்

குரிய ஒரு போக்கு என்று அதற்கு அவர் இலக்கணம் கூறுகிறார்.* காவுத்ஸ்கி கூறும் இலக்கணம் தத்துவார்த்தக் கண்ணோட்டத்தில் முழுக்க முழுக்கப் பொய்யானது. ஏகாதிபத்தியத்தை இனம் கண்டு கொள்வதற்குரிய அடையாளமாய் இருப்பது தொழில் துறை மூலதனத்தின் ஆதிக்கம் அல்ல, நிதி மூலதனத்தின் ஆதிக்கமே ஆகும்; குறிப்பாய் விவசாய நாடுகளே மட்டும் அல்ல, எல்லா வகையான நாடுகளையும் பிடித்துத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்கான முயற்சியே ஆகும். ''படைக் கலைப்பு'', ''அதீத-ஏகாதிபத்தியம்'' இத்தியாதி அபத்தங்களைப் போன்ற கொச்சையான அவரது முதலாளித்துவச் சீர்திருத்தவாதத்துக்குப் பாதையைச் செப்பனிடும் பொருட்டு காவுத்ஸ்கி ஏகாதிபத்திய அரசியலை ஏகாதிபத்தியப் பொருளாதாரத்திலிருந்து பிரித்துவிலக்குகிறார்; அரசியல் துறை ஏகபோகத்தைப் பொருளாதாரத் துறை ஏகபோகத்திலிருந்து பிரித்து விலக்குகிறார். இந்தத் தத்துவார்த்தப் பொய்க் கூற்றுகளின் நோக்கம் எல்லாம், அவற்றின் உட்பொருள் எல்லாம், ஏகாதிபத்தியத்தின் மிகவும் ஆழமான முரண்பாடுகளை மூடிமறைத்து, அதன் மூலம் ஏகாதிபத்திய ஆதரவாளர்களான அப்பட்டமான சமூக-தேசிய வெறியர்களுடனும் சந்தர்ப்பவாதிகளுடனும் ''ஒன்றுபடுவ'' தென்ற தத்துவத்துக்கு நியாயம் கற்பிப்பதுதான்.

இவ்விவகாரத்தில் காவுத்ஸ்கி மார்க்சியத்திலிருந்து முறித்துக் கொண்டு சென்றுவிடுவது குறித்து சொத்சியால்-டெமக்ராத், கம்முனீஸ்த்[56] இதழ்களில் போதுமான அளவுக்கு விவரமாய் எடுத்துரைத்திருக்கிறோம். நமது ருஷ்ய காவுத்ஸ்கிவாதிகள்—அக்செல்ரோத், ஸ்பெக்டேட்டர் இவர்களின் தலைமையிலுள்ள நிறுவனக் கமிட்டி[57] ஆதரவாளர்

---

*''அதிக வளர்ச்சி பெற்றுவிட்ட தொழில் துறை முதலாளித்துவத்தின் ஒரு விளைவே ஏகாதிபத்தியம். தொழில் துறை முதலாளித்துவத் தேசம் ஒவ்வொன்றும் மேலும் மேலும் பெரிய அளவில் விவசாயப் பிரதேசங்களை, அவற்றில் வாழும் தேசத்தவர்களைப் பற்றிக் கருதாமலே, கீழ்ப்படுத்திச் சுவீகரித்துச் சேர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளில்தான் இது அடங்கியுள்ளது'' (*Die Neue Zeit, 1914*, செப்டம்பர் 11 இதழில் காவுத்ஸ்கி எழுதுவது).

கள், (மார்த்தவைக்கூட சேர்த்துக் கொள்ள வேண்டும், பெருமளவுக்கு திரோத்ஸ்கியையும்தான்) — ஒரு போக்கு என்ற முறையில் காவுத்ஸ்கிவாதம் குறித்து மௌனம் சாதிப்பதே உசிதமென்று இருந்துவிட்டனர். காவுத்ஸ்கியால் யுத்த காலத்தில் எழுதப்பட்டவற்றை ஆதரித்து வாதாட அவர்கள் துணியவில்லை. ஆகவே காவுத்ஸ்கியைப் புகழ்வதோடு (அக் செல்ரோத் தம்முடைய ஜெர்மன் பிரசுரத்தில் —நிறுவனக் கமிட்டி இதனை ருஷ்ய மொழியில் வெளியிடுவதாக **வாக்களித்திருக்கிறது**), அல்லது காவுத்ஸ்கியின் அந்தரங்கக் கடிதங்களிலிருந்து மேற்கோள்கள் கூறுவதோடு (ஸ்பெக்டேட்டர்) நின்றுவிடுகிறார்கள். இக்கடிதங்களில் காவுத்ஸ்கி, தாம் எதிர்த்தரப்பினரையே சேர்ந்தவர் என்பதாகக் கூறி, தேசிய வெறி கொண்ட தமது உரைகளை மூடி மறைக்க நரித்தனமாய் முயலுகிறார்.

ஏகாதிபத்தியத்தைப்பற்றி காவுத்ஸ்கியிற்குள்ள ''கருத்தோட்டம்''—ஏகாதிபத்தியத்துக்கு மெருகு பூசுவதற்கு ஒப்பானதே இது—ஹில்பர்டிங்கின் **நிதி மூலதனத்துடன்** ஒப்பிடும்போது மட்டுமின்றி (ஹில்பர்டிங் இப்பொழுது எவ்வளவுதான் அரும்பாடு பட்டு காவுத்ஸ்கியையும் சமூக-தேசியவெறியர்களுடன் ''ஒன்றுபட'' வேண்டுமென்பதையும் ஆதரித்து வாதாடினாலும் இது மாறிவிடாது!) **சமூக-மிதவாதி** ஜ. ஹாப்சனுடன் ஒப்பிடும்போதுகூட பின்னேக்கிச் செல்வதாயுள்ளது. பிரிட்டிஷ் பொருளியலாளரான இந்த ஹாப்சன் எவ்வகையிலும் தம்மை மார்க்சியவாதியாகக் கூறிக் கொள்ளவில்லை. அவருங்கூட *1902*ல் வெளியான ஒரு புத்தகத்தில்* மேலும் ஆழமான முறையில் ஏகாதிபத்தியத்துக்கு இலக்கணம் கூறி, அதன் முரண்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டுகிறார். காவுத்ஸ்கியின் சாத்வீகவாத, ''இணக்கம் காணும்'' கயமைக் கருத்துக்களில் அனேகமாய் யாவற்றையுமே அவருடைய புத்தகத்தில் காணலாம். ஏகாதிபத்தியத்தின் புல்லுருவித்தனம் என்னும் மிக முக்கியப் பிரச்சினை குறித்து ஹாப்சன் எழுதியதாவது:

---

* J. A. Hobson, *Imperialism* (ஜ. ஹாப்சன், ''ஏகாதிபத்தியம்'' லண்டன், *1902*.—பதிப்பாசிரியர்.).

ஹாப்சனின் கருத்துப்படி இருவித நிலைமைகளால் பழைய சாம்ராஜ்யங்கள் பலம் இழக்கலாயின: (1) ''பொருளாதாரப் புல்லுருவித்தனம்'', (2) சார்பு நாடுகளின் மக்களிடையிலிருந்து சேனைகள் திரட்டப்படுதல். ''பொருளாதாரப் புல்லுருவித்தனத்துக்குரிய பழக்கம் முதலாவதாகும். ஆதிக்கம் புரியும் அரசு தனது ஆளும் வர்க்கத்தைச் செல்வச் செழிப்புடையதாக்கிக் கொள்வதற்காகவும், தனது கீழ்நிலை வர்க்கங்களுக்கு லஞ்சம் கொடுத்து அவற்றைத் தனக்கு இணங்கி நடக்குமாறுச் செய்வதற்காகவும் தனது மாநிலங்களையும் காலனிகளையும் சார்பு நாடுகளையும் பயன்படுத்திக் கொள்வதே இது''. இரண்டாவது நிலைமை குறித்து ஹாப்சன் இவ்வாறு எழுதுகிறார்:

> ''கிரேட் பிரிட்டனும் பிரான்சும் ஏனைய சாம்ராஜ்ய ஆதிக்கத் தேசங்களும் எதைப் பற்றியும் கவலைப் படாமல் கண்ணை மூடிக் கொண்டு இந்த ஆபத்தான சார்பு நிலைப் பாதையில் போய்க் கொண்டிருப்பதானது, ஏகாதிபத்தியத்தின் கபோதித்தனத்துக்கு மிகவும் விஞ்ஞதமான ஓர் அறிகுறியாகும் [ஏகாதிபத்தியவாதிகளுடைய ''கபோதித்தனம்'' பற்றிய இந்தப் பல்லவி சமூக-மிதவாதி ஹாப்சனுக்கு வேண்டுமானால் பொருத்தமுடையதாய் இருக்கலாம், ''மார்க்சியவாதி'' காவுத்ஸ்கியிற்குச் சிறிதும் பொருத்தமுடையதன்று]. இப்பாதையில் கிரேட் பிரிட்டன் மிக நெடுந் தொலைவு சென்று விட்டது. நமது இந்திய சாம்ராஜ்யத்தைப் பெறுவதற்காக நடைபெற்ற போர்களில் மிகப் பெரும்பாலானவை சுதேச மக்களாலேயே நடத்தப்பட்டவையாகும். இந்தியாவிலும் இன்னும் அண்மைக் காலத்தில் இதே போல எகிப்திலும் பெரிய பெரிய நிரந்தர சேனைகள் பிரிட்டிஷ் தளகர்த்தர்களுக்குக்கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன; நமது ஆப்பிரிக்க சாம்ராஜ்ய உடைமைகள் சம்பந்தமான போர்களில் அனேகமாய் யாவுமே, தென் பகுதியில் நடைபெற்றவற்றைத் தவிர்த்து, நமக்காகச் சுதேச மக்களால் நடத்தப்பட்டவையே ஆகும்.''

சீனா பங்கிட்டுப் பிரித்துக் கொள்ளப்படும் நிலைமை ஏற்பட்டபோது, ஹாப்சன் இது குறித்துப் பின்வருமாறு

பொருளாதார மதிப்பீடு செய்தார்: ''அப்பொழுது மேற்கு ஐரோப்பாவின் பெரும் பகுதி, இங்கிலாந்தின் தென் பகுதியிலும், ரிவீராவிலும், உல்லாசப் பயணிகள் மண்டியுள்ள, அல்லது குடியிருப்புக்கு வசதியான இடங்களாகிய இத்தாலி, ஸ்விட்ஜர்லாந்து இவ்விரு நாடுகளின் பகுதிகளிலும் ஏற்கனவே காணக் கூடிய தாகிவிட்ட அதே தோற்றத்தையும் தன்மையையும் பெற்றுவிடும். அதாவது தொலைக் கிழக்கிலிருந்து லாபப் பங்கீடுகளும் பென்ஷன்களும் பெறும் செல்வச் சீமான்களது சிறு தொகுதிகளும், இன்னும் சற்றுஅதிகஅளவிலான உத்தியோகப் பரிவாரத்தினரும் வணிகர்களுமான தொகுதிகளும்,மேலும் கூடுதலான வீட்டுவேலையாட்களாலும் போக்குவரத்துத் துறையிலும் விரைவில் கெட்டுப் போய்விடும் பண்டங்களது உற்பத்தியின் இறுதிப் பிரிவுகளிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களாலும் ஆன தொகுதிகளும் வாழும் திட்டுகளாகிவிடும். பிரதானத் தொழில்கள் யாவும் மறைந்து போயிருக்கும்; முக்கிய உணவுப் பொருள்களும் பகுதியளவு தயாரான செய்பொருள்களும் ஆசியாவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் கப்பமாக வந்து குவிந்துகொண்டிருக்கும்.... மேலும் பெரிய அளவிலான மேலைய அரசுகளது கூட்டணி ஒன்று, ஐரோப்பியப் பேரரசுகளது கூட்டு ஒன்று உதிக்கலாம் என்ற சாத்தியப்பாடும் இருந்து வருகிறது. இந்தக் கூட்டு உலக நாகரிக இலட்சியத்தை முன்னுக்கு எடுத்துச் செல்வதற்குப் பதிலாய், மேலையப் புல்லுருவித்தனத்தாலான பயங்கர அபாயத்துக்குத்தான் வழி செய்வதாய் இருக்கும். தொழில் துறையில் முன்னேறிய தேசங்களாலாகிய இந்தக் கூட்டைச் சேர்ந்த நாடுகளது மேல்வர்க்கங்கள் ஆசியாவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் அளவிலாத கப்பம் வசூலிக்கும். இந்தக் கப்பத்தைக் கொண்டு இவ்வர்க்கங்கள் பணிந்து நடக்கும் பரிவாரத்தினரின் பெருந்திரளுக்குத் தீனி போட்டுக் கட்டிக் காக்கும். இப்பரிவாரத்தினர் இனி செய் பொருள் உற்பத்தி, விவசாயம் போன்ற பிரதானப் பொருளாதாரக் கிளைகளில் ஈடுபட்டிருக்க மாட்டார்

கள். அதற்குப் பதில் புதிய நிதியாதிக்கப் பிரபுக்களின் கட்டுப்பாட்டின்கீழ் தனிநபர்களுக்கான பணிவிடைகளி லும் சிறு சேவைத் தொழில்களிலும் இப்பரிவாரத் தினர் ஈடுபடுத்தப்படுவர். இது போன்ற ஒரு தத்துவம் [சாத்தியக்கூறு என்பதாக அவர் சொல்லியிருக்க வேண் டும்] பரிசீலனைக்குத் தகுதியுடைத்ததல்ல என்று ஒதுக்க விரும்புவோர், ஏற்கனவே இந்த நிலைமைக்குத் தாழ்த்தப்பட்டுவிட்ட இங்கிலாந்தின் தெற்குப் பகுதி களில் உள்ள பொருளாதார, சமூக நிலைமைகளை ஆராய வேண்டும். இத்தகைய நிதியாதிக்கத்தினர், முதலீட் டாளர்கள் [சுகஜீவிகள்], அரசியல், தொழில் அதிகாரி கள் ஆகியோரது கோஷ்டிகள் சீனுவைத் தமது பொரு ளாதாரப் பிடிக்குக் கீழ்ப்படியச் செய்து, இதுவரை உலகம் கண்டிராத அளவுக்கு லாபம் திரட்டுவதற்கான பிரம்மாண்டமானதோர் ஆதாரமாய் அமையவல்ல இந்தக் கருவூலத்தைத் துடைத்து அள்ளி ஐரோப்பா வுக்குக் கொண்டுவந்து அனுபவிக்கும்படியான இந்நிலை மையால், மேற்கூறியது போன்ற ஓர் அமைப்பு எல்லை யின்றி விஸ்தரிக்கப் படுவது சாத்தியமே என்பதை அவர் கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வருங்காலம் எப்படி இருக்கும் என்பது பற்றிய இந்த விளக்கமோ, அல்லது வேறு எந்தவொரு விளக்கமோ அப்படியே உண்மை யாகிவிடும் என்று கூற முடியாதபடி நிலைமை மிகமிகச் சிக்கலாய் இருக்கிறது, உலக சக்திகளது செயற்பாட் டின் விளைவுகள் கணித்துச் சொல்ல முடியாதனவாய் உள்ளன. ஆனால் இன்று மேலைய ஐரோப்பாவின் ஏகாதி பத்தியத்தை ஆட்டிப்படைக்கும் சக்திகள் இத்திசை யிலேதான் போய்க் கொண்டிருக்கின்றன; எதிர்த்தடிக் கப்பட்டால் ஒழிய, அல்லது திசை திருப்பிவிடப்பட் டால் ஒழிய அவை மேற்கூறிய விளைவையே உண்டாக் கும்.''

சமூக-மிதவாதியான ஹாப்சன், இவ்வாறு ''எதிர்த் தடிப்பது'' என்பது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் ஒன்றால் மட்டுமே முடியும், சமுதாயப் புரட்சியின் வடிவில்

மட்டுமே இது நடைபெற முடியும் என்பதைப் பார்க்கத் தவறிவிடுகிறார். ஆனால் அவர் சமூக-மிதவாதியாதலால் இதில் வியப்பில்லை. இருந்தபோதிலும் 1902ஆம் ஆண்டிலேயே அவர் ''ஐரோப்பிய ஐக்கிய நாடு'' என்பதன் உட்பொருள் குறித்தும், அதன் விளைவுகள் குறித்தும் தேர்ந்த திருஷ்டியுடையவராய் இருந்தார் (காவுத்ஸ்கிவாதியான திரோத்ஸ்கியின் நன்மைக்காக இதைக் குறிப்பிட்டாக வேண்டும்!). மற்றும் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த **கபட நாடகக் காவுத்ஸ்கிவாதிகள்** தற்போது மூடிமெழுகி வரும் யாவற்றின் உட்பொருளையும் விளைவுகளையும், அதாவது ஆசியா, ஆப்பிரிக்காவின் முதுகிலே அமர்ந்த ஏகாதிபத்திய ஐரோப்பா ஒன்றைத் தோற்றுவிக்கும் **ஒரே நோக்கத்திற்காகத்தான்** ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருடன் **சந்தர்ப்பவாதிகள்** (சமூக-தேசியவெறியர்கள்) ஒத்துழைக்கிறார்கள், எதார்த்த நோக்குடன் பார்க்கும்போது **சந்தர்ப்பவாதிகள்** குட்டி பூர்ஷுவாக்களையும், ஏகாதிபத்திய உபரிலாபங்களின் துணை கொண்டு லஞ்சம் தரப்பட்டு **விலைக்கு வாங்கப்பட்டு** முதலாளித்துவத்தின் காவல் நாய்களாகவும் தொழிலாளர் இயக்கத்தைப் **பாழ்படுத்தும் மோசடிக்காரர்களாகவும்** மாற்றப்பட்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு வகுப்பினரையும் சேர்ந்த பகுதியோரே ஆவர் என்ற இவ்வுண்மையின் உட்பொருளையும் விளைவுகளையும் பற்றி அன்றே ஹாப்சன் தேர்ந்த திருஷ்டியுடையவராய் இருந்தார்.

ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும், தொழிலாளர் இயக்கத்தில் வெற்றி பெற்றுவிட்ட (எவ்வளவு காலத்துக்கு இவ்வெற்றி நீடிக்கப் போகிறது?) சந்தர்ப்பவாதத்துக்கும் இடையிலுள்ள பொருளாதார இணைப்பை, மிகவும் ஆழமான இணைப்பை, நாம் கட்டுரைகளில் மட்டுமல்ல, நமது கட்சியின் தீர்மானங்களிலும் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு வந்திருக்கிறோம். இதிலிருந்து நாம் சமூக-தேசியவெறியர்களிடமிருந்து பிளவுபடுவது தவிர்க்க முடியாததென்ற முடிவுக்கு வந்ததையும் இங்கு எடுத்துரைக்கலாம். ஆனால் நமது காவுத்ஸ்கிவாதிகள் இப்பிரச்சினையைத் தட்டிக் கழித்தே வந்துள்ளனர்! எடுத்துக்காட்டாக மார்த்தவ் அவருடைய விளக்கக் கட்டுரைகளில் குதர்க்கவாதம் புரிந்தார்;

நிறுவனக் கமிட்டியினது வெளிநாட்டுச் செயலாளர் குழுவின் செய்திகளில்[58] (இதழ் 4, 1916 ஏப்ரல் 10) இது இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது:

> ''...அறிவு வளர்ச்சியில் 'அறிவுத்துறையினருக்கு' மிகவும் அருகாமையில் வந்து கொண்டும், மிக உயர்ந்த தேர்ச்சியுடையோராயும் இருக்கும் தொழிலாளர் தொகுதியினர் விதிவிலேபோல் தடுக்க முடியாதபடி சமூக-ஜனநாயகத்திலிருந்து விலகி சந்தர்ப்பவாதத்தை நோக்கிப் போய்விடுவார்களாயின், அது சமூக-ஜன நாயகத்தின் இலட்சியத்துக்கு நல்லதல்ல, ஏன் மிகப் பெரும் கேடாகவே ஆகிவிடும்....''

''விதிவிலே போல் தடுக்க முடியாத'' என்ற அந்த அசட்டுத் தொடரின் மூலமாகவும், ''கைச் சாமர்த்தியத்தாலும்'', தொழிலாளர்களில் குறிப்பிட்ட ஒரு வகுப்பினர் சந்தர்ப்பவாதத்தையும் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினரையும் நோக்கி ஏற்கனவே **விலகிச் சென்றுவிட்டனர்** என்னும் **உண்மையை** இவ்வாறு அவர் கூறுமலே **விட்டுவிட்டார்.** நிறுவனக் கமிட்டியின் குதர்க்கவாதிகளும் இதே உண்மையைத் தான் கூறுமல் விட்டுவிட விரும்புகிறார்கள்! பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையையும் புரட்சிகரப் போக்கின் வெற்றியையும் எதார்த்த நிலைமைகள் உத்தரவாதம் செய்கின்றன! என்பதாக காவுத்ஸ்கிவாதியான ஹில்பர்டிங்கும் மற்றும் பலரும் தற்போது ஆடம்பரமாய்க் கூறிவரும் ''அதிகார பூர்வமான நன்னம்பிக்கை''யை வெளியிடுவதோடு அவர்கள் நின்றுவிடுகிறார்கள்! பாட்டாளி வர்க்கம் குறித்து நாங்கள் ''நன்னம்பிக்கை மிக்கவர்கள்தான்'', ஐயமில்லை!

ஆனால் உண்மையில் இந்தக் காவுத்ஸ்கிவாதிகள் எல்லோருமே—ஹில்பர்டிங்கும் நிறுவனக் கமிட்டியினரும் மார்த்தவ் கூட்டத்தாரும்—**நன்னம்பிக்கை மிக்கவர்களாய்** இருப்பது... சந்தர்ப்பவாதம் குறித்து ஆகும். சாரப்பொருள் இதுவே!

பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தின்—ஐரோப்பிய முதலாளித்துவம் அல்லது ஏகாதிபத்திய முதலாளித்துவம் மட்டுமின்றி உலக முதலாளித்துவம் அனைத்தின்—பிள்ளை

யாகும். உலக அளவில், ஐம்பது ஆண்டுகள் முந்தியோ ஐம்பது ஆண்டுகள் பிந்தியோ—உலக அளவில் பார்க்கையில் இது சிறு விவகாரமேயாகும்—''பாட்டாளி வர்க்கம்'' ஒற்றுமை ''அடைந்துவிடும்'' என்பதிலும், புரட்சிகர சமூக-ஜனநாயகம் ''தவிர்க்க முடியாதபடி'' அதனுள் வெற்றி வாகை சூடிவிடும் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் காவுத்ஸ்கி வாத கனவான்களே, அதுவல்ல விவகாரம். தற்போது விவகாரம் என்னவெனில் ஐரோப்பாவின் ஏகாதிபத்திய நாடுகளில் நீங்கள் சந்தர்ப்பவாதிகளுடன் குலாவிக் கொண்டிருக்கிறீர்கள்—இவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு வர்க்கம் என்ற முறையில் புறம்பானவர்கள்; இவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் தாசர்கள், அதன் கையாட்கள், அதன் செல்வாக்கைக் கொண்டுவந்து பரப்பும் சாதனங்களாகப் பணியாற்றுகிறவர்கள். தொழிலாளர் இயக்கம் அவர்களைத் தன்னிடமிருந்து களைந்தெறியாதவரை, அது முதலாளித்துவத் தொழிலாளர் இயக்கமாகவே இருக்கும். சந்தர்ப்பவாதிகளுடன்—லேகின்களுடனும் டேவிட்களுடனும் பிளெஹானவ்களுடனும் ச்ஹெண்கேலிக்களுடனும் பத்ரேசவ்களுடனும், இன்ன பிறருடனும்—''ஒற்றுமையை'' ஆதரித்து வாதாடுவதன் மூலம் நீங்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர் இயக்கத்திலுள்ள தனது சிறந்த கையாட்களின் துணையுடன் தொழிலாளர்களை அடிமைப்படுத்திக் கொள்வதை எதார்த்த வழியில் ஆதரிக்கிறீர்கள். புரட்சிகர சமூக-ஜனநாயகத்தின் உலக அளவிலான வெற்றி தவிர்க்க முடியாததுதான்; ஆனால் அது உங்களை எதிர்த்துத்தான் நடைபெறுகிறது, இனியும் நடைபெறும்; உங்களை எதிர்த்துத்தான் முன்னேறிச் செல்கிறது, இனியும் முன்னேறிச் செல்லும்; அது உங்கள் மீதான வெற்றியாகவே திகழும்.

இன்றையத் தொழிலாளர் இயக்கத்திலுள்ள இவ்விரு போக்குகளையும்—இவ்விரு கட்சிகளையும் என்றுகூடச் சொல்லலாம்—உலகெங்கும் 1914-16ல் தெட்டத் தெளிவாகப் பிரிந்து விலகிச் சென்றுவிட்ட இவ்விரு போக்குகளையும் பல பத்தாண்டுகள் அடங்கிய காலப் பகுதியில், ஏறத்தாழ 1858லிருந்து 1892 வரை, எங்கெல்சும் மார்க்சும் இங்கிலாந்தில் கண்ணுற்று விவரித்துக் கூறினர்.

உலக முதலாளித்துவத்தின் ஏகாதிபத்தியச் சகாப்தம் தொடங்கிய காலத்தில் மார்க்சோ, எங்கெல்சோ உயிருடன் இருக்கவில்லை. இச்சகாப்தம் 1898-1900க்கு முன்னதாக ஆரம்பமாகவில்லை. ஆனால் இங்கிலாந்தின் விசேஷம் என்ன வெனில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே அது, குறைந்தபட்சம் ஏகாதிபத்தியத்துக்குரிய இரண்டு முக்கியத் தனி இயல்புகளை வெளிப்படுத்தி வந்தது: (1) மிகவும் பரவலான காலனிகள், (2) ஏகபோக லாபம் (உலகச் சந்தையில் அதற்கிருந்த ஏகபோக நிலையே இதற்குக் காரணம்). இவ்விரு இயல்புகளிலும் அன்று இங்கிலாந்து முதலாளித்துவ நாடுகளிடையே ஒரு விதிவிலக்காய் விளங்கிற்று. இந்த விதிவிலக்கைப் பரிசீலனை செய்த எங்கெல்சும் மார்க்சும் ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் பெற்ற (தற்காலிக) வெற்றியுடன் இதற்குள்ள தொடர்பைத் தெட்டத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சுட்டிக்காட்டினர்.

1858 அக்டோபர் 7 தேதியிட்டு மார்க்சுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் எங்கெல்ஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார்: ''... ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கம் மெய்யாகவே மேலும் மேலும் முதலாளித்துவமயமாகி வருகிறது. எல்லாத் தேசங்களிலும் மிகவும் முதலாளித்துவமயமான இங்கிலாந்து இவ்வாறாக முதலாளித்துவ வர்க்கத்துடன் கூடவே ஒரு முதலாளித்துவப் பிரபுக் குலம் ஒன்றையும், முதலாளித்துவப் பாட்டாளி வர்க்கம் ஒன்றையும் பெற வேண்டுமென்ற இறுதிக் குறிக்கோளைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அனைத்து உலகையும் சுரண்டும் ஒரு தேசத்துக்கு இது ஓரளவு நியாயமே''.''ஆங்கிலேயத் தொழிலாளர் தலைவர்கள் தம்மை விலைக்கு விற்றுக் கொண்டுவிட்டனர்'' என்று கூறியதற்காக மார்க்சை எதிர்த்து ஹேல்ஸ் (Hales) அகிலத்தின் சமஷ்டிக் கவுன்சிலில் ரகளை செய்ததாகவும், மார்க்சின்மீது ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதாகவும் ஸோர்கேயிற்கு 1872 செப்டம்பர் 21 தேதியிட்ட தமது கடிதத்தில் எங்கெல்ஸ் தெரிவிக்கிறார். 1874 ஆகஸ்டு 4ல் ஸோர்கேயிற்கு மார்க்ஸ் இவ்வாறு எழுதினார்: ''இங்கே [இங்கிலாந்தில்] நகரத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, இத்தலைவர்களது கும்பல் முழுதுமே பாராளுமன்றத்துக்குப் போய்ச்

சேராதது வருந்தத்தக்கதே. இக்கும்பல் முழுவதையும் தொலைத்துத் தலை முழுக அது சாலச்சிறந்த வழியாக இருந்திருக்கும்''. 1881 ஆகஸ்டு 11 தேதியிட்டு மார்க்சுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் எங்கெல்ஸ் ''முதலாளித்துவ வர்க்கத்தினரால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்ட அல்லது அவர்களால் ஊதியம் அளிக்கப்பட்டு வருகிற ஆட்கள் தமக்குத் தலைமை தாங்க அனுமதிக்கும் அந்தப் படுமோசமான ஆங்கிலேயத் தொழிற் சங்கங்கள்'' என்பதாகக் குறிப்பிடுகிறார். காவுத்ஸ்கியிற்கு 1882 செப்டம்பர் 12 தேதியிட்ட கடிதத்தில் எங்கெல்ஸ் எழுதினார்: ''காலனிக் கொள்கை குறித்து ஆங்கிலேயத் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கேட்கிறீர்கள். என்ன நினைக்கிறார்கள், பொதுவாக அரசியலைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ அதுவேதான். இங்கு தொழிலாளர் கட்சி என்பதாக எதுவும் இல்லை, கான்சர்வேட்டிவ்கள், மிதவாத-தீவிரவாதிகள் மட்டுமேதான் உள்ளனர்; தொழிலாளர்களைப் பொறுத்தவரை உலகச் சந்தையிலும் காலனிகளிலும் இங்கிலாந்துக்குள்ள ஏகபோகத்தின் விருந்துணவில் அவர்கள் பங்கு பெற்றுக் களிப்புறுகின்றனர்''.

1889 டிசம்பர் 7ல் ஸோர்கேயிற்கு எங்கெல்ஸ் எழுதினார்: ''இங்கே [இங்கிலாந்தில்] மிகவும் அருவருக்கத்தக்கது என்னவெனில், தொழிலாளர்களுடைய இரத்தத்திலேயே கலந்துவிட்ட இந்த முதலாளித்துவ உயர்குல மனப்பான்மை [respectability].... இவர்களில் மிகச் சிறந்தவராய் நான் கருதும் டாம் மானுங்கூட மேன்மை தங்கிய நகர மேயருடன் விருந்துண்ணப் போவதாகக் கூறிக் கொள்வதில் தனி மகிழ்ச்சி காண்கிறார். பிரெஞ்சு நாட்டவருடன் ஒப்பிட்டுப் பார்த்தால், எப்படியும் புரட்சியால் விளையும் நன்மையை நன்கு உணரலாம்''. 1890 ஏப்ரல் 19 தேதியிட்ட ஒரு கடிதத்தில்: ''ஆனால் மேல்மட்டத்துக்கு **அடியில்** இந்த இயக்கம் [இங்கிலாந்துத் தொழிலாளி வர்க்க இயக்கம்] நடந்து கொண்டுதான் இருக்கிறது; மேலும் மேலும் விரிவான பகுதிகளை ஆட்கொண்டு வருகிறது; இதுவரை தேங்கிய நிலையில் இருந்துள்ள **அடி மட்டத்து** [அழுத்தம் எங்கெல்சினுடையது] பகுதிகளே மிகவும் அதிகமாய் ஆட்கொள்ளப்படுகின்றன. இந்தப் பெருந் திரள் திடீரெனத் **தன்னைத் தானே**

உணர்ந்து கொள்ளப் போகும் நாள், இயங்கிச் செல்லும் இந்தப் பிரம்மாண்டத் திரள் தானேதான் என்ற உணர்வு அதற்குப் பிறக்கப் போகும் நாள் இனி தொலைவில் இல்லை''. 1891 மார்ச் 4ல்: ''சிதைந்து போன துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் தோல்வி; செல்வமிக்கவையாகவும் ஆகவே கோழைத்தனமானவையாகவும் இருக்கும் 'பழைய', பழமை வாதத் தொழிற் சங்கங்கள் தனித்து நிற்கின்றன....'' 1891 செப்டம்பர் 14ல்: நியூகாசில் தொழிற் சங்கக் காங்கிரசில் எட்டு மணிநேர வேலைநாளின் எதிர்ப்பாளர்களான பழைய தொழிற் சங்கவாதிகள் தோற்கடிக்கப்பட்டனர்; ''முதலாளித்துவப் பத்திரிகைகள் இத்தோல்வி முதலாளித்துவத் தொழிற் கட்சிக்குக் கிடைத்த தோல்வியாகும் என ஒத்துக் கொள்கின்றன'' (அழுத்தங்கள் யாவும் எங்கெல்சினுடையவை)....

பல பத்தாண்டுகளாய் மீண்டும் மீண்டும் எங்கெல்ஸ் கூறி வந்த இந்தக் கருத்துக்கள் பகிரங்கமாய்ப் பொது வெளியீடுகளிலும் அவரால் எடுத்துரைக்கப்பட்டன என்பதற்கு, இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற நூலின் இரண்டாம் பதிப்பிற்கான (1892) அவருடைய முன்னுரை சான்றாகும். இதில் அவர் ''தொழிலாளி வர்க்கத்தின் பெருந் திரளானோரைப்'' போலல்லாத ''தொழிலாளி வர்க்கப் பிரபுக்குலத்தோர்'' குறித்தும், ''தனிச் சலுகை படைத்த சிறுபான்மைத் தொழிலாளர்கள்'' குறித்தும் கூறுகிறார். 1848-68ல் இங்கிலாந்தின் தனிச் சலுகைக்குரிய நிலையால் தொழிலாளி வர்க்கத்தில் ''சலுகை படைத்த பாதுகாப்பான ஒரு குறுகிய சிறுபான்மை'' மட்டும்தான் ''நிரந்தர ஆதாயமடைந்தது''; ''மிகப் பெருவாரியான தொழிலாளர்கள் மிகச் சிறந்த நிலைமையிலுங்கூட தற்காலிக மேம்பாடுதான் பெற முடிந்தது''.... ''அந்த [இங்கிலாந்தின் தொழில் துறை] ஏகபோகம் தகர்ந்ததும், ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் தனிச் சலுகைக்குரிய நிலையினை இழந்துவிடும்....'' ''புதிய'' தொழிற் சங்கங்களின், அதாவது தேர்ச்சியற்ற தொழிலாளர்களது சங்கங்களின் உறுப்பினர்கள் ''மாபெரும் இந்த அனுகூலமுடையவர்களாவர்: அவர்களுடைய மனம் வசதிக்குரிய நிலைமையில் இருந்த 'பழைய சங்கங்களின் உறுப்பினர்களது' சிந்தனைக்கு இடையூறாய் இருந்த மர

புரிமையாக வந்த 'உயர்குல' முதலாளித்துவத் தப்பெண்ணங் களால் சிறிதும் களங்கமுறுத கன்னி நிலமாகும்''.... இங்கி லாந்தில் ''தொழிலாளர் பிரதிநிதிகள் எனப்படுவோர்'' எத்தகையோர் என்றால், ''தாம் தொழிலாளர்கள் என்பதற் குரிய தன்மையைத் தமது மிதவாதமெனும் கடலிலே மூழக் கடித்துவிட விரும்புகிறவர்கள், ஆதலால் தொழிலாளி வர்க்க உறுப்பினர்களாய் இருப்பதற்காக மன்னிப்பளிக்கப் பட்டவர்கள்''....

மார்க்ஸ், எங்கெல்ஸ் இவர்களது நேரடியான எழுத்துக் களிலிருந்து வேண்டுமென்றேதான் விரிவான மேற்கோள் கள் எடுத்துக் கூறியுள்ளோம். வாசகர் இவற்றை ஒட்டு மொத்தமாய்ப் பரிசீலனை செய்து பார்க்கும் பொருட்டே இவ்வாறு செய்துள்ளோம். இவை அவசியம் படித்தறிய வேண்டியவை. கவனமாய்ச் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டி யவை. ஏனெனில் தொழிலாளர் இயக்கத்தின் போர்த் தந்திரத்துக்கு, ஏகாதிபத்தியச் சகாப்தத்தின் எதார்த்த நிலைமைகளால் அவசியமாக்கப்படும் இந்தப் போர்த்தந்திரத் துக்கு அச்சாணியாக அமைந்தவை இவை.

இங்குங்கூட காவுத்ஸ்கி பிரச்சினையைக் குழப்பிவிட வும், மார்க்சியத்துக்குப் பதிலாய்ச் சந்தர்ப்பவாதிகளுடன் மனங்கனிந்து இணக்கம் காணும் போக்கை அனுசரிக்கவும் முயலுகிறார். ஜெர்மனி யுத்தத்தில் இறங்கியது இங்கிலாந் தின் ஏகபோகத்தை ஒழித்திடுவதற்கான ஒரு மார்க்கமாகு மெனக் கூறி அதற்கு நியாயம் கற்பிக்கும் சிறுபிள்ளைத்தன மான அப்பட்ட சமூக-ஏகாதிபத்தியவாதிகளை (லென்ச் போன்றோர்) எதிர்த்து வாதாடும் காவுத்ஸ்கி, அப்பட்ட மான இந்தப் பொய்க்கூற்றை இதே போன்று அப்பட்டமான மற்றொரு பொய்க்கூற்றைக் கொண்டு ''திருத்திச் சரி செய்கிறார்''. அகோரமான ஒரு பொய்க்கூற்றுக்குப் பதிலாய் அவர் நாசுக்கான ஒரு பொய்க்கூற்றைக் கையாளுகிறார்! இங் கிலாந்தின் தொழில் துறை ஏகபோகம் நெடுங்காலத்துக்கு முன்பே முறியடிக்கப்பட்டு விட்டது, நெடுங்காலத்துக்கு முன்பே ஒழிக்கப்பட்டுவிட்டது என்றும், ஒழிப்பதற்கு இனி எதுவும் விட்டுவைக்கப்படவில்லை என்றும் கூறுகிறார்.

ஏன் இது பொய்யான வாதமாகிறது?

ஏனெனில், முதலாவதாக, இது இங்கிலாந்தின் **காலனித் துறை** ஏகபோகத்தைக் கவனியாது ஒதுக்கிவிடுகிறது. ஆயினும் நாம் மேலே கண்டது போல, எங்கெல்ஸ் *1882* லேயே, முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இதை மிகத் தெளிவாய் எடுத்துரைத்திருந்தார்! இங்கிலாந்தின் தொழில் துறை ஏகபோகம் ஒழிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் காலனித் துறை ஏகபோகம் அழியாதிருப்பதோடு மேலும் கடுமையாய் உக்கிரமாகியுள்ளது, ஏனெனில் அனைத்துலகும் ஏற்கனவே பிரித்துப் பங்கிடப்பட்டுக் கொண்டுவிட்டது! இந்த நாசுக்கான பொய்யின் மூலம் காவுத்ஸ்கி ''போராடுவதற்கு ஒன்றுமில்லை'' என்பதான முதலாளித்துவ-சாத்வீகவாத, சந்தர்ப்பவாத-குட்டிபூர்ஷுவாக் கருத்தைக் கள்ளத்தனமாய்ப் புகுத்திவிடுகிறார். இக்கருத்துக்கு நேர் மாறாய், இப்பொழுது **முதலாளிகள்** போராடுவதற்கு நிறைய இருப்பதுடன், முதலாளித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமாயின் அவர்களுக்குப் போராடுவதைத் தவிர **வேறு வழியே** இல்லை; ஏனெனில் காலனிகளைப் பலவந்தமாய் மறுபங்கீடு செய்யாமல் **புதிய** ஏகாதிபத்திய நாடுகள் பழைய **(பலவீனமாகிவிட்ட)** ஏகாதிபத்திய அரசுகள் அனுபவிக்கும் தனிச் சலுகைகளைப் பெற முடியாது.

இரண்டாவதாக, இங்கிலாந்தின் ஏகபோகம் இங்கிலாந்தில் சந்தர்ப்பவாதத்தின் (தற்காலிக) வெற்றிக்குக் காரணமாவது எப்படி? எப்படியெனில், ஏகபோகத்தால் **உபரி லாபங்கள்** கிடைக்கின்றன, அதாவது உலகெங்கும் முறையாகவும் வழக்கமாகவும் கிடைக்கும் முதலாளித்துவ லாபங்களைக் காட்டிலும் அதிகப்படியான லாபங்கள் கிடைக்கின்றன. முதலாளிகள் இந்த உபரிலாபங்களில் ஒரு பகுதியை (அது ஒன்றும் சிறிய பகுதியல்ல!) **தமது சொந்த நாட்டுத்** தொழிலாளர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக, பிற நாடுகளுக்கு **எதிராய்** அந்த நாட்டின் தொழிலாளர்களுக்கும் அவர்களது முதலாளிகளுக்கும் இடையே ஒரு கூட்டுக்கு ஒப்பான தொன்றை (வெபுக்கள் விவரித்த ஆங்கிலேயத் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான பெயர்பெற்ற ''கூட்டுகள்'' நினைவுகூரத்தக்கவை) தோற்றுவிப்பதற்காக உபயோகித்துக் கொள்ள **முடிகிறது.** இங்கிலாந்தின் தொழில்

துறை ஏகபோகம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் குள்ளாகவே ஒழிக்கப்பட்டுவிட்டது. இது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இது எப்படி நடந்தேறியது? ஏகபோகத்தின் எல்லா வகைகளுமே மறைந்தாவிட்டன?

அவ்வாறு மறைந்திருப்பின், (சந்தர்ப்பவாதிகளுடன்) இணக்கம் காண்பதென்ற காவுத்ஸ்கியின் ''தத்துவம்'' ஓரளவு நியாயமானதாய் இருக்கும். ஆனால் அது அவ்வாறு மறைந்துவிடவில்லை; இதுவே இங்குள்ள விவகாரமாகும். ஏகாதிபத்தியம் என்பது ஏகபோக முதலாளித்துவம் ஆகும். ஒவ்வொரு கார்ட்டலும், டிரஸ்டும், சிண்டிக்கேட்டும், பூதாகாரமான ஒவ்வொரு பாங்கியும் ஒரு ஏகபோகமே ஆகும். உபரிலாபங்கள் மறைந்துவிடவில்லை, இன்னமும் அவை இருந்து வருகின்றன. தனிச் சலுகை பெற்று நிதித் துறையில் செல்வந்தராயுள்ள ஒரு நாடு ஏனைய எல்லா நாடுகளையும் சுரண்டுவது மறையாமல் தொடர்ந்து இருப்பதுடன் மேலும் கடுமையும் ஆகியுள்ளது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில செல்வந்தர் நாடுகள்—சுயேச்சையான, மெய்யாகவே பிரம்மாண்டமான, ''நவீன'' செல்வத்தையே குறிப்படுவதாயின் நான்கே நான்கு நாடுகள் மட்டும்தான் உள்ளன: இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடு, ஜெர்மனி—பிரம்மாண்ட அளவுகளுக்கு ஏகபோகத்தை வளர்த்துக் கொண்டுவிட்டன; பத்துக் கோடிக் கணக்கில்—நூறு கோடிக் கணக்கில் இல்லையேல்—செல்லும் உபரிலாபங்கள் பெற்று வருகின்றன; பிற நாடுகளைச் சேர்ந்த கோடானு கோடியான மக்களின் ''முதுகிலே சவாரி செய்கின்றன''; மிகவும் செழிப்பான; மிகவும் கொழுத்த, மிகவும் எளிதில் கிடைக்கக்கூடிய கொள்ளையைப் பங்கு போட்டுக் கொள்வதற்காகத் தம்மிடையே சண்டையிட்டுக் கொள்கின்றன.

உண்மையில் இதுவே ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் சாராம்சமாகும்; இதன் ஆழமான முரண்பாடுகளை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாய்க் காவுத்ஸ்கி மூடிமெழுகிவிடுகிறார்.

ஏகாதிபத்திய ''வல்லரசு'' ஒன்றின் முதலாளித்துவ வர்க்கத்துக்குக் கிடைக்கும் உபரிலாபங்கள் பெரும்பாலும் நூறு கோடிப் பிராங்குக் கணக்கில்தான் இருக்குமாதலால்,

அதனால் ஆண்டுக்குப் பத்துக் கோடிப் பிராங்கு வீதம் செல விட்டுத் ''தனது'' தொழிலாளர்களின் மேல்தட்டினருக்குப் பொருளாதார வழியில் லஞ்சம் கொடுத்து அவர்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்டுவிட முடியும். இந்தச் சொற்பக் கைக்கூலி தொழிலாளர் அமைச்சர்கள், ''தொழிலாளர் பிரதிநிதிகள்'' (இப்பதத்துக்கு எங்கெல்ஸ் அளித்த ஒப்பற்ற விளக்கத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்), இராணுவ-தொழில் கமிட்டிகளின்[59] தொழிலாளர் உறுப்பினர்கள், தொழிலாளர்-அதிகாரிகள், குறுகிய தொழிலுக்கான சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், அலுவலகச் சிப்பந்திகள் போன்ற பல தரப்பட்டோரிடையிலும் எப்படிப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது இரண்டாந்தரப் பிரச்சினையே ஆகும்.

1848க்கும் 1868க்கும் இடையிலும், ஓரளவுக்கு அதற்குப் பிற்பாடுங்கூட இங்கிலாந்து மட்டும்தான் ஏகபோக நிலை அனுபவித்து வந்தது; எனவேதான் அங்கு பல பத்தாண்டுகளுக்குச் சந்தர்ப்பவாதம் வெற்றியடைய முடிந்தது. வேறு எந்த நாடும் மிகுந்த வளமுடைய காலனிகளோ, தொழில் துறை ஏகபோகமோ பெற்றிருக்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி மூன்றும் கூறில் புதிய, ஏகாதிபத்தியச் சகாப்தத்துக்கான மாற்றம் ஏற்பட்டது. ஒரு வல்லரசல்ல, ஒரு சிலவே ஆயினும், பல வல்லரசுகளது நிதி மூலதனம் இப்பொழுது ஏகபோக நிலை அனுபவிக்கலாயிற்று. (ஜப்பானிலும் ருஷ்யாவிலும் இராணுவ பலம், பெரும் பரப்புகள் அல்லது சிறுபான்மைத் தேசிய இனங்களையும் சீனுவையும் இன்ன பிறவற்றையும் சூறையாடுவதற்கான தனி வசதிகள் முதலியவற்றுலான ஏகபோகம், நவீன கால, நூதன நிதி மூலதனத்தின் ஏகபோகத்துக்கு ஓரளவு இணையாகவும் ஓரளவு பதிலாகவும் செயல்படுகிறது.) இங்கிலாந்தின் ஏகபோக நிலை பல பத்தாண்டுகளாய் எதிர்ப்பின்றியே இருக்க முடிந்ததற்கு இந்த வித்தியாசமே காரணமாகும். நவீன கால நிதி மூலதனத்தின் ஏகபோகத்துக்கு மூர்க்கத்தனமான எதிர்ப்பு மூண்டு வருகிறது; ஏகாதிபத்திய யுத்தங்களுக்கான சகாப்தம் தொடங்கிவிட்டது. அந்நாட்களில் ஒரு நாட்டின் தொழிலாளி வர்க்கத்துக்குப் பல பத்தாண்டுகளுக்கு

லஞ்சம் கொடுத்துக் கெடுத்து வருவது சாத்தியமாயிருந்தது. இப்பொழுது இது அசாத்தியமாகிவிடவில்லை என்றுலுங் கூட எதிர்பார்க்கத்தக்கதல்ல. ஆனால் ஏகாதிபத்திய ''வல்லரசு'' ஒவ்வொன்றும் (1848-68ல் இங்கிலாந்தில் முடிந்ததைவிட) சிறிய பிரிவான ''தொழிலாளர் பிரபுக்குலத்தினருக்கு'' லஞ்சம் தர முடிகிறது, தரவும் செய்கிறது. முன்பெல்லாம் ''முதலாளித்துவத் தொழிற் கட்சி''—எங்கெல்சின் பொருட் செறிவு வாய்ந்த தொடரில் சொல்வதெனில்—ஒரேயொரு நாட்டில் மட்டும்தான் தோன்ற முடிந்தது, ஏனெனில் இந்த ஒரு நாடு மட்டும்தான் ஏகபோக நிலைக்குரியதாய் இருந்தது. ஆனால் இங்கு அந்தக் கட்சி நீண்ட காலத்துக்கு நீடிக்க முடிந்தது. இப்பொழுது ஏகாதிபத்திய நாடுகள் யாவற்றிலும் ''முதலாளித்துவத் தொழிற் கட்சி'' தவிர்க்க முடியாததும் இந்நாடுகளுக்குரிய குணாதிசயமாகவும் இருந்து வருகிறது; ஆனால் கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்வதற்காக இந்நாடுகள் மூர்க்கமாய்ப் போராடுவதால், இத்தகைய ஒரு கட்சி அதிக காலத்துக்குப் பல நாடுகளில் வெற்றியடையுமென எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில் டிரஸ்டுகளும் நிதியாதிக்கக் கும்பலும் உயர்ந்த விலைகளும் இன்ன பிறவும் மேல் மட்டத்துப் பிரிவில் ஒரு சிலருக்கு லஞ்சமளித்து விலைக்கு வாங்க வகை செய்யும் அதே நேரத்தில், பாட்டாளி வர்க்கத்தினரிலும் பகுதியளவு பாட்டாளி வர்க்கத்தினராய் இருப்போரிலும் மிகப் பெருந்திரளானோரை மேலும் மேலும் ஒடுக்கி நசுக்கி ஓட்டாண்டிகளாக்கி வாட்டி வதைத்து வருகின்றன.

ஒருபுறத்தில் சலுகை படைத்த செல்வமிக்க ஒருசில தேசங்களை மனிதகுலத்தின் பிற பகுதியின் இரத்தத்தை உறிஞ்சும் ''நிரந்தரப்'' புல்லுருவிகளாய் மாற்றுவதற்கும், நவீன இராணுவத் துறை வழங்கிடும் படுநாசத்துக்குரிய சிறந்த ஆயுதங்களின் துணை கொண்டு நீக்ரோக்களையும் இந்தியர்களையும் ஏனையோரையும் அடக்கியொடுக்கிச் சுரண்டிக் கொழுத்துச் சுகவாழ்வு நடத்த முயலும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் சந்தர்ப்பவாதிகளுக்குமுள்ள போக்கு செயல்படுகிறது. மறுபுறத்தில் முன்னிலும் கடுமையாக ஒடுக்கப் பெற்று, ஏகாதிபத்திய யுத்தங்களின் முழுச் சுமையாலும்

வருத்தப்படும் மக்கள் திரள் இந்த அடிமைத் தளைகளைத் தகர்த்தெறியவும் முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்க்கவும் போராடும் போக்கு செயல்படுகிறது. இந்த இரு போக்குகளிடையிலான போராட்டத்திலேதான் தவிர்க்க முடியாதபடி இப்பொழுது தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியுற்றுக வேண்டும். ஏனெனில் முதலாவது போக்கு தற்செயலாய்த் தோன்றிவிடவில்லை; அதற்குப் பொருளாதார ''வேர்கள்'' இருக்கின்றன. எல்லா நாடுகளிலுமே முதலாளித்துவ வர்க்கம் ஏற்கனவே தனக்கு சமூக-தேசியவெறியர்களது ''முதலாளித்துவத் தொழிற் கட்சிகளைத்'' தோற்றுவித்து, ஊட்டமளித்து நிலை பெறச் செய்து கொண்டுவிட்டது. திட்டவட்டமாய் உருவாகிவிட்ட ஒரு கட்சிக்கும் —உதாரணமாய் இத்தாலியில் முழுக்க முழுக்க சமூக-ஏகாதிபத்தியக் கட்சியாக இருந்து வரும் பிஸ்ஸொலாத்தியின் கட்சிக்கும் —பகுதியளவுக்கே உருவாகியுள்ள கட்சியையொத்த நிறுவன அமைப்புக்களுக்கும்—உதாரணமாய் பத்ரேசவ்கள், குவோஸ்தியோவ்கள், பூல்க்கின்கள், சிஹெயீத்ஸேக்கள், ஸ்கோபெலெவ்கள் முதலான கோஷ்டிகளுக்கும் —இருக்கும் வேறுபாடு பொருட்படுத்தக்கூடிய ஒரு வேறுபாடல்ல. முக்கிய உண்மை என்னவெனில், பொருளாதார வழியில், தொழிலாளர் பிரபுக்குலம் ஒன்று பிளந்து சென்று முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் சேர்ந்துவிடும் நிகழ்ச்சி முதிர்ச்சியுற்று எதார்த்த நிலைவரமாகிவிட்டது. இந்தப் பொருளாதார உண்மை, வர்க்க உறவுகளில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதல், எந்த விசேஷ ''இடர்ப்பாடுமின்றி'' ஏதேனும் ஒருவித அரசியல் வடிவம் பெற்றுவிடும்.

மேற்கூறிய பொருளாதார அடிப்படையின்மீது நவீன கால முதலாளித்துவத்தின் அரசியல் ஏற்பாடுகளான பத்திரிகைகள், பாராளுமன்றம், கழகங்கள், காங்கிரசுகள் முதலானவை உயர்குல மனப்பான்மையும் பணிவுமுடைய சீர்திருத்தவாத, தேசபக்த அலுவலகச் சிப்பந்திகளுக்கும் தொழிலாளர்களுக்கும், பொருளாதாரச் சலுகைகளுக்கும் ரொட்டித் துண்டங்களுக்கும் ஏற்றதான அரசியல் சலுகைகளையும் ரொட்டித் துண்டங்களையும் படைப்பித்திருக்கின்றன. சர்க்காரிலோ, இராணுவ-தொழில் கமிட்டியிலோ, பாராளு

மன்றத்திலோ, பல்வேறு வகையான கமிஷன்களிலோ, சட்ட முறைப்படி வெளிவரும் ''கவுரவமான'' பத்திரிகைகளின் ஆசிரியர் குழாம்களிலோ, இதேபோல கவுரவமான ''முதலாளித்துவ வர்க்கத்துக்குப் பணிந்து நடக்கும்'' தொழிற் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களிலோ கொழுத்த சம்பளத்துக்குரிய சொகுசான பதவிகள் தரப்படுகின்றன—ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினர் இந்த இரையை வைத்துத்தான் ''முதலாளித்துவத் தொழிற் கட்சிகளின்'' பிரதிநிதிகளையும் ஆதரவாளர்களையும் கவர்ந்திழுத்துச் சன்மானம் அளிக்கின்றனர்.

அரசியல் ஜனநாயகத்தின் இயங்கு அமைப்பும் இதே திசையில்தான் செயல்படுகிறது. நாம் வாழும் இக்காலத்தில் தேர்தல்களின்றி எதுவும் நடைபெறுது; மக்கள் திரளின்றி அணுவும் அசையாது. அச்செழுத்துக்கும் பாராளுமன்ற முறைக்குமுரிய இச்சகாப்தத்தில், புகழ்ச்சி, பொய், பித்தலாட்டம், செல்வாக்கு மிக்க புதிய மோஸ்தராகிவிட்டமினுக்குச் சொற்களாலான வாய்ச்சவடால், தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்ப்பதற்கான புரட்சிப் போராட்டத்தைத் தவிர்க்கும் வரை அவர்களுக்கு எல்லா வகையான சீர்திருத்தங்களையும் வசதிகளையும் செய்து தருவதாய்க் கண்ணை மூடிக் கொண்டு வாக்குறுதியளித்தல் ஆகியயாவும் அடங்கலாய் நன்கு அமைந்து பாங்குடன் நிர்வகிக்கப்படும் விரிவான வலைப்பின்னல் அமைப்பு இல்லாமல் மக்கள் திரளினரைத் தன்னைப் பின்பற்றும்படிச் செய்வது **சாத்தியமன்று.** ஆங்கிலேய அமைச்சர் லாயிட் ஜார்ஜின் பெயரில் இந்த அமைப்பை லாயிட்-ஜார்ஜியம் என்றழைக்கலாம். இவர் ''முதலாளித்துவத் தொழிற் கட்சிக்கான'' முதற் பெரும் நாட்டில் இவ்வமைப்பின் உன்னதமான கைதேர்ந்த பிரதிநிதிகளில் ஒருவராவார். முதல் தர முதலாளித்துவச் சூழ்ச்சிக்காரரும், சாமர்த்தியமான அரசியல்வாதியும், நீங்கள் கேட்க விரும்பும் எந்த விதச் சொற்பொழிவையும், தொழிலாளர் கூட்டத்துக்குரிய பு-ர்-ர்-ரட்சிகரச் சொற்பொழிவுகளையுங்கூட, நிகழ்த்தக்கூடிய செல்வாக்கு மிகுந்த பேச்சாளரும், சொன்னபடி கேட்கும் தொழிலாளர்களுக்கு சமூக சீர்திருத்தங்களின் வடிவில் (இன்ஷூரன்ஸ் முதலான வசதிகளின் வடிவில்) பெரிய பெரிய ரொட்டித் துண்டங்கள்

கிடைக்கச் செய்யக் கூடியவருமான லாயிட் ஜார்ஜ் முதலாளித்துவ வர்க்கத்துக்குச் சிறப்பான முறையில் சேவை புரிகிறார்;* அதுவும் தொழிலாளர்களிடையே சென்று முதலாளித்துவத்துக்குச் சேவை புரிகிறார். முதலாளித்துவ வர்க்கத்துக்கு அதன் செல்வாக்கைப் பாட்டாளி வர்க்கத்தினுள் பரவச் செய்வதுதான் மிகவும் தேவைப்படுகிறது; பாட்டாளி வர்க்கத்தில்தான் அதற்கு மக்கள் திரளைத் தார்மிக வழியில் தனக்கு அடிபணிய வைப்பது மிகவும் கடினமாயுள்ளது. லாயிட் ஜார்ஜ் குறிப்பாய் இதே பாட்டாளி வர்க்கத்திடம் தான் முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கை எடுத்துச் சென்று பரவச் செய்கிறார்.

இந்த லாயிட் ஜார்ஜுக்கும் ஷைடெமன்கள், லேகின்கள், ஹெண்டர்சன்கள், ஹைண்ட்மன்கள், பிளெஹானவ்கள், ரெனெடேல்கள் முதலானோருக்கும் இடையே அப்படி பெரிய வித்தியாசமா இருக்கிறது? பின்னவர்களில் சிலர் மார்க்சின் புரட்சிகர சோஷலிசத்துக்குத் திரும்பி வந்துவிடுவார்கள் என்பதாக ஆட்சேபம் எழுப்பலாம். சிலர் திரும்புவது சாத்தியமே. ஆனால் இப்பிரச்சினையை அதன் அரசியல், அதாவது வெகுஜன, கோணத்திலிருந்து பார்க்கையில் இதனால் ஏற்படும் வித்தியாசம் அற்பமானதே. தற்போது சமூக-தேசியவெறித் தலைவர்களாய் இருப்போரில் சிலர் பாட்டாளி வர்க்கத்துக்குத் திரும்பி வரக் கூடும். ஆனால் சமூக-தேசியவெறி அல்லது சந்தர்ப்பவாத (இரண்டும் ஒன்றேதான்) போக்கு மறையப் போவதுமில்லை, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குத் ''திரும்பிவரப்'' போவதுமில்லை. எங்கெல்லாம் தொழிலாளர்களிடையே மார்க்சியம் செல்வாக்கு மிக்கதாயுள்ளதோ, அங்கு இந்த அரசியல் போக்கு, இந்த ''முதலாளித்துவத்

---

* லாயிட் ஜார்ஜின் அரசியல் எதிராளியான டோரி கட்சியாளர் ஒருவர் ''டோரியின் கண்ணோட்டத்தில் லாயிட் ஜார்ஜ்'' என்னும் தலைப்பில் ஆங்கிலேயப் பத்திரிகை ஒன்றில் எழுதிய ஒரு கட்டுரையை அண்மையில் நான் படித்தேன். யுத்தம் இந்த எதிராளியின் கண்களைத் திறந்துவிட்டு, லாயிட் ஜார்ஜ் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எவ்வளவு சிறப்பான சேவை புரிகிறார் என்பதை உணரச் செய்தது! டோரிகள் அவருடன் ராஜி செய்து கொண்டுவிட்டனர்!

தொழிற் கட்சி'' மார்க்சின் பெயரில்தான் ஆணையிட்டுச் செயல் புரியும். இதைச் செய்யக் கூடாதென அதற்குத் தடை விதிக்க இயலாது. வர்த்தகக் கம்பெனி ஒன்று எந்தவொரு முத்திரையையோ, குறியையோ, விளம்பரத் தையோ உபயோகிக்கலாகாதெனத் தடை விதிப்பது எப்படி சாத்தியமற்றதோ அதே போலதான் இதுவும். ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிடையே செல்வாக்கு பெறும் புரட்சிகரத் தலை வர்கள் இறந்தபின், அவர்களுடைய பகைவர்கள் ஒடுக்கப் பட்ட வர்க்கங்களை ஏமாற்றும் பொருட்டு அவர்களது பெயர்களைத் தமதாக்கிக் கொண்டு பயன்படுத்த முயலுவது வரலாற்றில் எப்பொழுதுமே சகஜமாய் இருந்துள்ளது.

அரசியல் நிகழ்ச்சி என்ற முறையில் ''முதலாளித்துவத் தொழிற் கட்சிகள்'' முதன்மையான முதலாளித்துவ நாடு கள் **யாவற்றிலும்** ஏற்கனவே நிறுவப் பெற்றுவிட்டன. இக் கட்சிகளை—இவை கட்சிகளாய் இராமல் கோஷ்டிகள், போக்கு கள் முதலியனவாய் இருந்தாலும் ஒன்றுதான்—எதிர்த்து உறுதியாகவும் விடாப்பிடியாகவும் நெடுகிலும் போராட்டம் நடத்தினால் ஒழிய, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்துக்கோ, மார்க்சியத்துக்கோ, சோஷலிசத் தொழிலாளர் இயக்கத்துக்கோ வழி இல்லை. ருஷ்யாவிலுள்ள சிஹெயீத்ஸே கோஷ்டியும்[60] **நாஷே தேலோ**வும் **கோலஸ் துருதா**வும்[61], வெளிநாடுகளிலுள்ள நிறுவனக் கமிட்டிக் காரர்களும் **இத்தகைய** கட்சியின் பல்வேறு வகைகளேயன்றி வேறல்ல. சமுதாயப் புரட்சிக்கு **முன்னதாகவே** இக்கட்சி கள் மறைந்துவிடுமென நினைக்கச் சிறிதும் நியாயம் இல்லை. இதற்கு மாறாக, புரட்சி நெருங்க நெருங்க, அது மேலும் தீவி ரமாய் மூண்டெழுந்து, அதன் வளர்ச்சியில் மாற்றங்களும் பாய்ச்சல்களும் மேலும் திடுதிப்பென்றும் வன்மை மிக்கதாக வும் ஆக ஆக, சந்தர்ப்பவாதக் குட்டிபூர்ஷுவா பெருக்கை எதிர்த்துப் புரட்சிகர வெகுஜனப் பெருக்கு நடத்தும் போராட்டத்துக்குத் தொழிலாளர் இயக்கத்திலுள்ள பங்கும் மேலும் மேலும் அதிகரித்துச் செல்கிறது. காவுத்ஸ்கி வாதம் சுயேச்சையான ஒரு தனிப் போக்கல்ல, ஏனெனில் அதற்கு மக்கள் திரளிடத்தோ, முதலாளித்துவ வர்க்கத் தின் பக்கம் ஓடிவிட்ட சலுகை படைத்த பிரிவினரிடத்தோ

வேர்களில்லை. ஆனால் காவுத்ஸ்கிவாதத்தின் அபாயமெல்லாம் கடந்த காலச் சித்தாந்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பாட்டாளி வர்க்கத்தினை ''முதலாளித்துவத் தொழிற்கட்சி'' யுடன் இணக்கம் பெறச் செய்வதற்கும், அக்கட்சியுடன் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்கவும், இவ்வழியில் அக்கட்சியின் செல்வாக்கை உயர்த்தவும் அது மேற்கொள்ளும் முயற்சிகளில் அடங்கியிருக்கிறது. நாடறிந்த சமூக-தேசியவெறியர்களை இப்பொழுது மக்கள் திரள் பின்தொடர்ந்து செல்வதில்லை: இங்கிலாந்தில் தொழிலாளர் பொதுக் கூட்டங்களில் லாயிட் ஜார்ஜ் பேச முடியாதபடி எதிர்ப்புக் கூச்சல் போடப்பட்டிருக்கிறது; ஹைண்ட்மன் கட்சியை விட்டு வெளியேறிவிட்டார்; ரெனெடேல்களும் ஷைடெமன்களும் பத்ரேசவ்களும் குவோஸ்தியோவ்களும் போலீசாரது பாதுகாப்பில் இருக்க வேண்டியதாகியுள்ளது. காவுத்ஸ்கிவாதிகள் மறைமுகமாய் சமூக-தேசியவெறியர் களுக்குப் பாதுகாப்பும் ஆதரவும் அளிப்பதானது மேலும் அதிக அளவுக்கு அபாயகரமானதாகும்.

''மக்கள் திரள்'' என்பதாகப் பேசுவது காவுத்ஸ்கி வாதத்தின் சகஜமான குதர்க்கவாதங்களில் ஒன்றாகும். மக்கள் திரளிடமிருந்தும் வெகுஜன நிறுவனங்களிடமிருந்தும் தாம் முறித்துக் கொள்ள விரும்பவில்லை என்று காவுத்ஸ்கி வாதிகள் கூறுகிறார்கள்! ஆனால் எங்கெல்ஸ் இப்பிரச்சினை யை எப்படி அணுகினார் என்பதைக் கவனிக்க வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயத் தொழிற் சங்க ''வெகுஜன நிறுவனங்கள்'' முதலாளித்துவத் தொழிற் கட்சியின் பக்கம் இருந்தன. இக்காரணத்தால் மார்க்சும் எங்கெல்சும் அதனுடன் இணங்கிச் சென்றுவிடவில்லை; அதற்குப் பதில் அவர்கள் அதை அம்பலப்படுத்தி வந்தனர். முதலாவதாக, தொழிற் சங்க நிறுவனங்கள் **பாட்டாளி வர்க்கத்தில் ஒரு சிறுபான்மைப் பகுதியை** மட்டுமே தம்முள் நேரடியாகக் கொண்டிருந்தன என்பதை அவர்கள் மறக்கவில்லை. அன்று இங்கிலாந்தில், தற்போது ஜெர்மனியில் இருப்பது போலவே, பாட்டாளி வர்க்கத்தினரில் ஐந்தில் ஒரு பகுதிக்கு மேற்படாதோர்தான் நிறுவன ஒழுங்கமைப்புடையோராய் இருந்தனர். முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கத்தினரில்

பெரும்பான்மையோரை நிறுவன ஒழுங்கமைப்பு பெறும்படிச் செய்ய முடியுமென யாரும் மெய்யாகவே கருத முடியாது. இரண்டாவதாக—இதுவே இங்குள்ள பிரதான விஷயம் —முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது நிறுவனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையல்ல, அதன் கொள்கையின் மெய்யான, எதார்த்த உள்ளடக்கமே ஆகும். அதன் கொள்கை மக்கள் திரளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா, அது அவர்களுக்குச் சேவை புரிகிறதா, அதாவது அவர்களை முதலாளித்துவத்திலிருந்து விடுவிப்பதை நோக்கமாய்க் கொண்டுள்ளதா, அல்லது சிறுபான்மையோரின் நலன்களையும் முதலாளித்துவத்துடனை அதன் இணக்கத்தையும் பிரதிபலிக்கிறதா? பின்னதுதான் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த நிலைமை; தற்போது ஜெர்மனியிலும் வேறு பல நாடுகளிலும் இருக்கும் நிலைமை.

எங்கெல்ஸ் சலுகை படைத்த சிறுபான்மையோரான **பழைய** தொழிற் சங்கங்களது ''முதலாளித்துவத் தொழிற் கட்சியையும்'' மெய்யான பெரும்பான்மையோரான ''**கீழ் மட்டத்துப்** பெருந்திரளையும்'' வேறுபடுத்தி, ''முதலாளித்துவ உயர்குல மனப்பான்மையால்'' நச்சுப்படுத்தப்படாத பின்னவர்களுக்கே வேண்டுகோள் விடுக்கிறார். இதுவே மார்க்சியப் போர்த்தந்திரத்தின் சாராம்சம்!

பாட்டாளி வர்க்கத்தில் திட்டவட்டமாய் எந்த அளவுள்ள பகுதி சமூக-தேசியவெறியர்களையும் சந்தர்ப்பவாதிகளையும் பின்பற்றுகிறது, இனி பின்பற்றப் போகிறது என்று நம்மாலோ அல்லது வேறு எவராலுமோ கணக்கிட்டுக் கூறிவிட முடியாது. இது போராட்டத்தின் மூலம்தான் புலப்படுத்தப்படும்; சோஷலிசப் புரட்சியால் மட்டும்தான் இது திட்டவட்டமாய் முடிவு செய்யப்படும். ஆனால் ஏகாதிபத்திய யுத்தத்தில் ''தாயகப் பாதுகாப்பாளர்கள்'' சிறுபான்மையோரை மட்டுமே **பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்** என்பது நமக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆகவே, நாம் சோஷலிஸ்டுகளாய்த் தொடர்ந்து இருக்க விரும்பினால், **கீழ்மட்டத்துக்கும் ஆழ்மட்டத்துக்கும்,** அதாவது மெய்யான மக்கள்திரளிடையே செல்வது நமது கடமையாகும். சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் முழுப் பொருளும்

உள்ளடக்கமும் இதுவேதான். சந்தர்ப்பவாதிகளும் சமூக-தேசியவெறியர்களும் உண்மையில் மக்கள் திரளுடைய நலன்களுக்குத் துரோகமிழைக்கின்றனர், விலை பேசி அவற்றை விற்கின்றனர் என்பதையும், தொழிலாளர்களில் ஒரு சிறுபான்மையோரின் தற்காலிகச் சலுகைகளைப் பாதுகாத்து நிற்கிறார்கள் என்பதையும், முதலாளித்துவக் கருத்துக்களையும் செல்வாக்கையும் பரப்பும் சாதனங்களாவர் என்பதையும், உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தின் கூட்டாளிகளும் கையாட்களுமாவர் என்பதையும் அம்பலம் செய்வதன் மூலம் நாம் மக்கள் திரளுக்கு அவர்களது மெய்யான அரசியல் நலன்களை உணர்ந்து கொள்வதற்கும், ஏகாதிபத்திய யுத்தங்கள், ஏகாதிபத்தியப் போர்நிறுத்த உடன்பாடுகள் இவற்றிலான நீண்டநெடிய துயரப் பாதை நெடுகிலும் சோஷலிசத்துக்காகவும் புரட்சிக்காகவும் போராடுவதற்கும் கற்றுத் தருகிறோம்.

சந்தர்ப்பவாதத்திடமிருந்து பிளந்து செல்வது தவிர்க்க முடியாதது, இன்றியமையாதது என்பதை மக்கள் திரளுக்கு விளக்கிக் கூறுவதுதான், சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து அயராத போராட்டம் நடத்துவதன் மூலம் அவர்களுக்குப் புரட்சிக்கான போதம் பெறும்படிச் செய்வதுதான், யுத்த அனுபவங்களைத் தேசிய-மிதவாதத் தொழிற் கட்சிக் கொள்கையின் பரிபூரண இழிநிலையை மூடிமறைப்பதற்காக இல்லாமல், அதனை அம்பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதுதான் உலகத் தொழிலாளர் இயக்கத்தில் பின்பற்ற வேண்டிய ஒரேவொரு மார்க்சிய வழி.

அடுத்த கட்டுரையில், இந்த வழியைக் காவுத்ஸ்கிவாதத்திலிருந்து வேறுபடுத்தும் பிரதான இயல்புகளைத் தொகுத்துக் கூற முயலுவோம்.

1916 அக்டோபரில்
எழுதப்பெற்றது
1916 டிசம்பரில்,
ஸ்போர்னிக் ''சொத்சியால்-டெமக்ராத்தா,''
இதழ் *2*ல் வெளிவந்தது

ஒப்பம்: நி.லெனின்

நூல் திரட்டு,
தொகுதி *30*,
பக்கங்கள் *163-179*

பாட்டாளி வர்க்கக் கலாசார, கல்வித் துறை நிறுவனங்களின் மாநாட்டுத் தலைமைக் குழுவுக்கு எழுதிய கடிதம்

17.9.1918

அருமைத் தோழர்களே,

உங்களுடைய நல்வாழ்த்துக்களுக்காக மிக்க நன்றி. உங்கள் வேலைகளில்[62] நற்பேறு கிட்டுவதாக.

சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குரிய பிரதான நிபந்தனைகளில் ஒன்று என்னவெனில், தொழிலாளி வர்க்கம் தான் ஆட்சி நடத்த வேண்டுமென்பதையும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய இடைக்காலகட்டத்தில் தனது ஆட்சி நடத்தப்பட்டாக வேண்டுமென்பதையும் உணர்ந்து கொண்டாக வேண்டும். உழைப்போரும் ஒடுக்கப்பட்டோருமான மக்கள் அனைவரின் முன்னணிப் படையாகிய பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி இந்த இடைக்காலகட்டத்தில் அத்தியாவசியமானது—வர்க்கங்கள் அறவே நீக்கப்பட வேண்டுமாயின், சுரண்டுவோரின் எதிர்ப்பு அடக்கப்பட வேண்டுமாயின், உழைப்போரும் ஒடுக்கப்பட்டோருமாகிய மக்கள் திரளினர் அனைவரும் — முதலாளித்துவத்தால் நசுக்கப்பட்டும் காலால் மிதிக்கப்பட்டும் ஒன்றுபடாதவாறு பிரித்துவிடப் பட்டும் வந்த இவர்கள் அனைவரும்—நகரத் தொழிலாளர்களை மையமாய்க் கொண்டு ஒன்றுபட்டு அவர்களுடன் நெருங்கிய கூட்டணி கொள்ளும்படிச் செய்ய வேண்டுமாயின் இந்த ஆட்சி அத்தியாவசியமானது.

இதைப் புரிந்து கொண்டு தொழிலாளர்கள் தமது சோவியத்துகள் மூலம் அரசை ஆட்சி புரிகின்றனர் என்பது

தான் நமது எல்லா வெற்றிகளுக்குமான காரணமாய் இருந்துள்ளது.

ஆனால் தொழிலாளர்கள் இன்னும் இதைப் போதுமான அளவுக்குப் புரிந்து கொண்டாகவில்லை, அரசை ஆட்சி புரியத் தொழிலாளர்களை ஊக்குவித்து உயர்த்த அடிக்கடி அவர்கள் மிதமிஞ்சி அஞ்சித் தயங்குகிறார்கள்.

தோழர்களே, நீங்கள் இதற்காகப் போராடுங்கள்! பாட்டாளி வர்க்கக் கலாசார, கல்வித்துறை நிறுவனங்கள் இதில் துணை புரியட்டும். மேலும் தொடர்ந்து வெற்றிகள் பெறவும் சோஷலிசப் புரட்சியில் இறுதி வெற்றி கிட்டவும் இது ஓர் உத்தரவாதமாய் அமையும்.

வாழ்த்துக்கள்,
வி. உலியானவ் (லெனின்).

பிராவ்தா, இதழ் 201,
1918 செப்டம்பர் 19

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கம் 87

சர்வதேசிய ஆசிரியர்களது இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு 1919 ஜனவரி 18

(பேரார்வ வாழ்த்து முழக்கம் கிளர்ந்தெழுகிறது.) தோழர்களே, மக்கள் கமிசாரவையின் சார்பில் உங்கள் காங்கிரசுக்கு வாழ்த்துக்கள். ஆசிரியர்கள் இப்பொழுது தலையாய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை எதிர்நோக்குகின்றனர். நாம் தற்போது கடந்து வந்திருக்கும் ஆண்டுக்குப் பிற்பாடு, ஆசிரியர்களிடையிலான இந்த ஓராண்டுக் காலப் போராட்டத்துக்குப் பிற்பாடு—சோஷலிசப் புரட்சிக்காகப் பாடுபடுவதென்று தொடக்கத்திலிருந்தே சோவியத் அரசாங்கத்தின் பக்கத்தில் சேர்ந்து கொண்டு நின்றேருக்கும் இதுகாறும் பழைய அமைப்பின் பக்கம், பழைய அமைப்பின் அடிப்படையிலே போதனைப் பணி தொடர்ந்து நடைபெறலாமென்ற பழைய தப்பெண்ணங்களின் பக்கம் நின்று வந்துள்ளோருக்கும் இடையே நடைபெற்று வந்திருக்கும் போராட்டத்துக்குப் பிற்பாடு—சர்வதேச விவகாரங்களில் நடைபெற்றுள்ள பலவற்றுக்கும் பிற்பாடு இந்தப் போராட்டம் முடிவடைந்துவிட வேண்டுமென்றும், இவ்வாறே உண்மையில் முடிவுற்று வருகிறதென்றும் கருதுகிறேன். ஆசிரியர்களில் மிகப் பெரும் பகுதியோர், தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் நெருங்கியவர்களான இவர்கள், சோஷலிசப் புரட்சியானது ஆழமான வேர்களை யுடையது, தவிர்க்க முடியாதபடி உலகெங்கும் பரவி வருகிறது என்பதை இப்பொழுது ஐயமறத் தெரிந்து கொண்டிருப்பார்கள்—இதில் எந்த சந்தேகத்துக்கும் இடமிருக்க

முடியாது. ஆகவே மிகப் பெரும் பகுதியான ஆசிரியர்கள் சோஷலிச மாற்றத்துக்காக நடைபெறும் போராட்டத்தில் உழைப்பாளர்களும் ஒடுக்கப்பட்டோருமாகிய மக்களது அரசாங்கத்தின் பக்கம் முற்றிலும் மனப்பூர்வமாய் வந்து விடுவார்கள், இன்னமும் பழைய முதலாளித்துவத் தப் பெண்ணங்களுக்கும் பழைய அமைப்புக்கும் கபடங்களுக்கும் ஆதரவாய் நின்று அந்தப் பழைய அமைப்பில் ஏதேனும் ஒரு பகுதியை அழியாது பாதுகாத்து மீட்டுக் கொண்டு விடலாமென மனப்பால் குடிக்கும் ஆசிரியர்களை எதிர்ப்பார்கள் என்று நினைக்கிறேன்.

பள்ளிக்கூடமானது அரசியலிலிருந்து விலகி ஒதுங்கி நிற்க முடியுமென்று நம்புவது இந்த முதலாளித்துவக் கபடங்களில் ஒன்றாகும். இந்த நம்பிக்கை எவ்வளவு பொய் யானது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்தக் கோட் பாட்டை முன்வைத்து ஆதரித்த முதலாளித்துவ வர்க்கத் தார் தம்முடைய முதலாளித்துவ அரசியலைப் பள்ளிக் கல்வி முறையின் அடிநிலையாக்கி வைத்துக் கொண்டுதான், பள்ளிக் கூட கல்வி போதனையை முதலாளித்துவ வர்க்கத்துக்கு அடி பணிந்துத் திறம்பட ஊழியம் புரியும் வேலையாட்களுக்குரிய பயிற்சியாய்ச் சிறுமைப்படுத்த முயன்றனர்; பொது கல்வியையுங்கூட உச்சியிலிருந்து அடிமட்டம் வரை முதலா ளித்துவ வர்க்கத்துக்கு அடிபணிந்துத் திறம்பட ஊழியம் புரியும் வேலையாட்களை, மூலதனத்தின் அடிமைகளையும் கைக் கருவிகளையும் பயிற்றுவித்துக் கொள்வதற்கான முறையாய்ச் சிறுமைப்படுத்த முயன்றனர். பள்ளியை மனித மாண்பை யும் உயர் பண்புகளையும் வளர்த்திடும் சாதனமாக்குவது குறித்து அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. உழைப்போ ரும் ஒடுக்கப்பட்டோருமாகிய மக்களிடமிருந்து துண்டிக்க முடியாதபடி அவர்களுடன் பிணைப்புகள் கொண்டவையும் சோவியத் கொள்கைக்கு முழுமனதான ஆதரவளிப்பவையும் ஆகிய சோஷலிசப் பள்ளிகளால்தான் இதைச் செய்ய முடி யும் என்பது இப்பொழுது எல்லோருக்கும் தெளிவாய்த் தெரிகிறது.

கல்வித் துறையைப் புத்தமைப்பது எளிய காரியமல்ல தான். இயல்பாகவே தவறுகள் புரியப்பட்டிருக்கின்றன, இன்

னும் தொடர்ந்து புரியப்பட்டும் வருகின்றன; இதே போல கல்வித் துறைக்கும் அரசியலுக்கும் இருக்க வேண்டிய இணைப்பு களைப் பற்றிய கோட்பாட்டுக்குத் தப்பான வியாக்கியானம் அளிக்கவும், இதற்குக் கொச்சையான, வக்கிரப்பான அர்த்தம் கூறவும் முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இளந் தலைமுறையினரின் உள்ளத்தில், இதற்கு அவர்கள் போது மான அளவில் தயார் செய்யப்படாத நிலையில், அரசியலைப் புகுத்துவதற்கு அலங்கோல முயற்சிகள் செய்யப்படுகின்றன. இந்த அடிப்படைக் கோட்பாடு இப்படிக் கொச்சையான முறையில் அணுஷ்டிக்கப்படுவதை எதிர்த்து எப்பொழுதும் நாம் போராட வேண்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் விரிவான, கூடுமான அளவுக்கு அனைவரையும் தன்னுள் கொண்டதான ஆசிரியர் சங்கம் ஒன்றை உருவாக்குவதற் காகப் பாடுபடுவதுதான், ஆசிரியர்களாய்ப் பணியாற்று வோரில் கம்யூனிஸ்டு அகிலத்தின், சோவியத் அரசாங்கத்தின் பக்கம் சேர்ந்து கொண்டுவிட்டவர்களின் முன்னுள் தற் போதுள்ள தலைமையான பணியாகும்.

முதலாளித்துவத் தப்பெண்ணங்களை விடாமல் பிடித்துக் கொண்டு, உய்த்துணரும் திறன் தனக்குப் போதிய அளவு இல்லையென்று காட்டிக் கொண்ட பழைய ஆசிரியர் சங்கத் துக்கு உங்களுடைய சங்கத்தில், சர்வதேசியவாதிகளுடைய சங்கத்தில் இடமளிக்க முடியாது. இந்தப் பழைய ஆசிரியர் சங்கம் இந்தத் தனியுரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற் காக ஏனைய யாவற்றையும் காட்டிலும் நீடித்து நின்றுப் போராடியிருக்கிறது — 1917ஆம் ஆண்டுப் புரட்சியின் தொடக்கத்திலேயே நிறுவப்பட்டவையும் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நாம் எதிர்த்துப் போராடியவையுமான உச்ச நிலைச் சங்கங்களாகியவற்றுள் இது ஏனைய யாவற்றையும் விடவும்கூட நீடித்து நின்று போராடியிருக்கிறது. என் னுடைய அபிப்பிராயத்தில் உங்கள் சர்வதேசியச் சங்கம் பள்ளிக்கூட ஆசிரியர்கள் எல்லோருக்குமாகிய தனியொரு தொழிற் சங்கமாகி, ஏனைய எல்லாத் தொழிற் சங்கங்களையும் போல—இரண்டாவது அனைத்து ருஷ்யத் தொழிற்சங்கக் காங்கிரஸ் மிகத் தெளிவாய்க் காட்டியிருப்பது போல— சோவியத் அரசாங்கத்தின் கொள்கையை ஆதரித்து நிற்பது

முற்றிலும் சாத்தியமே. ஆசிரியர்களை எதிர்நோக்கும் பணி பிரம்மாண்டமானது. ஒற்றுமையின்மையின் மீதமிச்சங்களை, கடந்த புரட்சியால் நீக்கப்படாது விடப்பட்டுள்ள இவற்றை இவர்கள் எதிர்த்துப் போராடியாக வேண்டும்.

அடுத்தபடி, பிரசாரம், கிளர்ச்சி சம்பந்தமாய்க் குறிப்பிட வேண்டும். பிரசாரம், கிளர்ச்சியின் ஒவ்வொரு துறையிலும் இன்னும் ஒற்றுமையில்லாத நிலை நீடித்து வருவது புரிந்து கொள்ளக் கூடியதே—ஆசிரியப் பணித்துறையைச் சேர்ந்த முதலாளித்துவப் பகுதியோரின் சீர்குலைவு வேலைகளையும் தப்பெண்ணங்களையும் கருதுகையில் இது புரிந்து கொள்ளக் கூடியதே. இப்பகுதியோர், செல்வந்தர்களுக்கு மட்டுமே மெய்யான கல்வி பெறும் உரிமையுண்டு, பெருவாரியான உழைப்பாளர்களை நல்ல வேலையாட்களாகவும் நல்ல தொழிலாளர்களாகவும் பயிற்றுவித்தால் போதும், இவர்கள் வாழ்க்கையின் உண்மையான எஜமானர்களாவதற்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டியதில்லை எனபதாய் நினைக்கப் பழக்கப்படுத்தப்பட்டவர்கள். இந்த நிலைமையின் காரணமாய் ஆசிரியர்களில் ஒரு பிரிவினர் ஒரு குறுகிய துறைக்குள், போலிக் கல்வின் துறைக்குள் தம்மை அடைத்துக் கொள்ளும்படி ஆகியுள்ளது; கல்வித் துறையின் எல்லா சக்திகளும் ஒருசேர இணைந்து நம்முடன் ஒத்துழைக்கக் கூடிய ஒருமித்த ஒரே பொறியமையைச் சரிவர அமைக்க முடியாதபடி நாம் தடுக்கப்பட்டுள்ளோம். பழைய முதலாளித்துவத் தப்பெண்ணங்களை விட்டொழிக்கும் போது மட்டுமே நாம் வெற்றி பெற முடியும். பெருந் திரளினரான ஆசிரியர்களை உங்கள் குடும்பத்துக்குள் ஈர்த்துக் கொள்வது இங்கு உங்களுடைய சங்கத்தின் பணியாகும்; ஆசிரியப் பணித்துறையைச் சேர்ந்த மிகவும் பிற்பட்ட பகுதிகளுக்குப் போதமளித்து, பொதுவான பாட்டாளி வர்க்கக் கொள்கையின் அணிவரிசைக்கு அவற்றை வரச் செய்து, பொதுவான ஒரே நிறுவனத்தினுள் அவற்றை ஒருசேர இணையச் செய்வது உங்களுடைய சங்கத்தின் பணியாகும்.

நமது நாடு இருக்கும் அதன் தற்போதைய நிலைமையில், தொழிற் சங்க நிறுவன ஒழுங்கமைப்புத் துறையில் ஆசிரியர்கள் முன்னுள் மிகப் பெரியதொரு பணி இருக்கின்றது. தற்

போதையச் சூழலில், உள்நாட்டு யுத்தத்தின் எல்லாப் பிரச்சினைகளும் தெட்டத் தெளிவாகி வருகின்றன; குட்டிபூர்ஷுவா ஜனநாயகப் பகுதியோர் நிகழ்ச்சிகளது போக்கின் நியதியால் சோவியத் அரசாங்கத்தின் பக்கம் வரும்படியான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஏனெனில் வேறு எந்தப் பாதையும், அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், வெள்ளைப் படையினரையும் சர்வதேச ஏகாதிபத்தியத்தையும் ஆதரிப்பதை நோக்கியே இழுத்துச் செல்கிறது என்பதை அவர்கள் நேரடியாய் கண்டு கொண்டுவிட்டனர். இப்பொழுது தலைமையான ஒரே பணியை அனைத்து உலகும் எதிர்நோக்குகிறது. பிரச்சினை இதுதான்: ஒன்று கடைகோடியான தீவிரப் பிற்போக்கு, இராணுவச் சர்வாதிகாரம், துப்பாக்கிச் சூடுகள்—பெர்லின் இவற்றுக்குக் கண்கூடான எடுத்துக்காட்டுகளை நமக்கு அளித்திருக்கிறது—முதலாளித்துவக் காட்டுமிராகங்களுடைய இந்தக் கேடுகெட்ட பிற்போக்குத் தாண்டவம், இம்மிராகங்கள் நான்கு ஆண்டுகளாய்த் தாம் நடத்தி வரும் யுத்தத்துக்காகத் தண்டனை பெறுமல் தப்ப முடியாதென்பதை உணருகின்றன, ஆகவே தயங்காது எந்தக் கொடுமையும் புரிவதற்கும் உலகை உழைப்பாளி மக்களது இரத்தத்திலே மூழ்க்கடிப்பதற்கும் தயாராயிருக்கின்றன; இல்லையேல் உழைப்பாளி மக்கள் ஒரு சோஷலிசப் புரட்சியில் முழுநிறை வெற்றி பெறுவது. இரண்டுக்கும் இடைப்பட்ட நடுப் பாதை எதுவும் இன்று இல்லை. ஆகவே, தொடக்கத்திலிருந்தே அகிலத்தை ஆதரித்து அதன் பக்கம் இருந்து வந்திருக்கும் ஆசிரியர்கள், பிற முகாமைச் சேர்ந்த ஆசிரியர்களிடையிலுள்ள தமது எதிராளிகளால் கடுமையான எதிர்ப்பு காட்ட முடியாதென்பதை இப்பொழுது தெளிவாய்க் கண்ணுறும் இவர்கள், மிகவும் விரிவான அளவில் செயல்பட முற்பட்டாக வேண்டும். உங்களுடைய சங்கம் இப்பொழுது மிகப் பெருவாரியான ஆசிரியர்களைத் தன்னுள் கொண்ட விரிவான ஆசிரியர் தொழிற் சங்கமாக வேண்டும், சோவியத் கொள்கையையும் பட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் மூலமான சோஷலிசப் போராட்டத்தையும் உறுதியாய் ஆதரிக்கும் சங்கமாக வேண்டும்.

தற்போது கூடியிருக்கும் இரண்டாவது தொழிற் சங்கக் காங்கிரசால் ஏற்கப்பட்டிருக்கும் சூத்திரமாகும் இது.

குறிப்பிட்ட ஒரு தொழில் அரங்கில், குறிப்பிட்ட ஒரு செயல் துறையில் ஈடுபட்டிருக்கும் எல்லோரும் ஒருமித்த ஒரே சங்கத்தில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகின்றது. அதேபோதில், மூலதனத்திலிருந்து உழைப்பு விடுதலை பெறும் போராட்டத்தின் அடிப்படை பிரச்சினைகளிலிருந்து தொழிற் சங்க இயக்கம் விலகி நிற்க முடியாதென்று இது பறைசாற்றுகின்றது. ஆகவே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் மூலம் சோஷலிசத்துக்காக நடை பெறும் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிக்கும் சங்கங்கள் மட்டுமே தொழிற் சங்கங்களது முழுநிறையான, சமத்துவ உறுப்பினர்களாக முடியும். உங்களுடைய சங்கமும் இவ்வகைப்பட்ட ஒரு சங்கமே ஆகும். இந்த நிலையை நீங்கள் ஏற்று நிற்பீர்களாயின், ஆசிரியர்களில் மிகப் பெரும் பகுதியோரை ஈர்த்துக் கொள்வதிலும், அறிவும் விஞ்ஞானமும் இனி தனிச் சலுகை படைத்தோருக்குரிய ஒன்றாய் இராமல், செல்வந்தரும் சுரண்டுவோருமாகியோரது நிலையை உறுதிப் படுத்திக் கொள்வதற்கான ஒரு சாதனமாய் இராமல், உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்களுடைய விடுதலைக்கான ஆயுதமாகும்படிச் செய்வதிலும் வெற்றியடை வீர்கள் என்பது திண்ணம். இம்மாபெரும் முயற்சியில் உங்களுக்கு வெற்றிமேல் வெற்றி கிட்ட வாழ்த்துரைக்கிறேன்.

இஸ்வெஸ்தியா இதழ் *13*ல்
1919 ஜனவரி *19*ல்
சுருக்கச் செய்தியுரையாய்
வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி *37*,
பக்கங்கள் *430-433*

லெனின் (வி. உல்யானவ்), நூல்
திரட்டு, தொகுதி *20*, பாகம் *2*ல்,
முழு வாசகமும் முதன்முதல்
*1926*ல் வெளிவந்தது

மாபெரும் தொடக்கம்

போர்முனையல்லாத உட்பகுதிகளில் தொழிலாளர்களின் தீரம். ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்''

செஞ்சேனை வீரர்களது தீரத்துக்குப் பல எடுத்துக்காட்டுகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. கல்ச்சாக்கையும் தெனீக்கினையும் மற்றும் நிலப்பிரபுக்கள், முதலாளிகளுடைய பிற படைகளையும் எதிர்த்து நடைபெறும் போராட்டத்தில் தொழிலாளர்களும் விவசாயிகளும் அஞ்சாநெஞ்சமும் சகிப்புத் தன்மையும் அடிக்கடி வெளிக்காட்டி விந்தைகள் புரிந்து சோஷலிசப் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாக்கின்றனர். கொரில்லா மனப்பாங்கும் அயர்வும் கட்டுப்பாடின்மையும் சமாளிக்கப்பட்டு வருகின்றன. மெள்ள நடந்தேறும் கடினமான நிகழ்ச்சிப் போக்கே என்றாலும் இது யாவற்றையும் மீறிக் கொண்டு மேலோங்கி வருகிறது. சோஷலிசத்தின் வெற்றிக்காகத் தாமே மனமுவந்து முன்வந்து தியாகங்கள் புரியும் உழைப்பாளி மக்களின் தீரம்—இதுதான் செஞ்சேனையில் நிலவும் தோழமை மிக்க புதிய கட்டுப்பாட்டின் அடிப்படை. இந்த அடிப்படை மீதுதான் இந்தச் சேனை புது மலர்ச்சியுற்று வலிமையடைந்து வளர்ந்து வருகிறது.

போர்முனை அல்லாத உட்பகுதிகளில் தொழிலாளர்கள் வெளிக்காட்டும் தீரமும் இதே அளவுக்குக் கவனத்துக்கு உரிய ஒன்றாகும். தொழிலாளர்கள் தாமே சொந்தமாய் முன்முயற்சி எடுத்து ஏற்பாடு செய்திருக்கும் **கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்** இச்சந்தர்ப்பத்தில் மெய்யாகவே மகத்தான முக்கியத்துவம் வாய்ந்தவை. இது ஒரு தொடக்கமே என்பது வெளிப்படை. ஆயினும் தனிப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த

தொடக்கம் இது. முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்திய புரட்சியைக் காட்டிலும் கடினமான, திட்டவட்டமான, தீவிரமான, தீர்மானகரமான ஒரு புரட்சியின் தொடக்கம் இது. ஏனெனில் இது நம்மிடத்தே இருந்துவரும் பழமைவாத மனப்பாங்கு, கட்டுப்பாடின்மை, குட்டிபூர்ஷுவாத் தன்னல நாட்டம் இவற்றின் மீதான வெற்றியாகும்; கேடுகெட்ட முதலாளித்துவம் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் மரபுரிமைச் சொத்தாய் விட்டுச் சென்றிருக்கும் பழக்கவழக்கங்களின் மீதான வெற்றியாகும். இந்த வெற்றி உறுதி செய்து கொள்ளப்படும்போது மட்டும்தான் புதிய சமுதாயக் கட்டுப்பாடு, சோஷலிசக் கட்டுப்பாடு தோற்றுவிக்கப்படும்; அப்பொழுது மட்டுமே முதலாளித்துவத்துக்குத் திரும்பிச் சரிதல் சாத்தியமற்றதாகிவிடும், கம்யூனிசம் மெய்யாகவே வெல்ல முடியாததாகிவிடும்.

''புரட்சிகர வழியிலான வேலை (கம்யூனிஸ்டு சனிக்கிழமை)'' என்ற தலைப்பில் அ. ழ. எழுதிய கட்டுரை ஒன்றை **பிராவ்தா** தனது மே 17ஆம் தேதி இதழில் வெளியிட்டிருந்தது. இந்தக் கட்டுரை அவ்வளவு முக்கியமானதாய் இருப்பதால் இங்கு அதை அப்படியே முழுமையாய்த் தருகின்றோம்.

''புரட்சிகர வழியிலான வேலை

(''கம்யூனிஸ்டு சனிக்கிழமை)

''**புரட்சிகர வழியில்** வேலை செய்வது பற்றிய ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் கடிதம் கம்யூனிஸ்டு நிறுவனங்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் சக்திவாய்ந்த முறையில் தூண்டுதல் அளித்தது. பொது ஆர்வ அலையானது கம்யூனிஸ்டு ரயில்வேத் தொழிலாளர்கள் பலரையும் போர்முனைக்கு இட்டுச் சென்றது. ஆனால் பெரும்பாலான தொழிலாளர்களால் பொறுப்பு மிக்க தமது வேலைகளை விட்டகலவோ, புரட்சிகர வழியில் வேலை செய்வதற்கான புதிய வழி முறைகளைக் காணவோ முடியவில்லை. படை திரட்டும் பணி அசட்டையாய் நடைபெறுவது குறித்தும் சிவப்பு நாடாபரவலாயிருப்பது குறித்தும் ஸ்தலங்களிலிருந்து வந்த செய்திகள், மாஸ்கோ-கஸான் ரயில்வே வட்டாரத்தை இந்த

வேலை இடம்	வேலையின் தன்மை	வேலை செய்தோரின் எண்ணிக்கை	வேலை செய்த நேரம்		செய்யப்பட்ட வேலை
			ஆள் ஒருவருக்கு	மொத்தம்	
மாஸ்கோ, பிரதான ரயில் இஞ்சின் தளங்கள்.	ரயில்பாதைப் பொருள்களையும், இஞ்சின் ரிப்பேர் தளவாடங்களையும், ரயில் பெட்டிப் பகுதிகளையும் பெரோவோ, மூரம், அலத்தூர், சீஸ்ரன் ஆகிய இடங்களுக்கு அனுப்புவதற்காக வண்டிகளில் ஏற்றுதல்.	48	5	240	7,500 பூடு சுமை ஏற்றப்பட்டது; 1,800 பூடு சுமை இறக்கப் பட்டது.
		21	3	63	
		5	4	20	
மாஸ்கோ, பயணி வண்டி மனை.	ரயில் இஞ்சின்களுக்கான சிக்கல் வாய்ந்த ரிப்பேர்கள்.	26	5	130	1.5 ரயில் இஞ்சின்கள் ரிப்பேர் செய்யப் பட்டன.
மாஸ்கோ, ஷண்டிங் தளங்கள்.	ரயில் இஞ்சின்களுக்கு நடப்பு ரிப்பேர்கள்.	24	6	144	2 ரயில் இஞ்சின்கள் ரிப்பேர் செய்யப் பட்டன, 4 லிருந்து ரிப் பேர் ஆக வேண்டிய பகுதிகள் கழற்றப் பட்டன.
மாஸ்கோ. ரயில் பெட்டிப் பிரிவு.	பயணிப் பெட்டிகளுக்கு நடப்பு ரிப்பேர்கள்.	12	6	72	2 மூன்றும் வகுப்புப் பெட்டிகள்.
''பெரோவோ.'' பிரதான ரயில் பெட்டித் தளங்கள்.	பெட்டிகளுக்கு ரிப்பேர்கள், சனியன்றும் ஞாயிறன்றும் சில்லறை ரிப்பேர்கள்.	46	5	230	12 கூண்டுப் பெட்டிகளும் 2 தட்டைப் பெட்டிகளும்.
		23	5	115	
	மொத்தம் . . .	205	——	1,014	4 ரயில் இஞ்சின்களும் 16 பெட்டிகளும் முடிக்கப்பட்டன, 9,300 பூடு ஏற்றவும் இறக்கவும் பட்டது.

ரயிலமைப்பு எப்படிச் செயல்பட்டு வந்தது என்பதில் கவனம் செலுத்தும்படிச் செய்தன. தொழிலாளர் பற்றுக்குறை காரணமாகவும் உழைப்பின் குறைவான உற்பத்தித் திறன் காரணமாகவும் அவசரமான ஆர்டர்களும் ரயில் இஞ்சின் ரிப்பேர் வேலைகளும் நிறைவேறாது தடைபட்டுக் கிடந்தது தெரிய வந்தது. மாஸ்கோ-கஸான் ரயில்வே வட்டாரக் கம்யூனிஸ்டுகள், அனுதாபிகள் ஆகியோரது பொதுக் கூட்டம் மே 7ல் நடைபெற்றபோது அதில் கல்ச்சாக்கின் மீது வெற்றி கிட்டச் செய்வதற்குத் துணை புரிவதில் சொல்லிலிருந்து செயலுக்குச் சென்றிடும் பிரச்சினை எழுப்பப்பட்டது. பின்வரும் தீர்மானம் முன்மொழியப்பட்டது:

‘‘ ‘உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழ்நிலை கடுமையாய் இருத்தலைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் வர்க்கப் பகைவன்மீது மேல்நிலை பெறும் பொருட்டு, திரும்பவும் தம்மைத் தட்டியெழுப்பிக் கொண்டு, தமது ஓய்வு நேரத்தை ஒரு மணி நேரம் குறைத்து, அதாவது தமது வேலைநேரத்தை ஒரு மணி நேரம் அதிகமாக்கி இந்தக் கூடுதல் நேரங்களை ஒன்று சேர்த்துச் சனிக்கிழமையன்று கூடுதலாய் ஆறு மணி நேரம் உடல் உழைப்பில் ஈடுபட்டு உடனடிப் பயன் தரும் உண்மை மதிப்புகளைப் படைப்பித்தாக வேண்டும். புரட்சியின் ஆதாயத்துக்காகத் தமது உடல்நலத்தையும் உயிரையும் பணித்துக் கொள்ளக் கம்யூனிஸ்டுகள் தயங்கக் கூடாதாகையால், இவ்வேலை சம்பளமின்றிச் செய்யப்படுதல் வேண்டும். **கம்யூனிஸ்டு சனிக்கிழமைகள்** வட்டாரமெங்கும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டு, கல்ச்சாக்கின் மீது முழுவெற்றி கிட்டும் வரை தொடர்ந்து அனுசரிக்கப்பட வேண்டும்.’

‘‘சிறிதளவு தயங்கிய பிற்பாடு இந்தத் தீர்மானம் ஒருமனதாய் ஏற்கப்பட்டது.

‘‘மே 10ஆம் நாள் சனிக்கிழமையன்று பிற்பகல் 6 மணி அளவில் கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் வேலை செய்ய ஆஜராகிப் படை வீரர்களென அணி வகுத்து நின்றனர். அமளி, கூச்சல் எதுவுமின்றி இவர்கள் போர்மன்களால் பல்வேறு வேலைகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

‘‘**புரட்சிகர வழியில்** வேலை செய்ததன் பலன்கள் **கண்கூடு.** வேலை இடங்களையும் செய்யப்பட்ட வேலைகளின் தன்மையையும் இங்குள்ள அட்டவணையில் காணலாம். *(பக்கங்கள் 166-167ல் அட்டவணையைப் பார்க்கவும்.)*

‘‘செய்யப்பட்ட வேலைகளின் மொத்த மதிப்பு சாதாரணச் சம்பள விகிதங்களின்படி ஐம்பது லட்சம் ரூபிளாகும்; மிகைநேர விகிதங்களின்படி ஐம்பது சதவீதம் கூடுதலாயிருக்கும்.

''சரக்குப் பெட்டிகளில் சுமை ஏற்றுவதில் உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கமான தொழிலாளர்களுடையதைக் காட்டிலும் 270 சதவீதம் கூடுதலாயிருந்தது. ஏனைய வேலைகளிலும் உழைப்பின் உற்பத்தித்திறன் ஏறத்தாழ இதே போலத்தான் இருந்தது.

''ஆள் பற்றுக்குறை காரணமாகவும் சிவப்பு நாடா காரணமாகவும் ஏழு நாட்களிலிருந்து மூன்று மாதங்கள் வரை முடங்கிக் கிடந்த வேலைகள் (அவசரமானவை) செய்யப்பட்டன.

''வேலைக் கருவிகள் பழுதாகிக் கிடந்ததையும் (எளிதில் சரிசெய்யக் கூடியதே) மீறி இவ்வேலைகள் செய்யப்பட்டன. கருவிகள் பழுதாயிருந்ததால் சில வேலைக் குழுக்கள் முப்பதிலிருந்து நாற்பது நிமிடங்கள் வரை தடைப்பட்டு நிற்க வேண்டியதாயிற்று.

''வேலைக்குப் பொறுப்பாய் விடப்பட்ட நிர்வாகம் வேலையாட்களின் வேகத்துக்கு இசைவாய் அவர்களுக்குப் புதிய வேலைகளைத் தேடித்தர முடியாமல் திணறிற்று. வர்க்க உணர்வற்ற முனைப்பில்லாத் தொழிலாளர்கள் ஒரு வாரத்தில் செய்யும்படியான வேலை இந்தக் **கம்யூனிஸ்டு சனிக்கிழமையன்று** செய்யப்பட்டதென வயது முதிர்ந்த போர்மன் ஒருவர் கூறியது அப்படி ஒன்றும் மிகையானதல்ல.

''கம்யூனிஸ்டுகளல்லாதோர், சோவியத் அரசாங்கத்தை உளப்பூர்வமாய் ஆதரிப்போர் பலரும் இந்த வேலையில் பங்கு கொண்டதாலும், மேலும் கூடுதலானோர் இனிவரும் சனிக்கிழமைகளில் பங்கு கொள்வரென எதிர்பார்க்கப்படுவதாலும், மற்றும் மாஸ்கோ-கஸான் ரயில்வேயின் கம்யூனிஸ்டு ரயில்வேத் தொழிலாளர்களது உதாரணத்தை ஏனைய பல வட்டாரங்களும் பின்பற்ற விரும்புவதாலும் இவ்வேலையின் ஒழுங்கமைப்பு குறித்து ஸ்தலங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிய வருவதை மேலும் விவரமாய் எடுத்துரைக்க வேண்டும்.

''வேலையில் பங்கு கொண்டோரில் சுமார் பத்து சதவீதத்தினர் அவ்விடங்களில் நிரந்தரமாய் வேலைக்கு அமர்த்தப்பட்ட கம்யூனிஸ்டுகள். ஏனையோர் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், அல்லது தேர்தல் மூலம் நிரப்பப்படும் பதவிகள் வகிப்போர், ரயில்வேக் கமிசாரிலிருந்து தனிப்பட்ட தொழில் நிலையங்களின் கமிசார்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், தலைமை அலுவலகச் சிப்பந்திகள், ரயில்வேக் கமிசாரகச் சிப்பந்திகள் வரையிலுமானோர்.

''வேலையின்போது வெளிப்படுத்தப்பட்ட ஆர்வமும் கூட்டு மனோபாவமும் அதியற்புதமானவை. தொழிலாளர்களும் குமாஸ்தாக்களும் தலைமை அலுவலகச் சிப்பந்திகளும்

பயணி ரயில் இஞ்சின் ஒன்றின் நாற்பது பூடு* எடையுள்ள சக்கரக் கட்டினை ஒரு முறைகூட சபிக்கவோ வாதாடவோ செய்யாமல் தாங்கிப் பிடித்து, பிரயாசை மிக்க எறும்பு களைப் போலப் பாடுபட்டு அதை உருட்டிச் சென்று உரிய இடத்தில் பொருத்திய போது இந்தக் கூட்டு முயற்சியைக் கண்டு உள்ளத்தில் இன்பக் களிப்பு ஊற்றெடுத்தது, தொழி லாளி வர்க்கம் வெற்றி பெறுவது திண்ணமென்ற திட நம்பிக்கை மேலும் திடமாகியது. வெற்றிகரத் தொழிலாளர் களைச் சர்வதேசக் கொள்ளைக்காரர்களால் நசுக்க முடியப் போவதில்லை; உள்நாட்டுச் சீர்குலைவாளர்களால் ஒருநாளும் கல்ச்சாக்கைப் பார்க்க முடியப் போவதில்லை.

''வேலை முடிவடைந்ததும் அங்கு இருந்தோர் என்றும் காணுத அரியதொரு காட்சியைக் கண்ணுற்றனர்: சுமார் நூறு கம்யூனிஸ்டுகள் களைத்துப் போய் ஓய்ந்தவர்களே ஆயி னும் கண்களில் மகிழ்ச்சியின் ஒளி பளிச்சிட **சர்வதேசியக்** கீதம் பாடி, புனித இசை முழக்கத்தால் தமது வெற்றியை வாழ்த்தினர். இந்த வெற்றிக் கீதத்தின் வெற்றி முழக்கம் சுவர்களுக்கு மேலே உயர்ந்தெழுந்து தொழிலாளி வர்க்க மாஸ்கோ மாநகரெங்கும் வீசி, குளத்திலே விழுந்த கல்லால் தோன்றும் அலை போல தொழிலாளி வர்க்க ருஷ்யாவெங் கும் பரவி, களைப்புற்றோரையும் ஓய்ந்தோரையும் குலுக்கி எழுப்புமென நினைக்கத் தோன்றிற்று.

''அ. ழ.''

இந்த அரிய உதாரணத்தை, ''நேசப் போட்டிக்கான முன்மாதிரியாய்க் கொள்ளத்தக்க உதாரணத்தை'' மதிப் பீடு செய்து தோழர் என். ஆர். மே 20ஆம் தேதி **பிராவ்தா** வில் மேற்படித் தலைப்பில் எழுதினர்:

''கம்யூனிஸ்டுகள் இது போல வேலை செய்வது அரிய நிகழ்ச்சியல்ல. மின்விசை நிலையம் ஒன்றிலும் பல ரயில்வேக் களிலும் இது போன்ற நிகழ்ச்சிகள் நடந்திருப்பது எனக்குத் தெரியும். நிக்கலாயெவ்ஸ்கயா ரயில்வேயில் திருப்புத் தளக் குழியினுள் விழுந்துவிட்ட ரயில் இஞ்சினைத் தூக்குவதற்காகக் கம்யூனிஸ்டுகள் வேலை நேரத்துக்குப் பிற்பாடு தொடர்ந்து சில இரவுகள் வேலை செய்தனர். வடதிசை ரயில்வேயில் கம் யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் குளிர் காலத்தில் ரயில்பாதை யிலிருந்து வெண்பனியை ஒதுக்குவதற்காக ஞாயிற்றுக்கிழமை

---

* ருஷ்ய நிறுத்தல் அளவை; 16.3 கிலோகிராமுக்குச் சமம்.—(மொ-ர்.)

களில் வேலை செய்தனர். சரக்கு நிலையங்கள் பலவற்றில் கம்யூனிஸ்டுக் குழுக்கள் திருட்டைத் தடுப்பதற்காக இரவில் ரோந்து சென்று வருகின்றன. ஆனால் இவ்வேலைகள் எல்லாம் முறையாய் இல்லாமல் விட்டுவிட்டு எப்பொழுதாவதுதான் நடைபெற்று வந்தன. மாஸ்கோ-கஸான் ரயில்பாதையைச் சேர்ந்த தோழர்கள் இவற்றை முறையாகவும் நிரந்தரமாக வும் நடைபெறும் வேலைகளாக்குகின்றனர். இது புதுமை யாகும். ''கல்ச்சாக்கின்மீது முழுவெற்றி கிட்டும் வரை'' என்ப தாய் அவர்கள் தமது தீர்மானத்தில் கூறுகிறார்கள்; அவர் களுடைய வேலையின் முக்கியத்துவம் இதில்தான் அடங்கியிருக் கிறது. யுத்த காலம் நீடிக்கும் வரையில் ஒவ்வொரு கம்யூ னிஸ்டுக்கும் அனுதாபிக்கும் தினசரி வேலை நேரத்தை ஒரு மணி கூடுதலாக்குகின்றனர்; அதேபோதில் அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறனும் முன்மாதிரியாய் இருக்கிறது.

''இந்த உதாரணத்தைப் பலரும் பின்பற்றியுள்ளனர், இனியும் பின்பற்றவே செய்வர். அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் கம்யூனிஸ்டுகள், அனுதாபிகளது பொதுக் கூட்டம் இராணுவ நிலைமையையும் மாஸ்கோ-கஸான் ரயில்வேயைச் சேர்ந்த தோழர்கள் ஏற்ற தீர்மானத்தையும் விவாதித்தபின், (1) அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் கம்யூனிஸ்டுகளுக்கும் அனுதாபிகளுக்கும் 'சுபோத்னிக்குகளைத்' தொடங்குவதென்றும், மே 17ம் முதலாவது சுபோத்னிக் குக்கு ஏற்பாடு செய்வதென்றும், (2) எப்படி வேலை செய்ய வேண்டுமென்றும் தற்போதுள்ள பொருள்களையும் கருவி களையும் கொண்டு தற்போதைய உணவு நிலைமையிலே உண் மையில் என்னவெல்லாம் செய்ய முடியுமெனத் தொழி லாளர்களுக்குக் காட்டும்படியான போற்றத்தக்க முன்மாதிரி வேலைக் குழுக்களில் கம்யூனிஸ்டுகளையும் அனுதாபிகளையும் ஒழுங்கமையச் செய்வதென்றும் முடிவு செய்தது.

''மாஸ்கோ-கஸான் தோழர்கள் தமது உதாரணம் மக் களை வெகுவாய்க் கவர்ந்துள்ளதாகவும், அடுத்த சனிக்கிழமை யன்று கட்சி உறுப்பினரல்லாத தொழிலாளர்கள் பெரிய அளவில் வேலைக்கு வருவார்களெனத் தாம் எதிர்பார்ப்பதாக வும் கூறுகிறார்கள். இந்த வரிகள் எழுதப்படும் இந்நேரத்தில் அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வே தொழிலகங்களில் கம்யூ னிஸ்டுகள் வேலை நேரத்துக்குப் பிற்பாடு இன்னும் வேலை செய்யத் தொடங்கியாகவில்லை. ஆனால் அவர்கள் இவ்வாறு வேலை செய்யப்போவது பற்றிய வதந்தி பரவியதும் கட்சி உறுப்பினரல்லாத தொழிலாளர்களில் பெருந் திரளானோர் ஆர்த்தெழுந்துவிட்டனர். 'நேற்று எங்களுக்குத் தெரியாமற் போய்விட்டது, இல்லையேல் நாங்களும் வேலை செய்திருப் போம்!', 'அடுத்த சனியன்று நிச்சயம் நான் வருவேன்'

என்பதான பேச்சுக்களை நாற்புறமிருந்தும் கேட்க முடிந்தது. இத்தகைய வேலையால் விளைந்திருக்கும் மன எழுச்சி மகத்தானதாகும்.

''மாஸ்கோ-கஸான் தோழர்களது உதாரணத்தை உட்பகுதிகளைச் சேர்ந்த எல்லாக் கம்யூனிஸ்டுக் குழுக்களும், மாஸ்கோ சந்திப்பிலுள்ளவை மட்டுமின்றி ருஷ்யாவிலுள்ள கட்சி நிறுவனம் அனைத்தும் முன்னுதாரணமாய்க் கொண்டு செயல்பட வேண்டும். கிராமப் பகுதிகளிலுங்கூட கம்யூனிஸ்டுக் குழுக்கள் முதல் வேலையாய்ச் செஞ்சேனை வீரர்களுடைய நிலங்களைப் பயிரிட முற்படவேண்டும், இவ்விதம் அவை இந்த வீரர்களுடைய குடும்பங்களுக்கு உதவ வேண்டும்.

''மாஸ்கோ-கஸான் ரயில்பாதையைச் சேர்ந்த தோழர்கள் சர்வதேசியக் கீதம் பாடித் தமது முதலாவது கம்யூனிஸ்டு சுபோத்னிக்கை முடித்தனர். ருஷ்யா புராவிலும் கம்யூனிஸ்டு நிறுவனங்கள் யாவும் இந்த உதாரணத்தைப் பின்பற்றி முரணின்றி அதன் வழியில் செயல் படுமாயின், ருஷ்ய சோவியத் குடியரசு வரப் போகும் கடினமான மாதங்களைக் குடியரசின் உழைப்பாளி மக்கள் அனைவரும் சர்வதேசியக் கீதம் பாடி எழுப்பும் சக்தி மிக்க இசை நாதத்துக்கிடையே வெற்றிகரமாய்ச் சமாளித்து விடும்....

''கம்யூனிஸ்டுத் தோழர்களே, வேலையில் இறங்குங்கள்!''

1919 மே *23*ல் பிராவ்தா பின்வரும் செய்தியை அறிவித்தது:

''அலெக்சாந்திரவ்ஸ்கயா ரயில்வேயில் முதலாவது கம்யூனிஸ்டு 'சுபோத்னிக்' மே 17ல் நடைபெற்றது. அவர்களுடைய பொதுக் கூட்டத்தில் ஏற்கப்பட்ட தீர்மானத்துக்கு ஏற்ப தொண்ணூற்று எட்டுக் கம்யூனிஸ்டுகளும் அனுதாபிகளும் வேலை நேரத்துக்குப் பிற்பாடு சம்பளமின்றி ஐந்து மணி நேரம் வேலை செய்தனர். அவர்கள் இதற்குப் பிரதியாய்ப் பெற்றது இரண்டாவது தரம் சாப்பாடும் உடல் உழைப்பாளர்களாய்த் தமது சாப்பாட்டுடன் கூட அரை ராத்தல் ரொட்டியும் விலைக்கு வாங்கிக் கொள்ளும் உரிமைதான்.''

இந்த வேலை சரியானபடி தயாரிப்பு செய்யப்படவில்லை, ஒழுங்கமைக்கப்படவில்லை என்ற போதிலும், உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கமான அளவைக் காட்டிலும் இரண்டிலிருந்து மூன்று மடங்கு வரை கூடுதலாய் இருந்தது.

இதோ சில உதாரணங்கள்:

ஐந்து கடைசல் தொழிலாளர்கள் நான்கு மணி நேரத்தில் எண்பது அச்சு முனைகள் கடைந்தனர். உற்பத்தித் திறன் வழக்கமானதைப் போல் 213 சதவீதமாகும்.

தேர்ச்சி பெறுத இருபது தொழிலாளர்கள் மொத்தம் 600 பூடு எடையுள்ள சேதாரப் பொருட்களும், ஒவ்வொன்றும் $3^1/_2$ பூடு எடை கொண்ட ரயில் வண்டித் தகட்டுக்கு வில்கள் எழுபதுமாய், மொத்தம் 850 பூடுகளைச் சேகரித்து வைத்தனர். உற்பத்தித் திறன் வழக்கமானதைப் போல் 300 சதவீதம்.

''சாதாரணமாய்த் தமது வேலை சலிப்பூட்டுவதாயும் அலுக்கச் செய்வதாயும் இருக்கும், ஆனால் இங்கே தாம் திடச் சித்தத்துடன் ஆர்வமாய் வேலை செய்தோம், இதுவே இந்த நிலைமைக்குக் காரணம் என்று தொழர்கள் விளக்கம் கூறுகிறார்கள். ஆனால் இனி அவர்கள் முறையான வேலை நேரத்தின் போது கம்யூனிஸ்டு சுபோத்னிக்கில் செய்ததைவிடக் குறைவான அளவு வேலை செய்ய வெட்கப்படுவார்கள்.''

''கட்சி உறுப்பினரல்லாத தொழிலாளர்கள் பலரும் தற்போது சுபோத்னிக்குகளில் பங்கு கொள்ள விரும்புவதாய்க் கூறுகிறார்கள். ரயில் இஞ்சின் ஊழியர்கள் சுபோத்னிக்கின் போது ரயில் இஞ்சினை 'இடுகாட்டிலிருந்து' வெளியே எடுத்துப் பழுது பார்த்துத் திரும்பவும் ஓடவைக்கத் தாமே மனமுவந்து முன்வருகிறார்கள்.

''இது போன்ற சுபோத்னிக்குகளுக்கு வியாஸ்மா ரயில் பாதைப் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்படும் என்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.''

இந்தக் கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளில் வேலை எப்படி நடைபெறுகிறது என்பதை ஜூன் 7ஆம் தேதி **பிராவ்தா**வில் தோழர் அ. தியச்சேன்கோ ''சுபோத்னிக் தொழிலாளியின் குறிப்புகள்'' என்ற தலைப்பில் தாம் எழுதும் கட்டுரையில் விவரிக்கிறார். இக்கட்டுரையின் பிரதான வாசகங்களை மேற்கோளாய்த் தருகின்றோம்.

''கட்சியின் ரயில்வே வட்டாரக் கமிட்டியின் முடிவுப்படி ஏற்பாடு செய்யப்பட்ட சுபோத்னிக்கில் எங்களுக்குரிய

பங்கை ஆற்ற ஒரு தோழரும் நானும் மிக்க மகிழ்ச்சியுடன் சென்றிருந்தோம். சிறிது நேரத்துக்கு, சில மணிகளுக்கு நான் என் தலைக்கு ஓய்வும் என் தசைநார்களுக்குக் கொஞ்சம் பயிற்சியும் தர விரும்பினேன்.... ரயில்வேத் தச்சுத் தொழிலகத்துக்கு எங்களை அனுப்பி வைத்தனர். நாங்கள் அங்கே சென்றதும் எங்களவர்களில் பலரும் இருக்கக் கண்டேன். முகமன் கூறிக் கொண்டு, சற்று நேரம் பேசியபின் எங்கள் ஆள் பலத்தைக் கணக்கிட்டோம். முப்பது பேர் இருக்கிறோம் என்பது தெரிந்தது.... எங்கள் முன்னே பூதம் போன்ற ஒன்று கிடந்தது—அறுநூறு அல்லது எழுநூறு பூடுகளுக்குக் குறையாத எடையுள்ள நீராவிக் கொதிகலன் அது. நாங்கள் அதை 'நகர்த்திச் சென்றுக' வேண்டும், அதாவது கால் அல்லது மூன்றில் ஒரு வெர்ஸ்டா* தொலைவுக்கு உருட்டிச் சென்று அதன் மூலதளத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ந்தாக வேண்டும். எங்களுக்குச் சந்தேகம் எழத் தொடங்கிற்று....ஆயினும் வேலையில் இறங்கினோம். சில தோழர்கள் கொதிகலனுக்கு அடியில் மர உருளைகளை வைத்தனர், கொதிகலனில் இரு கயிறுகளைக் கட்டினர். நாங்கள் இழுக்க முற்பட்டோம்.... மனமின்றி கொதிகலன் அசைந்து கொடுத்தது, ஆனால் முடிவில் மெள்ள நகர்ந்தது. நாங்கள் ஆனந்தமடைந்தோம். நாங்கள் அதிகம் பேர் இல்லை, மிகச் சிலர்தான்.... எண்ணிக்கையில் எங்களைப் போல் மூன்று மடங்கிருந்த கம்யூனிஸ்டுகளல்லாத தொழிலாளர்கள் ஏறத்தாழ இரு வாரங்களாய்ச் செய்த முயற்சிகளை இக்கொதிகலன் எதிர்த்து நின்றது. நாங்கள் கை வைக்கும் வரையில் எதனாலும் அதை அசைக்க முடியவில்லை.... ஒரு மணி நேரம் நாங்கள் வேலை செய்தோம், பிரயாசையோடும் இசைவாகவும் எங்கள் 'போர்மனின்' ஆணைக்கு—'ஒன்று, இரண்டு, மூன்று' — ஏற்பவும் வேலை செய்தோம். கொதிகலன் உருண்டு நகர்ந்த வண்ணம் இருந்தது. திடுமென குழப்பமாகிவிட்டது, எங்கள் தோழர்களில் பலர் விஞ்ஞை மான முறையில் தரையிலே விழுந்து புரண்டனர். கயிறு 'அவர்களைக் கைவிட்டு விட்டது'.... கணப் பொழுது தாமதிக்க வேண்டியதாயிற்று. மேலும் தடியான கயிறு அவசரமாய்த் தயார் செய்யப்பட்டது.... மாலைப் பொழுது இருட்டாகிவந்தது. இன்னும் ஒரு சிறு மேட்டைக் கடந்து சென்றால் போதும், எங்கள் வேலை முடிவுற்றுவிடும். எங்களுக்குக் கை வலித்தது, உள்ளங்கை எரிந்தது, உடம்பு கொதித்தது. முழு பலத்தையும் கொண்டு இழுத்தோம்—

---

*—ருஷ்ய நீட்டல் அளவை; 1.06 கிலோமீட்டருக்குச் சமம்.—(மொ-ர்.)

முன்னேற்றம் கண்டு வந்தோம். 'நிர்வாகத்தினர்' பார்த்துக் கொண்டு நின்றனர். எங்களுடைய வெற்றியைக் கண்டு ஓரளவு வெட்கமுற்ற அவர்கள் கயிற்றைப் பற்றிக் கொண்டனர். 'உதவுங்கள், முன்னரே முன்வந்திருக்க வேண்டும்!' எங்களுடைய வேலையை செஞ்சேனை வீரன் ஒருவன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கையில் அக்கார்டியன் வாத்தியம் இருந்தது. மனத்துள் அவன் நினைத்தது என்ன? யார் இவர்கள்? சனிக்கிழமை, எல்லோரும் வீட்டிலே இருக்கிறார்கள், இவர்கள் மட்டும் வேலை செய்யக் காரணம் என்ன? அவனுடைய இந்தப் புதிருக்கு நான் விடை கூறினேன். 'தோழனே, எங்களுக்குக் குதூகலப் பாட்டு ஒன்று வாசி நீ. நாங்கள் வேலைக்குப் புதியவர்களல்ல, மெய்யான கம்யூனிஸ்டுகள். எங்கள் கை பட்டதும் வேலை எவ்வளவு வேகமாய் நடந்தேறுகிறது பார்! நாங்கள் சோம்பி நிற்கவில்லை, பலம் கொண்ட மட்டும் இழுக்கிறோம்' என்று அவனிடம் கூறினேன். இதைக் கேட்டதும் செஞ்சேனை வீரன் தனது அக்கார்டியனை ஜாக்கிரதையாய்த் தரையில் வைத்துவிட்டு வேகமாய் வந்து கயிற்று முனையைப் பற்றிக் கொண்டான்....

''திடீரெனத் தோழர் உ. தொழிலாளர் பாடலான **துபீனுஷ்கா**வைப் பாடத் தொடங்கினர். சிறப்பான உச்ச ஸ்தாயியில் 'ஆங்கிலிச்சானின் முத்ரெத்ஸ்' என்று பாடினர். அவருடன் நாங்களும் சேர்ந்து கொண்டு இந்த உழைப்புக் கீதத்தின் பல்லவியைப் பாடினோம்: 'ஏ, துபீனுஷ்கா, ஊஹ் னெம், பத்யோர்னிம், பத்யோர்னிம்....'

''இத்தகைய வேலை செய்துப் பழக்கமில்லாதவர்கள் நாங்கள், தசைநார்கள் அயர்ந்துவிட்டன, தோள்களும் முதுகும் வலித்தன.... ஆனால் மறு தினம் வேலையில்லாத நாள், எங்கள் ஓய்வு நாள். வேண்டிய மட்டும் தூங்கலாம். இலக்கை நெருங்கி வந்துவிட்டோம், சற்றே தயங்கிவிட்டுப் பூதம் போன்ற எங்கள் கொதிகலன் உருண்டு அனேகமாய் அதன் தளத்தை வந்தடைந்துவிட்டது. 'அடியில் பலகைகளைக் கொடுத்து அதைத் தளத்தின்மீது உயர்த்துங்கள், பல காலமாய் எதிர்பார்க்கப்பட்ட வேலையை அது செய்யட்டும்!' கூட்டமாய் நாங்கள் ஸ்தலக் கட்சிக் குழுவின் 'மன்ற அறைக்குச்' சென்றோம். அறையில் விளக்கொளி பிரகாசமாய் இருந்தது; சுவரொட்டிகளால் சுவர்கள் அலங்கரிக்கப் பட்டிருந்தன; சுற்றிலும் அறையினுள் துப்பாக்கிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. உணர்ச்சி பொங்க **சர்வதேசியக் கீதம்** பாடிவிட்டு நாங்கள் ஒரு கோப்பை தேநீரும் 'ரம்மும்' குடித்தோம். ரொட்டியுங்கூட கிடைத்தது. ஸ்தல தோழர்கள் எங்களுக்கு அளித்த இந்த விருந்து பிரயாசை மிக்க எங்களுடைய உழைப்புக்குப்பின் மிகவும் இனிமையாய் இருந்தது.

எங்கள் தோழர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு அணி வகுத்து நடக்கலானேம். புரட்சிப் பாட்டுகளின் இன்னிசை இரவின் நிசப்தத்தில் உறங்கிய தெருக்களில் எதிரொலித்தது. இந்த இசையின் தாளத்துக்கு ஒப்ப நடை போட்டோம். 'தோழர்களே, தாரைகள் ஒலிக்கின்றன' பாட்டையும், 'பட்டினிக் கொடுஞ் சிறைக்குள் பதருகின்ற மனிதர்காள்' என்னும் அகிலத்தின், உழைப்பின் பாட்டையும் பாடிச் சென்ரோம்.

''ஒரு வாரம் சென்றது. எங்கள் கைகளும் தோள்களும் திரும்பவும் சரியாயின. மற்ரொரு 'சுபோத்னிக்குக்குச்' சென்ரோம். இம்முறை ஒன்பது வெர்ஸ்டாக்களுக்கு அப்பால் சரக்கு ரயில் பெட்டிகளைப் பழுது பார்க்கச் சென்ரோம். பெரோவோதான் நாங்கள் போய்ச் சேர வேண்டிய இடம். தோழர்கள் 'அமெரிக்கக்' கூண்டுப் பெட்டியின் கூரைமீது ஏறிக் கொண்டு **சர்வதேசியக் கீதத்தை** நன்ரூகவும் முழு ஆர்வத்தோடும் பாடினர். ரயிலில் சென்றவர்கள் வியப்புற்றவர்களாய் எங்கள் பாட்டைக் கேட்டனர். ரயில் சக்கரங்கள் தாளம் தட்டின. கூரைமீது ஏறத் தவறியோர் 'எதற்கும் அஞ்சாத' பயணிகளாய் படிகளிலே தொத்திக் கொண்டனர். ரயில் நின்றது. இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது. நீண்ட தளத்தின் வழியே சென்ரோம். கமிசாரான தோழர் கி. எங்களை ஆர்வமுடன் வரவேற்ரூர்.

''வேலை நிறைய இருக்கிறது, ஆட்கள்தான் சொற்பம்! நாங்கள் முப்பது பேரே இருந்தோம். ஆறு மணி நேரத்தில் நாங்கள் பதின்மூன்று சரக்குப் பெட்டிகளுக்கு முறையான ரிப்பேர் வேலைகளை முடித்தாக வேண்டும். இரட்டைச் சக்கரங்கள் ஏற்கனவே குறியிடப்பட்டு இதோ இருக்கின்றன. காலிச் சரக்குப் பெட்டிகள் மட்டுமின்றி நிரப்பப்பட்டடாங்கிப் பெட்டியும் ஒன்று இருந்தது.... இருக்கட்டும் பரவாயில்லை! தோழர்களே, வாங்க, 'ஒரு கை பார்த்துவிடலாம்'!

''வேலை மும்முரமாய் நடந்தேறியது. ஐந்து தோழர்களும் நானும் தூக்கிப் பொறிகளைக் கொண்டு வேலை செய்தோம். ஒவ்வொன்றும் அறுபதிலிருந்து எழுபது பூடு எடை கொண்ட இரட்டைச் சக்கரங்கள் அவை. எங்கள் தோள்கள், இரண்டு தூக்கிப் பொறிகள் இவற்றின் வலிவுக்கு பணிந்து, எங்கள் 'போர்மனின்' மேற்பார்வையில், அவை மிகக் கச்சிதமாய் ஒரு தண்டவாளப் பாதையிலிருந்து உயர்ந்தெழுந்து மற்ரொன்றில் அமர்ந்தன. ஒரு ஜோடி ஓடி மறைந்ததும் மற்ரொன்று உரிய இடத்துக்கு உருண்டு வந்தது. முடிவில் யாவும் அவற்றுக்கான இடங்களை வந்தடைந்தன. தேய்ந்து போன இந்தப் பழைய சக்கரங்களை வேகமாய் நாங்கள் ஒரு கொட்டகையினுள் அனுப்பி வைத்தோம்.... ஒன்று, இரண்டு, மூன்று

—இரும்பாலான சுழலும் தூக்கிப் பொறியால் இமைப் பொழுதில் அவை தூக்கப்பட்டுத் தண்டவாளங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. அங்கே இருட்டில் சம்மட்டி அடிகள் வேகமாய் விழக் கேட்டோம். சுறுசுறுப்பான தேனீக்கள் போலத் தோழர்கள் அங்கே வேலை செய்தனர், பழுதான சரக்குப் பெட்டிகளைச் சரிப்படுத்தினர். தோழர் கமிசாரும் நாங்களும் மகிழ்ச்சிப் பூரிப்பில் திளைக்கச் சிலர் தச்சு வேலைகள் செய்தனர், வேறு சிலர் வர்ணம் பூசினர், மற்றும் சிலர் கூரைகளைச் செப்பனிட்டனர். கொல்லுப் பட்டறையாளர்கள் எங்களையும் உதவிக்கு வருமாறு அழைத்தனர். நடமாடும் பட்டறை உலை ஒன்றில் இணைப்புக் கொக்கியைக் கொண்ட இரும்புத் தண்டு பழுக்கக் காய்ந்து ஒளிர்ந்து கொண்டிருந்தது. கவனக் குறைவாய் ரயில் பெட்டிகள் தள்ளப்பட்டதால் தண்டு வளைந்து நெளிந்து போயிருந்தது. வெண் சுடர்கள் சிதற அது பட்டடைக் கல்மீது வைக்கப்பட்டது. அலுபவமிக்கக் கொல்லுப் பட்டறையாளரின் மேற்பார்வையில் எங்களுடைய குறி தவறுத சம்மட்டி அடிகள் அதன் கோணலைச் சரிசெய்தன. பழுக்கச் சிவந்து பொறிகள் பறந்த நிலையிலேயே அதை நாங்கள் தோளில் சுமந்து அவசரமாய் அதற்குரிய இடத்துக்கு எடுத்துச் சென்றோம். தண்டினை அதற்குரிய பொருத்துக் குழியில் வைத்து அழுத்தினோம். இரண்டொரு சம்மட்டி அடிகள் விழுந்ததும் கெட்டியாய்ப் பொருத்தப்பட்டுவிட்டது. சரக்குப் பெட்டிக்கு அடியில் தவழ்ந்து சென்றோம். பெட்டிகளின் இணைப்பு அமைப்பு தோற்றத்துக்குத் தெரிவது போல அவ்வளவு சுலபமான தல்ல. ரிவெட்டுகளையும் சுருள்வில்களையும் கொண்ட பல வகையான கட்டமைப்புகளும் இருந்தன....

''வேலைகள் மும்முரமாய் நடைபெற்றன. இரவு ஆரம்பித்துவிட்டது. தீப்பந்தங்கள் முன்னிலும் பிரகாசமாய் எரிவதாய்த் தோன்றின. திரும்புவதற்குரிய நேரம் நெருங்கிவிட்டது. சில தோழர்கள் சக்கரக் கட்டுகள் மீது சாய்ந்து கொண்டு சுடான தேநீர் அருந்தியபடி 'ஓய்வு' எடுத்துக் கொண்டனர். மே மாத இரவு குளுமையாய் இருந்தது. பளிச்சிடும் அரிவாளைப் போல விண்ணிலே பிறைச் சந்திரன் எழிலுருவாய் ஒளிர்ந்தது. யாவரும் தமாஷாய்ச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

''' 'தோழர் கி., போதும், பதின்மூன்று சரக்குப் பெட்டிகள் போதும்!'

''ஆனால் தோழர் கி. திருப்தியடையவில்லை.

''நாங்கள் தேநீரைக் குடித்துவிட்டு வெற்றிக் கீதங்கள் பாடியவாறு கதவை நோக்கி நடைபோட்டோம்....''

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளுக்கான'' இயக்கம் மாஸ்கோவுடன் நின்றுவிடவில்லை. ஜூன் 6ஆம் தேதி **பிராவ்தா** பின்வரும் தகவலை அறிவித்தது:

''திவேரில் முதலாவது கம்யூனிஸ்டு சுபோத்னிக் நடைபெற்றது. நூற்று இருபத்தெட்டு கம்யூனிஸ்டுகள் ரயில்வேயில் வேலை செய்தனர். மூன்றரை மணி நேரத்தில் அவர்கள் பதினொன்று சரக்குப் பெட்டிகளில் சரக்கு ஏற்றவும் இறக்கவும் செய்தனர், மூன்று ரயில் இஞ்சின்களைப் பழுது பார்த்தனர், பத்து சஜேன்* விறகு உடைத்தனர், மற்றும் பல வேலைகள் செய்தனர். தேர்ச்சி வாய்ந்த கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறன் வழக்கத்தை விட பதின்மூன்று மடங்கு அதிகமாயிருந்தது.''

திரும்பவும் ஜூன் 8ல் **பிராவ்தா**வில் படித்தோம்:

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்

''சராத்தவ், ஜூன் 5. இங்கே கம்யூனிஸ்டு ரயில்வே தொழிலாளர்கள் தமது மாஸ்கோ தோழர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப, கட்சியின் பொதுக் கூட்டத்தில், தேசப் பொருளாதாரத்துக்கு உதவும் பொருட்டு சனிக்கிழமைகளில் சம்பளமின்றி ஐந்து மணி நேரம் வேலை செய்வதெனத் தீர்மானம் செய்தனர்.''

* * *

கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளைப் பற்றி நான் முழு அளவில் மிகவும் விவரமாய்த் தகவல் அளித்திருக்கிறேன். ஏனெனில் இந்த இயக்கத்தில் சந்தேகத்துக்கு இடமின்றி கம்யூனிச நிர்மாணத்தின் மிக முக்கிய கூறுகளில் ஒன்றைக் காண்கிறோம். இதில் நமது பத்திரிகைகள் போதிய கவனம் செலுத்தவில்லை. நாம் எல்லோருமே இன்னமும் இதன் முக்கியத்துவத்தைச் சரிவரப் புரிந்து கொண்டாகவில்லை.

---

* —ருஷ்ய நீட்டல் அளவை; 2.13 மீட்டருக்குச் சமம். — (மொ-ர்.)

அரசியல் வாண வேடிக்கைகள் குறைவதாக, கம்யூனிச நிர்மாணத்தின் எளியவையே ஆயினும் உயிர் சக்தி கொண்ட உண்மைகளில், நடைமுறை வாழ்விலிருந்து எடுக்கப்பட்டவை யும் அதனால் சோதிக்கப்பட்டவையுமான இவ்வுண்மை களில் செலுத்தப்படும் கவனம் அதிகமாகுக—இதுவே நாம் எல்லோரும், நமது எழுத்தாளர்களும் கிளர்ச்சியாளர்களும் பிரசாரகர்களும் நிறுவன ஒழுங்கமைப்பாளர்களும் இன்ன பிற ரும் ஓயாது திரும்பத் திரும்பக் கூற வேண்டிய கோஷமாகும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பிறகு முதலாவது கட் டத்தில் நாம் முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்பை அடக்குவ தென்னும், சுரண்டலாளர்களைத் தோற்கடிப்பதென்னும், அவர்களுடைய சதியை (பெத்ரொகிராதைச் சரணடையச் செய்வதற்காக[63] ''அடிமையுடைமையாளர்கள்'' நடத்தியதை ஒத்த, கறுப்பு நூற்றுவரும்[64] காடேட்டுகளும் முதலாய் மென்ஷிவிக்குகளும்[65] சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின ரும் வரையிலான அனைவரும் சம்பந்தப்பட்டிருந்தார்களே அதை ஒத்த சதியை) நசுக்குவதென்னும் பிரதானமான, அடிப் படையான பணியில் முக்கியமாய் ஈடுபட வேண்டியிருந்தது. இது இயற்கையே, தவிர்க்க முடியாததே. ஆனால் இப்பணி யுடன் கூடவே மற்றொரு பணியும் அதே போல தவிர்க்க முடி யாமலும், காலம் செல்லச் செல்ல மேன்மேலும் அத்தியா வசியமாகவும் முன்னிலைக்கு வருகிறது. நேரடியாய்க் கம்யூனி சத்தை நிர்மாணம் செய்யும், புதிய பொருளாதார உறவு களை, ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் முக்கியப் பணி அது.

பல சந்தர்ப்பங்களில் நான் சுட்டிக் காட்டியிருப்பது போல, ஏனைய பல சந்தர்ப்பங்களுடன்கூட மார்ச் 12ல் பெத் ரொகிராத் சோவியத்தின் அமர்வில் நிகழ்த்திய சொற்பொழி வில் நான் சுட்டிக் காட்டியது போல, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது சுரண்டலாளர்களுக்கு எதிரான பலாத் காரப் பிரயோகம் மட்டுமல்ல, பிரதானமாய்க்கூட அது பலாத்காரப் பிரயோகம் அல்ல. பாட்டாளி வர்க்கமானது உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் மேலும் உயர்வான ஒரு ரகத்தின் பிரதிநிதி யும் படைப்பாளனும் ஆகும் என்பதுதான் இந்தப் புரட்சி

கரப் பலாத்காரப் பிரயோகத்துக்கான பொருளாதார அடிப்படை, இதன் பயனுடைமைக்கும் வெற்றிக்குமான உத்தரவாதம். முக்கியமானது இதுவே. பலத்தின் ஆதாரமும் கம்யூனிசத்தின் இறுதி வெற்றி தவிர்க்க முடியாதது என்பதற்கான உத்தரவாதமும் இதுவே.

சமூக உழைப்புக்கான பிரபுத்துவ ஒழுங்கமைப்பு குறுந்தடி மூலமான கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய நிலப்பிரபுக்களால் சூறையாடப்பட்டு கொடுங்கோன்மைக்கு உட்படுத்தப்பட்ட உழைப்பாளி மக்கள் அறியாமை இருளில் முற்றிலும் மூழ்கி ஒடுக்கப்பட்டோராய் இருந்தனர். சமூக உழைப்புக்கான முதலாளித்துவ ஒழுங்கமைப்பு பட்டினி மூலமான கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது; முதலாளித்துவக் கலாசாரமும் முதலாளித்துவ ஜனநாயகமும் எவ்வளவுதான் முன்னேறியிருப்பினும் மிகவும் முன்னேறிய, நாகரிகம் படைத்த, ஜனநாயகக் குடியரசுகளிலும் மிகப் பெருந் திரளான உழைப்பாளி மக்கள் அறியாமை இருளில் மூழ்கி மிதித்து நசுக்கப்படும் திரளான கூலியடிமைகள் அல்லது ஒடுக்கப்பட்ட விவசாயிகளாகவே இருந்தனர், விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய முதலாளிகளால் சூறையாடப்பட்டு கொடுங்கோன்மைக்கு உட்படுத்தப்பட்டனர். சமூக உழைப்புக்கான கம்யூனிச ஒழுங்கமைப்பு—இதற்கான முதற் படியே சோஷலிசம் எனப்படுவது—நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகிய இரு பாலோரின் ஒடுக்குமுறையை வீழ்த்திவிட்ட உழைப்பாளி மக்கள் தாமே சுதந்திரமாகவும் உணர்வு பூர்வமாகவும் வகுத்துக் கொள்ளும் கட்டுப்பாட்டை ஆதாரமாய்க் கொண்டது, காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் அதையே ஆதாரமாய்க் கொள்ளும்.

இந்தப் புதிய கட்டுப்பாடு விண்ணிலிருந்து குதித்து விடுவதில்லை, ஆத்மார்த்திக விருப்பத்திலிருந்து பிறந்துவிடுவதில்லை. பெருவீத முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயத நிலைமைகளிலிருந்தே, அவற்றிடம் மட்டுமிருந்தே இது வளர்ச்சியுறுகிறது. இந்நிலைமைகள் இல்லாமல் இது வளர்வது சாத்தியமல்ல. வரலாற்று வழி வந்த குறிப்பிட்ட ஒரு வர்க்கமே, பெருவீத முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்டதும் ஒழுங்கமைக்கப்பட்டதும் ஒன்றுபடுத்தப்பட்ட

தும் பயிற்சியளிக்கப்பட்டதும் அறிவூட்டப்பட்டதும் உறுதியூட்டப்பட்டதுமான ஒரு வர்க்கமே இந்தப் பொருளாயத நிலைமைகளுக்குரிய இருப்பிடம் அல்லது சாதனம். பாட்டாளி வர்க்கம்தான் இந்த வர்க்கம்.

''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்'' என்கிற லத்தீன, விஞ்ஞான, வரலாற்று-தத்துவவியல் தொடரை எளிய மொழியில் பெயர்த்திடுவோமாயின் பின்வருவதே அதன் பொருள்:

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தால் மட்டும்தான், அதாவது பொதுவில் நகரத் தொழிலாளர்களும் ஆலை, தொழில் துறைத் தொழிலாளர்களுமானோரால் மட்டும்தான், மூலதனத்தின் ஒடுக்குமுறையை வீழ்த்துவதற்கான போராட்டத்திலும், நடைமுறையில் இந்தப் போராட்டத்தை நடத்திச் செல்வதிலும், வெற்றியைப் பாதுகாப்பதற்கும் உறுதிபெறச் செய்வதற்குமான போராட்டத்திலும், புதிய சோஷலிச சமூக அமைப்பை உருவாக்கும் பணியிலும், வர்க்கங்களே அறவே ஒழிப்பதற்கான போராட்டம் அனைத்திலும் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் பெருந்திரள் முழுவதுக்கும் தலைமை தாங்க முடிகிறது. (சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையிலுள்ள விஞ்ஞான வழிப்பட்ட வேற்றுமை என்னவெனில் முதலாவது பதம் முதலாளித்துவத்திலிருந்து தோன்றும் புதிய சமுதாயத்தின் முதற் கட்டத்தையும் இரண்டாவது பதம் மேலும் உயர்வான அடுத்த கட்டத்தையும் சுட்டுகிறவை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்.)

''பெர்ன்'', மஞ்சள் அகிலம்[66] புரியும் தவறு என்னவெனில், அதன் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் சொல்லளவில் மட்டும்தான் ஏற்றுக் கொள்கிறார்கள், அதன் தர்க்க முடிவுக்குச் சிந்தித்துச் செல்ல அஞ்சுகிறார்கள். தவிர்க்க முடியாததான இந்த முடிவு, குறிப்பாய் முதலாளித்துவ வர்க்கத்துக்குக் குலைநடுக்கம் உண்டாக்கும் இந்த முடிவு அவர்களுக்கு அச்சம் தருவதாயுள்ளது. இது அவர்களுக்குச் சிறிதும் ஏற்புடையதல்ல. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது வர்க்கப் போராட்டத்துக்கும் **உரிய காலமாகும்** என்பதை ஒத்துக் கொள்ள அவர்கள் அஞ்சுகிறார்கள். வர்க்கங்கள்

ஒழிக்கப்படாது இருக்கும் வரை வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாகும், மூலதனம் வீழ்த்தப்பட்டதும் உடனடியாய் அடுத்து வரும் கால கட்டத்தில் வடிவத்தில் மாற்ற முற்று அது குறிப்பாய் மூர்க்கமடைந்து குறிப்பாய்த் தனியியல்புடையதாகிவிடுகிறது என்பதை ஒத்துக் கொள்ள அவர்கள் அஞ்சுகிறார்கள். பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியபின் அது வர்க்கப் போராட்டத்தை நிறுத்திவிடவில்லை, வர்க்கங்கள் ஒழிக்கப்படும் வரை தொடர்ந்து நடத்தியே செல்கிறது—போராட்டம் நடைபெறும் சூழ்நிலையும் போராட்ட வடிவமும் போராட்ட வழிகளும்தான் மாறுபடுகின்றன.

''வர்க்கங்கள் ஒழிக்கப்படுதல்'' என்பதன் பொருள் என்ன? இதுவே சோஷலிசத்தின் இறுதிக் குறிக்கோள் என்பதை, தம்மை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்வோர் எல்லோருமே அங்கீகரிக்கிறார்கள், ஆனால் அதன் உட்பொருள் குறித்து பலரும் சிந்திப்பதில்லை. வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொருளுற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவாலும் (மிக பெரும் பாலும் இது சட்டத்தால் நிலைநிறுத்தப்பட்டு வரையறுக்கப் பட்டிருக்கிறது), உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் அவற்றுக்குள்ள பாத்திரத்தாலும், ஆகவே சமூகச் செல்வத்தில் அவற்றின் செயலாட்சிக்கு உட்படும் பங்கின் பரிமாணங்களாலும், இந்தப் பங்கை அவை சுவாதீன மாக்கிக் கொள்ளும் முறையினாலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் பெரும் மக்கள் பகுதிகளாகும். வர்க்கங்களானவை சமூகப் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட ஓர் அமைப்பில் தாம் வகிக்கும் வெவ்வேறு இடங்களின் காரணமாய் ஒன்று மற்றொன்றின் உழைப்பைக் கைப்பற்றிக் கொள்ள முடியும்படியான மக்கள் பகுதிகளாகும்.

வர்க்கங்களை அறவே ஒழிப்பதற்குச் சுரண்டலாளர்களான நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் வீழ்த்தினால் மட்டும் போதாது, **அவர்களுடைய** சொத்துடைமை உரிமைகளை ஒழித்தால் மட்டும் போதாது; உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை **அனைத்தையும்** ஒழிப்பது அவசியம், நக

ருக்கும் கிராமத்துக்குமுள்ள பாகுபாட்டையும் மற்றும் உடல் உழைப்பாளர்களுக்கும் மூளை உழைப்பாளர்களுக்குமுள்ள பாகுபாட்டையும் ஒழிப்பது அவசியம் என்பது தெளிவு. இதற்கு நீண்ட நெடுங் காலம் தேவைப்படும். இதைச் சாதிப்பதற்கு உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் பிரம்மாண்டமான முன்னேற்றம் கண்டாக வேண்டும்; சிறு வீதப் பொருளுற்பத்தியின் எண்ணற்ற மீதமிச்சங்களின் எதிர்ப்பைச் சமாளிப்பது அவசியம் (அடிக்கடி சாத்துவிகத் தன்மையதான இது மிகவும் பிடிவாதமானது, இதைச் சமாளிப்பது மிகவும் கடினமானது); இந்த மீதமிச்சங்களுடன் சம்பந்தப்பட்ட பழக்கத்தின், பழைமைப் பிடிப்பின் பிரம்மாண்ட சக்தியைச் சமாளிப்பது அவசியம்.

இந்தப் பணியைச் செய்திடும் ஆற்றல் ''உழைப்பாளி மக்கள்'' அனைவருக்கும் சம அளவில் உண்டெனக் கொள்ளுதல் வெற்று உரையே ஆகும், அல்லது மார்க்சியத்துக்கு முற்காலத்திய, மிகப் பழங்காலத்திய சோஷலிஸ்டின் பிரமையே ஆகும். ஏனெனில் இந்த ஆற்றல் தானாகவே வந்துவிடும் ஒன்றல்ல, வரலாற்று வழியில் வளர்ந்திடுவதாகும், பெரு வீத முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயத நிலைமைகளிலிருந்து **மட்டுமே** வளர்ந்திடுவதாகும். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குச் செல்லும் பாதையின் தொடக்கத்தில் இந்த ஆற்றலைப் பெற்றிருப்பது பாட்டாளி வர்க்கம் **மட்டுமேதான்.** அது தன்னை எதிர்நோக்கும் பிரம்மாண்டப் பணியை நிறைவேற்றும் ஆற்றலுடையதாய் இருக்கிறது. ஏனெனில் முதலாவதாக, நாகரிக சமுதாயங்களில் அதுவே மிகுந்த பலம் படைத்த மிக முன்னேறிய வர்க்கம்; இரண்டாவதாக, வளர்ச்சி பெற்ற மிகப் பெருவாரியான நாடுகளில் அது மக்கள் தொகையில் பெரும்பான்மையானது; மூன்றுவதாக, ருஷ்யாவைப் போன்ற பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளில் மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் அரைப் பாட்டாளி வர்க்கத்தினர், அதாவது ஆண்டில் ஒரு பகுதி முறையாய்ப் பாட்டாளி வர்க்க வழியில் வாழ்ந்து தமது ஜீவனோபாயத்தில் ஒரு பகுதியை முறையாய் முதலாளித்துவத் தொழில் நிலையங்களில் கூலி உழைப்பாளர்களாய் வேலை செய்து சம்பாதிக்கும் மக்கள்.

சுதந்திரம், சமத்துவம், பொதுப்படையான ஜனநாயகம், உழைப்பு ஜனநாயக சமத்துவம், இன்ன பலவற்றையும் பற்றிய பொதுவான பேச்சின் அடிப்படையில் (காவுத்ஸ்கியும் மார்த்தவும் பெர்ன் மஞ்சள் அகிலத்தின் ஏனைய வீரர்களும் செய்வது போல), முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுவோர், தமது குட்டிபூர்ஷுவா அற்பத்தனத்தைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்; முதலாளித்துவ வர்க்கத்தின் வாலைப் பற்றிக்கொண்டு சித்தாந்த வழியில் அடிமைப்பட்டோராய் அதைப் பின்தொடர்ந்து செல்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்குரிய சரியான தீர்வினை அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொண்ட குறிப்பிட்ட வர்க்கத்துக்கும், அதாவது பாட்டாளி வர்க்கத்துக்கும், பாட்டாளி வர்க்கத்தவர் அல்லாதோரும் மற்றும் அரைப் பாட்டாளி வர்க்கத்தவருமான உழைப்பாளி மக்கள் திரள் அனைத்துக்கும் இடையிலுள்ள குறிப்பிட்ட உறவுகளை ஸ்தூலமாய் ஆராய்வதன் அடிப்படையிலேதான் காண முடியும். இந்த உறவுகள் கற்பனைவாத இசைவு நிலவும் ''அதிசிரேஷ்ட'' நிலைமைகளில் உருவாவதில்லை, பல்வேறான மிகப் பல வடிவங்களை ஏற்கும் வெறித்தனமான முதலாளித்துவ வர்க்கத்தது எதிர்ப்பின் மெய்யான நிலைமைகளில் உருவாகின்றன.

மூலதனத்தின் ஒடுக்குமுறையை, அது நடத்தும் கொள்ளையையும் புரியும் ஒவ்வொரு வகைக் கொடுங்கோன்மையையும் ருஷ்யாவும் அடங்கலாய் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் மக்களில் மிகப் பெருவாரியானோர், இன்னும் முக்கியமாய் உழைப்பாளி மக்களில் மிகப் பெருவாரியானோர் நேரில் தாமும் தமது உற்றார் உறவினர் மூலமும் ஆயிரக் கணக்கான முறை அனுபவித்திருக்கிறார்கள். ஏகாதிபத்திய யுத்தமானது, அதாவது அனைத்து உலகையும் சூறையாடுவதில் தலைமைப் பாத்திரம் செலுத்தப் போவது பிரிட்டிஷ் மூலதனமா அல்லது ஜெர்மன் மூலதனமா என்பதைத் தீர்மானிப்பதற்காக லட்சோப லட்ச மக்கள் கொன்று குவிக்கப்பட்ட படுகொலையானது இந்தக் கொடிய வேதனைகளை வெகுவாய்த் தீவிரப்படுத்தியுள்ளது, இவற்றை மேலும் அதிகப்படுத்தி

ஆழமாக்கியுள்ளது, மக்களை இவற்றின் பொருளை உணர்ந்து கொள்ளும்படிச் செய்துள்ளது. எனவேதான் மக்களில், குறிப்பாய் உழைப்பாளி மக்களில் மிகப் பெருவாரியானோர் தவிர்க்க முடியாத வகையில் பாட்டாளி வர்க்கத்திடம் அனுதாபம் காட்டுகின்றனர். ஏனெனில் அது தீரமிக்க நெஞ்சுறுதியோடும் புரட்சிகரச் சீற்றத்தோடும் மூலதனத்தின் ஒடுக்குமுறையை வீழ்த்தி, சுரண்டலாளர்களைக் கவிழ்த்து, அவர்களுடைய எதிர்ப்பை நசுக்கி வருகிறது; சுரண்டலாளர்களுக்கு இடமில்லாத ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கப் பாதையைச் செப்பனிடுவதற்காகத் தனது இரத்தத்தைச் சிந்துகிறது.

உழைப்பாளி மக்களின் பாட்டாளி வர்க்கத்தவரல்லாத, அரைப் பாட்டாளி வர்க்கப் பெருந் திரளினரின் குட்டிபூர்ஷுவா ஊசலாட்டங்களும் முதலாளித்துவ வர்க்கத்தின் ''குடையின்''கீழ் முதலாளித்துவ ''நெறிமுறைக்குத்'' திரும்ப வேண்டுமென்ற அவர்களது போக்கும் பெரிய அளவிலும் தவிர்க்க முடியாததாகவும் இருப்பினும், அவர்களால் பாட்டாளி வர்க்கத்தின் தார்மிக, அரசியல் மேலாண்மையை அங்கீகரிக்காது இருக்க முடியவில்லை. பாட்டாளி வர்க்கம் சுரண்டலாளர்களை வீழ்த்தி அவர்களுடைய எதிர்ப்பை நசுக்குவதோடு அன்னியில், ஒரு புதிய, உயர்வான சமூக பந்தத்தை, சமூகக் கட்டுப்பாட்டை அல்லவா கட்டியமைத்து வருகிறது; வர்க்க உணர்வு படைத்த ஒன்றுபட்ட உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டை அல்லவா, தமது சொந்த ஒற்றுமையினுடையதை அன்றி, தம்மிலும் அதிக வர்க்க உணர்வு படைத்த அஞ்சா நெஞ்சங் கொண்ட உறுதிமிக்க புரட்சிகரமான நிலையான தமது சொந்த முன்னணிப் படையினுடையதை அன்றி வேறு எந்தக் கட்டுத் தறியையும் மேலாண்மையையும் அறியாத உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டை அல்லவா கட்டியமைத்து வருகிறது.

வெற்றி பெறும் பொருட்டு சோஷலிசத்தைக் கட்டியமைத்து அதை உறுதியாக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்கம் இருபடியான அல்லது இரட்டையான ஒரு பணியை நிறைவேற்றியாக வேண்டும். முதலாவதாக, மூலதனத்துக்கு எதிரான புரட்சிப் போராட்டத்தில் அது தனது ஒப்பற்ற

வீரதீரத்தால் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் முழுத் திரளையும் தன் பக்கத்துக்கு வென்று கொண்டாக வேண்டும்; முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்கும் அவ்வர்க்கத்தின் எதிர்ப்பை அடியோடு நசுக்குவதற்குமான போராட்டத்தில் இத்திரளைத் தன் பக்கத்துக்கு வென்று கொண்டு, ஒழுங்கமைத்து, தலைமை தாங்கி அழைத்துச் செல்ல வேண்டும். இரண்டாவதாக, உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்கள் பெருந் திரள் அனைத்துக்கும் மற்றும் குட்டிபூர்ஷுவாப் பகுதிகள் யாவற்றுக்கும் தலைமை தாங்கிப் புதிய பொருளாதார வளர்ச்சிக்குரிய பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும்; ஒரு புதிய சமூகப் பிணைப்பை, ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டை நோக்கி, விஞ்ஞானத்திலும் முதலாளித்துவத் தொழில்நுட்பத்திலும் உச்சி முடியானதைப் பெருவீத சோஷலிசத் தொழில் துறையைப் படைப்பித்து வரும் வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களது வெகுஜன ஐக்கிய அமைப்புடன் இணைக்க வல்ல ஒரு புதிய உழைப்பு ஒழுங்கமைப்பை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும்.

இரண்டாவது பணி முதலாவதைக் காட்டிலும் கடினமானது. ஏனெனில் வீர உணர்ச்சி வேகங் கொண்ட தனிப்பட்ட செயல்களால் ஒருபோதும் நிறைவேற்ற முடியாத பணி அது; **சர்வசாதாரண, அன்றுட** வேலைகளில் மிகவும் நீடித்து, விடாமுயற்சியுடன் செயல்படும் மிகவும் கடினமான வெகுஜன வீரதீரம் இதற்கு அவசியமாகும். ஆயினும் இந்தப் பணிதான் முதலாவதைக் காட்டிலும் மிகவும் அத்தியாவசியமான பணி. ஏனெனில் முடிவாய்ப் பார்க்கையில், மேலும் உயர்வான ஒரு புதிய சமூகப் பொருளுற்பத்தி முறைதான், முதலாளித்துவ, குட்டிபூர்ஷுவாப் பொருளுற்பத்திக்குப் பதிலாய்ப் பெருவீத சோஷலிசப் பொருளுற்பத்தியை நிறுவுதல்தான் முதலாளித்துவ வர்க்கத்தின்மீது வெற்றிகள் பெறுவதற்குரிய பலத்தின் மிக ஆழ்ந்த மூலாதாரமும், இந்த வெற்றிகளின் நிலைப்பாட்டுக்கும் நிரந்தரத்துக்குமான ஒரே யொரு உத்தரவாதமும் ஆகும்.

* * *

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' உழைப்பின் உற்பத்தித் திறனை வளரச் செய்வதில், புதிய உழைப்புக் கட்டுப்பாட்டைக் கைக்கொள்வதில், பொருளாதாரத்திலும் வாழ்க்கையிலும் சோஷலிச நிலைமைகளைத் தோற்றுவிப்பதில் தொழிலாளர்களுடைய உணர்வு பூர்வமான மனமுவந்த முன்முயற்சியைப் புலப்படுத்திக் காட்டுவதால்தான் அவை இவ்வளவு பிரம்மாண்ட வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றன.

யோ. ஜாக்கபி ஜெர்மன் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளில் 1870-71ஆம் ஆண்டுகளின் படிப்பினைகளுக்குப் பிற்பாடு தேசியவெறிக்கோ தேசிய-மிதவாதத்துக்கோ மாறுமல் சோஷலிசத்துக்கு மாறிய மிகச் சிலருள் ஒருவராவார்; மிக அரிய விதிவிலக்காளரில் ஒருவராவாரெனக் கூறினால் இன்னும் பொருத்தமாயிருக்கும். ஒரேயொரு தொழிற் சங்கம் நிறுவப்பட்டதானது சதோவாப் போரைவிட[67] அதிக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததென முன்பொரு தரம் அவர் கூறினார். இது மெய்தான். ஜெர்மன் தேசிய முதலாளித்துவ அரசைத் தோற்றுவிப்பதில் இரு முதலாளித்துவ முடியரசுகளில் எது முதல் நிலை வகிக்கப் போகிறது, ஆஸ்திரிய முடியரசா அல்லது பிரஷ்ய முடியரசா என்பதை சதோவாப் போர் தீர்மானித்தது. ஒரேயொரு தொழிற் சங்கம் நிறுவப்பட்டதானது முதலாளித்துவ வர்க்கத்தின்மீது பாட்டாளி வர்க்கம் உலக அளவில் வெற்றி பெறுவதற்கான வழியில் ஒரு சிறு படியாய் அமைந்தது. இதையொத்த முறையில் இப்பொழுது நாம் 1919 மே 10ல் மாஸ்கோவில் மாஸ்கோ-கஸான் ரயில்வேத் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்த முதலாவது கம்யூனிஸ்டு சுபோத்னிக் 1914-18 ஏகாதிபத்திய யுத்தத்தில் ஹின்டென்பர்க் அல்லது ஃபோஷும் பிரிட்டிஷாரும் பெற்ற எந்த வெற்றியையும் காட்டிலும் அதிக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று கூறலாம். ஏகாதிபத்தியவாதிகளின் வெற்றிகள் ஆங்கிலோ-அமெரிக்க, பிரெஞ்சுக் கோடீஸ்வரர்களுடைய லாபங்களுக்காக வேண்டிலட்சோப லட்சமாய்த் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்படுவதைக் குறிப்பவை. அளவு மீறி உண்டு ஊதிப் பருத்து உயிருள்ள நிலையிலே அழுகிப் புடைநாற்றம் வீசும் அந்திமக்

கால முதலாளித்துவம் புரியும் அட்டூழியங்களைக் குறிப் பவை. மாஸ்கோ-கஸான் ரயில்வேத் தொழிலாளர்கள் ஏற் பாடு செய்த கம்யூனிஸ்டு சுபோத்னிக் மூலதனத்தின் ஒடுக்கு முறையிலிருந்தும் யுத்தங்களிலிருந்தும் உலக மக்கள் அனை வருக்கும் விடுதலை கிட்டச் செய்யும் புதிய சோஷலிச சமு தாயத்தின் உயிரணுக்களில் ஒன்றாய்த் திகழ்வது.

முதலாளித்துவக் கனவான்களும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் அடங்கலான அவர் களது பரிவாரத்தினரும்—''பொது ஜன அபிப்பிராயத்தின்'' பிரதிநிதிகளாய் இவர்கள் பல காலமாய்த் தம்மைக் கருதிக் கொண்டவர்கள்—இயல்பாகவே கம்யூனிஸ்டுகள் கொண் டுள்ள நம்பிக்கைகளைக் கேலி செய்கின்றனர். ''மலர்க் கோப் பையில் நட்ட இலவம் பஞ்சு மரம்'' என்பதாய் அவர்கள் இந்த நம்பிக்கையைக் குறிப்பிடுகிறார்கள். திருட்டு, சோம் பல், குறைவான உற்பத்தித் திறன், மூலப் பொருள்களும் முடிவுற்ற பண்டங்களும் வீணாக்கப்படுதல் முதலான நிகழ்வு களின் மிகப் பெரிய எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் சுபோத்னிக்குகளின் எண்ணிக்கை அற்ப சொற்பமாய் இருப் பது குறித்து அவர்கள் ஏளனம் செய்கிறார்கள். இந்தக் கன வான்களுக்கு நாம் கூறும் பதில் இதுவே: முதலாளித்துவ அறிவுத் துறையினர் தமது அறிவாற்றலை ருஷ்ய, அந்நிய முதலாளிகளது ஆட்சியதிகாரத்தைத் திரும்பவும் கொண்டு வரும் பொருட்டு இந்த முதலாளிகளுக்கு அளித்திடுவதற்குப் பதிலாய் உழைப்பாளி மக்களுக்கு உதவுவதற்காக அதை அர்ப்பணித்திருந்தார்களாயின், புரட்சி மேலும் விரைவாக வும் மேலும் சமாதான பூர்வமாகவும் நடந்தேறியிருக்கும். ஆனால் இது கற்பனாவாதமாகும். ஏனெனில் பிரச்சினை தீர்க்கப் படுவது வர்க்கப் போராட்டத்தால். அறிவுத் துறையினரில் பெரும்பாலோர் முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம்தான் சாய்கின்றனர். பாட்டாளி வர்க்கம் வெற்றி வாகை சூடப் போவது அறிவுத் துறையினரின் உதவியால் அல்ல, அவர் களுடைய எதிர்ப்பை மீறித்தான் (எப்படியும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்படித்தான்). அவர்களில் திருந்த முடி யாதபடி சீர்கேடுற்றோரை ஒதுக்கித் தள்ளியும், சஞ்சல வாதிகளைச் சீர்திருத்தியும் மறுகல்வியும் போதனையும் அளித்

தும் கீழ்ப்படிய வைத்தும், அது படிப்படியாய் அவர்களில் மேலும் மேலும் அதிகமானோரைத் தம் பக்கத்துக்கு வென்று வெற்றி வாகை சூடப் போகிறது. புரட்சிக்கு ஏற்படும் இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் கண்டு ஆர்ப்பரித்து அக மகிழ்தல், பீதியைப் பரப்புதல், கடந்த காலத்துக்குத் திரும்பி விட வேண்டுமெனப் பிரசாரம் செய்தல்—இவை யாவும் தான் வர்க்கப் போராட்டத்தில் முதலாளித்துவ அறிவுத் துறையினரின் ஆயுதங்களும் வழிமுறைகளும். இவற்றுல் தான் ஏமாற்றப்படுவதற்குப் பாட்டாளி வர்க்கம் அனுமதிக்கப் போவதில்லை.

ஆனல் உண்மை விவரங்களைப் பரிசீலித்தால், புதிய பொருளுற்பத்தி முறை எதுவும் வரிசையாய்ப் பல தொல்வி களும் தவறுகளும் மறுதலிப்புகளும் இல்லாமல் உடனடி யாகவே உறுதியாய் நிலைபெற்றதை வரலாற்றில் எப்பொழு தாவது கண்டதுண்டா? பண்ணை அடிமை முறை ஒழிக்கப்பட்டு அரை நூற்ருண்டு கழிந்த பிறகும் ருஷ்யக் கிராமப்புறங் களில் பண்ணை அடிமை முறையின் மீதமிச்சங்கள் பலவும் இருந்தன. அமெரிக்காவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டு அரை நூற்ருண்டு ஆன பிறகும் நீக்ரோக்களின் நிலை பல சந்தர்ப்பங்களில் அரை அடிமை நிலையாகவே இருந்தது. மென் ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் அடங்கலான முதலாளித்துவ அறிவுத்துறையினர் மூலதனத் துக்குப் பணியாற்றுவதிலும் முழுக்க முழுக்கப் பொய்யான வாதங்களைத் தொடர்ந்து கையாளுவதிலும் இம்மியும் நெறி பிறழாதவர்களாகவே இருக்கின்றனர்—பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்பு, அவர்கள் நாம் கற்பனைவாதிகளாய் இருப்ப தாய்க் குற்றம் கூறினர்; இந்தப் புரட்சிக்குப் பிறகு, கடந்த காலத்தின் சாயல்கள் யாவற்றையும் நாம் கற்பனை வேகத்தில் துடைத்தெறிய வேண்டுமெனக் கோருகின்றனர்!

ஆனல் நாம் கற்பனைவாதிகள் அல்ல. முதலாளித்துவ ''வாதங்களின்'' உண்மை அர்த்தத்தை நாம் அறிவோம். புரட்சிக்குப் பிறகு சில காலத்துக்குப் பழைய அறநெறியின் சாயல்கள் புதியதன் இளங் குருத்துக்களை விஞ்சி ஆதிக்கம் புரியவே செய்யும் என்பதையும் அறிவோம். புதியது இப் பொழுதுதான் பிறந்ததாய் இருக்கையில் குறிப்பிட்ட சிறிது

காலத்துக்குப் பழையது அதைக் காட்டிலும் பலம் கொண்ட தாகவே இருக்கும். இயற்கையிலும் சமூக வாழ்விலும் எப் பொழுதும் இப்படித்தான். புதியதன் இளங் குருத்துக்களின் வலுவின்மையை ஏளனம் செய்தலும், அறிவுத் துறையின ரின் கீழ்த்தரமான ஐயுறவு மனப்பான்மையும், இன்ன பிற வும் சாராம்சத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான முத லாளித்துவ வர்க்கப் போராட்ட முறைகளே ஆகும், சோஷ லிசத்துக்கு எதிராய் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதே ஆகும். புதியதன் வலுவில்லாத குருத்துக்களை நாம் கருத் துடன் ஆராய்ந்தாக வேண்டும். அவற்றின்பால் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அவற்றின் வளர்ச்சியை ஓங்கச் செய்ய வும் அவற்றைப் ''பேணிக் காக்கவும்'' யாவும் செய்தாக வேண் டும். அவற்றில் சில தவிர்க்க முடியாதபடி மடிந்துவிடலாம். ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்தான்'' குறிப்பிடத்தக்க முக் கிய பங்காற்றப் போகிறவை என்று நாம் உறுதி மொழி கூற முடியாது. ஆனால் அதுவல்ல விவகாரம். புதியதன் குருத்துக் கள் யாவற்றையும் ஒன்று விடாது பேணி வளர்த்திடுவதே இங்குள்ள விவகாரம். இவற்றுள் நிலைத்து வாழத் தக்கன வற்றை வாழ்க்கை தெரிந்தெடுத்துக் கொள்ளும். மனிதகுலம் மேக நோயை ஒழித்துக்கட்ட உதவும் பொருட்டு, ஐப்பானிய விஞ்ஞானிக்கு அறுநூற்று ஐந்து மருந்து தயாரிப்புகளைச் சோதித்துப் பார்த்து குறிப்பிட்ட தேவைகளுக்கு உகந்தபடி அமைந்த அறுநூற்று ஆறுவது தயாரிப்பை உருவாக்கும் பொறுமை இருந்ததென்றால், இதனிலும் கடினமான ஒரு பிரச்சினைக்கு, அதாவது முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டுவ தென்ற பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புவோர் யாவற்றி லும் மிகப் பொருத்தமானதை உருவாக்கும் பொருட்டு, நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் புதிய போராட்ட முறைகளையும் வழிகளையும் ஆயுதங்களையும் சோதித்துப் பார்க்கும்படியான விடாமுயற்சி உடையோராய் இருக்க வேண்டும் அல்லவா?

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' இவ்வளவு முக்கிய மானவையாய் இருக்கக் காரணம் என்னவெனில், விதிவிலக் கான சிறந்த நிலைமைகளில் அமைந்தோராய் எவ்வகையிலும் கொள்ள முடியாத தொழிலாளர்களால் இவை ஆரம்பித்து

வைக்கப்பட்டவை; **சர்வசாதாரண** நிலைமைகளில், அதாவது **அளவு கடந்த கடின** நிலைமைகளில் வாழும் பல்வேறு தேர்ச்சித் துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களாலும் எந்தத் தேர்ச்சியுமில்லாத சாதாரணத் தொழிலாளர்களாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டவை. உழைப்பின் உற்பத்தித் திறன் சரிவதன் பிரதான காரணத்தை, ருஷ்யாவில் மட்டுமின்றி உலகெங்குமே காணக்கூடிய இந்தப் பிரதான காரணத்தை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். ஏகாதிபத்திய யுத்தத்தால் விளைந்த அழிவும் வறுமையும் கசப்பும் தளர்வும்தான் காரணம், நோயும் பட்டினியும்தான் காரணம். பின்னவையே தலையாய முக்கியத்துவம் வாய்ந்தவை. பட்டினி—இதுவேதான் காரணம். பட்டினியை ஒழிக்க விவசாயத்திலும், போக்குவரத்திலும், தொழில் துறையிலும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தியாக வேண்டும். இவ்வாறு நாம் ஒரு நச்சுச் சுழலை அடைகிறோம்: உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த நம்மை நாம் பட்டினியிலிருந்து காப்பாற்றிக் கொண்டாக வேண்டும், பட்டினியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள உழைப்பின் உற்பத்தித் திறனை நாம் உயர்த்தியாக வேண்டும்.

நச்சுச் சுழலை உடைப்பதே இத்தகைய முரண்பாடுகளை நடைமுறையில் தீர்ப்பதற்குரிய வழி என்பதை நாம் அறிவோம். மக்களுடைய மனோபாவத்தில் ஒரு தீவிர மாற்றத்தை உண்டாக்குவதே, இத்தகைய தீவிர மாற்றத்தின் பகைப்புலனில் அடிக்கடி தீர்மானகரமான பங்காற்றிடும் தனிப்பட்ட கோஷ்டிகளின் வீரமிக்க முன்முயற்சியே இதற்குரிய வழி என்பதை அறிவோம். மாஸ்கோவின் தேர்ச்சியற்ற தொழிலாளர்களும் ரயில்வேயில் வேலை செய்வோரும் (இவர்களில் பெரும்பான்மையோரையே மனதில் கொண்டுள்ளோம், மிகவும் சொற்பமான லாப வேட்டைக்காரர்களையும் அதிகாரிகளையும் பிற வெள்ளைப் படைத் தரப்பினரையும் அல்ல வென்பதைக் கூற வேண்டியதில்லை) படுமோசமான மிகக் கடின நிலைமைகளில் வாழும் உழைப்பாளி மக்களாவர். இவர்கள் படுமோசமான கடின நிலைமைகளில் வாழுகிறவர்கள்; எந்நேரமும் போதிய உணவில்லாதவர்கள்; புதிய கண்டுமுதல் கைக்கு வரும் முன்பான இந்நேரத்தில், பொதுவாகவே உணவு

நிலைமை மோசமாயுள்ள இப்பொழுது, மெய்யாகவே பட்டினி கிடப்பவர்கள். ஆயினும் பட்டினி கிடக்கும் இந்தத் தொழிலாளர்கள், முதலாளித்துவ வர்க்கத்தாரும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் நடத்தும் கேடுகெட்ட எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சியால் சூழப்பெற்றுள்ள இவர்கள் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளுக்கு'' ஏற்பாடு செய்கின்றனர்; **சம்பளம் இல்லாமலே** வேலை நேரத்துக்குப் பிற்பாடு வேலை செய்கின்றனர்; உண்ண உணவின்றி ஓய்ந்து போய் வேதனைக்குள்ளாகிப் பலமிழந்த நிலையில் இருப்பினும் **உழைப்பின் உற்பத்தித் திறனில் மிகப் பெரிய அதிகரிப்பை** உண்டாக்கி வருகிறார்கள். அருந்திறல் வீரமல்லவா இது? உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாற்றத்தின் தொடக்கமல்லவா?

புதிய சமுதாய அமைப்பு வெற்றி பெற, இறுதியாய்ப் பார்க்குமிடத்து, உழைப்பின் உற்பத்தித் திறன்தான் மிக முக்கியமானது, தலைமையானது. உழைப்பின் உற்பத்தித் திறனில் பண்ணையடிமை முறை அறியாத உயர் நிலையை முதலாளித்துவம் உண்டாக்கிற்று. உழைப்பின் உற்பத்தித் திறனில் மேலும் மிக உயர்ந்த ஒரு புதிய நிலையை உண்டாக்குவதன் மூலம் சோஷலிசமானது முதலாளித்துவத்தை அடியோடு தோற்கடிக்க முடியும், தோற்கடிக்கவும் போகிறது. இது மிகவும் கடினமான பணி, இதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆனால் **இது துவக்கப்பட்டுவிட்டது**, இதுவே பிரதானமாகும். பட்டினி கிடக்கும் மாஸ்கோவில், பட்டினி கிடக்கும் தொழிலாளர்களால், சோதனை வாய்ந்த நான்கு ஆண்டுக் கால ஏகாதிபத்திய யுத்தத்தையும் பிறகு மேலும் பெருஞ் சோதனையாயிருந்த ஒன்றரை ஆண்டுக் கால உள்நாட்டு யுத்தத்தையும் கடந்து வந்த இத்தொழிலாளர்களால் *1919* கோடையில் இந்த மாபெரும் பணியினைத் துவக்க முடிந்ததெனில், பிற்பாடு நாம் உள்நாட்டு யுத்தத்தில் வாகை சூடி சமாதானம் வென்று கொள்ளும்போது எப்படிப்பட்ட வளர்ச்சி ஏற்படும்?

முன்னேறிய தொழில்நுட்ப முறைகளைக் கையாளும் வர்க்க உணர்வு படைத்த, ஒன்றுபட்ட தொழிலாளர்களின் மனமுவந்த உழைப்பின் உயர்வான—முதலாளித்துவத்தில் நிலவுவதுடன் ஒப்பிடுகையில்—உற்பத்தித் திறனே கம்யூனி

சம். கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள் கம்யூனிசத்தின் மெய்யான தொடக்கமாய் அமைந்து அளவு கடந்த மதிப்புடையனவாகின்றன. இது அரிதினும் அரிய ஒன்று, ஏனெனில் (நமது கட்சி வேலைத்திட்டம் முற்றிலும் சரியானபடி கூறுவது போல) நாம் ''முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய முதல் நடவடிக்கைகளே எடுக்கப் படும்'' கட்டத்தில்தான் இருக்கிறோம்.

சர்வசாதாரணமான தொழிலாளர்கள் கடின உழைப்பைக் கண்டு அஞ்சாமல் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில், ஒவ்வொரு பூடு தானியத்தையும் நிலக்கரியையும் இரும்பையும் பிற பொருள்களையும்—நேரடியாகத் தொழிலாளர்கள் கைக்கோ அவர்களது ''நெருங்கிய'' உற்றூர் உறவினர் கைக்கோ அல்லாமல் ''தொலைவான'' உற்றூர் உறவினர் கைக்கு, அதாவது சமுதாயம் அனைத்தின், முதலில் தனியொரு சோஷலிச அரசிலும் பிறகு சோவியத் குடியரசுகளது ஐக்கியத்திலும் ஒன்றுபட்ட கோடானு கோடியான மக்கள் அனைவரின் கைக்கு உரியனவாகிய இவற்றை—சேதமின்றிக் காப்பதில் ஆர்வமிக்க அக்கறை காட்டுகையில் கம்யூனிசம் தொடங்குகிறது.

சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் பற்றிய ஆடம்பரமான பகட்டு ஆரவாரமான முதலாளித்துவ-ஜனநாயகப் பேருரிமை சாசனத்தைக் கார்ல் மார்க்ஸ் மூலதனத்தில் எள்ளி நகையாடுகிறார். பொதுப்பட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதாய்ப் பேசப்படும் சொல்வீச்சுக்கள் யாவற்றையும் அவர் எள்ளி நகையாடுகிறார். அவக்கேடு வாய்ந்த பெர்ன் அகிலத்தின் அவக்கேடு வாய்ந்த இன்றைய தலைவர்களும் அடங்கலாய் எல்லா நாடுகளின் குட்டிபூர்ஷுவாக்களையும் அற்பவாதிகளையும் இந்தச் சொல்வீச்சுக்கள் மதி மயங்கச் செய்துவிடுகின்றன. இந்த ஆடம்பரமான உரிமைப் பிரகடனங்களுக்கு நேர் மாறுய்ப் பாட்டாளி வர்க்கம் பிரச்சினையை எடுத்துரைக்கும் பகட்டற்ற நிதானமான நடைமுறைச் செயல் சார்ந்த எளிய முறையினை மார்க்ஸ் சுட்டிக்காட்டுகிறார்—வேலை நேரத்தைக் குறைப்பதற்காகச் சட்டம் இயற்றுதல் இத்தகைய செயல் முறைக்குச் சிறந்த தோர் எடுத்துக்காட்டாகும். மார்க்ஸ் எடுத்துரைப்பது

எவ்வளவு பொருத்தமானது, பொருட் செறிவு கொண்டது என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உள்ளடக்கம் கண் கூடாய்த் தெரியத் தெரிய மேலும் மேலும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் விளங்குகிறது. மெய்யான கம்யூனிசத் தின் ''சூத்திரங்கள்'' காவுத்ஸ்கிகளும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் பெர்ன் அகிலத் தைச் சேர்ந்த அவர்களது அருமைச் ''சோதரர்களும்'' கை யாளும் ஆடம்பரமான சிக்கல் வாய்ந்த புனிதச் சொல்லடுக்கு களிலிருந்து வேறுபடுகிறவை, எப்படியெனில் யாவற்றை யும் அவை உழைப்பு நிலைமைகளாய்ச் சுருக்கிக் காட்டுகின் றன. ''உழைப்பு ஜனநாயகம்'', ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'', ''மக்களாலான அரசாங்கம்'' இத்தியாதி வாய்ப் பேச்சுக்கள் எல்லாம் வேண்டாம். வர்க்க உணர்வு படைத்த இன்றைய தொழிலாளர்களும் விவசாயிகளும் முத லாளித்துவ அறிவுத் துறையினரது இந்த ஆடம்பரச் சொல் லடுக்குகளின் அந்தரங்கத்தைக் கண்டுகொண்டுவிடுகிறார்கள். ''தளுக்குப் பேர்வழியின்'' குறை சொல்லமுடியாத ''நேர்த் தியான'' பாவனையையும் அப்பழுக்கில்லாத தோற்றத்தை யும் கண்ட மாத்திரத்திலே சாதாரண பகுத்தறிவும் அனுப வமும் உடையவர் ஒருவர் பிழையற்றவாறு ''மோசடிக்கார னுய்த்தான் இருப்பான்'' என்று எடுத்தயெடுப்பிலே எவ்வ ளவு சுலமாய்ச் சொல்லிவிடுகிறாரோ அதே போலச் சுலபமாய் இவர்கள் இதிலுள்ள சூதைக் கண்டு கொண்டுவிடுகிறார்கள்.

ஆடம்பரச் சொல்லடுக்குகள் குறைய வேண்டும், சர்வ சாதாரணமான அன்றாட வேலையும் ஒவ்வொரு பூடு தானியத் திலும் ஒவ்வொரு பூடு நிலக்கரியிலும் காட்டப்படும் அக் கறையும் ஓங்க வேண்டும்! பட்டினி கிடக்கும் தொழிலாளர் களுக்கும் கந்தல் உடுத்தி வெறுங்காலுடன் நிற்கும் விவசாயி களுக்கும் தேவைப்படும் இந்தப் பூடு தானியத்தையும் பூடு நிலக்கரியையும் அளித்திடுவதில்—பேரம் பேசி அல்ல, முத லாளித்துவ வழியில் அல்ல, மாஸ்கோ-கஸான் ரயில் பாதை யைச் சேர்ந்த தேர்ச்சியில்லா வேலையாட்களையும் ஊழியர் களையும் போன்ற சாதாரண உழைப்பாளர்களின் உணர்வு பூர்வமான, மனமுவந்த, அளவிலா வீரம் வாய்ந்த உழைப்பின் மூலம் அளித்திடுவதில்—அக்கறை ஓங்க வேண்டும்.

புரட்சிப் பிரச்சினைகள் குறித்து முதலாளித்துவ அறிவுத் துறையினர் அனுசரிக்கும் வாய்ச்சவடால் போக்கின் மீத மிச்சங்கள் எங்கும், நம்முடைய அணிகளிலேகூட காணப் படுகின்றன என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். உதாரணமாய் நமது பத்திரிகைகள் அழுகிப் போன முதலாளித்துவ-ஜனநாயகப் பழங் காலத்தின் இந்த அழுகிப் போன மீதமிச்சங்களை எதிர்த்துப் போராட அதிகமாய் எதுவும் செய்யவில்லை. மெய்யான கம்யூனிசத் தின் ஆடம்பரமற்ற எளிய, சர்வசாதாரணமான, ஆனால் உயிர் சக்தி மிக்க குருத்துக்களை வளர்த்திட அவை அதிக மாய் எதுவும் செய்யவில்லை.

பெண்களின் நிலையை எடுத்துக் கொள்வோம். ஆட்சியதி காரத்துக்கு வந்த முதலாவது ஆண்டிலேயே இந்தத் துறை யில் நாம் செய்ததில் நூற்றில் ஒரு பங்கைக்கூட உலகில் எந்த ஜனநாயகக் கட்சியும், மிகவும் முன்னேறிய முதலாளித்துவக் குடியரசிலுங்கூட பல பத்தாண்டுகளிலும் செய்ததில்லை. பெண்களை அசமத்துவ நிலையில் இருத்தும் இழிவான சட்டங் களை, திருமண ரத்துக்கு விலங்குகளிட்டும் அருவருக்கத்தக்க வினைமுறைகளால் அதைச் சுற்றிவளைத்தும், திருமணத்துக்குப் புறம்பாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு அங்கீகாரம் அளிக்க மறுத்தும், அவற்றின் தகப்பன்களைத் தேடிப் பிடிக்கும்படி விதித்தும், இன்ன பலவாறுகவும் இழிவு செய்யும் சட்டங் களை மெய்யாகவே நாம் தகர்த்துத் தரை மட்டமாக்கிஞ்ஞோம். இச்சட்டங்களின் எண்ணற்ற மீதமிச்சங்கள் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் வெட்கக் கேடாய் எல்லா நாகரிக நாடுகளிலும் இருக்கக் காணலாம். இத்துறை யில் நாம் செய்திருப்பவை குறித்துப் பெருமை கொள்ள நமக்கு ஆயிரம் மடங்கு உரிமை உண்டு. பழைய முதலாளித் துவச் சட்டங்கள், ஏற்பாடுகளின் குப்பைக் கூளங்களை எவ் வளவுக்கு எவ்வளவு சுத்தமாய்க் கூட்டிப் பெருக்கி அறவே அகற்றிஞ்ஞோமோ, கட்டியமைப்பதற்காகத் தரையைச் சுத்தம் செய்துள்ளோமே தவிர இன்னும் கட்டியமைத்தாக வில்லை என்பது நமக்கு அவ்வளவுக்கு அவ்வளவு தெளிவாய்த் தெரிகிறது.

பெண் விடுதலைச் சட்டங்கள் யாவும் இருந்த போதி

லும் தொடர்ந்து அவள் **இல்லத்து அடிமையாகவே** வாழ் கிறாள். ஏனெனில் **அற்பத்தனமான வீட்டு வேலைகள்** அவளை நசுக்கி நெரித்து மழுங்க வைத்து இழிவுறச் செய்கின்றன; அடுப்படியுடனும் குழந்தைத் தொட்டிலுடனும் கட்டுண்டு விடச் செய்கின்றன. உற்பத்தித் திறனில் படுகேவலமான கீழ்நிலைக்கு உரிய அற்ப வேலைகளில், உயிரை வதைக்கும், சிந்தனையை மழுங்கச் செய்யும், நசுக்கி ஒடுக்கும் ஓயாத நச் சரிப்பு வேலைகளில் அவள் தன் உழைப்பைப் பாழாக்குகிறாள். இந்த அற்பத்தனமான வீட்டுவேலை நச்சரிப்பை எதிர்த்து (அரசு ஆட்சியதிகாரம் செலுத்தும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில்) எங்கே, எப்பொழுது முழு முனைப்பான போ ராட்டம் தொடங்குகிறதோ, அல்லது இன்னும் சரிவரக் கூறுவோமாயின் பெருவீத சோஷலிசப் பொருளாதாரமாய் அதன் முழு **அளவிலான மாற்றம்** தொடங்குகிறதோ, அங்கே தான், அப்பொழுதுதான் மெய்யான **பெண் விடுதலை**, மெய் யான கம்யூனிசம் தொடங்கும்.

மறுக்க முடியாத ஒன்றாய் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தத்துவார்த்த அளவில் கருதும் இந்தப் பிரச்சினையில் நாம் நடைமுறையில் போதிய கவனம் செலுத்துகிறோமா? இல்ல வே இல்லை. கம்யூனிசத்தின் **குருத்துக்கள்** இத்துறையில் ஏற்கனவே இருப்பவற்றை நாம் வேண்டிய அளவு பேணிக் காக்கிறோமா? **இல்லை** என்றே திரும்பவும் பதிலளிக்க வேண்டி யிருக்கிறது. பொது உண்டி நிலையங்கள், பிள்ளைப் பராமரிப் பகங்கள், குழந்தைப் பள்ளிகள்—இவைதாம் இந்தக் குருத் துக்களுக்கான உதாரணங்கள். ஆடம்பரமோ படாடோப மோ மினுக்கோ எதுவும் இல்லாத எளிய, அன்றாட சாதனங் கள் இவை—**பெண்களை மெய்யாகவே விடுவிக்க** வல்லவை, சமூகப் பொருளுற்பத்தியிலும் பொது வாழ்விலும் பெண்களின் பாத்திரத்தைப் பொறுத்தவரை ஆடவர்களுக்கு அவர்கள் சரிசமத்துவமாய் இல்லாத நிலையை மெய்யாகவே மட்டுப் படுத்தவும் ஒழிக்கவும் வல்லவை. இந்தச் சாதனங்கள் புதிய வை அல்ல, (சோஷலிசத்துக்கான எல்லா முன்தேவைகளை யும் போல) இவையும் பெருவீத முதலாளித்துவத்தால் உண்டாக்கப்பட்டவையே. ஆனால் முதலாளித்துவத்தில் இவை முதலாவதாக, அரிதாகவே இருந்தன; இரண்டாவதாக—

இது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தது—லாபமடிக்கும் நிலையங்களாய், ஊக வாணிபம், லாப வேட்டை, ஏமாற்று, மோசடி ஆகியவற்றின் படுமோசமான எல்லா இயல்புகளும் மிகுந்தவையாகவும், ''முதலாளித்துவக் கொடை வள்ளல் வித்தைகளாகி'' சிறந்த தொழிலாளர்களது நியாயமான வெறுப்புக்கும் இகழ்வுக்கும் உரியனவாகவும் இருந்தன.

நமது நாட்டில் இந்த நிலையங்களின் எண்ணிக்கை வெகு வாய் அதிகரித்திருப்பதிலும், இந்நிலையங்களின் தன்மை மாற்றமுறத் தொடங்கியிருப்பதிலும் சந்தேகமில்லை. தொழிலாளி, விவசாயிப் பெண்களிடம் நாம் உணர்வதற்கும் கூடுதலான அளவில் நிறுவன ஒழுங்கமைப்புத் திறன் இருப்பதிலும், ஏராளமான தொழிலாளர்களது பங்குடனும் இன்னும் ஏராளமான நுகர்வாளர்களது பங்குடனும் நடைமுறைப் பணிக்கு ஏற்பாடு செய்யக்கூடியவர்கள் நாம் அறிந்ததைக் காட்டிலும் மிக அதிகம் பேர் இருப்பதிலும் சந்தேகமில்லை. பெருமையடித்துக் கொள்ளும் நமது ''அறிவுத் துறையினரையோ'' அரை வேக்காட்டுக் ''கம்யூனிஸ்டுகளையோ'' ''பீடித்துக் கொண்டுவிடும்'' அபரிமிதமான வாய்ப்பேச்சும் அமளியும் சச்சரவும் திட்டங்களையும் அமைப்புகளையும் பிறவற்றையும் பற்றிய கூச்சலும் இல்லாமலே, இவர்கள் இப்பணிக்கு ஏற்பாடு செய்யக் கூடியவர்கள். ஆனால் புதியதன் இந்தக் குருத்துக்களை வேண்டிய அளவுக்கு நாம் பேணி வளர்த்திடவில்லை.

முதலாளித்துவ வர்க்கத்தாரைப் பாருங்கள். அவர்களுக்குத் தேவையானதை விளம்பரப்படுத்த எவ்வளவு நன்றாய்த் தெரிந்து வைத்திருக்கிறார்கள்! ''முன்மாதிரி'' நிலையங்களாய் முதலாளிகள் கருதுகிறவற்றை அவர்களுடைய செய்தியேடுகளின் கோடிக் கணக்கான பிரதிகள் எப்படி மெச்சிப் புகழ்கின்றன பாருங்கள்! ''முன்மாதிரி'' முதலாளித்துவ நிலையங்கள் எப்படித் தேசியப் பெருமைக்குரியனவாய் ஆக்கப்படுகின்றன பாருங்கள்! நமது பத்திரிகைகள் சிறந்த உண்டி நிலையங்களையோ பிள்ளைப் பராமரிப்பகங்களையோ விவரித்துக் கூறி, தினசரி வற்புறுத்தலின் மூலம் அவற்றில் சில வற்றை முன்மாதிரிகளாய் மாறச் செய்வதற்காக முயற்சி செய்வதில்லை, அல்லது மிக அரிதாகவே செய்கின்றன. நமது

பத்திரிகைகள் அவற்றைப் போதிய அளவு விளம்பரப்படுத்துவதில்லை, **முன்மாதிரியான கம்யூனிஸ்டுப் பணியால்** எப்படி மனித உழைப்பை மிச்சப்படுத்த முடியும், நுகர்வாளர்களுக்கு வசதிகள் செய்து தர முடியும், பண்டங்களைச் சேமிக்க முடியும், இல்லத்து அடிமை வாழ்விலிருந்து பெண்களை விடுவிக்க முடியும், சுகாதார நிலைமைகளை மேம்படச் செய்ய முடியும், இச்சாதனைகளை சமுதாயம் அனைத்துக்கும் உழைப்பாளி மக்கள் எல்லோருக்கும் விரிந்து பரவச் செய்ய முடியும் என்பதை அவை விளக்கமாய் விவரிப்பதில்லை.

முன்மாதிரியான பொருளுற்பத்தி, முன்மாதிரியான கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள், ஒவ்வொரு பூடு தானியத்தையும் கொள்முதல் செய்வதிலும் வினியோகிப்பதிலும் முன்மாதிரியான கவனம், கடமையுணர்ச்சி, முன்மாதிரியான உண்டி நிலையங்கள், இந்தத் தொகுதியில் இந்தத் தொழிலாளர் வீட்டில் காணக்கூடிய முன்மாதிரியான சுத்தம் முதலானவை யாவற்றிலும் நமது பத்திரிகைகளும் மற்றும் தொழிலாளர்கள், விவசாயிகளின் நிறுவனம் **ஒவ்வொன்றும்** தற்போது செலுத்துவதைக் காட்டிலும் பத்து மடங்கு கூடுதலான கவனமும் கருத்தும் செலுத்த வேண்டும். இவை எல்லாம் கம்யூனிசத்தின் குருத்துக்கள். இவற்றைப் பேணி வளர்த்திடுவது நமக்குரிய பொதுவான, தலையாய கடமை. நமது உணவு நிலைமையும் பொருளுற்பத்தி நிலைமையும் கடினமாகவே இருப்பினும், போல்ஷிவிக் ஆட்சியின் ஒன்றரை ஆண்டில் நிச்சயமாய் நெடுகிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது: தானியக் கொள்முதல் *3* கோடிப் பூடுகளிலிருந்து *(1917* ஆகஸ்டு *1*லிருந்து *1918* ஆகஸ்டு *1* வரை) *10* கோடிப் பூடுகளாய் *(1918* ஆகஸ்டு *1*லிருந்து *1919* மே *1* வரை) உயர்ந்திருக்கிறது; காய்கறிகள் பயிரிடுதல் விரிவடைந்திருக்கிறது; பயிரிடப்படாத நிலப் பரப்பு குறைந்திருக்கிறது; எரிபொருள் இடர்ப்பாடுகள் பெருமளவில் இருந்துங்கூட ரயில் போக்குவரத்து மேம்படத் தொடங்கியிருக்கிறது; மற்றும் பல வற்றையும் குறிப்பிடலாம். இந்தப் பொதுச் சூழலிலும் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தின் ஆதரவிலும் கம்யூனிசத்தின் குருத்துக்கள் காய்ந்து கருகிவிட மாட்டா, அவை வளர்ந்து முழுநிறைக் கம்யூனிசமாய் மலரும்.

* * *

கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளின் முக்கியத்துவத்தில் நாம் மிகப் பெரிய அளவில் கருத்து செலுத்தியாக வேண்டும், அப்பொழுதுதான் நாம் இந்த மாபெரும் தொடக்கத்திலிருந்து எழும் மிக முக்கிய நடைமுறைப் படிப்பினைகள் யாவற்றையும் பெற முடியும்.

முதலாவதும் முதன்மையானதுமான படிப்பினை என்னவென்றால் இந்தத் தொடக்கத்துக்கு எல்லா வழிகளிலும் உதவி புரிய வேண்டும். ''கம்யூன்'' என்னும் சொல் மிகவும் தாராளமாய்க் கையாளப்பட்டு வருகிறது. கம்யூனிஸ்டுகளால் துவக்கப்படும் அல்லது அவர்களுடைய பங்குடன் துவக்கப்படும் எந்த வகையான நிலையமும் உடனே ''கம்யூன்'' என்பதாய்ப் பறைசாற்றப்படுவது சகஜமாகிவிட்டது. இது விடாப்பிடியான நீண்ட நெடிய உழைப்பால், கம்யூனிச நிர்மாணத்தில் மெய்யான நடைமுறை சாதனை காண்பதால் பெற வேண்டிய மாண்பு மிக்க பட்டம் என்பது அடிக்கடி மறக்கப்பட்டுவிடுகிறது.

எனவேதான் மக்கள் கமிசார் அவையின் அரசாணையை ''நுகர்வாளர் கம்யூன்கள்''[68] என்கிற பெயரைப் பொறுத்தமட்டில் ரத்து செய்வதென்ற தீர்மானம் மத்தியச் செயற்குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோரின் மனத்தில் உருவாகி முற்றியதானது என்னுடைய அபிப்பிராயத்தில் முற்றிலும் நியாயமே. பெயர் எளியதாகவே இருக்கட்டும்—புதிய, ஒழுங்கமைப்புப் பணியின் துவக்கக் கட்டங்களில் காணக்கூடிய தவறுகளுக்கும் குறைபாடுகளுக்குமான பழி ''கம்யூன்கள்'' மீது சுமத்தப்படாமல், (நியாயமாய்ச் செய்யப்பட வேண்டியது போல) மோசமான கம்யூனிஸ்டுகள் மீதே சுமத்தப்படும் அல்லவா? ''கம்யூன்'' என்னும் சொல்லை பொதுப் பிரயோகத்திலிருந்து விலக்கி, நினைத்தவர் எல்லாம் இதை எடுத்தாளாதபடித் தடை செய்வது நல்லதுதான். தமது பணியைக் கம்யூனிஸ்டுக்குரிய பாணியில் ஒழுங்கமைத்துக் கொள்ளத்தக்கவை என்பதை நடைமுறையில் மெய்ப்பித்தும் (சுற்றிலுமுள்ள மக்கள் அனைவரின் ஒருமனதான அங்கீகாரத்தின் மூலம் நிரூபித்தும்) காட்டியுள்ள மெய்யான கம்யூன்கள் மட்டுமே இந்தப் பெயரைச் சூட்டிக்கொள்ள

அனுமதிக்கப்பட வேண்டும். சமுதாயத்தின் நலன்களுக் காக, உழைப்பாளி மக்கள் அனைவரின் நலன்களுக்காக ஊதிய மின்றி உழைக்கக் கூடியவர் என்பதை முதலில் நிரூபித்துக் காட்டுங்கள், ''புரட்சிகர முறையில் வேலை செய்யக்'' கூடி யவர்தான், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் முன் மாதிரியான முறையில் வேலையை ஒழுங்கமைக்கவும் கூடிய வர்தான் என்பதை நிரூபித்துக் காட்டுங்கள், பிறகு ''கம் யூன்'' என்ற மாண்புமிக்க பெயரைப் பெற முன்வாருங்கள்!

இந்த விவகாரத்தில் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' மிகவும் உயர் மதிப்புக்குரிய விதிவிலக்கானவை. எப்படி யெனில் மாஸ்கோ-கஸான் ரயில்பாதையின் தோர்ச்சியில்லா வேலையாட்களும் ஊழியர்களும் தாம் **கம்யூனிஸ்டுகள்** போல் வேலை செய்யக் கூடியவர்கள் என்பதைச் **செயல்களின் வாயி லாய்** முதலில் நிரூபித்துக் காட்டிவிட்டு, பிறகு தமது முன் முயற்சிக்குக் ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' என்று பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குரிய தகுதி உண்டென் பதைக் கடினமான உழைப்பாலும், **நீடித்த செயற்பாட்டில்** பெறும் நடைமுறை **வெற்றியாலும்**, முன்மாதிரியான மெய் யான கம்யூனிஸ்டு ஒழுங்கமைப்பாலும் **நிரூபித்துக் காட்டாதவர்** எவரும், இனி தமது நிலையம் அல்லது அலுவலகம் அல்லது ஏற்பாட்டிற்குக் கம்யூன் என்று பெயரிட்டுக் கொள்வா ராயின் அவர் ஈவிரக்கமின்றி ஏளனம் செய்யப்பட்டு மோ சடிக்காரர் அல்லது வாய்ச்சவடால்காரரென நிந்திக்கப்படும் படி நாம் விழிப்புடன் இருந்து உறுதி செய்தாக வேண்டும்.

மாபெரும் தொடக்கமான ''கம்யூனிஸ்டு சுபோத் னிக்குகளை'' மற்றொரு காரியத்துக்காகவும், அதாவது தகா **தோரை நீக்கிக் கட்சியைத் தூய்மையாக்குவதற்காகவும்** பயன் படுத்திக் கொள்ள வேண்டும். புரட்சியை அடுத்து ஆரம்பக் காலத்தில், ''நேர்மையான'' குட்டிபூர்ஷுவா மனப்பாங்கி னர் மிகவும் சந்தேகங் கொண்டிருந்த போது, முதலாளித் துவ அறிவுத்துறையினர்—மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் அடங்கலாய்த்தான்—ஒருவர் பாக்கியில்லாமல் முதலாளித்துவ வர்க்கத்தாரின் அடிவருடி களாய்ச் செயல்பட்டு சீர்குலைவு வேலைகள் புரிந்தபோது, சாகசக்காரர்களும் ஏனைய தீயவர்களும் ஆளும் கட்சியுடன்

ஒட்டிக் கொண்டு விட்டனர். இது சிறிதும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியே. இது நடைபெறுத ஒரு புரட்சி என்றுமே இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. ஆளும் கட்சியானது வன்மையும் திண்மையும் வாய்ந்த முன்னேறிய வர்க்கத்தை ஆதாரமாய்க் கொண்டு தனது அணிகளிலிருந்து தகாதோரை நீக்கித் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் ஆற்றலுடையதாய் இருக்க வேண்டும்.

இந்தப் பணியை நாம் நெடுநாட்களுக்கு முன்பே தொடங்கிஞேம். இது முறையாகவும் அயராமலும் தொடர்ந்து நடைபெற வேண்டும். யுத்தத்துக்காகக் கம்யூனிஸ்டுகள் படை திரட்டப்பட்டதானது இத்துறையில் நமக்கு உதவியாய் இருந்தது: கட்சி அணிகளிலிருந்து கோழைகளும் கயவர்களும் ஓட்டம் பிடித்தனர். இவர்கள் ஒழிந்தது நல்லதுதான்! கட்சி உறுப்பினர் தொகை **இவ்வாறு** குறைவதானது கட்சியின் வலிமையிலும் செல்வாக்கிலும் **பிரம்மாண்ட அதிகரிப்பைக்** குறிக்கிறது. தகாதோரைக் கழித்தொழிக்கும் வேலையை நாம் தொடர்ந்து நடத்திச் செல்ல வேண்டும். புதிய தொடக்கமான ''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளை'' இதற்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்:''புரட்சிகர வழியில் வேலை செய்வதில்'' சில காலம், உதாரணமாய் ஆறு மாதக் காலம், ''சோதிக்கப்பட்ட'' அல்லது ''பரீட்சிக்கப்பட்ட'' பிறகே எவரும் கட்சியினுள் ஏற்கப்பட வேண்டும். 1917 அக்டோபர் 25க்குப் பிற்பாடு சேர்ந்து கொண்டோரும், முற்றிலும் தாம் நம்பத்தக்கவரே, பற்றுறுதி வாய்ந்தோரே, கம்யூனிஸ்டுகளாய் இருக்கத் தகுதியுடையோரே என்று விசேஷ வேலை அல்லது சேவையின் மூலம் நிரூபித்துக் காட்டாதோருமான கட்சி உறுப்பினர்கள் **எல்லோரும்** இது போன்ற சோதனைக்கு உள்ளாக வேண்டுமென்று கோர வேண்டும்.

மெய்யான கம்யூனிஸ்டு வழியில் வேலை செய்வது குறித்து கட்சி இடையறுது மேலும் மேலும் **கூடுதலாய்க் கண்டிப்பான கோரிக்கைகளை** வைப்பதன் மூலம் தகாதோரைக் கழித்துச் செல்லுமாயின் அரசு **இயந்திரம்** மேம்பாடுற்றுச் செம்மையாகும்; விவசாயிகள் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் பக்கத்துக்கு **முடிவாய் மாறிவிடும்** காலம் மிகவும் நெருங்கி வந்துவிடும்.

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்'' பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் அரசு இயந்திரத்தின் வர்க்க இயல்பை எடுப்பாய்த் தெரியச் செய்வதை இங்கு குறிப்பிடலாம். ''புரட்சிகர வழியில் செயலாற்றுவது'' குறித்து கட்சியின் மத்தியக் கமிட்டி ஒரு கடிதம் தயாரித்தது. 1,00,000லிருந்து 2,00,000 வரையிலான உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் மத்தியக் கமிட்டி ஒரு கருத்தை முன்வைக்கிறது (தகாதோரைப் பூரணமாய்க் கழித்தபின் எஞ்சும் எண்ணிக்கை இதுவாகவே இருக்குமெனக் கொள்கிறேன்; தற்போது உறுப்பினர் தொகை அதிகமாகும்).

தொழிற் சங்கங்களில் ஒன்றுதிரண்டுள்ள தொழிலாளர்கள் இந்தக் கருத்தைப் பற்றிக் கொள்கிறார்கள். ருஷ்யாவிலும் உக்ரேனியாவிலும் இவர்களுடைய எண்ணிக்கை சுமார் நாற்பது லட்சமாகும். இவர்களில் மிகப் பெரும்பான்மையோர் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஆதரிப்பவர்கள். இரண்டு லட்சமும் நாற்பது லட்சமும், ''பற்சக்கரங்களுக்கு''—இப்படிக் கூறலாமெனில்—இடையிலுள்ள விகிதம் இவ்வாறு இருக்கிறது. பிறகு **கோடானு கோடியான** விவசாயிகள் உள்ளனர். இவர்கள் மூன்று பிரதான பகுதிகளாய்ப் பிரிந்திருக்கிறார்கள்: எண்ணிக்கையில் மிகுதியானதும் பாட்டாளி வர்க்கத்துக்கு மிக நெருங்கியதுமான பகுதி, அரைப் பாட்டாளி வர்க்கத்தினர் அல்லது ஏழை விவசாயிகளின் பகுதி; பிறகு நடுத்தர விவசாயிகளின் பகுதி; முடிவில் எண்ணிக்கையில் மிகச் சொற்பமான குலாக்குகள் அல்லது கிராமப்புற முதலாளித்துவ வர்க்கத்தவரின் பகுதி.

தானிய வியாபாரம் புரிந்து பஞ்சத்திலிருந்து லாபம் பெறுவது சாத்தியமாயிருக்கும் வரை விவசாயி பாதி உழைப்பாளியாகவும் பாதி லாப வேட்டைக்காரனாகவும்தான் இருப்பான் (பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் சில காலத்துக்கு இது தவிர்க்க முடியாததே). லாப வேட்டைக்காரன் என்ற முறையில் விவசாயி நமக்குப் பகைமையாய், பாட்டாளிவர்க்க அரசுக்குப் பகைமையாய் இருக்கிறான்; முதலாளித்துவ வர்க்கத்தாருடனும் அவர்களது விசுவாசமான அடிவருடிகளுடனும் — தானியத்தில் வர்த்தகச் சுதந்திரம்

வேண்டுமெனக் கோரும் மென்ஷிவிக் ஷேரும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் பி. செர்னென்கோவும் அடங்கலானோருடனும்—உடன்பாடு கொள்ள விரும்புகிறான். ஆனால் உழைப்பாளி என்ற முறையில் விவசாயி பாட்டாளி வர்க்க அரசின் நண்பன், நிலப்பிரபுவுக்கும் முதலாளிக்கும் எதிரான போராட்டத்தில் தொழிலாளியின் மிகவும் விசுவாசமான கூட்டாளி. உழைப்பாளர்கள் என்ற முறையில் பெருந் திரளான விவசாயிகள், கோடானுகோடியான விவசாயிகள் இந்த அரசு ''இயந்திரத்தை''—பாட்டாளி வர்க்க முன்னணிப் படையின் ஒன்று அல்லது இரண்டு லட்சம் கம்யூனிஸ்டுகளால் தலைமை தாங்கப்பட்டதும், நிறுவன ஒழுங்கமைப்பு கொண்ட பத்து லட்சக் கணக்கான பாட்டாளி வர்க்கத்தாராலானதும் ஆகிய இந்த அரசு ''இயந்திரத்தை''—ஆதரிக்கின்றனர்.

இதைக் காட்டிலும் ஜனநாயகத் தன்மையதான — இச் சொல்லின் மெய்ப் பொருளில்—ஓர் அரசு, உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்கள் திரளுடன் இதைக் காட்டிலும் நெருக்கமாய் இணைந்த ஓர் அரசு இதன்முன் எந்நாளும் இருந்ததில்லை.

''கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகளில்'' செய்யப்படுவதைப் போன்ற இந்தப் பாட்டாளி வர்க்கத் தன்மையதான பணிதான் பாட்டாளி வர்க்க அரசுக்கு விவசாயிகளுடைய நன்மதிப்பையும் பாசத்தையும் முழு அளவில் பெற்றுத் தரப் போகிறது. இத்தகைய பணியேதான், இது மட்டுமேதான், நமது கட்சியே சரி, கம்யூனிசம்தான் சரி என்கிற உறுதியான முழு நம்பிக்கையை விவசாயிகளுக்கு உண்டாக்கி அவர்களை நமது பற்றுறுதி மிக்க கூட்டாளிகளாக்கப் போகிறது; இவ்வழியில் உணவுத் தட்டுப்பாடு அறவே ஒழிவதற்கும், தானிய உற்பத்தியிலும் வினியோகத்திலும் முதலாளித்துவத்தின் மீது கம்யூனிசம் முழு வெற்றி பெறுவதற்கும், கம்யூனிசம் தங்கு தடையின்றி உறுதியடைவதற்கும் வழி செய்யப் போகிறது.

1919 ஜூன் 28ல்

1919 ஜூலையில்
மாஸ்கோ ''அரசாங்கப் பதிப்பகத்''
தின் தனிப் பிரசுரமாய் வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி *39*,
பக்கங்கள் *1-29*

இளைஞர் கழகங்களின் பணிகள்

ருஷ்யாவின் இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் மூன்றுவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு 1920, அக்டோபர் 2

(லெனினை வரவேற்றுக் காங்கிரசில் பேராரவ முழக்கம் கிளர்ந்தெழுகிறது). தோழர்களே, இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் அடிப்படை பணிகள் குறித்தும், இதையொட்டி சோஷலிசக் குடியரசு ஒன்றில் இளைஞர் நிறுவனங்கள் பொதுவில் எப்படிப்பட்ட வையாய் இருக்க வேண்டும் என்பது குறித்தும் இன்று நான் பேச விரும்புகிறேன்.

இப்பிரச்சினை குறித்துப் பேசவேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில் கம்யூனிச சமுதாயத்தை உண்மை யில் தோற்றுவிக்கும் பணியை எதிர்நோக்கப் போகிறவர்கள் இளைஞர்களே என்பதாய் ஒரு வகையில் கூறலாம். எப்படி யெனில், முதலாளித்துவ சமுதாயத்தில் வளர்ந்து ஆளான உழைப்பாளி மக்கள் தலைமுறையினர் அதிகம் செய்யக் கூடியதெல்லாம், சுரண்டலின் அடிப்படையில் நிறுவப்பட்ட பழைய, முதலாளித்துவ வாழ்க்கை முறையின் அடித்தளங் களை அழித்திடும் பணியை நிறைவேற்றுவதுதான் என்பது தெளிவு. இவர்கள் அதிகம் போனால், பாட்டாளி வர்க்கமும் உழைப்பாளி வர்க்கங்களும் ஆட்சியதிகாரத்தை இழக்கா மல் இருத்திக் கொள்ளத் துணை புரியும் ஒரு சமுதாய அமைப் பைத் தோற்றுவித்து உறுதியான அடித்தளத்தை அமைத்திடு வதற்குரிய பணிகளை நிறைவேற்றலாம். புதிய நிலைமை களில், மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையிலான

உறவுகள் இல்லாமற் போய்விடும் சூழ்நிலையில், வேலை செய்யத் தொடங்கும் ஒரு தலைமுறையினர்தான் இந்த அடித்தளத்தின்மீது கட்டியெழுப்பக் கூடியவர்கள்.

ஆக, இளைஞர்கள் முன்னுள்ள பணிகளை இந்தக் கோணத்திலிருந்து பரிசீலிக்கையில், பொதுவில் இளைஞர்களுக்கும், குறிப்பாய் இளங் கம்யூனிஸ்டுக் கழகங்களுக்கும் ஏனைய எல்லா நிறுவனங்களுக்குமுள்ள பணிகளைப் பின்வரும் ஒரே சொல்லில் சுருக்கமாய்த் தொகுத்துரைத்துவிடலாம் என்பதை நாம் குறிப்பிட வேண்டும்: கற்றறியுங்கள்.

''ஒரேயொரு சொல்தான்'' அது. எதைக் கற்றறிவது, எப்படிக் கற்றறிவது என்கிற தலைமையான, அத்தியாவசியமான கேள்விகளுக்கு இச்சொல் பதில் தரவில்லை. பழைய, முதலாளித்துவ சமுதாயம் மாற்றப்படுகிறபடியால், புதிய தலைமுறைகளை, கம்யூனிச சமுதாயத்தைத் தோற்றுவிக்கப் போகிற இந்தப் புதிய தலைமுறைகளை வளர்த்து ஆளாக்குவதும் பயிற்றுவிப்பதும் அவற்றுக்குக் கல்வி போதமளிப்பதும் பழைய வழிகளில் நடந்தேற முடியாது என்பதே இங்குள்ள பிரதான விவகாரம். இளைஞர்களுக்கான பயிற்சியும் போதனையும் கல்வியும் பழைய சமுதாயம் நமக்கு விட்டுச் சென்றுள்ளவற்றில் இருந்தே தொடங்கியாக வேண்டும். பழைய சமுதாயம் நமக்கு விட்டுச் சென்றுள்ள அறிவு, நிறுவன அமைப்புகள், நிலையங்கள் இவற்றின் முழுமொத்தத்தையும் அடிப்படையாய்க் கொண்டுதான், இந்த மானுட சக்திகள், சாதனங்கள் ஆகியவற்றின் கையிருப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம்தான் நாம் கம்யூனிசத்தைக் கட்டியமைக்க முடியும். இளைஞர்களுக்கான பயிற்சியையும் போதனையையும் ஒழுங்கமைப்பையும் தீவிர முறையில் திருத்தியமைத்தால்தான் .இளந் தலைமுறையினரது முயற்சிகளின் பயனுய்ப் பழைய சமுதாயத்தைப் போன்றதல்லாத ஒரு சமுதாயம் தோற்றுவிக்கப்படும்படி, அதாவது ஒரு கம்யூனிச சமுதாயம் தோற்றுவிக்கப்படும்படி நாம் உத்தரவாதம் செய்து கொள்ள முடியும். ஆகவே இளைஞர்களுக்கு நாம் போதிக்க வேண்டியது என்ன, இளைஞர்கள் கம்யூனிஸ்டு இளைஞர்கள் என்னும் பெயருக்கு உரித்தோராகும் தகுதி பெற மெய்யாகவே விரும்பினால், அவர்கள் கற்றறிந்து கொள்ள வேண்டி

யது என்ன, நாம் துவக்கியிருக்கும் பணியை நிறைவுறச் செய்து சித்தி பெற வைக்கக் கூடியவர்களாகும் பொருட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது எப்படி என்கிற பிரச்சினை குறித்து நாம் விவரமாய்ப் பரிசீலிக்க வேண்டும்.

இளைஞர் கழகமும் பொதுவில் கம்யூனிசத்துக்கு முன்னேறிச் செல்ல விரும்பும் இளைஞர்கள் அனைவரும் கம்யூனிசத்தைக் கற்றறிந்தாக வேண்டும் என்பதே முதலாவதும் மிகவும் இயற்கையானதுமான பதிலாய்த் தோன்றுகிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆனால் ''கம்யூனிசத்தைக் கற்றறிவீர்'' என்னும் இந்தப் பதில் மிக மிகப் பொதுப்படையானது. கம்யூனிசத்தைக் கற்றறிந்து கொள்ள நமக்கு வேண்டியது என்ன? கம்யூனிசத்தைப்பற்றிய அறிவைப் பெறப் பொதுவான அறிவின் தொகுப்பிலிருந்து தனியே பிரித்து ஒதுக்கப்பட வேண்டியது எது? இங்கே பல அபாயங்கள் எழுகின்றன. கம்யூனிசத்தைக் கற்றறியும் பணி தவறான முறையில் எடுத்துரைக்கப்படும் போது, அல்லது அளவு மீறி ஒருச்சார்பான முறையில் அர்த்தப்படுத்தப்படும்போது இந்த அபாயங்கள் அடிக்கடி எழுகின்றன.

கம்யூனிஸ்டுப் பாடப்புத்தகங்களிலும் பிரசுரங்களிலும் நூல்களிலும் அடங்கியுள்ள ஒட்டுமொத்த அறிவைக் கிரகித்துக் கொள்வதே கம்யூனிசத்தைக் கற்றறிவதாகும் என்பதே இயல்பாய் ஒருவர் மனதில் முதலில் தோன்றும் எண்ணம். ஆனால் கம்யூனிசத்தைப் பயிலுதல் என்பதற்கு இவ்விதம் இலக்கணம் கூறுவதானது மிதமிஞ்சிக் கொச்சைப்படுத்துவதும் குறைப்படுத்துவதுமாகவே இருக்கும். கம்யூனிஸ்டுப் புத்தகங்களிலும் பிரசுரங்களிலும் இருப்பதைக் கிரகிப்பதே கம்யூனிசம் பயிலுதலாய் இருப்பின், கம்யூனிஸ்டு வாசகம் பேசி வித்தை காட்டுவோரை, அல்லது வாய்ச் சவடால்காரர்களை எளிதில் நாம் நிறைய பெற்றுக்கொண்டு விடலாம். பல சந்தர்ப்பங்களிலும் இதனால் நமக்குத் தீங்கே ஏற்படும். ஏனெனில் இத்தகையோர் கம்யூனிஸ்டுப் புத்தகங்களிலும் பிரசுரங்களிலும் எடுத்துரைக்கப்படுவதைப் படித்துத் தெரிந்து கொண்டபின் பல்வேறு அறிவுத் துறைகளைச் சேர்த்து இணைத்திடும் திறனற்றோராகவே இருப்பர்;

கம்யூனிசத்துக்கு உண்மையில் அவசியமாயுள்ள முறையில் இவர்களால் செயல்பட முடியாது.

புத்தகங்களுக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் இடையிலான அதலபாதாள வேறுபாடு பழைய, முதலாளித்துவ சமுதாயம் நமக்கு விட்டுச் சென்றுள்ள பெருங் கேடுகளிலும் இன்னல்களிலும் ஒன்றாகும். யாவற்றையும் சிறந்த முறையில் விளக்கும் புத்தகங்கள் நம்மிடம் இருந்துள்ளன. ஆயினும் பெரும்பாலும் கபடத்தனமான கேடுகெட்ட பொய்யுரைகளும் முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய பொய்க் கூற்றுகளும்தான் இப்புத்தகங்களின் உள்ளடக்கம்.

எனவே கம்யூனிசத்தைப் பற்றிய ஏட்டு அறிவைக் கிரகித்துக் கொள்வதுடன் நின்றுவிடுவது மிகப் பெரும் தவறாகும். கம்யூனிசத்தைப் பற்றி வழக்கமாய்க் கூறப்பட்டு வந்ததைத் திரும்பவும் வலியுறுத்துவதுடன் இப்பொழுதெல்லாம் நமது பேச்சுக்களும் கட்டுரைகளும் நின்றுவிடுவதில்லை. ஏனென்றால் நமது பேச்சுக்களும் கட்டுரைகளும் எல்லாத் துறைகளிலும் நமது அன்றாட வேலைகளுடன் இணைந்திருக்கின்றன. வேலையில் ஈடுபடாமல், போராட்டம் இல்லாமல் கம்யூனிஸ்டுப் பிரசுரங்களிலிருந்தும் நூல்களிலிருந்தும் கம்யூனிசம் குறித்துப் பெறப்பட்ட ஏட்டு அறிவு சிறிதும் பயனற்றதாகும். ஏனெனில் அது தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இருந்த பழைய பிளவையும் பழைய முதலாளித்துவ சமுதாயத்தின் கேடுகெட்ட இயல்பான அந்தப் பழைய வேறுபாட்டையும் தொடர்ந்து நீடிக்கவே செய்யும்.

கம்யூனிஸ்டுக் கோஷங்களை மட்டும் கிரகித்துக் கொள்ள முற்படுவதானது இன்னுங்கூட அபாயம் விளைவிப்பதாய் இருக்கும். இந்த அபாயத்தை நாம் தக்க காலத்தில் உணராமலும், இந்த அபாயத்தைத் தவிர்ப்பதில் நமது முயற்சிகள் அனைத்தையும் ஈடுபடுத்தாமலும் இருந்திருப்போமாயின், இவ்வழியில் கம்யூனிசத்தைக் கற்றறிந்து கொண்டு தம்மைக் கம்யூனிஸ்டுகளென அழைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஐந்து அல்லது பத்து லட்சம் இளைஞர்களும் யுவதிகளும் கம்யூனிச இலட்சியத்துக்குப் பெருந் தீங்கே இழைத்திருப்பார்கள்.

கம்யூனிசத்தைக் கற்றறிய இவை யாவற்றையும்

இணைத்துப் பொருத்துவது எப்படி? என்ற கேள்வி எழுகிறது. பழைய கல்வி முறையிலிருந்து, பழைய வகை விஞ்ஞானத்திடமிருந்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டியவை எவை? சர்வாம்சக் கல்விப் போதமுடையோரை உருவாக்குவதே, பொதுவில் விஞ்ஞானங்களைப் போதிப்பதே பழைய ரகக் கல்வி முறையின் குறிக்கோள் என்பதாய் அறிவிக்கப்பட்டு வந்தது. அது முழுக்க முழுக்கப் பொய் என்பதை நாம் அறிவோம். ஏனெனில் மக்கள் வர்க்கங்களாய், சுரண்டப்படுவோரும் சுரண்டுவோருமாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதன் அடிப்படையிலே சமுதாயம் அனைத்தும் அமைந்து இந்தப் பிரிவினையால் பராமரிக்கப்பட்டு வந்தது. பழைய கல்வி முறை முழுக்க முழுக்க இந்த வர்க்க மனப்பான்மையில் ஊறியிருந்ததால் இயற்கையாகவே அது முதலாளித்துவ வர்க்கத்தின் குழந்தைகளுக்கு மட்டுமே அறிவு போதித்தது. முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்றபடி ஒவ்வொரு சொல்லும் பொய்யாய்த் திரிக்கப்பட்டது. இந்தக் கல்வி முறையில் தொழிலாளர்கள், விவசாயிகளது இளந் தலைமுறையினர் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்ப குருட்டுப்பாடப் பயிற்சி அளிக்கப்பட்டனரே தவிர கல்வி அளிக்கப்பட்டதாய்க் கூற முடியாது. முதலாளித்துவ வர்க்கத்தின் சேவகர்களாய்ப் பணிவிடை புரியத்தக்க வழியில், அவ்வர்க்கம் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்குக் குந்தகமில்லாமல் அதற்கு லாபங்கள் கிடைக்கச் செய்யக்கூடிய வழியில் அவர்களுக்குப் பயிற்சி தரப்பட்டது. எனவேதான் நாம் பழைய ரகக் கல்வி முறையை நிராகரித்துவிட்டு, மெய்யான கம்யூனிசக் கல்விக்கு நமக்குத் தேவையானவற்றை மட்டும் அதனிடமிருந்து எடுத்துக் கொள்வதையே நமது பணியாய்க் கொண்டிருக்கிறோம்.

பழைய கல்வி முறைமீது தொடுக்கப்படும் கண்டனங்களுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் இது என்னை அழைத்து வருகிறது. இவற்றை நாம் ஓயாது கேட்டுவருகிறோம். பெரும்பாலும் இவை முற்றிலும் தவறான முடிவுகளுக்கே இட்டுச் செல்கின்றன. பழைய கல்வி முறை வெறும் ஏட்டு அறிவுக்கும் ஓயாத குருட்டுப் பாடப் பயிற்சிக்கும் பொட்டநெட்டுருக்குமான கல்விக்கூடமாகவே இருந்ததென்று கூறப்

படுகிறது. இது மெய்தான். ஆனால் பழைய கல்வி முறையில் காணக் கூடிய மோசமான இயல்புகளையும் நமக்குப் பயன் படத்தக்கனவற்றையும் நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். கம்யூனிசத்துக்கு அவசியமானவற்றை அதனிட மிருந்து தெரிந்தெடுத்துக் கொள்ளக் கூடியோராய் இருத்தல் வேண்டும்.

பழைய கல்வி முறை வெறும் ஏட்டு அறிவையே புகட்டி யது. பயனற்ற, வேண்டாத, வறட்டுத்தனமான அறிவைப் பெருமளவில் கிரகித்துக் கொள்ளும்படி மாணவர்களைப் பல வந்தம் செய்தது. இந்த அறிவு குப்பையாய் மூளையில் அடைந்து, ஒரே அச்சில் வார்க்கப்பட்ட அதிகாரிகளாய் இளந் தலைமுறையினரை மாற்றியது. ஆனால் மனித குலம் சேகரித்திருக்கும் அறிவுச் செல்வத்தைக் கிரகித்துக் கொள் ளாமலே ஒருவர் கம்யூனிஸ்டாகி விடலாம் என்பதாய் இதி லிருந்து நீங்கள் முடிவுக்கு வர முயன்றால் அது மிகக் கடும் பிழையே ஆகும். அறிவின் ஒட்டுமொத்தத்திலிருந்து விளைந்த பயனே கம்யூனிசம். இந்த ஒட்டுமொத்த அறிவைப் பெருமளவே கம்யூனிசக் கோஷங்களையும் கம்யூனிச விஞ்ஞானத் தின் முடிவுகளையும் கற்றறிந்து கொண்டால் போதுமென நினைப்பது தவறாகும். மார்க்சியமானது மனித அறிவின் ஒட்டுமொத்தத்திலிருந்து எப்படிக் கம்யூனிசம் தோன்றி யது என்பதைக் காட்டும் ஓர் உதாரணமாகும்.

கம்யூனிசத் தத்துவம்—பிரதானமாய் மார்க்ஸ் படைத் தளித்த கம்யூனிச விஞ்ஞானம், மார்க்சியம் எனும் இந்தப் போதனை—பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தனி யொரு சோஷலிஸ்டின்—அவர் ஒரு மாமேதையே என்றா லுங்கூட—படைப்பாய் இருந்த நிலை முடிவுற்றுவிட்டது என்பதையும், அது உலகெங்குமுள்ள லட்சோப லட்சக் கணக்கான, கோடானு கோடியான பாட்டாளி வர்க்கத்தா ரின் தத்துவமாகிவிட்டது, முதலாளித்துவத்துக்கு எதிரான தமது போராட்டத்தில் அவர்கள் இதைச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதையும் நீங்கள் படித்தும் கேட்டும் இருக்கிறீர்கள். மார்க்சின் போதனை மிகவும் புரட்சிகரமான வர்க்கத்தைச் சேர்ந்த லட்சக் கணக்கானோரின், கோடிக் கணக்கானோரின் உள்ளத்தையும் சிந்தனையையும் கவர்ந்

திழுக்க முடிந்தது எப்படி என்று நீங்கள் கேட்பீர்களானால், உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பதில் ஒன்றே ஒன்றுதான்: முதலாளித்துவத்தில் கிடைக்கப் பெற்ற மனிதகுல அறிவெனும் உறுதியான அடித்தளத்தை மார்க்ஸ் தமது படைப்புக்கு ஆதாரமாக்கிக் கொண்டதால்தான் என்பதே அந்தப் பதில். மனித சமுதாயத்தின் வளர்ச்சியை ஆளும் விதிகளை ஆராய்ந்து அறிந்து, முதலாளித்துவமானது கம்யூனிசத்தை நோக்கி வளர்வது தவிர்க்க முடியாததாகும் என்பதை மார்க்ஸ் உணர்ந்து கொண்டார். மிகவும் முக்கியமானது என்னவென்றால் இந்த முதலாளித்துவ சமுதாயத்தை மிகவும் துல்லியமாகவும் விவரமாகவும் ஆழ்ந்த முறையிலும் ஆராய்வதெனும் ஒரே அடிப்படையில் அவர் இதை நிரூபித்தார், முந்திய விஞ்ஞானம் தோற்றுவித்தது அனைத்தையும் பூரணமாய்க் கிரகித்துக் கொள்வதன் மூலம் அவர் இதைச் செய்தார். மனித சமுதாயம் தோற்றுவித்தவை யாவற்றையும், ஒரு சிறு விவரத்தையும் கவனியாது விடாமல், விமர்சனக் கண்கொண்டு பரிசீலித்தியமைத்தார். மனித சிந்தனை தோற்றுவித்திருந்தவை யாவற்றையும் அவர் மறு பரிசீலனை செய்தார், விமர்சனத்துக்கு உட்படுத்தினார், தொழிலாளி வர்க்க இயக்கத்தைக் கொண்டு சரிபார்த்தார். முதலாளித்துவ வரம்புகளால் கட்டுப்படுத்தப்பட்டோரால், அல்லது முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் கட்டுண்டோரால் வந்தடைய முடியாத முடிவுகளை இவ்வழியில் வந்தடைந்து அவர் வரையறுத்துக் கொடுத்தார்.

உதாரணமாய், பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்துப் பேசுகையில் இதை நாம் மனதில் கொண்டிருப்பது அவசியம். மனித குலத்தின் வளர்ச்சி அனைத்தின் விளைவாகவும் தோற்றுவிக்கப்பட்ட கலாசாரத்தைப் பற்றிய துல்லியமான அறிவைக் கொண்டும் இந்தக் கலாசாரத்தை மாற்றியமைப்பதன் மூலமும்தான் நாம் பாட்டாளி வர்க்கக் கலாசாரத்தைத் தோற்றுவிக்க முடியும் என்பதைத் தெளிவாய் உணர்ந்தால் ஒழிய இப்பிரச்சினைக்கு நம்மால் தீர்வு காண இயலாது. பாட்டாளி வர்க்கக் கலாசாரம் மாயமாய்க் காற்றிலிருந்து தயாரிக்கப்பட்டுவிடக் கூடியதல்ல; இக்கலாசாரத்தில் நிபுணர்கள் என்பதாய்த் தம்மை அழைத்துக்கொள்வோர்

கண்டுபிடித்துக் கொடுத்துவிடக் கூடியதல்ல. அதெல்லாம் அபத்தப் பேச்சு. பாட்டாளி வர்க்கக் கலாசாரம் முதலாளித்துவ சமுதாயம், நிலப்பிரபுக்களின் சமுதாயம், அதிகார வர்க்க சமுதாயம் ஆகியவற்றின் ஆதிக்கத்தில் மனித குலம் சேமித்து வந்திருக்கும் அறிவுக் கருவூலத்தின் தர்க்கரீதியான வளர்ச்சியாகவே இருக்க முடியும். எப்படி அரசியல் பொருளாதாரம் மார்க்சால் திருத்தியமைக்கப்பட்ட வடிவில் மனித சமுதாயம் எதை வந்தடையப் போகிறதென்பதை நமக்குக் காட்டியுள்ளதோ, எப்படி அது வர்க்கப் போராட்டத்துக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தொடக்கத்துக்குமான பாதையை நமக்குக் காட்டியுள்ளதோ, அதேபோல மேற் கூறிய பாதைகள் யாவும் பாட்டாளி வர்க்கக் கலாசாரத்துக்கு இட்டு வந்திருக்கின்றன, இனியும் தொடர்ந்து இட்டுச் செல்லும்.

இளைஞர்களின் பிரதிநிதிகளும், மற்றும் ஒரு புதிய கல்வி முறையின் குறிப்பிட்ட சில ஆதரவாளர்களும் பழைய கல்வி முறையைத் தாக்கி, அது பொட்ட நெட்டுரு போடும் முறையை உபயோகித்ததாய் அடிக்கடி பேசக் கேட்கிறோம். பழைய கல்வி முறையிலிருந்து நல்லதை எடுத்துக் கொண்டாக வேண்டுமென இவர்களுக்கு நாம் பதிலளிக்கிறோம். பத்தில் ஒன்பது பங்கு உதவாக்கரையானதும் எஞ்சிய ஒரு பங்கு திரித்துப் புரட்டப்பட்டதுமான அளவிலா அறிவை இளம் மக்களின் தலையில் அடைத்து நிரப்பும் அந்த முறையை நாம் கடன் வாங்கக் கூடாதுதான். ஆனால் இதற்கு அர்த்தம் கம்யூனிச முடிவுகளுக்குள் நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிடலாம், கம்யூனிசக் கோஷங்களை மட்டும் கற்பதுடன் நின்றுவிடலாம் என்பதல்ல. இவ்வழியில் உங்களால் கம்யூனிசத்தைத் தோற்றுவிக்க முடியாது. மனித குலம் படைத்தளித்திருக்கும் கருவூலங்கள் யாவற்றையும் பற்றிய அறிவைப் பெற்று உங்கள் சிந்தனையை நீங்கள் வளமாக்கிக் கொள்ளும்போது மட்டுமே உங்களால் கம்யூனிஸ்டு ஆக முடியும்.

பொட்ட நெட்டுரு செய்ய வேண்டிய தேவை நமக்கு இல்லை. ஆனால் அடிப்படை உண்மைகளைப் பற்றிய அறிவை அளித்து ஒவ்வொரு மாணவரின் மனத்தையும் வளர்த்திடு

வதும் செம்மையாக்குவதும் நமக்கு அவசியமே. கற்கும் அறிவு அனைத்தும் மனத்துள் செரிமானம் செய்யப்படவில்லையானால், கம்யூனிசம் வெற்றுச் சொல்லாய், வெறும் பெயர்ப் பலகையாய் இழிவுற்றுவிடும், கம்யூனிஸ்டுகள் வீம்புரை பேசும் வீணராகிவிடுவர். இந்த அறிவை நீங்கள் கிரகித்துக் கொண்டால் மட்டும் போதாது, விமர்சனக் கண் கொண்டு ஆய்ந்து கிரகித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வேண்டாத குப்பையை எல்லாம் மூளையில் அடைத்து கொள்ளாமல், கல்வியில் சிறந்த இக்கால மனிதர் எவருக்கும் அத்தியாவசியமான உண்மைகளைக் கொண்டு சிந்தனையை வளமாக்கிக்கொள்ள முடியும். கருத்துமிக்க கடும் முயற்சி இல்லாமலே, விமர்சனக் கண் கொண்டு பரிசீலிக்க வேண்டிய உண்மைகளைப் புரிந்து கொள்ளாமலே ஒரு கம்யூனிஸ்டு, தயாராய் வரையறுத்து வைக்கப்பட்ட முடிபுகளைத் தெரிந்து கொண்டுவிட்ட ஒரே காரணத்தால் தனது கம்யூனிசத்தை மெச்சிப் புகழ்ந்து கொள்ள நினைப்பாராயின் உண்மையில் அவர் பரிதாபத்துக்குரிய கம்யூனிஸ்டுதான். இத்தகைய நுனிப் புல் மேயும் போக்கு நிச்சயமாய் ஆபத்தையே உண்டாக்கும். அறிந்தது சொற்பமே என்பது எனக்குத் தெரிந்தால் மேலும் கற்க முயலுவேன். ஆனால் நான் ஒரு கம்யூனிஸ்டு, எதையும் நான் தீர்க்கமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை என்று கூறும் ஒருவர் எந்நாளும் எவ்விதத்திலும் கம்யூனிஸ்டுக்கு ஒப்பானவராக முடியவே முடியாது.

பழைய கல்வி முறை முதலாளிகளுக்குத் தேவையான சேவகர்களைத் தோற்றுவித்தது. விஞ்ஞான அறிவாளிகளைப் பழைய கல்வி முறை முதலாளிகளுக்குப் பிடித்தது எதுவோ அதை எழுதிக் கொண்டும் கூறிக் கொண்டும் இருப்போராய் மாற்றியது. ஆகவே நாம் அதை அழிக்கவே வேண்டும். அதை நாம் அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்றால், மனித குலம் சேகரித்திருக்கும் யாவற்றையும், மனிதனுக்கு அவசியமானவை யாவற்றையும் அவற்றிடமிருந்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற அதற்கு அர்த்தம்? முதலாளித்துவத்துக்கு வேண்டியதாய் இருந்ததையும் கம்யூனிசத்துக்கு வேண்டியதாய் இருப்பதையும் வேறுபடுத்தத் தேவையில்லை என்ற அதற்கு அர்த்தம்?

முதலாளித்துவ சமுதாயத்தில், பெரும்பாலோரின் விருப்பத்துக்கு விரோதமாய் அனுசரிக்கப்பட்ட பழைய பட்டாளத்துப் பயிற்சி மேலாளர் முறைகளை நீக்கி, அவற்றுக்குப் பதிலாய்த் தொழிலாளர் விவசாயிகளது வர்க்க உணர்வு படைத்த கட்டுப்பாட்டைக் கைக்கொண்டு வருகிறோம். இத் தொழிலாளர்களும் விவசாயிகளும் பழைய சமுதாயத்தை வெறுப்பதோடுகூட, இந்தப் போராட்டத்தில் தமது சக்திகளை ஒன்றுபடுத்தவும், ஒழுங்கமைக்கவும், லட்சம் லட்சமாகவும் கோடி கோடியாகவுமுள்ள மக்களின் — பிளவுபட்டு ஒரு பெரிய நாட்டின் பரப்பு முழுதும் சிதறுண்டிருக்கும் மக்களின்—சித்தங்களை இவ்வாறு ஒருசேர இணைத்து ஒரு மித்த ஏக சித்தமாக்கவும் ஆற்றலுடையோராய் வைராக்கியத்துடன் தயாராகவும் இருக்கிறார்கள். இந்த ஒருமித்த ஏக சித்தம் இல்லையேல் தோல்வி தவிர்க்க முடியாததாகி விடும். இந்த ஒருமைப்பாடு இல்லாமல், தொழிலாளர்கள், விவசாயிகளது உணர்வு பூர்வமான இந்தக் கட்டுப்பாடு இல்லாமல், நமது இலட்சியம் வெற்றிபெறுவது சாத்தியமல்ல. இது இல்லாமல் அனைத்து உலகின் முதலாளிகளையும் நிலப் பிரபுக்களையும் நாம் தோற்கடிக்க முடியாது. அடித்தளத்தின் மீது நாம் ஒரு புதிய, கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைப்பது இருக்கட்டும், அந்த அடித்தளத்தை நாம் உறுதியாக்கி நிலைக்கச் செய்வதுகூட முடியாமற் போய்விடும். இதே போல, பழைய கல்வி முறையை நிராகரிக்கும் அதேபோது, பழைய கல்வி முறை மீது முற்றிலும் நியாயமான, தேவையான வெறுப்பு கொண்டிருக்கும் அதேபோது, அதை அழித்திடச் சித்தமாயிருப்பதைப் போற்றும் அதேபோது, நாம் பழைய கல்வி போதனை முறையை, பழைய பொட்ட நெட்டுரு, பழைய பட்டாளத்துப் பயிற்சி முறையை அழித்து, அதனிடத்தில் ஒட்டுமொத்த மனித அறிவைப் பெறும் ஆற்றலை அடைவதன் அவசியத்தை உணர்ந்தாக வேண்டும். கம்யூனிசமானது குருட்டு மனப்பாடமாய்க் கற்கவேண்டிய ஒன்றாய் அமையாது, நேரடியாய் நீங்களே சிந்தித்துப் பார்த்த ஒன்றாய், தற்காலக் கல்வியின் கண்ணோட்டத்திலிருந்து எழும் தவிர்க்க முடியாத முடிபுகள் உள்ளடங்கிய ஒன்றாய்

அமையும்படி இந்த ஒட்டு மொத்த மனித குல அறிவைப் பெற வேண்டும்.

கம்யூனிசத்தைக் கற்றறிதல் என்னும் குறிக்கோள் குறித்துப் பேசுகையில் பிரதான பணிகளை மேற்கூறியவாறு தான் எடுத்துரைக்க வேண்டும்.

உங்களுக்கு இதைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, எப்படி நீங்கள் கற்றறிய வேண்டும் என்கிற பிரச்சினையை அணுகுவதற்குரிய முறையைப் புலப்படுத்தும் பொருட்டு, நடைமுறை உதாரணம் ஒன்றைக் கூறுகிறேன். குடியரசைப் பாதுகாப்பது குறித்த இராணுவப் பணிகளை அடுத்து, இப் பொழுது நாம் பொருளாதாரப் பணிகளை எதிர்நோக்குவது உங்கள் எல்லோருக்கும் தெரியும். தொழில் துறையையும் விவசாயத்தையும் உயிர்ப்பித்தாலன்றி கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைக்க முடியாதென்பதை அறிவோம். அதுவும் பழைய வழியிலன்றி, நவீன அடிப்படையில், விஞ்ஞானத்தின் மிக நவீன முறைகளுக்கு ஏற்ப, இவற்றைப் புனரமைத்தாக வேண்டும். மின்விசையே இந்த அடிப்படை என்பதும், நாடு அனைத்தும், தொழில் துறை, விவசாயம் இவற்றின் எல்லாக் கிளைகளும் மின்மயமாக்கப்பட்ட பிறகுதான், நீங்கள் இந்தக் குறிக்கோளை நிறைவேற்றிய பிறகுதான், பழைய தலைமுறையினரால் கட்டப்பட முடியாத கம்யூனிச சமுதாயத்தை உங்களால் கட்டியமைக்க முடியும் என்பதும் உங்களுக்குத் தெரியும். நாடு முழுவதையும் பொருளாதார வழியில் புத்துயிர் பெறச் செய்யும் பணி—நவீன தொழில் நுட்ப முறைகளின் வாயிலாய், நவீன விஞ்ஞானம், தொழில் நுட்பத்தின் அடிப்படையில், மின்விசையின் அடிப்படையில், தொழில் துறையையும் விவசாயத்தையும் புனரமைத்துப் புத்துயிர் பெறச் செய்யும் பணி—உங்களை எதிர்நோக்குகிறது. எழுத்தறியாத மக்களால் மின்மயமாக்கும் பணியைச் சமாளிக்க முடியாது, ஆரம்ப நிலையிலான எழுத்தறிவுங்கூட இதற்குப் போதாது என்பது நீங்கள் நன்கு அறிந்ததே. மின்விசை என்பது என்னவென்று புரிந்துகொண்டால் மட்டும் போதாது; தொழில் துறையிலும் விவசாயத்திலும், மற்றும் தொழில் துறை, விவசாயம் இவற்றின் தனித் தனிக் கிளைகளிலும், தொழில்நுட்ப வழியில் எப்படி அதைக் கையாளு

வது என்பது பற்றிய அறிவு இருப்பது அவசியமாகும். அவர வரும் இதைக் கற்றுத் தெரிந்து கொண்டாக வேண்டும். உழைப்பாளி மக்களின் இளந் தலைமுறை அனைத்துக்கும் இதைக் கற்றுத் தந்தாக வேண்டும். இதுவே வர்க்க உணர்வு படைத்த ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும், தன்னைக் கம்யூனிஸ் டாகக் கருதிக் கொள்ளும் ஒவ்வொரு இளைஞருக்கும் யுவதிக் கும்—இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தில் சேர்ந்து கொண்டதன் மூலம் கம்யூனிசம் அமைத்திடக் கட்சிக்குத் துணை புரிவ தாய், கம்யூனிச சமுதாயத்தைத் தோற்றுவிக்க இளந் தலை முறை முழுதுக்குமே துணை புரிவதாய்த் தான் சபத மேற்றிருப்பதைத் தெளிவாய் உணருகிறவர் ஒவ்வொருவருக் கும்—முன்னுள்ள பணி. நவீனக் கல்வியின் அடிப்படையில் மட்டுமேதான் இதைத் தோற்றுவிக்க முடியும் என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர் இந்தக் கல்வியைப் பெறுவிடில் கம்யூனிசம் வெறும் ஆத்மார்த்திக விருப்பமாகவே இருந்து வரும்.

முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவது பழைய தலை முறையின் பணியாய் இருந்தது. முதலாளித்துவ வர்க்கத்தை விமர்சிப்பதும், வெகுஜனங்களிடையே முதலாளித்துவ வர்க்கத்தின்மீது வெறுப்பு எழச் செய்வதும், அவர்களிடையே வர்க்க உணர்வையும் தம் சக்திகளை ஒன்று சேர்த்துக் கொள் வதற்கான ஆற்றலையும் வளரச் செய்வதும்தான் அப்பொ ழுது பிரதான பணியாய் இருந்தது. இளந் தலைமுறையின் முன்னுள்ள பணி இதனிலும் மிகமிகச் சிக்கலானது. முத லாளிகளால் முடுக்கிவிடப்படும் படையெடுப்பை எதிர்த்து நின்று தொழிலாளர்கள், விவசாயிகளது ஆட்சியதிகாரத்தை நிலைநாட்டும் வண்ணம் உங்கள் சக்திகளை இணைத்துச்சேர்ப்பது மட்டுமல்ல உங்களுடைய கடமை. சந்தேகமில்லை, அதை நீங்கள் செய்யவே வேண்டும். அது நீங்கள் தெளிவாய் உண ரும் ஒன்று. கம்யூனிஸ்டுக்குத் தெட்டத் தெளிவாய்த் தெரி யும் கடமை அது. ஆனால் அது மட்டும் போதாது. கம்யூனிச சமுதாயத்தை நீங்கள் கட்டியமைத்தாக வேண்டும். பல அம் சங்களில் ஒரு பாதி வேலை செய்து முடிக்கப்பட்டுவிட்டது. அழிக்கப்பட வேண்டிய பழையது அழிக்கப்பட்டுவிட்டது, தகர்க்கப்பட வேண்டியது தகர்த்துத் தரை மட்டமாக்கப்

பட்டுவிட்டது. தரை சுத்தமாக்கப்பட்டுவிட்டது, இந்தத் தரையின்மேல் இளங் கம்யூனிஸ்டுத் தலைமுறை கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியெழுப்பியாக வேண்டும். உங்களை எதிர்நோக்குவது நிர்மாணப் பணி. நவீன கால அறிவு அனைத்தையும் கற்றுத் தேர்ந்தால்தான் நீங்கள் இந்தப் பணியைச் செய்து முடிக்க முடியும். ஏற்கனவே வரையறுக்கப்பட்டு மனப்பாடம் செய்யப்பட்ட சூத்திரங்கள், அறிவுரைகள், நியமங்கள், விதிமுறைகள், வேலைத்திட்டங்கள் ஆகியவற்றிலிருந்து கம்யூனிசத்தை உயிருள்ள எதார்த்த உண்மையாய் உங்களால் மாற்ற முடிந்தால்தான்—உங்களுடைய உடனடி வேலைகளுக்கு ஐக்கிய உருவளிக்கும் எதார்த்த உண்மையாய் மாற்ற முடிந்தால்தான்—உங்களுடைய நடைமுறை வேலைகள் யாவற்றுக்கும் நீங்கள் கம்யூனிசத்தை வழிகாட்டி ஆக்கிக் கொள்ள முடிந்தால்தான்—உங்களால் இந்தப் பணியைச் செய்து முடிக்க இயலும்.

இளந் தலைமுறையினர் அனைவருக்கும் கல்வி போதமும் பயிற்சியும் அளித்து அவர்களைத் தட்டியெழுப்புகையில் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பணி இதுவே. கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைக்கும் கோடானு கோடியான ஆக்க வீரர்களிடையே நீங்கள் முன்னிலையில் இருக்க வேண்டும். இந்த ஆக்க வீரர்களது அணி வரிசையே ஒவ்வொரு இளைஞருக்கும் யுவதிக்கும் உரிய இடமாகும். இளந் தொழிலாளர்களும் விவசாயிகளுமான பெருந்திரளினரைக் கம்யூனிச நிர்மாணப் பணியில் நீங்கள் அணி திரட்டினாலன்றி உங்களால் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

இயற்கையாகவே இது என்னை கம்யூனிசத்தை எப்படி நாம் போதிப்பது, நமக்குரிய முறைகளின் பிரத்தியேக இயல்புகள் யாவை என்கிற பிரச்சினைக்கு அழைத்துவருகிறது.

முதலில் இங்கு கம்யூனிஸ்டு அறநெறிப் பிரச்சினை குறித்து பரிசீலிக்கிறேன்.

நீங்கள் உங்களைக் கம்யூனிஸ்டுகளாய்ப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும். கற்றறிதல், ஒழுங்கமைத்தல், ஒன்றுபடச் செய்தல், போராடுதல் ஆகியவற்றின் மூலம் இளைஞர் கழக உறுப்பினர்கள் தம்மையும் பயிற்றுவித்துக் கொண்டு, இளைஞர் கழகத்தைத் தம் தலைமையாய்க் ககுதுவோர் எல்

லோரையும் பயிற்றுவிக்கும்படியான முறையில் தனது நடை முறைச் செயற்பாட்டை ஏற்பாடு செய்து கொள்வதுதான் இளைஞர் கழகத்தின் பணி. எல்லோரையும் அது கம்யூனிஸ்டு களாய்ப் பயிற்றுவிக்க வேண்டும். இன்றைய இளைஞர் களுக்குத் தரப்படும் பயிற்சி, கல்வி, போதனை ஆகிய வற்றின் நோக்கம் எல்லாம் கம்யூனிச அறநெறியை ஊட்டுதலாகவே இருக்க வேண்டும்.

ஆனால் கம்யூனிச அறநெறி என்பதாய் ஒன்று இருக் கிறதா? கம்யூனிச ஒழுக்கம் என்பதாய் ஒன்று இருக்கிறதா? நிச்சயமாய் இருக்கிறது. நமக்கென ஒரு தனி அறநெறி கிடை யாது என்பதாய் அடிக்கடி பேசப்படுகிறது; ஒழுக்கநெறி அனைத்தையுமே நிராகரிப்பவர்கள் என்பதாய்க் கம்யூனிஸ்டு களாகிய நம்மீது முதலாளித்துவ வர்க்கத்தினர் அடிக்கடி குற்றம் சாட்டுகிறார்கள். பிரச்சினையைக் குழப்புவதற்கான —தொழிலாளர், விவசாயிகளின் கண்களில் மண்ணைத் தூவு வதற்கான—ஓர் உபாயமே இது.

எந்த அர்த்தத்தில் நாம் அறநெறியை, ஒழுக்கநெறியை நிராகரிக்கிறோம்?

முதலாளித்துவ வர்க்கத்தினர் அதற்கு அளித்திடும் அர்த்தத்தில் நிராகரிக்கிறோம். கடவுள் கட்டளைகளை அவர் கள் அறநெறிக்கு அடிப்படையாக்கிக் கொள்கிறார்கள். இவ்விவகாரம் குறித்துப் பேசுகையில், எங்களுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது என்று நாம் கூறுகிறோம். மதகுருமார் களும் நிலப்பிரபுக்களும் முதலாளித்துவ வர்க்கத்தினரும் சுரண்டலாளர்கள் என்ற முறையில் தமது சொந்த நலன் களைக் கருதிக் கடவுளின் பெயரை இழுக்கிறார்கள், இதை நாங்கள் நன்கு அறிவோம் என்று சொல்கிறோம். அல்லது, ஒழுக்கக் கட்டளைகளுக்குப் பதிலாய்—கடவுள் கட்டளை களுக்குப் பதிலாய்—அவர்கள் கருத்துமுதல்வாத அல்லது ஓரளவு கருத்துமுதல்வாதத் தொடர்களை அறநெறிக்கு அடிப்படையாக்கிக் கொண்டனர். இந்தத் தொடர்களும் மிகப் பெருமளவுக்குக் கடவுள் கட்டளைகளைப் போன்ற ஒன்றையே குறிப்பவை.

மனிதனுக்குப் புறம்பான, வர்க்கத்துக்குப் புறம்பான கருத்தினங்களை அடிப்படையாய்க் கொண்ட எந்த ஒழுக்க

நெறியையும் நாம் நிராகரிக்கின்றோம். அது ஏமாற்று வித்தை, மாய்மாலம், நிலப்பிரபுக்கள், முதலாளிகளது நலன்களை முன்னிட்டு தொழிலாளர்களையும் விவசாயி களையும் மூடர்களாக்குவதற்கான உபாயம் என்கிறோம்.

எங்களுடைய ஒழுக்கநெறி பாட்டாளி வர்க்கத் தினுடைய வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தது என்று நாம் கூறுகிறோம். எங்கள் ஒழுக்கநெறி பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்தின் நலன்களிலிருந்துதான் உதிக்கிறது.

பழைய சமுதாயம் எல்லாத் தொழிலாளர்கள், விவ சாயிகள் மீதும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் புரிந்த ஒடுக்குமுறையின் அடிப்படையில் அமைந்திருந்தது. நாம் அதை அடியோடு அழிக்க வேண்டியிருந்தது, அவர்களை வீழ்த்த வேண்டியிருந்தது. ஆனால் இதைச் செய்யும் பொருட்டு நாம் ஒற்றுமையை உண்டாக்க வேண்டியிருந்தது. அது கட வுளால் உண்டாக்கப்படக் கூடிய ஒன்று அல்ல.

இந்த ஒற்றுமையைத் தொழிற்சாலைகளால் மட்டும் தான் அளித்திட முடியும்; நீண்ட நெடிய உறக்கத்திலிருந்து எழுப்பப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத் தால்தான் உண்டாக்க முடியும். இந்த வர்க்கம் உருவான பிறகே வெகுஜன இயக்கம் ஒன்று தோன்றி, மிகவும் பல வீனமான ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி யடைந்திருப்பதை இப்பொழுது காண்கிறோமே, இந்த வெற் றிக்கு வழி செய்துள்ளது. இந்தப் பாட்டாளி வர்க்கப் புரட்சி அனைத்து உலகின் முதலாளித்துவ வர்க்கத்தாரின் கடுந்தாக்கு தலை மூன்று ஆண்டுகளாய் எதிர்த்தடித்துக் கொண்டிருக் கிறது. உலகெங்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சி வளர்ந்து வருவதைக் காண முடிகிறது. ஒற்றுமையின்றிச் சிதறுண்டுள்ள விவசாயிகளைத் தன்னைப் பின்பற்றி வரச் செய்துள்ளதும், சுரண்டலாளர்களது எல்லாத் தாக்குதல்களையும் சமாளித்து நிற்பதுமான திடமிக்க இச்சக்தியைப் பாட்டாளி வர்க்கத் தை அன்னியில் வேறு எதனாலும் தோற்றுவித்திருக்க முடியா தென இப்பொழுது நாம் அனுபவ வாயிலாய்க் கூறலாம். இந்த ஒரு வர்க்கத்தால் மட்டும்தான் உழைப்பாளி வெகு ஜனங்கள் ஒன்றுபடவும், தமது அணிகளை ஒன்றுதிரட்டிக்

கொள்ளவும், கம்யூனிச சமுதாயத்தை முடிவாய்ப் பாது காத்துக் கொள்ளவும், முடிவாய் உறுதி பெறும்படிச் செய்ய வும், முடிவாய்க் கட்டியமைத்திடவும் துணை புரிய முடியும்.

எனவேதான் மனித சமுதாயத்துக்கு மேலானதான ஒழுக்கநெறி என்பதாய் நமக்கு எதுவும் இல்லை என்று கூறுகிறோம். அது ஏமாற்று சூழ்ச்சியே ஆகும். நமக்கு ஒழுக்க நெறியானது பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தினுடைய நலன்களுக்குக் கீழ்ப்பட்டது ஆகும்.

இந்த வர்க்கப் போராட்டம் எதில் அடங்கியுள்ளது? ஜார் மன்னனை வீழ்த்தல், முதலாளிகளை வீழ்த்தல், முத லாளித்துவ வர்க்கத்தை ஒழித்தல் ஆகிய இவற்றில் அது அடங்கியுள்ளது.

பொதுவில் வர்க்கங்கள் என்பவை யாவை? சமுதாயத் தின் ஒரு பிரிவு மற்றொரு பிரிவின் உழைப்பை அபகரித்துக் கொள்ள வழி செய்பவையே வர்க்கங்கள். சமுதாயத்தின் ஒரு பிரிவு எல்லா நிலத்தையும் அபகரித்துக் கொள்ளுமா யின், நிலப்பிரபு வர்க்கமும் விவசாயி வர்க்கமும் இருக்கக் காண்கிறோம். சமுதாயத்தின் ஒரு பிரிவு ஆலைகள், பங்குகள், மூலதனம் இவற்றின் உடைமையாளனாய் இருந்து, மற்றொரு பிரிவு இந்த ஆலைகளில் வேலை செய்யும்படி ஏற்படுகையில் முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் இருக்கக் காண்கிறோம்.

ஜாரை விரட்டுவது கடினமாய் இருக்கவில்லை—ஒரு சில நாட்களே தேவைப்பட்டன. நிலப்பிரபுக்களை விரட்டுவதும் அதிகக் கடினமாய் இருக்கவில்லை—ஒரு சில மாதங்களில் இது செய்யப்பட்டுவிட்டது. முதலாளிகளை விரட்டுவதும் அதிகக் கடினமாய் இருக்கவில்லை. ஆனால் வர்க்கங்களை ஒழித்தல் இதையெல்லாம்விட சொல்ல முடியாத அளவுக்கு மிகவும் கடினமாகும். தொழிலாளர்கள், விவசாயிகள் என்ற பிரிவினை இன்னமும் நம்மிடம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. விவசாயியை அவனுக்குரிய நிலத்தில் அமர்த்தியதும் அவன் உபரி தானியத்தை, அதாவது தனக்கோ தன் கால்நடைகளுக் கோ வேண்டியிராத தானியத்தை, ஏனைய மக்கள் உண்ண உணவின்றி திண்டாடும்போது தனக்கே சுவாதீனமாக்கிக் கொள்வானாகில், அந்த விவசாயி சுரண்டலாளனாகிவிடு

கிறான். தன் கையில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகத் தானியத்தை இருத்திக் கொள்கிறானே, அவ்வளவுக்கு அவ்வளவு அதிக லாபம் கிடைக்கக் காண்கிறான். ஏனையோரைப் பொறுத்த வரை அவர்கள் பட்டினி கிடக்கட்டுமே, ''பட்டினி அதிகமாக ஆகத் தானியத்தை இன்னும் அதிக விலைக்கு விற்க முடியுமே'' என்கிறான். பொதுவான ஒரே திட்டத்தின் படி எல்லோரும் பொது நிலங்களிலும் பொது ஆலைகளிலும் பொது ஏற்பாட்டிற்கு ஏற்ப வேலை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலையை அடைவது சுலபமா? ஜாரையும் நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் விரட்டுவது போல இது அவ்வளவு சுலபமல்ல என்பதைக் காண்கிறீர்கள். பாட்டாளி வர்க்கம் விவசாயிகளில் ஒரு பிரிவினருக்கு மறுகல்வியும் மறுபோதமும் அளித்தாக வேண்டியிருக்கிறது. பணக்கார விவசாயிகளாய் இருப்போரின், ஏனையோரது வறுமையையும் இல்லாமையையும் கொண்டு லாபமடிக்கும் இவ்விவசாயிகளின் எதிர்ப்பை நசுக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்கம் உழைக்கும் விவசாயிகளைத் தன் பக்கத்துக்கு வரும்படி ஈர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஜாரை வீழ்த்தி நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் நாம் விரட்டியடித்ததுடன் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் பணி பூரணமாய் நிறைவு எய்தி விடவில்லை. இதை நிறைவுச் செய்வதே நாம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமென அழைக்கும் இந்த ஏற்பாட்டின் பணி.

வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது, அதன் வடிவங்கள் மட்டுமே மாறியிருக்கின்றன. பழைய சுரண்டலாளர்கள் திரும்பி வந்துவிடாதபடி தடுப்பதற்காக, சிதறுண்டு கிடக்கும், அறிவொளியில்லாத விவசாயி வெகுஜனங்களை ஒரே கூட்டணியாய் ஒன்றுபடுத்துவதற்காக நடைபெறும் வர்க்கப் போராட்டம் இது. வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது, இந்தப் போராட்டத்துக்கு எல்லா நலன்களையும் கீழ்ப்படச் செய்வதே நமது பணி. நமது கம்யூனிஸ்டு ஒழுக்கநெறியும் இப்பணிக்குக் கீழ்ப்பட்டதுதான். பழைய சுரண்டல் சமுதாயத்தை அழிக்கவும், ஒரு புதிய கம்யூனிஸ்டு சமுதாயத்தைக் கட்டியமைத்திடும் பாட்டாளி வர்க்கத்தை மையமாய்க் கொண்டு உழைப்பாளி

மக்கள் அனைவரையும் ஒன்றுபடச் செய்யவும் உதவுவதே ஒழுக்கநெறி என்று கூறுகிறோம்.

இந்தப் போராட்டத்துக்கு உதவி புரிந்து உழைப்பாளி மக்களை எல்லா விதச் சுரண்டலையும் எதிர்த்து, அற்பத் தனியார் சொத்துடைமை யாவற்றையும் எதிர்த்து ஒன்று படச் செய்ய உதவுவதே கம்யூனிஸ்டு ஒழுக்கநெறி. சமுதாயம் அனைத்தின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்டதை இந்த அற்பத் தனியார் சொத்துடைமையானது தனியாளின் கையிலே இருத்திவிடுகிறது. நமது நாட்டில் நிலம் பொதுச் சொத்தாகும்.

பொதுச் சொத்தான இந்த நிலத்தில் ஒரு சிறு துண்டை எடுத்து அதில் நான் எனக்கு வேண்டியதைப் போல இரு மடங்கு தானியம் விளைவித்து உபரியைக் கொண்டு கொள்ளை லாபம் திரட்டுவதாய் வைத்துக் கொள்ளலாம். பட்டினி கிடப்போரின் தொகை பெருகப் பெருக அவர்கள் அதிக விலை கொடுப்பார்களே என்று நான் வாதாடுவதாய் வைத்துக் கொள்ளலாம். அப்பொழுது நான் கம்யூனிஸ்டாகவா நடந்து கொள்கிறேன்? இல்லை, சுரண்டலாளனாகவே, உடைமையாளனாகவே நடந்து கொள்கிறேன். இதை எதிர்த்துப் போராடியாக வேண்டும். இது நடைபெற நாம் இடந் தருவோமாயின், முதலாளிகளுடைய ஆட்சி, முதலாளித்துவ வர்க்க ஆட்சி திரும்புவதற்கே அது இட்டுச்செல்லும். முந்திய புரட்சிகளில் இது பன்முறை நடைபெற்றிருக்கிறது. முதலாளிகளின், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியினது மீட்சியைத் தடுக்கும் பொருட்டு, நாம் கொள்ளை லாபத்துக்கு இடந் தரலாகாது; தனி நபர்கள் ஏனையோரின் செலவில் செல்வம் திரட்ட இடமளிக்கக் கூடாது; உழைப்பாளி மக்கள் பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்றுசேர்ந்து கம்யூனிஸ்டு சமுதாயத்தை அமைத்திட வேண்டும். கம்யூனிஸ்டு இளைஞர் கழகத்துக்கும் நிறுவனத்துக்குமுள்ள அடிப்படைப் பணியின் தலையாய அம்சம் இது.

கொள்ளையடி அல்லது கொள்ளைக்கு இலக்காகு; ஏனையோருக்கு வேலை செய் அல்லது ஏனையோரை உனக்கு வேலை செய்யும்படி வை; அடிமையுடைமையாளனாய் இரு அல்லது அடிமையாகு—இந்த விதிதான் பழைய சமுதாயத்துக்கு

அடிப்படையாய் இருந்தது. ஒன்று நீ அடிமையுடைமையாளன் அல்லது அடிமை, இல்லையேல் சிறு உடைமையாளன், சிறு அதிகாரி அல்லது அறிவுத்துறையாளன்—அதாவது சுருங்கக் கூறின் தன்னைப் பற்றி மட்டுமே நினைத்து ஏனையவர் யாரைப் பற்றியும் கவலைப்படாத ஆள் என்கிற மனப்பான்மையை, பழக்கத்தை, கருத்தோட்டத்தை இத்தகைய ஒரு சமுதாயத்தில் வளர்ந்தவர்கள் இயற்கையாகவே கிரகித்துக் கொண்டு விடுகிறார்கள், தாய்ப் பாலுடன் சேர்த்து உட்கொண்டுவிடுகிறார்கள் என்று சொல்லலாம்.

எனக்குரிய இந்த நிலத்தை நான் உழுது பயிரிட்டால் போதும், ஏனையோரைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஏனையோர் பட்டினி கிடந்தால் கிடக்கட்டுமே, நல்லதுதானே, என்னுடைய தானியத்துக்கு இன்னும் அதிகப் பணம் கிடைக்குமே. எனக்கு மருத்துவர் அல்லது பொறியாளர் அல்லது ஆசிரியர் அல்லது குமாஸ்தா வேலை கிடைக்கிற வரை ஏனையோர் யாரைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. அதிகாரத்தில் இருப்போருக்கு அடிபணிந்து நடந்து அவர்களைத் திருப்தி செய்தால் என் வேலையை நான் பாதுகாத்துக் கொள்ளலாம். ஏன், வாழ்க்கையில் முன்னேறி ஒரு முதலாளியாகவுங்கூட ஆகலாம். இது போன்ற மனப்பான்மையையும் இவ்வகை உணர்ச்சிகளையும் ஒரு கம்யூனிஸ்டு பொண்டிருக்க முடியாது. தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது சொந்த முயற்சிகளாலேயே தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஒரு புதிய சமுதாயத்தை அமைத்திடவும் முடியுமென்று நிரூபித்துக் காட்டியபோது—அது புதிய, கம்யூனிஸ்டுப் போதம் பெறுதலின், சுரண்டலாளர்களுக்கு எதிரான போராட்டத்தின் வாயிலாய்ப் போதம் பெறுதலின் தொடக்கமாயிற்று. சுயநலமிகளையும் சிறு உடைமையாளர்களையும் எதிர்த்து—எனக்கு வேண்டியது என்னுடைய லாபம்தான், வேறு எதைப் பற்றியும் எனக்குக் கவலை இல்லை என்பதாய்க் கூறும் மனப்பாங்கையும் பழக்கவழக்கங்களையும் எதிர்த்து — பாட்டாளி வர்க்கத்துடன் கூட்டணி கொண்டு பெறும் போதத்தின் தொடக்கமாயிற்று.

வளரும் இளந் தலைமுறையினர் எப்படிக் கம்யூனிசம் கற்றறிய வேண்டும் என்கிற கேள்விக்கு இதுவே பதில்.

இவர்கள் தமது படிப்பு, பயிற்சி, கல்வி இவற்றின் ஒவ் வொரு படியையும் சுரண்டலாளர்களது பழைய சமுதாயத் தை எதிர்த்து பாட்டாளிகளும் உழைப்பாளி மக்களும் நடத்தும் தொடர்ச்சியான போராட்டத்துடன் இணைத்துக் கொள்வதன் மூலமே கம்யூனிசத்தைக் கற்றறிய முடியும். ஒழுக்கநெறி குறித்து நம்மிடம் பேசுவோருக்கு நாம் கூறு வது இதுதான்: கம்யூனிஸ்டு ஒழுக்கநெறி அனைத்தும் சுரண்ட லாளர்களுக்கு எதிரான இந்த ஒன்றுபட்ட கட்டுப்பாட்டிலும் உணர்வு பூர்வமான வெகுஜனப் போராட்டத்திலும்தான் அடங்கியுள்ளது. என்றும் மாறுத நிரந்தர ஒழுக்கநெறியில் நமக்கு நம்பிக்கை இல்லை. ஒழுக்கநெறி பற்றிய எல்லாக் கட்டுக்கதைகளின் பொய்மையையும் நாம் அம்பலப்படுத்து கிறோம். மனித சமுதாயம் மேலும் உயர்ந்த நிலைக்கு வளர்வதற்கும், உழைப்பு சுரண்டப்படுவதை ஒழித்துத் தன்னை விடுவித்துக் கொள்வதற்கும் ஒழுக்கநெறி பணி புரிகிறது.

இந்த நோக்கம் ஈடேற முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான கட்டுப்பாடு வாய்ந்த உக்கிரமான போராட்டத் தின் போது அரசியல் முதிர்ச்சி பெற்ற இளம் மக்களின் தலைமுறை நமக்குத் தேவைப்படுகிறது. இந்தப் போராட்டத் தில் இத்தலைமுறை மெய்யான கம்யூனிஸ்டுகளைப் பயிற்று விக்கிறது. அது தனது படிப்பு, கல்வி, பயிற்சி இவற்றின் ஒவ் வொரு படியையும் இந்தப் போராட்டத்துக்குக் கீழ்ப் படியச் செய்து இதனுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். நல்லுரைகளும் நன்னெறி விதிகளும் போதிப்பதல்ல கம்யூ னிஸ்டு இளைஞர்களுக்கான கல்வி போதனை. இதல்ல கல்வியின் உள்ளடக்கம். நிலப்பிரபுக்கள், முதலாளிகளது ஒடுக்குமுறை யில் தம் தாய் தந்தையர் வாழ்ந்த முறையைக் கண்டுணரும் போது, சுரண்டலாளர்களுக்கு எதிரான போராட்டத்தை தொடங்கியோர் பட்ட துன்பங்களைத் தாமே நேரில் அனுப விக்கும்போது, வென்று கொண்டதை இழக்காது பாது காப்பதற்காகப் புரிய வேண்டியிருந்த தியாகங்களையும் நிலப் பிரபுக்களும் முதலாளிகளும் எவ்வளவு கொடிய பகைவர்கள் என்பதையும் காணும் போது—இந்நிலைமைகளாலேயே இம் மக்கள் கம்யூனிஸ்டுகளாய்ப் போதனை பெறுகின்றனர். கம் யூனிஸ்டு ஒழுக்கநெறி கம்யூனிசத்தை உறுதியாக்குவதற்கும்

நிறைவுறச் செய்வதற்குமான போராட்டத்தை அடிப்படையாய்க் கொண்டதாகும். கம்யூனிஸ்டுப் பயிற்சி, கல்வி, போதனை ஆகியவற்றின் அடிப்படையும் இதுவேதான். கம்யூனிசத்தைக் கற்றறிவது எப்படி என்னும் கேள்விக்கு இதுதான் பதில்.

வகுப்பறையின் வரம்புகளுக்குள் அடைபட்டு வாழ்க்கையின் கொந்தளிப்பிலிருந்து துண்டிக்கப்பட்ட போதத்திலும் பயிற்சியிலும் கல்வியிலும் நமக்கு நம்பிக்கை இல்லை. தொழிலாளர்களும் விவசாயிகளும் நிலப்பிரபுக்களாலும் முதலாளிகளாலும் ஒடுக்கப்பட்டிருக்கும் வரை, கல்வி நிலையங்கள் நிலப்பிரபுக்கள், முதலாளிகளுடைய பிடியில் இருக்கும் வரை, இளந் தலைமுறையினர் கண் தெரியாதோராயும் அறியாமை இருளில் மூழ்கியோராகவுமே இருப்பார்கள். இளைஞர்களுக்கு நமது பள்ளி அடிப்படை அறிவையும் சுயமாகவே கம்யூனிஸ்டுக் கருத்தோட்டங்களை உருவாக்கிக் கொள்ளும் ஆற்றலையும் அளித்திட வேண்டும். இளைஞர்களை அது கல்வியறிவுடையோராக்க வேண்டும். பள்ளி சென்று பயிலும் போதே இளைஞர்கள் சுரண்டலாளர்களிடமிருந்து விடுதலை பெறும் போராட்டத்தில் பங்கு பெறக் கற்றுக் கொள்ள வேண்டும். இளங் கம்யூனிஸ்டுக் கழகம் அதன் போதனையிலும் பயிற்சியிலும் கல்வியிலும் ஒவ்வொரு படியையும் சுரண்டலாளர்களை எதிர்த்து உழைப்பாளி மக்கள் அனைவரும் நடத்தும் போராட்டத்தில் பங்கு கொள்வதுடன் இணைத்திடாவிடில் இளங் கம்யூனிஸ்டுத் தலைமுறையினரது கழகம் என்ற அதன் பெயருக்கு ஏற்றதாயிராது. ருஷ்யாவானது தொழிலாளரது ஒரேயொரு குடியரசாய் இருக்கும் வரையில், பழைய, முதலாளித்துவ அமைப்பு ஏனைய உலகில் இருந்து வரும் வரையில், நாம் அவர்களைக் காட்டிலும் பலவீனமாகவே இருப்போம், புதிய தாக்குதல் தொடுக்கப்படும் அபாயம் இடையறாது இருக்கவே செய்யும் என்பதும், நாம் திடமாய் ஒன்றுபட்டிருக்கக் கற்றுக் கொண்டால்தான் மேற்கொண்டு நடைபெறும் போராட்டத்தில் வெற்றி பெறுவோம், பலம் மிக்கோராகி மெய்யாகவே வெல்ல முடியாதவர்களாவோம் என்பதும் நீங்கள் நன்கு உணர்ந்ததே. ஆகவே நீங்கள் இளந் தலைமுறை அனைத்தையும் ஒழுங்கமையச் செய்து ஒன்று

படுத்த வேண்டும், இந்தப் போராட்டத்தில் பயிற்சிக்கும் கட்டுப்பாட்டுக்குமான எடுத்துக்காட்டாய்த் திகழ வேண்டும் என்பதுதான் கம்யூனிஸ்டாய்ச் செயல்படுதலின் அர்த்தம். அப்பொழுதுதான் உங்களால் கம்யூனிச சமுதாயமெனும் மாளிகையைக் கட்டியெழுப்பத் தொடங்கவும், அதைக் கட்டி முடிக்கவும் முடியும்.

இதை உங்களுக்கு மேலும் தெளிவாய் விளங்கச் செய்யும் பொருட்டு ஓர் உதாரணத்தை எடுத்துரைக்கிறேன். நம்மைக் கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிறோம். கம்யூனிஸ்டு என்ற சொல் என்ன? கம்யூனிஸ்டு என்பது லத்தீனச் சொல். லத்தீன் மொழியில் ''கம்முனிஸ்'' என்ற சொல் ''பொதுவான'' என்று பொருள். கம்யூனிச சமுதாயம் என்பது நிலம், ஆலைகள் ஆகிய யாவும் பொதுவுடைமையாய் இருந்து, மக்கள் பொதுவில் கூட்டாய் வேலை செய்யும் சமுதாயமாகும். இதுதான் கம்யூனிசம் எனப்படுவது.

ஒவ்வொருவரும் அவருடைய சொந்த நிலத்தில் தனியே வேலை செய்வாராயின் பொதுவில் கூட்டாய் வேலை செய்வது எப்படிச் சாத்தியம்? பொதுவில் வேலை செய்யும் முறையைத் திடுமெனத் தோன்றச் செய்துவிட முடியாது. இது இயலாத காரியம். விண்ணிலிருந்து இது குதித்துவிடுவதில்லை. அரு முயற்சிகளின் வாயிலாகவும் இன்னல்களின் விளைவாகவுமே இது வர முடியும்; போராட்டத்தின் வாயிலாகவே இதைத் தோன்றச் செய்ய முடியும். பழைய புத்தகங்கள் இங்கு நமக்குப் பயன்பட மாட்டா. யாரும் அவற்றை நம்ப மாட்டார்கள். அவரவருக்கும் நேரடியான வாழ்க்கை அனுபவம் அவசியமாகும். கல்ச்சாக்கும் தெனீக்கினும் சைபீரியாவிலிருந்தும் தெற்கிலிருந்தும் முன்னேறி வந்தபோது விவசாயிகள் அவர்களுடைய பக்கம்தான் இருந்தனர். விவசாயிகளுக்குப் போல்ஷிவிசம் பிடிக்கவில்லை, ஏனென்றால் போல்ஷிவிக்குகள் அவர்களுடைய தானியத்தை நிலையான நிர்ணய விலைகளுக்கு வாங்கிக் கொண்டனர். ஆனால் சைபீரியாவிலும் உக்ரேனியாவிலும் விவசாயிகள் கல்ச்சாக், தெனீக்கினது ஆட்சியை அனுபவித்தபின் அவர்கள் தமக்குள்ளது இரண்டில் ஒரு வழியேதான் என்பதை உணரலாயினர். ஒன்று முதலாளிகளுடன் சேர்ந்து கொள்வது—அப்படிச் செய்தால்

முதலாளிகள் உடனே அவர்களை நிலப்பிரபுக்களின்கீழ் அடிமை வாழ்வில் வதையும்படி இருத்திவிடுவார்கள். இரண்டாவது வழி தொழிலாளர்களைப் பின்தொடர்வது. தொழிலாளர்கள் தேனும் பாலும் பெருகியோடும் சொர்க்கம் கிடைக்கச் செய்வதாய் வாக்களிக்கவில்லை, உக்கிரமான ஒரு போராட்டத்தில் உருக்குக் கட்டுப்பாடும் வைராக்கியமும் காட்டும் படியே அவர்கள் கோருகின்றனர் என்பது மெய்தான். ஆனால் முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் அடிமைப்பட்டு வாழ்வதிலிருந்து அவர்கள் தம்மை விடுவிப்பார்கள். அறியாமை இருளில் மூழ்கியிருந்த விவசாயிகள் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாய் இதை உணர்ந்து கொண்டதும், கடுஞ்சோதனையின் வாயிலாய்ப் பாடம் பயின்றதும், அவர்கள் கம்யூனிசத்தின் உணர்வு பூர்வமான ஆதரவாளர்களாயினர். இது போன்ற அனுபவம்தான் இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் எல்லாச் செயற்பாடுகளுக்குமான அடிப்படை ஆதல் வேண்டும்.

நாம் கற்றறிய வேண்டியது என்ன, பழைய் கல்வி முறையிலிருந்தும் பழைய விஞ்ஞானத்திலிருந்தும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டியது என்ன என்கிற கேள்விகளுக்கு நான் பதிலளித்துள்ளேன். இப்பொழுது இதைக் கற்றறிவது எப்படி என்னும் கேள்விக்குப் பதிலளிக்க முயலுகிறேன். பள்ளியின் செயற்பாடுகளில் ஒவ்வொரு படியையும், பயிற்சி, கல்வி, போதனை இவற்றில் ஒவ்வொரு படியையும், சுரண்டலாளர்களுக்கு எதிராய் உழைப்பாளி மக்கள் அனைவரும் நடத்தும் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாதவாறு அதனுடன் இணைத்துக் கொள்வதன் மூலமே கற்றறிய வேண்டும் என்பதே இக்கேள்விக்குரிய பதில்.

இந்தக் கம்யூனிசப் பயிற்சி எப்படி நடந்தேற வேண்டுமென்பதைத் தெளிவாய்க் காட்டும் பொருட்டு இளைஞர் நிறுவனங்கள் சிலவற்றினுடைய பணியின் அனுபவத்திலிருந்து சில உதாரணங்கள் தருகிறேன். எழுத்தறியாமையை ஒழிப்பது குறித்து எல்லோரும் பேசி வருகிறார்கள். எழுத்தறியாத ஒரு நாட்டில் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைக்க முடியாது, இது உங்களுக்குத் தெரிந்ததே. சோவியத் ஆட்சி ஓர் உத்தரவைப் பிறப்பித்தால் மட்டும் போதாது; அல்லது கட்சி குறிப்பிட்ட ஒரு கோஷத்தை வெளி

யிட்டால் மட்டுமோ, சிறந்த தொழிலாளர்களில் சிலரை இப் பணிக்காக ஒதுக்கினால் மட்டுமோ போதாது. இளந் தலை முறையினர் தாமே இப்பணியில் இறங்கியாக வேண்டும். இளந் தலைமுறையினர், இளைஞர் கழகத்தைச் சேர்ந்த இளைஞர் களும் யுவதிகளும் இது நம்முடைய பணி, எழுத்தறியாமை யை ஒழித்திடுவதற்காக, நமது இளம் மக்களிடையே எழுத்தறியாதோர் யாரும் இல்லாதபடி செய்வதற்காக, நாம் ஒன்றுபட்டுக் கிராமப்புற வட்டாரங்களுக்குச் செல்வோம் என்று கூற வேண்டும். அதுதான் கம்யூனிசம். வளரும் தலை முறையினரைத் தமது செயல்களை இப்பணியில் ஈடுபடுத்த வைப்பதற்காக நாம் முயன்று வருகிறோம். அறியாமை இருளி லுள்ள எழுத்தறியாத ருஷ்யாவைச் சடுதியில் எழுத்தறி வுடைய நாடாய் நாம் மாற்றிவிட முடியாது என்பது உங் களுக்குத் தெரியும். ஆனால் இளைஞர் கழகம் இப்பணியில் இறங்குமாயின், இளம் மக்கள் எல்லோரும் எல்லோரது நன்மைக்காகவும் பாடுபடுவார்களாயின், 4,00,000 இளைஞர் களையும் யுவதிகளையும் உறுப்பினர்களாய்க் கொண்ட இக் கழகம் தன்னை இளங் கம்யூனிஸ்டுக் கழகமென்று அழைத்துக் கொள்ளும் உரிமையுடையதாகிவிடும். தான் அறிவு பெறுவ தோடுகூட, எழுத்தறியாமையின் பிடியிலிருந்து தம் சொந்த முயற்சிகளைக் கொண்டே விடுபட முடியாத இளம் மக் களுக்குத் துணை புரிவதும் கழகத்தின் இன்னொரு பணியாகும். இளைஞர் கழக உறுப்பினராய் இருப்பதற்கு அர்த்தம் தமது உழைப்பையும் முயற்சிகளையும் பொது இலட்சியத்துக்காகப் பணித்துக் கொள்வதுதான். கம்யூனிசக் கல்விப் போதனை என்பது இதுவேதான். இத்தகைய பணியாற்றலின் மூலமே இளைஞர்களும் யுவதிகளும் மெய்யான கம்யூனிஸ்டுகளாக முடியும். இந்தப் பணியில் நடைமுறைப் பலன்கள் பெற்றுத்தான் அவர்கள் கம்யூனிஸ்டுகளாக முடியும்.

நகரச் சுற்றுவட்டார காய்கறித் தோட்டங்கள் பயி ரிடும் பணியை உதாரணமாய் எடுத்துக் கொள்ளுங்கள். இது மெய்யான பணிக்குரிய துறை அல்லவா? இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் பணிகளில் இதுவும் ஒன்றாகும். மக்கள் பட்டினி கிடக்கிறார்கள்; ஆலைகளில் பசியும் பட்டினியும் தாண்டவ மாடுகின்றன. பட்டினியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்

கொள்ளும் பொருட்டு காய்கறித் தோட்டங்கள் வளர்த்தாக வேண்டும். ஆனல் பயிர்த்தொழில் பழைய வழியில் நடை பெற்று வருகிறது. ஆகவே அதிக அளவு வர்க்க உணர்வு படைத்த பகுதியினர் இப்பணியில் ஈடுபடுதல் வேண்டும். அப்பொழுது காய்கறித் தோட்டங்களின் எண்ணிக்கை அதி கரிப்பதையும், அவற்றின் பரப்பளவு அதிகமாவதையும், கிடைக்கும் பலன்கள் மேம்படுவதையும் காண்பீர்கள். இளங் கம்யூனிஸ்டுக் கழகம் இந்தப் பணியில் மும்முரப் பங்கு கொள்ள வேண்டும். ஒவ்வொரு கழகமும் கழகக் கிளையும் இதைத் தன் கடமையாய்க் கருத வேண்டும்.

இளங் கம்யூனிஸ்டுக் கழகம் முன்னணியில் இருந்து, ஒவ்வொரு வேலைக்கும் துணை புரிய வேண்டும், முன்முயற்சி யும் துணிவான பிரயத்தனமும் எடுத்தாக வேண்டும். கழகத் தைச் சேர்ந்தோரது போதனைகள் ஒருவேளை எனக்குப் புரி யாமல் இருக்கலாம், அந்தப் போதனைகளில் உடனடியாய் எனக்கு நம்பிக்கை ஏற்படாமல் இருக்கலாம், ஆனல் அவர் களுடைய நடைமுறைப் பணியையும் செயற்பாட்டையும் கொண்டு பார்த்தால் உண்மையில் அவர்கள் சரியான பாதை யைக் காட்டுகிறவர்கள் என்பதை உணர முடிகிறதென எந்தத் தொழிலாளியும் காணக் கூடியவாறுள்ள நிறுவன மாய் இக்கழகம் இருக்க வேண்டும்.

இளங் கம்யூனிஸ்டுக் கழகம் எல்லாத் துறைகளிலும் தனது பணியை இவ்வழியில் ஒழுங்கமைத்துக் கொள்ளத் தவறுமானல், பழைய, முதலாளித்துவப் பாதைக்கு அது சரிந்து பின்னடைகிறது என்றுதான் அதற்கு அர்த்தம். நாம் நமது கல்வியினைச் சுரண்டலாளர்களுக்கு எதிராய் உழைப்பாளி மக்கள் நடத்தும் போராட்டத்துடன் இணைத்துக் கொண்டு, கம்யூனிசப் போதனைகள் வகுத்தளிக் கும் பணிகளைச் செய்து முடிக்க உழைப்பாளி மக்களுக்குத் துணை புரிய வேண்டும்.

காய்கறித் தோட்டங்களை அபிவிருத்தி செய்தல், ஏதே னும் ஓர் ஆலையில் இளைஞர்கள், யுவதிகளின் கல்வி போதத் துக்கு ஏற்பாடு செய்தல் முதலான பணிகளுக்காகக் கழக உறுப்பினர்கள் தமக்கு எஞ்சும் ஒவ்வொரு மணி நேரத்தை யும் செலவிட வேண்டும். வறுமையால் பீடிக்கப்பட்டு அவல

நிலையிலுள்ள நாடாக இருக்கும் ருஷ்யாவைச் செல்வம் கொழிக்கும் நாடாக நாம் மாற்ற விரும்புகிறோம். இளங் கம்யூனிஸ்டுக் கழகம் தன்னைப் பள்ளிக்கூடங்களுக்குள்ளோ, கம்யூனிஸ்டுப் புத்தகங்களையும் பிரசுரங்களையும் படிப்பதி லேயோ கட்டுப்படுத்திக்கொண்டுவிடாமல், தனது கல்வியை யும் கற்றறிதலையும் பயிற்சியையும் தொழிலாளர்கள், விவ சாயிகளது உழைப்புடன் இணைத்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகளுடன் சேர்ந்து வேலை செய்வ தன் மூலமே ஒருவர் மெய்யான கம்யூனிஸ்டாக முடியும். இளைஞர் கழகத்தின் எல்லா உறுப்பினர்களும் எழுத்தறிவுள் ளோராகவும் அதே போதில் தத்தமது வேலைத் துறைகளில் முனைப்பு மிக்கோராகவும் இருக்க வேண்டுமென்பது பொது வாய் யாவராலும் உணரப்பட வேண்டும். பழைய கல்வி முறையிலிருந்து பழைய பட்டாளத்துப் பயிற்சி முறைகளை அகற்றி, அவற்றுக்குப் பதிலாய் உணர்வு பூர்வமான கட்டுப் பாட்டை அமைத்துக் கொண்டுவிட்டோம், எல்லா இளம் ஆடவரும் பெண்டிரும் சுபோத்னிக்குகளில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள், நகரங்களுக்கருகே உள்ள பண்ணை ஒவ் வொன்றையும் பயன்படுத்திப் பொது மக்களுக்கு உதவுகின் றனர் என்பதை ஒவ்வொருவரும் காணும் போது, உழைப்பினை மக்கள் பழைய முறையில் கருதுவது மறைந்து போய்விடும்.

எங்கும், கிராமத்திலும் நகரக் குடியிருப்புத் தொகுதி யிலும்—சிறியதோர் உதாரணமாய் இதைக் குறிப்பிடு கிறேன்—பொதுச் சுகாதாரம் அல்லது உணவு வினியோகம் போன்ற விவகாரங்களில் துணை புரிய ஏற்பாடு செய்வது இளங் கம்யூனிஸ்டுக் கழகத்துக்குரிய பணியாகும். பழைய, முதலாளித்துவ சமுதாயத்தில் இவையெல்லாம் எப்படிச் செய்யப்பட்டன? ஒவ்வொருவரும் தமக்காக மட்டுமே உழைத்து வந்தார். வயது முதிர்ந்தோரையும் உடல் நலமில் லாதோரையும் பற்றி யாரும் கவலைப்படவில்லை. வீட்டு வேலைகள் முற்றிலும் பெண்களுக்கே உரித்தானவையாக விடப்பட்டு, இதன் விளைவாய்ப் பெண்கள் ஒடுக்கப்பட்டு அடிமை நிலையில் இருத்தப்பட்டது குறித்து யாரும் கவலைப் படவில்லை. இதை எதிர்த்துப் போராடுவது யாருடைய பணி? இளைஞர் கழகங்களுடைய பணியாகும் இது. நாம் இவற்றை

யெல்லாம் மாறும்படிச் செய்வோம், பொதுச் சுகாதாரத்தை நிலைநாட்டவும் உணவு வினியோகம் செய்யவும் உதவக்கூடிய இளைஞர் படைகளுக்கு நாம் ஏற்பாடு செய்வோம்; இப்படையினர் வீடு வீடாய்ச் சென்று முறையாய் மேற்பார்வையிடுவர், தமது சக்திகளைச் சரியாய் வகுத்தமைத்தும் உழைப்பை ஒழுங்கமைப்பதன் அவசியத்தை நிரூபித்துக் காட்டித் தெளிவுபடுத்தியும் ஒழுங்கமைந்த முறையில் வேலை செய்து சமுதாயம் அனைத்துக்கும் நலம் பயப்பர் என்று இளைஞர் கழகங்கள் கூற வேண்டும்.

தற்போது ஐம்பது வயதான தலைமுறையைச் சேர்ந்தோர் கம்யூனிச சமுதாயத்தைத் தாம் காணலாமென்று எதிர்பார்க்க முடியாது. அதற்கு முன்பே இத்தலைமுறை மறைந்துவிடும். ஆனால் இப்பொழுது பதினைந்து வயதினராயுள்ள தலைமுறையினர் கம்யூனிச சமுதாயத்தைக் காண்பார்கள், இந்தச் சமுதாயத்தைத் தாமே கட்டியமைப்பர். தம் வாழ்க்கையின் நோக்கமே கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதுதான் என்பதை இத்தலைமுறையினர் தெரிந்துகொள்ளவேண்டும். பழைய சமுதாயத்தில் ஒவ்வொரு குடும்பமும் தனியே வேலை செய்தது, வெகுஜனங்களை ஒடுக்கி வந்த நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் தவிர வேறு யாரும் உழைப்பை ஒழுங்கமைத்திடவில்லை. எவ்வளவுதான் பிரயாசை மிகுக்கதாகவும் கையைக் கரிப்படுத்துவதாகவும் இருப்பினும் உழைப்பு அனைத்துக்கும் நாம் பின்வரும் முறையில் ஒழுங்கமைப்பு செய்யவேண்டும்: ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் சுதந்திர உழைப்பின் மாபெரும் சேனையில் நானும் ஒருவன், நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் இல்லாமலே என் வாழ்க்கையை என்னால் அமைத்துக் கொள்ள முடியும், கம்யூனிச அமைப்பை நிறுவ என்னால் உதவ முடியும் என்று கூறிக் கொள்ள முடியும்படியான முறையில் உழைப்பு அனைத்துக்கும் நாம் ஒழுங்கமைப்பு செய்ய வேண்டும். சிறு வயது* முதலாகவே இளம் மக்கள் அனைவரும்

---

* *1920* அக்டோபர் 7ஆம் தேதியிட்ட **பிராவ்தா** இதழ் *223*ல் ''சிறு வயது முதலாகவே'' என்னும் தொடருக்குப் பதிலாய்ப் ''பன்னிரண்டு, பதின்மூன்று வயது முதலாகவே'' என்னும் தொடர் காணப்படுகிறது.—(ப-ர்.)

உணர்வுபூர்வமான, கட்டுப்பாடான உழைப்பில் ஈடுபடுவதற்கு இளங் கம்யூனிஸ்டுக் கழகம் அவர்களுக்குக் கற்றுத் தந்தாக வேண்டும். இவ்விதம் செய்தால், இப்பொழுது நம்மை எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிடுமென்று நாம் திட நம்பிக்கை பெறலாம். நாட்டை மின்மயமாக்கக் குறைந்தது பத்தாண்டுகள் தேவையாயிருக்குமெனக் கொள்ள லாம். வளங் குன்றி விட்ட நமது நிலம் தொழில்நுட்பத்தின் நவநவீன சாதனைகளால் நலம் பெற மின்மயமாக்கம் வகை செய்யும். ஆக இப்பொழுது பதினைந்து வயதாகும் தலைமுறை யினர், பத்து அல்லது இருபது ஆண்டுக் காலத்தில் கம்யூ னிச சமுதாயத்தில் வாழப் போகிற இவர்கள், நாள்தோறும் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் மிகமிகச் சிறியதே, அல்லது எளியதே ஆயினும் பொது உழைப்பு சம்பந்த மான ஏதேனும் ஒரு பிரச்சினைக்கு நடைமுறைத் தீர்வு காண் பதில் ஈடுபடும் வண்ணம் தமது கல்விப் பணிகள் யாவற்றை யும் வகுத்தமைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிரா மத்திலும் இவ்வாறு செய்யப்படும்போது, கம்யூனிஸ்டு நேசப் போட்டி இயக்கம் வளர்ந்துசெல்லும்போது, இளைஞர் கள் தம்மால் தமது உழைப்பை ஐக்கியப்படுத்திக் கொள்ள முடியுமென நிரூபித்துக் காட்டும்போது, கம்யூனிச நிர்மா ணத்தின் வெற்றி உறுதியாகிவிடும். உங்களுடைய ஒவ்வொரு முயற்சியையும் இந்த நிர்மாணத்தின் வெற்றியினுடைய கண்ணோட்டத்திலிருந்து கருதுவதன் மூலமும், வர்க்க உணர்வு கொண்ட ஒன்றுபட்ட உழைப்பாளி மக்களாகும் பொருட்டு நம்மால் இயன்றது அனைத்தையும் செய்துள்ளோமா என்று நம்மையே நாம் கேட்டுக் கொள்வதன் மூலமும்தான் இளங் கம்யூனிஸ்டுக் கழகம் தனது ஐந்து லட்சம் உறுப்பினர்களை யும் ஒரு உழைப்புச் சேனையாய் ஒன்றுபடச் செய்வதிலும் எல் லோருடைய மதிப்புக்கும் உரியதாவதிலும் வெற்றி பெற முடியும். (பேராசிரியர் மிக்க கரகோஷ முழக் கம்.)

பிராவ்தா, இதழ்கள் *221, 222, 223*
1920 அக்டோபர் *5, 6, 7*

நூல் திரட்டு,
தொகுதி *41*,
பக்கங்கள் *298-318*

பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்து

புரொலெட்குல்ட்[69] காங்கிரசில் நிகழ்த்திய உரையில் தோழர் லுனச்சார்ஸ்கி, நேற்று அவரும் நானும் ஒத்துக் கொண்டதற்கு நேர் எதிரான வற்றை கூறினர் என்பதை அக்டோபர் 8 இஸ்வேஸ்தியா இதழில் காண்கிறோம்.

உடனே அவசரமாய் (புரொலெட்குல்ட் காங்கிரசுக்கான) நகல் தீர்மானம் ஒன்றை வகுத்திடுவதும், புரொலெட்குல்ட்டின் இதே அமர்வில் வாக்கெடுப்புக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காகத் தாமதமின்றி இத்தீர்மானம் மத்தியக் கமிட்டியால் அங்கீகரிக்கப்படுவதும் அவசியமாகும். கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் மேலாளர் குழுவாலும் புரொலெட்குல்ட் காங்கிரசாலும் அங்கீகரிக்கப்படுவதற்காக இன்றைக்குள்ளாகவே மத்தியக் கமிட்டியின் சார்பில் இந்தத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட வேண்டும், ஏனெனில் புரொலெட்குல்ட் காங்கிரஸ் இன்று முடிவடைகின்றது.

நகல் தீர்மானம்

1) தொழிலாளர்கள், விவசாயிகளது சோவியத் குடியரசில் கல்வித் துறைப் பணிகள் யாவும், பொதுவாய் அரசியல் கல்வித் துறையிலும் குறிப்பாய் கலைத் துறையிலுமான இப்பணிகள் யாவும், பாட்டாளி வர்க்கமானது தனது சர்வாதிகாரத்தின் நோக்கங்களை, அதாவது முதலாளித்துவ

வர்க்கத்தை வீழ்த்திடல், வர்க்கங்களை ஒழித்தல், மனிதனை மனிதன் சுரண்டுவதன் எல்லா வடிவங்களையும் அகற்றுதல் என்பனவற்றை வெற்றிகரமாய்ச் சித்தி பெறச் செய்வதற்காக நடத்தி வரும் வர்க்கப் போராட்டத்தின் மனப்பான்மையில் தோய்ந்தனவாய் இருத்தல் வேண்டும்.

2) எனவே பாட்டாளி வர்க்கம், அதன் முன்னணிப் படையின்—கம்யூனிஸ்டுக் கட்சியின்—மூலமாகவும், மற்றும் பொதுவில் பல வகையான பாட்டாளி வர்க்க நிறுவனங்களின் மூலமாகவும், பொதுக் கல்வித் துறையின் எல்லாப் பணிகளிலும் ஆகப் பெரிய அளவில் செயல்பட்டு, தலைமையான பங்கு ஆற்ற வேண்டும்.

3) நவீன கால வரலாற்றின் அனுபவம் அனைத்தும், மற்றும் குறிப்பாய், கம்யூனிஸ்டு அறிக்கை வெளிவந்தது முதலாய் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினுடைய அரை நூற்றாண்டுக்கும் மேலான புரட்சிப் போராட்டத்தின் அனுபவம் அனைத்தும், மார்க்சிய உலகக் கண்ணோட்டம் ஒன்று மட்டுமே புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களையும் கருத்தோட்டத்தையும் கலாசாரத்தையும் மெய்யாக வெளியிடுகிறது என்பதை ஐயமறத் தெளிவுபடுத்தியிருக்கின்றன.

4) புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தமாய் மார்க்சியம், வரலாற்றுச் சிறப்புடைத்த தனது முக்கியத்துவத்தைப் பெற்று வாகை சூடியுள்ளது எப்படியெனில், முதலாளித்துவச் சகாப்தத்தின் மதிப்புமிக்க சாதனைகளை நிராகரித்துவிடாமல், இதற்கு நேர் மாறாய் இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டதான மனித சிந்தனையின், கலாசாரத்தின் வளர்ச்சியில் கிட்டிய மதிப்புடைத்த ஒவ்வொன்றையும் அது கிரகித்து, திருத்தியமைத்துக் கொண்டதால்தான். இந்த அடிப்படையிலும், இந்தத் திசையிலும், சுரண்டலின் ஒவ்வொரு வடிவத்துக்கும் எதிரான போராட்டத்தின் இறுதிக் கட்டமாகிய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் நடைமுறை அனுபவத்தால் ஆதர்சமூட்டப் பெற்று, தொடர்ந்து மேலும் பணி புரிந்து செல்லுதல் மட்டுமே மெய்யான பாட்டாளி வர்க்கக் கலாசாரத்தின் வளர்ச்சியாய் ஏற்கப்பட முடியும்.

5) இம்மியும் பிறழாமல் இந்தக் கோட்பாட்டு நிலையினைப் பற்றியொழுகி, அனைத்து ருஷ்யாவின் புரொலெட்குல்ட் காங்கிரஸ், தனக்கே உரித்தான தனிப்பட்ட கலாசார ரகத்தைக் கண்டுபிடிப்பதற்கும், தன்னிறைவான நிறுவனங்களில் தனிமைப்பட்டிருப்பதற்கும், கல்வித் துறை மக்கள் கமிசாரகத்திற்கும் புரொலெட்குல்ட்டுக்குமான பணி அரங்கைப் பிரிவினை செய்யும் கோடு ஒன்றை வகுத்துக் கொள்வதற்கும், கல்வித்துறை மக்கள் கமிசாரகத்தின் கீழுள்ள நிலையங்களினுள் புரொலெட்குல்ட் ''தன்னுட்சியை'' நிறுவிக் கொள்வதற்கும், இன்ன பலவற்றுக்குமான எல்லா முயற்சிகளையும் தத்துவார்த்த முறையில் தவறுனவையாகவும், நடைமுறையில் தீயனவாகவும் மிகவும் உறுதியாய் நிராகரிக்கின்றது. இம்முயற்சிகளுக்கு நேர் மாறுய், புரொலெட்குல்ட் நிறுவனங்கள் யாவும் கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் கீழுள்ள நிலையங்களது பின்னலமைப்பின் துணை அங்கங்களாய்ச் செயல்படுவது தமக்குரிய கடமையாகுமென்று முழு அளவுக்குக் கருதும்படியும், இவை தமது பணிகளை சோவியத் ஆட்சியதிகார அங்கங்களின் (குறிப்பாய், கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின்), மற்றும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுவான வழிகாட்டுதலின் கீழ், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் பணிகளின் ஒரு பிரிவாய்க் கொண்டு, செய்து முடிக்கும்படியும் இந்தக் காங்கிரஸ் இவற்றைப் பணிக்கின்றது.

* * *

தோழர் லுனச்சார்ஸ்கி தமது சொற்கள் திரித்துப் புரட்டிக் கூறப்பட்டுவிட்டதாய்க் கூறுகிறார். அப்படியானால் இந்தத் தீர்மானம் இன்னுங்கூட அவசர அவசியத் தேவையாகும்.

1920 அக்டோபர் 8ல் எழுதப்பெற்றது

முதன்முதல் *1926*ல்
கிராஸ்னயா நோவ்,
இதழ் *3*ல் வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி *41*,
பக்கங்கள் *336-337*

குபேர்னியா, உயெஸ்து கல்வி இலாகாக்களின் அரசியல் கல்விப் பணித்துறையாளர்களது அனைத்து-ருஷ்ய மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு 1920 நவம்பர் 3

தோழர்களே, சில கருத்துக்கள் குறித்துப் பேசுவதற்கு அனுமதியுங்கள். இக்கருத்துக்களில் சில, அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி நிறுவப்பட்டது சம்பந்தமாய் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியாலும் மக்கள் கமிசார் அவையாலும் எடுத்துரைக்கப்பட்டவை; வேறு சில மக்கள் கமிசார் அவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நகல் சம்பந்தமாய் எனக்குத் தோன்றியவை. இந்த நகல் ஓர் அடிப்படையாய் நேற்று ஏற்கப்பட்டது; இதன் விவரங்கள் இனிமேல்தான் விவாதிக்கப்பட்டாக வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை உங்கள் நிலையத்தின் பெயரில் எந்த மாற்றமும் செய்யப்படுவது எனக்கு முதலில் சிறிதும் பிடிக்கவில்லை என்பதை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில், கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் பணி மக்கள் கற்றறிந்து கொள்வதற்கும் ஏனையோருக்குப் போதனை செய்வதற்கும் துணை புரிவதாகும். பெயர்களைச் சிறுபிள்ளைத்தனமான வேடிக்கைகளாய்க் கருத எனது சோவியத் அனுபவம் எனக்குக் கற்றுத் தந்துள்ளது. எப்படியும் எந்தப் பெயரும் அதற்குரிய வழியில் ஒரு வேடிக்கையேதான். அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி என்று மற்றொரு பெயர் இப்பொழுது அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

இந்த விவகாரம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டதால், இதை நீங்கள் தனிப்பட்ட சொந்த முறையிலான ஒரு கருத்துரை என்பதற்கு மேலாய் எடுத்துக் கொள்ளக்

கூடாது. வெறும் பெயர்க் குறிப்பிலான மாற்றத்துடன் இந்த விவகாரம் முடிவுற்றுவிடுவதாய் இருப்பின் அது வர வேற்கப்பட வேண்டியதுதான்.

கலாசார, கல்விப் பணித் துறையில் புதிதாய்ப் பலரை யும் ஈர்த்துக் கொள்வதில் நாம் வெற்றி பெற்றுல், அது வெறும் பெயர் மாற்றமாய் இராது; அப்பொழுது ஒவ்வொரு புதிய முயற்சிக்கும் ஒவ்வொரு புதிய நிலையத்துக்கும் ஒரு பெயர்க் குறிப்பை ஒட்டிவைக்கும் ''சோவியத்'' பலவீனத் தைப் பொறுத்துக் கொண்டுவிடலாம். நாம் வெற்றி பெற்றுல் என்றையும்விடக் கூடுதலாய் ஒன்றை சாதித்துக் கொண்ட வர்கள் ஆகிவிடுவோம்.

கல்வித் துறைக்கும் நமது கொள்கைக்குமுள்ள இணைப்புதான், நமது கலாசார, கல்விப் பணித் துறையில் நம் முடன் பலரையும் வந்து சேர்ந்து கொள்ளச் செய்வதற்குரிய பிரதான தூண்டுதலாய் இருத்தல் வேண்டும். பெயரானது, அது தேவையாய் இருப்பின், ஏதேனும் ஒன்றை எடுத் துரைக்கலாம். கல்வியானது அரசியல் சார்பில்லாதது என்ற பழைய நோக்குநிலையை நமது கல்விப் பணித் துறையின் நெடுகிலும் நாம் விட்டொழித்தாக வேண்டும்; அரசியலி லிருந்து தனிமைப்பட்டு, கல்விப் பணியை நாம் நடத்திச் செல்வது முடியாத காரியம்.

முதலாளித்துவச் சமுதாயத்தில் அந்தக் கருத்து எப் பொழுதுமே ஆதிக்கத்தில் இருந்து வந்துள்ளது. ''அரசியல் நாட்டமில்லா'' அல்லது ''அரசியல் சார்பில்லா'' கல்வி என்னும் தொடர் முதலாளித்துவக் கபடமே ஆகும்; 99 சத வீதத்தினர் மதச்சபை, தனியார் சொத்துரிமை முதலான வற்றின் ஆட்சியால் இழிவுபடுத்தப்பட்டும் கேவலப்படுத்தப் பட்டும் வருகிறார்கள், இவ்வெகுஜனங்களை வஞ்சிப்பதற்கான ஏமாற்றே அன்றி வேறு எதுவும் அல்ல இது. எல்லா முத லாளித்துவ நாடுகளிலும் இன்னமும் ஆதிக்கத்தில் இருந்து வரும் முதலாளித்துவ வர்க்கம் வெகுஜனங்களை இப்படி தான் ஏமாற்றி வருகின்றது.

இத்தகைய நாடுகளில் அரசியல் பொறியமைவு எவ் வளவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிற தோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது மூலதனத்திடமிருந்தும்

மூலதனத்தின் கொள்கையிடமிருந்தும் குறைவான அளவுக்கு சுயேச்சையுடையதாய் இருக்கின்றது.

முதலாளித்துவ அரசுகள் யாவற்றிலும் அரசியல் பொறியமைவுக்கும் கல்விக்குமுள்ள இணைப்பு வலுமிக்கதாகவே இருக்கிறது, ஆனால் முதலாளித்துவச் சமுதாயத்தால் ஒளிவுமறைவின்றி இதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. ஆயினும் இந்தச் சமுதாயம் மதச்சபை மூலமும் தனியார் சொத்துரிமை அமைப்பின் மூலமும் வெகுஜனங்களுக்கு நெறி புகட்டிப் போதமளித்தே வருகின்றது.

நம்முடைய உண்மையினை முதலாளித்துவத்துக்குரிய ''உண்மைக்கு'' எதிராய் முன்வைத்து நமது உண்மைக்கு அங்கீகாரம் கிடைக்கச் செய்வது நம்முடைய அடிப்படைப் பணிகளில் ஒன்றாகும்.

முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து பாட்டாளி வர்க்கக் கொள்கைக்கு மாறிச்செல்வது மிகவும் கடினமானது, முதலாளித்துவ வர்க்கம் தனது கிளர்ச்சி, பிரசார சாதனங்கள் அனைத்தையும் கொண்டு ஓயாது ஒழியாது நம்மை அவதூறு செய்வதால் இது மேலும் கடினமாகிவிடுகிறது. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்திற்குரிய இதனிலும் முக்கியமான பணித்திட்டமான அதன் கல்விப் பணித்திட்டத்தை இந்த முதலாளித்துவ வர்க்கம் இழித்தும் பழித்தும் கூற முழு முயற்சி செய்கிறது. தேசமக்களில் பாட்டாளி வர்க்கம் சிறுபான்மையாய் இருக்கும் ருஷ்யாவுக்கு இப்பணித்திட்டம் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது. ருஷ்யாவில் கல்விப் பணிக்கு முதன்மை இடம் அளிக்க வேண்டும், ஏனெனில் சோஷலிசத்தைக் கட்டியமைக்க நாம் வெகுஜனங்களைத் தயார் செய்தாக வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் கூர்மையான வர்க்க உணர்வையும் கண்டிப்பான கட்டுப்பாட்டையும் ஆழ்ந்த பற்றுறுதியையும்—வேறு விதமாய்க் கூறுவதெனில் அதன் பழம்பெரும் பகையான முதலாளித்துவ வர்க்கத்தின் மீது முழுநிறை வெற்றி பெறப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தேவையான எல்லாப் பண்புகளையும்—வளர்த்திராவிடில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் சிறிதும் சாத்தியமற்றதாய்ப் போயிருந்திருக்கும்.

தொழிலாளி வெகுஜனங்கள் சோஷலிச சமுதாயத்துக்குத் தயாராகிவிட்டனர் என்ற கற்பனாவாதக் கருத்தினை நாம் கொண்டிருக்கவில்லை. இக்கருத்து உண்மை யல்ல, சோஷலிசத்துக்கான தயார்நிலை பெருவீதத் தொழில் துறையாலும் வேலைநிறுத்தப் போராட்டத்தாலும் அரசியல் நிறுவன ஒழுங்கமைப்பாலும் மட்டுமே உண்டாக்கப்படுகிறது என்பதைத் தொழிலாளி வர்க்க சோஷலிசத்தின் வரலாறு அனைத்தும் அளித்திடும் துல்லியமான உண்மைகளிலிருந்து நாம் அறிவோம். வெற்றி வாகை சூடி சோஷலிசப் புரட்சியைச் சாதிப்பதற்கு, பாட்டாளி வர்க்கம் ஒன்றுபட்டுச் செயல்படக் கூடியதாய் இருத்தல் வேண்டும், சுரண்டலாளர்களை வீழ்த்தும் திறனுடையதாய் இருத்தல் வேண்டும். தேவையான இந்தப் பண்புகள் யாவற்றையும் அது பெற்றுக் கொண்டுவிட்டது, ஆட்சியதிகாரம் வென்றபோது தனது இப்பண்புகளை அது செயலரங்கில் நிரூபித்துக் காட்டிற்று என்பதை இப்பொழுது நாம் காண்கிறோம்.

கல்வித் துறைப் பணியாளர்களும் இப்போராட்டத்தில் முன்னணிப் படையாகிய கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிலாளி வெகுஜனங்கள் பழைய அமைப்பிலிருந்து மரபுரிமையாய் நாம் பெற்றுக் கொண்ட பழைய வழிமுறைகளையும், பழக்கப்பட்டு இறுகிப் போன மாறுத மாமூல் நடைமுறைகளையும், வெகுஜனங்கள் முழுக்க முழுக்க மூழ்கி ஊறிவிட்ட தனியார் சொத்துரிமைப் பழக்கங்களையும் உதறியெறியும் பொருட்டு அவர்கள் அறிவொளி பெற உதவுவதும் அவர்களுக்குப் போதம் அளிப்பதும் தமது அடிப்படை கடமையாகுமெனக் கருத வேண்டும். சோஷலிசப் புரட்சி அனைத்துக்குமுள்ள இந்த அடிப்படை கடமையானது, கட்சியின் மத்தியக் கமிட்டியும் மக்கள் கமிசாரவையும் இவ்வளவு அதிகமாய் கவனம் செலுத்தும்படியாகியுள்ள தனிப்பட்ட பிரச்சினைகளின் பரிசீலனையின்போது கணமும் மறக்கப்படலாகாது. அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி எவ்வகை அமைப்புடையதாய் இருக்கவேண்டும்? பிற நிறுவன அமைப்புகளுடன் எப்படி அது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்? மத்திய அமைப்புடன் மட்டுமின்றி, ஸ்தல அமைப்புகளுடன் எப்படி அது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்? இந்த விவ

காரத்தில் அதிகத் தகுதியுடையோராகிய தோழர்கள், ஏற்கனவே கணிச அளவு அனுபவம் பெற்றுள்ளவர்களும் இந்த விவகாரத்தைத் தனிப்பட ஆராய்ந்தறிந்துள்ளவர்களுமான இவர்கள் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்கள். இங்கு உள்ளடங்கிய பிரதான கோட்பாடுகளை மட்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். விவகாரத்தை நாம் ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்து, பழைய பொய்மைகளை எல்லாம் மீறிச் சென்று, கல்வியானது அரசியலுடன் இணைப்பின்றி இருக்க முடியாது என்பதைப் பகிரங்கமாய் வற்புறுத்தியாக வேண்டும்.

உலக முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். இந்த முதலாளித்துவ வர்க்கம் நம்மைக் காட்டிலும் மிகுந்த பலமுடையது. போராட்டத்தின் இந்தக் கட்டத்தில் நாம் புரட்சியின் வளர்ச்சியைப் பாதுகாத்துக் கொண்டாக வேண்டும், முதலாளித்துவ வர்க்கத்தை நாம் இராணுவ அர்த்தத்திலும் இன்னும் அதிகமாய் நமது சித்தாந்தத்தின் மூலமாகவும், கல்வி மூலமாகவும் போராடியாக வேண்டும். தொழிலாளி வர்க்கம் அரசியல் சுதந்திரத்துக்காகப் பல பத்தாண்டுகளாய் நடத்திய போராட்டத்தின் வாயிலாகப் பெற்றுக் கொண்ட பழக்கங்களும் மரபுகளும் உறுதியான கருத்துக்களும்—இந்தப் பழக்கங்கள், மரபுகள், கருத்துக்களின் ஒட்டுமொத்தத் தொகுதி—உழைப்பாளி மக்கள் அனைவரது கல்வி போதத்துக்குமான ஓர் உபகரணமாய்ப் பயன்பட வேண்டும். உழைப்பாளி மக்களுக்கு எப்படிப் போதமளிப்பது என்பது குறித்துத் தீர்மானிக்க வேண்டியது பாட்டாளி வர்க்கத்துக்குள்ள பொறுப்பாகும். உலகில் மேலும் மேலும் எல்லா முதலாளித்துவ நாடுகளுக்கும் தற்போது பரவி வரும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்திலிருந்து விலகி நிற்பது, சர்வதேச அரசியலிலிருந்து விலகி நிற்பது முடியாத காரியமாகும், இது மன்னிக்க முடியாத ஒன்றாகும் என்கிற உணர்வை நாம் உழைப்பாளி மக்களுக்கு ஊட்டியாக வேண்டும். சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய் உலகின் வலிமை மிக்க எல்லா முதலாளித்துவ நாடுகளின் கூட்டணி—இதுவே இன்றைய சர்வதேச அரசியலின்

மெய்யான அடிப்படை. முதலாளித்துவ நாடுகளின் கோடானு கோடியான தொழிலாளி மக்களுடைய கதி இதையே பொறுத் திருக்கிறது என்பதை எப்படியும் உணர்ந்து கொண்டு விடலாம். முதலாளித்துவ நாடுகளது ஒரு சிறு கோஷ்டியின் பிடிக்குள் இல்லாத மூலைமுடுக்கு எதுவும் தற்போது உலகில் இல்லை என்பதை அறிவோம். இவ்வாறு இரண்டில் ஒரு வழி யே எவரையும் எதிர்நோக்கும்படியான விதத்தில் சூழ்நிலை உருவாகி வருகின்றது: தற்போது நடைபெறும் போராட் டத்திலிருந்து விலகி ஒதுங்கி நின்று, இதன் மூலம் கிஞ்சித்தும் தாம் அரசியல் உணர்வில்லாதவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவது, அதாவது, புரட்சியிலிருந்தும் யுத்தத்திலிருந் தும் ஒதுங்கி நின்றுள்ளவர்களையும் முதலாளித்துவ வர்க்கம் அப்பட்டமாய் வெகுஜனங்களை ஏமாற்றுவதையும் வேண்டு மென்றே இவ்வர்க்கம் திட்டமிட்டு வெகுஜனங்களை அறி யாமை இருளில் இருத்தி வைப்பதையும் காணத் தவறுகிறவர் களையும் போல, இருளில் வதைபடும் இந்தக் கபோதிகளைப் போல, தமது அரசியல் உணர்வின்மையை நிரூபித்துக் காட்டுவது; இல்லையேல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத் துக்கான போராட்டத்தில் சேர்ந்து கொள்வது.

பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் போராட்டம் குறித்து நாம் ஒளிவுமறைவின்றி முற்றிலும் பட்டவர்த்தனமாகவே பேசுகின்றோம். ஒன்று நம் பக்கம் அல்லது எதிர்ப் பக்கம்— இரண்டில் எதனுடன் சேர்ந்து கொள்வதென்பதை ஒவ் வொருவரும் தெரிந்தெடுத்துக் கொண்டாக வேண்டும். இந்தப் போராட்டத்தில் எப்பக்கத்திலும் சேராதிருக்கலாம் என்ற முயற்சி எதுவும் படுதோல்வியாகவே முடிவுறும்.

யுதேனிச்சுகளாலும் கல்ச்சாக்குகளாலும் பெத்லியூராக் களாலும் மஹ்னோக்களாலும் ஏனையோராலும் பிரதிநிதித் துவம் செய்யப்படும் கேரென்ஸ்கி கும்பல்[70], சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், சமூக-ஜனநாயகவாதிகள் ஆகி யோரின் பல மீதமிச்சங்களைக் கவனிக்கையில், ருஷ்யாவின் பல்வேறு பகுதிகளிலும் செயல்படும் எதிர்ப்புரட்சியின் பல் வேறுபட்ட வடிவங்களும் சாயல்களும் நமக்குத் தெளிவாய் விளங்குகின்றன; இந்நிலைமையில் நாம் ஏனைய எவரையும் விட அதிகமாய்ப் போராட்டத்தில் புடமிடப்பட்டு உருக்கு

உறுதி பெற்றுள்ளவர்களாய் நம்மைக் கருதிக் கொள்ளப் நியாயம் இருக்கிறது. மேலைய ஐரோப்பாவின் பக்கம் பார்வை யைத் திருப்புவோமாயின், நம் நாட்டில் நடைபெறுவதே அங்கும் நடைபெறுவதை—நமது வரலாறே திரும்பவும் அங்கு நடந்தேறுவதை—காண்கிறோம். அனேகமாய் ஒவ் வோர் இடத்திலும் முதலாளித்துவ வர்க்கத்தாருடன் கூடவே கேரென்ஸ்கி கும்பலை ஒத்தக் கூறுகள் இருக்கக் காண் கிறோம். பல நாடுகளில், முக்கியமாய் ஜெர்மனியில் இவை ஆதிக்க நிலையில் இருந்து வருகின்றன. எங்கும் அதே உண்மை யைக் காண முடிகிறது—இடைப்பட்டதான ஒரு நிலையை ஏற்பது சாத்தியமற்றதாய் இருத்தலையும், ஒன்று வெள்ளைப் படையினரது சர்வாதிகாரம் (மேலைய ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கம் நம்மை எதிர்த்துப் படைபலம் திரட்டுவதன் மூலம் இதற்குத்தான் தயார் செய்து வருகிறது), இல்லையேல் பாட்டாளி வர்க்கச் சர்வாதி காரம், இரண்டில் ஒன்றே இருக்க முடியுமென்ற தெளி வான உணர்வு ஏற்படுதலையும்தான் காண்கிறோம். இதை நாம் மிகவும் கூர்மையாகவும் ஆழமாகவும் அனுபவித்திருப் பதால், நான் ருஷ்யக் கம்யூனிஸ்டுகளைப் பற்றி அதிகமாய்ப் பேசத் தேவையில்லை. எனவே ஒரேயொரு முடிவு மட்டுமே சாத்தியம், அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி குறித்த எல்லா வாக்குவாதங்களுக்கும் தத்துவங்களுக்கும் அடிநிலை யாய் அமைய வேண்டிய முடிவு இது: கம்யூனிஸ்டுக் கட்சிக் கொள்கையின் முதன்மை நிலை இந்தக் கமிட்டியின் பணித் துறையில் ஒளிவுமறைவின்றி அங்கீகரிக்கப்பட வேண்டுமென் பதே இந்த முடிவு. வழிகாட்டுதலுக்கான வேறு எந்த வடிவத்தையும் நாம் அறியோம், எந்த நாட்டிலும் வேறு எது வும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. கட்சி அதன் வர்க்கத் தினுடைய நலன்களை ஓரளவுக்கே பிரதிபலிப்பதாய் இருக்க லாம்; அது மற்றங்களுக்கோ திருத்தங்களுக்கோ உள்ளாக லாம்; ஆனால் கட்சியைக் காட்டிலும் சிறப்பான ஒரு வடி வத்தை இதுகாறும் நாம் அறிந்ததில்லை. உலக ஏகாதிபத்தி யத்தின் தாக்குதலை மூன்று ஆண்டுகளாய் எதிர்த்து நின்று சமாளித்திருக்கும் சோவியத் ருஷ்யாவின் போராட்டத்தின் போக்கு அனைத்துமே, பாட்டாளி வர்க்கம் போதகனுகவும்

ஒழுங்கமைப்பாளஞகவும் தலைவஞகவும் தான் ஆற்ற வேண்டிய பணியை—இப்பணி ஆற்றப்படாமல் முதலாளித்துவத்தின் வீழ்ச்சி சாத்தியமன்று—ஆற்றுவதற்கு அதற்கு உதவி புரிவதற்காகக் கட்சியானது உணர்வுபூர்வமாய் முன்வந்து பாடுபட்டதென்னும் உண்மையுடன் இணைந்திருக்கிறது. உழைப்பாளி வெகுஜனங்கள், விவசாயிகளும் தொழிலாளர் களுமான வெகுஜனங்கள், பழைய அறிவுத்துறைவாதப் பழக்க வழக்கங்களை விட்டொழித்தாக வேண்டும், கம்யூ னிசத்தைக் கட்டியமைத்திடும் பணிக்காக மறுகல்வி பெற்று தம்மைப் பயிற்றுவித்துக் கொண்டாக வேண்டும். இல்லையேல் கட்டுமானப் பணியை மேற்கொள்வது முடியாத காரியம். இது மிகவும் கடினமான விவகாரம் என்பதை நமது அனு பவம் அனைத்துமே தெளிவுபடுத்துகின்றது. ஆகவே நாம் கட்சியின் முதன்மை நிலைக்கு தலையாய முக்கியத்துவம் அளித்திட வேண்டும், நமது செயற்பாடுகளையும் நமது நிறு வன ஒழுங்கமைப்பின் வளர்ச்சியையும் பற்றி விவாதிக்கை யில் ஒருபோதும் இதை மறக்கலாகாது. இதை எப்படிச் செய்ய வேண்டுமென்பது இனிமேல்தான் விவரமாய் விவா திக்கப்பட்டாக வேண்டும். கட்சியின் மத்தியக் கமிட்டியி லும் மக்கள் கமிசாரவையிலும் இது விவாதிக்கப்பட்டாக வேண்டும். நேற்று அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி சம்பந்தமான அடிப்படைகளை வகுத்தளிக்கிறது; ஆனல் இன்னும் இது மக்கள் கமிசாரவை யில் எல்லாக் கட்டங்களையும் கடந்து வந்ததாகவில்லை. இந்த அரசாணை வருகிற சில நாட்களுக்குள் வெளியிடப்படும், இறுதி வடிவில் இது வெளியானதும் கட்சியுடனை உறவுகள் குறித்து இதில் நேரடியாய் எதுவும் கூறப்படவில்லை என்பதைக் காண் பீர்கள்.

ஆயினும், சட்டப்படியும் நடைமுறையிலும் சோவியத் குடியரசின் அரசியலமைப்புக்கு அடிபடையாய் இருக்கும் கொள்கைவழியை நாம் அறிந்திருக்க வேண்டும், நினைவில் கொண்டிருக்க வேண்டும்.பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்த கம்யூனிஸ்டுக் கூறுகளைத் தமது மனப்பான்மையைப் பாட்டாளி வர்க்கத்தினுள் ஊடுருவிச் சென்று நிரம்பும்படி யும், தம்மை அது பற்றியொழுகும்படியும், இவ்வளவு கால

மாய் நாம் ஒழித்துக் கட்ட முயன்று வரும் முதலாளித்துவ ஏமாற்றைக் காணுமாறு அதை விழிப்புறும்படியும் செய்வ தென்ற ஒரே கோட்பாட்டிற்கு ஏற்ப கட்சியானது பிழை நீக்கி ஒழுங்கு செய்தும் விதிமுறை வகுத்தும் கட்டியெழுப்பி யும் செல்கிறது என்பதே இந்த அடிப்படைக் கொள்கைவழி. கல்வித் துறை மக்கள் கமிசாரகம் நீண்ட நெடும் போராட் டம் நடத்தி முன்னேறி வந்திருக்கிறது. ஆசிரியர்களுடைய நிறுவனம் நெடுங் காலம் வரை சோஷலிசப் புரட்சியை எதிர்த்து வந்தது. ஆசிரியர்களிடையே முதலாளித்துவத் தப் பெண்ணங்கள் ஆழமாய் வேர்விட்டிருந்தன. நேரடியான சீர்குலைவின் வடிவிலும், விடாப்பிடியான முதலாளித்துவத் தப்பெண்ணங்களின் வடிவிலும் நீண்ட போராட்டம் நடை பெற்றிருக்கிறது. கம்யூனிஸ்டு நிலைகளுக்காக நாம் சிறுகச் சிறுகவும் படிப்படியாகவும் போராடி இவற்றைக் கைவரப் பெறச் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி கல்விக்கூடத்துக்குப் புறத் தமைந்த கல்வியில், வெகுஜனங்களுக்குக் கல்வியும் அறி வொளியும் அளிக்கும் பணியில் கருத்து செலுத்துகின்றது. இக்கமிட்டி, ஐந்து லட்சம் பேரைக் கொண்ட இந்த ஆசிரியர் படைவரிசையை, இப்பொழுது தொழிலாளர்களுக் காகச் சேவை புரித்திடும் இந்தப் பெரிய நிறுவன அமைப்பை, தன்னைப் பற்றியொழுகச் செய்து, தனது மனப்பான்மையினை இதற்கு ஊட்டி, தனது முன்முயற்சியை அளித்து இதை உயிர்த் திறன் பெற வைக்கும் முயற்சியுடன் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை இணைந்து ஒன்றுபடச் செய்வதென்னும் தெளி வான பணியை எதிர்நோக்குகிறது. கல்விப் பணித்துறை யாளர்கள்—ஆசிரியர்கள்—முதலாளித்துவத் தப்பெண்ணங் கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் மனப்பாங்கில், பாட் டாளி வர்க்கத்துக்குப் பகைமையான மனப்பாங்கில் பயிற்று விக்கப்பட்டவர்கள். பாட்டாளி வர்க்கத்துடன் இவர்கள் பிணைப்புக்கள் இல்லாதோராய் இருந்துள்ளவர்கள். கட்சி யுடனும் அதன் கருத்துக்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு, கட்சியின் மனப்பான்மையிலே தோய்ந்தோரா யும், தொழிலாளி வெகுஜனங்களை ஈர்த்து, கம்யூனிச மனப் பான்மையை அவர்களுக்கு ஊட்டி, கம்யூனிஸ்டுகள் செய்து

வரும் காரியங்களில் அவர்களுக்கு அக்கறை உண்டாக்கக் கூடியோராயும் இருக்கும் ஆசிரியர்கள், பயிற்சியாளர்களது புதிய படைவரிசை ஒன்றை இப்பொழுது நாம் பயிற்றுவித்தாக வேண்டும்.

பழைய பழக்கங்களும் வழக்கங்களும் கருத்துக்களும் விட்டொழிக்கப்பட வேண்டுமாதலால், அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டியின் முன்பும், அதன் ஊழியர்கள் முன்பும் மிகவும் முக்கியமான ஒரு பணி எழுகின்றது. இதை அவர்கள் தம் மனத்தில் யாவற்றுக்கும் முன்னணியில் கொண்டிருக்க வேண்டும். இங்கே இக்கட்டான ஒரு நிலைமை நம்மை எதிர் நோக்குகிறது: மிகப் பெரும் பகுதியோர் பழைய மரபினராயிருக்கும் ஆசிரியர்களுக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும், அதாவது கம்யூனிஸ்டுகளுக்கும் எப்படி நாம் ஒரு பிணைப்பை உண்டாக்குவது? இது மிகவும் கடினமான ஒரு பிரச்சினை, கணிச அளவில் சிந்தனை தேவைப்படும் ஒரு பிரச்சினை.

இப்படி வேறுபடுகிறவர்களிடையே நிறுவனப் பிணைப்புக்களை ஏற்படுத்தும் வழி குறித்துப் பரிசீலிப்போம். கம்யூனிஸ்டுக் கட்சியின் முதன்மை நிலை அவசியமென்பது குறித்து, கோட்பாட்டு அளவில் நமக்குக் கணமும் ஐயப்பாடு எழ முடியாது. ஆகவே, அரசியல் கலாசாரத்தின், அரசியல் கல்வி போதனையின் நோக்கம், பொய்மையையும் தப்பெண்ணங்களையும் ஒழித்துக் கட்டக் கூடியோரும், பழைய அமைப்பைத் தோற்கடித்து, முதலாளிகள் இல்லாத, சுரண்டலாளர்கள் இல்லாத, நிலப்பிரபுக்கள் இல்லாத ஓர் அரசை அமைத்திட வெகுஜனங்களுக்குத் துணை புரியக் கூடியோருமாகிய மெய்யான கம்யூனிஸ்டுகளைப் பயிற்றுவிப்பதே ஆகும். இதைச் செய்வது எப்படி? முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து மரபுரிமையாய் இந்த ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட அறிவின் முழுமொத்தத்தையும் கிரகித்துக் கொள்வது ஒன்றுதான் இதற்குரிய வழி. இதைச் செய்யவில்லையானால் கம்யூனிசம் தொழில்நுட்பச் சாதனைகள் காண்பது சாத்தியமன்று, இந்தச் சாதனைகள் கிட்டுமென்ற நம்பிக்கைகள் யாவும் வெறும் பகற் கனவுகளாகிவிடும். ஆகவே இக்கேள்வி எழுகின்றது: தமது வேலையில் அரசியலை, முக்கியமாய் நமக்கு அனுகூலமான அரசியலை, அதாவது கம்யூனிசத்துக்கு அவசிய

மான அரசியலை, கொண்டு வந்து பழக்கப்படாத இவர்களை எப்படி நாம் ஒழுங்கமையச் செய்வது? ஏற்கனவே நான் கூறியது போல் இது மிகவும் கடினமான பிரச்சினையாகும். இந்த விவகாரத்தை நாங்கள் மத்தியக் கமிட்டியில் விவாதித் திருக்கிறோம்; இதை விவாதிக்கையில் நாங்கள் அனுபவத் தின் படிப்பினைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள முயன் றிருக்கிறோம். இன்று நான் உரை நிகழ்த்தும் இந்தக் காங் கிரசை ஒத்த ஒன்று, உங்களுடைய இந்த மாநாட்டைப் போன்ற ஒன்று, இத்துறையில் மிகவும் பயனுடையதாயிருக் கும். கட்சிக் கமிட்டி ஒவ்வொன்றும் இப்பொழுது ஒவ்வொரு பிரசாரகரையும் ஒரு புதிய கோணத்திலிருந்து பார்த்தாக வேண்டும்; முன்பெல்லாம் இவர் குறிப்பிட்ட குழு, குறிப் பிட்ட நிறுவனத்தைச் சேர்ந்தவராக மட்டுமே கருதப்பட்டு வந்தார். இந்தப் பிரசாரகர் ஒவ்வொருவரும் அரசு அனைத் தையும், முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான சோவியத் ருஷ்யாவின் உலகப் போராட்டத்தையும் நெறியாண்மை புரியும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவராவார். போராடும் வர்க் கம் ஒன்றின், பிரம்மாண்ட அரசுப் பொறியமைவு ஒன்றை நடத்தும், நடத்தவே வேண்டியுள்ள ஒரு கட்சியின் பிரதிநிதி அவர். பல கம்யூனிஸ்டுகள், தலைமறைவான பணித்துறை யின் உன்னதப் பள்ளியில் பயின்றுள்ளோரும், போராட்டத் தில் சோதிக்கப் பெற்றும் புடமிடப்பட்டுமுள்ளோருமாகிய இவர்கள், கிளர்ச்சியாளரையும் பிரசாரகரையும் கிளர்ச்சி யாளர்களது தலைவராய், பிரம்மாண்டமான அரசியல் நிறு வன ஒழுங்கமைப்பில் ஒரு தலைவராய் ஆக்கிவிடும் இந்த மாற்றத்தின், இந்த வளர்ச்சிப் போக்கின் முழு முக்கியத்து வத்தையும் புரிந்து கொள்ள விரும்பாதோராய், அல்லது புரிந்து கொள்ள முடியாதோராய் இருக்கின்றனர். இவருக்கு இடப்படும் பட்டப் பெயர், பொதுப் பள்ளிகளின் மேலாளர் என்பது போன்ற சங்கடமான பெயருங்கூட, முக்கியமான தல்ல; திளரான ஆசிரியர்களுக்கு இவர் தலைமை தாங்கக் கூடியவராய் இருக்க வேண்டியதுதான் முக்கியமானது.

லட்சக் கணக்காயுள்ள ஆசிரியர்கள் இந்தப் பணித் துறையை இயங்கச் செய்து, சிந்தனையைத் தூண்டிவிட்டு, இது நாள் வரை வெகுஜனங்களிடம் தொடர்ந்து நிலவும் தப்

பெண்ணங்களை எதிர்த்துப் போராடும் ஓர் அமைப்பு ஆவர் என்பதைக் கூறியாக வேண்டும். முதலாளித்துவக் கலாசாரத்தின் பாரம்பரியம், பெருந் திரளான ஆசிரியர்கள் இதன் குறைபாடுகளிலே ஊறியோராய் இருக்கிறார்கள், இவர்கள் கம்யூனிஸ்டுகளாக முடியாதபடி இவை தடுக்கின்றன என்னும் இந்த உண்மை, இந்த ஆசிரியர்களை நாம் அரசியல் கல்விப் பணித்துறையாளர்களின் அணிகளில் சேர்த்துக் கொள்வதற்குத் தடையாகிவிடக் கூடாது. ஏனெனில் இந்த ஆசிரியர்கள் அறிவின் உடைமையாளர்களாய் இருக்கின்றனர், இவர்களுடைய இந்த அறிவு இல்லையேல் நம்முடைய குறிக்கோளை நாம் சித்திப் பெறச் செய்ய முடியாது.

பயனுள்ளோரை லட்சக் கணக்கில் கம்யூனிசக் கல்விப் பணித்துறையில் நாம் ஈடுபடச் செய்ய வேண்டும். போர் முனையில் நமது செஞ்சேனையில் இப்பணி செய்யப்பட்டது; பழைய சேனையின் பிரதிநிதிகள் பத்தாயிரக் கணக்கில் செஞ்சேனையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மறுகல்வி பெறுதல் என்னும் நீண்ட நிகழ்ச்சிப் போக்கின் மூலம் இவர்கள் செஞ்சேனையில் இரண்டறக் கலந்து கொண்டனர், இதனை இவர்கள் தமது வெற்றிகளின் வாயிலாய் முடிவாய் நிரூபித்துக் காட்டினர். நமது கலாசார, கல்விப் பணித்துறையில் நாம் பின்பற்ற வேண்டிய ஓர் உதாரணமாகும் இது. இந்தப் பணி அவ்வளவு கோலாகலமானதாய் இல்லை என்பது மெய்தான், ஆனால் இது அதனிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒவ்வொரு கிளர்ச்சியாளரும் பிரசாரகரும் நமக்குத் தேவைப்படுகின்றார். இவர் கண்டிப்பான கட்சி மனப்பான்மையுடன் வேலை செய்வாராயின், தமது பணியை நிறைவேற்றுகிறவராவார்; ஆனால் அதேபோது இவர் கட்சிப் பணியின் வரம்புக்குள் தம்மை இருத்திக் கொண்டுவிடாமல் இருக்க வேண்டும்; லட்சக் கணக்காண ஆசிரியர்களுக்குத் தலைமை தாங்கிச் செயலாற்றுவதும், அவர்களுடைய கருத்தையும் ஆவலையும் கிளர்த்திவிடுவதும், அவர்களுடைய பழைய முதலாளித்துவத் தப்பெண்ணங்களை வென்று சமாளித்துச் செல்வதும், நாம் ஆற்றி வரும் பணியில் அவர்களை அணிதிரளச் செய்வதும், நமது பணி எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை அவர்களை உணரச்செய்வதும் தமது கடமை

யாகுமென்பதை இவர் நினைவில் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பணியைச் சமாளிப்பதன் மூலமே பெருந் திரளினரான இந்த ஆசிரியர்களை, முதலாளித்துவத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டு நம்மிடமிருந்து விலக்கப்பட்ட இவர்களை, நாம் சரியான பாதைக்கு அழைத்து வர முடியும்.

இவைதாம் கல்விக்கூடத்துக்குப் புறத்தமைந்த கல்வித் துறையில் பணியாற்றும் ஒவ்வொரு கிளர்ச்சியாளரும் பிரசாரகரும் பின்பற்ற வேண்டிய, இடையறாது கருத்தில் கொண்டிருக்க வேண்டிய குறிக்கோள்கள். இந்தப் பணியின்போது மிகப் பல நடைமுறைச் சிக்கல்கள் எதிர்படும். நீங்கள் கட்சிக் குழுவுக்கு மட்டுமின்றி, தற்போது தொழிலாளி வர்க்கத்தின் கைக்குரியதாகிவிட்ட அரசு நிர்வாகம் அனைத்தின் பிரதிநிதிகளும் தலைவர்களும் ஆகி கம்யூனிச இலட்சியத்துக்குத் துணை புரிய வேண்டும்.

முதலாளிகளுடைய எதிர்ப்பை அதன் எல்லா வடிவங்களிலும் நாம் வெற்றி கொண்டாக வேண்டும்—இராணுவ, அரசியல் துறைகளிலான எதிர்ப்பை மட்டுமின்றி, மிகவும் ஆழ்ந்தமைந்ததும் வலுமிக்கதுமான சித்தாந்தத் துறை எதிர்ப்பையும் வெற்றி கொண்டாக வேண்டும். வெகுஜனங்களுக்கு மறு கல்வி போதமளித்திடும் பணியினைச் செய்து முடிப்பது நமது கல்விப் பணித்துறையினரின் கடமையாகும். இந்த வெகுஜனங்களிடத்தே காணக்கூடிய கருத்தும், கல்வியும் கம்யூனிசத்தைப் பற்றிய அறிவும் பெற வேண்டுமென்ற தாகமும் இந்தத் துறையிலும் நாம் வெற்றி ஈட்டுவோம் என்பதற்கு உத்தரவாதமாகும். எனினும், போர்முனையிலே கிட்டியதைப் போல் இவ்வெற்றி அவ்வளவு விரைவாய்க் கிடைக்காததாய் இருக்கலாம்; மிகப் பெரும் இன்னல்களுக்குப் பிற்பாடே, சில சமயம் பின்னடைவுகளுக்குங்கூட பிற்பாடே கிடைப்பதாய் இருக்கலாம். இருப்பினும் இறுதியில் நாம் வெற்றி பெறவே செய்வோம்.

முடிவில், மேலும் ஒரு விவரம் குறித்துப் பேச விரும்புகிறேன். அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி என்னும் பெயர் ஒருவேளை சரிவரப் புரிந்து கொள்ளபடாத ஒன்றாய் இருக்கலாம். அரசியல் என்னும் கருத்தினத்தை இது குறிப்பிடுவதால், இங்கே அரசியலே பிரதான விவகாரமாகும்.

ஆனால் அரசியல் என்பதை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்? அரசியலை அதன் பழைய அர்த்தத்தில் புரிந்து கொள்வோமாயின், கடுமையான, ஆழந்த தவறிழைக்கும்படி நேரும். அரசியல் என்பது வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டத்தைக் குறிக்கிறது; உலக முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துத் தனது விடுதலைக்காகத் தான் நடத்தும் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் உறவுகளைக் குறிக்கிறது. ஆயினும் நமது போராட்டத்தில் இந்த விவகாரத்தின் இரு அம்சங்கள் எடுப்பாய் முன்னிலைக்கு வருகின்றன: ஒரு புறத்தில், முதலாளித்துவ அமைப்பின் பாரம்பரியத்தை அழித்திடும் பணி, சோவியத் அரசை நசுக்கிவிட வேண்டுமென்று முதலாளித்துவ வர்க்கம் அனைத்தும் மீண்டும் மீண்டும் செய்து வரும் முயற்சிகளை முறியடிக்கும் பணி இருக்கின்றது. இதுகாறும் நமது பெரும் பகுதி கவனத்தை இந்தப் பணி ஈர்த்து வந்திருக்கிறது, மற்றொரு பணியாகிய கட்டுமானப் பணியில் முனைய முடியாதபடி நம்மைத் தடுத்து வந்திருக்கிறது. முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தின்படி, அரசியலானது பொருளியலிலிருந்து துண்டித்து விலக்கப்பட்டிருந்தது. முதலாளித்துவ வர்க்கத்தினர் இப்படித்தான் கூறி வந்தனர்: விவசாயிகளே, நீங்கள் உங்கள் பிழைப்புக்காக வேலை செய்யுங்கள்; தொழிலாளர்களே, நீங்கள் உங்கள் பிழைப்புச் சாதனங்களைச் சந்தையின் மூலம் பெற்றுக் கொள்வதற்காக வேலை செய்யுங்கள்; பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்த மட்டில், அது உங்களுடைய எஜமானர்களுக்குரிய வேலை. ஆனால் அவர்கள் கூறியது உண்மையல்ல; அரசியலானது மக்களுக்குரிய வேலையாகவே இருக்க வேண்டும், பாட்டாளி வர்க்கத்துக்குரிய வேலையாகவே இருக்க வேண்டும். நமது செயலின் நேரத்தில் பத்தில் ஒன்பது பங்கு முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை இங்கு நாம் வலியுறுத்த வேண்டும். விராங்கெல் மீதான வெற்றிகள்—நேற்று இவை குறித்துப் படித்தோம், நாளைக்கும், ஒருவேளை நாளை மறுநாளும் நீங்கள் இவை குறித்துப் படிப்பீர்கள்—போராட்டத்தின் ஒரு கட்டம் முடிவுற்று வருவதையும் மேலைய நாடுகளில் பலவற்றுடன் நமக்குச் சமாதா

னம் கைவரப் பெற்றுள்ளதையும் காட்டுகின்றன. போர் முனையில் கிட்டும் ஒவ்வொரு வெற்றியும் உள்துறைப் போராட்டத்துக்கு, அரசு நிறுவன ஒழுங்கமைப்பின் அரசியலுக்கு நமது கரங்களை விடுவிக்கின்றன. வெள்ளைப் படையினர் மீதான வெற்றிக்கு நம்மை நெருங்கி வரச் செய்யும் ஒவ்வோர் அடியும் படிப்படியாய்ப் போராட்டத்தின் குவிமையத்தைப் பொருளாதாரக் கொள்கைக்கு இடம் பெயரச் செய்கிறது. பழைய ரகப் பிரசாரம் கம்யூனிசம் என்றால் என்னவென்பதை விவரிக்கிறது, தெளிவுபடக் காட்டுகிறது. இவ்வகைப் பிரசாரம் இப்பொழுது நமக்குப் பயனற்றதாகும், ஏனென்றால் சோஷலிசத்தை எப்படிக் கட்டியமைத்திட வேண்டுமென்று நடைமுறையில் நாம் காட்ட வேண்டியிருக்கிறது. நமது பிரசாரம் அனைத்தும் பொருளாதாரக் கட்டுமானத்தின் அரசியல் அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டும். அதுவே நமது தலையாய பணி; பழைய அர்த்தத்தில் இதற்கு விளக்கம் தருகிறவர் எவரும் தாம் பின்னுக்கிச் செல்கிறவர், விவசாயிகள், தொழிலாளர் வெகுஜனங்களிடையே பிரசாரப் பணியாற்றும் திறனற்றவர் என்பதைத்தான் காட்டிக் கொள்வார். அரசைப் பொருளாதார வழியில் வளரச் செய்வதே, இவ்விதம் அதிகமான பூடுகள் தானியம் அறுவடை செய்வதும் அதிகமான பூடுகள் நிலக்கரி வெட்டியெடுப்பதும், இந்த அதிக பூடுகள் தானியத்தையும் நிலக்கரியையும் திறம்பட பயன்படுத்திப் பட்டினியைத் தவிர்த்துக் கொள்வது எப்படி என்பது குறித்துத் தீர்மானிப்பதுமே இப்பொழுது நமது பிரதான கொள்கையாய் இருக்க வேண்டும். இதுவே நமது கொள்கை. இந்தக் குறிக்கோளின் மீதுதான் நமது கிளர்ச்சி, பிரசாரம் அனைத்தும் மையப்படுத்தப்பட வேண்டும். நேர்த்தியான பேச்சு குறைய வேண்டும், ஏனெனில் நேர்த்தியான சொற்களைக் கொண்டு உழைப்பாளி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்திலிருந்து, விராங்கெலுக்கும் வெள்ளைப்படையினருக்கும் எதிரான போராட்டத்திலிருந்து குவிமையத்தை இடம் பெயரச் செய்வதற்கு யுத்தம் நமக்கு இடமளித்ததும், நாம் பொருளாதாரக் கொள்கை பக்கம் கவனத்தைத்

திருப்புவோம். அப்பொழுது கிளர்ச்சியும் பிரசாரமும் பிரமாதமான, மேலும் மேலும் கூடுதலான முக்கியத்துவம் வாய்ந்த பங்காற்றும்.

கிளர்ச்சியாளர் ஒவ்வொருவரும் ஓர் அரசுத் தலைவராய், பொருளாதார வளர்ச்சிப் பணித்துறையில் விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரின் ஒரு தலைவராய் இருத்தல் வேண்டும். அவரவரும் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை, கம்யூனிஸ்டு ஆகும் பொருட்டு அவரவரும் படிக்க வேண்டிய பிரசுரங்களும் புத்தகங்களும் எவை என்பதை அவர் கூற வேண்டும். இதுவே நமது பொருளாதார வாழ்வை மேம்படச் செய்வதற்கான, அதை மேலும் உறுதியானதாய், மேலும் சமூகத்தன்மையதாய் ஆக்குவதற்கான வழி; இதுவே உற்பத்தியைப் பெருகச் செய்வதற்கான வழி; உணவு நிலைமையையும் உற்பத்திச் செய்யப்படும் பண்டங்களின் வினியோகத்தையும் மேம்படச் செய்வதற்கும், நிலக்கரி உற்பத்தியை அதிகமாக்கி முதலாளித்துவம் இல்லாமலும் முதலாளித்துவ மனப்பான்மை இல்லாமலும் தொழில் துறையை மீட்டமைப்பதற்குமான வழி.

கம்யூனிசம் எதில் அடங்கியுள்ளது? கம்யூனிசப் பிரசாரம் அனைத்தும் அரசின் வளர்ச்சிக்கு நடைமுறையில் வழி காட்டும்படியான முறையில் நடத்தப்பட வேண்டும். தொழிலாளி வெகுஜனங்கள் கம்யூனிசத்தைத் தமது சொந்த இலட்சியமாய்க் கருதும் பொருட்டு, அது அவர்களுக்குப் புரியும்படியானதாக்கப்பட வேண்டும். இந்தப் பணி சரிவர செய்யப்படவில்லை, ஆயிரக் கணக்கில் தவறுகள் புரியப்படுகின்றன. இவ்வுண்மையை நாம் வெளியே தெரியாத இரகசியமாய் மறைத்து வைக்கவில்லை. ஆயினும் நமது உதவியைக் கொண்டு—இது திடமற்றதாகவும் பற்றுக்குறையாகவும் இருந்த போதிலும்—தொழிலாளர்களும் விவசாயிகளும் தாமே முயற்சி எடுத்து நமது பொறியமைவைக் கட்டியமைத்தும் மேம்படச் செய்தும் கொள்ள வேண்டும். இனி நமக்கு இது ஒரு வேலைத்திட்டமாகவோ, ஒரு தத்துவமாகவோ, செய்யப்பட வேண்டிய ஒரு பணியாகவோ இருக்கவில்லை; மெய்யான நடைமுறை வளர்ச்சியின் விவகாரமாகிவிட்டது. நமது யுத்தத்தில் நமக்குக் கடுமையான பின்னடைவுகள்

சில ஏற்பட்டன என்ரூலுங்கூட, எப்படியும் இந்தப் பின் னடைவுகளிலிருந்து பாடம் பயின்று கொண்டு, முழுநிறை வெற்றி பெற்றிருக்கிறோம். இப்பொழுதுங்கூட நாம் ஒவ் வொரு தோல்வியிலிருந்தும் பாடம் பயின்று கொண்டாக வேண்டும்; ஏற்கனவே செய்து முடிக்கப் பெற்றுள்ள பணி யை ஒரு முன்னுதாரணமாய்க் கொண்டு தொழிலாளர்கள், விவசாயிகள் போதிக்கப்பட வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மோசமாய் நடைபெற்றுள்ள வேலையை, வருங்காலத்தில் இதைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு, நாம் சுட்டிக் காட்டியாக வேண்டும்.

கட்டுமான வேலையை ஒரு முன்னுதாரணமாய்க் கொள்வ தன் மூலமும், மீண்டும் மீண்டும் அதைச் செய்வதன் மூல மும், நாம் திறனில்லாத கம்யூனிஸ்டு நிர்வாகிகளை மெய் யான கட்டுமானிகளாய், முதலாவதாக நமது பொருளாதார வாழ்வின் கட்டுமானிகளாய் மாற்றுவதில் வெற்றி பெறு வோம். நாம் நமது இலக்குகளை ஈடேறச் செய்வோம்; பழைய அமைப்பிலிருந்து மரபுரிமையாய் நாம் பெற்றுக்கொண்டவை யும், ஒரே அடியில் அகற்றப்பட முடியாதவையுமான முட்டுக்கட்டைகள் யாவற்றையும் நாம் வென்று முன் னேறிச் செல்வோம். வெகுஜனங்களுக்கு நாம் மறுகல்வி அளித் திடுவோம்; கிளர்ச்சி, பிரசாரம் இவற்றின் மூலமே வெகு ஜனங்களுக்கு மறுகல்வி அளித்திட முடியும். முதலாவதாக, பொருளாதார வாழ்வு அனைத்தையும் கட்டியமைத்திடும் பணியில் வெகுஜனங்கள் ஈடுபடும்படி ஈர்க்கப்பட்டாக வேண் டும். இதுதான் ஒவ்வொரு கிளர்ச்சியாளர், பிரசாரகரது பணியின் தலையானதும் அடிப்படையானதுமாகிய நோக்க மாய் இருத்தல் வேண்டும். இதை அவர் உணருவாராயின், அவருடைய பணி வெற்றி பெறுவது உறுதியாகிவிடும். (பலத்த கைதொலி முழக்கம்.)

அரசியல் கல்விப் பணித் துறையாளர்களது அனைத்து-ருஷ்ய மாநாட்டின் (1920 நவம்பர் 1-8) செய்தியறிக்கை, மாஸ்கோ

நூல் திரட்டு, தொகுதி 41, பக்கங்கள் 398-408

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து

பத் ஸ்ஞமெனெம் மார்க்சிஸ்மா[71] சஞ்சிகையின் பொதுவான நோக்கங்கள் குறித்து இதன் இதழ் 1-2ல் தோழர் திரோத்ஸ்கி, கூற வேண்டியவை யாவற்றையும் ஏற்கனவே கூறியுள்ளார், இவற்றை நன்முகவும் கூறியுள்ளார். இதன் ஆசிரியர்கள் இந்த இதழில் அறிமுக உரையில் குறிப்பிட்டிருக்கும் பணியின் உள்ளடக்கத்தையும் திட்டத்தையும் மேலும் துல்லியமாய் வரையறுக்கும் சில பிரச்சினைகள் குறித்து நான் பரிசீலிக்க விரும்புகிறேன்.

பத் ஸ்ஞமெனெம் மார்க்சிஸ்மா சஞ்சிகையை மையமாய்க் கொண்டு ஒன்று சேர்ந்துள்ளவர்கள் எல்லோருமே கம்யூனிஸ்டுகளல்ல, ஆனால் எல்லோருமே முரணற்ற பொருள் முதல்வாதிகள் என்று இந்த அறிமுக உரை கூறுகின்றது. கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளல்லாதோருமாகிய இந்தக் கூட்டணி முற்றிலும் அத்தியாவசியமானது என்றும், இந்த சஞ்சிகையின் நோக்கங்களைச் சரிவர வரையறுப்பதாயுள்ளது என்றும் நினைக்கிறேன். கம்யூனிஸ்டுகள் செய்யக்கூடிய மிகப் பெரிய, மிகவும் அபாயகரமான தவறுகளில் ஒன்று என்னவெனில் (ஒரு பெரிய புரட்சியின் துவக்கத்தை வெற்றிகரமாய் நடத்தி முடிக்கும் புரட்சியாளர்கள் பொதுவாகச் செய்யும் தவறு இது), புரட்சியாளர்கள் மட்டும் சேர்ந்து ஒரு புரட்சியை நடத்திவிட முடியுமெனக் கருதுவதுதான். இதற்கு மாறுய், புரட்சிகரமான எந்த முக்கிய பணியும் வெற்றி பெற வேண்டுமாயின், மெய்யாகவே உயிர் சக்தி கொண்ட முன்னேறிய வர்க்கத்தின் முன்னணிப் படைக்குரிய

பங்கை மட்டுமே புரட்சியாளர்களால் ஆற்ற முடியுமென்ற கருத்து புரிந்து கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படுவது அவசியமாகும். முன்னணிப் படையானது தான் தலைமை தாங்கிச் செல்லும் திரளான மக்களிடமிருந்து தனிமைப் படுத்தப்படுவதை தவிர்த்துக் கொள்ளவும், இந்த முழுத் திர ளினருக்கும் மெய்யாகவே தலைமை தாங்கி இவர்களை முன்னே அழைத்துச் செல்லவும் கூடியதாய் இருக்கையில்தான் அது முன்னணிப் படைக்குரிய பணிகளைச் செய்து முடிக்கிறது. மிகப் பல்வேறுபட்ட செயல் துறைகளிலும், கம்யூனிஸ்டு களல்லாதோருடன் கூட்டணி கொள்ளாமல் கம்யூனிசக் கட்டுமானப் பணி எதுவும் வெற்றிகரமாய் நடந்தேறுவது சாத்தியமன்று.

பொருள்முதல்வாதத்தையும் மார்க்சியத்தையும் பேணிப் பாதுகாப்பதென்று **பத் ஸ்னெமெனெம் மார்க்சிஸ்மா** மேற்கொண்டிருக்கும் பணிக்கும் இது பொருந்துவதாகும். அதிர்ஷ்டவசமாய் ருஷ்யாவில் முன்னேறிய சமூகச் சிந்தனை யின் பிரதான போக்குகள் உறுதியான பொருள்முதல்வாத மரபினை அடிப்படையாய்க் கொண்டுள்ளவை. கி. வ. பிளெ ஹானவை அன்னியில் செர்னிஷேவ்ஸ்கி ஒருவரை மட்டும் குறிப்பிட்டாலே போதும். நவீன கால நரோத்னிக்குகள் (மக்கள் நேய சோஷலிஸ்டுகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் ஏனையோரும்) அடிக்கடி செர்னிஷேவ்ஸ்கியிட மிருந்து பின்வாங்கிச் சென்றுள்ளனர்; இவர்கள் ஐரோப்பிய விஞ்ஞானத்தின் இறுதி முடிவாய்ச் சொல்லப்படுகின்ற பகட் டான மினுக்கைக் கண்டு மயக்குண்டு, முதலாளித்துவ வர்க் கத்துக்கும் முதலாளித்துவத் தப்பெண்ணங்களுக்கும் முத லாளித்துவப் பிற்போக்கிற்கும் ஏதேனும் ஒரு வகையிலான அடிவருடித்தனம் இந்த மினுக்கின் மறைவில் பதுங்கியிருப் பதைக் கண்டு கொள்ளும் திறனற்றோராய், புதிய பாணியி லாகிய பிற்போக்குத் தத்துவவியல் போதனைகளைத் தேடிப் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

ஆயினும் எப்படியும் ருஷ்யாவில் கம்யூனிஸ்டுகளல்லா தோரின் முகாமைச் சேர்ந்த பொருள்முதல்வாதிகள் இன்ன மும் இருந்து வருகின்றனர், ஓரளவு நீண்ட காலத்துக்கு இனி யும் நிச்சயம் இருந்தே வருவர். தத்துவவியல் பிற்போக்கை

யும் ''படித்த சமூகத்தார்'' என்பதாய்ச் சொல்லப்படுவோரின் தத்துவவியல் தப்பெண்ணங்களையும் எதிர்த்துப் போராடும் கூட்டுப் பணியிலே, முரணற்றதும் போர்க்குணம் கொண்டும் ஆகிய பொருள்முதல்வாதத்தின் ஆதரவாளர் எல்லோரையும் படைதிரட்டிக் கொள்வது நமது முழுமுதற் கடமையாகும். முதலாளித்துவ நாடுகளில் வெகுவாய் மலிந்து, இந்நாடுகளின் விஞ்ஞானிகள், கருத்துரை எழுத்தாளர்களின் மதிப்புக்குரியனவாய் இருந்து வரும் தத்துவவியல் போக்குகளைப் பற்றிய அடிப்படை மார்க்சியக் கருத்தோட்டத்தை டித்ஸ்கென் முதியவர்—அவருடைய எழுத்தாளர் மகனுடன், எவ்வளவுக்கு எவ்வளவு அகம்பாவம் கொண்டிருந்தாரோ அவ்வளவுக்கு அவ்வளவு தோல்வியும் கண்டவரான அந்த மகனுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது—பிழையின்றியும் மிகப் பொருத்தமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார்; நவீன காலச் சமுதாயத்தில் மிகப் பெரும்பாலும் தத்துவவியல் பேராசிரியர்கள் நடைமுறையில் ''சமயசித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகளே'' ஆவரெனக் கூறினர்.

நமது ருஷ்ய அறிவுத்துறையினருக்கு, ஏனைய எல்லா நாடுகளிலுமுள்ள இவர்களுடைய சோதரர்கள் ஆசைப்படுவது போலவே முன்னேறியவர்களாய்த் தம்மைக் கருதிக் கொள்ள ஆசைப்படும் இவர்களுக்கு, டித்ஸ்கெனுடைய சொற்கள் வெளியிடும் அபிப்பிராயத்தின் நிலைக்கு இப்பிரச்சினையை எடுத்துச் செல்ல மனம் ஒப்பவில்லை. உண்மையின் நேர் முன்னால் நின்று தலை நிமிர்ந்து அதைப் பார்க்க முடியவில்லை என்பதால்தான் இவர்களுக்கு மனம் ஒப்பவில்லை. ஆதிக்கத்திலுள்ள முதலாளித்துவ வர்க்கத்தை நவீன காலப் படித்தச் சமூகத்தார் அரசாங்க வழியிலும் மற்றும் பொதுவாய்ப் பொருளாதார வழியிலும், அன்றூட வாழ்விலும் ஏனைய எல்லா வழிகளிலும் சார்ந்து வாழ வேண்டியிருப்பதைச் சற்றே சிந்தித்துப் பார்த்தால் போதும், சுருக்கெனத் தைக்கும்படி டித்ஸ்கென் கூறிய சொற்கள் முற்றிலும் உண்மையே என்பது தெளிவாய் விளங்கும். ஐரோப்பிய நாடுகளில் இப்படி நாளொரு மேனியாய் உதித்தெழும் புதுப் பாணித் தத்துவவியல் போக்குகளில், உதாரணமாய் ரேடியம்

கண்டுபிடிக்கப்பட்டதை ஒட்டி எழுந்தவற்றிலிருந்து தொடங்கி, தற்போது ஐன்ஷ்டைனைப் பற்றிக்கொண்டு தொங்க எத்தனிப்பவை வரையிலான இந்தப் போக்குகளில் மிகப் பெருவாரியானவற்றை நினைவு கூர்ந்தாலே போதும், முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க நலன்களுக்கும் வர்க்க நிலைக்கும், ஒருபுறத்தில் மதத்தின் எல்லா வடிவங்களுக்கும் மறுபுறத்தில் நவநவீன தத்துவவியல் போக்குகளின் சித்தாந்த உள்ளடக்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கம் அளிக்கும் ஆதரவுக்கும் இடையிலுள்ள இணைப்பைப் புரிந்து கொண்டு விடலாம்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் பத்திரிகையாய்ச் செயல்பட முற்படும் ஒரு சஞ்சிகையானது பிரதானமாய்ப் போர்க்குணம் கொண்ட பத்திரிகையாகவே இருக்க வேண்டுமென்பது, அதாவது தற்காலத்திய ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகள்'' எல்லோரையும்—அதிகார பூர்வமான விஞ்ஞானத்தின் பிரதிநிதிகளாய்ச் செயல்படுவோராயினும் சரி, ''ஜனநாயக இடது சாரி, அல்லது சித்தாந்த வழி சோஷலிஸ்டு'' கருத்துரை எழுத்தாளர்களாய்த் தம்மை அழைத்துக்கொள்ளும் அதிகாரபூர்வமல்லாத தன்னிச்சையாளர்களாயினும் சரி இவர்கள் எல்லோரையும்—தயங்காது அம்பலப்படுத்தி இவர்களது உண்மை சொரூபத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமென்ற அர்த்தத்தில் போர்க்குணம் கொண்ட பத்திரிகையாகவே இருக்கவேண்டுமென்பது மேற்கூறியதிலிருந்து தெரியவரும்.

இரண்டாவதாக, இப்படிப்பட்ட ஒரு சஞ்சிகை போர்க்குணம் கொண்ட நாத்திக ஏடாய் இருத்தல் வேண்டும். இந்தப் பணித்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள இலாகாக்கள், அல்லது குறைந்தது அரசு நிறுவனங்கள் நம்மிடம் உள்ளன. ஆனால் இந்தப் பணி அளவு கடந்த அசட்டையோடு, சிறிதும் திருப்தியில்லாதபடி நடைபெற்று வருகிறது; மெய்யான நமது ருஷ்ய (சோவியத்தே ஆயினுங்கூட) அதிகாரவர்க்க முறைகளின் பொது நிலைமைகளால் பீடிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. ஆகவே இந்த அரசு நிலையங்கள் செய்து வரும் பணியை அல்லாமலும், இப்பணியை மேம்படுத்தும் பொருட்டும், இதற்கு உயிர் சக்தி ஊட்டும் பொருட்டும்,

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதப் பிரசாரம் புரிய முற்படும் இந்த சஞ்சிகை, அயராத நாத்திகப் பிரசாரமும் அயராத நாத்திகப் போரும் புரிவது மிகவும் அவசியமாகும். இப்பொருள் குறித்து எல்லா மொழிகளிலும் வெளிவரும் எழுத்துக்களைக் கவனமாய்ப் பரிசீலனை செய்து வரவேண்டும்; எவ்விதத்திலும் மதிப்புக்குரியவையாய் இருப்பவற்றை மொழிபெயர்த்திட வேண்டும், அல்லது குறைந்தது இவை குறித்து மதிப்புரைகளாவது எழுத வேண்டும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியினது போர்க்குணம் கொண்ட நாத்திக இலக்கியத்தை மக்களிடையே பெருவீத அளவில் வினியோகித்துப் பரப்புவதற்காக மொழிபெயர்த்திடும்படி நெடுங் காலத்துக்கு முன்பு எங்கெல்ஸ் அக்காலத்தியப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களுக்கு ஆலோசனை கூறினார்.[72] இது நாள்வரை நாம் இதைச் செய்தாகவில்லை, நாம் வெட்கித் தலை குனியும் வண்ணம் இதைச் சொல்லியே ஆக வேண்டும் (புரட்சிகர சகாப்தத்தில் ஆட்சியதிகாரம் கைப்பற்றுவது கடினமல்ல, ஆனால் இந்த ஆட்சியதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்துவது எப்படி என்று அறிந்து கொள்வது மெத்தக் கடினம் என்பதற்குரிய எண்ணற்ற நிரூபணங்களில் ஒன்றாகும் இது). நமது அசட்டைக்கும் செயலின்மைக்கும் திறனின்மைக்கும் சால்ஜாப்பு கூறும் பொருட்டு எல்லா வகையான ''உன்னத'' காரணங்களும் எடுத்துரைக்கப்படுகின்றன; உதாரணமாய், பதினெட்டாம் நூற்றாண்டின் பழைய நாத்திக இலக்கியம் பழமைப்பட்டுவிட்டது, விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததாகவும் சிறுபிள்ளைத் தனமானதும் ஆகிவிட்டது என்றெல்லாம் காரணம் கூறப்படுகிறது. இத்தகைய போலியான விஞ்ஞானக் குதர்க்கத்தைக் காட்டிலும் மோசமானது எதுவும் இல்லை; பகட்டுப் புலமையை அல்லது மார்க்சியத்தைப் பற்றிய அறவே தவறான உணர்வை மூடிமறைக்கவே இந்தக் குதர்க்கம் பயன்படுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் புரட்சியாளர்களுடைய நாத்திக நூல்களில் விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததும் சிறுபிள்ளைத் தனமானதும் நிறைய இருப்பது மெய்தான். ஆனால் இந்நூல்களின் பதிப்பாளர்கள் இவற்றைச் சுருக்கி வெளியிடுவதையும், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்குப் பிற்

பாடு மதங்களைப் பற்றிய விஞ்ஞான விமர்சனத்தில் மனித குலம் கண்டிருக்கும் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியும், இப்பொருள் குறித்து அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள புத்தகங்களைக் குறிப்பிட்டும், இன்ன பிற விவரங்களைக் கூறியும் சுருக்கமான பின்னுரைகளை இந்நூல்களுக்கு அளிப்பதையும் யாரும் தடுத்து நிற்கவில்லை. கோடிக் கணக்கான மக்கள் (முக்கியமாய் விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும்), நவீன காலச் சமுதாயம் அனைத்தாலும் இருளிலும் அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் வதையும்படி இருத்தப்பட்டிருக்கும் இவர்கள் கலப்பற்ற தூய மார்க்சிய போதமெனும் நேரான பாதையிலேதான் இந்த இருளிலிருந்து விடுபட்டு வெளியே வர முடியுமென நினைப்பது, மார்க்சிய வாதி ஒருவர் புரியக்கூடிய மிகப் பெரிய, மிகக் கடுந் தவறுகிவிடும். இந்த வெகுஜனங்களை நாட்டங் கொள்ளும்படிச் செய்வதற்காகவும், மதத்தால் மயக்குண்ட நிலையிலிருந்து இவர்களை விழித்தெழச் செய்வதற்காகவும், மிகப் பல்வேறுபட்ட கோணங்களிலிருந்தும் மிகப் பல்வேறுபட்ட வழிகளிலும் இவர்களை உசுப்பி விடுவதற்காகவும், இன்ன பிறவற்றுக்காகவும், இவர்களுக்கு நாம் மிகப் பல்வேறுபட்ட நாத்திகப் பிரசார வெளியீடுகளும் கிடைக்கச் செய்ய வேண்டும்; வாழ்க்கையின் மிகப் பல்வேறுபட்ட துறைகளிலிருந்துமான உண்மைகளை இவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்; சாத்தியமான எல்லா வழிகளிலும் இவர்களை அணுகியாக வேண்டும்.

பழைய, பதினெட்டாம் நூற்றாண்டு நாத்திகர்களது நீட்சண்யமான, உயிர்த்துடிப்புள்ள, அறிவாற்றல் மிகுந்த இலக்கியங்கள், ஆதிக்கத்திலிருந்த சமயசித்தாந்தத்தைக் கிண்டலும் கேலியுமாகவும், மற்றும் பகிரங்கமாகவும் தாக்கின. மதத்தால் மயக்குண்ட நிலையிலிருந்து மக்களைத் தட்டியெழுப்புவதற்கு மிகப் பல சந்தர்ப்பங்களிலும் இவை, மார்க்சியத்தின் உப்புச்சப்பில்லாத, சலிப்பூட்டும் பொழிப்புரைகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு கூடுதலாய் ஏற்றவையாய் இருக்கும். திறம்படத் தெரிந்தெடுக்கப்பட்ட உண்மைகளைக் கொண்டமைந்த எடுத்துக்காட்டுகள் வாயிலான விளக்கங்கள் அனேகமாய் எவையுமில்லாத இப்படிப்பட்ட பொழிப்புரைகள்தான் நமது வெளியீடுகளில் மிகவும் மலிந்திருக்

கின்றன, இவையும் (இவ்வுண்மையை மறைத்துப் பயனில்லை) அடிக்கடி மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டுவனவாகவே இருக்கின்றன. மார்க்ஸ், எங்கெல்சின் பிரதான நூல்கள் யாவற்றின் மொழிபெயர்ப்புகளும் நம்மிடம் இருக்கின்றன; ஆகவே பழைய நாத்திகமும், பழைய பொருள்முதல்வாதமும், மார்க்சும் எங்கெல்சும் அவற்றில் புகுத்திய திருத்தங்களால் சரிசெய்யப்பட்டுச் செம்மையாக்கப்படாமல் இருந்து விடுமென்று அஞ்சக் காரணம் சிறிதும் இல்லை. மிகவும் முக்கியமானது என்னவெனில், இன்னமும் வளர்ச்சியின்றி இருந்து வரும் வெகுஜனங்களிடத்தே மதப் பிரச்சினைகள்பால் கூர்மதி கொண்ட போக்கினையும், மதங்கள் குறித்து கூர்மதி கொண்டவிமர்சனத்தையும் கிளர்த்திவிடத்தெரிந்துகொள்வதுதான்—இதைத்தான் நமது கம்யூனிஸ்டுகளில் மார்க்சிய வாதிகளாய்க் கருதப்படுவோர், ஆனால் உண்மையில் மார்க்சியத்தை உருகுலைப்போராய் இருப்போர் கவனியாது அடிக்கடி புறக்கணித்து விடுகிறார்கள்.

மறுபுறத்தில், மதங்களைப் பற்றிய நவீன விஞ்ஞான விமர்சகர்களைச் சற்று உற்று நோக்குங்கள். கல்வியறிவுடைய இந்த முதலாளித்துவ எழுத்தாளர்கள், மத மூடநம்பிக்கைகளைப் பற்றிய தமது மறுப்புரைகளுடன் கூட, தாம் முதலாளித்துவ வர்க்கத்தின் சித்தாந்த அடிமைகளே, ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகளே'' என்பதை உடனே அம்பலமாக்கிக் காட்டும் வாதங்களையும் அனேகமாய் எப்பொழுதும் ''அனுபந்தமாய்'' சேர்த்தளிக்கின்றனர்.

இரண்டே இரண்டு எடுத்துக்காட்டுகள். போராசிரியர் ரோ. யூ. வீப்பர் **வஸ்னிக்னவேனியே ஹிரிஸ்தியான்ஸ்த்வா** என்னும் தலைப்பில் (''கிறிஸ்தவத்தின் தோற்றம்'', ''பரோஸ்'' பதிப்பகம், மாஸ்கோ) 1918ல் ஒரு சிறு புத்தகத்தை வெளியிட்டார். நவீன விஞ்ஞானத்தின் பிரதான விளைவுகளைப் பற்றிய தமது உறையில் இவ்வாசிரியர், மதச்சபையானது ஓர் அரசியல் நிறுவனம் என்ற முறையில் அதற்குரிய ஆயுதங்களாய்க் கொண்டிருக்கும் மூடநம்பிக்கைகளையும் ஏமாற்றையும் எதிர்த்துப் போராடுவதைத் தவிர்த்துக் கொள்வதோடல்லாமல், இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதோடல்லாமல், கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் ஆகிய

இரு ''கடைகோடி நிலைகளுக்கும்'' தாம் மேம்பட்டவர் என்ப தாய் நகைக்கத்தக்கதான, மிகவும் பிற்போக்கான முறை யில் உரிமை கொண்டாடுகிறார். உழைப்பாளி மக்களைக் கசக்கிப் பிழிந்து பெறப்பட்ட லாபங்களிலிருந்து மதத்தின் ஆதரவுக்காக உலகெங்கும் கோடானு கோடியான ரூபிள் களைச் செலவிடும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்துக்குத் தொண்டூழியம் புரிவதே ஆகும் இது.

பெயர் பெற்ற ஜெர்மன் விஞ்ஞானி ஆர்தர் டிரேவ்ஸ் Die Christusmythe (''கிறிஸ்து கற்பனை'') என்னும் தமது புத்த கத்தில் மத மூடநம்பிக்கைகளுக்கும் புராணக் கதைகளுக் கும் மறுப்பு கூறுகிறார், கிறிஸ்து இருக்கவே இல்லை என்று விளக்குகிறார், அதேபோதில் இப்புத்தகத்தின் முடிவில் மதத் தை ஆதரித்துப் பேசுகின்றார்—ஆனால் இது புத்தி கொண்ட, சுத்தமாக்கப்பட்ட, நுண்ணயம் வாய்ந்த மதமாயிருக்கும், ''நாளுக்கு நாள் பெருகிவளரும் இயற்கைவாத வெள்ளப் பெருக்கினைச்'' சமாளிக்க வல்லதாய் இருக்கும் என்கிறார் (நான்காவது ஜெர்மன் பதிப்பு, 1910, பக்கம் 238). ஒளிவு மறைவில்லாத, திட்டமிட்டுச் செயல்படுகிற பிற்போக்காள ரை, அழுகலாகிவிட்ட பழைய மத மூடநம்பிக்கைகளுக்குப் பதிலாய்ப் புதிய, மேலும் வெறுக்கத்தக்கதான, இழிவான மூடநம்பிக்கைகளை விதைப்பதற்குச் சுரண்டலாளர்களுக்கு பகிரங்கமாகவே துணைபுரிகிறவரை இங்கு நாம் காண்கிறோம்.

டிரேவ்சை மொழிபெயர்க்கக் கூடாது என்பதல்ல இதற்கு அர்த்தம். முதலாளித்துவ வர்க்கத்தின் முற்போக்குப் பிரிவினருடன் ஓரளவுக்குக் கூட்டணி கொண்டு செயல்படும் அதேபோதில் கம்யூனிஸ்டுகளும் முரணற்ற பொருள்முதல் வாதிகள் எல்லோரும். அப்பிரிவினர் பிற்போக்கில் ஈடுபடும் குற்றமிழைக்கும் போது சிறிதும் தயங்காமல் அவர்களை அம்பலம் செய்ய வேண்டும் என்பதே இதன் அர்த்தம். பதி னெட்டாம் நூற்றாண்டின், அதாவது முதலாளித்துவ வர்க் கம் புரட்சிகரமானதாய் இருந்த அந்தக் காலத்தின் முத லாளித்துவ வர்க்கப் பிரதிநிதிகளுடன் கூட்டணி கொள்ளா மல் விலகி ஓடுவது மார்க்சியத்துக்கும் பொருள்முதல்வாதத் துக்கும் துரோகமிழைப்பதாகும் என்பதே இதன் அர்த்தம்; ஏனெனில், ஏதேனும் ஒரு வடிவில், ஏதேனும ஓர் அளவுக்கு,

டிரேவ்ஸ்களுடன் ''கூட்டணி கொள்வது'', ஆதிக்கம் புரிந்து வரும் மத மௌடீகவாதிகளுக்கு எதிரான நமது போராட்டத்துக்கு அவசியமாகும்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் ஏடாய்ச் செயல்பட முற்படும் **பத் ஸ்ஞமெனெம் மார்க்சிஸ்மா**, நாத்திகப் பிரசாரத்துக்காகவும், இப்பொருள் பற்றிய வெளியீடுகளின் மதிப்புரைக்காகவும், இத்துறையில் நமது அரசாங்கம் ஆற்றி வரும் பணியிலுள்ள மிகப் பெரும் குறைபாடுகளைத் திருத்துவதற்காகவும் தனது பக்கங்களில் ஒரு பெரும் பகுதியை ஒதுக்க வேண்டும். இக்காலத்து முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க நலன்களும் வர்க்க நிறுவனங்களும் மத நிறுவனங்களுடனும் மதப் பிரசார நிறுவனங்களுடனும் எப்படி இணைந்திருக்கின்ற என்பதைக் காட்டும் ஸ்தூலமான பல உண்மைகளும் ஒப்பீடுகளும் அடங்கியுள்ள புத்தகங்களையும் பிரசுரங்களையும் பயன்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

மதத்துக்கும் மூலதனத்துக்கும் அதிகாரபூர்வமான, அரசு வழியிலான இணைப்பு அவ்வளவு வெளிப்படையாய்த் தெரியாத அமெரிக்க ஐக்கிய நாடு பற்றிய எல்லா விவரப் பொருள்களும் மிக மிக முக்கியமானவை. ஆனால் மறுபுறத்தில், ''நவீன ஜனநாயகம்'' எனப்படுவது (மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும், ஓரளவுக்கு அராஜகவாதிகளும், ஏனையோரும் சிறிதும் நியாயமின்றி இதைப் பூஜிக்கின்றனர்), முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதெல்லாம் அனுகூலமாய் இருக்கிறதோ அதை, அதாவது மிகவும் பிற்போக்கான கருத்துக்களையும் மதத்தையும் மௌடீகத்தையும் சுரண்டலாளர்களைப் பேணிக் காப்பதையும் பிறவற்றையும், உபதேசிப்பதற்கான சுதந்திரமே ஆகும்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாத ஏடாய்ச் செயல்பட முற்படும் ஒரு சஞ்சிகை நமது வாசகப் பெருமக்களுக்கு நாத்திக இலக்கியத்தைப் பற்றிய விமர்சன மதிப்புரைகளை வழங்குமென்றும், குறிப்பிட்ட வெளியீடு எந்த வாசகர் குழுவுக்கு ஏற்றது, எவ்விதத்தில் ஏற்றது என்பதைச் சுட்டிக்காட்டுமென்றும், நாம் வெளியிட்டிருக்கும் புத்தகங்கள் எவை (தகுதியுடைத்த மொழிபெயர்ப்புகளை மட்டும்தான்

குறிப்பிடப்பட வேண்டும், இவை அதிகமில்லை), இனி வெளியிடப் போகிறவை எவை என்பதைக் குறிப்பிடுமென்றும் நம்புகிறோம்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதம் ஆற்ற வேண்டிய பணிக்கு, கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்திராத முரணற்ற பொருள்முதல்வாதிகளுடன் கொள்ள வேண்டிய கூட்டணியோடுகூட, இதற்கு எவ்வகையிலும் குறையாத முக்கியத்துவம் வாய்ந்த, ஏன் இதனினும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததென்றுகூட சொல்லத் தக்க மற்றொரு கூட்டணியும் இருக்கின்றது. நவீன இயற்கை விஞ்ஞானிகளில் பொருள்முதல்வாதத்தின் பக்கம் சாய்ந்தோரும், கருத்து முதல்வாதத்திலும் ஐயுறவுவாதத்திலுமாகிய புதுப்பாணித் தத்துவவியல் சஞ்சாரங்களை எதிர்த்து—படித்த சமூகத்தார் என்பதாய்க் கூறப்படுவோரிடையே வெகுவாய் மலிந்திருக்கும் இந்த சஞ்சாரங்களை எதிர்த்து—பொருள்முதல்வாதத்தைக் காக்கவும் பிரசாரம் செய்யவும் அஞ்சாதோரும் ஆகியோருடன் கொள்ளப்படும் கூட்டணி இது.

ஐன்ஷ்டைன் சார்பியல் தத்துவம் குறித்து **பத் ஸ்ஸ மெனெம் மார்க்சிஸ்மா** இதழ் 1-2ல் வெளிவந்துள்ள அ. திமிர்யாசெவின் கட்டுரையானது இந்த இரண்டாவது கூட்டணியை உருவாக்கிக் கொள்வதிலும் இந்த சஞ்சிகை வெற்றி பெறுமென்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. இதில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். நவீன இயற்கை விஞ்ஞானம் அனுபவித்து வரும் கடுஞ் கொந்தளிப்பானது பிற்போக்குத் தத்துவவியல் மரபுகளையும் சில்லறை மரபுகளையும், போக்குகளையும் சில்லறைப் போக்குகளையும் அடிக்கடி தோற்றுவிக்கிறது. ஆகவே, அண்மைக் காலத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்டிருக்கும் புரட்சியால் எழுப்பப் படும் பிரச்சினைகளைக் கூர்ந்து கவனித்துச் சென்றுலொழிய, தத்துவவியல் சஞ்சிகையாகிய இந்த சஞ்சிகையின் பணித்துறையில் இயற்கை விஞ்ஞானிகளைப் படைதிரட்டிக் கொண்டாலொழிய, போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதம் உண்மையில் போர்க்குணமுடையதாகவோ, பொருள்முதல்

வாதமாகவோ இருக்கமுடியாது: திமிர்யாசெவின் கருத்துப் படி பொருள்முதல்வாதத்தின் அடிப்படைகள்மீது ஐன்ஷ் டைன் நேரடித் தாக்குதல் நடத்தாமல் இருக்கையில், எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ அறிவுத்துறை யினர் மிகப் பலரும் அதற்குள் துள்ளிக் குதித்து ஐன்ஷ்டைன் தத்துவத்தைப் பற்றிக் கொண்டுவிட்டதாய் இந்த சஞ்சி கையின் முதல் இதழில் திமிர்யாசெவ் குறிப்பிட வேண்டிய தாகியுள்ளது. இப்படி நிகழ்ந்திருப்பது ஐன்ஷ்டைன் சம் பந்தமாய் மட்டுமல்ல, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி முதலாய் இயற்கை விஞ்ஞானத்தின் மாபெரும் சீர் திருத்தாளர்களில் பெருவாரியானோர் இல்லையேல், எப்படி யும் மிகப் பலர் சம்பந்தமாகவும் இப்படிதான் நிகழ்ந்தது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இப்படிப்பட்ட நிகழ்வு குறித்து நம்முடைய போக்கு அரசியல் உணர்வுடைத்ததாய் இருக்க வேண்டுமாயின், எந்த இயற்கை விஞ்ஞானமும் சரி, எந்தப் பொருள்முதல் வாதமும் சரி, உறுதியான தத்துவவியல் அடிநிலையின்மீது காலூன்றி நின்றலன்றி, முதலாளித்துவக் கருத்துக்களுடைய வெறித்தாக்குதலுக்கும் முதலாளித்துவ உலகக் கண் ணோட்டத்தின் மீட்சிக்கும் எதிரான போராட்டத்தில் அதனால் தனது நிலையைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. இந்தப் போராட்டத்தில் இயற்கை விஞ்ஞானி தமது நிலையைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் இந்தப் போராட்டத் தை வெற்றிகர முடிவுக்கு நடத்திச் செல்லும் பொருட்டும் அவர் நவீனப் பொருள்முதல்வாதியாய், மார்க்சைப் பிரதி நிதியாய்க் கொண்ட அந்தப் பொருள்முதல்வாதத்தின் உணர்வுபூர்வமான ஆதரவாளராய் இருந்தாக வேண்டும்; அதாவது, அவர் இயக்கவியல் பொருள்முதல்வாதியாய் இருந் தாக வேண்டும். இந்தக் குறிக்கோள் சித்திபெறும் பொருட்டு, **பத்ஸ்ஞமெனெம் மார்க்சிஸ்மாவில்** எழுதும் ஆசிரியர்கள் ஹெகலிய இயக்கவியலே பொருள்முதல்வாத நிலையிலிருந்து முறையாய் ஆய்ந்தறிந்து கொள்ள ஏற்பாடு செய்தாக வேண்டும். ஆதாவது, மார்க்ஸ் தமது **மூலதனத்திலும்** வர லாற்றையும் அரசியலையும் பற்றிய தமது நூல்களிலும் செயல்முறையில் கையாண்ட இயக்கவியலை, கிழக்குலகின்

(ஜப்பானிலும் இந்தியாவிலும் சீனாவிலும்) புதிய வர்க்கங்கள்—உலக மக்கள் தொகையின் பெரும் பகுதியான, இது காறும் தமது வரலாற்றுச் செயலின்மையாலும் வரலாற்று உறக்கத்தாலும் ஐரோப்பாவின் வளர்ச்சி பெற்ற பல நாடுகளின் தேக்கநிலையையும் சீரழிவையும் நெறிமுறையாக்கி வந்த கோடானு கோடியானோர்—விழிப்புற்று உயிர்த்தெழுந்தும் போராடியும் வரும் இக்காலத்தின் ஒவ்வொரு நாளும், புதிய மக்களும் புதிய வர்க்கங்களும் விழிப்புற்று உயிர்த்தெழும் இக்காலத்தின் ஒவ்வொரு நாளும் மார்க்சியத்தை மெய்ப்பித்து உறுதி செய்யும் புதிய நிரூபணமாய் அமையும்படி அவ்வளவு வெற்றிகரமாய் மார்க்ஸ் கையாண்ட இந்த இயக்கவியலை முறையாய் ஆய்ந்தறிந்து கொள்ள ஏற்பாடு செய்தாக வேண்டும்:

ஹெகலிய இயக்கவியலை இப்படி ஆய்ந்தறிவதும் விளக்கம் செய்வதும் பிரசாரம் புரிவதும் மிகமிகக் கடினம்தான். இந்தத் திசையிலான முதலாவது முயற்சிகளுடன் பிழைகளும் நிச்சயம் உடன்வரும்தான். ஆனால் ஏதும் செய்யாமலிருப்போரால்தான் பிழைகள் புரியாதிருக்க முடியும். பொருள்முதல்வாத வழியில் புரிந்து கொள்ளப்படும் ஹெகலிய இயக்கவியலைக் கையாளுவதற்குரிய மார்க்சின் முறையை நமது அடிப்படையாய்க் கொண்டு, எல்லா அம்சங்களிலும் நாம் இந்த இயக்கவியலை விரித்து விளக்க முடியும், விரித்து விளக்கவும் வேண்டும்; ஹெகலின் முக்கிய நூல்களிலிருந்து சிறு பகுதிகளை இந்த சஞ்சிகையில் அச்சிட வேண்டும்; பொருள்முதல்வாத வழியில் இப்பகுதிகளுக்கு விளக்கம் அளித்து, இயக்கவியலை மார்க்ஸ் கையாண்டதுபற்றிய உதாரணங்களின் துணை கொண்டும், மற்றும் அண்மைக்கால வரலாறும் முக்கியமாய் ஏகாதிபத்திய யுத்தமும் புரட்சியும் அசாதாரணச் செழுமையுடன் இயக்கவியலுக்குப் பொருளாதார, அரசியல் உறவுகளின் துறையில் மிகுதியாய் அளித்திடும் உதாரணங்களின் துணை கொண்டும் இவை குறித்துக் கருத்துரைக்க வேண்டும். என்னுடைய அபிப்பிராயத்தில் **பத் ஸ்னெமெனெம் மார்க்சிஸ்மாவின்** ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் ஒரு வகையில் ''ஹெகலிய இயக்கவியலின் பொருள்முதல்வாத நண்பர்களது கழகமாய்'' செயல்பட வேண்டும். பொருள்

முதல்வாத வழியில் விளக்கம் செய்யப்பட்ட ஹெகலிய இயக்கவியலில், நவீன கால இயற்கை விஞ்ஞானிகள் (அவர்களுக்குத் தேடிக் கண்டறிந்து கொள்ளத் தெரிந்திருந்து, நாமும் அவர்களுக்குத் துணை புரியக் கற்றுக் கொள்வோமாயின்) இயற்கை விஞ்ஞானத்தில் நடைபெறும் புரட்சியால் எழுப்பப்படும் தத்துவவியல் பிரச்சினைகளுக்கு, முதலாளித்துவ மோஸ்தர்களால் மயக்கப்படும் அறிவுத்துறையினரைப் பிற்போக்கினுள் ''வழுக்கிவிழச்'' செய்யும் இப்பிரச்சினைகளுக்கு, வரிசையாய் விடைகள் இருக்கக் காண்பார்கள்.

இப்படிப்பட்ட ஒரு பணியை வகுத்துக் கொண்டு முறையாய் அதை நிறைவேற்றிச் சென்றுலொழிய, பொருள்முதல்வாதம் போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதமாய் இருக்க முடியாது. ஷெத்ரீனுடைய சொற்களில் சொல்வதெனில் அது அவ்வளவாய்ப் போராடும் ஒன்றுய் இல்லாமல், போராடப்படும் ஒன்றுகவே இருக்கும். இப்படி அது பணியாற்றுதவரை, தலைசிறந்த இயற்கை விஞ்ஞானிகள் தமது தத்துவவியல் அனுமானங்களையும் பொதுமையாக்கப்பட்ட முடிவுகளையும் வந்தடைவதில் இதுகாறும் அடிக்கடி இருந்துள்ளது போலவே இனியும் திக்கற்றவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில் இயற்கை விஞ்ஞானம் அவ்வளவு வேகமாய் முன்னேறிச் செல்கிறது; எல்லாத் துறைகளிலும் அவ்வளவு ஆழ்ந்த புரட்சிக் கொந்தளிப்புக்கு உள்ளாகி வருகிறது; அது தத்துவவியல் அனுமானங்களின்றி இருக்கலாமென நினைக்க முடியவே முடியாது.

முடிவில் ஓர் உதாரணத்தை எடுத்துரைக்கிறேன். இது தத்துவவியலுடன் சம்பந்தப்பட்டதல்ல; ஆனால் எப்படியும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றியதுதான். **பத் ஸ்னமெனெம் மார்க்சிஸ்மா** சமூகப் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்த விரும்புகிறது.

நவீன காலத்திய போலி விஞ்ஞானம் உண்மையில் படுமோசமான, மிகவும் இழிவான பிற்போக்குக் கருத்தோட்டங்களுக்கான ஒரு சாதனமாய் எப்படிப் பயன்படுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

''ருஷ்யத் தொழில்நுட்பக் கழகத்தின்'' பதினெராவது இலாகாவினால் வெளியிடப்படும் **எக்கானமிஸ்ட்**[73], முதல்

இதழின் (1922) பிரதி அண்மையில் எனக்கு வரப்பெற்றது. இந்த சஞ்சிகையை எனக்கு அனுப்பி வைத்த இளம் கம்யூனிஸ்டு (அதைப் படித்துப் பார்க்க அவருக்கு நேரம் கிடைக்காமல் இருந்திருக்கலாம்) அவசரப்பட்டு அதனுடன் பெருமளவு தாம் உடன்படுவதாய்க் குறிப்பிட்டார். உண்மையில் இந்த சஞ்சிகை நவீன பிரபுத்துவவாதிகளது ஏடாய்ச் செயல்படுகிறது — எந்த அளவுக்குத் தெரிந்து வேண்டுமென்றே இப்படிச் செய்கிறதோ நான் அறியேன். விஞ்ஞானம், ஜனநாயகம் இத்தியாதியான வேடங்களின் மறைவில் இவ்வேலையைச் செய்கிறது.

திரு. பி. அ. ஸரோக்கின் என்பார் ஒருவர் ''யுத்தத்தால் ஏற்பட்ட விளைவு'' குறித்து, ''சமூகவியல்'' பரிசீலனை என்பதாய்க் கூறிக் கொண்டு இந்த சஞ்சிகையில் விரிவான ஆய்வுரை வெளியிட்டிருக்கிறார். புலமை வாய்ந்த இந்தக் கட்டுரையில், இந்த ஆசிரியரும் வெளிநாடுகளிலுள்ள இவருடைய எண்ணற்ற போதனாசிரியர்களும் சக ஆய்வாளர்களும் எழுதிய ''சமூகவியல்'' நூல்களைப் பற்றிய புலமை வாய்ந்த குறிப்புகள் நிறைய இருக்கின்றன. இவருடைய புலமைக்கு இதோ ஓர் உதாரணம்:

பக்கம் 83ல் படிக்கிறேன்:

''பெத்ரொகிராதில் தற்போது நடைபெறும் திருமணங்களில் ஒவ்வொரு 10,000த்திலும் திருமண ரத்துக்களின் எண்ணிக்கை 92.2—நம்ப முடியாத பெரிய எண்ணிக்கை இது. ரத்து செய்யப்படும் ஒவ்வொரு 100 திருமணங்களிலும் 51.1 ஓராண்டுக்குக் குறைவாய் நிடித்தவை, 11 சதவீதமானவை ஒரு மாதத்துக்குக் குறைவாகவும், 22 சதவீதமானவை இரண்டு மாதத்துக்குக் குறைவாகவும், 41 சதவீதமானவை மூன்றிலிருந்து ஆறு மதங்களுக்குக் குறைவாகவும் நீடித்தவை. 26 சதவீதமானவையே ஆறு மாதங்களுக்கு மேல் நீடித்தவை. தற்காலத்திய சட்டபூர்வமான திருமணம் நடைமுறையில் தாம்பத்தியத்துக்குப் புறம்பான பாலுறவை மூடி மறைக்கும் ஒரு வடிவமாய் அமைந்து, 'பழம் தேடியலையும்' காதலர்கள் 'சட்டபூர்வமான' வழியில் தம் பசியைத் தீர்த்துக் கொள்ள வகை செய்கிறது என்பதைத்தான் இப்புள்ளிகள் காட்டுகின்றன.'' (எக்கானமிஸ்ட், இதழ் 1, பக்கம் 83).

இந்தக் கனவானும் இந்த சஞ்சிகையை வெளியிட்டு இம்மாதிரியான பேச்சுக்களுக்கு இதில் இடம் தரும் ருஷ்யத் தொழில்நுட்பக் கழகத்தாரும் நிச்சயம் தம்மை ஜனநாயகத்தைப் பற்றியொழுகுவோராகவே கருதிக் கொள்வார்கள்; உண்மையில் இவர்களுக்கு உரிய பெயரைக் கொண்டு அழைத்தோமாயின், அதாவது பிரபுத்துவவாதிகள், பிற்போக்காளர்கள், ''சமயசித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகள்'' என்று கூறுவோமாயின், தாம் பெரிதும் அவமதிக்கப்படுவதாகவே கருதிக் கொள்வார்கள்.

முதலாளித்துவ நாடுகளில் திருமணம் குறித்தும், திருமாண ரத்து குறித்தும், திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகள் குறித்தும் நடப்பிலுள்ள சட்டங்களையும், இத்துறையில் உண்மையில் அங்குள்ள நிலைவரங்களையும் பற்றி சொற்ப அளவு ஞானம் இருந்தாலே போதும், இந்த விவகாரத்தில் கருத்துடைய எவரும் நவீன முதலாளித்துவ ஜனநாயகம், மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளில் இருப்பதுங்கூட, இத்துறையிலே பெண்கள் குறித்தும் திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகள் குறித்தும் மெய்யாகவே பிரபுத்துவ போக்கு கொண்டிருப்பதைக் கண்டு கொண்டுவிடலாம்.

இந்த நிலைமை மென்ஷிவிக்குகளையும், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரையும், அராஜகவாதிகளில் ஒரு பகுதியோரையும், மேலைய நாடுகளில் இவர்களை ஒத்தவையாயுள்ள எல்லா கட்சிகளையும், ஜனநாயகம் என்பதாகவும் போல்ஷிவிக்குகள் இதைக் குலைக்கிறார்கள் என்பதாகவும் கூச்சல் போடாதபடி தடுத்துவிடவில்லைதான். ஆனால் உண்மை என்னவெனில், போல்ஷிவிக் புரட்சி ஒன்று மட்டும்தான் திருமணம், திருமண ரத்து, திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகளின் நிலை ஆகியவை போன்ற பிரச்சினைகளில் முரணில்லாத ஜனநாயகப் புரட்சியாய் நடந்தேறியிருக்கிறது. எந்த நாட்டிலும் மக்களில் பாதிக்கு மேற்பட்டோரது நலன்களுடன் மிகவும் நேரடியாய்ச் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை இது. போல்ஷிவிக் புரட்சிக்கு முன்பு மிகப் பல புரட்சிகள் நடைபெற்றிருப்பினும், இவை தம்மை ஜனநாயகப் புரட்சிகளாய் அழைத்துக் கொண்டன என்ற

போதிலும், போல்ஷிவிக் புரட்சிதான் இத்துறையில் பிற்போக்கையும் பிரபுத்துவத்தையும் மற்றும் சொத்துடைத்த ஆளும் வர்க்கங்களது வழக்கமான கபடத்தையும் எதிர்த்து உறுதி வாய்ந்த போராட்டம் நடத்தியுள்ள முதலாவது புரட்சியும், ஒரே புரட்சியும் ஆகும்.

10,000 திருமணங்களில் *92* திருமணரத்துக்கள் என்பது, திரு ஸரோக்கினுக்கு நம்ப முடியாத பெரிய எண்ணிக்கையாய்த் தோன்றினால், வாழ்க்கையிலிருந்து அறவே துண்டித்து ஒதுக்கி வைக்கப்பட்ட துறவி மடத்தில்—அப்படி ஒரு துறவி மடம் இருக்க முடியுமென யாராலும் நம்ப முடியாதபடி அந்த அளவுக்கு அறவே துண்டித்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒன்றில்—வளர்ந்து ஆளாகி அங்கேயே வசித்து வருகிறவராகவே இந்த ஆசிரியர் இருக்க வேண்டும்; அல்லது பிற்போக்கின் நலத்தையும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலத்தையும் உத்தேசித்து இவர் உண்மையைத் திரித்துப் புரட்டுகிறார் என்றுதான் கொள்ள வேண்டும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள சமூக நிலைமைகளைச் சிறிதளவேனும் அறிந்தவர் எவரும், இந்நாடுகளில் எல்லாம் உண்மையில் நடைபெறும் திருமண ரத்துக்களின் மெய்யான எண்ணிக்கை (இந்தத் திருமண ரத்துக்கள் மதச்சபையாலும் சட்டத்தாலும் அங்கீகரிக்கப்படாதவை என்பதைக் கூறத் தேவையில்லை) கணக்கின்றி மிகவும் அதிகமாகும் என்பதை நன்கறிவார். இத்துறையில் ருஷ்யாவுக்கும் பிற நாடுகளுக்குமுள்ள ஒரே வித்தியாசம் என்னவென்றால், நமது சட்டங்கள் கபடத்தையும், பெண்ணும் பெண்ணின் குழந்தையும் இழிவு செய்யப்படுவதையும் புனிதமாக்குவதில்லை; அதற்கு மாறாய் எல்லா வகையான கபடத்தின் மீதும் இழிவு செய்தலின் மீதும் பகிரங்கமாகவும் அரசாங்கத்தின் பெயரிலும் முறையான போர்ப் பிரகடனம் செய்கின்றன.

மார்க்சிய சஞ்சிகை ''படித்தறிந்த'' இந்த நவீன பிரபுத்துவவாதிகளையும் எதிர்த்துப் போராடியாக வேண்டும். இவர்களில் பலர் அரசாங்கப் பணம் பெறுகின்றவர்களாகவே இருப்பார்கள்; வக்கரித்துப் போனவர்களாய்ப் பெயரெடுத்தவர்கள் வளரும் தலைமுறையினரது கல்வி நிலையங்களுடைய மேலாளர்களாய் இருக்க எப்படித் தகுதியற்றவர்

களோ அதே போல சிறிதும் தகுதியற்றோராகிய இவர்கள் நமது இளந் தலைமுறையினருக்குக் கல்வி போதகர்களாய் நமது அரசாங்கத்தால் அமர்த்தப் பட்டவர்களாகவே இருப்பார்கள்.

ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தை வென்று கொள்ளும் திறன் தனக்கு உண்டென்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ஆனால் இந்த ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்த இன்னும் அது கற்றுக் கொள்ளவில்லை. கற்றுக் கொண்டிருந்தால், நெடுங்காலத்துக்கு முன்பே அது இத்தகைய போதனாசிரியர்களையும் புலமை படைத்த கழகங்களது உறுப்பினர்களையும் முதலாளித்துவ ''ஜன நாயகத்தைக்'' கொண்ட நாடுகளுக்குப் பணிவன்புடன் அனுப்பி வைத்திருக்கும். இப்படிப்பட்ட பிரபுத்துவவாதிகளுக்கு அவையே ஏற்ற இடமாகும்.

ஆயினும் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற திடச்சித்தம் இருக்குமாயின் நிச்சயம் அது கற்றுக் கொண்டுவிடும்.

1922, மார்ச் 12

பத் ஸ்னமெனெம் மார்க்சிஸ்மா,
இதழ் 3, மார்ச் 1922
ஒப்பம்: நி. லெனின்

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 23-33

நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள்

ருஷ்யாவின் மக்களிடத்தான எழுத்தறிவு பற்றிய விவர அறிக்கை, 1920ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக் கெடுப்பை அடிப்படையாய்க் கொண்டது, அண்மையில் வெளிவந்திருப்பதானது (ருஷ்யாவில் எழுத்தறிவு, மத்தியப் புள்ளிவிவர வாரியத்தின் பொதுக் கல்விப் பிரிவால் வெளியிடப்பட்டது, மாஸ்கோ, 1922), மிகவும் முக்கிய மான ஒரு நிகழ்ச்சியாகும்.

1897ஆம் ஆண்டிலும் 1920ஆம் ஆண்டிலும் ருஷ்யா வின் மக்களிடத்தான எழுத்தறிவு நிலை பற்றிய ஓர் அட்ட வணையை இந்த விவர அறிக்கையிலிருந்து எடுத்து அடியில் தருகிறேன்.

	ஆயிரம் ஆடவர் களில் எழுத்தறிந் தோர்		ஆயிரம் பெண் களில் எழுத்தறிந் தோர்		மக்களில் ஆயிரம் பேரில் எழுத்தறிந் தோர்	
	1897	1920	1897	1920	1897	1920
1. ஐரோப்பிய ருஷ்யா	326	422	136	255	229	330
2. வட காக்கசஸ்	241	357	56	215	150	281
3. சைபீரியா (மேற்கு)	170	307	46	134	108	218
ஒட்டுமொத்த சராசரி	318	409	131	244	223	319

பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்தும் அதற்கும் முதலாளித்துவக் கலாசாரத்திற்கும் இடையே இருக்கும் உறவு குறித்தும் நாம் பொழிந்து தள்ளி கொண்டிருக்கும் ஒரு நேரத்தில், உண்மைகளும் புள்ளிவிவரங்களும் நாம் முதலாளித்துவக் கலாசாரம் பொறுத்த அளவிலுங்கூட மிகவும் மோசமான பின்னிலையில் இருக்கிறோம் என்பதைப் புலப்படுத்துகின்றன. எதிர்பார்க்கக் கூடியது போலவே நாம் அனைத்து மக்கள் எழுத்தறிவு நிலையை அடைவதிலிருந்து இன்னும் நெடுந் தொலைவிலே இருக்கிறோம் என்றும், ஜார் காலத்துடன் (1897) ஒப்பிடுகையிலுங்கூட நமது முன்னேற்றம் மிகமிக மெதுவாகவே இருக்கிறது என்றும் தெரிகிறது. ''பாட்டாளி வர்க்கக் கலாசாரத்தின்'' வானுச்சியில் கற்பனைச் சிறகடித்துப் பறப்போருக்கு இது ஒரு கடும் எச்சரிக்கையாகவும் கண்டனமாகவும் அமைதல் வேண்டும். சாதாரண மேற்கு ஐரோப்பிய நாகரிக நாட்டின் தரத்தை வந்தடைவதற்குக்கூட இன்னும் நாம் எவ்வளவு பிரம்மாண்ட அளவில் அவசரத் தயாரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை இது காட்டுகின்றது. நாம் வென்றிருக்கும் பாட்டாளி வர்க்க ஆதாயங்களின் அடிப்படையிலே மெய்யான கலாசாரத் தரம் என்பதாய்க் கூறக்கூடிய ஒரு தரத்தை அடைய இன்று நாம் எவ்வளவு பெரிய அளவில் வேலை செய்தாக வேண்டும் என்பதையும் இது காட்டுகின்றது.

மறுக்க முடியாததாயினும், பெரிதும் தத்துவார்த்த முறையிலே அமைந்த இந்த முடிவின் வரம்புக்குள் நாம் நின்று விடக்கூடாது. நமது காலாண்டுப் பட்ஜெட்டை நாம் திருத்தியமைக்கும் அடுத்த சந்தர்ப்பத்திலேயே, இந்த விவகாரத்தை நடைமுறை வழியிலும் கருதியாக வேண்டும். முதலாவதாக, கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தைத் தவிர ஏனைய அரசாங்க இலாக்காக்களின் செலவுகளைக் குறைத்து, இவ்வாறு கிடைக்கப் பெறும் தொகைகளை முன்னதன் தேவைகளுக்காக ஒதுக்க வேண்டுமென்பது தெளிவு. பண்ட வழங்கீடு ஒப்பளவில் நல்லபடியாய் இருக்கும் இவ்வாண்டைப் போன்ற ஓர் ஆண்டில் பள்ளி ஆசிரியர்களுக்கு ரொட்டிப் பங்கீட்டை அதிகமாக்குவதில் நாம் தயக்கம் காட்டக்கூடாது.

பொதுவாய்ப் பேசுமிடத்து, பொதுக் கல்வித் துறை

யில் தற்போது செய்யப்பட்டு வரும் வேலை மிகக் குறுகலாய் இருப்பதாய்ச் சொல்வதற்கில்லை. பழங் காலத்திய ஆசிரியர்களை அவர்களுக்குப் பழக்கப்பட்டு போன அந்த மாறுத பாதையிலிருந்து வெளிப்படுத்தி விலகி வரச் செய்யவும், புதிய பிரச்சினைகளில் அவர்களைக் கருத்துக் கொள்ளும்படி ஈர்க்கவும், புதிய கல்வி முறைகளிலும் மதத்தைப் போன்ற பிரச்சினைகளிலும் அவர்களுடைய அக்கறையைத் தூண்டவும் நிறைய முயற்சிகள் எடுத்து வரப்படுகின்றன.

ஆனால் பிரதான காரியத்தை நாம் செய்தாகவில்லை. எந்த விதமான கலாசாரமும்—பாட்டாளி வர்க்கத்தினுடையதோ, அல்லது முதலாளித்துவ வர்க்கத்தினுடையதோ ஆயினுங்கூட — பெற விரும்புவோமாயின், அதற்கு இன்றியமையாத தக்க நிலைக்குப் பள்ளியாசிரியரை உயர்த்த நாம் ஏதும் செய்யவில்லை, அல்லது தேவையானதிலிருந்து மிக மிகக் குறைவாகவே செய்து வருகிறோம். இன்னமும் நாம் நம்மை விடுவித்துக் கொண்டுவிடாத அரை-ஆசிய அறியாமை இருளை நினைவில் கொண்டிருக்க வேண்டும். அரும் பெரும் முயற்சிகள் இல்லாமல் நாம் நம்மை இதிலிருந்து விடுவித்துக்கொண்டுவிட முடியாது. ஆயினும் இப்படி விடுவித்துக் கொள்வதற்கு நாம் எல்லா வாய்ப்புகளையும் பெற்றிருக்கிறோம். எப்படியெனில், பெருந் திரளினரான மக்கள் நம் நாட்டில் இருப்பதைப் போல் வேறு எங்கும் மெய்யான கலாசாரத்தில் இவ்வளவு அக்கறை கொண்டோராய் இருக்கவில்லை; இந்தக் கலாசாரத்தின் பிரச்சினைகள் நம் நாட்டைப் போல் வேறு எங்கும் இவ்வளவு தீர்க்கமாகவும் முரணின்றியும் சமாளிக்கப்படவில்லை; வேறு எந்த நாட்டிலும் அரசு அதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைகளில் இருக்கவில்லை, இந்தத் தொழிலாளி வர்க்கத்தின் பெருந் திரளினர், தமது கலாசார நிலையின் குறைபாடுகளை என்று சொல்ல மாட்டேன், ஆனால் தமது எழுத்தறிவு நிலையின் குறைபாடுகளை முழு அளவுக்கு உணர்ந்திருக்கின்றனர்; நம் நாட்டில் போல் வேறு எங்கும் தொழிலாளி வர்க்கம் இத்துறையில் தனது நிலையை மேம்படுத்திக் கொள்ள இப்படித் தியாகங்கள் புரிய இந்த அளவுக்குத் தயாராய் இருக்கவும் இல்லை, வேறு எங்கும் மெய்யாகவே இப்படித் தியாகங்கள் புரிந்து வரவும் இல்லை.

ஆரம்பப் பொதுக் கல்வியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, முதல் நடவடிக்கையாய், நமது அரசு பட்ஜெட்டைத் திருத்தியமைக்க இன்னமும் நாம் மிகச் சொற்பமாகவே, மிகமிகச் சொற்பமாகவே முயற்சிகள் எடுத்து வருகிறோம். நமது கல்வித் துறை மக்கள் கமிசாரகத்திலுங்கூட அரசுப் பதிப்பகம் ஏதேனும் ஒன்றில் வெட்ககரமான அளவுக்கு எல்லைமீறி பெரிய எண்ணிக்கையிலான அலுவலர்கள் இருப்பதை அடிக்கடி காண்கிறோம். அரசு முதலாவதாய்க் கவலைப்பட வேண்டியது பதிப்பகங்களைப் பற்றியல்ல, படிக்கத் தெரிந்த மக்கள் இருக்க வேண்டுமென்பது பற்றியே யாவற்றுக்கும் முதலாய்க் கவலைப்பட வேண்டும். படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தாக வேண்டும், அப்பொழுதுதான் புத்தக வெளியீட்டுக்கு வருங்கால ருஷ்யாவில் விரிந்த அரசியல் அரங்கு கிடைக்கும் என்னும் கருத்துக்கு நேர் முரணான ஒரு நிலைமை இது. பழைய (மற்றும் மோசமான) பழக்கம் காரணமாய் இன்னமும் நாம், மக்களிடையிலான எழுத்தறிவு என்னும் பொது அரசியல் பிரச்சினையைக் காட்டிலும் புத்தக வெளியீட்டுப் பிரச்சினை போன்ற நுட்பவியல் பிரச்சினைகளில்தான் மிகவும் அதிக நேரமும் முயற்சியும் செலவிட்டு வருகிறோம்.

மத்தியத் தொழிற் பயிற்சிக் கல்வி வாரியத்தை எடுத்துக்கொள்வோமானால், அங்கும் இலாகா நலன்களை முன்னிட்டு வேண்டாத அளவுக்கு ஊதிப் பெருத்து உபரியாகிவிட்டவை பலவும், விரிவான பொதுக் கல்வியின் தேவைகளுக்கு உகந்தவாறு அமையாத பலவும் நிறைய இருக்கின்றன என்று நிச்சயமாய்க் கூறலாம். மத்தியத் தொழிற் பயிற்சிக் கல்வி வாரியத்தில் நாம் காண்பவற்றுள் பலவும் நியாயமுடைத்தவையே, முதற்கண் நமது இளம் ஆலைத் தொழிலாளர்களுடைய கல்வியை மேம்படச் செய்யவேண்டும், அதை நடைமுறை சார்ந்த போக்குடையதாக்கவேண்டும் என்னும் நேர்மையான விருப்பத்துக்கு இணங்க அமைந்தவையே என்பதாய்க் கூற முடியாது. மத்தியத் தொழிற் பயிற்சிக் கல்வி வாரியத்தின் அலுவலர் தொகுதியைக் கவனமாய்ப் பரிசீலித்தால், ஊதிப் பருத்து உபரியாகிவிட்டதும், இந்த விதத்தில் கற்பனையானதும், கழித்துக் கட்டப்பட வேண்டியதும் ஆகியவை நிறைய

இருக்கக் காண்போம். மக்களிடையே எழுத்தறிவை ஓங்கச் செய்யும் பொருட்டு, பாட்டாளி வர்க்க, விவசாயிகளது அரசில் செலவுச் சிக்கனத்துக்காகச் செய்யப்படக் கூடியவையும் செய்யப்பட வேண்டியவையும் இன்னமும் நிறையவே இருக்கின்றது. பாதியளவுக்கு பிரபுக்குலத்து ரகத்தைச் சேர்ந்த விளையாட்டு நிலையங்களானவற்றை, அல்லது இன்னமும் நமக்குத் தேவையில்லாத, இவை இல்லாமலே நம்மால் இருக்க முடியும்படியான, புள்ளிவிவரங்கள் புலப்படுத்துவது போல மக்களிடையிலே நிலவும் எழுத்தறிவின் நிலையைக் கருதுகையில் நீண்ட காலத்துக்கு இவை இல்லாமலே நாம் சமாளிக்க வேண்டியவையான நிலையங்களை மூடுவதன் மூலம் நாம் செலவுச் சிக்கனம் செய்ய முடியும்.

நமது பள்ளியாசிரியர், முதலாளித்துவச் சமுதாயத்தில் எந்நாளும் அவர் அடைந்திராத, அடையவும் முடியாத ஒரு தரநிலைக்கு உயர்த்தப்பட்டாக வேண்டும். இது யாவரும் அறிந்ததே, இதற்கு நிரூபணம் தேவையில்லை. ஆசிரியரை ஓர் உயர்ந்த கலாசார நிலைக்கு உயர்த்தவும், மெய்யாகவே உன்னதமான அவரது பணித்துறைக்கு ஏற்றவாறு அவருக்கு முழு அளவில் பயிற்சி அளிக்கவும், மற்றும்—பிரதானமாய், மிகவும் பிரதானமாய், மிக மிகப் பிரதானமாய்—அவருடைய நிலையைப் பொருளாயத வழியில் மேம்படுத்தவும் இடைவிடாமலும் முறையாகவும் விடாமுயற்சியோடும் பாடுபட்டு இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்க வேண்டும்.

பள்ளியாசிரியர்கள் விதிவிலக்கின்றி எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் இன்னமும் முதலாளித்துவ அமைப்பின் ஆதாரத் தூண்களாகவே இருந்து வரும் நிலையிலிருந்து அவர்களை மாற்றி, சோவியத் அமைப்பின் ஆதாரத் தூண்களாக்குவதற்காக, இவ்விதம் அவர்களுடைய பணியின் மூலமாய் விவசாயிகளை முதலாளித்துவ வர்க்கத்தாருடனை கூட்டணியை விட்டு விலகிப் பாட்டாளி வர்க்கத்துடனை கூட்டணிக்கு வந்து சேரச் செய்வதற்காக, பள்ளி ஆசிரியர்களை ஒழுங்கமைத்திடுவதற்கான நமது முயற்சிகளை நாம் முறையாய் மும்முரமாக்கிச் செல்ல வேண்டும்.

இத்துறையில், கிராமங்களுக்கு முறைபடச் சென்று செயலாற்றுவோரின் விஜயங்களுக்குள்ள தனி முக்கியத்து

வத்தைச் சுருக்கமாய்க் குறிப்பிட்டு வலியுறுத்த விரும்புகிறேன். இத்தகைய விஜயங்கள் ஏற்கனவே நடைபெற்று வருவது மெய்தான். இவை முறைபட ஊக்குவிக்கப்பட வேண்டும். கிராமங்களுக்கான இந்த விஜயங்களைப் போன்ற நடவடிக்கைகளுக்காக நாம் பணம் செலவிடத் தயங்கக் கூடாது—அரசுப் பொறியமைவுக்காக, அனேகமாய் முழு அளவில் வரலாற்றின் கடந்த சகாப்தத்தின் விளைவாகிய இந்தப் பொறியமைவுக்காகத் தாராளமாய் நாம் விரயம் செய்யும் பணத்தை இந்நடவடிக்கைகளுக்காகச் செலவிடத் தயங்கக் கூடாது.

கிராமங்களின் காப்பு ஆதரவாளர்களாய் நகரத் தொழிலாளர்கள் ஆற்றும் பணிகள் குறித்து, 1922 டிசம்பரில் சோவியத்துகளின் காங்கிரசில் நான் நிகழ்த்துவதாயிருந்த சொற்பொழிவுக்காகப் புள்ளிவிவரங்கள் சேகரித்தேன். இந்தப் புள்ளிவிவரங்களில் ஒரு பகுதி தோழர் ஹதரோவ்ஸ்கி எனக்காகத் திரட்டியவை. இந்த விவகாரத்தை எடுத்துரைத்து, காங்கிரசின் மூலம் இதை விளம்பரப்படுத்த முடியாமற் போய்விட்டதால், இப்பொழுது விவாதத்துக்காகத் தொழர்களுக்கு இதைச் சமர்ப்பிக்கின்றேன்.

இங்கு நம் முன்னே இருப்பது ஓர் அடிப்படை அரசியல் பிரச்சினை—நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான உறவுகளைப் பற்றிய பிரச்சினை. நமது புரட்சி அனைத்துக்கும் தீர்மானகரமான முக்கியத்துவமுடைய பிரச்சினை இது. முதலாளித்துவ அரசு நகரத் தொழிலாளர்களை மயக்கி ஏமாற்றுவதற்காகத் தனது முயற்சிகளைத் திட்டுமிட்டு ஒன்றுகுவியச் செய்கிறது; இதன் பொருட்டு அரசாங்கச் செலவிலும் ஜாரிஸ்டு கட்சிகள், முதலாளித்துவக் கட்சிகளின் செலவிலும் வெளியிடப்படும் எல்லா வெளியீடுகளையும் ஒழுங்கு செய்து கொள்கிறது. ஆனால் நாம் நகரத் தொழிலாளியைக் கம்யூனிசக் கருத்துக்களை கிராமத்துப் பாட்டாளி வர்க்கத்திடம் எடுத்துச் செல்லும் பயனுள்ள தூதுவனுக்குவதற்காக நமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும், பயன்படுத்தவும் வேண்டும்.

''கம்யூனிசக் கருத்துக்கள்'' என்று சொன்னேன்; இதனால் தப்பான அபிப்பிராயம் ஏற்பட்டு விடலாம், அல்லது

சொல்லின் நேர்பொருளில் அப்படியே அர்த்தப்படுத்தப் பட்டுவிடலாம் என்று அஞ்சி அவசரமாய் நிபந்தனை வரம்பிடு கிறேன். கலப்பற்ற, கறாரான கம்யூனிசக் கருத்துக்களை உட னடியாகவே நாம் கிராமப்புறங்களில் பரப்ப வேண்டும் என்ப தாய் எந்நிலைமையிலும் இதை அர்த்தப்படுத்திவிடக் கூடாது. கம்யூனிசத்துக்குத் தேவையான பொருளாயத அடித்தளம் நமது கிராமப்புறங்களில் இல்லாதவரை, இதைச் செய்வது கம்யூனிசத்துக்குத் தீங்கிழைப்பதாகவே இருக்கும், உண்மை யில் பேராபத்து விளைவிப்பதாகவே இருக்கும் என்றே கூற வேண்டும்.

அதுதான் உண்மை. கிராமப் பகுதிகளில் கம்யூனிசத் தைப் புகுத்துவதென்று முன்கூட்டியே புனைந்தமைந்த நோக் கம் இல்லாமலே, நகரத்துக்கும் கிராமத்துக்குமிடையே நாம் தொடர்புகளை அமைத்திட முற்பட்டாக வேண்டும். கம்யூ னிசத்தைப் புகுத்துவதென்ற நோக்கம் தற்போது சாதிக்கப் படக் கூடியதல்ல. இது காலத்துக்கு உகந்ததல்ல. இது போன்ற ஒரு நோக்கத்தை தற்போது ஏற்பது இலட்சியத் துக்குச் சேவை புரிவதற்குப் பதிலாய்த் தீங்கே இழைக்கும்.

ஆனால் நகரத் தொழிலாளர்களுக்கும் கிராமத் தொழி லாளி மக்களுக்குமிடையே தொடர்புகளை நிறுவுதல், அவர் களிடையே ஒரு வகைத் தோழமையுறவை நிறுவுதல் நமது கடமையாகும். இந்தத் தோழமையுறவை எளிதில் ஏற் படுத்த முடியும். ஆட்சியதிகாரம் வகிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் முன்னுள்ள அடிப்படைப் பணிகளில் ஒன்று இது. இதை நிறைவேற்ற ஆலைத் தொழிலாளர்களது கழகங் கள் பலவற்றையும் (கட்சி, தொழிற் சங்க, மற்றும் தனியார் கழகங்களை) நாம் நிறுவ வேண்டும்; கிராமங்கள் கலாசார வளர்ச்சி பெற அவற்றுக்கு முறைபட தொண்டாற்றுவதற்கு இக்கழகங்கள் தம்மைப் பணித்துக் கொள்ள வேண்டும்.

எல்லா நகரக் குழுக்களையும் கிராமக் குழுக்களுடன் ''இணைத்து'', இதன் மூலம் தொழிலாளி வர்க்கக் குழு ஒவ் வொன்றும் அது ''இணைக்கப்பட்டிருக்கும்'' கிராமக் குழு வின் கலாசாரத் தேவைகளுக்குப் பணி புரிவதற்கான ஒவ் வொரு வாய்ப்பையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் முறை யாய்ப் பயன்படுத்திக் கொள்ளும்படிச் செய்ய முடியுமா?

அல்லது தொடர்புகளுக்கான இதர முறைகளைக் கண்டு பிடிக்க வேண்டுமா? இங்கு நான் இக்கேள்வியைக் குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்கிறேன். இதைத் தோழர்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதும், மேற்கு சைபீரியாவிலிருந்து கிடைத்திருக்கும் அனுபவத்தை (தோழர் ஹதரோவ்ஸ்கி இதை என் கவனத்துக்குக் கொண்டு வந்தார்) சுட்டிக் காட்டுவதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரம்மாண்ட கலாசாரப் பணியை அதன் முழுப் பரிமாணத்திலும் எடுத்துரைப்பதும்தான் எனது நோக்கம்.

கிராமப் பகுதிகளுக்காக நமது அரசாங்கப் பட்ஜெட்டுக்கு வெளியே, அல்லது அரசாங்க மார்க்கங்களுக்கு வெளியே அனேகமாய் எதுவுமே நாம் செய்யவில்லை. நமது நாட்டில் நகருக்கும் கிராமத்துக்கும் இடையிலான கலாசார உறவுகளின் தன்மையானது தாமாகவே, தவிர்க்க முடியாத வழியில் மாறிவருவது மெய்தான். முதலாளித்துவத்தில் நகரமானது அரசியல், பொருளாதார, ஒழுக்கநெறி, பௌதிக, இன்ன பிற முறைகளிலான ஊழலைக் கிராமப் புறத்தில் புகுத்திற்று. நம்முடைய விவகாரத்தில், இவற்றுக்கு நேர்மாறுனவற்றை நகரங்கள் கிராமப் புறத்தில் புகுத்துவதற்குத் தாமாகவே முற்பட்டிருக்கின்றன. ஆனால் இவையாவும் தாமாகவே, தன்முனைப்பாகவே நடைபெற்று வருகின்றன என்பதைத் திரும்பவும் குறிப்பிடுகிறேன். உணர்வுபூர்வமாகவும், திட்ட வழியிலும், முறையாகவும் இப் பணியைச் செய்வதன் மூலம் இவற்றை மேம்படச் செய்ய முடியும் (பிற்பாடு நூறு மடங்கு கூடுதலாக்கவும் முடியும்).

இந்தப் பிரச்சினையை நாம் ஆராய்வோமாயின், இந்தப் பிரச்சினையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவும், இதை விவாதிக்கவும், காரியங்களைச் செய்து முடிக்கவும் எல்லா வகையான தொழிலாளர் நிறுவனங்களையும் அமைத்துக் கொள்வோமாயின்—இந்நிறுவனங்கள் அதிகாரவர்க்கத் தன்மை பெறுதபடித் தடுப்பதற்கு யாவும் செய்வோமாயின்—அதன்பின் நாம் முன்னேறத் தோடங்குவோம் (அதற்குப் பிற்பாடு இன்னும் நூறு மடங்கு அதிக வேகத்தில் நிச்சயம் முன்னேறுவோம்).

1923 ஜனவரி 2

பிராவ்தா, இதழ் 2,
1923 ஜனவரி 4
ஒப்பம்: நி.லெனின்

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 363-368

கூட்டுறவு குறித்து

1

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. தற்போது, அக்டோபர் புரட்சி நடைபெற்றது முதலாய், புதிய பொருளாதாரக் கொள்கையையும்[74] அன்னியில் (இதற்கு மாறுப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாய் என்றே இச்சந்தர்ப்பத்தில் நாம் கூற வேண்டும்), நமது கூட்டுறவு இயக்கம் மிகுந்த முக்கியத்துவமுடையதாகி விட்டதை எல்லோரும் புரிந்து கொள்வதாய்ச் சொல்வதற்கில்லை. பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனைப் புனைவுகள் மிகுதியாய் உள்ளன. அடிக்கடி அவை நகைக்கத்தக்க அளவுக்குக் கற்பனைப் புனைவுகளாய் அமைந்துவிடுகின்றன. அவை நம்ப முடியாத கற்பனைகளாய் இருக்கக் காரணம் என்ன? காரணம் என்னவெனில், சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக நடைபெறும் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அடிப்படையான, ஆழ்மட்டத்து முக்கியத்துவத்தை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. நாம் சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்திவிட்டோம், ஆகவே பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனையாகவும், ஏன் புத்தார்வ மனப்பாங்காகவும், கொச்சையாகவும்கூட இருந்தவை பலவும் இப்பொழுது அப்பட்ட எதார்த்த உண்மையாகி வருகின்றன.

அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு வந்துவிட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும்

இந்த அரசியல் ஆட்சியதிகாரத்துக்குச் சொந்தமாகிவிட்டதால், இனி மக்கள் எல்லோரையும் கூட்டுறவுக் கழகங்களில் ஒன்றுதிரளச் செய்வதுதான் நமக்குள்ள ஒரே பணி என்றுகி விட்டது. வர்க்கப் போராட்டத்தை நடத்துவதும், அரசியல் ஆட்சியதிகாரத்துக்காகப் போராடுவதும், இன்ன பிறவும் அவசியமென்று பிழையற்ற முறையில் கருதியோர், நியாயமாகவே நகைப்புக்கும் இகழ்ச்சிக்கும் ஏளனத்துக்கும் உரியதாய்க் கொண்ட அந்த சோஷலிசம், இப்பொழுது மக்கள் தொகையில் மிகப் பெருவாரியானோர் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டப் பட்டதும் தானுகவே தனது குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டுவிடும். ஆனல் இப்பொழுது ருஷ்யாவின் மக்கள் எல்லோரையும் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றுதிரளச் செய்வது எவ்வளவு பிரம்மாண்ட, எண்ணிலடங்கா மடங்கு முக்கியத்துவமுடையதாகும் என்பதை எல்லாத் தோழர்களும் உணர்வதில்லை. புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றதன் மூலம் நாம், வியாபாரியாய்ச் செயல்படும் விவசாயிக்கு, தனியார் வர்த்தகமெனும் கோட்பாட்டுக்கு ஓரளவு விட்டுக் கொடுத்தோம். இதே காரணத்தால் (சிலர் நினைப்பதற்கு நேர் மாறுய்), கூட்டுறவு இயக்கம் இன்று இந்தப் பிரம்மாண்ட முக்கியத்துவம் பெறுகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையின்கீழ் நாம் செய்ய வேண்டியதெல்லாம் போதுமான அளவுக்கு விரிவாய் ருஷ்யாவின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதுதான். ஏனெனில் இப்பொழுது நாம் தனியார் நலத்தை, தனியார் வர்த்தக நலத்தை, அந்த நலத்தின் மீதான அரசு மேற்பார்வையுடன், கண்காணிப்புடன் எந்த அளவுக்கு இணைக்க வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம்; அதைப் பொது நலன்களுக்கு எந்த அளவுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமென்று கண்டு கொண்டுவிட்டோம். பல சோஷலிஸ்டுகளுக்கும் முட்டுக்கட்டையாய் இருந்த இதனை நாம் கண்டு கொண்டுவிட்டோம். எல்லாப் பெருவீத உற்பத்திச் சாதனங்களும் அரசின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருத்தல், அரசியல் ஆட்சியதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருத்தல், இந்தப் பாட்டாளி வர்க்கம் கோடிக் கணக்கான சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுடன் கூட்டணி கொண்டிருத்தல், பாட்டாளி வர்க்கம்

விவசாயிகளுக்குத் தலைமை தாங்குதல் உறுதி பெற்றிருத்தல் முதலான இவைதானே கூட்டுறவுகளைக் கொண்டு—கூட்டுறவுகளை மட்டுமே கொண்டு—முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவைப்படுகிறவை? முன்பு நாம் இந்தக் கூட்டுறவுகளை லாப வேட்டை அடிப்படையாய் இழித்துக் கூறினோம், இப்பொழுதுங்கூட புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் இவற்றை ஓரளவுக்கு இவ்வாறு இழித்துக் கூற நமக்கு உரிமை உண்டு. இந்தக் கூட்டுறவுகளிலிருந்து முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதெல்லாம் மேற்கூறியவைதானே? இன்னும் இது சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைப்பது ஆகிவிடாது என்றாலுங்கூட, சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவையானதும் போதுமானதும் இதுதானே.

இதைத்தான் நமது செய்முறை ஊழியர்கள் பலரும் குறைத்து மதிப்பிட்டுவிடுகிறார்கள். நமது கூட்டுறவுச் சங்கங்களை அவர்கள் ஏளனமாய்க் கருதுகிறார்கள். அவற்றின் தனி முக்கியத்துவத்தை—முதலாவதாய், கோட்பாட்டின் கண்ணோட்டத்திலிருந்தும் (உற்பத்திச் சாதனங்கள் அரசுக்குச் சொந்தமாயிருக்கின்றன), இரண்டாவதாய், **மிகவும் எளிய, சுலபமான, விவசாயிக்கு மிகவும் ஏற்புடையதான** வழிகளில் புதிய அமைப்புக்கு மாறிச் செல்லும் கண்ணோட்டத்திலிருந்தும் அவற்றுக்குள்ள தனி முக்கியத்துவத்தை—அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

இதுவும் அடிப்படை முக்கியத்துவத்துக்குரியதே. எல்லா வகையான தொழிலாளர் சங்கங்களைக் கொண்டும் சோஷலிசத்தைக் கட்டியமைப்பது குறித்து விபரீதத் திட்டங்களை வகுப்பது ஒன்று; ஆனால் நடைமுறையில் சோஷலிசத்தைக் கட்டுவது, **ஒவ்வொரு** சிறு விவசாயியும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும்படியான முறையில் சோஷலிசத்தைக் கட்டுவது முற்றிலும் வேறொன்று. இப்பொழுது நாம் வந்தடைந்திருப்பது இதே கட்டத்தைத்தான். இதை வந்தடைந்தபின், நாம் இதைச் சொற்ப அளவுக்கே பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொண்ட போது நாம் அளவுமீறிச் சென்றுவிட்டோம்; தடையில்லாத்

தனியார் தொழில், தடையில்லா வாணிபம் என்னும் கோட்பாட்டுக்கு மிதமிஞ்சிய இடம் அளித்தோம் என்பதாலல்ல, கூட்டுறவுகளைக் கருதத் தவறிவிட்டோம், கூட்டுறவுகளைக் குறைத்து மதிப்பிட்டோம்; மேற்கூறிய இரு கண்ணோட்டங்களிலும் கூட்டுறவுகளுக்குள்ள மிகுந்த முக்கியத்துவத்தை ஏற்கனவே மறக்கத் தொடங்கிவிட்டோம் என்பதால் நாம் அளவுமீறிச் சென்றோம்.

இந்தக் ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் அடிப்படையில் நடைமுறையில் என்ன செய்யலாம், என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இப்பொழுது வாசகருடன் விவாதிக்கப் போகிறேன். ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் சோஷலிசப் பொருள் எல்லோருக்கும் தெளிவாய்ப் புலப்படும் வண்ணம் உடனடியாய் இக்கோட்பாட்டை நாம் எவ்வழிகளில் வளர்க்க முற்படலாம், முற்படவும் வேண்டும்?

கூட்டுறவானது பொதுவாகவும் எப்பொழுதும் சில தனிச் சலுகைகள் பெற்றிருப்பதோடன்றி, இந்தத் தனிச் சலுகைகள் முற்றிலும் பொருளாயதத் தன்மையனவாகவும் (சலுகைக்குரிய பாங்கி வட்டி விகிதம் முதலானவை) இருக்கும்படியான அரசியல் வழியில் அது ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தனியார் தொழில் நிலையங்களுக்கு நாம் அளிக்கும் கடன்களைக் காட்டிலும், கனரகத் தொழிலுக்கும் பிற வற்றுக்கும் அளிப்பதையும் காட்டிலும் அதிகமான, சிறிதள வேனும் அதிகமான, அரசாங்கக் கடன்கள் கூட்டுறவுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் நிதி ஆதரவு இருந்தால் தான் ஒரு சமுதாய அமைப்பு தோன்ற முடியும். ''தடையில்லா'' முதலாளித்துவம் பிறப்பதற்கு நூறு கோடிக் கணக்கான ரூபிள் தொகை செலவிட வேண்டியிருந்ததைக் குறிப்பிடத் தேவையில்லை. தற்போது நாம் வழக்கத்தைவிட அதிகமாய் உதவி அளிக்க வேண்டிய சமுதாய அமைப்பு கூட்டுறவு அமைப்பே என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். மெய்யாகவே நாம் இந்த உதவியை அளித்தாக வேண்டும். அச்சொல்லின் மெய்ப் பொருளில் அது உதவியாய் இருத்தல் வேண்டும். அதாவது எந்த வகையான கூட்டுறவு வர்த்தகத்துக்கும் அளிக்கப்படும் உதவியாய் அதை அர்த்தப்படுத்தினால் போதாது;

உதவி அளிக்க வேண்டும் என்று கூறும்போது, மெய்யாகவே பெருந் திரள்களான மக்கள் தொகையினர் நடைமுறையில் பங்கெடுத்துக் கொள்ளும் கூட்டுறவு வர்த்தகத்துக்கு உதவுவதையே அது குறிக்க வேண்டும். கூட்டுறவு வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் விவசாயிக்கு போனஸ் தருவது சரியான தோர் உதவி முறைதான், ஆனால் பிரதான விவகாரம் என்ன வெனில் விவசாயி எடுத்துக் கொள்ளும் இந்தப் பங்கின் இயல்பையும், அதில் அடங்கியுள்ள உணர்வையும், அதன் தன்மையையும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். கறாராய்ச் சொல்வதெனில், கூட்டுறவாளர் ஒருவர் கிராமத்துக்குச் சென்று கூட்டுறவுப் பண்டகசாலை திறந்தால், மக்கள் அதில் எந்தப் பங்கும் எடுத்துக் கொள்வதில்லை, ஆயினும் தமது சொந்த நலன்களால் உந்தப்பட்டு அதில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ள முன்வரவே செய்வர்.

இந்தப் பிரச்சினைக்கு மற்றோர் அம்சமும் இருக்கிறது. ''அறிவொளி படைத்த'' (பிரதானமாய் எழுத்தறிவு படைத்த) ஐரோப்பியரின் கண்ணோட்டத்தின்படி கூட்டுறவுச் செயற்பாடுகளில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் தன்முனைப்பில்லாத முறையிலல்ல, முழுமுனைப்புடன் பங்கெடுத்துக் கொள்ளும்படி தூண்டுவதற்கு நாம் மேலும் செய்ய வேண்டியுள்ளது அதிகமில்லை. கறாராய்க் கூறுகையில் நாம் மேலும் செய்ய வேண்டியிருப்பது ''ஒன்றே ஒன்று தான்''. கூட்டுறவுகளில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்வதன் அனுகூலங்களை நம் மக்கள் புரிந்து கொள்ளும்படியும், இவ்வாறு எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யும் படியும் அவர்களை ''அறிவொளி பெறச் செய்வது தான்'' அது. இந்த ''ஒன்றே ஒன்றுதான்'' மேலும் செய்ய வேண்டியதெல்லாம். சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல்வதற்குத் தற்போது வேறு வழிமுறைகள் தேவைப்படவில்லை. ஆனால் இந்த ''ஒன்றே ஒன்றைச்'' செய்து முடிப்பதற்கு ஒரு பெரும் புரட்சியே நடந்தேறியாக வேண்டும்—மக்கள் அனைவரும் கலாசார வளர்ச்சி பெறுவதற்குரிய ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். ஆகவே, தத்துவார்த்தம் பேசுவதையும் கர்ணமடித்து வித்தை புரிவதையும் கூடுமான அளவுக்குக் குறைத்துக் கொள்வதென நாம் விதி செய்து

கொண்டாக வேண்டும். இவ்விதத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை ஒரு முன்னேற்றமாகும். ஏனெனில் இது சர்வ சாதாரண விவசாயியின் நிலைக்கு ஏற்றதாகக்கூடியதாய் இருக்கிறது, இந்த நிலைக்கு உயர்வானது எதையும் அது விவசாயியிடமிருந்து கோரவில்லை. ஆனால் மக்கள் தொகையினர் அனைவரையும் புதிய பொருளாதாரக் கொள்கையின் வாயிலாய்க் கூட்டுறவுகளில் பங்கு கொள்ளச் செய்வதற்கு ஒரு முழு வரலாற்றுச் சகாப்தமே வேண்டியிருக்கும். இதைச் சாதிக்கக் குறைந்தது பத்து, இருபது ஆண்டுகளாவது ஆகும். ஆயினும் இது ஒரு தனி வரலாற்றுச் சகாப்தமே ஆகும். இந்த வரலாற்றுச் சகாப்தம் இல்லாமல், அனைத்து மக்களும் எழுத்தறிவு பெறுமல், போதிய அளவு விவேகமுடையோராய் இராமல், புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற்படப் போதிய அளவுக்கு மக்கள் பயிற்சி பெறுமல், இதற்குரிய பொருளாயத அடித்தளம் இல்லாமல், உதாரணமாய் அறுவடை மோசமாகிவிடுதல், பஞ்சம் போன்ற பலவற்றிடமிருந்தும் பாதுகாப்பு பெறுவதற்கு வேண்டிய ஓரளவு நிறைவு நிலை இல்லாமல்—இவையாவும் இன்றி நாம் நமது குறிக்கோளை அடைய முடியாது. செயல்களில் விரிவான புரட்சிகர வீச்சை நாம் வெளிப்படுத்திக் காட்டி—மிகுதியாய் வெளிப்படுத்திக் காட்டி—முழு அளவில் வெற்றி ஈட்டியுள்ள புரட்சிகர ஆர்வத்தை (விவேகமுள்ள, அறிவு பெற்ற வர்த்தகருக்குரிய திறன் என்பதாய்க் கூற வேண்டும் என்றே தோன்றுகிறது எனக்கு) அந்தத் திறனுடன் இணைக்கத் தெரிந்து கொள்வதுதான் இப்பொழுது தலையாயதாகும். சிறந்த கூட்டுறவாளராவதற்கு விவேகமும் அறிவுமுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் இருந்தால் போதும். வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் என்பதன் மூலம் நான் பண்பாடுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றலையே குறிப்பிடுகிறேன். வர்த்தகம் புரிகிறோம் என்பதால் தாம் நல்ல வர்த்தகர்களே என்பதாய்க் கற்பனை செய்து கொள்ளும் ருஷ்யர்கள் அல்லது விவசாயிகள் இதைத் தெளிவாய்ப் புரிந்து கொண்டாக வேண்டும். முன்னதிலிருந்து பின்னது பெறப்பட்டுவிடவில்லை. அவர்கள் வர்த்தகம் புரிவது மெய்தான், ஆனால் பண்பாடுடைய வர்த்தகர்களாய் இருப்பதற்கும் அதற்கும் நெடுந்தூரம். இப்பொழுது அவர்

கள் ஆசிய முறையில் வர்த்தகம் புரிகின்றனர், ஆனல் நல்ல வர்த்தகராய் இருக்க வேண்டுமாயின் ஐரோப்பிய முறையில் வர்த்தகம் புரிந்தாக வேண்டும். அந்த நிலையிலிருந்து அவர் கள் ஒரு முழுச் சகாப்தம் பின்தங்கியோராய் இருக்கின்றனர்.

முடிவுரையாய்க் கூறவேண்டியது: சோஷலிச அரசு கூட்டுறவுகளுக்குப் பொருளாதார, நிதித் துறை, பாங்கித் துறை சலுகைகள் பலவும் வழங்க வேண்டும்—மக்களை ஒன்று திரட்டுவதற்குரிய புதிய கோட்பாட்டுக்கு ஆதரவளிக்க இதுவே வழி. ஆனல் இது இப்பணியின் பொது உருவரையே தவிர, நடைமுறைப் பணியின் முழு உள்ளடக்கத்தையும் வரையறுத்து விவரமாய் எடுத்துரைக்கவில்லை. அதாவது கூட்டுறவுகளில் சேருவதற்காகத் தர வேண்டிய ''போன சின்'' வடிவம் என்ன (இதை நாம் எந்த நிபந்தனைகளின் பேரில் தருவது), கூட்டுறவுகளுக்கு நாம் போதுமான அளவில் உதவுவதற்கு வேண்டிய போனசின் வடிவம் என்ன, பண்பாடு டைய கூட்டுறவாளரை உருவாக்கக் கூடிய போனசின் வடி வம் என்ன என்பதை நாம் கண்டறிந்து கொண்டாக வேண் டும். உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை இருக்குமா யின், பாட்டாளி வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வர்க்க வெற்றி பெற்றுவிடுமாயின், பண்பாடுடைய கூட்டுறவாளர்களது அமைப்புதான் சோஷலிச அமைப்பு.

1923 ஜனவரி 4

2

புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து நான் எழுதிய போதெல்லாம், *1918*ல் அரசு முதலாளித்துவத்தைப் பற்றி நான் எழுதிய கட்டுரையை எப்பொழுதுமே மேற்கோளாய்க் குறிப்பிட்டேன். பன்முறை இது சில இளந் தோழர்களது மனதில் சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. ஆனல் இவர் களுடைய சந்தேகங்கள் பிரதானமாய்க் கருத்தியலான அரசியல் விவகாரங்களைப் பற்றியவையே.

அரசு முதலாளித்துவம் என்னும் தொடரை உற்பத்திச் சாதனங்கள் தொழிலாளி வர்க்கத்தின், அரசியல் ஆட்சியதி காரம் வகிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய்

இருக்கும் ஓர் அமைப்பைக் குறிப்பதற்கு உபயோகிக்கக் கூடாதென இவர்கள் நினைத்தனர். ஆனால் ''அரசு முதலாளித்துவம்'' என்னும் தொடரை நான் **முதலாவதாக,** நமது தற்போதைய நிலையை இடதுசாரி கம்யூனிஸ்டுகள்[75] என் போருடன் நடைபெற்ற எனது வாக்குவாதத்தில் ஏற்கப் பட்ட நிலையுடன் வரலாற்று வழியில் இணைத்துக் காட்டுவதற் காக உபயோகித்தேன் என்பதை இவர்கள் கவனிக்கவில்லை. தவிரவும் அப்பொழுது நான் அரசு முதலாளித்துவம் தற் போதுள்ள நமது பொருளாதாரத்தைக் காட்டிலும் மேம் பட்டதாய் இருக்கும் என்று வாதாடினேன். சாதாரண அரசு முதலாளித்துவத்துக்கும், புதிய பொருளாதாரக் கொள்கை யை வாசகருக்கு அறிமுகம் செய்கையில் நான் குறிப்பிட்ட அசாதாரணமான—மிகமிக அசாதாரணமான என்றுகூட சொல்ல வேண்டும்—அரசு முதலாளித்துவத்துக்கும் இடை யிலுள்ள தொடர்பைக் காட்டுவது எனக்கு முக்கியமான தாய் இருந்தது. **இரண்டாவதாக,** நடைமுறைக் குறிக்கோள் எப்பொழுதுமே எனக்கு முக்கியமானதாய் இருந்தது. சலுகை உரிமைக் குத்தகைகள் தருவதே நமது புதிய பொருளா தாரக் கொள்கையின் நடைமுறைக் குறிக்கோள். நடப்பி லுள்ள சூழ்நிலையில் நமது நாட்டில் சலுகை உரிமைகள் சந் தேகத்துக்கு இடமில்லாமல் அரசு முதலாளித்துவத்தின் கலப் பற்ற சுத்தமான ஒரு வடிவமாகவே இருக்கும். அரசு முத லாளித்துவம் குறித்து இப்படித்தான் நான் வாதாடினேன்.

ஆனால் இந்த விவகாரத்தின் மற்றோர் அம்சமும் இருக் கிறது. இதற்கு அரசு முதலாளித்துவம் தேவைப்படலாம்; அல்லது குறைந்தது அதனுடனை ஒப்பிடலாவது தேவைப் படலாம். கூட்டுறவுகள் பற்றிய பிரச்சினையே இந்த அம்சம்.

முதலாளித்துவ அரசில், கூட்டுறவுகள் கூட்டு முத லாளித்துவ நிலையங்களாகும் என்பதில் ஐயமில்லை. நமது தற்போதைய பொருளாதார நிலைமைகளில், தனியார் முத லாளித்துவத் தொழில் நிலையங்களை—தேசவுடைமையாக்கப் பட்ட நிலத்தில் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல், தொழிலாளி வர்க்க அரசின் கண்காணிப்பின் கீழ் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல்—முழுக்க முழுக்க சோஷலிச வகையிலான தொழில் நிலையங்களுடன் (உற்பத்திச் சாதனங்

களும் இந்நிலையங்கள் அமைந்திருக்கும் நிலமும் மற்றும் இந்நிலையங்கள் பூராவும் அரசின் உடைமையாய் இருப்பவை) இணைத்திடும் மூன்றுவது வகையிலான நிலையங்களைப் பற்றிய பிரச்சினை, அதாவது கூட்டுறவுகளைப் பற்றிய பிரச்சினை எழுவதிலும் ஐயமில்லை. முன்பெல்லாம் கூட்டுறவுகள் ஏனைய நிலையங்களிலிருந்து அடிப்படையாகவே மாறுபடும் சுயேச்சையான ஒருதனி வகை நிலையங்களாய்க் கருதப்படவில்லை. கூட்டுத்தொழில் நிலையங்கள் எப்படித் தனியார் தொழில் நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றனவோ அதே போல தனியார் முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன. அரசு முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் அரசு முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன; ஏனெனில் முதலாவதாக, அவை தனியார் நிலையங்கள், இரண்டாவதாக, அவை கூட்டு நிலையங்கள். நம்முடைய தற்போதைய அமைப்பில் கூட்டுறவு நிலையங்கள் தனியார் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன, ஏனெனில் அவை கூட்டு நிலையங்கள்; ஆனால் அவை அமைந்துள்ள நிலமும் அவற்றின் உற்பத்திச் சாதனங்களும் அரசுக்கு, அதாவது தொழிலாளி வர்க்கத்துக்குச் சொந்தமாயிருக்குமாயின் அவை சோஷலிச நிலையங்களிலிருந்து மாறுபடுகிறவை அல்ல.

கூட்டுறவுகள் குறித்து விவாதிக்கையில் இந்த நிலைமை போதிய அளவுக்குக் கவனிக்கப்படுவதில்லை. நமது அரசியல் அமைப்பினுடைய தனி இயல்புகளின் காரணமாய் நமது கூட்டுறவுகள் முற்றிலும் தனிவகைப்பட்ட முக்கியத்துவம் பெறுவது மறக்கப்பட்டுவிடுகிறது. சலுகை உரிமைகளை நாம் ஒதுக்கிவிடுவோமாயின் — எவ்விதத்திலும் இவை கணிச அளவில் வளர்ந்துவிடவில்லை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்—நமது நிலைமைகளில் கூட்டுறவானது அனேகமாய் எப்பொழுதும் முழு அளவுக்கு சோஷலிசத்துக்கு ஒத்ததாகிவிடுகிறது.

நான் நினைப்பதை விளக்கமாய்க் கூறுகிறேன் கேளுங்கள். ராபர்ட் ஓவன் முதலான பழைய கூட்டுறவாளர்களுடைய திட்டங்கள் விபரீதமான கற்பனைகளாய் இருந்தது ஏன்? ஏனெனில் அவர்கள் வர்க்கப் போராட்டம், தொழி

ளாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்று தல், சுரண்டும் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வீழ்த்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைக் கருதாமலே அக் காலத்திய சமுதாயத்தை சமாதான வழியில் சோஷலிசமாய்த் திருத்தியமைக்கலாமெனக் கனவு கண்டனர். எனவேதான் நாம் இந்தக் ''கூட்டுறவு'' சோஷலிசத்தை முற்றிலும் கற் பனை மயமானதென்றும், நாட்டின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதாலேயே வர்க்கப் பகைவர்களை வர்க்க ஒத்துழைப்பாளர்களாகவும், வர்க்கப் போரை வர்க்க அமைதியாகவும் (சமூக அமைதி என்பதாய்க் கூறப்பட்டது) மாற்றிவிடலாம் என்ற கனவைப் புத்தார்வப் மனப்பாங்காகவும் கொச்சையானதாகவும்கூட கருதுவதில் பிழை ஏதுமில்லை.

தற்போதுள்ள அடிப்படைப் பணியின் கண்ணோட்டத் தின்படி இவ்வாறு கருதுவது முற்றிலும் சரியே. ஏனெனில் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதற்கான வர்க்கப் போ ராட்டம் இல்லாமல் சோஷலிசத்தை நிறுவிவிட முடியாது.

ஆனால் இப்பொழுது அரசியல் ஆட்சியதிகாரம் தொழி லாளி வர்க்கத்தின் கைக்கு மாறியதால், சுரண்டலாளர் களுடைய அரசியல் ஆட்சியதிகாரம் வீழ்த்தப்பட்டதால், உற் பத்திச் சாதனங்கள் யாவும் (தொழிலாளர் அரசு தானே விரும்பி குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் குறிப்பிட்ட காலத்துக்குச் சலுகை உரிமைகளின் வடிவில் சுரண்டலாளர் களிடம் விட்டு வைப்பதைத் தவிர்த்து) தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருப்பதால், நிலைமை எப்படி மாறிவிட்டது பாருங்கள்.

நமக்குக் கூட்டுறவின் வளர்ச்சியே முற்றிலும் சோஷ லிசத்தின் வளர்ச்சிக்கு ஒப்பானதாகிவிட்டது (மேற்கூறிய ''சிறிய'' விதிவிலக்கைத் தவிர்த்து) என்று இப்பொழுது நாம் முழு உரிமையுடன் கூறலாம். அதே போது சோஷலிசத் தைப் பற்றிய நமது கண்ணோட்டம் அனைத்திலும் ஒரு தீவிர மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். முன்பு நாம் அரசியல் போராட்டத்தையும் புரட்சி யையும் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதையும் இன்ன பிறவற்றையுமே பிரதானமாய் வலியுறுத்தி வந்தோம், வலி யுறுத்தி வரவும் வேண்டியிருந்தது. வலியுறுத்தலானது இப்

பொழுது சமாதான வழியிலான ஒழுங்கமைப்பு வகைப்பட்ட ''கலாசாரப்'' பணிக்கு இடம் பெயர்ந்து மாறி வருகிறது. நமது சர்வதேச உறவுகளையும், உலக அளவில் நாம் நமது நிலைக்காகப் போராட வேண்டியிருப்பதையும் கருதத் தேவை இல்லையாயின், வலியுறுத்தல் கலாசாரப் பணிக்கு மாறிச் செல்லுகிறது என்று நான் கூற வேண்டியிருக்கும். ஆனால் இதைக் கருதாது ஒதுக்கிவிட்டு, உள்நாட்டுப் பொருளாதார உறவுகளுடன் நிறுத்திக் கொள்வோமாயின், நமது பணியில் வலியுறுத்தலானது நிச்சயமாய்க் கலாசாரத் துறைக்கே இடம் பெயர்ந்து மாறிச் செல்கிறது.

இரண்டு பிரதான பணிகள் நம்மை எதிர்நோக்கு கின்றன. இந்தச் சகாப்தமே இவ்விரு பணிகளாலுமானதுதான். முதலாவது, நமது அரசின் இயந்திரத்தைத் திருத்தியமைத் தல். இந்த இயந்திரம் முற்றிலும் உபயோகமற்றதாகும்; முந்திய சகாப்தத்திலிருந்து முழுமையாய் இவ்வியந்திரத் தை நாம் பெற்றுக் கொண்டோம். போராட்டத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இயந்திரத்தைத் தீவிரமாய்த் திருத்தியமைக்கவில்லை, திருத்தியமைக்க முடியவும் இல்லை. நமது இரண்டாவது பணி விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணி. விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்றுதிரளச் செய்வதே, விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணியின் பொருளாதார நோக்கம். விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டப்பட் டிருப்பார்களாயின், இப்பொழுது நாம் சோஷலிசத்தில் இரு கால்களையும் ஊன்றிக் கெட்டியாய் நின்று கொண்டிருப் போம். ஆனால் விவசாயிகள் அனைவரையும் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டும் முன் விவசாயிகளுடைய (மிகப் பெருவாரி யான மக்கள் திரளான விவசாயிகளுடைய) கலாசார நிலை யை உயர்த்தியாக வேண்டும். கலாசாரப் புரட்சி இல்லாமல் உண்மையில் இப்பணியை நிறைவேற்ற முடியாது.

போதிய அளவு கலாசார வளர்ச்சி பெறுத ஒரு நாட்டில் நாம் சோஷலிசத்தை நாட்ட முற்பட்டது குருட்டுத் துணிச்ச லான காரியமாகுமென நமது எதிராளிகள் திரும்பத் திரும்பக் கூறினர். தத்துவத்தால் (எல்லா வகையான பகட்டுப் புலமையாளர்களது தத்துவத்தால்) விதிக்கப்பட்டதற்கு

எதிர் முனையிலிருந்து நாம் தொடங்கியதால், அவர்களுக்கு இந்தத் தவறான எண்ணம் ஏற்பட்டது. ஏனெனில் நமது நாட்டில் அரசியல், சமுதாயப் புரட்சி கலாசாரப் புரட்சிக்கு முன்னதாகவே நடைபெற்றது. இப்பொழுது நம்மை இதே கலாசாரப் புரட்சி எதிர்நோக்குகிறது.

இந்தக் கலாசாரப் புரட்சி இப்பொழுது நம் நாட்டை முழுநிறை சோஷலிச நாடாக்குவதற்குப் போதுமானதாகும். ஆனால் இப்புரட்சி முற்றிலும் கலாசாரத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் நாம் எழுத்தறியாதோராய் இருக்கிறோம்), முற்றிலும் பொருளாயதத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் கலாசார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்திச் சாதனங்களில் குறிப்பிட்ட ஓர் அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்றுக வேண்டும்) மிகப் பெரிய அளவில் உண்டாக்குகிறது.

1923 ஜனவரி 6

முதன்முதல் *1923*,
மே *26*, *27*ல் **பிராவ்தா**,
இதழ்கள் *115*, *116*ல் வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி *45*,
பக்கங்கள் *369-77*

நமது புரட்சி

(நி. ஸுகானவின் குறிப்புகள் சம்பந்தமாய்)

1

புரட்சியைப் பற்றிய ஸுகானவின் குறிப்புகளை அண்மையில் படித்துப் பார்த்தேன். நமது குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகள் எல்லோருக்கும், இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் எல்லோருக்கும் உரியதாயிருக்கும் பகட்டுப் புலமைதான் யாவற்றையும்விட எடுப்பாய்த் தெரிகின்றது. இவர்கள் எல்லோருமே நெஞ்சுத் துணிவு சிறிதும் இல்லாதவர்கள், ஜெர்மன் முன்மாதிரியிலிருந்து இம்மியளவு விலகிச் செல்வதென்றாலும் இவர்களில் மிகச் சிறந்தோருங்கூட வரம்புகள் இட்டு அரண்கள் அமைத்துக் கொள்கிறார்கள் என்பது அன்னியில்—குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகள் எல்லோருக்குமே பொதுவானதாய் அமைந்து, புரட்சிக் காலம் முழுதும் இவர்கள் வெகுவாய் வெளிப்படுத்திக் காட்டியிருக்கும் இந்தக் குணாதிசயத்தை அன்னியில், மிகவும் எடுப்பாய்த் தெரிவது என்னவெனில் கடந்த காலத்தை அப்படியே காப்பியடிக்கும் இவர்களுடைய அடிமைப் புத்திதான்.

இவர்கள் எல்லோரும் தம்மை மார்க்சியவாதிகளாய் அழைத்துக் கொண்ட போதிலும், மார்க்சியம் குறித்து இவர்களுக்குள்ள கருத்தோட்டம் முழுக்க முழுக்க பகட்டுப் புலமையின் பாணியிலேதான் இருக்கிறது. மார்க்சியத்தில் தீர்மானகரமாய் இருப்பது எதுவோ அதை—அதாவது மார்க்சியத்தின் புரட்சிகர இயக்கவியலை—புரிந்து கொள்ள இவர்கள் அறவே தவறிவிடுகின்றனர். புரட்சிக் காலங்களில் உச்ச அளவுக்கு வளர்ந்து கொடுக்கும்படியான நெகிழ்வான போக்கு

தேவைப்படுகிறதென்று மார்க்ஸ் வெளிப்படையாகவே கூறிய வற்றையும்கூட இவர்கள் புரிந்து கொள்ள அறவே தவறி விடுகின்றனர். உதாரணமாய், ஜெர்மனியில் புரட்சிகர நிலை மையைத் தோற்றுவிக்கக் கூடிய விவசாயிப் போர் ஒன்றைத் தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைந்து நடைபெறச் செய்யலாம் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்து மார்க்ஸ் தமது கடிதங்களில்—1856ல் என்று நினைக்கிறேன்—எழுதிய வற்றையும் கூட இவர்கள் கவனிக்கத் தவிறிவிடுகின்றனர் — வெளிப்படையான இந்தக் கருத்துரையையுங்கூட நெருங்கி வராமல், சுடான பால் சட்டியைச் சுற்றிக் கொண்டிருக்கும் பூனையைப் போல, தொலைவிலிருந்தபடி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து முறித்துக் கொள் வது போகட்டும், அதனிடமிருந்து சற்றே தடம் புரள்வதற் கும்கூட துணிவில்லாத கோழைகளான சீர்திருத்தவாதிகளே ஆவோம் என்று தம்மைத் தாமே இவர்கள் தம் நடத்தை யின் மூலம் அம்பலப்படுத்திக் கொள்கின்றனர். அதேபோது அடாபிடியான வாய்வீச்சையும் வீம்புப் பேச்சையும் கொண்டு தமது கோழைத்தனத்தை மூடிமறைத்துக் கொள் கிறார்கள். ஆனால் முற்றிலும் தத்துவார்த்த கண்ணோட்டத் திலுங்கூட இவர்கள் எல்லோரும் பின்வரும் மார்க்சிய ஆய்வு நிலைகளைப் புரிந்து கொள்ள சிறிதும் இயலாதோராய் இருப் பது எடுப்பாய்த் தெரிகிறது: இதுகாறும் முதலாளித்துவமும் முதலாளித்துவ ஜனநாயகமும் மேலைய ஐரோப்பாவில் குறிப் பிட்டதொரு வளர்ச்சிப் பாதையில் சென்றுள்ளதை இவர் கள் கண்டிருக்கிறார்கள்; இந்தப் பாதையைத் தக்க மாற்றங் களுடன்தான், சிற்சில திருத்தங்களுடன் மட்டும்தான் (உலக வரலாற்றின் பொதுவான வளர்ச்சியினது கண்ணோட்டத்தில் சிறிதும் குறிப்பிடத்தக்கவை அல்லாத சில திருத்தங்களுடன் மட்டும்தான்) ஒரு முன்மாதிரியாய்க் கொள்ள முடியுமென் பது இவர்களுடைய சிந்தனைக்கு எட்டாத ஒன்றாய் இருக் கிறது.

முதலாவதாக—ஏகாதிபத்திய முதலாம் உலக யுத்தத் துடன் இணைந்த புரட்சி. இத்தகைய ஒரு புரட்சி இந்த யுத் தத்தின் விளைவாய் எழும் புதிய இயல்புகளை அல்லது உருத்

திரிபுகளே வெளிக்காட்டவே செய்யும், ஏனெனில் உலகம் இத்தகைய ஒரு யுத்தத்தை இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஒரு போதும் கண்டதில்லை. யுத்தத்துக்குப் பிற்பாடு மிகவும் செல்வந்த நாடுகளானவற்றின் முதலாளித்துவ வர்க்கத்தார் இதுநாள் வரை ''முறையான'' முதலாளித்துவ உறவுகளை மீட்டமைக்க முடியாதோராய் இருப்பதைக் காண்கிறோம். ஆயினும் நமது சீர்திருத்தவாதிகள்—புரட்சியாளர்களாய் வேடம் பூண்டுள்ள குட்டி-பூர்ஷுவாக்கள்—முறையான முதலாளித்துவ உறவுகளே இறுதி வரம்பென (இவ்வளவுதான், இதற்கு மேல் ஓரடியும் போகலாகாது) நம்பினர், இனியும் நம்பி வருகின்றனர். ''முறையான'' உறவுகளைப் பற்றிய இவர்களுடைய கருத்தோட்டமுங்கூட அளவுமீறி ஒரேமாதிரியான வார்ப்பாகவும், அளவுமீறி குறுகியதாகவும் இருக்கிறது.

இரண்டாவதாக, ஒட்டுமொத்தமாய் உலக வரலாற்றின் வளர்ச்சியானது பொது விதிகளுக்கு ஏற்பவே நடைபெறுகிறது என்றாலும், வளர்ச்சியின் குறிப்பிட்ட சில காலகட்டங்களில் இந்த வளர்ச்சி அதன் வடிவத்திலோ, வரிசைக் கிரமத்திலோ சில தனி இயல்புகளை வெளிப்படுத்துவது எவ்வகையிலும் தடுக்கப்பட்டுவிடவில்லை, மாறாக எதிர்பார்க்கக் கூடியதே என்னும் கருத்து இவர்களுக்கு முற்றிலும் அன்னியமானதாய் இருக்கிறது. உதாரணமாய், ருஷ்யாவானது நாகரிக நாடுகளுக்கும் இந்த யுத்தத்தால் முதன்முதல் நாகரிகத்தின் செயல் வட்டத்தினுள் திட்டவட்டமாய்க் கொண்டு வரப்பட்டிருக்கும் நாடுகளுக்கும்—அதாவது ஐரோப்பிய நாடுகளல்லாத எல்லாக் கிழக்குலக நாடுகளுக்கும்—எல்லைக் கோட்டில் அமைந்திருப்பதால், அது சிற்சில தனி இயல்புகளை வெளிப்படுத்தக் கூடும், நிச்சயம் வெளிப்படுத்தவும் செய்யும் என்பது குறித்து இவர்கள் நினைத்தே பார்ப்பதில்லை. இந்தத் தனி இயல்புகள் உலக வளர்ச்சியின் பொது வழிக்கு ஒப்பவே அமைந்திருப்பினுங்கூட இவை ருஷ்யாவின் புரட்சியை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்றவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன; புரட்சியானது கிழக்குலக நாடுகளை நோக்கி நகர்ந்து செல்லுகையில் குறிப்பிட்ட சில அரைகுறைப் புதுமுறைகளைப் புகுத்துகின்றன.

சிறிதும் மாற்றமின்றி அளவு கடந்து ஒரு மாதிரியாய் அமைந்த வார்ப்பாகவே இருக்கிறது, உதாரணமாய் இன்னும் நாம் சோஷலிசத்துக்குப் பக்குவமடைந்தாகவில்லை என்கிற இவர்களது வாதம்; இவர்களிடையிலுள்ள ''மெத்தப் படித்த'' கனவான்கள் சிலர் சொல்லி வரும் சொற்களில் கூறுவதெனில், சோஷலிசத்துக்கு வேண்டிய எதார்த்தப் புறநிலைப் பொருளாதார முதற்கூறுகள் நம் நாட்டில் இருக்கவில்லை என்கிற வாதம். மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகத்தின் வளர்ச்சியின்போது இவர்கள் பொட்ட நெட்டுரு போட்டு மனப்பாடம் செய்து கொண்ட வாதம் இது. முதலாவது ஏகாதிபத்திய யுத்தத்தின் போது உருவானது போன்ற ஒரு புரட்சிகர நிலைமையிலுள்ள மக்கள், வேறு வழி ஏதுமில்லாத தமது இந்த நிலைமையால் உந்தப்பட்டு, நாகரிகம் மேலும் வளர்வதற்குரிய நிலைமைகளை—ஓரளவு அசாதாரணமான நிலைமைகளை—உண்டாக்கிக் கொள்ளச் சிறிதளவேனும் வாய்ப்பளிப்பதாய் இருக்கும் ஒரு போராட்டத்தில் குதிக்கலாம் அல்லவா?—இப்படி ஒரு கெள்வி இவர்களில் யாருடைய சிந்தனையிலும் எழுவதே இல்லை.

''ருஷ்யாவில் உற்பத்தி சக்திகளது வளர்ச்சி சோஷலிசத்தைச் சாத்தியமாக்குபடியான உயர் நிலையை அடைந்தாகவில்லை.'' இரண்டாவது அகிலத்தின் எல்லா வீரர்களும்—ஸுகானவும் அடங்கலாய்த்தான்—இந்த முடிவினை எடுத்துரைத்து முழக்கமிடுகிறார்கள். மறுக்க முடியாத இந்த முடிவினை விதம்விதமான ஆயிரம் வழிகளில் ஓயாமல் டமாரமடைக்கின்றனர், நமது புரட்சிக்கு இதுதான் தீர்மானகரமான உறைகல் என்பதாய் நினைக்கின்றனர்.

ஆனால், அதிகமாகவோ குறைவாகவோ செல்வாக்குடைய மேற்கு ஐரோப்பிய நாடு ஒவ்வொன்றும் ஈடுபட்டிருக்கும்படியான ஏகாதிபத்திய உலக யுத்தத்தில் ருஷ்யாவை இழுத்துவிட்ட அந்தச் சூழ்நிலை, மற்றும் கிழக்குலகில் முற்றிவந்த, அல்லது ஏற்கனவே ஓரளவுக்குத் தொடங்கிவிட்ட புரட்சிகளது முன்னறிவிப்பை ருஷ்யா கண்டு கொள்ளும்படிச் செய்த அந்தச் சூழ்நிலை,''விவசாயிப் போர்'' ஒன்றை தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைத்துக் கொள்ளும் சாத்தியப்பாடு பிரஷ்யாவுக்குக் கைவரப் பெறலாமென்று மாபெரும்

மார்க்சியவாதியான மார்க்சே 1856ல் ஆலோசனை கூறிய அதே இணைப்பை நாம் சாதித்துக் கொள்ளும்படியான ஒரு நிலைக்கு ருஷ்யாவையும் ருஷ்ய வளர்ச்சியையும் கொண்டுவந்த நிலைமைகளைத் தோற்றுவிக்குமாயின் என்ன செய்வதாம்?

வேறு வழி ஏதும் இல்லாத அந்தத் திக்கற்ற சூழ்நிலை, தொழிலாளர்கள், விவசாயிகளது முயற்சிகளைப் பத்து மடங்காய் உயரும்படித் தூண்டிவிட்டு, நாகரிகத்துக்கு வேண்டிய அடிப்படை முன்தேவைகளை மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வழியிலிருந்து மாறுன ஒரு வழியில் தோற்றுவித்துக் கொள்ளும் வாய்ப்பினை நமக்கு அளிக்குமாயின் என்ன செய்வதாம்? உலக வரலாற்று வளர்ச்சியின் பொதுவான நெறி இதனால் மாற்றப்பட்டு விட்டதா, என்ன? உலக வரலாற்றின் பொதுவான வளர்ச்சிப் போக்கினுள் ஈர்க்கப்படும், அல்லது ஏற்கனவே ஈர்க்கப்பட்டுள்ள எல்லா நாடுகளின் அடிப்படை வர்க்கங்களுக்கு இடையிலான அடிப்படை உறவுகள் இதனால் மாற்றப்பட்டு விட்டதா, என்ன?

சோஷலிசத்தைக் கட்டியமைத்திட குறிப்பிட்ட கலாசார நிலை தேவையெனில் (ஆனால் இந்தக் குறிப்பிட்ட ''கலாசார நிலை'' என்னவென்பதை யாராலும் கூற முடியவில்லை, ஏனென்றால் மேற்கு ஐரோப்பிய நாடு ஒவ்வொன்றிலும் இது வெவ்வேறு விதமாய் இருக்கிறது), இந்தக் குறிப்பிட்ட ''கலாசார நிலைக்கு'' அவசியமான முன்தேவைகளை ஏன் நாம் புரட்சிகர வழியில் முதற்கண் சாதித்துக் கொள்ள முற்பட்டு, பிற்பாடு தொழிலாளர்கள், விவசாயிகளது அரசாங்கத்தின் துணை கொண்டும் சோவியத் அமைப்பின் துணை கொண்டும் ஏனைய தேசங்களை எட்டுப்பிடிக்கத் தொடங்கக் கூடாது?

1923 ஜனவரி 16.

2

சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்கு நாகரிகம் அவசியம் என்கிறீர்கள். மிக்க நல்லது. ஆனால் நாகரிகத்துக்கு வேண்டிய முன்தேவைகளை, நிலப்பிரபுக்களையும் ருஷ்ய முத

ளாளிகளையும் வெளியேற்றுவது போன்ற இந்த முன்தேவை களை, ஏன் நாம் முதலில் தோற்றுவித்துக் கொண்டு, அதன் பிறகு சோஷலிசத்தை நோக்கி முன்செல்லக் கூடாது? நிகழ்ச்சிகளின் வழக்கமான வரலாற்று வரிசைக் கிரமத்தில் இப்படிப்பட்ட உருத்திரிபுகள் அனுமதிக்கப்படுவதில்லை என்றே, சாத்தியமற்றவை என்றே எங்கே, எந்தப் புத்தகத்தில் படித்தீர்கள்?

நெப்போலியன் என்று நினைக்கிறேன், "On s'engage et puis... on voit" என்றெழுதினர். சரளமாய் மொழிபெயர்த்தால் இதன் பொருள்: ''மெய்யான போர் ஒன்றில் முதலில் ஈடுபடு, பிறகு என்ன நடைபெறுகிறதென்று பார்''. நல்லது, 1917 அக்டோபரில் நாங்கள் மெய்யான போர் ஒன்றில் முதலில் ஈடுபட்டோம், பிறகு பிரேஸ்த் ஒப்பந்தம்,[76] புதிய பொருளாதாரக் கொள்கை முதலானவை போன்ற வளர்ச்சியின் விவரங்களை (உலக வரலாற்றின் கண்ணோட்டத்தில் இவை சிறு விவரங்களே) பார்த்தோம். பிரதானமாய் நாம் வெற்றி ஈட்டியுள்ளோம் என்பதில் இப்பொழுது சந்தேகம் இருக்க முடியாது.

வேறு எவ்வழியிலும் புரட்சிகள் நடத்த முடியாது என்பது நமது ஸுகானவ்களுக்கு—இன்னும் வலப்புறத்தே இருக்கும் சமூக-ஜனநாயகவாதிகளைப் பற்றி சொல்லவே வேண்டாம் —கனவிலும் கருத முடியாத ஒன்று. கிழக்குலக நாடுகளில், மக்கள் தொகையில் இன்னும் மிகப் பெரிய, சமூக நிலைமைகளில் மேலும் பெரிய அளவுக்குப் பல்வேறுபட்ட இந்நாடுகளில், இனி நடைபெறப் போகும் புரட்சிகள் ருஷ்யப் புரட்சியைக் காட்டிலும் இன்னும்கூட அதிகமாய்த் தனி இயல்புகளை நிச்சயம் வெளிபடுத்திக் காட்டும் என்பது நமது ஐரோப்பிய அற்பவாதச் சிறுமதியினருக்குக் கனவிலும் கருத முடியாத ஒன்றுதான்.

காவுத்ஸ்கிய வழிகளில் எழுதப்பட்ட பாடப்புத்தகம் அதன் காலத்தில் மிகவும் பயனுடையதாகவே இருந்தது என்பதைக் கூறத் தேவையில்லை. எவ்வளவுதான் அது பயனுடையதாய் இருந்திருப்பினும், அதற்குப் பிற்பட்ட உலக வரலாற்றின் வளர்ச்சியினுடைய எல்லா வடிவங்களையும் அது முன்னறிந்து கூறிவிட்டதாய்க் கொள்ளும் கருத்து

விட்டொழிக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. இப்படி அது முன்னறிந்து கூறிவிட்டதாய் நினைப்போர் அடிமுட்டாள்களே என்று சொல்வது காலத்துக்கு உகந்த தாய் இருக்கும்.

1923 ஜனவரி 17

பிராவ்தா, இதழ் *117*ல்
1923 மே *30*ல்
வெளிவந்தது
ஒப்பம்: **லெனின்**

நூல் திரட்டு,
தொகுதி *45*,
பக்கங்கள் *378-382*

குறிப்புகள்

[1] நூரிங்குக்கு மறுப்பு. திருவாளர் ஓய்கேன் நூரிங்கு அவர்களால் விஞ்ஞானத்தில் ஏற்பட்ட கவிழ்ப்பு என்ற பி. எங்கெல்சின் நூல் இங்கே குறிக்கப்படுகிறது. பக்கம் 7

[2] ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் ஹனேவர் காங்கிரஸ் 1899ல் செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 2 வரை (அக்டோபர் 9—14) நடைபெற்றது. இந்தக் காங்கிரஸ் பெர்ன்ஷ்டைனுடைய திருத்தல்வாதக் கருத்தோட்டங்களை எதிர்த்து வர்க்களித்தது, ஆனால் அது இவற்றை விரிவான விமர்சனத்துக்கு உட்படுத்தவில்லை. பக்கம் 17

[3] ரபோச்சயா மீசில் (''தொழிலாளர் சிந்தனை'')—பொருளாதாரவாதிகளின் செய்தியேடு. 1897 அக்டோபருக்கும் 1902 டிசம்பருக்கும் இடையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க், பெர்லின், வார்சா, ஜெனீவா ஆகிய இடங்களில் 16 இதழ்கள் வெளியிடப்பட்டன. பக்கம் 19

[4] செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் 1895லும் இன்னும் முக்கியமாய் 1896லும் வெகுஜன அளவில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களை லெனின் இங்கு குறிப்பிடுகிறார். பத்தரை மணி நேர வேலை நாள் அனுசரிக்கப்பட வேண்டுமென்றும், கூலி உயர்வு வேண்டுமென்றும், காலாகாலத்தில் கூலி அளிக்கப்பட வேண்டுமென்றும் தொழிலாளர்கள் கோரினர்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் வேலைநிறுத்தங்கள் ஏனைய ருஷ்ய நகர்களிலும் தொழிலாளி வர்க்க இயக்கத்தைக் கிளர்ந்தெழச் செய்தன. ஜாரிஸ்டு அரசாங்கம் 1897ஜூன் 2(14) சட்டத்தைப் பிறப்பிக்கும்படி நிர்ப்பந்தம்

செய்யப்பட்டது; இச்சட்டம் ஆலைகளிலும் தொழிலகங்களிலும் பதினைந்தரை மணி நேரத்துக்கு மேல் வேலை நாள் நீடிக்கக் கூடாதென வரம்பிட்டது. பக்கம் 21

ரபோச்சியே தேலோ (தொழிலாளர் இலட்சியம்)—பொருளாதாரவாதிகளது கருத்தோட்டங்களைக் கொண்ட பத்திரிகை, வெளிநாடுகளிலிருந்த ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளது சங்கத்தின் ஏடு. 1899 ஏப்ரலிலிருந்து 1902 பிப்ரவரி வரை ஜெனிவாவில் வெளியாகி வந்தது. இது மார்க்சியத்தின் ''விமர்சனச் சுதந்திரம்'' அவசிய மென்ற பெர்ன்ஷ்டைனின் கோஷத்தை ஆதரித்தது; ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் பொர்த்தந்திரம், நிறுவன ஒழுங்கமைப்புப் பணிகள் குறித்த பிரச்சினைகளில் சந்தர்ப்பவாதப் போக்கை அனுசரித்தது. இந்தப் பத்திரிகையின் ஆதரவாளர்கள் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டம் பொருளாதாரப் போராட்டத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட வேண்டுமென்ற சந்தர்ப்பவாதக் கருத்துக்களைப் பரப்பியும், தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தன் முனைப்புப் போக்கை மெச்சிப் புகழ்ந்தும், கட்சியின் தலைமைப் பாத்திரத்தை மறுத்தும் வந்தனர். பக்கம் 23

பொருளாதாரவாதம் — சர்வதேசச் சந்தர்ப்பவாதத்தின் ருஷ்ய வகை, 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் ருஷ்ய சமூக-ஜனநாயகத்தில் காணப்பட்டது. அரசியல் போராட்டத்தை மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாரே நடத்தும்படி விட்டுவிட்டு, தொழிலாளர் இயக்கம் கூலி உயர்வுக்கும் வேலை நிலைமைகளின் மேம்பாட்டுக்கும் இவையொத்த பிறவற்றுக்குமான பொருளாதாரப் போராட்டத்தை நடத்துவதுடன் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டுமெனப் பொருளாதாரவாதிகள் கூறினர். தொழிலாளி வர்க்கக் கட்சிக்குள்ள தலைமைப் பாத்திரத்தை இவர்கள் மறுத்து வந்தனர். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தன்முனைப்பான போக்கைப் பூஜித்த இவர்கள் புரட்சிகரத் தத்துவத்துக்குள்ள முக்கியத்துவத்தைக் குறைத்துச் சிறுமைப்படுத்தினர்; மார்க்சியக் கட்சியானது தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு சோஷலிச உணர்வை அளிக்க வேண்டிய அவசியத்தை மறுத்து, இவ்வழியில் இவர்கள் முதலாளித்துவச் சித்தாந்தம் இவ்வியகத்தில் ஆதிக்கம் புரிய வழி வகுக்க முயன்றனர். சமூக-ஜனநாயகத்தின் அணிகளில் ஒற்றுமையின்மைக்கும் குழப்பத்துக்கும் ஆதரவாய் இருந்தனர். மத்தியத்துவமாக்கப்பட்ட தொழிலாளி வர்க்கக் கட்சி தோற்றுவிக்கப்படுவதை எதிர்த்தனர். பக்கம் 23

[7] Credo (பற்றியொழுகும் கோட்பாடு, உலகக்கண் ணோட்டம்) — 1899ல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையின் தலைப்பு இது. ஏ. குச்கோவா என்பவரால் எழுதப்பட்ட ''பொருளாதாரவாதத்தின்'' பிரதான கோட்பாடுகளை இந்த அறிக்கை எடுத்துரைத்தது. பக்கம் 23

[8] **இஸ்க்ரா** (தீப்பொறி)—முதலாவது அனைத்து-ருஷ்ய மார்க் சியப் பத்திரிகை. சட்டவிரோதமான இந்த வெளியீடு 1900 டிசம்பரில் லெனினால் துவக்கப்பட்டதாகும். வெளி நாடுகளில் வெளியிடப்பட்டு இரகசியமாய் ருஷ்யாவுக்குள் அனுப்பப்பட்டது. சித்தாந்த வழியில் ருஷ்ய சமூக-ஜன நாயகவாதிகளை ஒன்றுதிரட்டும் மையமாய் அமைந்து இஸ்க்ரா முக்கிய பங்காற்றியது. ஆங்காங்கே தனித்தனி யே இயங்கி வந்த புரட்சிகர நிறுவனங்களைப் புரட்சிகர மார்க்சியக் கட்சியாக ஒன்றிணைப்பதற்கு இப்பத்திரிகை தயார் செய்து வந்தது. பக்கம் 28

[9] **ஹிர்ஷ்ச்-டன்க்கர் சங்கங்கள்** — ஜெர்மனியில் முதலாளித் துவக் கட்சியான முன்னேற்றக் கட்சியின் உறுப்பினர்களா கிய ஹிர்ஷ்ச்சும் டன்க்கரும் 1868ல் நிறுவிய சீர்திருத்த வாதத் தொழிற் சங்க நிறுவனங்கள். இவர்கள் தொழிற் சங்கங்களுடைய வேலைகளைப் பரஸ்பர உதவிக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகிவற்றுக்குரிய வேலைகளாய்க் குறுகிவிடும்படிச் செய்தனர். ஹிர்ஷ்ச்-டன்க்கர் சங்கங்கள் 1933 மே வரை இருந்து வந்தன. முதலாளித்துவ வட் டாரத்தினர் எவ்வளவோ முயன்றும், அரசாங்க நிறுவ னங்கள் இவற்றுக்குப் பல வழிகளிலும் எவ்வளவோ உதவி வந்தும்கூட இவற்றுல் ஒரு நாளும் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் குறிப்பிடக் கூடிய சக்தியாக முடிய வில்லை. பக்கம் 29

[10] இங்கு குறிக்கப்படுவது எதேச்சாதிகாரத்தை வீழ்த்து வோமென முழக்கமிட்டு 1905ல் நடைபெற்ற அனைத்து ருஷ்ய அக்டோபர் அரசியல் வேலைநிறுத்தம். பக்கம் 32

[11] **இஸ்வேஸ்தியா சவேத்தா ரபோச்சிஹ் தெப்புதாத்தவ்** (தொழிலாளர் பிரதிநிதிகளது சோவியத்தின் செய்தியறிக் கை)—செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கின் தொழிலாளர் பிரதி நிதிகளது சோவியத்தின் அதிகாரபூர்வமான செய்தியேடு; 1905 அக்டோபர் 17லிருந்து (30) டிசம்பர் 14 வரை (27) வெளிவந்தது. சோவியத்தின் செயற்பாடுகளைப் பற்றிய செய்திகளை இது வெளியிட்டது. பக்கம் 32

[12] **ஒப்லோமவ்**—ருஷ்ய எழுத்தாளர் இ. அ. கன்ச்சரோவ் எழுதிய இதே பெயருடைய நாவலின் பிரதான பாத்திர மாகிய நிலப்பிரபு. மாறுத மாமூல் முறைகள், தேக்க நிலை, செயலாற்றும் ஆற்றலின்மை ஆகியவற்றின் உருவமாய் விளங்குகிறவர். பக்கம் 36

[13] **அஸ்வபொழ்தேனியே** (விடுதலை)—ருஷ்ய மிதவாத முத லாளித்துவ வர்க்கத்தாரின் பத்திரிகை. 1902-1905ல் வெளிநாடுகளில் மாதமிரு முறை வெளிவந்தது. பக்கம் 51

[14] **நாஷா ழீஸின்** (நமது வாழ்க்கை)—செயின்ட் பீட்டர்ஸ் பர்கில் 1904-1906ஆம் ஆண்டுகளில் வெளிவந்த மித வாதப் போக்குடைய நாளேடு. பக்கம் 51

[15] **தீவிர-ஜனநாயகவாதிகள்**—1905 நவம்பரில் தோன்றிய குட்டிபூர்ஷுவா நிறுவனம் ஒன்றின் உறுப்பினர்கள். இவர் கள் ஜனநாயகக் குடியரசு வேண்டும் என்றனர், ஆயினும் அமைச்சரவையானது பாராளுமன்றத்துக்குப் பொறுப் புடையதாய் இருக்கும் பட்சத்தில் சட்டமுறை முடி யரசை ஏற்றுக் கொள்ளவும் தயாராயிருந்தனர். இவர் களுடைய நிறுவனம் 1906ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சிதைந்துவிட்டது. பக்கம் 51

[16] **சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்** — ருஷ்யாவில் 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் பல்வேறு நரோத்னிக் கோஷ்டிகளையும் குழுக்களையும் இணைத்து நிறுவப்பட்ட குட்டிபூர்ஷுவாக் கட்சியின் உறுப்பினர்கள்.

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலுள்ள வர்க்கப் பாகுபாடுகளைப் பார்க்கத் தவறினர்; விவசாயி களிடையே, உழைக்கும் விவசாயிகளுக்கும் பணக்காரக் குலாக்குகளுக்குமிடையே, நிலவும் வர்க்க வேறுபாட்டை யும் பகைமைகளையும் உதாசீனம் செய்தனர்; புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை நிராகரித்தனர். தனிநபர் பயங்கரவாதச் செயல்களே ஜாரிசத்தை எதிர்த்துப் போராடுவதற்கான பிரதான வழி என்று அவர்கள் கருதினர்.

1905-1907ம் ஆண்டுகளில் புரட்சியின் தோல் விக்குப் பிறகு சோஷலிஸ்டு புரட்சியாளர் கட்சியினரின் கணிசமான பகுதியினர் பூர்ஷுவா-மிதவாத நிலைகளை மேற்கொள்ளலானார்கள்.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து எதிர்ப்புரட்சி இடைக்கால அரசாங்கத்தின் பிரதான தூண்களாய்ச் செயல்பட்டனர். இக்கட்சியின் தலைவர்கள் இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாய் இருந்தனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் சோவியத் அரசாங்கத்தை எதிர்த்து மூர்க்கமாய்ப் போராடினர். பக்கம் 51

17 ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் எழுதிய **நாடு கடந்து வாழ்பவரின் எழுத்துக்கள்** இங்கே குறிப்பிடப்படுகிறது. பக்கம் 62

18 **புருதோனியம்** — மார்க்சியத்துக்கு முரணான குட்டிபூர்ஷுவாப் போக்கு. பிரெஞ்சு அராஜகவாதியான ழொசேப் புருதோன்தான் இதன் சித்தாந்தவாதி. பெரிய முதலாளித்துவ உடைமைகளைப் புருதோன் குட்டிபூர்ஷுவாக் கருத்தோட்டத்திலிருந்து கண்டன விமர்சனம் செய்தார். சின்னஞ்சிறு தனிவுடைமையாளர்களை என்றும் நிலைத்து நீடிக்கச் செய்ய நினைத்து, ''மக்கள்'' பாங்கிகளையும் ''பரிவர்த்தனை'' பாங்கிகளையும் அமைக்க வேண்டுமென்று கூறினார். இவற்றின் துணை கொண்டு தொழிலாளர்கள் உற்பத்திச் சாதனங்களைப் பெற்று தொழில் வினைஞர்களாகி, தமது உற்பத்திப் பண்டங்கள் ''நியாய விலையில் விற்பனையாவதற்கு ஏற்பாடு செய்து கொள்ள முடியுமென்று வாதாடினர். பாட்டாளி வர்க்கத்திற்குள்ள வரலாற்றுப் பணியைப் புரிந்து கொள்ளத் தவறிய அவர், வர்க்கப் போராட்டத்தையும் பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் நிராகரித்தார். அராஜகவாதியான அவர் அரசே தேவையில்லை என்றார். மார்க்சும் எங்கெல்சும் புருதோனியர்களை எதிர்த்து விடாப்பிடியான போராட்டம் நடத்தினர். பக்கம் 66

19 **பக்கூனினியம்** — அராஜகவாதத்தின் சித்தாந்தவாதியான மி. அ. பக்கூனின் பெயரில் அழைக்கப்பட்ட போக்கு. பக்கூனினியர்கள் தொழிலாளர் இயக்கத்தின் மார்க்சியத் தத்துவத்தையும் போர்த்தந்திரத்தையும் எதிர்த்துப் பிடிவாதமாய்ப் போராட்டம் நடத்தினர். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் அடங்கலாய் எல்லா வகையான அரசையும் மறுப்பதும், பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று

முக்கியத்துவமுள்ள பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாதது மும் பக்கூலினியத்தின் அடிப்படை இயல்புகளாகும். பக்கூனினியர்களது கருத்துப்படி ''உன்னத நபர்கள்'' அடங்கிய இரகசியப் புரட்சிச் சங்கம் மக்களுடைய எழுச்சிகளுக்குத் தலைமை தாங்க வேண்டும். சதிகளும் பயங்கரவாதச் செயல்களும் மிக்க அவர்களுடைய போர்த்தந்திரம் சாகசவாதமாகவும் எழுச்சி பற்றிய மார்க்சியப் போதனைக்குப் பகைமையானதாகவும் இருந்தது.

முதலாவது அகிலத்தினுள் புகுந்து கொண்ட பக்கூனின் அதன் ஜெனரல் கவுன்சிலைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் மார்க்சை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர். சீர்குலைவு வேலைகளுக்காக 1872ல் பக்கூனின் முதலாவது அகிலத்திலிருந்து விலக்கப்பட்டார். பக்கூனியர்களின் தத்துவத்தையும் போர்த்தந்திரத்தையும் மார்க்சும் எங்கெல்சும் கடுமையாய்க் கண்டனம் செய்தனர். பக்கம் 67

[20] சமூக-நரோத்னிக்குகள் — சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர். பக்கம் 68

[21] நவீன-கான்டியர்கள்—ஜெர்மனியில் 19ஆம் நூற்றாண்டின் நடுவில் தோன்றிய முதலாளித்துவத் தத்துவவியல் போக்காகிய நவீன-கான்டியத்தின் ஆதரவாளர்கள். கான்டின் தத்துவவியலில் மிகவும் பிற்போக்கானவையாய் இருந்த கருத்துமுதல்வாதக் கூறுகளை நவீன-கான்டியம் உயிர்ப்பிக்க முயன்றது. ''கான்டுக்குத் திரும்பு!'' என்பதாய் முழங்கி நவீன-கான்டியர்கள் இயக்கவியல் வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தை எதிர்த்தனர். பக்கம் 68

[22] கார்ல் மார்க்ஸ், மூலதனம், தொகுதி 1. பக்கம் 70

[23] 1871ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனும் முதலாவது ருஷ்யப் புரட்சியின்போது 1905 டிசம்பர் மாத மாஸ்கோ ஆயுத மேந்திய எழுச்சியும் இங்கு குறிக்கப்படுகின்றன. பக்கம்74

[24] காடேட்டுகள் — அரசியல்சட்ட-ஜனநாயகக் கட்சியின் (கான்ஸ்டிட்டூஷனல்-டெமாக்கிராட்டிக் கட்சி) உறுப்பினர்கள். ருஷ்யாவின் மிதவாத-முடியாட்சி முதலாளித்துவ வர்க்கத்தினரின் தலைமையான கட்சியாக இருந்தது. இது 1905 அக்டோபரில் துவக்கப்பட்டதாகும். பக்கம் 75

[25] **மில்லிரண்டிசம்** — பிரெஞ்சு சோஷலிஸ்டுச் சீர்திருத்த வாதி மில்லிராண்டின் [Millerand] பெயரைப் பெற்ற சந்தர்ப்பவாதப் போக்கு. 1899ல் மில்லிராண்டு பிரெஞ்சுப் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டு முதலாளித்துவ வர்க்கம் அதன் ஜனவிரோத கொள்கையைச் செயல்படுத்த உதவினார். பக்கம் 75

[26] **வைதீகவாதிகள்** — மார்க்சியத்தைத் திரித்துப் புரட்ட முனைந்த திருத்தல்வாதத்தை எதிர்த்த ஜெர்மன் சமூக-ஜனநாயவாதிகள். பக்கம் 76

[27] **கெட்டிஸ்டுகள்** [Guesdists] —19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் மூல் கெட்டு, போல் லபார்க் இவர்கள் தலைமையில் செயல்பட்ட புரட்சிகர மார்க்சியப் போக்கு. பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியில் 1882ல் பிளவு ஏற்பட்டபின் கெட்டிஸ்டுகள் பழைய பெயரிலேயே சுயேச்சையான ஒரு கட்சியை நிறுவினர்.

கெட்டின் தலைமையில் 1901ல் நடைபெற்ற புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் ஆதரவாளர்கள் பிரான்சினது சோஷலிஸ்டுக் கட்சியில் ஒன்றுபட்டனர் (இதன் உறுப்பினர்கள், கட்சியின் தலைவருடைய பெயரில் கெட்டிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டனர்). பக்கம் 76

[28] **ழொரேசிஸ்டுகள்** [Jaurésists] — பிரெஞ்சு சோஷலிஸ்டு ழான் ழொரேசின் ஆதரவாளர்கள். கடந்த நூற்றாண்டின் ஒன்பதாம் ஆண்டுகளில் அவரும் மில்லிராண்டும் ''சுயேச்சை சோஷலிஸ்டுகளின்'' குழுவை நிறுவி, பிரெஞ்சு சோஷலிச இயக்கத்தினுள் வலதுசாரி, சீர்திருத்தவாதப் பிரிவுக்குத் தலைமை தாங்கினர். 1902ல் இவர்கள் சீர்திருத்தவாத நிலையை ஏற்ற பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவுவதில் பங்கு கொண்டனர்.

புருசிஸ்டுகள் [Broussists] (சாத்தியப்பாடுவாதிகள்) (பி. புருஸ், பி. மலோன் முதலானோர்)—பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் 19ஆம் நூற்றாண்டின் 80ஆம் ஆண்டுகளில் தோன்றிய குட்டிபூர்ஷுவா, சீர்திருத்தவாதப் போக்கு.

1902ல் சாத்தியப்பாடுவாதிகளில் பெரும்பாலோர் மற்ற சீர்திருத்தவாத குழுகளுடன் பிரெஞ்சு சோஷலிஸ்டுக்

கட்சியில் சேர்ந்து கொண்டனர். 1905ல் இக்கட்சி பிரான்சினது சோஷலிஸ்டுக் கட்சியுடன் இணைந்து கொண்டது.
பக்கம் 76

[29] **பிரிட்டிஷ் சமூக-ஜனநாயகச் சம்மேளனம்** [The Social Democratic Federation] 1884ல் நிறுவப்பட்டது. சீர்திருத்தவாதிகளும் (ஹைண்ட்மனும் ஏனையோரும்) அராஜகவாதிகளும் மற்றும் ஆங்கிலேய சோஷலிஸ்டு இயக்கத்தின் இடதுசாரிப் பிரிவினராகிய புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளும் (கிவேல்ச், மான் முதலியோர்) இதில் இருந்தனர். சமூக-ஜனநாயகச் சம்மேளனத்துக்கு 1907ல் சமூக-ஜனநாயகக் கட்சி என்று பெயரிடப்பட்டது. இக்கட்சி சுயேச்சைத் தொழிற் கட்சியின் இடதுசாரிக் கூறுகளுடன் சேர்ந்து 1911ல் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி ஆயிற்று. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்படுவதற்கு 1920ல் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு ஒற்றுமைக் குழுவும் முக்கிய பங்காற்றின.

பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சி [The Independent Labour Party] — 1893ல் நிறுவப்பட்ட சீர்திருத்தவாத நிறுவனம். ''புதிய தொழிற் சங்கங்களின்'' உறுப்பினர்களும் பழைய தொழிற் சங்கங்களில் பலவற்றின் உறுப்பினர்களும் மற்றும் ஃபேபியன்களால் கவரப்பட்ட அறிவுத்துறையினரும் குட்டிபூர்ஷுவாக்களும் சுயேச்சைத் தொழிற் கட்சியில் சேர்ந்து கொண்டனர். கியேர் ஹார்டி இக்கட்சிக்குத் தலைமை தாங்கினர்.

பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சி முதலாளித்துவ-சீர்திருத்தவாதக் கொள்கையைப் பின்பற்றியது; பாராளுமன்றப் போராட்டத்திலும் மிதவாதக் கட்சியுடனை பாராளுமன்ற உடன்பாடுகளிலுமே பிரதான கவனம் செலுத்தி வந்தது. பக்கம் 76

[30] **முழுமையாளர்கள்** [integralists] — ஒரு வகைக் குட்டிபூர்ஷுவா சோஷலிசமான ''முழுமையான'' சோஷலிசம் என்பதன் ஆதரவாளர்கள். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியில் மையவாதப் போக்கினராய் இருந்த இவர்கள் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் சில பிரச்சினைகளில் சீர்திருத்தவாதிகளை எதிர்த்துப் போராடினர். பிற்போக்கு முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒத்துழைப்பது குறித்து இந்தச் சீர்திருத்தவாதிகள் கடைகோடியான சந்தர்ப்பவாத நிலையை அனுசரித்தனர். பக்கம் 76

[31] **''புரட்சிகர சிண்டிக்கலிசம்''** — 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி

வர்க்க இயக்கத்தில் தோன்றிய குட்டிபூர்ஷுவா அரை-அராஜகவாதப் போக்கு.

சிண்டிக்கலிஸ்டுகள் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அவசியத்தை மறுத்தனர்; கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் தேவையையும் நிராகரித்தனர்; புரட்சி இல்லாமலே தொழிற் சங்கங்கள் (சிண்டிக்கேட்டுகள்) தொழிலாளர்களது பொது வேலைநிறுத்தத்தின் மூலம் முதலாளித்துவத்தை வீழ்த்திவிடலாம், பொருளாதாரத்தைத் தமது பிடிக்குள் கொண்டுவந்து விடலாமென்று கருதினர். பக்கம் 77

32 **வேஹி**—முக்கிய காடேட்டுப் பத்திரிகையாளர்களும் ஆசிரியர்களும் எதிர்ப்புரட்சி மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் பிரதிநிதிகளும் எழுதிய கட்டுரைத் திரட்டு. 1909ல் மாஸ்கோவில் வெளியிடப்பட்டது. பக்கம் 80

33 **அக்டோபரிஸ்டுகள்**—''அக்டோபர் பதினேழு யூனியன்'' என்னும் கட்சியின் உறுப்பினர்கள். 1905, அக்டோபர் 17ந் தேதி ஜார் மன்னரின் அறிக்கை வெளியான பிறகு ருஷ்யாவில் உருவாகியது. பெரிய தொழில் அதிபர்கள், வர்த்தக முதலாளிகள், முதலாளித்துவ வழியில் வேளாண்மை செய்த நிலப்பிரபுக்கள் ஆகியோரின் புரட்சி-எதிர்ப்புக் கட்சி இது. அக்டோபரிஸ்டுகள் ஜாரிஸ்டு அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைக்கு முழு ஆதரவு அளித்தனர். பக்கம் 82

34 **மாஸ்கோவ்ஸ்கியெ வேதமொஸ்தி** (மாஸ்கோ பதிவேடு)—1756ல் துவக்கப்பட்ட தினசரிச் செய்தியேடு. 1860 முதலாய் இது நிலப்பிரபுக்களையும் மதச் சபையினரையும் சேர்ந்த மிகவும் பிற்போக்கான முடியரசுவாதப் பகுதியோரின் கருத்துக்களை வெளியிட்டு வந்தது. 1905 முதல் இது கறுப்பு நூற்றுவரின் பிரதான ஏடுகளில் ஒன்றாகியது. 1917ல் அக்டோபர் புரட்சியை அடுத்து மூடப்பட்டு விட்டது. பக்கம் 83

35 **அரசாங்க டூமா**—1905ஆம் ஆண்டின் புரட்சி நிகழ்ச்சிகளின் காரணமாய் ஜாரிஸ்டு சர்க்கார் கூட்ட வேண்டியதாகிய பிரதிநிதித்துவ சபை. சட்ட மன்றமாயிருந்த அரசாங்க டூமா மெய்யான அதிகாரம் எதுவும் இல்லாததாகவே இருந்து வந்தது. அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியானவையாகவோ, சமத்துவ வாக்குரிமை

யுடையதாகவோ, குடிமக்கள் அனைவருக்குமானதாகவோ இருக்கவில்லை. உழைப்பாளி மக்களுக்கும் ருஷ்யாவி லிருந்த ருஷ்யரல்லாத பிற இனத்தோருக்கும் வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஏராளமான தொழி லாளர்களும் விவசாயிகளும் வாக்குரிமையற்றோராகவே இருந்தனர். முதலாவது டூமாவும் (1906 ஏப்ரல்-ஜூலை) இரண்டாவது டூமாவும் (1907 பிப்ரவரி-ஜூன்) ஜாரிஸ்டு சர்க்காரால் கலைக்கப்பட்டன. 1907 ஜூன் 3ல் ஆட்சிக்கு வந்த ஸ்தலீப்பின் சர்க்கார் புதிய தேர்தல் சட்டத்தைப் பிறப்பித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரக் குட்டிபூர்ஷுவாக்களின் வாக்குரிமையை இச்சட்டம் மேலும் குறையச் செய்தது. நிலப்பிரபுக்கள், பெரு முதலாளிகளது பிற்போக்குக் கூட்டாணி இதனால் மூன்றுவது டூமாவிலும் (1907-12) நான்காவது டூமாவிலும் (1912-17) ஆதிக்கம் வகிக்க முடிந்தது. பக்கம் 88

36 **நான்கு அம்சத் தேர்தல் முறை**—அனைவருக்கும் வாக் குரிமை, சமத்துவ வாக்குரிமை, நேரடி வாக்குரிமை, இரகசிய வாக்கெடுப்பு ஆகிய நான்கு கோரிக்கைகளுக்கும் ஏற்ப அமைந்த ஜனநாயகத் தேர்தல் முறை. பக்கம் 89

37 **துருதொவிக்குகள்**—அரசாங்க டூமாக்களில் குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகளின் குழு. முதலாவது டூமாவிலிருந்த விவசாயிப் பிரதிநிதிகளைக் கொண்டு 1906 ஏப்ரலில் இக்குழு அமைக்கப்பட்டது. டூமாவில் துருதொவிக்குகள் காடேட்டு களுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் இடையே ஊச லாடினர். பக்கம் 89

38 **''நோவயெ விரேம்யா''** (புதிய காலம்)—1868 முதல் அக்டோபர் 1917 வரை செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வெளியான தினசரிச் செய்தித்தாள். ஓரளவு மிதவாதப் பத்திரிகையாகத் தொடங்கியது; ஆனால் 1876க்குப் பிறகு பிற்போக்குவாத நிலப்பிரபுக்கள், அதிகாரவர்க்கத்தினர் ஆகியோரின் பத்திரிகையாக மாறிவிட்டது. பக்கம் 90

39 **ஜூன் மூன்றும் நாள்**—1907 ஜூன் 3ல்(16) ஜாரிஸ்டு அரசாங்கம் திடீர் மாற்றம் நடத்தி இரண்டாவது டூமா வைக் கலைத்து, டூமாவுக்கான தேர்தல் சட்டத்தைத் திருத் தியது. இதன்படி நிலப்பிரபுக்கள், வர்த்தகர்களும் தொழி லதிபர்களுமான பூர்ஷ்வாக்கள் ஆகியோருக்குப் பிரதி நிதித்துவம் அதிகரிக்கப்பட்டது; ஏற்கனவே குறைவாகவே இருந்த தொழிலாளர்கள், விவசாயிகளது பிரதிநிதித்துவம்

குறைக்கப்பட்டது. டூமாவின் அங்கீகாரமின்றி அரசாங்கம் சட்டங்கள் பிறப்பிக்கக் கூடாதென்று விதித்த 1905 அக்டோபர் 17 அறிக்கையையும் 1906ஆம் ஆண்டின் பிரதான சட்டத்தையும் அப்பட்டமாய் மீறி ஜாரிஸ்டு அரசாங்கம் இச்செயலே மேற்கொண்டது. பக்கம் 90

40 ''கனவான்களே, செல்வந்தர் ஆகுங்கள், நீங்கள் வாக்காளர்கள் ஆகலாம்'' என்று குய்ஸாத் கூறியதாய்க் கருதப்படுகிறது, பிரான்சில் ஜூலை முடியாட்சியின் ஆண்டுகளில் (1830-48) பிரெஞ்சு அரசாங்கத்திற்கு குய்ஸாத் நடைமுறையில் தலைவராய்ச் செயல்பட்டு வந்தார், 1847ல் அமைச்சரவைத் தலைவராய் அதிகார பூர்வமாய் நியமிக்கப்பட்டார். வாக்காளர் ஆவதற்கு விதிக்கப்பட்டிருந்த உயர்ந்த சொத்துடைமை வரம்பு குறைக்கப்பட வேண்டுமென்று கோரியவர்களுக்கு குய்ஸாத் மேற்கூறியவாறு பதிலளித்தாராம்.

அமைச்சரவைத் தலைவராய் இருந்த பி. ஸ்தலீப்பின் மூன்றுவது அரசாங்க டூமாவின் அமர்வில், 1908 டிசம்பர் 5 (18)ல் பேசியபோது ''அரசாங்கம் வலிமையும் சக்தியும் வாய்ந்தோரை ஆதாரமாய்க் கொண்டிருக்கிறதே அன்றி, பிச்சைக்காரர்களையும் குடிகாரர்களையும் அல்ல'' என்றார். ஸ்தலீப்பினுடைய இச்சொற்கள் 1906 நவம்பர் 9 (22) ஆம் தேதி அரசாணையின் பிரதான உள்ளடக்கத்தைத் தெளிவுபடுத்தின. பக்கம் 91

41 **புலீகின் டூமா**—ஆலோசனை அந்தஸ்துடைய சபை; 1905ல் ஜாரிஸ்டு அரசாங்கம் இதைக் கூட்டுவதாய் இருந்தது. இந்த டூமாவின் சட்டத்துக்கான நகலை உள்துறை அமைச்சர் புலீகின் தலைமையில் அமைந்த ஒரு குழுவால் தயாரிக்கப்பட்டதால், இது புலீகின் டூமா என்று அழைக்கப்பட்டது. இதன் சட்டமும் ஜாரின் அறிக்கையும் 1905 ஆகஸ்டு 6ல் (19) வெளியிடப்பட்டன. போல்ஷிவிக்குகள் புலீகின் டூமாவைப் பகிஷ்கரித்தனர். அரசாங்கத்தால் இதைக் கூட்ட முடியவில்லை. 1905ல் நடைபெற்ற புரட்சியால் இந்த டூமா ஒழிக்கப்பட்டது. பக்கம் 93

42 ருஷ்யாவில் பண்ணையடிமை முறை 1861ல் அகற்றப்பட்டது இங்கு குறிப்பிடப்படுகிறது. பக்கம் 95

43 **ஒதுக்கப்பட்ட நிலங்கள்** — இவை 1861ல் ருஷ்யாவில் பண்ணையடிமை முறை நீக்கப்பட்டபின் விவசாயிகளுக்

காக ஒதுக்கப்பட்ட நிலங்களாகும். விவசாயிகளுக்கு இந் நிலங்களை விற்க உரிமை இல்லை. பெரும்பாலும் இந்நிலங் கள் கிராமச் சமுதாயத்துக்கு சொந்தமாயிருந்தன, அவ் வப்பொழுது கிராமச் சமுதாயம் இந்நிலங்களை மறுபங்கீடு செய்து விவசாயிகளுடைய உபயோகத்துக்கு அளித்து வந்தது. பக்கம் 98

44 சினேத்—ருஷ்யாவின் சத்திய சமயச் சபையின் தலைமை ஆட்சிக் குழு. பக்கம் 100

45 மாகியம்—19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற் றாண்டின் ஆரம்பத்திலும் மேற்கு ஐரோப்பாவில் வெகு வாய்ப் பரவியிருந்த பிற்போக்கு அகநிலைக் கருத்துமுதல் வாதத் தத்துவவியல் போக்கு. ஆஸ்திரிய பௌதிகவிய லாளரும் தத்துவவியலாளருமாகிய எ. மாஹும் ஜெர் மான் தத்துவவியலாளர் ரி. அவினாரியசும் இதன் மூலவர்கள் ஆவர். பக்கம் 110

46 ஒத்சொவீசம் (வாபஸ்வாதம்)—ருஷ்யாவில் 1905-1907ஆம் ஆண்டுகளின் புரட்சி தோற்ற பிறகு சமூக-ஜனநாயக-போல்ஷிவிக்குகளில் ஒரு சிறு பகுதியினரிடையே பரவிய சந்தர்ப்பவாதப் போக்கு. ஒத்சொவீஸ்டுகள் ('திருப்பி யழை' என்று பொருள்படும் 'அத்தஸ்வாத்' என்ற ருஷ்யச் சொல்லே இதன் மூலம்) மூன்றாவது டூமாவிலிருந்து சமூக-ஜனநாயக உறுப்பினர்களைத் திருப்பியழைக்க வேண்டுமென்றும், சட்ட பூர்வமான வெகுஜன நிறு வனங்களில் கட்சிப் பணி அனைத்தையும் நிறுத்திவிட வேண்டுமென்றும் கோரினர். பக்கம் 111

47 கலைப்புவாதிகள்—ருஷ்யாவில் 1905-07 புரட்சி தோற்ற பிறகு, ரு. ச. ஜ. தொ. கட்சியின் சந்தர்ப்பவாதப் பகுதி யினரான மென்ஷிவிக்குகளிடையே பரவிய போக்கின் பிரதிநிதிகள்.

சட்டத்துக்குப் புறம்பான புரட்சிகரத் தொழிலாளர் கட்சியைக் கலைத்துவிட வேண்டுமென்று கலைப்புவாதிகள் கோரினர். ஜாரிசத்துக்கெதிரான தங்களது புரட்சிகரப் போராட்டத்தை நிறுத்திவிடும்படி அவர்கள் தொழிலாளர் களைக் கேட்டுக் கொண்டனர். கட்சிச் சார்பற்ற ஒரு ''தொழி லாளர்கள் காங்கிரசைக்'' கூட்ட விரும்பினர்; புரட்சி கரக் கோஷங்களைக் கைவிட்டு, ஜாரிஸ்டு அரசாங்கத்தி னால் அனுமதிக்கப்படும் சட்டபூர்வமான நடவடிக்கைகளில்

மட்டுமே ஈடுபடும் சந்தர்ப்பவாத ''விரிந்த அடிப்படையி லான தொழிலாளர் கட்சி'' ஒன்றை அக்காங்கிரசில் நிறுவத் திட்டமிட்டார்கள். தொழிலாளி மக்களிடம் கலைப்பு வாதிகட்கு வெற்றி கிட்டவில்லை. ஜனவரி 1912ல் பிராகில் நடத்தப்பட்ட ரு. ச. ஜ. தொ. கட்சியின் மகாநாட்டில் கலைப்புவாதிகள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.
பக்கம் 119

48 **சாத்வீகவாதம்** — உலகின்பால் செயல் முனைப்பில்லாத தியானப் போக்கை அனுசரிக்க வேண்டுமென்றும்''தெய்வச் சித்தத்துக்கு'' மனிதன் தன்னை முழுமையாய்க் கீழ்ப் படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் கூறும் மத வழிப் பட்ட அறநெறிக் கருத்தோட்டம். பக்கம் 120

49 **ஐக்கியப் பிரபுக்குலச் சபை**—பண்ணையாளர்களான பிரபுக் கள்-நிலச்சுவான்தார்களின் புரட்சி எதிர்ப்புச் சங்கம்; மே 1906ல் நிறுவப்பட்டது, 1917 அக்டோபர் வரை தொடர்ந்து நிலவியது. பக்கம் 122

50 **டிசம்பரிஸ்டுகள்** — ருஷ்யப் பிரபுவம்சப் புரட்சியாளர் கள், பண்ணையடிமை முறைக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் எதிராகப் போராடியவர்கள். 1825, டிசம்பர் 14ந் தேதி ஆயுதக் கிளர்ச்சி நடத்தியவர்கள். பக்கம் 123

51 **ரஸ்னச்சின்த்சி**—பிரபுவம்சத்தில் அன்றி, நடுத்தர வகுப் பார், மதகுருக்கள், வர்த்தகர்கள், குடியானவர்கள் ஆகியோர் மரபில் தோன்றிய, கற்றுத் தேர்ந்த ருஷ்ய சமூகப் பிரதிநிதிகள். பக்கம் 123

52 செர்னிஷேவ்ஸ்கியின் நாவலான **பீடிகையிலிருந்து** இந்த மேற்கோள் தரப்படுகிறது. பக்கம் 123

53 கார்ல் மார்க்சின் **அந்தரங்க அறிக்கை, ஃபிரீட்ரிஹ் எங் கெல்சின் நாடு கடந்து வாழ்பவரின் எழுத்துகள். 1. போலந்துப் பிரகடனம்** ஆகியவற்றிலிருந்து. பக்கம் 124

54 **லஸ்ஸாலியர்கள்**—ஜெர்மன் குட்டிபூர்ஷுவா சோஷலிஸ் டான ஃபெர்டினண்டு லஸ்ஸாலைப் (1825-64) பின்பற்றிய வர்கள். லஸ்ஸால் 1863ல் ஜெர்மன் தொழிலாளர்களது

பொதுச் சங்கத்தை நிறுவுவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்.

அனைவருக்கும் வாக்குரிமை பெறுவதற்காகப் போராடுவதே இச்சங்கத்தின் அரசியல் வேலைத்திட்டம் என்பதாகவும், அரசிடம் மான்யம் பெற்று இயங்கும் தொழிலாளர் உற்பத்திச் சங்கங்களை நிறுவுவதே இதன் பொருளாதார வேலைத்திட்டம் என்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

லஸ்ஸாலும் அவரது ஆதரவர்களும் பிரஷ்ய மேலாதிக்கத்துக்குத் தம்மைத் தகவமைத்துக் கொண்டு, நடை முறைச் செயற்பாட்டில் பிஸ்மார்க் அரசாங்கத்தின் பேரரசு வாதக் கொள்கைக்கு ஆதரவளித்தனர்.

லஸ்ஸாலியவாதத்தின் தத்துவத்தையும் போர்த்தந்திரத்தையும் நிறுவனக் கோட்பாடுகளையும் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்காய்ச் செயல்படுகின்றன என்று மார்க்சும் எங்கெல்சும் அடிக்கடி கடுமையாய் விமர்சனம் செய்து வந்தனர். பக்கம் *126*

[55] **பனமா** விவகாரங்கள் — *1892-93*ல் பிரான்சில் வெளிச்சத்துக்கு வந்த பெரிய மோசடியைத் தொடர்ந்து லஞ்ச ஊழலைக் குறிக்கும் பதமாய் வழக்கிற்கு வந்தது. பனமா கால்வாயைக்கட்டி வந்த பிரெஞ்சுக் கம்பெனியின் பிரம்மாண்ட மோசடியும், அரசுத் தலைவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் செய்தியேடுகளுக்கும் அது லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கியதும் அம்பலமாயின.

பக்கம் *132*

[56] **சொத்சியால்-டெமக்ராத்** (''சமூக-ஜனநாயகவாதி'') — ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மத்தியப் பத்திரிகையான சட்டவிரோத வெளியீடு. *1908* பிப்ரவரி முதல் *1917* ஜனவரி வரை வெளிவந்தது.

கம்முனீஸ்த் (''கம்யூனிஸ்டு'') — லெனினால் நிறுவப்பெற்று *1915*ல் ஜெனீவாவில் **சொத்சியால்-டெமக்ராத்** பத்திரிகையுடன் கூட்டாக வெளியிடப்பட்டது.

பக்கம் *133*

[57] *1912*ல் கலைப்புவாதிகள் கூட்டிய ஆகஸ்டு மாநாட்டில் நிறுவப்பெற்ற தலைமைக் குழுவாகிய **நிறுவனக் கமிட்டி**யால் இணைக்கப்பட்ட சமூக-ஜனநாயக-மென்ஷிவிக்குகள்.

பக்கம் *133*

[58] **ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நிறுவனக் கமிட்டியினது** வெளிநாட்டுச் செயலாளர் குழு

வின் செய்திகள்—1915-1917ஆம் ஆண்டுகளில் ஜெனீவாவில் வெளிவந்த மென்ஷிவிக் செய்தியேடு. பக்கம் 139

59 **இராணுவ-தொழில் கமிட்டிகள்** — யுத்தத்தை நடத்திச் செல்ல ஜாரிஸ்டு அரசாங்கத்துக்கு உதவுவதற்காக 1915 மே மாதத்தில் ருஷ்யாவில் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினரால் நிறுவப்பட்டவை. தொழிலாளர்களைத் தமது செல்வாக்கின்கீழ் கொண்டுவருவதற்காகவும், பாதுகாப்பு மனப்பான்மையை ஊட்டுவதற்காகவும், முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே அமைதி ஏற்பட்டுவிட்டதென்ற எண்ணத்தை உண்டாக்குவதற்காகவும் முதலாளித்துவ வர்க்கத்தினர் இக்கமிட்டிகளில் ''தொழிலாளர் குழுக்களை'' நிறுவுவதென முடிவு செய்தனர். போல்ஷிவிக்குகள் இக்கமிட்டிகளைப் பகிஷ்காரம் செய்தனர், தொழிலாளர்கள் இந்தப் பகிஷ்காரத்துக்கு ஆதரவளித்தனர். பக்கம் 147

60 **ச்ஹெயீத்செ கோஷ்டி**—நான்காவது டூமாவில் நி. ஸெ. ச்ஹெயீத்செவின் தலைமையில் இயங்கிய மென்ஷிவிக் கோஷ்டி. பக்கம் 152

61 **நாஷே தேலோ** (நமது இலட்சியம்)—மென்ஷிவிக் மாத இதழ், கட்சிக் கலைப்புவாதிகளின் பிரதான பத்திரிகை. பெத்ரோகிராடில் 1915ல் வெளியிடப்பட்டு வந்தது.

கோலொஸ் த்ருதா (உழைப்பின் குரல்)—சட்டப்படி வெளியிடப்பட்ட மென்ஷிவிக் பத்திரிகை. 1916ல் சமாராவில் வெளிவந்து கொண்டிருந்தது. பக்கம் 152

62 **பாட்டாளி வர்க்கக் கலாசார, கல்வித் துறை நிறுவனம்** (புரொலெட்குல்ட்)—1917 செப்டம்பரில் தொழிலாளர்களது சுயேச்சை நிறுவனமாய் நிறுவப்பட்ட கலாசார, கல்வித் துறை நிறுவனம். இது அக்டோபர் புரட்சிக்குப் பிற்பாடு தனது ''சுயேச்சை நிலையை'' வலியுறுத்தி, தன்னைப் பாட்டாளி வர்க்க அரசுக்கு எதிரானதாக்கிக் கொள்ள முற்பட்டது. புரொலெட்குல்ட் தலைவர்கள் வெகுஜன கலாசார, கல்விப் பணிகளைத் தட்டிக் கழிக்கவும், கடந்த கலாசாரத்திலிருந்து தனிமை செய்யப்பட்ட ஒரு ''பாட்டாளி வர்க்கக் கலாசரத்தை'', வாழ்க்கையிலிருந்தும் மக்களிடமிருந்தும் துண்டிக்கப்பட்ட ''ஒரு கலாசாரத்தைத்'' தோற்றுவிக்க முயன்றனர்.

புரொலெட்குல்ட் நிறுவனம் ஒருபடித்தான நிறுவனமாய் இருக்கவில்லை. புரொலெட்குல்ட் நிறுவனங்கள் பலவற்றிலும் தலைமைப் பங்காற்றிய முதலாளித்துவ அறிவுத்துறையினருடன் கூட, கலாசார ஆக்கப் பணித் துறையில் சோவியத் அரசாங்கத்துக்குத் துணை புரிய உள்ளப்பூர்வமாய் விரும்பிய இளந் தொழிலாளர்கள் பலரும் இருந்தனர். புரொலெட்குல்ட் நிறுவனம் 1932 வரை நிலவி வந்தது.

பாட்டாளி வர்க்கக் கலாசார, கல்வித் துறை நிறுவனங்களின் முதலாவது அனைத்து ருஷ்ய மாநாடு 1918 செப்டம்பர் 15-20ல் மாஸ்கோவில் நடைபெற்றது. இம் மாநாடு அனுப்பிய வாழ்த்துச் செய்திக்குப் பதில் உரைக்கும் முறையில் லெனின் இக்கடிதத்தை எழுதினார்.

பக்கம் 156

63 லெனின் இங்கு குறிப்பிடுவது பெத்ரொகிராதைச் சரணடையச் செய்வதற்காக நடத்தப்பட்ட சதி. பல சோவியத்-எதிர்ப்பு, தலைமறைவுச் சதிவேலை நிறுவனங்களின் செயல்களுக்குத் தலைமை தாங்கிய ''தேசிய மையம்'' என்ற பெயரிலான எதிர்ப்புரட்சி நிறுவனம் இச்சதியை நடத்திற்று. பெத்ரொகிராதுக்கு வருகிற வழியிலான கேந்திரமாகிய கிராஸ்னயா கோர்க்கா (செம்மலை) கோட்டையில் 1919 ஜூன் 13 இரவில் சதிகாரர்கள் கலகம் புரிந்தனர். கரைப் பாதுகாப்புப் படைப்பிரிவும் பால்டிக் கடற்படையின் கப்பல்களும் தொண்டர் படைகளும் இக்கலகத்தை அடக்குவதற்காக அனுப்பப்பட்டன. கரைப் பாதுகாப்புப் படைப் பிரிவு ஜூன் 16 இரவில் இக்கோட்டையைக் கைப்பற்றியது. கலகத்துக்குத் தலைமை தாங்கிய எதிர்ப்புரட்சி நிறுவனம் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

பக்கம் 179

64 **கறுப்பு நூற்றுவர்**—புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஜாரிஸ்டுப் போலீஸ் நிறுவிய முடியாட்சிக் குண்டர் கும்பல்கள். இவர்கள் புரட்சியாளர்களைக் கொலை புரிந்தனர்; முற்போக்கான அறிவுத்துறையினரைத் தாக்கினர்; யூதர்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்தினர்.

பக்கம் 179

65 **மென்ஷிவிக்குகள்** — ருஷ்ய சமூக-ஜனநாயகத்தில் ஒரு குட்டிபூர்ஷ்வாச் சந்தர்ப்பவாதப் போக்கை ஆதரித்தவர்கள், தொழிலாளர் வர்க்கத்தில் பூர்ஷ்வாக் கருத்துக்களைப் புகுத்தியவர்கள். ஆகஸ்ட் 1903ல் நடந்த ரு. ச. ஜ. தொ.

கட்சியின் இரண்டாவது காங்கிரசில்தான் மென்ஷிவிக்குகளுக்கு இந்தப் பெயர் கிடைத்தது; கட்சியின் தலைமை உறுப்புக்களுக்கு நடந்த தேர்தலில் அவர்கள் சிறுபான்மையிலிருந்தனர் (மென்ஷின்ஸ்த்வோ); லெனின் தலைமை தாங்கிய புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மையினராயிருந்தனர் (போல்ஷின்ஸ்த்வோ). மென்ஷிவிக்குகள், போல்ஷிவிக்குகள் என்ற பெயர்கள் இவ்வாறுதான் ஏற்பட்டன.

பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு மிடையில் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த மென்ஷிவிக்குகள் முயன்றார்கள்; தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கைக் கொண்டு வந்தனர். 1917 பிப்ரவரி பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் இடைக்கால அரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொண்டு, அதன் ஏகாதிபத்தியக் கொள்கைகளை ஆதரித்து, வளர்ந்துவரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்த்துப் போராடினர்.

அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் வெளிப்படையாகவே எதிர்ப்புரட்சிக் கட்சி ஆயினர்; சோவியத் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதிகளையும் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தி அவற்றில் பங்கு கொண்டனர். பக்கம் 179

66 **பெர்ன், மஞ்சள் அகிலம்**—1914ல் உலக ஏகாதிபத்திய யுத்தம் தொடங்கியதும் சீர்குலைந்துவிட்ட இரண்டாவது அகிலம், 1919 பிப்ரவரியில் பெர்ன் நகரில் நடைபெற்ற சமூக-தேசியவெறியர் கட்சிகள், மையவாதக் கட்சிகளது மாநாட்டினால் திரும்பவும் உயிர்ப்பிக்கப்பட்டது. இவ்வாறு உயிர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது அகிலத்தை லெனின் மஞ்சள் அகிலமென்று அழைக்கிறார். பக்கம் 181

67 **சதோவாப் போர்** — செக்கோஸ்லோவாக்கியக் கிராமமாய் இருந்த சதோவா என்னும் இடத்தில் 1866 ஜூலை 3ல் நடைபெற்ற போர் ஆஸ்திரியா-பிரஷ்யா யுத்தத்தின் முடிவினைத் தீர்மானித்தது. இப்போரில் பிரஷ்யா ஆஸ்திரியாமீது முழுநிறை வெற்றி பெற்றது. பக்கம் 187

68 மக்கள் கமிசாரவையின் 1919 மார்ச் 16ஆம் தேதி அரசாணையின்படி உபயோகிப்பாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றுபடுத்தப்பட்டு ''உபயோகிப்பாளர்களது கம்யூனுக்கு''

திருத்தியமைக்கப்பட்டன. இந்தப் புதிய பெயர் சில மாவட்டங்களில் விவசாயிகளிடையே தவறான எண்ணங்களை உண்டாக்கிற்று. இதன் காரணமாய் அனைத்து ருஷ்ய மத்தியச் செயற் குழுவின் 1919 ஜூன் 30ஆம் தேதி முடிவை ஏற்றுக்கொண்டு, ''உபயோகிப்பாளர்களது கம்யூன்'' என்னும் பெயருக்குப் பதிலாய், பொது மக்களுக்கு நன்கு அறிமுகமான ''உபயோகிப்பாளர் கழகம்'' என்னும் பெயர் ஏற்கப்பட்டது. பக்கம் 199

[69] 1920 அக்டோபர் 5லிருந்து 12 வரை நடைபெற்ற அனைத்து ருஷ்யப் புரொலெட்குல்ட் மாநாடு இங்கு குறிக்கப்படுகிறது. பக்கம் 232

[70] **கேரென்ஸ்கிக் கும்பல்** — சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர் கேரென்ஸ்கியைச் சேர்ந்தவர்கள். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் எதிர்ப்புரட்சி முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கினர். பக்கம் 240

[71] **பத் ஸ்ஞமெனெம் மார்க்சிஸ்மா** (மார்க்சியக் கொடியின் கீழ்)—தத்துவவியல், சமூக-பொருளாதார சஞ்சிகை. 1922 ஜனவரியிலிருந்து 1944 ஜூன் வரை மாஸ்கோவில் வெளியாகி வந்தது. பக்கம் 252

[72] **ஃபி. எங்கெல்ஸ் எழுதிய நாடு கடந்து வாழ்பவரின் எழுத்துகள்** இங்கு குறிப்பிடப்படுகிறது. பக்கம் 256

[73] **எக்கானமிஸ்ட்** — ருஷ்யத் தொழில்நுட்பக் கழகத்தின் தொழில் துறை, பொருளாதாரப் பிரிவு பெத்ரொகிராதில் 1921-22ல் வெளியிட்டு வந்த பத்திரிகை. சோவியத் ஆட்சியை எதிர்த்த முதலாளித்துவத் தொழில்நுட்ப அறிவுத்துறையினருடன்கூட முன்னாள் தொழிலதிபர்களும் இக்கழகத்தில் உறுப்பினர்களாய் இருந்தனர். பக்கம் 264

[74] **புதிய பொருளாதாரக் கொள்கை** — முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச்சென்ற கட்டத்தில் 1921 முதலாய் பாட்டாளி வர்க்க அரசு கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கை இது. இதற்கு முன்பு உள்நாட்டு யுத்தமும் அந்நியத் தலையீடும் நடைபெற்ற காலத்தில் சோவியத் ருஷ்யா கடைப்பிடித்த ''யுத்தக் காலக்

கம்யூனிசக்'' கொள்கையிலிருந்து(1918-20)வேறுபடுத்திக் காட்டுவதற்காக இக்கொள்கை ''புதிய'' கொள்கை என்பதாய் அழைக்கப்பட்டது.

குறிப்பிட்ட சில காலத்துக்குக் குறிப்பிட்ட வரம்பு களுக்குள் புதிய பொருளாதாரக் கொள்கை முதலாளித் துவக் கூறுகள் இருக்க அனுமதித்தது. ஆனால் அதேபோ தில் கேந்திரப் பொருளாதார நிலைகள் பாட்டாளி வர்க்க அரசின் கையிலேதான் இருந்தன. உற்பத்தி சக்திகளை வளரச் செய்வதும் விவசாயத்தை முன்னேறச் செய்வ தும் சோஷலிசத் தொழில் துறையைக் கட்டியெழுப்பு வதற்குத் தேவையான நிதி வசதிகளைப் பெறுவதும்தான் புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கமாய் இருந்தன. பக்கம் 277

75 **இடதுசாரி கம்யூனிஸ்டுகள்**—1918ஆம் ஆண்டுத் தொடக் கத்தில், ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் (பிரேஸ்த் சமாதான ஒப்பந்தம்) செய்து கொள்வது சம்பந்தமாய்த் தோன்றிய சந்தர்ப்பவாத கோஷ்டி. புரட்சி யுத்தம் என்பதான இடதுசாரிச் சொல்வீச்சுகளின் திரைமறைவில், இன்னும் ஒரு சேனையைப் பெற்றிராத இளம் சோவியத் குடியரசை ஏகாதிபத்திய ஜெர்மனியுடன் யுத்தத்தில் இழுத்துவிட்டு, நாசமடைந்துவிடும் அபாயத்துக்கு அதை உட்படுத்திய சாகசவாதக் கொள்கையைக் கடைப்பிடித் தனர். இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் ஓராள் நிர்வாக முறை யையும் தொழிலாளர் கட்டுப்பாட்டையும் எதிர்த்தார் கள்; தொழில் துறையில் முதலாளித்துவத் தொழில் நிபுணர்கள் உபயோகித்துக் கொள்ளப்படுவதை எதிர்த் தார்கள். லெனின் தலைமையில் இருந்த கட்சியானது இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுடைய கொள்கைக்கு வை ராக்கியமான எதிரடி கொடுத்தது. பக்கம் 284

76 **பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தம்** — சோவியத் ருஷ்யா வுக்கும் நாலவர் கூட்டணிக்கும் (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகியவற்றுலானது) இடையே பிரேஸ்த்-லித்தோவ்ஸ்கில் 1918 மார்ச் 3ல் கையெழுத்தானது. இதன் ஷரத்துகள் சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் பாதகமாயிருந்தன.

ஜெர்மனியில் 1918 நவம்பரில் புரட்சி நடைபெற்று முடியாட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து நவம்பர் 13ல் அனைத்து-ருஷ்ய மத்தியச் செயற் குழு கொள்ளைக் கார பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தத்தை நிராகரித்தது. பக்கம் 294

பெயர்க் குறிப்பு அகராதி

அக்செல்ரோத் [Axelrod], **பா. ப.** *(1850-1928)* — மென்ஷிவிசத்தின் தலைவர்களில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* மையவாதச் சொற்றொடர்களில் மறைந்துகொண்டு உண்மையில் சமூக-தேசிய வெறிக் கொள்கையைக் கடைப்பிடித்தார். 1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் பெத்ரோகிராத் சோவியத்தின் செயற்குழு உறுப்பினர், முதலாளித்துவ இடைக்காலச் சர்க்காரை ஆதரித்தார்.—*133, 134.*

அன்தோனிய், வலீனியா பிஷப் *(1863-1936)* — ருஷ்ய பிராவஸ்லாவ்னயா மதஸ்தாபனத்தில் கடுமையான வலதுசாரி போக்கின் தலைவர், ஜாரிசத்தின் பிற்போக்குக் கொள்கையின் பிரதான பிரசாரகர்களில் ஒருவர்.—*90, 92, 102.*

இஸ்கோயெவ் [Izgoev (Lande)], **அலெக்ஸாந்தர் சலமோனவிச்** *(பிறப்பு: 1872)*—முதலாளித்துவக் கட்டுரையாளர், காடேட்டுக் கட்சியின் சித்தாந்தவாதிகளில் ஒருவர். —*81, 87, 92.*

எங்கெல்ஸ் [Engels], **ஃபிரீட்ரிஹ்** *(1820-1895)* — *7, 15, 17, 66, 70, 104, 125, 140, 141, 142, 143, 144, 145, 147, 148, 153, 154, 256, 258.*

ஐன்ஷ்டைன் [Einstein], **அல்பேர்த்** *(1879-1955)* — மாபெரும் விஞ்ஞானி, பௌதிகவியலாளர். சார்பியல் தத்துவத்தை உருவாக்கியதும், ஒளியின் குவான்டம் தத்துவத்துறையிலான கண்டுபிடிப்புகளும் ஐன்ஷ்டைன் ஆற்றிய பிரதான வாழ்க்கைப் பணிகளாகும்.—*255, 261, 262.*

ஓவன் [Owen], **ராபர்ட்** *(1771-1858)* — மாபெரும் ஆங்கிலேயக் கற்பனாவாத சோஷலிஸ்டு.—*285.*

கரவுலவ் [Karavulov], **வி. அ.** *(1854-1910)* — காடேட்டு, மூன்றும் அரசாங்க டூமாவின் உறுப்பினர்.—*94.*

கல்ச்சாக் [Kolchak], **அலெக்சாந்தர் வசிலியெவிச்** *(1873-1920)* ஜாரிஸ்டுக் கடற்படைத் தலைவர்; முடியாட்சிவாதி; *1918-19*ல் ருஷ்யாவில் எதிர்ப்புரட்சிக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர்.— *168, 170, 171, 225, 240.*

கா. கா—பார்க்கவும் காவுத்ஸ்கி.

காவுத்ஸ்கி [Kautsky], **கார்ல்** *(1854-1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் இவற்றின் தலைவர்களில் ஒருவர். தொடக்கத்தில் மார்க்சியவாதி; *1914*ஆம் ஆண்டுக்குப் பின்பு மார்க்சியத்துக்குத் துரோகமிழைத்து, சந்தர்ப்பவாதத்தின் அபாயகரமான, கேடுகெட்ட வகையான மையவாதத்தின் (காவுத்ஸ்கி வாதத்தின்) தத்துவாசிரியர் ஆனார்.—*132, 133, 134, 135, 142, 144, 145, 146, 184, 194, 294.*

கான்ட் [Kant], **இம்மானுவேல்** *(1724-1804)* — முதுபெரும் ஜெர்மானியத் தத்துவஇயலின் மூலவர்; கருத்துமுதல் வாதி.—*68,70.*

கிஸ்தியக்கோவ்ஸ்கி, பக்தான் அலெக்சாந்திரவிச் *(1868-1920)* —காடேட்டு, கட்டுரையாளர்.—*81.*

கிராப்போத்கின் [Kropotkin], **பியோத்தர் அலெக்சேயெவிச்** *(1842-1921)*—ருஷ்யப் புரட்சியாளர், பூகோள நிபுணர், பிரயாணி, அராஜகவாதத்தின் தலைவர்கள், சித்தாந்த வாதிகளில் ஒருவர், மார்க்சியத்தின் எதிரி.—*122.*

கிரெஸ்தோவ்னிக்கவ் [Krestovnikov], **கிரிகோரிய் அலெக்ஸாந்திரவிச்** *(பிறப்பு: 1855)*—அக்டோபரிஸ்டு, பெரும் தொழிலதிபர், பங்கு மார்க்கெட் வணிகர். —*122.*

குச்கோவ் [Guchkov], **அலெக்ஸாந்தர் இவானவிச்** *(1862-1936)* —பெரு முதலாளி; அக்டோபரிஸ்டு முதலாளித்துவக் கட்சியை ஒழுங்கமைத்தவரும் அதன் தலைவருமாவர். முதல் உலக யுத்தத்தின்போது மத்திய இராணுவத் தொழிற் கமிட்டியின் தலைவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர். —*34, 122.*

குத்லெர் [Kutler], **நிக்கலாய் நிக்கலாயெவிச்** *(1859-1924)* —காடெட்டுக் கட்சியின் முக்கியஸ்தர். இரண்டாவது, மூன்றுவது அரசாங்க டூமாக்களின் உறுப்பினர்.—*122.*

குவோஸ்தியோவ் [Gvozdyov], **குஸிமா அன்தோனவிச்** *(பிறப்பு: 1883)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக், கட்சிக் கலைப்புவாதி; முதலாவது உலக யுத்தத்தின் போது *(1914-18)* சமூக-தேசியவெறியர்; மத்திய இராணுவ-தொழில் கமிட்டியையொத்த தொழிலாளர் குழுவின் தலைவர்.—*149, 153.*

கெர்ஷன்சன் [Gershenzon], **மிஷயீல் ஓஸிப்பவிச்** *(1869-1925)*—ருஷ்ய நூலாசிரியர்; இலக்கிய வரலாற்றியலாளர்; முற்போக்கு ருஷ்ய அறிவுத்துறையினரின் ஜனநாயக மரபுகளை எதிர்த்தவர்.—*81.*

கோகல் [Gogol], **நிக்கலாய் வசீலியெவிச்** *(1809-1852)*—ருஷ்ய எழுத்தாளர், ருஷ்ய இலக்கியத்தில் விமர்சன எதார்த்தவாத மரபின் மூலவர்களில் ஒருவர். பண்ணை யடிமை முறைக் காலத்திய ருஷ்யாவில் நிலப்பிரபுக்கள், அதிகாரவர்க்கத்தினர் ஆகியோரது வாழ்க்கையையும் நெறிமுறைகளையும் இவர் தமது நூல்களில் கூர்மையான முறையில் வரைந்து காட்டி, எதேச்சாதிகாரப் பண்ணை யடிமை முறையின் நசிவைத் தெளிவாய்ப் புலப்படச் செய்கிறார்; மக்களுடைய நலன்களைப் பாதுகாத்து நிற் கின்றார்; பலாத்காரமும் ஏமாற்றும் அற்பத்தனமும் மலிந்த இவ்வுலகை நையாண்டி செய்கிறார். ஆயினும் கோகல் தமது ஜனநாயகப் பான்மையில் முரணில்லாப் போக்குடையவராய் இருக்கவில்லை. வாழ்க்கையின் இறுதி ஆண்டுகளில் இவருடைய கருத்தோட்டத்தில் பிற்போக்கு இயல்புகள் மேலோங்கின. இவற்றை முக் கியமாய் ''நண்பர்களுடனை கடிதப்போக்குவரத் திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள்'' என்னும் அவருடைய புத்தகத்தில் மிகவும் தெளிவாய்க் காண லாம். கோகலுக்கு வி. கி. பெலீன்ஸ்கி எழுதிய பிரபல கடிதத்தில் இப்புத்தகம் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியது.—*83, 84, 85.*

சலவியோவ் [Soloviev], **விளதிமிர் செர்கேயெவிச்** *(1853-1900)*—ருஷ்யத் தத்துவவியலாளர், கருத்துமுதல்வாதி, மார்க்சியத்தின் பகையாய் இருந்தவர்.—*83.*

சாதாயெவ் [Chaadayev], **பியோதர் யாகவ்லெவிச்** *(1794-1856)*—ருஷ்யத் தத்துவவியலாளர், கருத்துமுதல்வாதி, எதேச்சாதிகார-பண்ணையடிமை முறையைக் கடுமை யாய்க் கண்டித்து விமர்சித்தார், சித்தசுவாதினம் இழந்தவராய் அறிவிக்கப்பட்டவர்.—*83.*

சிஸ்மோண்டி [Sismondi], **ழான் ஷார்ல் லெவொனூர் சிமோண்ட் டெ** *(1773-1842)*—சுவிஸ் நாட்டுப் பொருளியலாளர், வரலாற்றுசிரியர்.—*132*.

சிஹெயித்ஸே [Chkeidse], **நிக்கலாய் செமியோனவிச்** *(1864-1926)* — மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* மையவாதக் கொள்கையைப் பின்பற்றினர். நான்காவது அரசாங்க டூமாவில் மென்ஷிவிக் கோஷ்டியின் தலைமையில் இருந்தவர்.—*149, 152*.

சிஹென்கேலி [Chkhenkeli], **அக்காக்கிய் இவானவிச்** *(1874-1959)* —சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். முதலாவது உலக யுத்தத்தின் போது *(1914-1918)* சமூக-தேசிய வெறியராகச் செயல்பட்டவர்.—*140*.

செர்னிஷேவ்ஸ்கி [Chernyshevsky], **நிக்கலாய் கவ்ரீலவிச்** *(1828-1889)*—ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, விஞ்ஞானி, எழுத்தாளர், இலக்கிய விமர்சகர். ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் பிரபல முன்னோடிகளில் ஒருவர். —*82, 83, 123, 253*.

ஜாக்கபி, [Jacoby], **யோஹன்** *(1805-77)* — ஜெர்மன் கட்டுரையாளர், அரசியல்வாதி, முதலாளித்துவ ஜனநாயகவாதி. *1872*ல் சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்து கொண்டார். இக்கட்சியின் பிரதிநிதியாய் ஜெர்மன் சட்ட மன்றமான ரைஹ்ஸ்டாகிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.—*187*.

ஷெத்ரீன் [Schedrin] **(சல்திக்கோவ்-ஷெத்ரீன்), மிகயீல் எவ்கிராஃபவிச்** *(1826-1889)*—ருஷ்யக் கிண்டல் இலக்கிய எழுத்தாளர், புரட்சிகர ஜனநாயகவாதி.—*264*.

ஷேர், வி. வி. *(1884-1940)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக்-கலைப்புவாதி.—*203*.

ஷைடெமன் [Scheideman], **பிலிப்** *(1865-1939)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் அதிதீவிர வலதுசாரி, சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர்.—*151, 153*.

ஸரோக்கின் [Sorokin], **பித்திரிம் அலெக்ஸாந்திரவிச்** *(1889-1968)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியைச் சேர்ந்தவர், *1919-1922*ல் பெத்ரொகிராதில் மேற்கல்வி நிலையங்களில் சமூகவியல் போதித்து வந்தார். புரட்சி-எதிர்ப்புச் செயல்களுக்காக நாடு கடத்தப்பட்டார். —*265, 267*.

ஸுகானவ், நி. (கிம்மெர், நிக்கலாய் நிக்கலாயெவிச்) [Sukhanov, N. (Gimmer, N.N.)] *(பிறப்பு: 1882)*—ருஷ்யப் பொரு

ளியலாளர், சர்வதேச விவகாரங்கள் பற்றிய கட்டுரை யாளர், மென்ஷிவிக், நரோதியத்தை மார்க்சியத்துடன் இணைக்க முயன்றவர்.—289, 292, 294.

ஸுபாத்தவ் [Zubatov], **செர்கேய் வசீலியெவிச்** *(1864-1917)*— அரசியல் போலீஸ் கர்னல், ''போலீஸ் சோஷலி சத்தின்'' அமைப்பாளர். புரட்சிப் போராட்டத் திலிருந்து தொழிலாளர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்காக போலீசார் கண்காணிப்பில் இயங்கிய தொழிலாளர் சங்கங்களை 1901-1903 ஆம் ஆண்டுகளில் மாஸ்கோவிலும், பீட்டர்ஸ்பர்கிலும், ஏனைய நகரங் களிலும் நிறுவினர்.—28.

ஸோர்கே [Sorge], **ஃபிரீட்ரிஹ் அடோல்ப்** *(1828-1906)* — ஜெர்மன் சோஷலிஸ்டு; சர்வதேசத் தொழிலாளர், சோஷலிஸ்டு இயக்கத்தின் பிரபலஸ்தர்; மார்க்ஸ், எங்கெல்சின் நண்பராகவும் தோழராகவும் இருந்தவர். —141, 142.

ஸ்கோபெலெவ் [Skobelev], **மத்வேய் இவானவிச்** *(1885-1939)*— ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். முதலாவது உலக யுத்தத்தின் போது *(1914-18)* மையவாதி. —149.

ஸ்தலீப்பின் [Stolypin], **அ. அ.** *(பிறப்பு: 1863)* — கறுப்பு நூற்றுக் கட்டுரையாளர். ''புதிய காலம்'' என்ற பிற் போக்குப் பத்திரிகையில் பங்கு கொண்டுவந்தார். அக் டோபரிஸ்டுகளுடைய கட்சியின் உறுப்பினர்.—90.

ஸ்துரூவே [Struve], **பியோத்தர் பெர்ங்கார்தவிச்** *(1870-1944)*— ருஷ்ய முதலாளித்துவப் பொருளியலாளர், கட்டுரை யாளர். காடேட்டுக் கட்சியின் சித்தாந்தவாதிகளில் ஒருவர். கடந்த நூற்றாண்டின் ஒன்பதாம் ஆண்டுகளில் பெர்ன்ஷ்டைனியத்தின் ருஷ்ய வகையான ''சட்ட பூர்வ மார்க்சியத்தின்'' பிரதான பிரதிநிதி. ருஷ்ய ஏகாதிபத்தியத்தின் சித்தாந்தவாதிகளில் ஒருவர்.— 28, 29, 81, 87.

ஸ்பெக்டேட்டர் [Spectator], **(நஹிம்சோன், மிரோன் இஸாக்கவிச்)** *(பிறப்பு: 1880)*—ருஷ்யப் பொருளியலாளர், கட்டுரை யாளர். முதலாவது உலக யுத்தத்தின்போது மைய வாதி.—133, 134.

ஸ்மித் [Smith], **ஆடம்** *(1723-1790)* — ஆங்கிலேயப் பொரு ளியலாளர், முதுபெரும் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் மிகப் பெரிய பிரதிநிதி.—9.

ஸ்மிர்னேவ் [Smirnov], **யெ. (குரேவிச் எமனுயில் லிவோவிச்)** *(பிறப்பு: 1865)* — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக்-கலைப்புவாதி.—*122.*

ஹதரோவ்ஸ்கி [Hodorovsky], **இ. இ.** *(1885-1940)* — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு கட்சி, இராணுவ, சோவியத் உறுப்புக்களில் வேலை செய்து வந்தார்.—*274, 276.*

ஹாப்சன் [Hobson], **ஜான் ஆட்கின்சன்** *(1858-1940)* — ஆங்கிலேயப் பொருளியலாளர், சீர்திருத்தவாதி, சாத்வீகவாதி.—*134, 135, 137.*

ஹியூம் [Hume], **டேவிட்** *(1711-1776)* — ஆங்கிலேயத் தத்துவவியலாளர், அகநிலைக் கருத்துமுதல்வாதி, அறியொணமையாளர்; தத்துவவியல் மேலும் கண்ட வளர்ச்சியில் மிகுந்த செல்வாக்கு செலுத்தியவர்.—*70.*

ஹில்பர்டிங் [Hilferding], **ரூடல்ப்** *(1877-1941)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின், இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர். 1910ல் **நிதி மூலதனம்** என்னும் நூலை வெளியிட்டார். ஏகபோக முதலாளித்துவம் பற்றிய ஆராய்ச்சிக்கு இந்நூல் ஓரளவு துணையாக இருந்தது. இருந்தாலும் இதில் கேடு விளைவிக்கும் தத்துவார்த்தப் பிழைகளும் சந்தர்ப்பவாதக் கோட்பாடுகளும் அடங்கியிருந்தன. முதலாவது உலக யுத்தத்தின் போது *(1914-18)*—மையவாதி, சமூக-ஏகாதிபத்தியவாதிகளுடன் ஒற்றுமை அவசியம் என்றவர்.—*134, 139.*

ஹின்டென்பர்க் [Hindenburg], **பாவுல்** *(1847-1934)*—ஜெர்மன் இராணுவத் தலைவர், ராஜதந்திரி, ஜெனரல் பீல்டு மார்ஷல்; ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு, தேசியவெறி தத்துவங்களின் பிரதிநிதி.—*187.*

ஹெகல் [Hegel], **கியோர்க் வில்ஹெல்ம் ஃபிரீட்ரிஹ்** *(1770-1831)* — மாபெரும் ஜெர்மன் தத்துவவியலாளர், புறநிலைக் கருத்துமுதல்வாதி. கருத்துமுதல்வாத இயக்கவியலை மிக விரிவான, ஆழமான முறையில் செப்பம் செய்தார்; இது தத்துவவியலுக்கு ஹெகல் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொண்டாகும். இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் சித்தாந்தத் தோற்றுவாய்களில் ஒன்றாய் ஹெகலின் இயக்கவியல் பயன்பட்டது.—*7, 68, 262, 263.*

ஹெண்டர்சன் [Henderson], **ஆர்தர்** *(1863-1935)* — ஆங்கிலேய அரசியலாளர்; தொழிற் கட்சி, தொழிற்சங்க கவுன்

சில் இவற்றின் தலைவர்களில் ஒருவர்; சமூக-தேசிய வெறியர். 1915க்கும் 1931க்கும் இடையில் பிரிட்டிஷ் சர்க்காரில் பதவிகள் வகித்தவர்.—151.

ஹேல்ஸ் [Hales], **ஜான்** *(பிறப்பு: 1839)* — ஆங்கிலேயத் தொழிற்சங்க இயக்கத்தின் பிரமுகர். முதலாவது அகிலத்தின் பொதுச் சபையில் 1866-1872ல் உறுப்பினர், 1871 மே முதல் 1872 ஜூலை வரை அதன் செயலாளர். மார்க்சையும் எங்கெல்சையும் எதிர்த்துப் போராடினர்.—141.

ஹைண்ட்மன் [Hyndman], **ஹென்ரி மேயர்ஸ்** *(1842-1921)*— ஆங்கிலேய சோஷலிஸ்டு; சீர்திருத்தவாதி. 1900-1910ஆம் ஆண்டுகளில் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் உறுப்பினர். பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவராய் இருந்தார்; ஏகாதிபத்திய யுத்தம் குறித்து இவர் அனுசரித்த சமூக-தேசிய வெறிப் போக்கை இக்கட்சியின் சொல்போர்டு மாநாடு கண்டித்ததைத் தொடர்ந்து 1916ல் இக்கட்சியை விட்டு விலகினர்.—151, 153.

டிட்ஸ்கென் [Dietzgen], **யுஜெனி** *(1862-1930)* — ஜெர்மன் தத்துவவியலாளர், யோசிப் டிட்ஸ்கெனின் புதல்வர். யோசிப் டிட்ஸ்கெனின் தத்துவவியல் கருத்தோட்டங்களில் பலவீன அம்சங்களை எடுத்து முற்றும் சிறந்தனவாய் வலியுறுத்தி, அவற்றைக் கொண்டு மார்க்சியத்தை ''நிறைவு பெறச்'' செய்ய வேண்டுமெனக் கூறினர்; முடிவில் பொருள்முதல்வாதம், இயக்கவியல் இரண்டையுமே மறுக்க முற்பட்டார்.—254.

டிட்ஸ்கென் [Dietzgen], **யோசிப்** *(1828-1888)* — ஜெர்மன் தொழிலாளர், முக்கிய சமூக-ஜனநாயகவாதிகளில் ஒருவர், தத்துவவியலாளர், தாமே சுயேச்சையாய் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை வந்தடைந்தவர். —254.

டிரேவ்ஸ், ஆர்தர் *(1865-1935)* — ஆதிக் கிறுஸ்தவத்தின் பிற்போக்கு ஜெர்மன் வரலாற்றியலாளர். — 259, 260.

டூரிங் [Dühring], **ஓய்கேன்** *(1833-1921)* — ஜெர்மன் தத்துவவியலாளர்;பொருளியலாளர்; குட்டிபூர்ஷுவாச் சித்தாந்தவாதி; இவரது தத்துவவியல் கருத்துக்கள் நேர்காட்சிவாதம், இயக்கமறுப்புப் பொருள்முதல்வாதம், கருத்துமுதல் வாதம் ஆகியவற்றிலிருந்து தேர்வுவாத முறையில் எடுக்கப்பட்ட கூறுகளது கதம்பத் திரட்டாய் இருந்தது.—7, 67, 70.

டேவிட் [David], எடுவார்ட் *(1863-1930)* — ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்களில் ஒருவர்; சீர்திருத்த வாதி. முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)*, சமூக-தேசியவெறிக் கொள்கையைப் பின்பற்றினர். —*140*

தல்கருக்கவ் [Dolgorukov], பாவெல் திமீத்ரியெவிச் *(1866-1930)* —சிற்றரசர், பெரிய நிலப்பிரபு. காடெட்டுக் கட்சியை நிறுவியவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். —*122*.

தல்ஸ்தோய் [Tolstoy], லெவ் நிக்கலாயெவிச் *(1828-1910)*— மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.—*95, 96, 97, 99, 100, 101, 102, 103, 113, 114, 115, 116, 118, 119*.

தாஸ்தயேவ்ஸ்கி [Dostoyevsky], ஃபியோதர் மிஹாயிலவிச் *(1821-1881)*—பிரபல ருஷ்ய எழுத்தாளர்.—*83*.

தாப்ரலியூபவ் [Dobrolyubov], நிக்கலாய் அலெக்சாந்திரவிச் *(1836-61)* — ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, பிரபல இலக்கிய விமர்சகர், பொருள்முதல்வாத தத்துவ வியலாளர். ரஷ்யாவில் புரட்சிகர சமூக-ஜனநாயகத்தின் முன்னவர்களில் ஒருவர்.—*83*.

திமிர்யாஸெவ் [Timiryazev], அர்க்காதி கிலிமேன்தியெவிச் *(1880-1955)*—விஞ்ஞானி, பௌதிகவியலாளர், மாஸ்கோ பல்கலைக்கழகப் பேராசிரியர்.—*261, 262*.

திரோத்ஸ்கி [Trotsky], (பிரான்ஷ்டைன்), லெவ் தவீதவிச்*(1879-1940)* — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். *1905-07* புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதியானர். யுத்தம், சமாதானம், புரட்சி ஆகிய பிரச்சினைகளில் லெனினையும் போல்ஷிவிக்குகளையும் எதிர்த்துப் போராடினர். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* மையவாத நிலையை மேற்கொண்டார். *1917*ல் போல்ஷிவிக் கட்சியில் சேர்க்கப்பட்டார். ஆயினும் திரோத்ஸ்கி போல்ஷிவிசத்தின் நிலையை ஏற்கவில்லை, லெனினியத்தையும் கட்சிக் கொள்கையையும் எதிர்த்துப் போராட்டம் நடத்தினர்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் பல முக்கியமான பதவிகள் வகித்தார். கட்சியின் பொதுக் கொள்கையை எதிர்த்தும் சோவியத் யூனியனில் சோஷலிசக் கட்டுமானத்தை எதிர்த்தும் போராடினர். *1929*ல் சோவியத்-எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாய் சோவியத் யூனியனிலிருந்து வெளியேற்றப்பட்டார். *1932*ல் அவரது சோவியத் நாட்டுக் குடிமை உரிமை ரத்து செய்யப்பட்டது.—*134, 138, 252*.

தெனீக்கின் [Denikin], **அன்தோன் இவானவிச்** *(1872-1947)* —ஜாரிஸ்டு ஜெனரல், உள்நாட்டுப் போரின்போது *(1918-21)* தெற்கு ருஷ்யாவில் சோவியத்-எதிர்ப்பு வெள்ளைப் படைகளின் தலைவராய் இருந்தார். அவருடைய படைகள் செஞ்சேனையால் முறிக்கப்பட்டபின் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தார்.—*225*.

நிக்கலாய், இரண்டாவது [ரமானவ் (Romanov)], *(1868-1918)* —ருஷ்யாவின் சக்கரவர்த்தி *(1894-1917)*.—*121, 124, 126*.

நெப்போலியன், முதலாவது (போனபார்த்) [Napoleon I (Bonaparte)], *(1769-1821)*—*1804-14*லும், *1815*லும் பிரான்சின் சக்கரவர்த்தி.—*294*.

பக்தானவ் [Bogdanov], **அ. (மலினேவ்ஸ்கி, அலெக்சாந்தர் அலெக்சாந்திரவிச்)** *(1873-1928)* — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, தத்துவவியலாளர், சமூகவியலாளர், பொருளியலாளர். *1905-07*ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் வாபஸ்வாதத்தின் தலைவர்களில் ஒருவர், ''விபேரியோத்'' என்னும் கட்சி-எதிர்ப்புக் குழுவின் தலைவர். தத்துவவியல் பிரச்சினைகளில் அகநிலை-கருத்துமுதல்வாத மாஹிஸ்டுத் தத்துவவியலில் ஒரு வகையான ''அனுபவ ஒருமைவாதம்'' என்னும் தமது சொந்த கருத்தமைப்பு ஒன்றை வகுக்க முயன்றார். ''பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்'' என்னும் நூலில் லெனின் அக்கருத்தமைப்பைக் கண்டித்தார்.—*70*.

பஸாரவ் [Bazarov], **விளதீமிர் அலெக்சாந்திரவிச்** *(1874-1939)*—ருஷ்ய தத்துவவியலாளர், பொருளியலாளர், சமூக-ஜனநாயகவாதி. *1905-07*ஆம் ஆண்டுகளின் புரட்சியின்போது போல்ஷிவிக் வெளியீடுகளில் எழுதினார். புரட்சி தோல்வியுற்றபின் போல்ஷிவிசத்தைத் துறந்துவிட்டார். அ. அ. பக்தானவுடன் சேர்ந்து கருத்துமுதல்வாத, அனுபவ-விமர்சனவாத அடிப்படையில் மார்க்சியத் தத்துவத்தைத் திரித்துப் புரட்ட முனைந்தார்.—*70*.

பத்ரேசவ் [Potresov], **அலெக்சாந்தர் நிக்கலாயெவிச்** *(1869-1934)* — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர், கட்சிக் கலைப்புவாதத்தின் சித்தாந்தவாதி. ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் போது *(1914-18)*—சமூக-தேசியவெறியராக இருந்தார்.—*140, 149, 153*.

பபெதனோஸ்த்செவ் [Pobedonostsev], **கன்ஸ்தன்தின் பெத்ரோவிச்** *(1827-1907)*—ஜாரிஸ்டு ருஷ்யாவில் பிற்போக்கு வாதப் பிரமுகர், மூன்றும் அலெக்ஸாந்தரின் ஆட்சியில் அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கியவர், பண்ணை யடிமை முறையாளர்களது பிற்போக்கின் பிரதான ஆதர்ச புருஷர்; இரண்டாவது நிக்கலாயின் காலத்தி லும் முக்கிய பங்காற்றியவர்.—*87, 92.*

பப்ரீன்ஸ்கி [Bobrinsky], **விளதீமிர் அலெக்ஸேயெவிச்** *(பிறப்பு: 1868)*—ருஷ்யப் பிற்போக்கு அரசியல்வாதி. பெரு நிலப் பண்ணையார், சர்க்கரை ஆலை முதலாளி. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது அரசாங்க டூமாக்களின் உறுப்பினர்.—*124, 126.*

பாயர்பாக் [Feuerback], **லுத்விக் அந்திரேயஸ்** *(1804-1872)* — மாபெரும் ஜெர்மன் பொருள்முதல்வாதத் தத்துவ வியலாளர், நாஸ்திகர்.—*7.*

பிஸ்ஸொலாத்தி [Bissolati], **லெவொனீடே** *(1857-1920)*— இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர், இதன் சீர்திருத்தவாதப் பிரிவினைச் சேர்ந்த அதீத வலதுசாரியினரின் தலைவர். 1912ல் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டு, ''சமூக-சீர் திருத்தக் கட்சி'' எனப்படுவதன் ஸ்தாபகரானார். முதலா வது ஏகாதிபத்திய யுத்தத்தின்போது *(1914-18)* சமூக--தேசியவெறிக் கொள்கையைப் பின்பற்றினார்.—*149.*

பிஸ்மார்க் [Bismarck], **ஓட்டோ எடுவார்டு லெவொப்போல்டு** *(1815-1898)* — பிரஷ்ய, ஜெர்மனிய சிற்றரசர், ராஜ தந்திரி, ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் முதல் அமைச்சர். சின்னஞ்சிறு அரசுகளாய்ப் பிரிந்திருந்த ஜெர்மன் அரசுகளைப் பிரஷ்ய ஜங்கர்களுடைய ஆதிக்கத்தின் கீழ்ப் பலவந்தமாய் ஒன்றிணைப்பதே பிஸ்மார்க்கின் தலைமையான குறிக்கோளாய் இருந்தது.—*126.*

பிரக்கப்போவிச் [Prokopovich], **செர்கை நிக்கலாயெவிச்** *(1871-1955)*—ருஷ்யப் பொருளியலாளர், கட்டுரையாளர்; ருஷ்யாவில் பெர்ன்ஷ்டைனியத்தை முதன்முதல் பரப் பியோரில் ஒருவர்; காடேட்டுக் கட்சின் உறுப்பினர்.—*28, 29.*

ஃபிரான்க் [Frank], **எஸ். எல்.** *(1877-1950)* — ருஷ்யத் தத்துவ வியலாளர், கருத்துமுதல்வாதி, பொருளியலாளர்; கார்ல் மார்க்சின் மதிப்புத் தத்துவத்தை எதிர்த்தார். புரட்சி-எதிர்ப்புக் கட்டுரைத் திரட்டான **வேஹி** வெளியீட்டில் பங்கு கொண்டவர்.—*81, 87.*

பிளெஹானவ் [Plekhanov], **கியோர்கிய் வலென்தீனவிச்** *(1856-1918)*—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்; ருஷ்யாவில் மார்க்சியத்தின் முதல் பிரசாரகர்.

ரு. ச. ஜ. தொ. கட்சியின் 2வது காங்கிரசுக்குப் *(1903)* பிறகு பிளெஹானவ் சந்தர்ப்பவாதிகளுடன் சமரசம் செய்துகொள்ளும் போக்கைக் கடைப்பிடித்தார். பிறகு மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்துகொண்டார். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* சமூக-தேசியவெறியர்.

1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிற்பாடு ருஷ்யாவில் மென்ஷிவிக்குகளின் கடைகோடி வலதுசாரிக் கோஷ்டியாகிய ''ஒற்றுமைக்'' காப்பாளர்களின் தலைமையில் இருந்தார்; ருஷ்யா இன்னும் சோஷலிசத்துக்குப் பக்குவமடையவில்லை என்று கருதி போல்ஷிவிக்குகளையும் சோஷலிசப் புரட்சியையும் எதிர்த்துவந்தார்.—*17, 69, 122, 140, 151, 253.*

புரிஷ்கேவிச் [Purishkevich], **விளதிமிர் மித்ரபானவிச்** *(1870-1920)*—பெரு நிலப்பிரபு, கறுப்பு நூற்றுவர் வகைப்பட்ட பிற்போக்காளர், முடியரசுவாதி; டூமாவில் அவர் திட்டமிட்டு நிகழ்த்திய யூதவிரோத உரைகள் காரணமாகப் பிரசித்தி பெற்றவர்.—*124, 126.*

புருக்கேர் [Brouckère], **லுயீ தே** *(1870-1951)* — பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர்களில், சித்தாந்தவாதிகளில் ஒருவர்; முதலாவது உலக யுத்தத்திற்கு முன் அதன் இடதுசாரிப் பிரிவுக்குத் தலைமை தாங்கினர். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* சமூக-தேசியவெறியர்.—*76.*

புருதோன் [Proudhon], **பியேர் ழொஸேப்** *(1809-1865)* — பிரெஞ்சுக் கட்டுரையாளர், பொருளியலாளர், சமூகவியலாளர்; குட்டிபூர்ஷுவாத் தத்துவவாதி; அராஜகவாதத்தின் மூலவர்களில் ஒருவர்.—*26.*

புல்காக்கவ் [Bulgakov], **செர்கேய் நிக்கலாயெவிச்** *(1871-1944)*—ருஷ்யப் பொருளியலாளர், கருத்துமுதல்வாதத் தத்துவவாதி. நிலப் பிரச்சினை பற்றிய மார்க்சின் போதனையைத் திருத்திப் புரட்ட முற்பட்டார். தத்துவவியலில் மாயாவாதத்தைப் பரப்பி வந்தார். *1905-07* ஆம் ஆண்டுகளின் புரட்சிக்குப் பின் காடெட்டுகளுடன் சேர்ந்து கொண்டார். புரட்சி-எதிர்ப்புக் கட்டுரைத் திரட்டான ''வேஹி''யைத் தயாரித்து வெளியிடுவதில் பங்கெடுத்துக் கொண்டார்.—*81, 88.*

பூர்த்செவ் [Burtsev], **விளதீமிர் லிவோவிச்** *(1862-1936)* — 1880ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலிருந்து புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்டுவந்தார். சிறைப் பிடிக்கப் பட்டபின் தப்பித்துக் கொண்டு வெளிநாட்டுக்குச் சென்றார். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருக்கு நெருங்கியவராய் இருந்தார். 1905-07ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியுற்றபின் காடேட்டுகளுடன் சேர்ந்து கொண்டார். 1911-17ல் ''எதிர்காலம்'' என்னும் மிதவாத முதலாளித்துவ ஏட்டின் ஆசிரியர்.—122.

பூல்க்கின் [Bulkin], **ஃபியோதர் அபனசியெவிச்** *(பிறப்பு: 1888)*— ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* இராணுவ-தொழில் கமிட்டிகளில் வேலை செய்தார். பிற்பாடு மென்ஷிவிக்குகளை விட்டு விலகினார்; ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியில் (போல்ஷிவிக்குகள்) சேர்த்துக் கொள்ளப்பட்டார்.—149.

பெத்லியூரா [Petlura], **சிமோன் வஸீலியெவிச்** *(1877-1926)*— உக்ரேனிய தேசியவாதிகளின் தலைவர்களில் ஒருவர். அந்நிய இராணுவத் தலையீட்டின்போதும், உள்நாட்டு யுத்தத்தின்போதும் உக்ரேனில் எதிர்ப்புரட்சியின் தலைமைப் பிரமுகர்களில் ஒருவர்.—240.

பெரெஸோவ்ஸ்கி [Berezovsky], **அ.** *(பிறப்பு: 1868)* — நிலப் பிரபு, காடேட்டு, மூன்றாவது அரசாங்க டூமாவின் உறுப்பினர்.—94.

பெர்தியாயெவ் [Berdyaev], **நிக்கலாய் அலெக்ஸாந்திரவிச்** *(1874-1948)* — ருஷ்யப் பிற்போக்குவாதக் கருத்துமுதல் வாதத் தத்துவவாதி, மாயாவாதி, காடேட்டு.—81.

பெர்ன்ஷ்டைன் [Bernstein], **எடுவார்டு** *(1850-1932)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் இவற்றின் கடைகோடியான சந்தர்ப்பவாதிகளது தலைவர். சீர்திருத்தவாதம், திருத்தல்வாதம் ஆகியவற்றின் தத்துவாசிரியர். 1896-1898ஆம் ஆண்டுகளில் "Die Neue Zeit" சஞ்சிகையில் ''சோஷலிசத்தின் பிரச்சினைகள்'' என்னும் தலைப்பில் கட்டுரைத் தொடர் ஒன்றை வெளியிட்டார். புரட்சிகர மார்க்சியத்தின் தத்துவவியல், அரசியல், பொருளாதார அடிப்படைகளை அவர் இக்கட்டுரையில் திருத்த முற்பட்டார். முதலாளித்துவத்தில் தொழிலாளர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதை நோக்கமாய்க் கொண்ட சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதே தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒரே கடமையாகுமென வலியுறுத்தினர். ''இயக்கமே யாவும், இறுதிக்

குறிக்கோள் ஒரு பொருட்டல்ல'' என்னும் சந்தர்ப்பவாத சூத்திரத்தை எடுத்துரைத்தார்.—17, 67, 76.

பெலீன்ஸ்கி [Belinsky], **விஸ்ஸரியோன் கிரிகோரியெவிச்** *(1811-1848)* — ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, இலக்கிய விமர்சகர், எழுத்தாளர், பொருள்முதல்வாதத் தத்துவ வியலாளர். ரஷ்யாவில் புரட்சிகர சமூக-ஜனநாயக வாதத்தின் முன்னோடிகளில் ஒருவர்.—83, 84, 85.

பேம்-பாவர்க் [Böhm-Bawerk], **யூஜன்** *(1851-1914)* — பொருளியலாளர். அரசியல் பொருளாதாரத்தில் ''ஆஸ்திரிய மரபு'' எனப்படும் போக்கின் பிரதிநிதிகளில் ஒருவர். மார்க்சியக் கருத்துக்கள் பரவுவதை எதிர்த்து இம்மரபினர் அகநிலைக் கருத்துமுதல்வாத முறையில் பொருளாதார விதிகளை அணுகி விளக்கம் தர முயற்சித்தனர். —70, 73.

பேர்க்லி[Berkley], **ஜார்ஜ்***(1685-1753)*—ஆங்கிலேயப் பிற்போக்கு வாதத் தத்துவவியலாளர், அகநிலை கருத்துமுதல் வாதி, ஆங்கில நாட்டு மதச்சபையின் பிஷப்பு.—70.

மஹ்னே [Mahno], **நேஸ்தர் இவானவிச்** *(1884-1934)*—உக்ரேனில் 1918-1921ல் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு எதிராய்ப் போராடிய எதிர்ப்புரட்சி அராஜகவாத-குலாக்குப் படைப்பிரிவுகளின் தலைமைப் பிரமுகர்.—240.

மாஸ்லவ் [Maslov], **பியோத்தர் பாவ்லவிச்** *(1867-1946)* — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். விவசாயப் பிரச்சினை குறித்துப் பல நூல்கள் எழுதியவர். இவற்றில் மார்க்சியத்தைத் திரித்துப் புரட்ட முயன்றார். முதல் உலக யுத்தத்தின் போது *(1914-1918)* தேசியவெறியர். —122.

மார்க்ஸ் [Marx], **கார்ல்** *(1818-1883)*—5, 6, 7, 8, 9, 11, 13, 14, 15, 17, 18, 65, 66, 67, 68, 69, 70, 77, 78, 118, 119, 125, 126, 127, 132 140, 141,142, 151, 152, 153, 193, 209, 210, 211, 258, 262, 263, 289, 290, 292.

மார்த்தவ் [Martov], **எல். (ஸெதெர்பாவும், யூலி ஓசிப்பவிச்)** *(1873-1923)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1905-07ஆம் புரட்சி தோல்வியுற்றபின் கலைப்புவாதி. முதலாவது உலக யுத்தத்தின் போது *(1914-18)* சர்வதேசியவாத நிலையை மேற்கொண்டார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு எதிராகப் போராடினார்.—133, 138, 139, 184.

மான் [Mann], **டாம்** *(1856-1941)*—ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர். இங்கிலாந்தின் சுயேச்சைத் தொழிற் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர் *(1893)*; இக்கட்சியின் இடதுசாரியைச் சேர்ந்தவர். முதல் உலக யுத்தத்தின்போது சர்வதேசியவாத நிலையை ஏற்றவர்.—*142*.

முல்பெர்கர் [Mühlberger], **அர்ட்டூர்** *(1847-1907)*—ஜெர்மன் குட்டிபூர்ஷுவாக் கட்டுரையாளர், புருதோனின் ஆதரவாளர். பிரான்சிலும் ஜெர்மனியிலும் பொது மக்களது சிந்தனையின் வரலாறு குறித்துப் பல நூல்கள் எழுதினார்; மார்க்சியத்தை விமர்சித்தார்.—*67*.

மேன்ஷிக்கவ் (Menshikov), **மிஹயீல் ஒஸிப்பவிச்** *(1859-1919)* — பிற்போக்குவாத ருஷ்யக் கட்டுரையாளர்.—*90, 122*.

யுதேனிச் [Judenich], **நிக்கலாய் நிக்கலாயெவிச்** *(1862-1933)*—ஜாரிஸ்டு ஜெனரல். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் ருஷ்யாவின் வட-மேற்குப் பிரதேசத்தில் இயங்கிய வெள்ளைப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். *1919*ல் பெத்ரொகிராதைக் கைப்பற்ற இரு முறை முயன்றார்; *1919*ல் தோல்வியடைந்தார்.—*240*.

யுர்க்கேவிச் [Jurkevich], **லெவ்** *(1885-1918)* — உக்ரேனிய முதலாளித்துவத் தேசியவாதி, சந்தர்ப்பவாதி. உக்ரேனிய சமூக-ஜனநாயகவாதத் தொழிளாளர் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர்.—*82*.

ரதிஷ்செவ் [Radishchev], **அலெக்ஸாந்தர் நிக்கலாயெவிச்** *(1749-1802)*—ருஷ்ய எழுத்தாளர், புரட்சிக் கருத்துக்களைப் பரப்பியவர். பண்ணையடிமை முறையையும் எதேச்சாதிகாரத்தையும் எதிர்த்தார்; இதற்காக கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார்; இது 10 ஆண்டு சைபீரியத் தண்டனையாய் மாற்றப்பட்டது.—*123*.

ரமானவ்கள் [Romanovs] — *1613* முதல் *1917* வரை ஆண்ட ருஷ்ய ஜார்கள், சக்கரவர்த்திகளின் வம்சம்.—*121, 124, 126*.

ரிகார்டோ [Ricardo], **டேவிட்** *(1772-1823)*—மாபெரும் ஆங்கிலப் பொருளியலாளர், முதுபெரும் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதி.—*9*.

ருபனோவிச் [Rubanovich], **இல்யா அதோல்பவிச்** *(1860-1920)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.—*122*.

ரெனெடேல் [Renaudel], **பியேர்** *(1871-1935)* — பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர். ஏகாதிபத்திய உலக யுத்தத்தின்போது *(1914-18)* சமூக-தேசியவெறியர்.—*151, 153.*

ரோஸனவ் [Rozanov], **வி. வி.** *(1856-1919)* — பிற்போக்குத் தத்துவவியலாளர், கட்டுரையாளர், விமர்சகர், கருத்து முதல்வாதத்தையும் மாயாவாதத்தையும் பரப்பியவர்.—*90.*

ரோதிச்செவ் [Rodichev], **ஃபியோதர் இஸ்மாயிலவிச்** *(பிறப்பு: 1856)* — காடெட்டுக் கட்சித் தலைவர்களில் ஒருவர், அதன் மத்தியக் கமிட்டி உறுப்பினர்; முதலாவது, இரண்டாவது, மூன்றுவது, நான்காவது டூமாக்களின் உறுப்பினர்.—*51, 122.*

லஸ்ஸால் [Lassalle], **ஃபெர்டினண்டு** *(1825-1864)* — ஜெர்மன் குட்டி-பூர்ஷுவா சோஷலிஸ்டு, ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் செயல்பட்டுவந்த ஒரு வகைச் சந்தர்ப்பவாதமாகிய லஸ்ஸாலியனிசத்தின் மூலவர். அகில ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தை நிறுவியது லஸ்ஸாலுக்குரிய ஒரு சிறப்பாகும்; ஆனால் இச்சங்கத்தை அவர் சந்தர்ப்பவாதப் பாதையில் இட்டுச் சென்றார்.—*28.*

லப்ரியோலா [Labriola], **அர்ட்டூரோ** *(1873-1959)* — இத்தாலிய அரசியல்வாதி; இத்தாலியில் சிண்டிக்கலிஸ்டு இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர்.—*77.*

லாகர்டேல் [Lagardelle], **யுபேர்** *(1874-1958)*—பிரெஞ்சுக் குட்டி-பூர்ஷுவா அரசியல்வாதி, அராஜகவாத-சிண்டிக்கலிஸ்டு.—*77.*

லாயிட் ஜார்ஜ் [Lloyd George], **டேவிட்** *(1863-1945)*—ஆங்கிலேய அரசுப் பிரமுகர்; மிதவாதக் கட்சியின் தலைவர். *1916-22*ல்—பிரதமர்.—*150, 151, 153.*

லுனச்சார்ஸ்கி [Lunocharsky], **அனத்தோலி வசீலியெவிச்** *(1875-1933)*—முக்கிய சோவியத் அரசுத் தலைவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் கல்வித் துறை மக்கள் கமிசார். —*232, 234.*

லென்ச் [Lensch], **பாவுல்** *(1873-1926)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. ஏகாதிபத்திய உலக யுத்தம் மூண்டபோது *(1914)* சமூக-தேசியவெறிக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கினர்.—*144.*

லேகின் [Legien], **கார்ல்** *(1861-1920)* — ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி; ஜெர்மன் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. முதலாவது உலகப்

போரின்போது சமூக-தேசியவெறிக் கொள்கையைப் பின்பற்றினர்.—140, 151.

வன்டெர்வேல்டே [Vandervelde], **எமீல்** *(1866-1938)*—பெல்ஜியத் தொழிலாளர் கட்சித் தலைவர். இரண்டாவது அகிலத்தின் சர்வதேச சோஷலிஸ்டு அலுவலகத் தலைவர். கடைக்கோடிச் சந்தர்ப்பவாதப் போக்கைக் கடைப்பிடித்தார்.—76.

விராங்கெல் [Wrangel P.N.], **பியோத்தர் நிக்கலாயெவிச்** *(1878-1928)*—ஜாரிஸ்டு ஜெனரல். ருஷ்யாவில் வெளிநாட்டு இராணுவத் தலையீட்டின் போதும், உள்நாட்டுப் போரின் போதும் *(1918-21)* ருஷ்யாவின் தெற்கு பகுதியில் புரட்சி-எதிர்ப்புப் படைகளின் தலைவராய் இருந்தார். —248.

வீப்பர், ரோபெர்த் யூரியெவிச் *(1859-1954)*—பிரபல வரலாற்றியலாளர்; மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியர். —258.

வெப் [Webb], **சிட்னி** *(1859-1947)*, **பியாட்ரீஸ்** *(1858-1943)* —இங்கிலாந்தில் பொது வாழ்வில் பெயர் பெற்றவர்கள்; ஃபேபியன் கழகத்தின் ஸ்தாபகர்கள்; ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு, தத்துவம் பற்றிய பல நூல்களை எழுதியவர்கள். முதலாவது உலக யுத்தத்தின்போது *(1914-18)* சமூக-தேசிய வெறிப் போக்கைப் பின்பற்றியவர்கள்.—145.

வைத்லிங் [Weitling, Wilhelm], **வில்ஹெல்ம்** *(1808-1871)*—ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் முக்கிய பங்காற்றியவர்; கற்பனாவாதச் சரிசமனக் கம்யூனிசத்தின் தத்துவவாதிகளில் ஒருவர்.—26.

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2

ஷோ-ரூம்

6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை-1
87/89, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-1
சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8
பஸ் நிலையம், தஞ்சாவூர்

В. И. ЛЕНИН

О СОЦИАЛИСТИЧЕСКОЙ ИДЕОЛОГИИ И КУЛЬТУРЕ

На тамильском языке